# மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்!

(The Astounding Revelations of Rebirth)



எஸ். குருபாதம்

# மறுபிறவி பற்றிய

# ஆச்சரியமான தகவல்கள்

## (THE ASTOUNDING REVELATIONS OF REBIRTH)

என். [illegible]

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082
மின்னஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய முகவரி : www.manimekalaiprakasam.com

# மறுபிறப்பு பற்றிய

# ஆச்சரியமான தகவல்கள்

## (THE ASTOUNDING REVELATIONS OF REBIRTH)

## எஸ். குருபாதம்

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082
மின்அஞ்சல் : manimekalai1@dataone.in
மின் இணையம் : www.tamilvanan.com

## நூல் விபரம் BOOK - DETAILS


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்** |
| Title of the book | : | The astounding Revelations of Rebirth |
| ஆசிரியர் | : | **செல்வத்துரை குருபாதம்** |
| Name of Author | : | Selvadurai Gurupatham<br>E-mail : gurujeya@ymail.com<br>180 Bonspiel Drive,<br>Toronto, MIE 5K4<br>Ontario, Canada. |
| உதவி | : | ஜெய ஜோதி (ஜெயா) குருபாதம் |
| Asssited by | : | Jeya Gurupatham nee Paramsothy |
| Type set by | : | Mathini Pavan nee Sivasithamparam |
| Language | : | Tamil |
| Year of Publication | : | 2013 |
| Edition | : | First Edition |
| Copyright reserved | : | Author |
| Paper | : | 70 GSM |
| Book Size | : | Demi Size (14 x 21 Cm.) |
| Point Size | : | 11 Point |
| மொத்த பக்கங்கள் | : | xii + 372 = 384 பக்கங்கள் |
| No. of Pages | : | xii + 372 = 384 |
| Price | : | **Rs. 250.00** |
| D.T.P. | : | P.S. Muthu Graphics, Chennai - 15. |
| Printing | : | Script Offset, Chennai - 94 |


**அட்டைப்பட விளக்கம்:**

*வெளிச்சுற்று : மனித வாழ்க்கைச் சுழற்சி*
*உட்சுற்று : வானியல் வாழ்க்கைச் சுழற்சி*

**Front cover page illustration:**

The external circuit : The human life cycle
The internal circuit : The astronomical life cycle
(Source : Google)

# உள்ளே


- அணிந்துரை viii
- நூல் அறிமுகம் ix
- 'என்' நூலைப் பற்றி 'நான்' 1

**பாகம் 1**

**பிறப்புக்குப் பின் பிறப்பு, இறப்புக்குப்பின் இறப்பு**
**(The birth after birth and death after death)**

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுவாமி விவேகானந்தர்: 'முயன்றால் முற்பிறவியின் நினைவுகளைப் பெறலாம்' | 10 |
| 2. | ஆழ்மன அச்சம் (Phobia) முற்பிறப்புச் சம்பவங்களின் தொடர்ச்சியா? | 15 |
| 3. | குழந்தைகளின் முற்பிறப்புப் பிரதிபலிப்புகள் | 18 |
| 4. | ஹெலன் கெலரின் (Helen Keller) ஞாபகக் கலங்கள் (Cell Memory) | 29 |
| 5. | உடல் மச்சங்கள் (Birth Marks) | 38 |
| 6. | முற்பிறப்பு ஞாபகமில்லை... ஏன்? | 41 |
| 7. | உயிர்த்தெழல் உலக அதிசயமானது!! | 44 |
| 8. | லாமாக்களின் (Lamas) மறுபிறப்பும் மயன்சின் (Mayans) நம்பிக்கைகளும் | 48 |
| 9. | மரணம் ஒரு மாயைத் தோற்றம் | 64 |
| 10. | ஜடாதரமுனிவர் அன்னமாக காதல் தூது சென்றாரா? | 68 |
| 11. | இறப்பதும் உயிர்ப்பதும் இவரது பொழுதுபோக்கு | 69 |
| 12. | ஆங்கிலக் கவிகளின் பார்வையில் இறப்புக்கு அப்பால்... | 73 |
| 13. | உடல் இறக்கும் 'நான்' பிறப்பேன் | 75 |

14. உயிர் எங்கே செல்கிறது? 79

15. தன்னுணர்வு (Self - Conscious) என்றால் என்ன?
பிரக்ஞை (Consciousness) என்றால் என்ன? 90

16. தாவரங்களிற்கு 'உயிரும்', 'உணர்வும்'.
இருப்பது மாத்திரமல்ல மனித இறப்பு
பிறப்புடனும் தொடர்புண்டு! 96

17. பிரமச்சாரியம் 'ஓர் உயிர்' தோன்றும்
அடிப்படை உரிமையை மீறுகிறதா? 106

18. மீண்டும் குழந்தையாவோம் 125

19. ஒளிவட்டம் – தேஜஸ் (Aura of Light) 136

## பாகம் 2

## மரண அனுபவம் அடைந்தவரது அனுபவங்கள்
## (Near death experience of the Survivors)

20. தங்கள் மரணச்செய்தியைத் தாங்களே கேட்டார்கள்
(Hearing the news of their own death) 140

21. உடலுக்கு வெளியே மிதத்தல்
(Floating out of the body) 143

22. அமைதியையும் சாந்தத்தையும் உணரல்
(Feeling Peace and Quietness) 148

23. சத்தம் (The Noise) 150

24. ஆவியின் தோற்றம்
(The physical characteristics of Spirit) 151

25. இறந்தவர்களைச் சந்தித்தல் (Meeting the deceaseds) 153

26. மனத்திரையில் கடந்தகாலம் (Mental Picture) 154

27. தன் இறுதிக் கிரிகையின் ஆரம்ப நிலையை
அவதானித்தார் (Witnessed the beginning
Stage of his funeral Rites) 155

28. இறந்த 'நான்' எனக்கு மின்மினிச் சுடராகத் தெரிந்தேன் ('Deceased me' seeing 'myself' as a sparkling light) 157

29. வாழ்வைப்பற்றிய பார்வை (Views and effects on Lives) 159

30. புராதன மொழி பேசினார் (Spoke ancient dialect) 162

31. ஆவிகள் அனுப்பிய செய்திகள் (Message from Spirits) 164

32. அன்னை மிர்ரா: ஆவிகளைத் துரத்தி கப்பலின் ஆட்டத்தை நிறுத்தினார் 170

33. ஞானம் பெற்ற ஆவிகள் 172

34. மரணம் பற்றிய தெளிவுதான் ஒருவரது உண்மையான ஆசான் 175

35. எமானுவல் சுவீடன் பேர்க் (Emanuel Sweden Berg) 179

36. இறந்தவர்களுடைய திபெத்திய நூல் (The Tibetian book of the dead 183

37. இறப்புக்கு அப்பால் அழைத்துச் செல்லும் திபெத்திய ஞானிகள் 187

38. பிளேட்டோ (Plato): உடலிலிருந்து பிரிந்த ஆன்மா தெளிவாகச் சிந்திக்கிறது 190


## பாகம் 3

## ஞானிகளின் வாழ்வில்

## (In the lives of Saints...)


39. மணிமேகலை: தன் முற்பிறப்பை இலங்கையில் அறிந்தார் 194

40. பட்டினத்தார்: 'இனி ஒரு பிறப்பு வேண்டாம்' 195

41. திருமூலர்: மூலன் உடலினுள் வாயுவாகப் பிரவேசம் 199

42. சீதக்காதி: இறந்தும் கொடை கொடுத்தார் 201

43. மார்பா (Marba): 'மரணத்திலும் அங்கே மரணம் இருப்பதில்லை' 204

44. பொகுயூ (Bokuju): தலைகீழாக நின்று உயிர் நீத்து, உயிர்த்தெழுந்தார் 207

45. உஸ்பென்ஸ்கி (Ouspensky): மரணத்தை வாஞ்சையுடன் அழைத்தார் 212

46. ஹொடாய் (Hotai): சிரிப்பால் மக்கள் மனதை ஒருமைப்படுத்தியவர் இறந்தவர்களையும் பார்த்துச் சிரித்தார் 214

47. தியோஜினிஸ் (Diogenes): 'மனிதனைத் தேடுகிறேன்' 232

48. போதிதர்மா (Bodhidharma): உயிர்த்தெழுதல் (Resurrection) 236

49. சோக்கிரடீஸின் (Socrates): இறுதியுரை 'மீண்டும் பிறப்பேன்' 245

50. மீராபாய்: சோக்கிரடீஸை ஜெயித்த விஷம் ஏன் மீராபாயிடம் தோற்றது? 263

51. அன்னை சாரதாதேவி: பகவானின் பிரிவு மௌன மனதில்; மாற்றம் இல்லை 266

52. ஞானி கபீர்தாஸ் (Kabirdas): மரணித்து மலரானார் 268

பாகம் 4

பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பால்...

(Beyond birth and death...)

53. மதங்கள்: மனிதர்களை மரணத்திற்கப்பால் அழைத்துச் செல்லவேண்டும் 272

54. இரவீந்திரநாத் தாகூரரின் இறுதிநாள்: 'எனது பாடலை இன்னும் பாடவில்லை' 274

55. இரமணமஹரிஷி: உண்மையுடன் ('சுயம்') கலந்துவிட்டேன் 275

56. மெஹர்பாபா: மரணநிலை ஞானியைப் பிரசவித்தது 278

57. மீண்டும் தோன்றுவார்களா?: கிருஷ்ணர், புத்தர், மஹாவீரர், இயேசு 280

58. கடவுள்: நல்லோரைக் காத்து தீயோரை அழிக்கிறாரா? 284

59. அலெக்ஸ்சாண்டரின் இந்திய அனுபவம்: மரணத்தை நோக்கிய விழிப்பு 292

60. மறுபிறப்புக் கோட்பாடு: நேர இழப்புக்கு காரணமா? 299

61. புத்தரின் இறுதி நிகழ்வு: தியான நிலையும் இறுதி நிலையும் ஒன்றே 305

62. மனவழிமூலம் மனவெளி உரையாடல் (Telepathy) 307

63. உலகம் எப்படி இயற்கையோ அதுபோல மறுபிறப்பும் இயற்கையே! 318

64. தெரியாததிலிருந்து தெரிந்ததிற்குள் நகர்தலும், தெரிந்ததிலிருந்து தெரியாததிற்குள் நகர்தலும் 321

65. உடல் உறுப்புகள் தானம்: 'ஊனுக்கு ஊன் உற்றநோய் தீர்க்கும்' 328

66. சுவாமி விவேகானந்தர்: 'மரணத்திற்குப் பின் உயிர்' 344

## பாகம் 5

## முடிவான முடிவு
## (An Ultimate thought)

67. விடைகாணப்படவேண்டிய வினா எது? (To which question does an answer need to be found?) 348

- ஆய்வு நூல்கள் (Bibiliography) 368

# UNIVERSITY OF JAFFNA

DEPARTMENT OF PHILOSOPHY

PROF. N. GNANAKUMARAN
University of Jaffna
Thirunelvely, Jaffna
Sri Lanka

O / Tel. 012 222 7422
R/ Tel. 021 222 4528
M/Phone 077 644 7001

## அணிந்துரை

திரு. எஸ். குருபாதம் அவர்கள் படைத்த 'மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்' எனும் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். ஐந்து பாகங்களையும் அறுபத்தேழு அத்தியாயங்களையும் கொண்டதாக இந்நூல் வடிவமைக்கப் பட்டுள்ளமை காணலாம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து மெய்யியல் துறையின் பாடவிதானத்தில் உள்ள சமய மெய்யியலின் ஆய்விற்குரிய கருப்பொருளை கொண்டமைந்துள்ள இந்நூல் தன்மையில் எமது விருப்பிற்குரிய விடயமென்பதில் கூடிய அக்கறைக்குரியதாக அமைந்தமை முதற்கண் சுட்டுதற்குரியதாகும். பல பயன்தரு கருத்துகளையும், மறுபிறப்புத் தொடர்பாகப் பல உறுதியான தரவுகளையும் செய்திகளையும் தேடித் தொகுத்த முறை பாராட்டுதலுக்கும், வாழ்த்துதலுக்கும் உரியதொன்றாகும். 'மறுபிறப்பும் மரணத்துக்கு அப்பாலும்' எனும் விடயம் தொடர்பாக கற்க விரும்புகின்ற மாணவர்களுக்கும் பொது அறிவைப் பெற விரும்புகின்ற ஆர்வலர்களுக்கும் நிச்சயமாகத் தெளிவான அடிப்படையையும், ஆக்கபூர்வமான அறிவினையும் தரவல்ல தென்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதொன்றாகும்.

கடோ உபநிடதத்தில் நசிகேஸத்திற்கும் யமனுக்குமிடையில் நடந்த உரையாடலில் நசிகேஸத் யமனிடம் கேட்ட மூன்று வரங்களில் மூன்றாவது வரமாக 'மரணத்தின் அப்பால் உள்ள

நிலை'யைக் கேட்டமையும், அதற்கு யமன் பல வகையில் விடையிறுக்காது தவிர்க்க முயன்றமையும் பிற்பட நசிகேஸத்தின் உறுதியான, பக்குவ நிலையறிந்து உபதேசித்தமையும் அறிகின்றோம். வேதகாலத்திலிருந்தே மறுபிறப்புப் பற்றியும், மரணத்தின் பின்னாலான நிலை பற்றியும் ஆராய்ச்சிகள் இடம் பெற்றமை அறிதற்குரியதாகும். இவ்வகையில் முதன்மைக்குரியதும், சிறப்பிற்குரியதான பொருளினைத் துணிந்து தெரிவு செய்து இந்நூலையாக்கி அளித்துள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

மேலும் சில்வியா பிறவுண் (Sylvia Browne) போன்ற உளவியல் சாரா அறிஞர்களின் பல்வேறுபட்ட கருத்துகளினையும், கிரேக்க சிந்தனையாளர்கள், மேலைத்தேய மெய்யியலறிஞர்கள், மதவாதிகள், கீழைத்தேய சிந்தனையாளர்கள், இந்திய சிந்தனையாளர்கள் எனப் பலதரப்பட்ட அறிஞர்களின் கருத்துகளையெல்லாம் ஒன்றுசேர்த்து வழங்கிய தன்மை சிறப்பிற்குரியதாகும். மேலும் வியவஹரிக வாழ்வில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளை முன்வைப்பது எவ்வகையில் வாசகர்களிடையே மறுபிறப்புப் பற்றிய சிந்தனையில் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வல்லதென்பது இந்நூலைப் படிப்போர்க்குப் புலனாகவல்லதாகும். பொதுமகன் பார்வையில் பல நிகழ்வுகளைப் பல வெளியீடுகளின் ஆதாரத்துடன் முன்வைக்க சிந்தித்தமை புதிய கோணங்களில் வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்துள்ளது எனத் திடமாக நம்பலாம். தமிழில் எழுந்த 'மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்' எனும் இந்நூல் மறுபிறப்பும் மரணத்துக்கு அப்பால் பற்றி அறிய வேண்டுமென நினைக்கின்ற பல ஆர்வலர்களுக்குப் பெருவிருந்தாக அமையவல்லதெனத் திடமாக நம்புகின்றேன். மேலும் இவ்வாசிரியர் இதுபோன்ற பணிகளில் ஈடுபட வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அன்புடன்

**நா. ஞானகுமாரன்**

மெய்யியல் பேராசிரியர்

ஓஓஓ

# நூல் அறிமுகம்

சிந்திக்கத் தொடங்கிய மனிதனானவன் மரணத்தின் சாட்சியாக இருந்த ஆதி காலத்திலிருந்தே மறுபிறப்புப் பற்றி சிந்தனைகளில் ஆழ்ந்திருப்பான் என்பது நிச்சயம். மரணம் பற்றிய அச்சமும் இறைவழிபாடும் ஆரம்பித்த பின்னரே மரணத்திற்கு அப்பாலான வாழ்வு பற்றிய ஆழமான சிந்தனைகள் முகிழ் விட்டிருக்கும் எனவும் கொள்ளலாம்.

இதனால்தான் எமது சமயப் பெரியார்களும் தத்துவ ஞானிகளும் ஆன்மா, மறுபிறவி, பிறவாமை போன்ற விடயங்களில் - தத்துவ விசாரங்களில் ஈடுபட்டனர். பல்வேறு மொழிகளைப் பேசிய, பல்வேறு மதங்களைப் பின்பற்றிய அறிஞர்களும் ஞானிகளும் இத்தகைய தேடல்களில் ஈடுபட்டதையும் அறிய முடிகிறது.

கட்டுக் கதைகளும், புராணக் கதைகளும் என்ற நிலை மாறி எதையும் அறிவியல் ரீதியாகச் சிந்திக்கின்ற நிகழ்காலத்திலும் இவை பற்றிய தெளிவான பல பதிவுகள் உள்ளன. மரணம் அடைந்துவிட்டார் என்ற நிலையிலிருந்து அதிசயமாக உயிர் தப்பியவர்களின் அனுபவங்கள் பலவும் மரணப் படுக்கைத் தரிசனங்கள் (Near death experiences and visions) என ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

காலாதிகாலமாக இப்படியான விடயங்கள் பேசப்பட்டு வந்தாலும் அவை விஞ்ஞானபூர்வமான பதிவுகளானது அண்மையில்தான். 1924-ஆம் ஆண்டளவில் பௌதிகவியல் பேராசிரியரான Sir William Barrett தான் இவ்வாறான விடயங்கள் பற்றி ஆய்வு செய்து முதன் முதலாக ஆவணப்படுத்தினார். மரணமென்னும் இறுதிக் கணத்தில், ஒரே நேரத்தில் இவ்வுலகிலும் மரணத்திற்கு அப்பாலான மற்றொரு உலகிலும் சஞ்சரித்தவர்களின் அனுபவங்களை Ira Byock என்பவர் Dying Well என்ற நூலில் ஆராய்ந்திருக்கிறார்.

இவைபோன்ற ஏராளமான ஆவணங்களை ஆழமாகவும் விரிவாகவும் ஆய்ந்து தெளிவான ஆதாரங்களுடன் தருகின்ற ஒரு சிறந்த நூலை திரு. எஸ். குருபாதம் நமக்குத் தந்திருக்கிறார். 'மறுபிறப்பு பற்றிய ஆச்சரியமான தகவல்கள்' என்பது இந்த நூலாகும். மேம்போக்கான வாசிப்புக்கான விடயம் இதுவல்ல என்றபோதிலும், எவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் மிகவும் எளிமையான தமிழில் தந்திருப்பது இந்த நூலின் விசேடம் என்பேன்.

எத்தகைய முன்முடிவுகளுக்குள் தன்னைச் சிறைப்படுத்தாது செய்த தேடுதல்கள் என்பதால் இவை பாமர மக்களை மட்டுமின்றி ஆழமாகத் தேடல்களைச் செய்பவர்களுக்கும் ஏற்ற நூலாகவும் இருக்கிறது.

இருந்தபோதும் மரணம் என்பது வாழ்வின் படிமுறையின் ஒரு பகுதி மட்டுமே, அது மறுபிறப்பை நோக்கி நகர்கிறது எனவும், மரணத்திற்கு அப்பாலும் பிரக்ஞையும், வாழ்வும் தொடர்கிறது என்ற கருத்தை நோக்கியே நகர்கிறது என்பதைக் குறிப்பிடலாம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கிணங்க சமத்துவமும் மனித நேயமும் மனித வாழ்வில் மலரவேண்டும் என்ற இலக்கை நோக்கிய இவரது எழுத்துப் பயணத்தின் வெற்றிக்கு எனது மனமார்ந்த வாழத்துக்கள்.

15.07.2013

Dr. **எம்.கே. முருகானந்தன்**
M.B.B.S(Cey); DFM (Col); FCGP (Col)
Family Physician
Colombo. Sri Lanka.
kathirmuruga@hotmail.com



## அட்டைப்பட விளக்கம்

வெளிச்சுற்று : மனித வாழ்க்கைச் சுழற்சி
உட்சுற்று : வானியல் வாழ்க்கைச் சுழற்சி



## " என்னைப்பற்றி நான்! "



மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் பிறந்தேன். எனது தந்தை அங்கு புகையிரத இலாகாவில் Section Superintendent ஆகப் பணிபுரிந்தார். அப்போது அங்கு நிலவிய யுத்த அசம்பாவிதங்கள் காரணமாக சிறுபிராயத்திலேயே யாழ்ப்பாணம் சென்று அங்கு வாழ்ந்து, ஆங்கிலம் கற்பிப்பவராகப் பணியை ஆரம்பித்து, பத்திரிகைத் துறையில் ஆர்வம் காரணமாக யாழ்ப் பாணத்திலிருந்து அப்போது வெளிவந்து கொண்டிருந்த ஒரேயொரு தேசியத்தினசரியான (National Daily) 'ஈழநாட்டில்' உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து அதில் உலக அரசியல்சார்ந்த கட்டுரைகளும் எழுதி பத்திரிகையாளராக மலர்ந்தேன். பின்பு சவூதி அரேபியா சென்று Yanbu நகரில் உள்ள ஒரு ஸ்தாபனத்தில் நூல—கராகவும் (Librarian) அந்த ஸ்தாபனத்தின் செய்தி இதழின் (Bulletin) நிர்வாக ஆசிரியராகவும் பணிபுரிந்தேன். பின்பு கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரில் குடியேறி, அங்கு ஒரு சட்ட நிறுவனத்தில் "Paralegal" ஆகவும் சத்தியப் பிரமாண ஆணையாளராகவும் (Commissioner of Oath) கடமையாற்றி தற்போது எழுத்துப்பணியில் ஈடு பட்டுள்ளேன்.

நான் எனது மாணவ பிராயத்திலிருந்து இன்றுவரை ஏராளமான பலதுறை சார்ந்த நூல்கள் (Non fictions) வாசித்து அவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட அறிவு, சிந்தனை, அனுபவங்களை ஒருங்கே திரட்டி அவற்றை நூல் வடிவம் ஆக்குகின்றேன்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்பு ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையில் (Toronto District School Board) ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டும் அதிபருக்கான தராதர பாட நெறியைப் ( Principal's Qualification Program) பூர்த்தி செய்து, தொடர்ந்து கற்பிக்கும் பணியில் இருக்கும் எனது வாழ்க்கைத்துணை ஜெயா (Jeyajothy) அவர்கள் எனது எழுத்துப்பணிக்கு உயிரூட்டமாக உள்ளார்.

'என்னைப்பற்றி நான்'என்ற அறிமுகத்துடன் ஆரம்பித்து 'எங்களைப்பற்றி நாங்கள்' என்ற அறிமுகத்துடன் நிறைவு செய்து இந்நூலை உங்கள் கரங்களில் தவழ விடுகின்றோம்.

**வெளிவரும் நிலையிலுள்ள நூல்கள்:**

- குழந்தைகளை வளர்க்காதீர்கள், வளரவிடுங்கள்!
- மனமே மகிழ்ந்திரு!
- மதமற்ற மதம்
- போதிதர்மர் பற்றிய அற்புத விடயங்கள் (மிக விரைவில் வெளிவருகிறது)
- வழிகாட்டும் 'தந்திரா' (Tantra)
- பரீட்சையில் பெற்ற புள்ளி $\frac{100}{100}$
- உலக சமாதானத்தை நோக்கி...(Towards The World's Peace...)

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

மனித நேயத்துடன்
**எஸ். குருபாதம்**
**ஜெயா. குருபாதம்**
gurujeya@ymail.com

# 'என்' நூலைப் பற்றி 'நான்'

## (About my book as an author)



**இந்'நூலின்' சுயசரிதம்:**

ஜனன, மரண நிகழ்வுகள் புரியாத புதிராகவே இருக்கின்றன. ஏன் மரணம் நிகழ்கிறது? இறந்தவர் இறந்தபின் எதுவு மற்றவர் ஆகிறாரா? இது போன்ற கேள்வி கள் நான் சிறுவனாக இருந்தபோது என்னுள் எழுந்திருக்கின்றன. பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் முற்பிறப்பை ஞாபகப்படுத்திக் கூறுகிறார்கள் போன்ற செய்திகள் வெளியாகிய போதெல்லாம் அச்செய்திகள் என்னைக் கவர்ந்தன. இறந்தவர்கள் எதுவுமற்றவர் ஆகவில்லை மீண்டும் பிறக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கும் செய்திகளாக அவைகள் இருந்தன. அச்செய்திகள் எனக்குள் உறங்கு நிலையில் நீண்ட காலமாக இருந்தன.

மரணநிலைக்கு சென்று உயிருடன் மீண்டவரது சொந்த அனுபவத்தை நண்பர் ஒருவர் 30 வருடங்களுக்கு முன்பு கூறியபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. (அத்தியாயம் 28-இல் காணப்படுகிறது) இறந்த நிலையில் இருப்பவருக்கு சுற்றி நடப்பவை எப்படித் தெரிந்தது? அதே காலப் பகுதியில் Readers Digest சஞ்சிகையில் தனது மரண அனுபவம் பற்றி (Near death experience) அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் எழுதியிருந்ததை வாசித்தபோது எனக்கு ஏற்கெனவே நண்பர் ஒருவர் கூறிய தனது மரண அனுபவமும் டாக்டரதும் ஒரேமாதிரி அனுபவமாக இருந்ததால் எனது கவனம் இதன்மேல் ஈர்க்கப்பட்டது. உடல் இறப்புக்கு அப்பால் ஏற்படும்

'நிகழ்வுகளில்' நிறம், மொழி, மதம், இனம், நாடு, உடை, உணர்வு, உணவு, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், ஆண், பெண், தொழிலாளி, முதலாளி, பதவி, அந்தஸ்து, கௌரவம் இவை எல்லாம் கடந்து எவராகிலும் மரணநிலை அடைந்து மீண்டும் உயிர்த்தவரது நிகழ்வுகளில் அவர்கள் யாரென்று வித்தியாசமில்லாது ஒரே மாதிரி அனுபவத்தை அடைகிறார்கள் என்பது புலனாகியது. எனக்குள் உறங்கு நிலையில் இருந்தவை 'விழித்து'க்கொண்டன. இவை தொடர்பான தகவல்கள் எனக்குப் பொக்கிசமாயின. அவை எனக்குள் ஜனன மரண தொடர்பான நூல் எழுதும் எண்ணத்தை துளிர் விடச்செய்தன.

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்':**

உயிர் வாழும்போது மனிதருக்குள் இருக்கும் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், வித்தியாசங்கள், பாகுபாடுகள், வேற்றுமைகள் அனைத்தையும் மரணம் தகர்த்தி ஒரு சமநிலையில் உலகில் உள்ள அனைவருக்கும் ஒரே 'அனுபவத்தை'க் கொடுக்கிற தென்பது தெளிவாகிறது. நான் நண்பர் மூலம் அறிந்த நிகழ்வும், சஞ்சிகையில் வாசித்து அறிந்த நிகழ்வும் 'சாட்சிகளாக' என் மனதில் பதிந்தன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனப் புலவன் கணியன் பூங்குன்றனார் 2000 வருடங்களுக்கு முன்பே பாடியதைப் பல தடவை எண்ணி எண்ணி வியத்திருக்கிறேன். எந்த ஊரும் எனக்குச் சொந்த ஊர்தான்; எந்த மனிதரும் எனக்கு உறவினர்தான் என்ற கருத்தை அக்கவிதையின் வரிகள் கொடுக்கின்றன. 'எல்லா ஊர்களும், எல்லா மக்களும் ஒன்றே' என்கிறார் புலவர். மரண அனுபவம் அடைந்து மீண்டவர்கள் தங்களுக்கு மரண அச்சம் மாத்திரமல்ல, பிறரைப்பற்றித் தங்களுக்குள் இருந்த வேற்றுமைகள், வித்தியாசங்கள், வேறுபாடுகள் அனைத்தும் நீங்கிவிட்டன என்றும் கூறியிருக்கிறார்கள். எல்லோரும் ஒன்றே என்ற பார்வை அவர்களில் நிலவுகிறது. புலவர் கணியன் பூங்குன்றனார் கூறிய 'யாவரும் கேளிர்' என்ற வாக்கியத்தை எண்ணி மீண்டும் வியக்கிறேன்.

**மதமற்ற மதம் உதயமாகட்டும்:**

எனக்குள் எழுந்த ஆர்வத்தினால் Life after death, Reincarnation, What has become of soul after death போன்ற பல நூல்களின் ஊடாக இறப்புக்கும் - பிறப்புக்கும் இடைப்பட்ட நிகழ்வை அல்லது நிலையைத் தேடினேன். அதற்கு புத்த போதனைகள், போதிதர்மாவின் விளக்கங்கள், லா-சூவின் கருத்துகள், சுவாமி விவேகானந்தர், சுவாமி ஓசோ, சுவாமி சிவானந்தா போன்றவர்களது சொற்பொழிவுகள் என்னை நெறிப்படுத்தின. மரண அனுபவமடைந்து மீண்டவர்கள் தங்களுக்குத் தாங்களே 'சாட்சியாக' என்ன சொல்கிறார்கள் என்ற தகவலை Life after life என்ற நூல் எனக்கு வழங்கியது. தங்கள் முற்பிறப்பை, பழைய பிறப்புக்களை அறிந்தவர்களை நான் அறியவேண்டும் என்ற என் ஆர்வத்திற்கு Psychic Children (அமானுஷ்ய சக்தி கொண்ட பிள்ளைகள்) என்ற நூல் எனக்கு கைகொடுத்தது.

அனைத்து மதங்களைச் சார்ந்த மெய்ஞ்ஞான நூல்களின் உதவியுடன் பார்க்கும்போது இறப்புக்கு அப்பால் உள்ள உடன்நிலையும் அதனுடன் இணைந்த தொடர் நிகழ்வும் உலகில் உள்ள அனைவருக்கும் ஒரே மாதிரி அனுபவத்தைத் தான் கொடுக்கின்றன என்பது தெளிவாகிறது. எந்த 'உண்மையை' நிலைநாட்ட அனைத்து மதப் பூசல்களும், மத வன்முறைகளும், மத வேறுபாடுகளும், மதப் போர்களும் உலகில் இடம்பெறுகின்றன? ஒரு மதக்காரர் இன்னொரு மதக்காரரை அரவணைத்து ஏற்றுக்கொள்வதைப் போல் காட்டிக்கொண்டு, ஆனால் நிஜத்தில் ஏற்றுக்கொள்ளாமலே இருந்துவிடுகிறார்கள்! எல்லோருக்குள்ளும் மதமற்ற மதம் மனதில் உதயமாகவேண்டும்!

**ஏன் பிறந்தோம்?**

ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? மரணத்துக்கு அப்பாலுள்ளது என்ன? உயிர் எங்கே செல்கிறது? என்று என்னையே நான் பல தடவை கேட்டுவிட்டேன். எனக்குள் ஒரு பட்டிமன்றமே நடத்திவிட்டேன். வாதி - பிரதிவாதி, நீதிபதி எல்லாம் நானேதான். அதுமட்டுமல்ல கைதட்டி சபாஷ்

போடும் எனது ரசிகனும் நானே! ஏன் பிறந்தோம்? இவ்வுலகில் மனிதாபிமானமாக மனித நேயத்துடன் வாழப் பிறந்தோம்.

சொர்க்கலோகம் செல்வதற்காக இவ்வுலகில் வாழவில்லை. நாம் இவ்வுலகில் வினாடிக்கு வினாடி, நிமிடத்திற்கு நிமிடம் முழுமையாக வாழவேண்டும். ஆனந்தமும், சிரிப்பும், நேரிய உளச்சார்பும் (Positive attitude) பேரானந்த வாழ்வின் அடிப்படை ஆதாரங்களே. 'உட்குரலை' (Inner Voice) உதாசீனம் செய்து வாழ்ந்தால் வாழும் காலம் முழுவதும் நரகலோகமே, மனச்சாட்சி சொல்கிறபடி வாழ்ந்தால் வாழும் காலம் முழுவதும் சொர்க்கலோகமே என்று எடுத்துக்கொள்ளலாமல்லவா?

- வாழ்வு - எல்லாம் அறிந்தது
- வாழ்வு - எங்கும் வியாபித்திருப்பது
- வாழ்வு - சர்வ வல்லமையானது

**இந்'நூலின்' இலக்கு:**

எங்கிருந்து வந்தோம்? மனிதன் ஒரு தொடர்பிறப்பு. மனிதப்பிறப்பு தொடர்ந்து எழுந்துகொண்டேயிருக்கும். இதை முன்னோர்கள் 'எழுபிறப்பே' என்று வர்ணித்தார்கள். அதன் மூலம் சுயம் (Self), பிரக்ஞை (Consciousness) தொடர்கிறது. பிறப்பு ஆதியும் அந்தமுமில்லாத ஒரு முடிவிலி (Infinity). மரணம் உடலுக்குத்தான் 'Self' சுயத்துக்கு அல்ல. ஞானிகளின் அனுபவங்கள் அந்த உண்மையைத்தான் எமக்கு வெளிக்காட்டுகின்றன. அதைத்தான் எமக்குக் கற்பிக்கின்றன. அவைகள் இந்நூலில் பிரதிபலிக்கின்றன. நான் வாசித்து அறிந்து கொண்டவற்றை நான் சேகரித்துக்கொண்டவை அனைத்தையும் திரட்டி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதற்காகவே நூலாக்கியுள்ளேன்.

மரணம் ஒரு Process என்பதையும், மரணத்தை வாழ்வுடன் சேர்த்து ஏற்றுக்கொள்ளவும், மரணம் வாழ்வின் ஒரு பகுதி என்பதையும், மரணம் மறுபிறப்பை நோக்கி நகர்கிறது என்பதையும், மரணத்துக்கு அப்பால் ஒருவரது சுயம் (Self),

பிரக்ஞை (Consciousness) இருக்கிறதென்பதையும், மரணத்துக்கு அப்பால் வாழ்வு உண்டு என்ற கருத்தையும் இந்நூல் பிரதிபலிக்கிறது. இந்நூலின் ஊடாக அந்த இலக்கை நோக்கி நகர்ந்துள்ளேன். அந்த இலக்கை அடைந்தேனா? - 'ஆம்' என்பதே என் பதில்.

**மனிதம் மரணித்தது:**

ஹிட்லரின் ஒஸ்விற்ஸ் (Auschwitz) மரணமுகாமில் (Death Camp / Concentration Camp) மரணதண்டனைக் கைதியாக இருந்த வியன்னா நாட்டைச் சேர்ந்த மனோவியல் டாக்டர் (Psychiatrist) விக்ரர் பிராங்கில் (Dr. K. Viktor.E.Frankl) அந்த மரண - சித்திரவதை முகாமில் அவரது பெற்றோர்கள், சகோதரர்கள், குடும்பத்தினர்கள் உட்பட யூத ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பலர் சூளையில் (Furnace) உயிரோடு எரியூட்டப்பட்டதையும், தான் முகாமிலிருந்து தப்பிய விதத்தையும், வாழ்வுக்கும் - மரணத்திற்கும் இடையில் துன்பியலை அனுபவித்தவர்களது மனநிலையையும், தன் சொந்த அனுபவங்களையும் தனது 'Man's Search for Meaning' (அர்த்த புஷ்டிக்கான மனிதனது தேடல்) என்ற நூலில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

மரண - சித்திரவதை முகாமில் கைதிகள் பல விதத்தில் மனிதத்துவம் இழிவுநிலைக்கு தள்ளப்பட்டு, அவமதிக்கப்பட்டு, மனிதத்துவத்தை இழக்கச் செய்தபோது (Dehumanization), இவர் சக கைதிகளுக்கு மனிதப் பிறப்பின் தரத்தை உயர்த்த, மனதிற்கு ஒத்தடம் கொடுப்பது போலான மனதிற்கு ஆறுதல் சிகிச்சை (Humanization Therapy) வழங்கி, மரணத்தை எதிர்நோக்கிய கைதிகளுக்கு உயிர் வாழ்வதற்குத் தன்னம்பிக்கை ஊட்டினார். மரணம் நெருங்கியபோதெல்லாம் மனம் தளராமல் இருக்க நகைச்சுவையையும், உயிருடன் தப்புவோம் என்ற தன்னம்பிக்கையையும் ஊட்டியவர். சித்திரவதைகளை இலேசாக எடுக்கும் மனப்பயிற்சியை அந்த முகாமில் மரணக் கைதிகளுக்கு இரகசியமாக அறிமுகப்படுத்தினார்.

இவர் மரணவதை முகாமிலிருந்து தப்பியபின் இதை Logo Therapy என்ற கோட்பாடாக உலகுக்கு அறிமுகப்படுத்தினார்,

தனது தாய் நாடான வியன்னாவில் மன உளவியற் பயிற்சிக் கல்லூரி The School of Logo Therapy (Third School of Viennese Psychiatry) ஒன்றை ஆரம்பித்தார்.

**இந்‘நூலின்’ பிறப்பு:**

Man's search for meaning என்ற நூல் எனது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. மனித நேயத்திற்குச் சாட்சி கூறும் நூல் இது. ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய நூல்களில் இதுவும் ஒன்று. மனிதர்களின் மனநிலையில் உள்ள முரண்பாடுகளின் அடிப்படை என்ன? இக்கேள்வி என்னுள் எழுந்தது. உளவியல் நூல்கள் ஊடாக விடை தேடியபோது ‘பிரக்ஞை’ (Consciousness) என்ற விஷயத்தின் முக்கியத்துவத்தை அந்த நூல்கள் எனக்குக் கோடிட்டுக் காட்டின. பிரக்ஞையைப் பற்றித் தெரிந்துகொள்வோம் என்று அதற்குள் மூழ்கியபோது அது தத்துவார்த்தமாக என்னை மறுபிறப்புக்கும் - இறப்புக்கும் அப்பால் அழைத்துச் சென்றது. அதன் விளைவாக ‘மறுபிறப்பு பற்றி ஆச்சரியமான தகவல்கள்’ என்ற இந்நூல் பிறந்தது.

நான் ஒரு வெறும் நூல் வாசகரே. நான் எந்த மதத்தையும் தெரிவுசெய்து வாழவில்லை. சுருங்கக்கூறின் நான் எந்த மதத்தையும் சாராத ஒருவர் (‘Free Thinker’). எனது இந்நூலில் என் சொந்த அனுபவங்கள் எதுவும் இல்லை. எந்த நிகழ்வுக்கும் நான் நேரடி சாட்சியும் இல்லை. எனது தேடலில் நான் வாசித்து அறிந்த விஷயங்களைத் தொகுத்து நூலாக்கியுள்ளேன். இந்நூலில் கருத்து முரண்பாடுகள், தவறுகள் காணப்படின் அவை அனைத்தும் என்னைச் சார்ந்தவையே. தெளிவு, விளக்கம், ஆக்கபூர்வம் காணப்படின் அவை அனைத்தும் என்னைச் சார்ந்தவை அல்ல, அவை அனைத்தும் நான் வாசித்த நூல்களை, என்னை நெறிப்படுத்திய போதனைகளை, சொற்பொழிவுகளைச் சார்ந்தவையேயாகும். நான் வாசித்து அறிந்தவைகள் எனக்குச் சுவாரஸ்யமாக இருந்தபடியால் அந்தச் சுவாரஷ்யத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

**அமைதியை ‘மலரவைத்து’ உலகிற்கு ‘அழகு’ சேர்ப்போம்:**

நாம் வாழும்போது இருக்கும் அனைத்து வேறுபாடுகளும், வேற்றுமைகளும் மரணத்துக்கு அப்பால் எதுவுமற்ற சமரச

நிலையில் அமைந்துவிடுகின்றன. எனவே நாம் வாழும்போது சமத்துவமாகவும் மனித நேயத்துடனும் வாழ்ந்து உலகை அழகுசெய்வோம். இதன் மூலம் சமத்துவமும், மனிதநேயமும் உலகில் மலரட்டும், அந்த மலர்தலில் உலகம் மேலும் அழுகுபெறும். எனவே இந்த உலகை இப்படியே விட்டு விடாது நாம் வாழும் காலத்தில் ஒவ்வொருவரும் சமாதானத் தூதுவராக வாழ்ந்து, போரற்ற உலகாக மாற்றி அமைதியை மலரவைத்து இந்த உலகிற்கு மேலும் அழகு சேர்ப்போமாக.

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'**

மனித நேயத்துடன்,

**எஸ். குருபாதம்**

E-mail : gurujeya@ymail.com
180 Bonspiel Drive
Toronto, MIE 5K4
Ontario, Canada.

# பாகம் - 1

## பிறப்புக்குப் பின் பிறப்பு, இறப்புக்குப் பின் இறப்பு

***(The birth after birth and death after death)***

## அத்தியாயம் 1

# 'முயன்றால் முற்பிறவியின் நினைவுகளைப் பெறலாம்'

*- சுவாமி விவேகானந்தர்*



**19**.*09.1893* அன்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் அமெரிக்கா விலுள்ள சிக்காக்கோ நகரில் இடம்பெற்ற சர்வ சமயப் பேரவையில் (The world's Parliament of Religions) இந்துமதம் என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து அதனைத் தொடர்ந்து ஆற்றிய உரையிலிருந்து ஒரு சிறு பகுதி.)

***நூல்: சிக்காக்கோ சொற்பொழிவுகள், வெளியீடு: ஸ்ரீராமகிருக்ஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை***

"இங்கு நான் நிற்கிறேன். கண்களை மூடிக்கொண்டு 'நான், நான், நான்' என்று என்னைப்பற்றி நினைத்தால் என்னுள் என்ன தோன்றுகிறது? உடலைப் பற்றிய எண்ணம்தான். அப்படியானால் சடப்பொருள்களின் மொத்த உருவம்தானா நான்? 'இல்லை' என்கின்றன வேதங்கள். நான் உடலில் உறைகின்ற ஆன்மா. நான் உடல் அன்று. உடல் அழிந்துவிடும், ஆனால், நான் அழியமாட்டேன். நான் இந்த உடலில் இருக்கிறேன், இது வீழ்ந்துவிடும், ஆனால் நான் வாழ்ந்து கொண்டேயிருப்பேன். நான் முன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருந்தேன். ஆன்மா படைக்கப்பட்டதன்று. படைக்கப்பட்டதாயின் அது பல பொருள்களின் சேர்க்கை

யாகும். அப்படியானால் வருங்காலத்தில் அது கண்டிப்பாக அழிந்துபோக வேண்டும். எனவே ஆன்மா படைக்கப்பட்ட தானால் அது இறக்கவேண்டும்.

சிலர் பிறக்கும்போதே இன்பத்தில் பிறக்கிறார்கள், உடல் வளத்தோடும், வனப்போடும் மனவலிமையோடும், தேவைகள் அனைத்தும் நிறைவேறப்பெற்று வாழ்கிறார்கள். சிலர் துயரத்திலேயே பிறக்கிறார்கள். சிலர் முடமாகவும், நொண்டி யாகவும் இருக்கிறார்கள். பலர் முட்டாள்களாகவே வாழ்ந்து, வாழ்க்கை முழுவதையும் ஏதோ இழுபறி நிலையிலேயே கடத்துகிறார்கள்.

அவர்கள் அனைவரும் படைக்கப்பட்டவர்கள் என்றால், நேர்மையும் கருணையும் உள்ள கடவுள், ஒருவரை இன்பத்தில் திளைப்பவராகவும் இன்னொருவரைத் துன்பத்தில் உழல்பவராகவும் ஏன் படைக்க வேண்டும்? அவர் ஏன் அத்தனை வேறுபாடு காட்ட வேண்டும்? இந்தப் பிறவியில் துன்பப்படுபவர்கள் அடுத்த பிறவியில் இன்பம் அடைவார்கள் என்று கூறுவதும் பொருந்தாது. நேர்மையும் கருணையும் கொண்ட கடவுளின் ஆட்சியில் ஏன் ஒருவர் துயருற வேண்டும்?

ஆகவே, படைப்பாளராகிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கொள்வது இந்த முரண்பாட்டைத் தெளிவுபடுத்த வில்லை, மாறாக எல்லா வல்லமையும் வாய்ந்த ஒருவரின் கொடுங்கோன்மையையே காட்டுகிறது. அப்படியானால், ஒருவன் மகிழ்வதற்கோ துயரத்தில் உழல்வதற்கோ உரிய காரணங்கள் அவன் பிறப்பதற்கு முன்பே இருந்திருக்க வேண்டும். அவையே அவனது முற்பிறப்பின் வினைகள். ஒருவனுடைய உடல், உள்ளம் ஆகியவற்றின் இயல்புகள் பரம்பரையாக வருவது என்று காரணம் காட்டப்படுகிறது அல்லவா?

வாழ்க்கையில் இரண்டு இணைகோடுகள் உள்ளன. ஒன்று மனதைப் பற்றியது, இன்னொன்று சடப்பொருளைப் பற்றியது. சடப்பொருளும் அதன் மாற்றங்களும் மட்டுமே நமது இப்போதைய நிலையை விளக்கிவிடும் என்றால் ஆன்மா என்ற ஒன்று இருக்கிறது என்று கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் சடத்திலிருந்து எண்ணம் தோன்றியது என்று நிரூபிக்க முடியாது. தத்துவப்படி, ஒரே ஒரு பொருள்தான் இருக்க முடியுமானால் ஆன்மா ஒன்றே ஒன்றுதான் இருக்க வேண்டும் என்று ஆகிறது. இது, சடப்பொருள் ஒன்றே ஒன்று தான் இருக்கவேண்டும் என்பதைப்போல பகுத்தறிவுக்குப் பொருந்தியதே. ஆனால் இவை எதுவும் இப்போது நமக்கு அவசியமில்லை.

பரம்பரையின் மூலம் உடல்கள் சில இயல்புகளைப் பெறுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் குறிப்பிட்ட மனம் குறிப்பிட்ட விதமாகச் செயல்படுவதற்கு ஆதாரமாக இருக்கின்ற ஒரு தூல உருவத்தையே இந்த இயல்புகள் குறிக்கின்றன. இனி, ஆன்மாவுக்கும் கடந்தகால விளைவுகளின் காரணமாகச் சில குறிப்பிட்ட இயல்புகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட இயல்புகளுடன் கூடிய ஆன்மா, குணஒற்றுமை விதிகளுக்கு (Law of Affinity) இணங்க எந்த உடலில் பிறந்தால் அந்த இயல்புகளை வெளிப்படுத்த முடியுமோ, அந்த உடலில் பிறக்கிறது.

இது அறிவியலுக்கு ஏற்புடையது. ஏனெனில் அறிவியல் எதையும் பழக்கத்தைக்கொண்டே விளக்க விரும்புகிறது. பழக்கமோ எதையும் திரும்பத் திரும்பச் செய்வதால்தான் உண்டாகிறது. ஆகவே புதிதாகப் பிறந்த ஓர் ஆன்மாவின் இயல்புகளை விளக்குவதற்கு அது அந்தச் செயலை திரும்பத் திரும்ப செய்திருக்க வேண்டும் என்று ஆகிறது. அந்த இயல்புகள் இந்தப் பிறவியில் பெறப்பட்டவை அல்ல ஆதலால் அவை முந்தைய பிறப்புகளிலிருந்து வந்திருக்க வேண்டும்.

இன்னொரு கருத்தும் இருக்கிறது. இவையெல்லாம் சரியென்றே வைத்துக்கொள்வோம், ஆனால் ஏன் எனக்கு முற்பிறவியைப் பற்றிய எதுவும் நினைவில் இல்லை? இதை எளிதில் விளக்க முடியும். இப்போது நான் ஆங்கிலம் பேசிக் கொண்டிருக்கிறேன். இது என் தாய்மொழி அல்ல. உண்மையில், என் தாய்மொழிச் சொற்கள் எதுவும் என் உணர்வுத் தளத்தில் இப்போது இல்லை. ஆனால் பேசுவதற்குச் சிறிது முயன்றால் போதும் அவை விரைந்து வந்துவிடும். மனக்கடலின் மேற்பரப்பு மட்டுமே உணர்வுப் பகுதி, மனத்தின் ஆழத்தில்தான் அனுபவங்கள் அனைத்தும் திரண்டு கிடக்கின்றன

என்பதையே இது காட்டுகிறது. முயலுங்கள், போராடுங்கள் அவை மேலே வரும். முற்பிறவியையும் நீங்கள் அறியமுடியும்.

இது நேரான, நிரூபிக்கப்படக்கூடிய சான்று. நிரூபிக்கப் படுவதுதான் ஒரு கொள்கை சரி என்பதற்குச் சான்று. உலகிற்கு ரிஷிகள் விடுக்கும் அறைகூவல் இதுவே: 'நினைவுக்கடலின் ஆழத்தைக் கிழறிவிடும் இரகசியத்தை நாங்கள் கண்டு பிடித்துள்ளோம். முயலுங்கள், முயன்றால் நீங்களும் நிச்சயமாக முற்பிறவியின் நினைவுகளை முழுமை யாகப் பெறுவீர்கள்!'

தான் ஓர் ஆன்மா என்பதை இந்து நம்புகிறான். ஆன்மாவை வாள் வெட்டமுடியாது, நெருப்பு எரிக்கமுடியாது, நீர் கரைக்க முடியாது, காற்று உலர்த்த முடியாது. ஒவ்வோர் ஆன்மாவும் சுற்றெல்லையில்லாத, ஆனால் உடலை மையமாகக் கொண்ட ஒரு வட்டம். இந்த மையம் ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலிற்கு மாறிச் செல்வதே மரணம் என்று இந்து நம்புகிறான். சடப்பொருளின் நியதிகளுக்கும் ஆன்மா கட்டுப்பட்டதல்ல. அது இயல்பாகவே சுதந்திரமானது, தளைகள் அற்றது, வரம்பு அற்றது, புனிதமானது, தூய்மையானது, முழுமையானது. எப்படியோ அது, தான் சடத்துடன் கட்டுப்பட்டதாக தன்னைக் காண்கிறது. எனவே தன்னைச் சடமாகவே கருதுகிறது.

சுதந்திரமான, நிறைவான, தூய்மையான ஆன்மா ஏன் இவ்வாறு சடத்திற்கு அடிமையாக இருக்க வேண்டும் என்பது அடுத்த கேள்வி. முழுமையான ஆன்மா, தான் முழுமையற்றது என்ற நம்பிக்கையில் எவ்வாறு மயங்கிவிட முடியும்? இத்தகைய கேள்விக்கு இங்கு இடமில்லை என்று கூறி, இந்துக்கள் இதைத் தட்டிக்கழிப்பதாகச் சொல்லப்படுகிறது. சில சிந்தனையாளர்கள், முழுமை நிலைக்குச் சற்றுக் கீழே இருக்கின்ற, ஆனால் முழுமைபெறாத பல தெய்வங்களைக் கூறி, பெரிய பெரிய சொற்களால் இடைவெளியை நிரப்ப முயற்சி செய்வதன் மூலம் இதற்கு விடை காண விரும்பு கிறார்கள். ஆனால் பெரிய சொற்களைக் கூறுவது விளக்கமாகி விடாது. கேள்வி அப்படியேதான் இருக்கிறது. முழுமையான ஒன்று முழுமை நிலையிலிருந்து எப்படிக் கீழே வரமுடியும்?

தூய்மையானதும் முழுமையானதுமான பொருள் தன் இயல்பை எப்படி அணுவளவேனும் மாற்றிக்கொள்ள முடியும்?

இந்து நேர்மையானவன். அவன் குதர்க்கவாதம் செய்து தப்பிக்க விரும்பவில்லை. கேள்வியை ஆண்மையுடன் எதிர்கொள்ளும் துணிவு அவனுக்கு உண்டு. அவனது பதில் இதுதான்: 'எனக்குத் தெரியாது. முழுமையான ஆன்மா, தான் முழுமையற்றது என்றும், சடத்துடன் இணைக்கப்பட்டு, அதனால் பாதிக்கப்படுகிறது என்றும் ஏன் தன்னைப் பற்றி நினைக்க ஆரம்பித்தது என்று எனக்குத் தெரியாது', உண்மை என்னவோ அதுதான். ஒவ்வொருவரும் தன்னை உடலாக நினைத்துக்கொண்டிருப்பது உண்மைதான். தான் உடல் என எண்ணிக்கொள்வது ஏன் என்பதை விளக்க எந்த இந்துவும் முயல்வதில்லை. அது கடவுளின் திருவுளம் என்று பதிலளிப்பது விளக்கமாகாது. 'எனக்குத் தெரியாது' என்று இந்து கூறுகிறானே, அதற்குமேல் எதுவும் சொல்ல முடியாது.

ஆகவே. மனித ஆன்மா நிலையானது, அழிவற்றது, நிறைவானது, எல்லலையற்றது. மரணம் என்பது ஓர் உடலினின்று மற்றோர் உடலுக்கு இடம்பெயர்தலே ஆகும். கடந்த கால வினைகளால் நிகழ்காலம் தீர்மானிக்கப்படுகிறது. எதிர்காலம் நிகழ்காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

பிறப்புக்குப் பின் பிறப்பு, இறப்புக்குப் பின் இறப்பு, என்று ஆன்மா மேல் நிலைக்கு உயர்ந்தோ அல்லது கீழ் நிலைக்குத் தாழ்ந்தோ சென்றுகொண்டிருக்கும் என சுவாமி விவேகானந்தர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தொடர்ந்து விளக்கமாகத் தனது பேருரையை நிகழ்த்தினார்...

## அத்தியாயம் 2

# ஆழ்மன அச்சம் (Phobia) முற்பிறப்புச் சம்பவங்களின் தொடர்ச்சியா?



**சி**ல்வியா பிறவுண் (Sylvia Browne) என்ற அமானுஷ்ய சக்தி (Psychic) உள்ள இவர் எழுதி 2007-இல் வெளிவந்த அமானுஷ்ய சக்தியுடைய பிள்ளைகள் (Psychic Children) என்ற நூலில், அறிதுயில் (Hypnosis) சிகிச்சையின் மூலம் தான் அறிந்த விவரங்களை குறிப்பிட்டுள்ளார்.

அவற்றிலிருந்து சில சம்பவங்களைச் சுருக்கமாக இங்குக் குறிப்பிடுகின்றேன்:

ஒரு பிள்ளைக்கு மிகச் சிறிய, குறுகிய, ஒடுக்கமான இடங்கள் என்றால் பயம். இதை கிளொஸ்ரோ போபியா (Claustrophobia) என ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். இப் பயம் உள்ள இவரை அறிதுயிலுக்கு உட்படுத்தியபோதுதான் இதற்கு முந்தைய பிறப்பில் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த போது சுரங்கத்தினுள் விபத்து ஏற்பட்டு அந்த இடிபாடுகளுக்குள் சிக்குண்டு நசிந்து, மூச்சுத்திணறி அவஸ்தைப்பட்டு மரணமாகியுள்ளார் எனத் தெரியவந்தது. அந்தக் குறுகிய இடத்திலிருந்து தப்பி வெளிவர முடியாமல் அனுபவித்த மரண அவஸ்தையினால் ஏற்பட்ட ‘பயம்’ அவரது அடுத்த பிறப்பிலும் தொடர்ந்துள்ளது.

பிறிதொரு பிள்ளைக்கு உயரமான கட்டடமாக இருக்கலாம், கோபுரமாக இருக்கலாம், உயரமான எதுவாகவும்

இருக்கலாம். அதன் பக்கத்தில் போகப் பயம் உண்டு. இதை அக்றோபோபியா (Acrophobia) எனக் கூறுகிறார்கள். அறிதுயிலின்போது தெரியவந்ததாவது முற்பிறப்பில் மலை ஏறும்போது சறுக்கி விழுந்து முதுகெலும்பு உடைந்து, பலத்த காயத்துடன் தரையில் கிடந்த இவரைக் காப்பாற்றச் சென்ற அவசர மருத்துவப் பிரிவினர் இவரைக் கண்டுபிடிக்கக் காலதாமதமானதால் இறந்துவிட்டார். அந்தப் பயம் இவரது அடுத்த பிறப்பில் தொடர்கிறது. இவர் இந்தப் பிறப்பில் உயரங்களுக்கு பயப்படுகிறார்.

வேறோர் பிள்ளை தனது கண் பார்வையில் முன் தயாரிக்கப்படாத உணவை உண்பதற்குப் பயப்படுகிறது. இதை சிற்றோபோபியா (Sitophobia) எனக் கூறுகிறார்கள். முந்தைய பிறப்பில் இவரது சொத்தை எடுப்பதற்காக உணவில் நஞ்சு கலக்கப்பட்டு அதை உண்டு இறந்துவிட்டார். இதனால் ஏற்பட்ட உணவுப் பயம் அடுத்த பிறப்பிலும் அவரை அறியாமல் தொடர்கிறது.

மற்றுமொருவருக்கு மழை, மின்னல், இடிமுழக்கம் போன்றவற்றிற்குப் பயம். இதை அஸ்ற்றாபோபியா (Astraphobia) அல்லது லிலப்ஸோபோபியா (Lilapso phobia) என்பர். முற்பிறப்பில் இவர் கடலில் மீன் பிடிக்கும்போது சூறாவளியில் சிக்குண்டு மரணமான அனுபவத்தால் இப்பிறப்பில் சூறாவளி, மழை, மின்னல், இடிமுழக்கத்திற்குப் பயம் ஏற்பட்டுள்ளது.

இன்னுமொருவர் முந்தைய பிறப்பில் ஒன்பது வயதாக இருந்தபோது தீவிபத்தில் மரணமானார். இப்பிறப்பில் இவர் ஒன்பது வயதை அடைந்தபோது நெருப்புக்கு அதிகம் பயந்தார். இதை ஆர்சன்போபியா (Arson phobia) என்பர்.

மூன்று வயதுப் பிள்ளை ஒன்று வழமைக்கு மாறாக எல்லா நேரமும் உணவு உட்கொள்ளத் தொடங்கிவிட்டார். முற்பிறப்பில் மூன்று வயதாக இருந்தபோது உணவில்லாமல் இறந்தது அறிதுயிலில் தெரியவந்துள்ளது.

ஆறு வயதாக இருந்தபோது நீரில் மூழ்கி இறந்த வேறோர் பிள்ளை அடுத்த பிறப்பில் ஆறு வயதை அடைந்தபோது நீரில் இறங்க அச்சம் கொண்டது. அதனால் நீச்சல் பயிற்சிக்குப்

போக மறுக்கிறது. இதை ஹைட்ரோபோபியா (Hydrophobia) என அழைக்கின்றனர்.

எட்டு வயதுவரை சாதாரணமாக மேல் மாடிக்கு படிகளில் ஏறி இறங்கிய மற்றுமொரு சிறுமி எட்டு வயதை அடைந்ததும் படிகளால் மேல் மாடிக்கு போய்வர மறுத்து, தனக்குப் பயமாக இருப்பதாகக் கூறிக்கொண்டார். இதை கிளிமக்கோபோபியா (Climaco phobia) எனக் கூறுகின்றனர். அறிதுயிலின்போது இச்சிறுமி 'தான் கடந்த பிறப்பில் எட்டு வயதாக இருந்தபோது படிக்கட்டுகளில் சறுக்கி விழுந்து உருண்டு தரையில் தலை அடிபட்டு கழுத்தெலும்பு உடைந்து இறந்ததாக' கூறினார்.

## அத்தியாயம் 3

# குழந்தைகளின் முற்பிறப்புப் பிரதிபலிப்புகள் (The reflections on the past lives of children)

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா நகரில் வசித்துக் கொண்டிருக்கும் சில்வியா பிறவுண் (Sylvia Browne) என்ற அமானுஷ்ய சக்திகொண்ட (Psychic) அம்மையார் எழுதிய மறு உலகமும் மீளத் திரும்புதலும் (The other side and back) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட சம்பவங்களை இங்கு நான் குறிப்பிட்டுள்ளேன். சில்வியா பிறவுண் அவர்கள் கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களாக முன்ஜென்மம், ஆவிகள், அமானுஷ்ய சக்தி (Psychic power) போன்ற பல விடயங்களை ஆய்வுசெய்து அவற்றை நூல்களாக வெளியிட்டுவருகிறார்.

இவர் கலிபோர்னியாவில் (California) உள்ள தனது ஆய்வுக்கூடத்தில் மனப் பிரச்சினைகளுக்கு உள்ளானவர்களை அறிதுயிலுக்குட்படுத்தி (Hypnotic Therapy) சிகிச்சை அளிப்பவர். இவர் ஆய்வாளராகவும் (Researcher) அறிதுயில் வல்லுநராகவும் (Master Hypnotist), முற்பிறப்பை அறியும் கலை தெரிந்தவராகவும் (Past life Regressionist), விரிவுரையாளராகவும் (Lecturer), ஆன்மிக ஆசிரியராகவும் (Spiritual Teacher) பல பரிமாணங்களில் உள்ளார்.

நமக்கு எப்படிக் கடந்தகால நினைவுகள் மனதில் பதிந்துள்ளனவோ அதுபோலவே சிறுகுழந்தைகளுக்கும் பிறந்து சில காலங்களுக்கு முற்பிறப்பு ஞாபகங்கள் நினைவில் இருக்கும். நமக்குச் சில சம்பவங்கள் மனதில் சுமையாக இருக்கும், சில சம்பவங்கள் மறந்துவிடுவோம், சில சம்பவங்கள் பாதி ஞாபகம் அடுத்த பாதி மறந்திருப்போம், சில சம்பவங்களை நம் ஞாபகத்தைக் கிளறி மீட்டெடுப்போம், சில

சம்பவங்கள் கனவுபோலிருக்கும் அதுபோல சிறுபிள்ளைகளுக்கு முற்பிறப்புத் தொடர்புகள், சம்பவங்கள் ஞாபகங்கள் ஆழ்மனப் பதிவிலிருக்கும். குழந்தைகள் கூறுவதை நாம் முற்றாகக் கவனமாகக் கேட்கவேண்டும், தடைபோடக்கூடாது. நாம் திறந்த மனதுடன் நம் காதுகளைக் கூர்மையாக்கிச் செவிமடுக்க வேண்டும். பிள்ளைகள் கூறுவதை மறுக்காதீர்கள், அப்படியிருக்காது இப்படியிருக்காது என்று கூறி, பிள்ளைகளை அதைரியப்படுத்தாமல் பொறுமையாகக் கேட்டால் பிள்ளைகளின் முற்பிறப்பை அறிய அது ஓர் ஆரம்பப்படி என்கிறார் சில்வியா பிரவுண் அவர்கள். குழந்தைகளுக்கு விளக்கமாகக் கூற சொற்பஞ்சம் உள்ளது, அவர்களுக்கு சொல்வளம் இல்லை, வசனநடை இல்லை, அதனால் உங்களுக்கு விளக்கமாக் கூறுவது குழந்தைகளுக்குச் சிரமத்திலும் சிரமம். குழந்தைகளுடன் நீங்கள்தான் அனுசரித்துச் சென்று அவர்களைக் குழப்பாமல் அவர்கள் தரும் தகவல்களை முழுமைப்படுத்தி விளங்கிக்கொள்ள வேண்டும்.

**ஒரு நிகழ்வு:**

## முற்பிறப்புப் பெற்றோர் சந்திப்பு

கரோல் என்பவர் தன் மகன் ஸ்ரீவனை இரவில் படுக்கையில் தூங்கவைப்பது வழக்கம். அப்போது அவனது விளையாட்டுப் பொருட்களை எல்லாம் சேகரித்து அவன் தூங்கும் அறையின் ஒரு மூலையில் வைத்துவிடுவார். மறுநாள் காலை அந்த விளையாட்டுப் பொருட்கள் அந்த அறையில் பரவிக் கிடக்கும். இதைப் பார்த்ததும் பெற்றோர் ஆச்சரியப்படுவர். அப்போது மகன், “நான் எனது அம்மாவுடனும் அப்பாவுடனும் விளையாடினேன்” என்பான். நாங்கள்தான் அம்மாவும் அப்பாவும் உனக்கு வேறு யாரும் அல்ல என அக்குழந்தைக்குப் புரியக்கூடிய மாதிரி கூறினார்கள். அதற்கு அப்பிள்ளை எனக்கு இரண்டு அம்மாவும் இரண்டு அப்பாவும் இருக்கிறார்கள், மற்ற அம்மாவும், அப்பாவும் நான் தூங்கும்போது வந்து என்னோடு இருப்பார்கள் என்றான்.

சில்வியா தனது நூலில் இச்சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது இக்குழந்தையின் முற்பிறப்புப் பெற்றோர் இரவில் இந்தக் குழந்தையிடம் ஆவியாக வந்து போகிறார்கள். இப்பூமியில் தங்கள் பிள்ளை பிறந்து புதிய வாழ்வை

ஆரம்பிக்கும்போது அக்குழந்தை முந்தைய பிறப்பு நிலையிலிருந்து இப்புதிய வாழ்க்கைக்குச் சுலபமாக மாறுவதற்கு (Transition) உதவிபுரிகிறார்கள். தாங்கள் என்றும் பக்கத்திலிருப்போம் என்ற ஆதரவும் வழங்குகிறார்கள் என்கிறார். குழந்தைகளைக் குழப்பாத வகையில் பழைய பெற்றோரை ஏற்றுக்கொண்டு உன்னுடைய அந்த அம்மா அப்பா எப்படி இருக்கிறார்கள்? அம்மாவைப் பற்றிச் சொல்லு! அப்பாவைப் பற்றிச் சொல்லு! என்று குழந்தைக்கேற்ற விதத்தில் புரியக்கூடிய முறையில் உரையாடுங்கள் என்று கூறுகிறார். பழைய சம்பவங்கள் பிள்ளைகளின் ஞாபகங்களில் இருக்கும்போதுதான் அவர்களால் கூற முடியும். அதன் மூலம் உலகத்தினுள் மறைந்திருக்கும் இந்த மர்மத்திற்குள் நீங்கள் ஊடுருவிச் செல்லமுடியும். குழந்தை முற்பிறப்பில் யார் என்பதோடு குழந்தையின் முற்பிறப்பை ஓரளவு தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். குழந்தை சொல்வதை மறுக்காமல், நிராகரிக்காமல் பயம்கொள்ளாமல் பொறுமை யாகக் கேளுங்கள் என்கிறார்.

ஒருவருக்கு பாலர் வகுப்பிலிருந்து படிப்படியாக முன்னேறி முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு என முன்னேறி ஒவ்வொரு வகுப்பாக முன்னேறிச் செல்லும்போது கடந்துவந்த வகுப்பில் கற்றவையை மையமாக வைத்தே அடுத்த ஒவ்வொரு வகுப்பிலும் கல்வி தொடர்ந்து செல்கிறது. பாலர் வகுப்பில் படித்தது முதலாம் வகுப்பிற்கு உதவுகிறது. முதலாம் வகுப்பில் படித்தது இரண்டாம் வகுப்பிற்குத் தேவையாக இருக்கிறது. இரண்டாம் வகுப்பில் பெற்ற அறிவை மூன்றாம் வகுப்பில் பிரயோகிக்கின்றோம். அறிவு வளர்ச்சி இவ்வாறு படிப்படியாக வளர்கிறது. ஆனால் ஒவ்வொரு வகுப்பும் வித்தியாசமானது. வித்தியாசமான பாடங்கள், வித்தியாசமான நண்பர்கள், வித்தியாசமான ஆர்வங்கள். வகுப்புகள் படிப்படியாக முன்னேறி அடுத்த கட்டத்திற்கு நகரும்போது ஒருவருக்கு வித்தியாசமான தோற்றம், வித்தியாசமான உடைகள், வித்தியாசமான தலை அலங்காரங்கள், வித்தியாசமான அனுபவங்கள் போன்றனவும் ஏற்படுகின்றன. இவை அனைத்தும் நாம் வாழும் காலத்தில் ஏற்படும் பல்வேறு நிகழ்வுகளாக மனதில் பதிந்துள்ளன. இதேபோலத்தான் ஆன்மா (Soul) அல்லது உயிர் (Spirit), அல்லது

சுயம் (Self) அல்லது பிரக்ஞையில் (Consciousness) முன் ஜென்மங்களில் காலதிற்குக் காலம் ஏற்பட்ட வித்தியாசமான அறிவு, அனுபவங்கள், நிகழ்வுகள் பதிந்துள்ளன.

பாடசாலையில் மாணவர்களுக்கு விடுமுறைக் காலங்கள் ஏற்படுவது போல ஆன்மாவுக்கான பயணமும் இவ்வுலகிலிருந்து ஆவி உலகத்திற்கும் பின் ஆவி உலகத்திலிருந்து இவ்வுலகத் திற்கும் இடையிலே நடைபெறுகிறது. பாடசாலை விடுமுறைக் காலம் முடிந்ததும் கற்ற பழைய ஞாபகங்களுடன் மீண்டும் மாணவர்களுடைய கல்வியானது தொடரப்படுகிறது. 'ஆன்மா'வும் மறு உலகத்திலிருந்து 'கரு'வாக பழைய ஞாபகங்களுடன் மீண்டும் இந்த உலகத்தில் பிரவேசிக்கிறது.

**ஒரு நிகழ்வு:**

### குழந்தை தனக்குத் தாயைத் தெரிவு செய்ததா?

ஒருநாள் தன் மூன்று வயது மகளுடன் தாய் பேசிக்கொண்டிருக்கும்போது தாய் மகளைப் பார்த்து "உன்னைப் போல ஒரு மகள் எனக்கு எப்படிக் கிடைத்தது என்றே தெரியவில்லை" என்றார். சிறிதும் தாமதிக்காமல், உடனடியாக, தயக்கமில்லாமல், உறுதியாக, மின்னல் வேகத்தில், அச்சிறுமி கூறினாள்: "நான் உன்னைத் தெரிவு செய்தேன்." உடனே தாய் வாயடைத்துப் போனார், திகைப்புற்றார். மேலும் எதுவும் பேசாமல் மௌனமாகிவிட்டார். தெரிவு செய்ய முடியும் என்ற கருத்தை சில்வியா ஏற்றுக்கொள்கிறார். மனம் திறந்து பிள்ளைகள் கூறுவதைக் கேளுங்கள், பிள்ளைகளைத் தொடர்ந்து பேச அனுமதியுங்கள், நீங்கள் குறுக்கிடாதீர்கள், வித்தியாசமாகச் செயற்படாதீர்கள், அப்போதுதான் பிள்ளைகள் இயல்பாகப் பேசுவார்கள். நீங்கள் வற்புறுத்தினால், வித்தியாசமாக நடந்துகொண்டால் குழந்தை களின் இயல்புத் தன்மை பாதிக்கப்பட்டுவிடும், குழந்தைகள் ஒத்துழைக்காது என சில்வியா மேலும் கூறுகிறார்.

**ஒரு நிகழ்வு:**

### முற்பிறப்புப் பெற்றோரை அடையாளம் கண்டதா?

கிரேக் என்பவர் தனது நான்கு வயது மகள் ஸ்ரேசியை தனது அலுவலகத்திற்குக் கூட்டிச் சென்றார். தந்தையின்

அலுவலகத்திற்கு வெளியில் குழந்தை தன்னந்தனியாக விளையாடிக்கொண்டிருந்தது. திடீரென இப்பிள்ளை அப்பா, அப்பா என்று அழைத்தது. தனது வேலையில் மூழ்கியிருந்ததால் தந்தை தன் குழந்தை கூப்பிட்டதை அலட்சியம் செய்து விட்டார். தொடர்ந்தும் அப்பா அப்பா என்று அழைத்தது. பொறுமை இழந்த தந்தை அங்குசென்று குழந்தைமீது கோபத்துடன் "என்னவென்று சொல்லித் தொலை அல்லது பேசாமல் இரு" என்று கத்தினார். குழந்தை கூறியது "நான் உங்களைக் கூப்பிடவில்லை, என்னுடைய மற்ற அப்பாவைக் கண்டேன், அவரைக் கூப்பிட்டேன்" என்றது. ஆர்வங் கொண்ட தந்தை மேலும் விசாரிக்க ஆவலானார். ஆனால் பிள்ளை ஒத்துழைக்கவில்லை.

**ஒரு நிகழ்வு:**

**அம்மா 'மகளாகப்' பிறந்தாரா?**

ஜில் என்பவரது ஐந்து வயது மகன் ஒரு நாள் தாலை உணவு நேரத்தில் தனது அம்மாவைப் பார்த்துக் கூறினார்: "இருபத்து மூன்று வருடத்திற்கு முன் நான் உன் அம்மா" ஆச்சரியப்பட்ட அம்மா துருவித்துருவி கேட்டார். குழந்தை அம்மாவுடன் பேசுவதை நிறுத்திவிட்டு தன் சாப்பாட்டிலும் தன் விளையாட்டிலும் ஈடுபட்டுவிட்டது. இவரால் எதுவும் அறியமுடியவில்லை. தாயார் துருவித் துருவிக் கேள்வி கேட்டதற்கு காரணம் இருக்கிறது. இருபத்திமூன்று வருடத்திற்கு முன்பு இவரது தாயார் இறந்துவிட்டார். குழந்தைகள் தங்கள் பழைய நிகழ்வுகளை ஞாபகமாகக் கூறும்போது அவற்றை எல்லாம் எழுதிக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். அவர்களின் ஆர்வங்களை, ஆற்றல்களை, புத்திக் கூர்மைகளை அவதானித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். அந்த ஆற்றல்களையும் ஆர்வங்களையும் வளர்த்தெடுப்பது சுலபமாக இருக்கும். அவர்களில் பயங்கள், அச்சங்கள் காணப்படின் அவற்றையும் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். மெதுவான முறைகளைக் கையாண்டு அவற்றை நீக்கவேண்டும்.

குழந்தைகள் வளர்ந்து இந்த உலகத்துடன் இணைந்து செல்லும்போது தங்கள் மறுஉலக வாழ்வைப் படிப்படியாக மறந்துவிடுவார்கள்.

**ஒரு நிகழ்வு:**

### பழைய ஞாபகத் தொடர்ச்சியா?

ஒரு பெற்றோர் கூறுகிறார்கள்: தொலைக்காட்சியில் வயலின் இசையைக் கேட்கும்போது மடியிலிருக்கும் தமது குழந்தை திரும்பித் தொலைக்காட்சியைப் பார்க்கிறது. ஒருநாள் தவழ்ந்து போய்த் திரையை இரண்டு கைகளாலும் தொட்டது. தொலைக்காட்சியில் வேறு எந்த நிகழ்ச்சி நடைபெற்றாலும் அப்படிச் செய்வதில்லை, ஆர்வங் காட்டுவதில்லை. குழந்தை வளர வளர வயலினில் ஆர்வங்காட்டியது. வயலின் இசையைத் துரிதமாகக் கற்றுக்கொண்டது. இக்குழந்தைக்கு முற்பிறப்பில் வயலின் இசையுடன் தொடர்பிருந்திருக்கிறது அது இப்பிறப்பில் தொடர்கிறது என்கிறார் சில்வியா பிறவுண் அவர்கள்.

**ஒரு நிகழ்வு:**

### இரண்டாவது உலகப்போர் விமானி குழந்தையாக

இன்னொரு பெற்றோர் கூறுகிறார்கள்: தங்கள் குழந்தை நடந்து ஓடி ஆடத் தொடங்கியதும் விமான இரைச்சல் கேட்டால் ஜன்னல் அருகில் நின்று விமானத்தைக் காட்டி ஆரவாரிப்பாள். இதைக் கவனித்த பெற்றோர் விமானப் படங்களும், வேறுசில படங்களும் வாங்கிவந்து குழந்தைமுன் கலந்து வைத்தனர். குழந்தை எல்லாப் படங்களையும் நீக்கிவிட்டு விமானப் படத்தை மட்டும் கையில் எடுத்தது. இந்தக் குழந்தை நன்றாக பேச ஆரம்பிக்கத் தொடங்கியதும், பெற்றோர் வாங்கிவந்து குழந்தைக்காகச் சேமித்த விமானப் படங்களில் ஒன்றான இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போர் விமானப் படத்தைக் கையிலெடுத்து பெற்றோருக்குக் கூறியது இந்த விமானத்தை நான் செலுத்தினேன்.

இக்குழந்தையின் சகல நடவடிக்கைகளையும் குறிப் பெடுத்து வீடியோ படம் எடுத்து பாதுகாத்து பெற்றோர் வைத்திருந்தனர். இக்குழந்தை வளர்ந்து பெரியவரான பின்பு தங்கள் சேகரிப்பை இவருக்குத் தெரியப்படுத்தாமல் புனர் ஜென்மம் அறியும் அறிதுயில் வல்லுநரான சில்வியாவிடம் கூட்டிச் சென்று அறிதுயிலுக்கு உட்படுத்தியபோது இவர் இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது போர் விமானம்

ஓட்டிய கிளிவ்டன் (Clifton) என்ற ஆண் விமானி என்பது தெரியவந்தது.

சில்வியா அவர்கள் ஒருவரது 'ஞாபகக் கலங்கள்' (Cell Memory) பற்றிக் கூறுகிறார். நாங்கள் அதை மேலோட்டமாகத் தெரிந்துகொள்வோம். பூமியில் வாழ்ந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்கள், பெற்றுக்கொண்ட அறிவுகள் எல்லாவற்றையும் எங்களது ஆவிமனம் (Spirit Mind) (ஆன்மா) உள்வாங்கி எங்களது உடலிலுள்ள கலங்களுக்குள் (Cells) செலுத்தி விடுகிறது. இந்த ஆன்மா, ஆவி, கருவாக கர்ப்பத்தினுள் பிரவேசித்து சிசுவாகிறது (Fetus). **இந்த ஞாபகக் கலங்கள் எந்த அனுபவத்துடன் உடலில் பிரவேசித்தனவோ அதுதான் நாம். நமது மாற்றமுடியாத நோய் (Health Problems), உளவியல் பிரச்சினைகள் (Psychological Obstacles), ஆழ்மனப் பயங்கள், அச்சங்கள் (Phobia), துணிவு, ஆற்றல், திறமை, புத்திக்கூர்மை, சாதுரியம், அறிவியல் விழிப்புணர்வு அனைத்திற்கும் காரணமாக அமைகின்றது.**

- எங்கள் உடல் கோடிக்கணக்கான கலங்களினால் ஆனது.
- ஆழ்மனம் அனுப்பும் செய்திகளை அல்லது உத்தரவுகளை இந்தக் கலங்கள் பெற்று அதைச் செயல்படுத்துகின்றன. வசியக்கலை (Hypnotist) வல்லுநரால் அறிதுயிலுக்கு உட்படுத்தப்படுகிற நபர் தனக்கிடப்பட்ட உத்தரவுப்படி எதையும் செய்வார். அந்த அறிதுயிலில் அவரது தன்னுணர்வு மனம் உறங்கிவிடும். தன்னுணர்வு இன்மை மட்டுமே இருக்கும். நீங்கள் ஓர் ஆண் என்று உதாரணத் திற்கு எடுத்துக்கொள்வோம், உங்களை அறிதுயிலுக்கு உட்படுத்திவிட்டு உங்களிடம் 'நீ ஒரு பெண்' என்று சொன்னால் நீங்கள் ஒரு பெண்ணைப் போலவே கூச்சப்படுவீர்கள். உங்கள் இயக்கத்தில் பெண்தன்மை வந்துவிடும். 'நான் ஓர் ஆண், பெண் அல்ல' என்று கூறக்கூடிய உணர்வு மனம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும். **உங்களது தன்னுணர்வின்மைக்கு ஐயப்பாடு கிடையாது. தன்னுணர்வின்மை முற்றாக நம்பும் தன்மையுடையது.. தன்னுணர்வின்மை விவாதிப்பது கிடையாது, எதைச் சொன்னாலும் நம்பும்.**

- அறிதுயிலில் அடிமனமான ஆழ்மனம் மேலோங்கியிருக்கும். அறிதுயில் கலை வல்லுனரது (Hypnotist) கட்டுப்பாட்டில் ஒருவர் இருக்கும்போது, அறிதுயில் கலை வல்லுனரது கைவிரல்கள் அறிதுயிலில் இருப்பவரது கைகளில் தொட்டால் தீக்குச்சி பட்டதுபோல் கொப்பளம் (Blisters) கூட ஏற்படலாம். கரங்களில் உள்ள கலங்கள் அந்தக் கொப்பளங்களை உருவாக்கிவிட்டன. அறிதுயில் கலை வல்லுனரது விரல்கள் தீக்குச்சிபோல் செயற்படக்கூடியது.

- 'ஆவிமனம்' (Spirit Mind) ஆழ்மனதில் (Subconscious Mind) குடியிருக்கின்றன. கடந்த அனைத்து வாழ்வுகளிலும், மற்றும் இந்த வாழ்விலும் பெறப்படும் சகல அனுபவங்களையும், இந்த மனமானது, நாம் முதன்முதல் உருவான காலத்திலிருந்து தொடர்ந்து சேகரித்துக் கொண்டேயிருக்கும்.

**ஒரு நிகழ்வு:**

### முற்பிறப்புக்கள் ஞாபகத்திலுள்ள பிள்ளை

சில்வியா அவர்கள் இந்த (Cell Memory) கலங்களின் ஞாபகத்ததைப் பற்றிக் குறிப்பிடும்போது ஆறு வயது பையனான கிரேக்கைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தச் சிறுவன் கடுமையான ஆஸ்துமா (Asthma) நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல டாக்டர்களைப் பார்த்தும் பல தரப்பட்ட மருந்துகளை உட்கொண்டும் நோயானது குணப்பட வில்லை. இந்த நோய் மாத்திரமல்ல அத்துடன் இச் சிறுவனது மூர்க்கத்தனமான கட்டுப்படுத்தமுடியாத துடியாட்டமான போக்கையும் (Hyper Activity) கட்டுப்படுத்த முடியாமல் பெற்றோர் தவித்தனர். ஒரு நாள் தன் தாயாரிடம் மகன் கிரேக் நான் உன் அம்மா என்று கூறினான். பிறிதொருநாள் தனக்குப் படகு (Boat) ஓட்டத் தெரியும் என்றான். இவனது பேச்சுக்கள் தாய்க்கு திகைப்பூட்டியது. இக் குடும்பம் இதுவரை கடல் பார்த்ததில்லை, படகு பார்த்ததில்லை.

சில்வியா அவர்கள் இவனை அறிதுயிலில் ஆழ்த்தினார். இவனுக்கு இரண்டு முற்பிறப்புக்கள் ஞாபகத்திலுள்ளது என்பது தெரியவந்தது. ஒரு பிறப்பில் இவன் அனா என்ற பெண்மணியைத் திருமணம் செய்து பிள்ளைகளுடன் ஒரு

பண்ணையில் வசித்திருக்கிறார். கடற்படையில் மாலுமியாக இருந்த இவர் போரில் இவரது கப்பல் தாக்குதலுக்குள்ளாகி இவரது தொண்டைக்குள்ளே குண்டு துளைத்துச் சென்றதால் மரணமாகிவிட்டார்.

இவரது இன்னொரு பிறப்பில் இவர் பெண்ணாக இருந்திருக்கிறார். ஒன்பது பிள்ளைகளின் தாயாக இருந்த இவர் முப்பத்தெட்டு வயதில் நிமோனியா (Pneumonia) நோய் காரணமாக இறந்துவிட்டார். இவரது ஒன்பது பிள்ளைகளில் ஒருவருக்கே இவர் இப்போது மகனாகப் பிறந்திருக்கிறார் போன்ற விவரங்களை இவர் அறிதுயிலில் கூறினார்.

இவரது இரண்டு முற்பிறப்பிலும் சுவாசம் சம்பந்தமான பிரச்சினைகளால் மரணமாகியுள்ளார். அதனால் இப்பிறப்பில் அவரது ஆஸ்துமா நோயைக் குணப்படுத்த முடியாமலுள்ளது. இவரது கடந்த இரண்டு முற்பிறப்புகளிலும் வீடு நிறையப் பிள்ளைகள், ஒரே கொண்டாட்டம், குதூகலம், ஆரவாரம், சத்தம், கும்மாளம் நிரம்பிய வாழ்வாக இருந்திருக்கிறது. ஆனால் இப்பிறப்பில் இப்பையன் தனித்தவராக இருப்பதால் பலருடன் வாழ்ந்த வாழ்வு கிடைக்காததால் அடவாடித்தனமாக (Hyper) உள்ளான்.

**ஒரு செய்தி :**

### புற்று நோய்க்கு மருந்து கண்டறிய முயலும் இளம் உயிரியல் விஞ்ஞானி

*(கனடாவில் வெளியாகும் (National Post) பத்திரிகையில் 29.05.2007-இல் வெளியான செய்தி)*

கனடாவில் வின்னிபெக் நகரில் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவனான டெட் விமலன் (Ted Vimalan) வயது 17, புற்றுநோய்க்கு எதிரான பக்கவிளைவுகள் (Side effects) அற்ற மருந்தைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வு முயற்சியில் அயராது ஈடுபட்டுவருகிறார்.

இவர் புற்றுநோய் தடுப்புப்பொருள் காப்புரிமம் (Holding a full patent for an anti-cancer agent) பெற்றுள்ளார். இவர் மருத்துவ, விஞ்ஞான இதழ்களில் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் (Bostan) நகரில் இடம்பெற்ற சர்வதேச மாணவ இளம் விஞ்ஞானிகளைக் கண்டறியும் போட்டியில் (Sanofi - Aventis international Bio-GENEius) தங்கப் பதக்கம் பெற்று 2007-இன் சிறந்த மாணவ உயிரியல் விஞ்ஞானி என்ற கௌரவத்தையும் பெற்றார்.

தனக்கு 5 வயதாயிருக்கும்போது சக மாணவி ஒருவர் புற்றுநோய் காரணமாக இறந்த சம்பவம் தன்னில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியதே இம்முயற்சிக்குக் காரணம் என டெட் விமலன் கூறுகிறார். அந்த மாணவி சிகிச்சைக் காலத்தின்போது முடியுதிர்ந்ததால் தொப்பி அணிந்து வந்த அந்தக் கோலத்தைத் தான் இன்னும் மறக்கவில்லையெனவும், அந்த மாணவி மரணித்தபோதுதான் புற்றுநோய் என்ற சொல்லை தான் முதன்முதலில் அறிந்ததாக கூறுகிறார்.

பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வுக் கூடங்களை ஆராய்ச்சிகளின் முன்னோடியாகக் கருதும் டெட் அவரது வழிகாட்டியான பேராசிரியர் கலாநிதி மரேக் லொஸ்யூடன் (Dr. Marek Los) சேர்ந்து புற்று நோய்க்கான சிகிச்சை ஆராய்ச்சியில் இறங்கினார். கலாநிதிப் பட்டத்துக்குரிய நுழைவுப் பரீட்சைக்குச் சமமான ஒரு பரீட்சையை விமலனிடம் பரீட்சித்து சித்தியடைந்த பின்னரே பேராசிரியரால் இவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார். (ஏனெனில் இவர் உயர்பள்ளி மாணவனே, பல்கலைக்கழக மாணவரல்ல).

டெட்க்கு விஞ்ஞான ஆய்வு நுணுக்கங்கள் எப்படி வந்தது என்பது வியப்புக்குரியதே. இவரது பெற்றோர்கள் விஞ்ஞானப் பின்னணி இல்லாதவர்கள். பாடசாலை முடிந்ததும் தன் ஆராய்ச்சிக்காகப் பல்கலைக்கழகம் சென்று ஆய்வுகளில் ஈடுபட்டு அடுத்தநாள் காலை 2 மணிக்கு வீட்டுக்கு வந்து அதன் பின்னரே தன் பாடசாலைப் பாடங்களைப் பூரணப்படுத்தி மிகுதியான 2, 3 மணி நேரத்தையே தன் நித்திரைக்குப் பயன்படுத்துகிறார்.

மிகக் குறைந்த பக்கவிளைவு கொண்ட சிகிச்சை முறையே இவரது ஆராய்ச்சியின் நோக்கமாக அமைந்துள்ளது. இயற்கையாகக் கிடைக்கும் அப்பொப்டின் (Apoptin) என்ற புரதங்களை வைத்தே மேற்கொள்ளப்படுகிறது. காவாட்

பல்கலைக்கழகம் (Harvard University) டெட் விமலனை மாணவனாக ஏற்றுக்கொள்ள முன்வந்தபொழுதும் தனக்கு உதவிய மனிரோபா பல்கலைக்கழகத்திலேயே (Manitoba University) ஆய்வை மேற்கொளளப் போவதாகக் கூறுகிறார்.

"டெட் ஒரு நாளைக்குத் தன்னை விஞ்சியவராக வருவார்" என பேராசிரியர் கலாநிதி லொஸ் கூறினார்.

இவரது இந்த அபார சக்திக்கு சில்வியா பிறவுண் (Sylvia Browne) கூறும் ஞாபகக்கலத்தில் (Cell Memory) பதிந்துள்ள முற்பிறப்புக்களில் பெற்ற அறிவினதும் அனுபவத்தினதும் தொடர்ச்சியே காரணமாக இருக்கலாம் என்பதே இந்நூலாசிரியரின் அபிப்பிராயமாகும்.

## அத்தியாயம் 4

# ஹெலன் கெலரின் (Helen Keller) ஞாபகக் கலங்கள் (Cell Memory)



உலகத்தைப் பிரமிக்க வைத்தவர் இந்த அம்மையார் அவர்கள். மகாராணி விக்டோரியா அவர்கள் ஹெலன் கெலரைச் சந்திக்க தன் விருப்பத்தை வெளியிட்டார். பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இவரை நேரில் சந்தித்துப் பாராட்டினார். அமெரிக்க ஜனாதிபதி ஜான்.எவ். கென்னடி (John F. Kennedy) அவர்களும் நேரில் சந்தித்து இவரைக் கௌரவித்தார். தத்துவமேதை மார்க் டுவயின் (Mark Twain) இவரைச் சந்தித்ததைத் தனது ஒரு பாக்கியமாகக் கருதினார். ஜனாதிபதி ரூஸ் வோல்ட் இன் மனைவி எலனர் (Elanor Roosevelt) ஹெலனைச் சந்தித்தார். திருமதி (Roosevelt அவர்கள் ஹெலன் கெலர் தனக்கு ஒரு உந்துசக்தியாக இருக்கிறார் என்றார்.



Helen Keller with her long-time friend, Eleanor Roosevelt, 1955 photo credit: New York Public Library and the American Foundation for the Blind.

ஹெலன் கெலரது நூல் 'எனது வாழ்க்கையின் கதை'

(Story of My Life) *1902*-இல் வெளியாகியபோது அமெரிக்காவில் உள்ள பத்திரிகையான சிக்காக்கோ போஸ்ட் (Chicago Post) 'இது ஒரு இலக்கிய நூல்' எனக் குறிப்பிட்டது. ஹெலன் இந்நூலை தொலைபேசியைக் கண்டுபிடித்த கிரஹம் பெல்லுக்கு (Graham Bell) சமர்ப்பணம் செய்துள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்நூல் வெளியானபோது உலகத்தின் கவனத்தை ஈர்த்ததற்கு முக்கிய காரணம்: இவரது கண்கள் ஒளியிழந்து எதையும் பார்த்ததில்லை, இவரது செவிகள் கேட்கும் சக்தியையிழந்து எதையும் கேட்டதில்லை, இவரது வாய் பேச்சுத் திறனையிழந்து எதையும் உச்சரித்ததில்லை, அத்துடன் மிக இளவயதான இருபத்திரண்டு வயதில் இந்நூலை வெளியிட்டது பிறிதொரு காரணமாகும். அநேகமான நூல்கள் அப்போது அந்த வயதைத் தாண்டியவர்களால்தான் வெளிவந்துகொண்டிருந்தது. ஹொலிவூட் இவரது வாழ்க்கையைச் சித்தரிக்கும் Miracle Worker என்றொரு படத்தையும் வெளியிட்டது.

முற்பிறப்புக்களின் ஞாபகக் கலங்களின் (Cell Memory) செயற்பாட்டால் ஹெலன் அவர்கள் இந்த நூலைப் படைத்திருக்க வேண்டும் என இந்நூலாசிரியராகிய நான் கருதுகிறேன். இவரது வாழ்க்கை வரலாறு பிரமிக்க வைக்கிறது. ஆவிமனம் - Spirit Mind ஆழ்மனத்தில் உள்ளது. இந்த மனம் கடந்த அனைத்து வாழ்வுகளிலும் பெற்ற சகல அனுபவங் களையும், அறிவையும், ஞானத்தையும் தொடர்ச்சியாகச் சேகரித்துவருகிறது என சில்வியா கூறியதை இங்கு நான் கவனத்தில் கொள்கிறேன். ஹெலன் ஹெல்லருக்குள் எழுந்த சக்திக்கு இவைதான் காரணமா? சில்வியா கூறும் கருத்துக்கள் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டதா என்பதை இதுவரை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. எது என்னவாக இருந்தாலும் ஹெலனின் வாழ்க்கை வரலாற்றை மேலோட்ட மாகப் பார்ப்போம்.

இவர் *20-06-1880* அன்று அமெரிக்க நாட்டில் அலபாமாவிலுள்ள (Alabama) ரஸ்கம்பியா (Tuscumbia) என்ற இடத்தில் பிறந்தார். இவரது தந்தை கப்ரன் ஆதர் ஹெலர் உலக மகாயுத்தத்தில் பங்கேற்ற போர் வீரரும் அத்துடன் வாராந்த ஏடு ஒன்றின் வெளியிட்டாளராகவும் இருந்தார்.

இவரது தாயார் கேற்அடம்ஸ் ஹெல்லர் நிறைய நூல்கள் வாசிக்கும் பழக்கமுள்ளவர். ஹெலன் பத்தொன்பது மாத கைக் குழந்தையாக இருந்தபோது வயிற்றையும் மூளையையும் பாதிக்கக் கூடிய (Congestion of the Stomach and Brain) கடுமையான நோய்க்குள்ளானார்.

அதன் விளைவாக குழந்தை ஹெலன் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்த உலகம் அவர் கண் முன்னால் இருட்டானது, காதால் இரசித்துக் கேட்டுக்கொண்டிருந்த அத்தனை சப்தங்களும் தூர விலகி ஓடின, மழலை பேசிக்கொண்டிருந்த உதடுகள் மேலும் பேச மறுத்தன, அடக்கமான பிள்ளை அடங்காத பிள்ளையானது, அமைதியான பிள்ளை அடம்பிடிக்கும் போராட்டப் பிள்ளையானது, துடியாட்டமான பிள்ளை கையில் அகப்பட்டதை எல்லாம் தூக்கி எறியும் பிள்ளையானது, சாந்தமான பிள்ளை வெறும் இரைச்சல் போடும் பிள்ளையானது. இவையனைத்தையும் பார்த்த பெற்றோர் கதிகலங்கி நின்றனர். சிறுமி ஹெலன் கிட்டத்தட்ட அறுபது கைவிரல் குறியீடுகளை (Hand Signs or Hand Alphabets) தானாகவே உருவாக்கி அவை மூலம் பெற்றோருக்கும் தனக்கும் இடையிலான ஒரு தொடர்புப் பாலத்தை ஏற்படுத்திக் கொண்டார்.



ஹெலன் பின்நாளில் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது எனது மனமானது ஒரு பொறிக்குள் அகப்பட்டதுபோல் என் உடலினுள் மாட்டிக்கொண்டது என்றார். இவரின் அம்மா ஒரு நாள் சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) எழுதிய அமெரிக்கன் நோட்ஸ் (American Notes) என்ற நூலை வாசிக்கும்போது கண் தெரியாதவர்களுக்கு பாஸ்டன் நகரில் பேக்கின்ஸ் கல்வி நிலையம் (Perkins Institution for the Blind, Boston) என்று ஒன்று இருப்பதை அறிந்து கொண்டார். ஹெலனின் தந்தை வோஷின்டன் நகரிலிருந்த கிரஹம்பெல்லுடன் (Graham Bell - தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்) தொடர்புகொண்டு ஆலோசனை பெற்றார். பெல்லின் முயற்சியால் பாஸ்டன் நகரிலுள்ள அக்கல்வி

நிலையத்திலிருந்து இருபது வயதான ஆன் சுலைவன் (Anne Sullivan) அவர்கள் ஆறு வயதான ஹெலனுக்கு எழுத்தறிவிக்க ரஸ்கம்பியா வந்தடைந்தார். இவர் வருகையைப்பற்றி ஹெலன் அவர்கள் பின்நாளில் குறிப்பிடும்போது 'ஆன் வந்த தினம் எனது ஆத்மாவின் பிறந்த தினம்' என்கிறார்.

ஆன் அவர்கள் அநாதை இல்லத்தில் வளர்ந்தவர், கண்பார்வை இழந்தவர். அந்த அநாதை இல்லத்தை பார்வையிட வந்த பரிசோதகரிடம் தன்னைப் படிப்பிக்கும்படி சிறுமி ஆன் மன்றாடினார். அந்தப் பரிசோதகர் இவரை பாஸ்டன் நகரிலிருந்த அந்தக் கல்வி நிறுவனத்தில் படிப்பதற்காகச் சேர்த்துவிட்டார். கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டு ஆன் பார்வையை சிறிதளவு பெற்றுக் கொண்டார். அக்கல்வி நிலையத்தில் பயின்ற இவர் ஹெலனுக்கு எழுத்தறிவிக்கும் இறைவனாக வந்து சேர்ந்தார். ஆன் பெற்ற கண்ணொளியும் சிறிதாக மங்கத் தொடங்கியிருந்தது. ஆன் தன்னைப்பற்றிக் குறிப்பிடும்போது **தனது கல்விப் பயிற்சியின் மூலம் ஹெலனுக்கு கற்றுக்கொடுக்கவில்லை என்றும் தனது உள்ளுணர்வின் மூலம்** (Teaching by Instiinct) **கற்றுக் கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.**

ஆரம்பத்தில் சிறுமி ஹெலன் தனது ஆத்மகுருவான ஆன் அவர்களை விரட்டி யடித்தார், அவரது தலையை உடைத்தார். இவை எல்லாவற்றையும் சவாலாக எடுத்து ஹெலனுக்குள் ஒழித்திருக்கும் ஆற்றலை வெளிக் கொணர்வதற்காக இம்சைகளை சகித்துக் கொண்டார் ஆன் அவர்கள். ஹெலன் தண்ணீர்க் குழாயடியில் தண்ணீரைத் தொட்டபோது உலகத்திலுள்ள அனைத் திற்கும் ஒவ்வொரு பெயருண்டு என்று தெரிந்துகொண்டார். ஒவ்வொன்றையும் தெரிந்துகொள்ளும்போது ஆனந்தத்தில் திழைத்தார், பூங்காவில் மலர்களை முகர்ந்தார், வண்ணத்துப் பூச்சிகளின் பின்னால் ஓடினார், தென்றலை அனுபவித்தார், மழையில் விளை யாடினார்.

ஆன் அவர்கள் ஹெலனது விரல்களிலும், உள்ளங் கைகளிலும் எழுத்துக்களை வேகமாக எழுதி உச்சரித்துக் கொண்டேயிருப்பார். ஹெலன் அவர்கள் ஆன் அவர்களது கை விரல்களிலும் உள்ளங்கைகளிலும் தான் சொல்வதை எழுதிக்

கொண்டிருப்பார். ஹெலன் வேகமாக கற்றுக்கொள்ளும்போது ஆன் அவர்களின் வேலைப்பளு கடினமானது. ஹெலனுடன் அவரும் சேர்ந்து படிக்க வேண்டியதாயிற்று. ஹெலன் ஹாவாட் பல்கலைக் கழகத்தில் (Harvard University) படிக்க வேண்டும் என்பதில் இலக்காக இருந்தார்.

போஸ்ரன் நகரிலுள்ள றாட்கிளிவ் கல்லூரி (Radcliffe College) மாணவியாக இருபது வயதில் காலடியெடுத்து வைத்தார் ஹெலன். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் பெண்கள் உயர்கல்வி பெறுவது என்பது உலகம் பூராகவும் பெரிய அளவில் நடைபெறாத ஒன்றாகும். அப்படியான ஒரு காலத்தில் ஹெலன் கல்லூரிப் படியில் கால் வைத்தார். தன்னை ஏனைய மாணவர்களிலிருந்து பிரித்துப் பார்க்க வேண்டாம், ஏனைய மாணவர்களைப் போல தன்னைப் பார்க்கும்படியும், தன் மீது அனுதாபமோ, கருணையோ காட்டாமல் தன்னை ஒரு மாணவியாகப் பார்க்கும்படி கல்லூரி நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டார். சக மாணவர்கள் போல் உடற்பயிற்சிக்குச் சென்றார், நீச்சல் தடாகத்தில் குதித்து நீந்தினார், கல்லூரிச் சுற்றுலாக்களில் பங்கேற்றார். ஆன் சுலைவனும், ஹெலன் ஹெலரும் உலகத்துடனான தொடர்புமொழியாக கைவிரல்களை பயன்படுத்தி கருத்துக்களை பரிமாறிக் கொண்டேயிருந்தனர். பிரெயிலில் (Braille) அப்போதுதான் சில நூல்கள் பதிவாகியிருந்தன. (இந்தக் கருவியை *1824*-இல் பிரான்ஸ் (France) நாட்டைச்சேர்ந்த கண்பார்வை இல்லாத லூயிஸ் பிறெயில் (Louis Braille) என்ற ஆசிரியரே வடிவமைத்தார்). அதனால் ஹெலனுக்கான எல்லா நூல்களையும் ஆன் அவர்களின் கைவிரல்கள் ஓய்வில்லாமல் வேகமாக ஊட்டிக்கொண்டேயிருந்தன. (A few books were printed in Braille early in this century; nearly all her reading was done by Anne Sullivan finger - spelling, letter by letter, each word of book in to Helen's hands.)

ஹெலன் சொற்களுக்கு விளக்கம் கேட்டால் ஆன் அவர்கள் அகராதி பார்த்து கைவிரல்கள் மூலம் விளக்குவார். காரணம் பிரெயிலில் (Braille) அந்தச் சொற்கள் இருக்கவில்லை. இந்த முறையிலேதான் ஹெலன் அவர்கள் ஆங்கிலம் (English), கிரேக்கமொழி (Greek), ஜேர்மன் மொழி (German), பிரெஞ்சு மொழி (French), லத்தீன் (Latin) ஆகிய மொழிகளைக் கற்றுத்

தேர்ந்தார். அத்துடன் சேக்ஸ்பியர் (Shakespeare), கீற்ஸ் (Keats), ஷெலி (Shelly) ஆகியோரின் படைப்புக்களையும் கற்றுக் கொண்டார். ஐரோப்பிய சரித்திரம், உலக சரித்திரம் கற்றார். கணிதத்தில் கேத்திரகணிதம் (Geometry), அட்சரகணிதம் (Algebra), பௌதிகவியல் (Physics) படிக்கும்போது சிரமப்பட்டார். தன்னுடன் பேசுபவர்களது வாயில் தன் விரல்களை வைத்து பேசுபவர் என்ன சொல்கிறார் என்பதை அறிந்துகொள்வார். (Lipread through her fingers) சில நண்பர்கள் தாங்கள் கைவிரல் அசைவுகளை (Manual alphabet) கற்றுக்கொண்டு ஹெலனுடன் நேரடியாகத் தொடர்புகளை வளர்த்துக்கொண்டனர். கண்ணால் பார்ப்பவர்கள் எப்படி சகலதையும் கேட்டு அறிந்துகொள்வார்களோ அதேபோல் இவர் தான் இருக்கும் இடம், சூழல், தன்னைச் சந்திப்பவர்கள் உட்பட சகலரையும் கைவிரல்களினால் கேட்டு அறிந்துகொண்டேயிருப்பார். ஆன் அவர்கள் களைப்படைவதுண்டு, அத்துடன் ஹெலனது பாட நூல்களை அவர் படித்துப் பார்க்கவேண்டிய பளுவும் கூடிக் கொண்டே போனது. ஆன் அவர்களின் கல்வித் தரத்தை விட ஹெலனின் கல்வித்தரம் உயர்ந்து மேலே சென்று கொண்டிருந்ததால் ஆன் அவர்களால் ஹெலனுக்குக் கல்வி புகட்ட முடியாமலிருந்தது. ஹெலனின் தரம் உயர இவரும் அதற்கு ஈடுகொடுக்க வேண்டியிருந்தது. ஹெலனின் கல்வி ஆர்வம் உலகத்தை வியக்கவைத்தது

லேடிஸ் ஹோம் ஜேணல் (Ladies' Home Journal) ஆசிரியர் ஹெலனைக் கல்லூரியில் சந்தித்தார், வாழ்க்கை வரலாற்றை அந்தச் சஞ்சிகையில் எழுதும்படி கேட்டுக்கொண்டார். ஹெலன் அவர்கள் கல்லூரிச் சஞ்சிகையில் ஏற்கெனவே பல கட்டுரைகள் எழுதியுள்ளார். அந்தச் சஞ்சிகைக்கு தட்டச்சில் (Type Writer) எழுத்துக்களை Type அடித்து அனுப்புவார்.

தனது எழுத்துக்களை அடிப்பதை நிறுத்தும்போது தனது கைவிரல் எந்த எழுத்தைக் கடைசியாக அடித்தது என்பதை ஞாபகத்தில் வைத்திருப்பார். கல்லூரி வேலைகள் கூடிக் கொண்டேபோவதால் அந்தச் சஞ்சிகைக்கு • அனுப்பும் கட்டுரைகள் தாமதமானது.

இதனால் ஹாவாட் பல்கலைக்கழக (Harvard University) ஆங்கில விரிவுரையாளரும் எழுத்தாளருமான ஜோன் மிக்கேய்

(John Micay) இவருக்குக் கை கொடுக்க முன்வந்தார். ஹெலன் தனது அனுமதியில்லாமல் எந்த விடயத்திலும் அவர் தலையிடக்கூடாது என முன் உத்தரவு போட்டிருந்தார்.

**நண்பர்களாக இருக்கலாம், பேராசிரியர்களாக இருக்கலாம், தன் நலனில் அக்கறை உள்ளவர்கள் எவராகவும் இருக்கலாம், எல்லோருக்கும் தன் எச்சரிக்கையை பொதுவானதாக்கிவிட்டார். தான் மற்றவர்களைப்போல் ஒருவர் என்றார். எவரும் தன்மீது அனுதாபம் இரக்கம் எதுவும் காட்டக்கூடாது என்ற கருத்தில் மிக உறுதியாகவே இருந்தார். ஹெலனின் ஞாபகசக்தி, திறமை, ஆற்றல், அறிவு, மதிநுட்பம், துணிச்சல் சகலவற்றையும் பார்த்து ஜோன் மைக்கே பிரமித்துப்போனார்.**

ஹெலனுக்கு டெட் கிளிவ் கல்லூரியில் பட்டமளிப்பு நடைபெறும்போது, தனது கண்ணாகவும், செவியாகவும், சொல்லாகவும் இருந்து, கண்ணுங்கருத்துமாகத் தனக்குக் கல்விப் போதனை செய்த ஆன் சுலைவான் அவர்களை, கல்லூரி நிர்வாகம் கௌரவிக்கத் தவறியதால் மிகுந்த வருத்தப் பட்டதுமல்லாமல், கோபப்படவும் செய்தார். தனக்குக் கிடைக்கும் கௌரவம் அத்தனைக்கும் உரியவர் ஆன் அவர்களே என்று வாதிட்டார்.

விரிவுரையாளர் ஜோன் மிக்கேய் அவர்கள் ஆன் அவர்களைப் பின்நாளில் திருமணம் செய்தார். ஆன் கண்ணொளியைப் படிப்படியாக இழக்கத்தொடங்கி நாளடை வில் கண் பார்வையை முற்றாக இழந்துவிட்டார். இவர் நோய்வாய்ப்பட்டு படுக்கையாய் இருந்தபோது இவருடைய உடல் சுகவீனத்தைக் கேள்விப்பட்ட பொலி தோம்சன் (Polly Thomson) என்ற அறிமுகமில்லாத அம்மையார் தானாக முன்வந்து இவரைப் பராமரித்தார். ஆன் அவர்கள் 1939-இல் இயற்கையெய்தினார்.

உலகிலே அதிஉயர் கல்வியைக் கற்ற முதலாவது மாற்றுத் திறனாய்வாளராக ஹெலன் ஹெலரே பலருக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறார். ஹெலனின் திறமைகள் ஆய்வுகூடப் பரிசோதனையாக மாறியது. விஞ்ஞானிகள், மனோதத்துவ நிபுணர்கள் எனப் பலரும் இவரது திறமைகளை ஆய்வு செய்தனர். சராசரி மனிதர்களை விட ஹெலன்

அவர்கள் தனது இயல்பூக்கத்திலும், உள்ளுணர்விலும் (Instinct) அதிகம் சார்ந்திருந்தது தெரியவந்தது. தான் வாய் பேச முடியாதவர் அல்ல என்று அடிக்கடி குறிப்பிட்டு வந்த இவர் தன்னுடைய முயற்சியாலும், தன்னால் முடியும் என்ற நம்பிக்கையினாலும் ஓரளவு பேசக் கூடியவராக மாறினார்.

அமெரிக்காவில் பல அரசியல் கட்சிகள் இவரைத் தங்களது கட்சிக்குப் பிரச்சாரம் செய்யும்படி அழைத்தனர். மாற்றுத் திறனாய்வுள்ள மக்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு அமெரிக்க அரசாங்கம் இவரது ஆலோசனைகளைப் பெற்றது. 1924-ஆம் ஆண்டிலிருந்து கண்ணொளி இழந்தவர்களது அமெரிக்க அமைப்புக்கு பிரச்சாரப் பீரங்கியாக இயங்கிப் பல நன்கொடைகள், உதவிகள் பெற்றுக்கொடுத்தார். ஆசியா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, மத்தியகிழக்கு நாடுகள், தென்னமெரிக்கா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து மாற்றுத் திறனாய்வு மக்களின் உயர்வுக்காகக் கடுமையாக உழைத்தார்.

பல பட்டங்கள், விருதுகள், பதவிகள் இவரை நாடி வந்தன. ஹாவாட் பல்கலைக் கழகம் (Harvard University) கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அமெரிக்க ஜனாதிபதியின் அதி உயர் விருதான சுதந்திரத்திற்கான பதக்கம் (Presidential Medal of Freedom) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அந்தப் பதக்கம் இவரால் பெருமை பெற்றது. தனது இறுதி மூச்சு இருக்கும் வரை மாற்றுத் திறனாய்வு மக்களுக்காகவே வாழ்வேன் எனத் தனது எண்பதாவது பிறந்த தினத்தன்று பத்திரிகை நிருபரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கருத்துத் தெரிவித்தார்.

Teacher என்ற தனது நூலில் ஆன் சுலைவனைப் பற்றி எழுதியுள்ளார். Mid Stream, My Later life, The Story of My Life, Optimism, The world I live in, My Religion, Out of the Dark அனைத்துத் தலைப்புகளும் கட்டுரைகளாகவும், இவற்றில் பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன. இவரது Out of the Dark என்ற நூல் இவரை ஒரு சோசலிஸவாதியாக அடையாளம் காட்டியது. இவரை ஒரு சோசலிஸ்ட் (Socialist) என்றே பத்திரிகைகளும் குறிப்பிட்டன.

**'உங்களுக்குள்ளே உங்களைத் தேடுங்கள், எது உண்மையோ அந்த உண்மையில் உறுதியாக இருங்கள்'**

என்கிறார் ஹெலன் ஹெலர். இவர் இவ்வுலகில் தனது 88 வயதைப் பூர்த்தி செய்கிறபோது கனக்டிக்கற்றில் (Connecticut) உள்ள வெஸ்போட்டில் (West Port) 1-6-1968 அன்று இயற்கை எய்தினார்.

**குறிப்பு:**

முற்பிறப்புகளில் அடைந்த அனுபவங்கள், பெற்ற அறிவு, ஆற்றல், திறமை அனைத்தும் இவரது ஞாபகக் கலங்களில் (Cell Memory) பதிவாகி அவை உந்துசக்தியாக இவரிலிருந்து வெளிவந்தனவா?

- குழந்தை மேதைகள் (Child Prodigy) தோன்றுவதற்கும் ஞாபகக் கலங்கள்தான் காரணமாக இருக்கலாம்
- சோக்கிரட்டீஸ், காளிதாசர், திருவள்ளுவர், சேக்ஸ்பியர், சுப்ரமணிய பாரதியார் போன்றோர்களின் ஞானம், அறிவு, புத்திக்கூர்மை, திறமை போன்ற ஆற்றல்களுக்கு உந்துசக்தியாக அவர்களின் ஞாபகக் கலங்களில் (Cell Memory) பதிவாகியிருந்த முந்தைய பிறப்புகளில் பெற்ற அனுபவத்தின் தொடர்ச்சியே காரணமாக இருக்கவேண்டும் என்பது இந்நூலாசிரியரின் அபிப்பிராயமாகும்.
- புத்தர், மஹாவீரர், நபிகள் நாயகம், இயேசு, குருநானக் போன்றோர்களுக்குள் ஞானநிலை தோன்றியதற்கும் ஞாபகக் கலங்கள் காரணமாக இருக்கலாம்.


Socrates


Kalithasar


Thiruvalluvar


Shakespeare


Bharathiar

## அத்தியாயம் 5

# உடல் மச்சங்கள் (Birth Marks)

**சி**ல்வியா அவர்கள் "நான் ஒன்பது வயதுச் சிறுமியாக இருந்தபோது எனது அம்மம்மாவின் வலது கரத்தின் உட்பக்கத்தில் ஒரு வட்ட அடையாளம் செஞ்சிவப்பாக இருந்ததைக் கண்டேன். நான் அந்த அடையாளத்தில் குறும்புத்தனமாக தொட்டுப் பார்க்க முயற்சி செய்தால் உடனடியாக என் கையை தடுத்துவிடுவார். நான் வளர்ந்து பெரிய பெண்ணாகி, திருமணம் செய்து எனக்குப் பிள்ளைகள் பிறந்து, பின்பு என் பிள்ளைகளுக்குப் பிள்ளைகள் பிறந்த போது என் ஒரு பேரக் குழந்தையைப் பார்த்ததும் திகைப்படைந்தேன். அந்தக் குழந்தையின் வலது கரத்தின் வெளிப்பக்கத்தில் சிவப்பான ஒரு வட்ட அடையாளம் காணப்பட்டது. அக்குழந்தை என் அம்மம்மாவின் மறு பிறப்பே" எனக் கூறுகிறார்.

சில்வியாவின் அறிதுயில் ஆய்வுகூடத்தில் ஒருநாள், ஒருவர் தனது புனர் ஜென்மத்தை ஞாபகப்படுத்திக் கூறிக் கொண்டிருக்கும்போதுதான் கத்திக்குத்துக்கு இலக்காகி இரத்தப் போக்கினால் மரணமானதாகக் குறிப்பிட்டார். அவரது அறிதுயில் நிலை கலைந்த பின்பு சில்வியா அவரைக் கேட்டார் "உங்களுக்கு உடலில் ஏதாவது அடையாளங்கள், மச்சங்கள் (Birth Marks) பிறக்கும்போது இருந்ததா?" அவர் தனது வலது காலின் பிற்பக்கத்தில் இருக்கிறது என்றார். இவரது முன் ஜென்மத்தில ஏற்பட்ட கத்திக்குத்துக் காயம் இப்பிறப்பில் அடையாளமாக உள்ளது என்கிறார்.

சில்வியா கூறுகிறார்: "கடந்த காலப் பிறப்புகளில் காயம் ஏற்பட்டு அல்லது வன்செயல்களினால் மரணமானவர்களில் 99

சதவீதமானவர்கள் மச்ச அடையாளங்களுடன் பிறந்திருப்பதாகக் கூறுகிறார். உடலிலுள்ள ஞாபகக் கலங்களினால் இந்த மச்ச அடையாளங்கள் ஏற்படுகின்றன என்கிறார். குழந்தைகளிடம் மச்ச அடையளங்கள் காணப்பட்டால் அந்த அடையாளங் களைக் காட்டி அது என்ன? என்று கேளுங்கள். குழந்தை களினால் கூறமுடியும். ஆனால் நீங்கள் அவர்களைக் குழப்பாமல், திசை திருப்பாமல், தொந்தரவு செய்யாமல் சௌகரியமாக விட்டுவிடுங்கள். நீங்கள் திறந்த மனதுடன் அமைதியாக செவிமடுங்கள் உங்களுக்கு அநேகமாக விடை கிடைக்கும்" என்கிறார்.

ஒவ்வொரு குழந்தையும் முற்பிறப்புக்களின் ஞாபகங் களுடனும், அனுபவங்களுடனும், அறிவுடனும், ஞானத்துடனும் பிறக்கின்றன. அவர்கள் ஒழுங்கான மறு உலகத்திலிருந்து ஒழுங்கற்ற இவ்வுலகத்திற்குள் வந்து பிறக்கிறார்கள். சுதந்திரமான மறு உலகத்திலிருந்து சுதந்திரமற்ற இவ்வுல கதிற்குள் பிரவேசிக்கிறார்கள். புவியீர்ப்புச் சக்திக்கு அப்பாலுள்ள மறுஉலகத்திலிருந்து புவியீர்ப்புச் சக்தியுள்ள இவ்வுலகத்தினுள் நுழைகிறார்கள். இவர்களது உடலினுள் உள்ள ஞாபகக் கலங்கள் பல விடயங்களை நினைவூட்டுகின்றன.

குழந்தைக்கு அறிமுகமில்லாத பலர் குழந்தையை சூழ்ந்திருக்கிறார்கள், அவர்கள் பேசும் மொழி முற்றிலும் வித்தியாசமாக உள்ளது, இவைகளை இச்சிறு குழந்தைகள் சமாளித்துக் கொள்கிறார்கள். பிள்ளைகள் மூன்று, வயதுவரை காணும் கனவுகளில் தங்களைப்பற்றி காண்பதில்லை. அவர்கள் இன்னும் தங்களை யார் என்று அறிந்துகொள்ளவில்லை. மறுஉலகத்தில் தங்களுடன் இருந்தவர்களையே தொடர்ந்து ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய நினைவுகள் பசுமையாக உள்ளன. காலப்போக்கில்தான் இவ்வுலகத்திலுள்ள தங்கள் பெற்றோர்களையும், சகோதரர் களையும் புரிந்துகொள்கிறார்கள்.

குழந்தைகள் தாங்கள் உடலாகப் பிறப்பதற்கு முன்பு எப்படி இருந்தார்களோ அந்த நிலையிலிருந்து விடுபட்டு இன்னும் தற்போது இருக்கும் நிலைக்குத் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. பிறப்பதற்கு முந்தைய பழைய நினைவுகளே உள்ளதால் கனவுகள் பெரும்பாலும் பழைய நினைவுகளுக்குள்

தான் இருக்கும் என சில்வியா பிறவுண் (Sylvia Browne) அவர்கள் தனது "அமானுஷ்ய சக்திகொண்ட பிள்ளைகள் (Psychic Children) என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.



"இந்த நூற்றாண்டின் மருத்துவ விஞ்ஞானத்தின் மிகப்பெரும் கண்டு பிடிப்புகளில் ஒன்று மரபு அணுப் பரிசோதனை (DNA or deoxyribonucleic acid) இது மருத்துவத்தின் பல முடிச்சுக்களை அவிழ்க்கிறது. காலப்போக்கில் இந்த மருத்துவ விஞ்ஞானம் அனைவரின் முற்பிறப்புக்களை இலகுவாகக் கண்டு பிடிக்கத்தான் போகிறது. அப்போது மனித இனத்தைப் பீடித்துள்ள மேலோக, நரகலோக, புண்ணிய உலக நம்பிக்கைகள் தளர்ந்துவிடும். ஆனால் அப்போது மதத்தின் குறுக்கீடுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். இந்த இடத்தில் தத்துவமேதை பேட்டன் ரசல் (Bertrand Russel) அவர்கள் குறிப்பிட்டதை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். மரணம் இல்லையேல் உலகில் மதங்களுக்கு வேலை இல்லை என்றார். மதங்கள் மரண பயத்தை மையப்படுத்தி மனித இனத்தை தன் பிடியில் வைத்திருக்கிறது. வேகமாக வளர்ந்து வரும் மருத்துவ விஞ்ஞானம் மனித இனத்தின் முற்பிறப்புக்களைக் கிளறி எடுத்து முழு விவரமாக நமது கரங்களில் தரத்தான் போகிறது என இந்நூலாசிரியர் நம்புகிறார்.

## அத்தியாயம் 6

# ‘முற்பிறப்பு ஞாபகமில்லை’ ஏன்?

‘ஒருவர் இறந்தவுடன் அவர் இனிமேல் வரமாட்டார், போய்விட்டார்’ என்கிறார்கள். அதே நேரம் வேறு சிலர் ‘அவர் போய்விடவில்லை, இருக்கிறார்’ என்கிறார்கள். இதற்கு விடை காணத் தத்துவம், மதம், விஞ்ஞானம் எல்லாம் முயற்சி செய்கிறது. அதே நேரத்தில் இப்படியான கேள்விகளை நசுக்கி ‘மரணத்தைப்பற்றிப் பேசக்கூடாது, இது சம்பந்தமான ஆராய்ச்சி, இது சம்பந்தமான விசாரணை எதுவும் வேண்டாம். ஏனெனில், இவை எல்லாம் அச்சத்தைத் தரக்கூடிய செயல்கள் அல்லவா!’ வாழவேண்டிய நேரத்தில் இவையெல்லாம் வேண்டாம். சமூகத்துக்கு எது சந்தோசமோ அந்தப் பக்கத்தில் நிற்பது தரமானதாகவும் கௌரவமானதாகவும் இருக்கும் என்போர் பலர்.

இந்தியா, நேபாளம், எகிப்து, இலங்கை, ஜப்பான், திபெத், கிரேக்கம் போன்ற பல நாடுகள் மறுபிறப்புக் கோட்பாட்டில் ஆறுதலடைகின்றன. அதே நேரத்தில் முற்பிறப்பு, மறுபிறப்பு என்பதில்லை ஆனால் பரம்பரை என்பது உண்டு என்போர் இன்னொரு பக்கமுமாக உலகம் இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. சேக்ஸ்பியர், டெனிசன், வோட்ஸ்வேர்த், செலி போன்ற மேற்கத்திய கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் மறுபிறப்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். எதுவும் சர்ச்சையாவது போல மறுபிறப்பு என்பதே இல்லை, ஆக ஒரே ஒரு பிறப்புதான் இருக்கிறது என்ற வாதமும் தலைதூக்கி புனர்ஜென்மம் என்பது சர்ச்சையாகிவிட்டது.

கி.பி. 538 காலப்பகுதியில் கொன்ஸ்ரான்ரினோபிள் சபை (Council of Constantinople) கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றி னார்கள், அதாவது 'மறுபிறப்பு உண்டு என்ற கோட்பாட்டை ஆதரிப்பவர்கள் சாபத்துக்குள்ளானவர்களாவர்கள்' என அச் சபை அறிவித்தது.



மிகப் பெரிய இசைக் கலைஞர் மொசாட் (Mozart) நான்கு (4) வயதாக இருக்கும்போது பயிற்றப்பட்ட கலை ஞர் போல் இசை மீட்டார். எட்டு (8) வயதாக இருந்தபோது ஒப்ரா (Opera) இசை வரிகள் உருவாக்கினார். இசைஞானம் இல்லாத குடும்பத்தில் பிறந்த இவர் எவ்வளவு ஆழமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு ஆழமாகச் சிந்தனை செய்துள்ளார். இவரது பரம்பரையில் தேடினாலும் இசை ஆர்வம் அங்கு அவ்வளவு இல்லை என்பது தெரியவருகிறது, எனவே இவருடன் சேர்ந்து எப்படி இந்த இசைஞானம் பிறந்தது?

பிளேட்டோ சொல்கிறார் முற்பிறப்புக்களில் பெற்ற அறிவு, அனுபவம், தொடரும் என்கிறார். சேக்ஸ்பியர், ஏபிரகாம் லிங்கன் போன்றோர்களது பெற்றோர்களில் அல்லது அவர்களின் குடும்பப் பின்னணியில் உலகப்புகழ்பெற்ற சேக்ஸ்பியரையோ ஏபிரகாம்லிங்கனையோ உருவாக்கக்கூடிய எந்தவித அடை யாளங்களும் அங்குக் காணப்படவில்லை. இயேசு கிறிஸ்து, புத்தர் இவர்களது குடும்பப் பின்னணியில் எந்தவித ஞானமும் இருக்கவில்லை. இயேசுநாதரது குடும்பப் பின்னணிக்கும் அவர் அடைந்த உயர்வுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. புத்தரையாவது அரச குடும்ப அரண்மனையில் இருக்கவைத்து பண்டிதர்கள் மேதாவிகள் மூலம் கல்வி கற்பித்தார்கள். உலகிலே இயேசு ஒரே ஒருவர்தான் எந்தப் பின்னணியும் இல்லாமல் உலகம் 'அதிசயிக்கத்தக்கதாக' உயர்ந்தார். வசதியற்ற, கல்வியறிவற்ற ஏழைக் குடும்பத்தில் அவர் பிறந்தவர். அவரது உற்றார், உறவினர்கள், ஆடு மேய்ப்பவர்கள் கல்வியறிவற்ற பரம்பரையைக் கொண்டவர்கள்.

பரம்பரையில் இருந்த அறிவு, ஆற்றல் காரணமாக சேக்ஸ்பியர், ஏபிரகாம் லிங்கன் உயர்வடைந்தார்கள் என்று

சொல்லமுடியாது. புத்தபிரான், இயேசுநாதர், நபிகள் நாயகம் இவர்களெல்லாம் பரம்பரையில் இருந்த ஞானத்தால் உன்னதநிலை எய்தினார்கள் என்று சொல்ல முடியாது. நாம் ஏற்கனவே பிறந்து வாழ்ந்து மீண்டும் பிறந்து வாழ்கிறோம். முந்தைய பிறப்புகளில் சேர்ந்த அறிவு, அனுபவம் என்பன அடுத்த பிறப்புக்களில் தொடருமென்றால் ஏன் முற்பிறப்பு ஞாபகமில்லை என்ற கேள்வி எழுகிறது.

நம் சொந்த வாழ்வான இந்தப் பிறப்பில் அதாவது நிகழ்காலத்திலேயே ஏராளமான விடயங்கள் ஞாபகமில்லை, மறந்துவிட்டோம். நமது கைக்குழந்தைப் பருவமே நமக்குத் தெரியாது. மூன்று வயதுக்குள் எதுவுமே ஞாபகமில்லை. ஏன் அவ்வளவு தூரம் செல்லவேண்டும். போன மாதம் இதே நாள் இந்த நேரம் நாம் என்ன செய்தோம் என்பதே ஞாபகத்தில் இல்லை. அப்படியே பின்னுக்கு நகர்த்திக் கொண்டு போனால் திணறிப்போவோம். பழைய ஞாபகங்கள் அதாவது முற்பிறப்பு ஞாபகங்கள் இருந்தால், அது இந்த நிகழ்காலத்தில் பல துஷ்பிரயோகங்களையும், பழிக்குப்பழி வாங்கல்களையும் தூண்டிவிடும். மேலும் இந்தப் பிறப்பில் முழுமையாக வாழ்வதற்குக் கடந்த முற்பிறப்பு ஞாபகங்கள் தடையாக அமையலாம். முற்பிறப்புகள் ஞாபகமில்லாமல் இருப்பதால் அவை இப்பிறப்பு வாழ்க்கையை வளமாக்கு கின்றன. வாழ்வில் புதிய இலக்குகளுடன் புதியதாக, புதுமையாக, இயல்பாக வாழ முற்பிறப்பு ஞாபகமின்மை உதவுகிறது.

## அத்தியாயம் 7

# உயிர்த்தெழுல் உலக அதிசயமானது!

எகிப்தில் ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பு அமைந்த பிரமிட் (Pyramid) மறுபிறப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தது. இறந்த அரசர்களது உடல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஏனெனில் மீண்டும் உயிர், ஆத்மா, ஆவி அந்த உடலினுள் பிரவேசித்து உயிர்த்தெழலாம் என்ற ஐதீகமே. அவர்கள் உயிர்த்தெழலாம் என்ற அடிப்படையில் அமைந்த பிரமிட் உலக அதிசயமாகிவிட்டது.

இயேசுநாதர் மறுபிறப்புப்போல உயிர்த்தெழுந்த (Resurrection) அந்தத் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது. இந்தியா, இலங்கை, எகிப்து, கிரேக்கநாடு, திபெத், சீனா, ஜப்பான், தென்அமெரிக்கா (மாயா இனம்) ஆகிய நாடுகளின் அடித்தளமே மறுபிறப்புக் கோட்பாடுதான். போதிதர்மா அவர்கள் தான் உயிர்த்தெழுந்து அந்த அதிசயத்தை சீனாவில் நிகழ்த்தி, அதை தான் பிறந்த இந்தியாவில் உள்ள இமயமலையில் முடித்து வைத்துள்ளார்கள். போதிதர்மா உயர்த்தெழுந்த (Resurrection) நிகழ்வு இயேசு பிரானுக்குப் பிந்தியதால் முக்கியத்துவம் அடையவில்லை.

புத்தர் 2500 ஆண்டுகளுக்குப்பின்பு மைத்ரேன் என்ற பெயரில் தான் மீண்டும் பிறப்பேன் என்றார். அதனால்தான் புத்தர் மீண்டும் பிறந்துவிட்டார் என்ற செய்தியும், சில சுவாமிகள் தாங்கள் புத்தரின் மறு அவதாரம் என்று கூறும் செய்திகளும் பரபரப்பாக வெளிவருகின்றன. அதாவது மறுபிறப்பு முக்கிய செய்தியாகிறது. இயேசு மீண்டும் தோன்றுவேன், கிருஷ்ணர் மீண்டும் அவதரிப்பேன் என்று

கூறியதாகக் கூறும் சமய விளக்கங்கள் எல்லாம் மறுபிறப்பைத் தான் குறிக்கின்றன. இதனால்தான் இயேசு, கிருஷ்ணர் பிறந்துவிட்டார்கள் என்ற கதைகள் முக்கியமடைகின்றன.

**செய்தி:**

இந்தியாவிலுள்ள பெங்களூரிலிருந்து (Bangalore) புனர்ஜென்மம் பற்றி ஆய்வுசெய்யும் குழு ஒன்று *1979* அல்லது *1980* ஆண்டளவில் இலங்கை வந்து புனர்ஜென்மம் தொடர்பாக சில ஆய்வுகளை மேற்கொண்டது. இலங்கையில் *1971*-இல் சிங்கள இளைஞர்களால் அன்றைய அரசுக்கு எதிராக மேற்கொண்ட ஆயுதக் கிளர்ச்சியில் போராளியாக இறந்த உற்ற நண்பர்கள் இருவர், மறுபிறப்பில் இரட்டைப் பிள்ளைகளாக (Twins) அனுராதபுரத்தில் பிறந்திருப்பதை தமது ஆய்வுகள் மூலம் அக்குழு உறுதிப்படுத்திக்கொண்டதாகவும் மேலும் அதே சம்பவத்தில் கதிர்காமத்தில் இறந்த ஒரு இளம் யுவதி மீண்டும் அப்பகுதியில் பிறந்து இருப்பதை இக்குழு உறுதி செய்ததாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது எனக்கு ஞாபகத்தில் உள்ளது.

**நிகழ்வுகள் :**

**(அ) உயிர்த்தெழல் செய்தி மயக்கம் கொடுத்தது:**

எகிப்தில் உள்ள Herald Sun என்ற பத்திரிகை *12.5.2012*-இல் வெளியிட்ட செய்தி ஒன்று உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. கனடிய தொலைக்காட்சியில் அந்தச் செய்தியை நான் பார்த்தேன். இறந்த மனிதர் உயிர்த்தார் என்பதுதான் அந்தச் செய்தி. அந்த உயிர்த்தல் உலகின் பரபரப்புச் செய்தியானது. அந்தச் செய்தி தெரிவித்ததாவது எகிப்திய தென் மாகாணமான லக்ஷோர் (Luxor) இலுள்ள நாக அல்சிமன் (Naga AlSimon) என்ற கிராமத்தைச் சேர்ந்த ஹோட்டல் பணியாளரான *28* வயதுடைய ஹம்டி ஹாபஸ் அல்-நுபி (Hamdi hafez Al-Nubi) என்பவர் ஹோட்டலில் உணவு பரிமாறுபவராக வேலைசெய்து கொண்டிருக்கும்போது நெஞ்சு வலியேற்பட்டு இருதயத் தாக்குதலுக்கு (Heart failure) உள்ளாகி மரணநிலைக்குச் சென்றார்.

உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். அங்கு டாக்டர்கள் அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு அவருக்குரிய இறுதிச் சடங்குகள் முடிவடைந்து இஸ்லாமிய மரபின்படி அன்றே அவரை அடக்கம் செய்ய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. அப்போது அங்கே அவரது இறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்கச் சென்ற டாக்டர் அவரது உடலைத் தொட்டதும் பேரதிர்ச்சிக்கு உள்ளானார். மரணமான உடலாக அது காணப்படவில்லை. உடனடியாக அவசர சிகிச்சை மேற்கொண்டபோது மறுபிறப்பு ஏற்பட்டதுபோல் கண் விழித்துக்கொண்டார். இதை அறிந்ததும் இவரது தாயார் மயக்கமுற்று வீழ்ந்துவிட்டார். தாயாருக்கு அவசர சிகிச்சை வழங்கப்பட்டது. தாயாரின் உடல்நிலை தேறி கண்விழித்துக் கொண்டார். உயிர்த்தெழுந்த செய்தி மயக்கம்கொடுக்கும் செய்தியாக மாறிவிட்டது. மரணநிகழ்வு மங்கள நிகழ்வாக மாறி குதூகலக் கொண்டாட்டமாகியதாக அந்தச் செய்தி தெரிவித்தது.

**(ஆ) உயிர்த்தெழலும் அலறியடித்து ஓட்டமும்:**

மரண நிகழ்வு மங்கள நிகழ்வானது. மதுரை மாவட்டம் திருமங்கலம் பிரதேசத்தில் உள்ள தும்மக்குண்டைச் சேர்ந்த அசோகன் (வயது 45) என்பவர் மாரடைப்பால் 22.04.2013 அன்று இறந்தார். அவரது பூத உடல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிச் சடங்குகளைச் செய்த வேளை அவர் உயிருடன் எழுந்து அமர்ந்த சம்பவம் அங்கு இருந்தவர்களை அலறியடித்து ஓடவைத்தது. அவர் உயிருடன் சென்று தன் குடும்பத்துடன் இணைந்து அந்த மரண நிகழ்வை மங்கள நிகழ்வாக மாற்றினார்.

*(Internet செய்தி)*

**(இ) இறந்த குழந்தை உயிர்த்தது:**

Toronto Star (Toronto, Canada) பத்திரிகையில் Feb *18 2013*-இல் வெளிவந்த செய்தியொன்றை இங்குக் குறிப்பிடுகிறேன்:

*17.02.2013* அன்று Toronto நகர் *-15* C குளிரில் உறைந்து கிடந்தது. *20* வயது நிறைந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்

தனது வீட்டிற்கு அருகாமையிலிருந்த Humber River Hospitalக்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது பிரசவ வேதனை ஏற்பட்டு பனியால் மூடப்பட்டிருந்த தெருவோரத்தில் குழந்தையைப் பிரசவித்துவிட்டார். அவசர மருத்துவ சிகிச்சைப் பிரிவினரின் உதவியுடன் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். பிறந்த அக்குழந்தை இறந்துவிட்டதாக மருத்துவப் பரிசோதனைகள் உறுதிப்படுத்தின. மரண விசாரணை அதிகாரியின் வருகைக்காக இரண்டு போலீஸ் உத்தி யோகஸ்தர்கள் இறந்த குழந்தையின் உடலுக்கு அருகாமையில் கிட்டத்தட்ட *1* மணி *45* நிமிடங்கள் வரை கடமையில் நின்றனர். மூடியிருந்த இறந்த குழந்தையின் உடலில் அசைவு தெரிவதை அவதானித்த போலிஸ் குழந்தையைச்சுற்றி மூடியிருந்த துணியை அகற்றி குழந்தையின் நாடியைப் பரிசோதனை செய்தபோது குழந்தைக்கு உயிர் திரும்பியிருப்பது தெரியவந்தது. தீவிர மருத்துவ சிகிச்சை அளித்தபின் தாயும் பிள்ளையும் இணைந்துகொண்டனர்.

**உயிர்த்தெழலும் மறுபிறப்பும் என்றும் அதிசயமே!!**

## அத்தியாயம் 8

# லாமாக்களின் (Lamas) மறுபிறப்பும் மயன்சின் (Mayans) நம்பிக்கைகளும்

'ஆசையே மறுபிறப்புக்கு காரணமாக அமைகிறது' என்கிறது ரிக்வேதம்.

'ஆசை அற்றவர் நிர்வாணம் எய்துகிறார், மற்றவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பார்கள்' என்கிறது தம்மபதம்.

**தலைலாமா தெரிவு**

திபெத் ஒரு ஆன்மிக நாடு. இந்து, பௌத்த, சென், சூஃபி, தந்திரா (Tantra) ஞானிகள் வாழ்ந்த பூமி அது. அங்கு லாமாக்களைத் தெரிவு செய்யும்போது ஒருவர் தம் பிரக்ஞை (consciousness) அற்ற மனதை அறிந்துகொள்ளக் கூடியவராக இருந்தால்தான் லாமாக்களில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார். அவர்களால்தான் தமது மனதை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும். அவர்களை யாராலும் மனோவசியம் செய்யவும் முடியாது.

மனோவசியம் சாதாரண நனவிலி மனதில்தான் செயற்படும். தம் நனவிலி மனதைக் கட்டுக்குள் வைத்திருப் பவரை ஒன்றும் செய்யமுடியாது. அவர் தனது நனவிலி மனதை உணர்ந்துகொண்டவராக இருப்பதால் அவசியமற்ற குப்பைகள் அங்கு தங்காது. அதனால் ஆத்மா ஒளிமயமானதாக மாறிவிட்டிருக்கும். அப்படிப்பட்ட மனதில் எந்தக் கருத்தையும், தூண்டுதலையும் பிறரால் விதைக்க முடியாது.

ஒருவர் லாமா ஆவதற்கு அவருடைய நிகழ்கால வாழ்வை மட்டுமல்லாமல் அவருடைய முற்பிறவிகளையும் ஆராய்ந்து

பார்ப்பார்கள். அவருக்கு மிக நீண்ட ஆன்மிகப் பயிற்சி இருக்கவேண்டும். ஒவ்வொரு தலைலாமாவும் தம் முன் வாழ்ந்த லாமாக்களின் ஆத்மாக்களைச் சுமந்து திரிபவர்களாக இருப்பார்கள். ஒரு லாமா இறக்கும்போது ஒரு இரகசிய அடையாளத்தை விட்டுச் செல்வார். அவர் அடுத்த பிறவியில் எப்படி எங்கே இருப்பார் என்பதை அதை வைத்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் சொல்லிவிட்டுப் போன அடையாளங்கள் உள்ள குழந்தையைத் தேடிக் கண்டு பிடிப்பார்கள். கடுமையான சிக்கலான காரியம் இது. முரசறைந்து அந்த நாடு முழுவதும் அறிவித்துவிடுவார்கள். அந்த அடையாளங்கள் மட்டும் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

அந்த அடையாளம் உள்ள குழந்தை தம் வீட்டில் இருந்தால் தலைமை மடாலயத்திற்கு அறிவிக்க வேண்டும். அதைத் தெரிந்துகொண்ட லாமாக்கள் அங்கு சென்று பல சோதனை நடாத்துவார்கள். அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடையளிக்கும் குழந்தையை அடுத்த வாரிசாகத் தேர்ந்தெடுப் பார்கள். லாமாக்களின் குழு அக்குழந்தையைப் பல சோதனை களுக்கு உள்ளாக்கும். அந்தக் குழந்தையின் நனவிலி மனதை யாராலும் மனோவசியம் செய்யமுடியாது என்பதை உறுதிப் படுத்திக்கொள்வார்கள். மறுபிறப்புக் கோட்பாட்டில் லாமாக்கள் உறுதியானவர்கள்.




## மயன் இனம் (Mayans)

An over view of the Mayan World என்ற நூல் மயன்ஸ்களின் மறுபிறப்பு நம்பிக்கைகள் பற்றிய சில தகவல் களைக் கூறுகிறது. அவற்றை மேலோட்டமாக இந்நூலில் குறிப் பிடுகின்றேன்.

ஒருவர் வாழ்ந்த முறையில் மறுபிறப்பு அமையும் என்கின்றனர் மயன் (Mayan) இனத்தவர்கள். தென் அமெரிக்காவிலுள்ள பூர்வீகவாசி களிடம் மறுபிறப்பைப் பற்றி பல

தகவல்களை அனுபவ ரீதியாக கூறுகிறார்கள். மயன் (Mayan) இனம் முழுமையாக மறுபிறப்புக் கோட்பாட்டை மையமாக வைத்தே தங்களது கலாச்சாரம், வழிபாடுகளை அமைத்துள்ளார்கள். மய (Maya) இனம் பெரும்பான்மையாக மெக்சிக்கோ, குவாத்தமாலா, எல்சல்வடோர் ஆகிய நாடுகளில் வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் 'முற்பிறப்பு, மறுபிறப்பு, தொடர்பிறப்பு' இவற்றில் நம்பிக்கை உடையவர்கள். வாழும் காலத்தில் ஒருவரது வாழ்ந்த முறையில் அவரது மறுபிறப்பு அமையும் என்பதே மய இனத்தின் பல ஆயிரம் வருடங்களான நம்பிக்கை.

மயன் மொழி (Mayan Language), மயன் மதம் (Mayan Religion), மயன் கலாச்சாரம் (Mayan Culture), அறிவியல் என எல்லாவற்றையும் உடைய முதல் நாகரிக மக்கள் இவர்களாகும். எகிப்துக்கும், கிரேக்கத்திற்கும் கணிதம், வானியல், கட்டடக்கலை கொண்டு சென்றவர்கள் இவர்களே!

**ஆன்மா நித்தியமானது என்ற கருத்துடையவர்கள்:**

மயன்ஸ் இனத்தினர் ஆன்மா நித்தியமானது, அது மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கும் என நம்புகின்றனர். நல்ல செயல்கள் அதாவது நன்மை செய்தவர்கள் இறந்தபின் அவர்களது 'ஆன்மா'வானது சீபா (Ceiba) மரத்தில் சிறிது காலம் தங்கி நிறைவாக உணவு உட்கொண்டு அமைதியாகவும், ஆனந்த மாகவும் இருந்து மறுபிறப்பை அடைகிறது என்கின்றனர். தீமையான செயல்களில் ஈடுபட்டவர்கள் மெட்னல் (Metnal) அதாவது நரகலோகம் சென்று பூதங்களின் தலைவனான ஹன்ஹோ (Hun-Hau) வின் கீழ் இயங்கும் பூதங்களின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு பணியாற்றித் துன்பம் அனுபவித்து மீண்டும் அந்த ஆன்மா மறுபிறப்பெடுக்கும் என்கின்றனர்.

இறந்தவர்களின் ஞாபகமாகக் குடும்பங்களில் ஐப்பசிமாதம் (October 31) முப்பத்தோராம் திகதி, கார்த்திகை (November 1st, 2nd) முதலாம், இரண்டாம் திகதிகளில், ஒவ்வொரு வீடுகளிலும் இறந்தவர்களுக்காக நல்ல ஆகாரங்கள் சமைத்துப் படைக்கிறார்கள். சிறிது நேரம் வழிபாடும், பிரார்த்தனையும் செய்துவிட்டு அந்த அறையைவிட்டுச் சென்றுவிடுகிறார்கள்

இறந்தவர்கள் வந்து அந்த விருந்தில் பங்குபற்றி உண்பார்கள் என்று நம்புகிறார்கள். குறிப்பாக மெச்சிக்கோவில் உள்ள யுகற்றான் குடாநாட்டில் (Yucatan Peninsula) இந்த நம்பிக்கை இன்றும் நிலவிவருகிறது. மெச்சிக்கோவின் பல இடங்களில் இது கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. இறந்தவர்களின் ஞாபகார்த்த தினமாகவும் 'ஆன்மாக்களை' மகிழ்வூட்டும் தினமாகவும் 'Halloween And All Saints Days' என்று ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் கொண்டாட்ட தினமாக கொண்டாடுகிறார்கள். அன்றைய தினங்கள் தேசிய விடுமுறை நாட்களாகவே அறிவிக்கப் பட்டுள்ளது.

ஐப்பசி 31ஆம் திகதி இறந்த குழந்தைகள் மேலோகத் திலிருந்து வந்து விருந்தில் பங்குபற்றுவார்கள் என நம்புவதால் அன்றைய தினம் 'குழந்தைகள் தினமாகவும்' (Childrens' Day) கார்த்திகை முதலாந் நாள் 'வயதானவர்கள் தினமாகவும்' (Adults' Day) கார்த்திகை இரண்டாம் நாள் 'அனைத்து இறந்தவர்கள் தினமாகவும்' (Day of All the Dead) கடைப்பிடிக்கப்படுகிறது. மறுபிறப்புக் கோட்பாடு உலகத்தின் பல பாகங்களிலும் வித்தியாசமான கருத்துக்களில் நிலவிக்கொண்டு தான் இருக்கிறது.

**நாகர் - மயன்:**

மகாபாரத காலத்திலும், இராமாயண காலத்திலும் இந்தியாவிலிருந்து மயன் (Mayan) இனம் வெளியேறியதாகவும், நாக-மய (Naga-Maya) என்ற இனம் இருந்ததாகவும் 'An Over view of the Mayan World' என்ற நூல் கூறுகிறது.

நாகர் இனத்திற்கும் மயன் இனத்திற்கும் மிகவும் ஒற்றுமையுண்டு. மயன் இனத்தை இந்தியாவில் நாகர் எனவும், நாகரைக் காலப்போக்கில் தனவாஸ் (Danavas) என்றும் அழைத்தனர் எனவும், இவர்களது தலைநகர் நாக்பூர் (Nagpur) ஆக இருந்தது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்பு இவர்களது நாகரிகம் பபிலோனியா (Babylonia), அக்காடியா (Acadia), எகிப்து (Egypt), கிரேக்கநாடு (Greece) எனப் பரவியது.

இலங்கையில் நாகர் இனத்தினர் வாழ்ந்துள்ளார்கள் அவர்கள் வானியல், கட்டடக்கலை நீர்ப்பாசனத் தொழில்

நுட்பம் போன்றனவற்றில் சிறந்து விளங்கினார்கள். நாகர் இனம் என்று தனியாகப் பிரித்துப் பார்க்க இலங்கையில் அந்த இனம் இல்லாமல் அங்கு வாழும் அனைத்துத் தமிழ் மக்களிலும் கலந்து விட்டார்கள். நாகரைக் குறிக்கும் 'நாக' என்று ஆரம்பிக்கும் பெயர்கள் பரவலாக இலங்கையில், இந்தியாவில் தமிழ் மக்களிடையே இன்றும் நிலவிவருகின்றன.

உதாரணமாக சில பெயர்களை இங்குக் குறிப்பிடுகின்றேன். நாகலிங்கம், நாகரத்தினம், நாகம்மா, நாகையா, நாகராயா, நாகமணி, நாகேஸ்வரி, நாகபூசனி, நாகப்பன், நாகநாதன், நாகராணி..... போன்றவைகளாகும்.

நாகர், மயன் இனங்கள் பாம்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். பாம்பின் அசைவுகள் நடனம் தோன்று வதற்குக்கும் எழுத்துக்களின் வடிவங்கள் தோன்றுவதற்கும் காரணமாக அமைந்திருக்கலாம் என்பது இந்நூலாசிரியரின் அபிப்பிராயம்.

பாம்பை செல்வத்தினதும், இனவிருத்தியினதும் அடையாளமாக மயன்ஸும், நாகரும் கருதியுள்ளனர். பாம்பை ஆணின் உயிர் அணுவின் வடிவமாகப் பார்த்து இனவிருத்தியின் அடையாளமாகக் கருதியுள்ளனர். பாம்பு வணக்கத்துக்குரியதாகிவிட்டது. பாம்பை மையமாக வைத்து பல கதைகள் புனையப்பட்டுவிட்டன.


நூலாசிரியரும், மனைவியும்

இலங்கையில் தமிழர்கள் தங்கள் இந்துத் திருமணங்களில் மணமகளும், மணமகனும் பாம்பின் வடிவமாக தங்களை அலங்காரம் செய்கின்றனர். மணமகள் அணியும் ஜரிகைப் புடவை வடிவமைப்பு, நெற்றிப்பட்டயம், சடைநாகம் அனைத்து அலங்காரங் களும் பாம்பை மையமாக வைத்தே அமைகின்றன. மணமகனும் ஜரிகைப் பட்டு வேஷ்டி சால்வை அணிந்து, பாம்பின் தலை வடிவத்தில் தலைப்பாகை அணிந்து அலங்காரம் செய்துகொள்கிறார். மணமகனும் மணமகளும் மணவறையில் பாலும் பழமும்

உண்கிறார்கள். பாலும் பழமும் பாம்பின் உணவென்று நீண்ட காலமாகக் கதைகளில் கூறப்பட்டு வருகிறது.

மயன்ஸின் வழிபாட்டு இடங்கள் பாம்பின் வடிவமாக அமைந்துள்ளன. இசைக் கருவிகள் மீது பாம்புறையை பாம்புச் செட்டையை வைக்கிறார்கள். அதனால் இசைக்கருவிகளை மீட்டும்போது நல்லநாதம் ஒலிக்கும் என்ற நம்பிக்கையே! வயல்களில் பாம்பு காணப்பட்டால் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், வீடுகளில் பாம்பு வந்து போனால் செல்வம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு. 'பாம்பை' மயன்ஸூம், நாகரும் தெய்வமாக வழிபட்டார்கள்.

இலங்கையில், இந்தியாவில், மயன்மாரில், யப்பானில், ரஸ்யாவில், சீனாவில், கிரேக்கநாட்டில், எகிப்தில் 'நாக' என்று ஆரம்பிக்கும் பல நகரங்கள், கிராமங்கள் உண்டு. கிறிஸ்தவத்தின்படி மோசஸின் கையிலுள்ள கோலை (Rod) அவர் விவாதத்தில் கீழே எறிந்தபோது அது பாம்பாக மாறி நெளிந்து வளைந்து ஓடியது. அந்தக் கோலின் பெயரும் நாகுஸ்தான் அல்லது நாகுஸ்தா (Nahustan or Nahusta) என்பதாகும். அதன் பொருள் பாம்பு (Serpent) என்பதாகும்.

**இயேசுபிரான் இந்தியாவில்**

An Over view of the Mayan World நூல் மேலும் இயேசு இமயமலைச் சாரலில் பலகாலம் நடமாடியதாகவும், திபெத் எல்லைக்குக் கிட்ட உள்ள காஷ்மீரில் அமைந்துள்ள பௌத்த வணக்க ஸ்தலமான Hemisen Leh ல் உள்ள பதிவுகளின்படி இயேசுநாதர் எகிப்தின் ஊடாக இந்தியாவை அடைந்தார் எனவும் பெனாரிஸ் (Benares) லாகூர் (Lahore) க்குச் சென்றுள்ளார் எனவும் இந்தியாவில் புத்தரது போதனைகளை அறிந்தார் எனவும், மய (Maya) இனத்தைப் பற்றியும் அவர்களது (Cosmic-science), வானியல் விஞ்ஞானத்தையும் நன்கு அறிந்தார் எனவும் கூறுகிறது.

இந்தியாவிலும், திபெத்திலும் உள்ள Monasteries களில் கிறிஸ்துவைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. கிறிஸ்து (Christ) என்று குறிப்பிடப்படாமல் ஜீசஸ் (Jesus) என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. திபெத்தில் உள்ள - லாசா Lhasa

Monastery இிலுள்ள ஏடு (Text) இந்தப் பூமியிலுள்ள எல்லா ஆசான்களையும் விடச் சிறந்த ஆசானாக ஜீசஸ் விளங்கினார் என்கிறது.

ஓசோ அவர்கள் 'இயேசுபிரான் இந்தியா வந்தார், காஷ்மீரில் உள்ள புத்தர் கோயிலில் இவரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன, அங்கு தங்கியிருந்து புத்த போதனைகள் அறிந்தார், காக்ஷ்மீரில் உள்ள பஹல்ஹம் Pahalgam என்ற கிராமத்தில் 112 வயது வரை வாழ்ந்தார் என்று கூறுகிறார். Pahalgam என்ற காஷ்மீரிய மொழியை மொழிபெயர்த்தால் ஆடு மேய்ப்பவர்களின் கிராமம் "Village of the Shepherd" என்று பொருள்படும் என்கிறார். அக்கிராமத்தில் இயேசுவின் சமாதி இருப்பதாகக் கூறுகிறார். ஹீபுரு (Hebrew) மொழியில் யோசுவா (Joshua) என்று அந்தச் சமாதியில் எழுதியிருப்பதாகவும் அவரது இயற்பெயர் யோசுவா, அந்தப் பெயர் நாளடைவில் இயேசுவானதாகக் கூறுகிறார்.

இயேசு அரமெக் (Aramaic) மொழி பேசியவர், இது ஹீபுரு மொழியின் புராதன வழக்கத்தில் இருந்த மொழியாகும். புத்தர் பாளி (Pali), மகாவீரர் பிராகிரிற் (Prakrit) மொழி பேசியவர்கள். இந்து மதப் புனித நூல்கள் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன.

**இராமாயண - மகாபாரதக் கதைகளில் மயன்ஸ்:**

இலங்காபுரியை ஆண்ட இராவணன் வானியல், மருத்துவம், கட்டடக்கலை, கணிதம், இசை, போர்க்கலை, ஆட்சியியல், ஆன்மிகம், புவியியல், நீர்ப்பாசனம் ஆகிய பத்து துறைகளில் பாண்டித்தியம் உடைய நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கினார். பத்து அறிவியல் பீடங்கள் (Faculties) தன்னகத்தே கொண்டு ஒரு மாபெரும் அறிவியல் மனிதராக விளங்கியவர்.

அப்போது இலங்காபுரி அறிவியலிலும் செல்வத்திலும் மேலோங்கி இருந்தது. இலங்காபுரியில் நாகர்களினால் அறிவியல் மேலோங்கியிருந்தது. இராமர் படையெடுப்புத்தான் இலங்காபுரி மீது நடந்த முதலாவது அன்னிய படையெடுப்பு என நினைக்கிறேன்.

இராமர் படை தென் இந்தியாவிலிருந்து இலங்காபுரி செல்ல பாலம் நிர்மாணித்தவர்கள் அன்று கட்டட, தொழில் நுட்ப வல்லுநர்களான நாக-மயன்கள், மயன்களாகத்தான் இருக்கமுடியும். இப்பூமியின் புராதன விஞ்ஞானிகளாக இவர்கள் திகழ்ந்தவர்கள். மயன்ஸ் வெளியேற்றத்துக்கான காரணம் என்ன?

வால்மீகி நாக - மயன் இனம் பற்றி இராமாயணத்தில் குறிப்பிட்டுள்ளார் என An overview of the Mayan World என்ற நூல் சுட்டிக்காட்டுகிறது.

போர்களில் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள், நோயாளிகள் போன்றவர்களே எப்போதும் பாதிக்கப்படு கிறார்கள். போர்களில் அறிவியல் சார்ந்த இடங்கள் அழிக்கப் படுகிறது. புத்திஜீவிகள் கொல்லப்படுகிறார்கள். அவர்கள் பாதுகாப்புக்காக வெளியேறுவது இன்றும் நடைபெறுகிறது. போர்களில் வென்றவர்கள் கூறும் காரணங்கள் நிலைபெற்று விடுகின்றன வென்றவர்களுக்காகவே வரலாறுகளும் புனைகதை களும் எழுதப்பட்டு விடுகின்றன. போர்களில் உண்மையான உள்நோக்கம் மறைந்து இருப்பதே உண்மை.

முற்பிறப்பில் சீதை , இராவணனின் மகள் எனக் கூறப்படுகிறது. தன் முற்பிறப்பு மகள் வனத்தில் துன்பப் படுவதை அறிந்த இராவணன் அங்குச் சென்று தன் மகளை துன்பத்திலிருந்து மீட்டு இலங்காபுரிக்கு கூட்டிவந்து கௌரவமாக நடாத்தி மகளின் நலனில் அக்கறையுள்ள தந்தையாக இருந்ததாக ஒருகருத்து நிலவுகிறது. இக்கருத்தில் ‘முற்பிறப்பு’, ‘மறுபிறப்பு’ கோட்பாடு இருப்பதால் இராமாயணத்தைப்பற்றி இங்குக் குறிப்பிட்டுள்ளேன். அத்தோடு மயன்சைப் பற்றிய ஒரு தகவலுக்காகவும் குறிப்பிட்டுகின்றேன். இலங்கை வேந்தன், இராவணனது மாமா ஒருவரை மயன் (Mayan) என்கின்றது இராமாயணம். துரியோதனன் கட்டிய அரக்குமாளிகை மாயனினால் வடிவமைத்ததாக பாரதத்தில் கூறுப்படுகிறது. மயன்ஸ்கள் இந்தியாவை தாய் நாடாகக் கொண்டவர்கள் என்பதே என் அபிப்பிராயம். அவர்களது நாகரிகம் புராதனமானது. இவர்கள் இப்பூமியில் வாழ்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களும் புத்தி ஜீவிகளும் ஆவார்கள். இந்தியாவிலிருந்து வெளியேறிப் பல நாட்டு மக்களுடன்

கலந்துவிட்டார்கள். அருச்சுனனும், கிருஷ்ணரும் மெக்சிக்கோ விஜயம் செய்ததாகவும் ஒரு கதை கூறுகிறது. இந்தியா போன்ற சீதோஷ்ண நாடுகளான தென் அமெரிக்காவில் செறிந்து வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் வாழ்ந்த நாடுகளில் கட்டடக்கலை, கணிதம், நீர்ப்பாசனம், தொழில்நுட்பம், வானியல் போன்றன இன்றும் சாட்சியாக உள்ளன.

**இந்தியாவிலிருந்த மயன்ஸ் வெளியேற்றம்:**




Glimpses of World History (இந்திய முதல் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் சுதந்திரப் போராட்டத்தின்போது சிறையிலிருந்து தனது மகள் இந்திராகாந்தி அவர்கட்கு (பிரியதர்சினி) எழுதிய அனைத்துக் கடிதங்களின் தொகுப்பாகும்). இந்த நூலில் நேரு அவர்கள் மயன்சைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். (ஆனி 13, 1932-இல் எழுதிய கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

இந்தியாவிலிருந்த மயன்ஸ் அலெஸ்கா ஊடாக அமெரிக்கா சென்றிருக்க வேண்டும். இவர்கள் சென்ற பின்புதான் அங்கு நாகரிகம் வளரத் தொடங்கியது. மயன்ஸ் உடைய மெக்சிக்கன் காலண்டர் அவர்களது நாகரிக, அறிவியல் வளர்ச்சியைக் காட்டுகிறது. கி.பி. 1000 அளவில் மத்திய அமெரிக்காவில் மூன்று நாடுகள் இணைந்து 'மயப்பன் கூட்டமைப்பு' (League of Mayapan) என்று ஒரு அமைப்பைத் தோற்றுவித்தனர். அங்கு விஞ்ஞானம், வானியல் சிறந்தோங்கின. இக் கூட்டமைப்பு நாடுகளில் செல்வமும், அறிவியலும் இருந்தன. கைத்தொழில் ஆக மட்பாண்ட வேலையும், நெசவும் ஓங்கியிருந்தன. இந்தக் கூட்டமைப்பு பலமாக இருந்தது.

**An Overview of the Mayan World என்ற நூல் மேலும் தரும் தகவல்:**

அமெரிக்காவில் கொலறாடோ (Colorado) வில் கோர்டஸ் (Cortez) நகரில் உள்ள அகழ்வாய்வு ஆராய்ச்சி இடமான Mesaverde இல் கிறிஸ்து காலம் ஆரம்பிக்கும் போது இங்கு இந்திய விவசாயிகள் (Indian farmers) வாழ்ந்ததாக


"The Balcony House" built around 1200-1278 A.D. Anasazi Culture. Mesa Verde National Park, Colorado, U.S.A. Photo courtesy of Gilbert R. Wenger, Park Chief.

அகழ்வாய்வின்போது கண்டறிந்துள்ளனர். அவர்கள் கூடை தயாரிப்பில் ஈடுபட்டிருந்த படியால் Basket Makers என அழைக்கப்பட்டனர். குகைகளை மையமாக வைத்து பிரமாண்டமான வசிப்பிடங்கள் அமைத்து வாழ்ந்திருக்கிறார்கள். 12ஆம், 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 220 அறைகளைக் கொண்ட பிரமாண்டமான மாளிகை அங்குக் காணப்பட்டுள்ளது. 24 வருட தொடர் வறட்சி காரணமாக அங்கு வாழ்ந்த மயன்ஸ்கள் அமெரிக்காவின் பிற நகரங்களான கலிபோர்னியா (California), நெவேடா (Nevada), ஊற்றா (Utah), ரெக்ஸாஸ் (Texas), வியோமிங் (Wyoming), நியூமெக்சிக்கோ (New mexico), அரிசோனா (Arizona), ஓர்கோன் (Oregon), இடஹோ (Idaho), மொன்ரானோ (Montano), றியோபிறவோ (Riobravo) போன்ற இடங்களுக்குச் சென்று குடியேறியவர்கள் பின்பு Mesaverde விற்கு திரும்பி வரவேயில்லை. அவர்கள் மெஸாவேட் குடிகள் (Mesaverde tribes) என்றே அழைக்கப்பட்டனர். சில இடங்களில் இவர்கள் நாகுஆற் (Nahuatl) குடிகள் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். கொலறாடோ (Colorado) நகரில் உள்ள மெஸாவேட் (Mesaverde) தற்போது தேசியப் பூங்காவாக (National Park) மாற்றப்பட்டுள்ளது.

**அமெரிக்காவிலுள்ள N.A.S.A. விண்வெளி ஆய்வு மையமும் மயன்சும் :**

அமெரிக்காவிலுள்ள N.A.S.A. விண்வெளி ஆய்வு மையத்தில் மயன்ஸின் பங்களிப்பு உண்டா? நாசா (N.A.S.A) விண்வெளி ஆய்வுமையத்தின் மூலகர்த்தாக்கள் மயன்ஸா? அமெரிக்கன்-இந்தியன் (American-Indian) என்று அழைக்கப்படும் இனம் அமெரிக்காவில் இருந்தது. இவர்கள் மயன் (Maya) இனத்தவராகத்தான் இருக்கவேண்டும். உலகத்திலே சிறந்த காலக்கணிப்பு வல்லுநர்களாகவும், வானியல், வானசாஸ்திரம், வானியல் விஞ்ஞானிகளாகவும் இருந்தவர்கள் இவர்களே. இந்த மையத்தில் பறக்கும் தேரின் படம் இருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலிருந்து வெளியேறிய மயன்ஸ் அலாஸ்கா (Alaska) சென்றுள்ளனர். இவர்கள் யப்பான், அமெரிக்கா, எகிப்து, கிரேக்கம் என்று பல நாடுகளில் கலந்துவிட்டனர். இன்று வான சாஸ்திரத்திலும், கணிதத்திலும் இந்நாடுகள் மேலோங்கியிருப்பதற்கு மயன்ஸின் பங்களிப்பு காரணமாக அமைந்திருக்கலாம். ஜப்பான் மொழியில் 40 சதவீதம் மயன் (Maya Language) மொழியின் கலப்பு இருப்பதாக மயன்சைப் பற்றிய அந்நூல் கூறுகிறது.

மயன் (Maya) இனம் இந்தியாவிலிருந்து வெளியேறியது இந்தியாவுக்கு ஈடுசெய்ய முடியாத அறிவியல் பேரிழப்பாகும்.

**தென் அமெரிக்காவில் கணேசக் கடவுள் சிலை:**

கல்கத்தாவைச் சேர்ந்த (இந்தியா) Dr. Indu. B. Chakrabati மெக்சிக்கோ சென்று மயன்ஸ் இனத்தைப்பற்றிய ஆய்வு மேற்கொண்டு அவர்களது இந்தியத் தொடர்பை வெளி உலகத்திற்கு கொண்டு வந்தார்.

நாகரிக வளர்ச்சியடைந்த நாக-மயன் இனம் சீனா, ஜப்பான் ஊடாக அமெரிக்காவை அடைந்தார்கள். இன்றும் மயன்ஸ், நாகரின் அனைத்து நம்பிக்கைகளும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நிலவுகிறது.

ஹொண்டுறாசில் (Honduras) யானை முகங்கொண்ட கடவுளை மழைக்கான கடவுளாக வணங்குகிறார்கள். ("Yum chac" என்பதே கடவுளின் பெயர்) இது கிழக்கிலிருந்து வந்த வழிபாடாக இருக்கவேண்டும் என்று அந்த நூல் கூறுகிறது.

ஹொன்டுறாஸ் (Hondu), எல்சல் வடோர் (E!salvadore), குவாத்தமாலா (Guatemala), மெக்சிக்கோ (Mexico) போன்ற நாடுகளில் அகழ்வாய்வின்போது கணேசக் கடவுளின் சிலைகளும், கணேசக் கடவுள் சிவனை வணங்குவது போன்ற சிலைகளும், சுவாஸ்ரிகா அடையாளத்துடன் கணேசக் கடவுளின் சிலைகளும் காணப்பட்டதாக இந்தியாவை (கல்கத்தா) சேர்ந்த டாக்டர் சக்கரபதி (Dr. Indu B. Chakrabati) கூறியதாக அந்நூல் விளக்குகிறது.



The top corner of one of the stelae in the Ceremonial Patio Copán, representing an elephant head, on the bottom corner another head, almost worn away. Photo by Carlos Echánc



Two views of the Palace of the Large Masks of the Rain God at Kabah; in Maya he is called Kodzpop.



Temple of the Jaquars on top and its floor-level substructure.



Reproduction of a Peruvian Codex which in the upper part shows Shiva worship-ping a deity with a nose in the shape of an elephant's trunk, such as Ganesa. Courtesy of Dr. Indu B. Chakrabarty.



Another similar representation with a swastika in the background. Fothersaws model by Maudslay. Courtesy of the same doctor



Olmec-looking monolith that is holding a serpent draped around its neck. Ruines of Kabah.


Another representation of an elephant trunk. From the Diego Rivera Museum. It is calculated from circa 700 to 1000 A.D.

மெக்சிக்கோவிலுள்ள டியாகோ றிவேறாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் (Diego Rivera Museum, Mexico) காணப்படும் இந்துக் கடவுளான கணேசர் சிலை மயன் (Mayan) இனத்தினர் இந்தியாவிலிருந்து வெளியேறும்போது கொண்டு வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. கி.பி. *700 - 1000* காலப் பகுதியாக இருக்கலாம் என்றும் பிறிதொரு தகவல் தெரிவிக்கிறது. அகழ்வாய்வு ஆராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் கணேசரும், சுவாஸ்ரிக்கா (Swastika) அடையாளங்களும் காணப்படுகின்றன. கணேசர் சிவனை வணங்குவது போன்ற வடிவங்களும் காணப்படுகின்றன. சிவன் கழுத்தில் பாம்பு சுற்றியுள்ள வடிவங்களும் காணப்படுகின்றன. நாகரீகமும், அறிவியலும், வானியலும், கணிதவியலும், கட்டிடக்கலையும், நீர்ப்பாசனத் தொழில்நுட்பமும் உள்ள இந்த மயன்ஸ் இனம் இந்தியாவிலிருந்து பெறிங் நீரிணை (Bering Strait) ஊடாக அமெரிக்காவை அடைந்ததாக இந்நூல் கூறுகிறது.

**இந்திய சிற்பக்கலை தென் அமெரிக்காவில்:**


One of the more important pyramids of Tikal.

இந்தியாவில் உள்ள அஜந்தா சிற்பக்கலை எவ்வித மாற்றமுமில்லாமல் மெச்சிக்கோவில் உள்ள சியாபாஸ் நகரில் காணப்படுகிறது (Temple of the cross at Palenque, Chiapas, Mexico). குவாத்தமாலாவிலுள்ள திக்கல் (Tikal), கம்போடியாவில் அங்கோரிலுள்ள பாஸ்கிசான் பிரமிட் (Pyramid of Baksei Chan Crong, Angkor, Cambodia) எல்லாம் யாவாவில் (Java) காணப்படும் அமைப்பும் ஒரே மதிரி உள்ளன. இந்தியாவில் சான்சியிலும் (Sanchi), அமராபதியிலும் காணப்படும் செதுக்கப்பட்ட ஓவியமான பாம்பின் வாயிலிருந்தும், தாமரைப்பூவில் இருந்தும் மனிதன் வெளியே






வருவது போன்ற வடிவம் தென் அமெரிக்க நாடுகளில் காணப்படுகிறது. அந்த வடிவம் இந்து தெய்வமான Makarasஐ ஒத்ததாகும் என அந்நூல் விளக்குகிறது. மாயா என்று கூறப்படும் இந்துக் கடவுளும் உண்டு என்கின்றனர். மயன்ஸ் மொழியை இந்தியாவில் நாகர்களும் பேசியுள்ளதாக அந்நூல் மேலும் கூறுகிறது. தமிழகத்தில் செஞ்சியில் (Chenchi) காணப்படும் தேசிங்கு ராஜா கோட்டைபோல் தென் அமெரிக்காவிலும் காணப்படுவதை நான் அவதானித்துள்ளேன்.

**மயன்களின் காலண்டர்:**



மெக்சிக்கோவில் உள்ள Temple of Kukulcan (The Castillo) உலகத்தில் மிகவும் பிரபல்ய மான பிரமிட் (Pyramid) ஆகும். எந்தப் பக்கத்திலிருந்து பார்த்தாலும் பாம்பு ஊர்ந்து செல்வது போன்ற அமைப்பு. ஒவ்வொரு பக்கத்திலும் 91 படிக்கட்டுகள் உள்ளன. நாலா பக்கத்திலும் உள்ள படிகளைக் (Steps) கூட்டினால் 363 படிகளும் உச்சியிலுள்ள பீடத்தையும் (பாம்பின் தலை போன்ற அமைப்பு) சேர்த்தால் 365 ஆகிறது.



Pyramid of Kukulcan at Chichen in Yucatan

இது ஒரு வருடத்தில் உள்ள நாட்களைப் பிரதிபலிக்கிறது.

இந்த பிரமிட் முழுவதும் மயன் காலண்டரை (Maya Civil Calendar) பிரதிபலிக் கிறதாகக் கருதப்படுகிறது. ஒரு வருடத்தில் *365* நாட்கள் என மயன்ஸ் கணித்தபோது மேலதிக மாக ¼ நாள் இருப்பதை யும் கண்டுகொண்டனர்.

ஜுலியன் (Julian) *365.2500* நாட்கள் எனவும்

கிரிகோரியன் (Gregorian) *365.2425* நாட்கள் எனவும்

சயன்ரிபிக் (Scientific) *365.2422* நாட்கள் எனவும்

மயன் (Mayan) *365.2420* நாட்கள் எனவும்

துல்லியமாகக் கணித்துக் கொண்டனர். நவீன விஞ்ஞான உபகரணங்களும் இல்லாத *682*-ஆம் ஆண்டில் அவர்கள் கணித்ததாக கருதப்படுகிறது. அது மாத்திர மல்ல என்னென்ன சம்பவங்கள் எதிர்காலத்தில் எவ்வெப்போது நடைபெறுமென நீண்டதொரு காலண்டரையும் அவர்கள் *975 - 1196* காலப் பகுதிகளில் எதிர் காலத்துக்காக கணித்துள்ளனர். இதை அவர்கள் கற்றூண் சுற்று (Katun Round) என அழைத்தனர். வேறுசிலர் இதை 'Short Count' அல்லது 'Series' என அழைத்தனர்.

'Corbelled Maya Arch' இந்தியா, பாகிஸ்தான், மியன் மார், இந்தோனேசியா, யாவா, கம்போடியா, யப்பான், எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடு களில் இந்த மயன் வளைவுகள் காணப்படு கின்றன. இந்தியா விலுள்ள சிற்பக்கலை கள் பல குவாத்தமாலா நாட்டில் காணப்படு கிறது (Stelae of Coppan and Quirigua).



**மயன்ஸ் மதப்பூசல்களால் இந்தியாவிலிருந்து வெளியேறினார்களா?**

மயன்ஸ்கள் இந்தியர்களே, அவர்களைப்பற்றிய ஆய்வுகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும்.

இந் நூலாசிரியரான நான் மெக்சிக்கோ சென்றிருந்தபோது மயன்ஸ் இனம் தனியினமாக அங்கு இல்லை என்பதை அறிந்துகொண்டேன். படையெடுப்புக்கள் காரணமாக பல்வேறு இன மக்களுடன் கலந்து அந்த இனத்தின் தனித்துவம் அழிந்துவிட்டது. மயன்ஸ் இனத்தைப்பற்றி அருங்காட்சி யகங்களில் குறிப்புக்கள் காணப்படுகிறது.

மயன்ஸ்களின் மறுபிறப்பு நம்பிக்கை பற்றிக் குறிப்பிட விரும்பியபோது அவர்களைப் பற்றிய மேலதிக விவரங்களை ஒரு தகவலுக்காக நல்லெண்ணத்தில் எழுதியுள்ளேன்.

## அத்தியாயம் 9

# மரணம் ஒரு மாயைத் தோற்றம்

முற்காலத்தில் இறப்பு நிகழ்ந்தால் கிறிஸ்தவ தேவாலயத்தில் மரண அறிவிப்பாக தேவாலயமணி அடிக்கும். அது அந்தக் கிராமத்துக்கான ஒரு பொது அறிவிப்பாகும். தொழில் பட்டடைகளில், வயல்களில், கழனிகளில், தோட்டங்களில், மற்றும் வேலைசெய்யும் இடங்களில் அந்த 'மரணஒலி' கேட்கும்போது அங்கு உள்ளவர்களை வரும்படியான வேண்டுகோள் அது. ஒரு கவிஞன் 'யாருக்காக அந்தமணி ஒலிக்கிறது என்று கேளாதீர்கள், அந்த மணி உங்களுக்காகவும் ஒலிக்கிறது' என்கிறார். இந்தக் கவிஞன் ஒரு உண்மையை உணர்த்துகிறான்.

அந்த மணியின் ஒலியில் ஒவ்வொருவரும் தங்கள் தருணத்துக்காகக் காத்திருக்கிறார்கள் என்கிறார் அந்தக் கவிஞன். நீங்கள் என்று பிறந்தீர்களோ அன்றே மரணத்தை நோக்கிய உங்கள் பிரயாணம் ஆரம்பிக்கிறது.

மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ஊர்வன, மிதப்பன, தாவரங்கள் எல்லா உயிர்களும் இறப்பதைப் பார்க்கிறோம். ஆனால் மரணம் என்பது ஒரு மாயைத் தோற்றம் எனத் தங்களை உணர்ந்த, (Self-Realization) தன் 'இருப்பை' (Being) அறிந்த ஞானிகள் கூறுகிறார்கள்.

கௌதமபுத்தர் மரணமாகும்போது புத்தருக்கு அருகில் உட்கார்ந்திருந்த ஒன்றுவிட்ட அண்ணனான ஆனந்த் தேம்பித் தேம்பி அழுதார். (புத்தரின் தந்தையினது அண்ணாவின் மகன் ஆனந்த்). இதைப் பார்த்ததும் புத்தர் 'மரணம் எனக்கு இல்லை' என்றார்.

**சூஃபி மதம் கூறும் கதை இது:**

ஈராக் (Iraq) நாட்டில் பாக்தாத் (Baghdad) நகரில் நடந்ததாகக் கூறப்படும் கதை இது. அரண்மனைக் கூரைமீது நடுநிசியில் யாரோ ஒருவர் நடந்துசெல்லும் சப்தம் அரசனுக்குக் கேட்டது. யார் அங்கே? என்றார் அரசன். எதுவித அச்சமுமில்லாமல் கூரையிலிருந்து பதில் வந்தது. 'சத்தம் போடாதே! மற்றவர்கள் நித்திரையைக் குழப்பாதே! நான் என் ஒட்டகத்தைத் தேடுகிறேன்.' அரசனுக்கு இந்தப் பதில் வியப்பைக் கொடுத்தது. காவலர்களை அழைத்தார். மர்ம மனிதன் ஒருவர் நடமாடுகிறார், அவரைப் பிடித்து வாருங்கள் என்றார். காவலர்கள் கூரையிலும், நாலா திசையிலும் தேடினார்கள், யாரையும் காணவில்லை. மறுநாள் காலை அரண்மனை வாயிலில் காவலர்களுடன் ஒருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவர் அரண்மனைக்குள் நுழைய முனைந்தார். அவரைக் காவலர்கள் தடுத்தபோது 'நீங்கள் யார்? நான் என் ஒட்டகக் கொட்டகைக்குப் போகிறேன்' என்றார். காவலர்கள் 'இது அரண்மனை, ஒட்டகக் கொட்டகை அல்ல' என்றனர். அந்த மனிதன் கூறினார் 'இந்த ஒட்டகக் கொட்டகையின் காவலன் நீ' என்னைத் தடுக்காதே. இந்த வாக்குவாதம் அரசனின் காதில் கேட்டது. அரசன் உடனடியாக இந்தக் குரலை அடையாளங் கண்டுகொண்டார். முதல் நாள் இரவு அரண்மனைக் கூரையில் கேட்ட குரலும் இந்தக் குரல் தான் என்பதை உணர்ந்துகொண்ட அரசன் அந்த மனிதரை உள்ளே வரவிடும்படி உத்தரவிட்டார்.

**அரசன் :** அவரைப் பார்த்து "நீ ஒரு வித்தியாசமான ஆளாக இருக்கிறாய், உனது குரலை நான் அடையாளம் கண்டு கொண்டேன். நேற்று இரவு அரண்மனைக் கூரையில் உன் ஒட்டகத்தைத் தேடினாய். இன்று என் அரண்மனையை ஒட்டகக் கொட்டகை என்கிறாய்" என்றார். இதைக் கேட்ட அந்த மனிதர் கடகடவென பலத்த சத்தத்துடன் சிரித்தார்.

**அந்த மனிதர் :** அரசனைப் பார்த்து "நீ கொஞ்சம் விளக்கம் உள்ளவன் போல் தெரிகிறது. நேற்று இரவு கூரையில் ஒட்டகம் தேடியவன் நான்தான். எனக்குப் பைத்தியம் என்று நினையாதே. நீ இந்த தங்கக் கதிரையில் இருந்து பேரானந்தம் தேடலாம் என்றால், போரில் மனிதர்களைக் கொலை

செய்துவிட்டு தெய்வ வழிபாட்டில் கடவுளைத் தேடலாம் என்றால், உன் கூரையில் நான் என் ஒட்டகத்தை ஏன் தேடக்கூடாது' என்று கேட்டார். மேலும் அந்த மனிதர் தொடர்ந்தார். என் செயல்கள் உனக்கு முரண்பாடாகத் தெரிகின்றனவென்றால் உன் செயல்களும் எனக்கு முரண்பாடாகத்தான் தெரிகின்றன. எப்படி இந்த இடத்தை உன் வீடு என்று நீ சொல்லலாம். நான் முன்பும் இங்கு வந்திருக்கிறேன் அப்போது வயதான ஒருவர் இந்த சிம்மாசனத்தில் இருந்தார். அவர் இதைத் தன்வீடு என்றார்.

**அரசன் :** அவர் எனது தந்தை. அவர் இறந்துவிட்டார்.

அந்த மனிதர் தொடர்ந்தார். அதற்கு முன்பும் இங்கு வந்துள்ளேன், அப்போது வேறு ஒரு வயதானவர் இருந்தாரே! அவர் இது தனது வீடு என்றாரே!

**அரசன் :** நீங்கள் கூறுவது சரி, அவர் எனது தாத்தா. அவர் இறந்துவிட்டார்.

**அந்த மனிதர் :** இப்படி ஒவ்வொருவரும் இது தங்கள் வீடு என்றுதான் சொன்னார்கள் பின்பு இறந்துவிட்டார்கள். இப்போது நீயும் இது உன் வீடு என்கிறாயே! அப்படியானால் நீ எப்போது இறக்கப்போகிறாய்? இது தங்கள் வீடு என்று சொன்னவர்கள் இப்போது சமாதியில், நான் சிறிது காலம் பிந்தி வந்திருந்தால்தால் இந்தக் கதிரையில் வேறு ஒருவர் இருந்து இது தன்வீடு என்பார். அப்போது நீ சமாதியில் இருப்பாய். அப்படியானால் இது எப்படியான வீடு? அப்படியானால் இது ஒட்டகக் கொட்டகை போன்றதுதானே! வருவதும், தங்குவதும், போவதும் ஒட்டகக் கொட்டகை தானே என்றார்.

**அரசன் :** திகைப்புற்றார், அமைதியானார்.

**அந்த மனிதர் :** "உன்னுடைய வீடு இது அல்ல, சமாதிதான் உனது உண்மையான வீடு. அங்கே போய்ப் பார்! உனது தாத்தா, உனது தந்தை, நீயும் அந்த வீட்டுக்குத்தான் போகப் போகிறாய். அந்த இடத்தை உனது வீடு என்று சொல். இந்த அரண்மனையை அப்படிச் சொல்லாதே! இது தங்கிப்போகும் ஒரு கொட்டகை என்றார்.

**அரசன் :** (சிம்மாசனத்திலிருந்து எழுந்தான்.) “தவறான அபிப்பிராயத்தில் வாழ்கிறேன். உங்களுடன் கடுமையாகப் பேசியதற்கு என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நீங்கள் இங்கு இருங்கள், நான் வீட்டைத் தேடப்போகிறேன். இது உண்மையான வீடல்ல. இது தங்கிப்போகும் கொட்டகைதான் என்பதை எனக்குத் தெரியப்படுத்தி என் கண்ணைத் திறந்துவிட்டீர்கள்” என்று கூறி அரச பதவியைத் துறந்து துறவியாகிவிட்டார்.

அரசபதவி துறந்து ஆண்டியாக நின்ற அரசனிடம் அந்த வயதானவர் ‘மரணம் ஒரு மாயை, வாழ்வு ஒரு மாயை, முதலில் நீ உனக்குள் சென்று மரணத்துக்கப்பால் உள்ளதை அறி. அப்போது நீ உன் வீட்டை கண்டு பிடித்துவிடுவாய்’ என்றார். அரசனான ஆண்டி, தன்னை ஆண்டியாக்கிய ஆண்டியுடன் தன் வீட்டைத் தேடிப் புறப்பட்டார்.

## அத்தியாயம் 10

## ஜடாதரமுனிவர் : நளன் - தமயந்திக்கிடையில் அன்னமாகக் காதல் தூது சென்றாரா?





நளன் - தமயந்திக்கிடையில் காதல் தூது சென்ற அந்த அன்னப் பறவை தன் முற்பிறவியில் முனிவராக இருந்த ஜடாதரர் எனக் கதைகள் கூறுகின்றன.

காட்டுக்குள் வசித்துக்கொண்டிருந்த ஜடாதரர் என்ற முனிவருக்குக் கணவன் மனைவியான ஜாகாவா, ஜாருனி இருவரும் பணிவிடை செய்தனர். இவர்கள் இருவரும் அன்னியோன்னியமாக வாழ்ந்தனர். முனிவரின் குடிசைக்கு ஜாகாவா காவல் காத்துக்கொண்டிருந்தபோது காட்டு மிருகங்களால் தாக்குண்டு இறந்துவிட்டார். இறந்த உடலைக் கண்டதும் மனைவியும் உயிர் துறந்துவிட்டார். அதைப் பார்த்த முனிவரும் உயிர் துறந்தார். அவர்கள் மறுபிறப்பில் நளன் தமயந்தியாகப் பிறந்து காதலர்களாக வாழ்ந்தனர் என அவர்கள் பற்றிய கதைகள் கூறுகின்றன. முனிவர் அன்னமாகப் பிறந்து இக்காதலர்களை கணவன் - மனைவியாக இணைத்து வைத்து பிராயச்சித்தம் தேடிக்கொண்டார் என இக்கதை மேலும் கூறுகிறது.

## அத்தியாயம் 11

# இறப்பதும் உயிர்ப்பதும் இவரது பொழுதுபோக்கு

**'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.'**

*– திருக்குறள்*

உலகில் மனிதன் இறப்பது தூங்குவதற்கு ஒப்பாகும். மறுபடியும் அவன் பிறவி எடுப்பது தூங்கி விழித்து எழுந்த நிலையோடு ஒத்திருக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

பிறர் இறப்பதைப் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் உண்மையில் மரணத்தைப் பார்த்திருக்கிறீர்களா? மருத்துவ விஞ்ஞானம் சுவாசம் நின்றதைப் பார்க்கிறது. நாடித்துடிப்பு இல்லாமல் போனதைப் பார்க்கிறது, இருதயத் துடிப்பு ஓய்ந்ததைப் பார்க்கிறது. இந்த நிலையை 'மரணம்' என அறிவிக்கிறது.

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்குள் உள்ள காஷ்மீர் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 135 வயதையுடைய தோட்டத்திலும், வயலிலும், கழனியிலும் வேலைசெய்யும் ஒரு தொழிலாளியின் அனுபவத்தைப் பாருங்கள். 1987ஆம் ஆண்டு ஆனி மாதப் பிற்பகுதியில் இவர் மூன்றாவது தடவையாக அந்த வயதில் இறந்தார். உறவினருக்குச் சந்தேகம். ஏனெனில் இதற்கு முன்பும் இப்படி இரண்டு தடவை இறந்திருக்கிறார். மூன்று டாக்டர்கள் பரிசோதனை செய்து இறந்ததை உறுதிப்படுத்தி னார்கள். மரணச் சான்றிதழ் வழங்கினார்கள். இறந்த மனிதன் கண் விழித்தார், சிரித்தார். தான் முன்பு இரண்டு தடவை

தந்திரம் பண்ணியது போல் இந்த முறையும் தந்திரம் செய்ததாகக் கூறினார். அடுத்த தடவை நான் நிச்சயமாக இறப்பேன், தந்திரம் செய்யமாட்டேன் என நம்பிக்கையாகக் கூறினார்.

இந்தப் பிரதேசத்தில் நீண்ட காலம் உயிர் வாழ்பவர்கள் இருக்கிறார்கள். இப்பிரதேசத்தின் சராசரி வயது 120 வருடங்கள் ஆகும். 150 வயதைக் கடந்தவர்களும் அப்பிரதேசத்தில் வாழ்ந்தார்கள். சிலர் இன்றும் வாழலாம். ஆங்கு 180 வயதைக் கடந்த ஒரு சிலர் இளம் வயதினர் போல் சுறுசுறுப்பாக தோட்டங்களிலும் வயல்களிலும் வேலை செய்கிறார்கள் என ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே போல் தென் ரக்ஷ்யாவின் மலைப் பிரதேசத்தில் உள்ள அப்க்காசியா (Abkhasia) என்ற இடத்தில் வாழ்பவர்கள் சராசரி வயது 125 எனவும் அங்கே 180, 190 வயதான இளஞர்களை தான் சந்தித்ததாகவும் அவர்கள் வயல்களிலும் தோட்டங்களிலும் சுறுசுறுப்பாக வேலை செய்வதாகவும் அமெரிக்க ஹாவாட் மருத்துவக் கல்லூரி (Harvard Medical School Professor) பேராசிரியர் டாக்டர் அலெக்சாண்டர் லீர் (Dr. Alexander Lear) நேரடியாகச் சென்று அங்கு தான் கண்டறிந்தவற்றையும், தனது அனுபவங்களையும் 1972 National Geography சஞ்சிகையில் விளக்கப் படங்களுடன் கட்டுரையாக்கினார். 'முதுமையில் வாலிபம்' (Youth in Old Age) என்ற ஒரு நூலையும் எழுதினார்.

காஷ்மீரில் மூன்று தடவையும் இறந்ததாக டாக்டர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இந்தப் பொழுதுபோக்காக இறப்பதும் உயிர்ப்பதுமான மனிதரை பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். நீங்கள் எப்படி இதைச் செய்தீர்கள்? எனக் கேட்டனர். அவர் கூறினார் “நான் என் உடம்பல்ல நான் அதை நன்கு அறிவேன், நான் எனது இருதயமல்ல நான் அதை நன்கு அறிவேன், நான் இதற்கு அப்பாற்பட்டவன். நான் மெதுவாக நகர்ந்து உடலுக்கு அப்பால் செல்கிறேன் அப்போது இருதயம் செயல் இழக்கிறது, நாடி நிற்கிறது, சுவாசம் மறைகிறது. சிறிது நேரத்தால் நான் மீண்டும் நழுவி, போன பாதையில் என் உடலுக்குள் பிரவேசிக்கிறேன். இரத்தம் உடலுக்குள் ஓடத் தொடங்குகிறது. நாடி துடிக்கத் தொடங்குகிறது, இருதயம்

அடிக்கத் தொடங்குகிறது" என்றார். இவர் ஒரு யோகி இல்லை. இவர் ஒரு சாதாரண விவசாயி. இவர் எந்தவித ஆன்மிகப் பயிற்சிகளையும் அறியாதவர்.

இவர் ஏழுவயதுச் சிறுவனாக இருந்தபோது இவர் தற்செயலாக ஒரு சூஃபி (Sufi) ஞானியைப் பார்த்தார். அந்த ஞானி இவருக்குக் கூறினார் "மரணம் என்று ஒன்று இல்லை, அது ஒரு பொய்த்தோற்றம்." அப்போது சூது, வாது, பொய் எதுவும் தெரியாத பாலகனான இவர் அதை முழுமையாக நம்பினார். சூஃபி ஞானி அந்தப் பாலகனுக்கு கூறினார் "உடம்பிலிருந்து நழுவிச் செல்வதற்கு வழிமுறைகள் இருக்கின்றன. உடம்புக்குள் உள்நோக்கிச் சென்று உன் உடலைப் பார், உனக்கும் உன் உடலுக்குமிடையில் 'வெற்றிடம்' ஏற்படும். அந்த வெற்றிடம் அதிகரித்துக் கொண்டேபோகும் அப்போது நீ உன் உடலிலிருந்து வெளியேறிவிட்டாய். அதே பாதையால் மீண்டும் பிரவேசி. நான்தான் உடல், நான்தான் மனம், நான்தான் சுவாசம், நான்தான் இதயத் துடிப்பு என்று கூறு. அந்த வெற்றிடம், அந்த இடைவெளி மறைந்துவிடும், நீ உடலாகிவிடுவாய், மரணம் என்பது பொய்" என்று விளக்கினார் அந்த ஞானி. சிறுவன் அதை குழந்தைப் பிள்ளைத்தனமாக அப்படியே முழுமையாக நம்பினான். அவன் மனது அதைத் தர்க்க விவாதமாக்கவில்லை, அதை அவன் மனம் ஏற்றுக்கொண்டது.

**உலக அனைத்து மதங்களும் வணங்குவது எப்படி என்று போதித்துக்கொண்டு இருக்காமல் ஒருவர் தனக்குள் மறைந்திருக்கும் மரணமற்ற நிலையைக் காண உதவ வேண்டும்.**

மரணம் உடலின் ஒரு 'Process' என்பதை பயமற்று ஏற்க மதம் உதவவேண்டும். ஆன்மீகவாதிகள் மரணத்தைப் பயமாக்கி ஆதாயம் தேடக்கூடாது. மரணபயமே இரத்த அழுத்தம், மனக்குழப்பம், விரக்திகளுக்கு ஒரு காரணமாகிறது. மரணத்துக்கப்பால் மக்களைக் கொண்டு செல்லவேண்டியது ஆன்மிகத்தின் முக்கிய பணியும், ஆன்மிகவாதிகளின் முக்கியக் கடமையுமாகும். மரணபீதியை ஏற்படுத்துவது மானிடத் துரோகமாகும். பள்ளிகளில், பாடசலைகளில், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் மரணம் உடலின் ஒரு Process

என்பதையும், மரணத்துக்கப்பால் உள்ளதைப் புகட்டும் கல்வியும் தேவை. கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், கதைகள், கவிதைகள், நாடகங்கள், சினிமாக்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

திபெத்தில் ஏராளமான யோகிகள், ஞானிகள் மக்களுக்கு மரணத்தைப்பற்றிய விழிப்புணர்வைக் கொடுத்திருக்கிறார்கள். மரணத்துக்கு அப்பால் மக்களை அழைத்துச் சென்றிருக் கிறார்கள். உலகிலே இத்தகைய பணிகளில் ஈடுபட்டது திபெத்திய தந்திரா ஞானிகள் மாத்திரமே. அவர்கள் மரணத்தை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப் பழக்கினார்கள். மரணத்துக்கு அப்பால் தங்களுக்கு ஏற்பட்ட சொந்த அனுபவங்களைக் கூறினார்கள். மரண பயத்தை நீக்கி வாழ வழிவகுத்தார்கள். மரணத்தைத் மங்களமாக்கிவிட்டார்கள் அவர்கள். மரணத்தை நோக்கிய விழிப்புணர்வு உலகில் வளர வேண்டும்.

## அத்தியாயம் 12

# ஆங்கிலக் கவிகளின் பார்வையில் இறப்புக்கு அப்பால்

உலக மகா கவிஞர்களான வோட்ஸ்வேத் (Wordsworth), செலி (Shelly), சேக்ஸ்பியர் (Shakespeare) போன்றவர்களும் இறப்புக்கப்பால் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.



வோட்ஸ்வேர்த் (W. Wordsworth) 'ஆத்மா எங்கே சென்று மீண்டும் வருகிறது?' என்கிறார்

The soul that rises with us , our life's star,
Hath had elsewhere it's setting
And cometh from a far

- William Wordsworth

"மரணம் என்றால் என்ன? நாம் இல்லாதது போன்ற ஒரு நிலை, பின்பு முந்தியது போல் மீண்டும் வாழ்வுடன், என்ற கருத்துட்பட செலி (B. Shelly) கூறுகிறார்.



Alas; what is life, what is death,
What are we?
That when the ship sinks we no
Longer may be
What to see thee no more and to feel
Thee no more
To be after life what have been before

- Percy Shelley

சேக்ஸ்பியர் தன் ஹம்லட் (Hamlet) என்ற நாடகத்தில் ஒரு இடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். கதாநாயகன் ஹம்லட் - தன்னைக் கொலை செய்தது தன் சகோதரன் குளோடியஸ் என தன் மகனிடம் ஆவியாக வந்து கூறுகிறார். ஆவி அவரைப் பழிக்குப்பழி வாங்கு என்கிறது. தன் தந்தையைக் கொலை செய்தது யார் என்பதை மகன் அறிந்துகொள்கிறார்.

குளோடியஸ் (Claudius) தனது சகோதரனான அரசன் ஹம்லட்க்கு (Hamlet) விஷமிட்டு கொலைசெய்து, டென்மார்க்கின் (Denmark) அரசனாகத் தான் முடிசூட்டிக் கொண்டான். தனது அரச பதவிக்குத் துணையாக ஹம்லட்டின் மனைவி ஹேற்றூவை (Gertrude) திருமணம் செய்து கொண்டான். இறந்த அரசன் ஹம்லட் ஆவியாக வந்து (Ghost), தனது மகன் இளவரசன் ஹம்லட் முன்தோன்றி தனக்கு விஷமிட்டு கொலைசெய்துவிட்டு, குளோடியஸ் முடிசூட்டிக் கொண்டான் என்ற தகவலைத் தெரிவிக்கிறது.

"........................ but Know, thou noble youth,
The Serpent that did sting thy Fathers Life,
Now wears his Crown"



William Shakespeare

மகன் ஹம்லட் அவனைப் பழிவாங்க வேண்டும் எனவும் ஆவியாக இருந்த தந்தை கேட்டுக்கொண்டார். தன் தந்தையைக் கொலைசெய்தது தன் தந்தையின் சகோதரன் குளோடியஸ் என்ற உண்மையை இளவரசன் ஹம்லட் தெரிந்துகொண்டான். ஆவியாக இருப்பது தனது தந்தைதானா என்பதைப் பலவிதமான பரிசோதனைகள் மூலம் உறுதிசெய்துகொண்டு, தந்தையின் வேண்டுகோளை நிறைவுசெய்தான்.

இந்த நாடகத்தில் ஹம்லட்டின் ஆவியாக (Ghost), ஹம்லட் (Hamlet) நாடகத்தை எழுதிய வில்லியம்ஸ் சேக்ஸ்பியர் (William Shakespeare) அவர்கள் தானே நடித்துக்கொண்டார்.

## அத்தியாயம் 13

# உடல் இறக்கும் 'நான்' பிறப்பேன்

எங்களை யாராவது தோற்றுவித்தார்களா? யார்? ஏன் தோற்றுவித்தார்கள்? கடவுள் எங்களைத் தோற்றுவித்தால் ஏன் மரணம் சம்பவிக்கிறது? மரணம் ஒரு தண்டனையா? தண்டனை என்றால் குழந்தைகளுக்கு ஏன் இந்தத் தண்டனை? அவர்கள் எதுவும் அறியாதவர்கள்! என்ன தீங்கும் நினைக்காதவர்கள்! அக்குழந்தைகள் உலகத்தையே இன்னும் அறியவில்லை! அம்மா அப்பா அவர்களைக் கூடவே இன்னும் தெரிந்துகொள்ளவில்லை! கொடிய நோய், வறுமை, பசி குழந்தைகளைப் பாதித்து இறக்கின்றன! ஏன் இந்த செல்வந்த - ஏழை, புத்திசாலிகள் - புத்தி குறைந்தவர்கள் என்ற வித்தியாசம்? எல்லாம் கடவுள் செயலே என்றால் அந்தக் கடவுள் எப்படிப்பட்டவர்? கொள்கையற்றவரா? நியாயம் நீதி இல்லாதவரா? தான் நினைத்தபடியே செயற்படும் சர்வாதிகாரியா? சில வேளைகளில் எல்லா உடல் உறுப்புக்களும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் ஆரோக்கியமாக உள்ளவர் இறந்துவிடுகிறார். அவரது வாழ்வு முடிந்துவிட்டது என்கின்றனர். வாழ்வு என்றால் என்ன? சிலவேளைகளில் மனிதன் சுயநினைவு இழந்து மயக்கமான நிலையில் வருடக் கணக்காகப் படுக்கையில் இருப்பார், இதுவா?

வாழ்க்கையின் வரைவிலக்கணம் என்ன? அதற்கு வரைவிலக்கணம் கொடுக்க முடியாதுபோனால் மரணத்துக்கு எப்படி வரைவிலக்கணம் கொடுக்க முடியும்? சிலர் கூறுகிறார்கள் உடல் இறந்துவிட்டது 'ஆவி' (Spirit) இருக்கிறது என்கின்றனர், வேறு சிலர் இறப்பு உடலுக்குத்தான் 'ஆன்மா'வுக்கு (Soul) அல்ல என்கின்றனர். 'சுயம்' (Self)

உண்மை, அது அழியாது என்கின்றனர். மரணம் உடலுக்கு மாத்திரம் பிரக்ஞை (Consciousness) அழியாது தொடரும் என்கின்றனர். எனவே 'ஆவி', 'ஆன்மா', 'சுயம்', 'நான்', 'பிரக்ஞை' இவற்றுக்கு என்றும் இறப்பில்லை. இவை நித்தியமானவை என்கின்றனர் யோகிகள், ஞானிகள்.

'பிறந்தவர்கள் எல்லோரும் இறப்பார்கள், இறந்தவர்கள் மீண்டும் பிறப்பார்கள்' என்று பகவத்கீதை சொல்கிறது. புதிய ஏற்பாடு விவிலியத்தில் எலியாவின் (Elijah) மறுபிறப்பு ஜோான் (John) என்று கூறப்படுகிறது. மறுபிறப்பு இல்லை என்பவர்கள் இறந்தவர்களது சமாதிக்கு, முக்கிய தினங்களிற் சென்று 'மலர்கள்' வைக்கின்றனர். யாருக்கு அந்த 'மலர்கள்' வைக்கப் படுகின்றன? யாருக்கு அந்த 'மலர்களை'க் காணிக்கை யாக்குகிறார்கள்? சற்று சிந்திப்போமானால், அதாவது ஆன்மா, சுயம், ஆவி என்று எதுவும் இல்லை என்றால், உடல் இறந்தால் அத்தோடு எல்லாம் அழிந்துவிட்டது என்றால், பின்பு ஏன் அந்த 'மலர்களின்' காணிக்கை? மறுபிறப்பை மறுக்கிற மதங்கள் ஒருவர் இறந்தபின் 'தீர்ப்பு நாளில்' கடவுளுக்கு முன் செல்ல வேண்டும் என்கின்றனர். இறந்தவர்கள் நல்லவர்களாக இருந்தால் 'மேலோகம்', மற்றவர்கள் 'நரகலோகம்' செல்வார்கள் என்று நம்புகிறார்கள். உடல் நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டு அழிந்து விட்டது. பின்பு தீர்ப்பு நாளுக்கு 'எது' செல்கிறது?

சுவாமி லோகேஸ்வரானந்தா கூறுகிறார்: 'உடலிலிருந்து ஆவி பிரிந்தவுடன் சிறிது காலத்துக்கு அந்த ஆவியானது, தான் வாழ்ந்த சூழலில் சஞ்சரிக்கும், குறிப்பாக இறந்த இடத்தில் சுற்றித்திரியும்' என்கிறார்.

ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்தார்: 'தனக்குத் தெரிந்த பெண் இறந்து, அவரது உடல் தகனம் செய்ய எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அப்பெண்ணுக்கு ஒரே ஒரு பையன், அவனுக்கு வயது 10. அந்த மகன் வீட்டிலிருந்து அம்மா, அம்மா என்று அழுதுகொண்டிருந்தான்.

மகன் முன் தாய் தோன்றி நான் அம்மா சொல்கிறேன் கவனமாகப் படி' என்றார். பையன் உடனே எழுந்து 'அம்மா வந்துவிட்டார், அம்மா வந்துவிட்டார்' என்று கூறிக்கொண்டு அறைக்குள் ஓடித் திரிந்தான். சத்தம் கேட்டதும் அங்கிருந்த

சுற்றத்தார் அறைக்குள் ஓடினர். அதற்குள் தாய் மறைந்து விட்டார்.

'நல்லவர்களது ஆவி உதவியானது, தீயவர்களது ஆவி தீங்கானது' என்கிறார் லோகேஸ்வரானந்தா சுவாமிகள்.

**ஒரு சம்பவம்:**

சுவாமி லோகேஸ்வரானந்தா அவர்கள், ஆன்மிக உரைக்காக ஒரு நகரம் சென்று, அங்கு தான் தங்கியிருக்கும் அறையில் கண்களை மூடித் தியானம் செய்துகொண்டிருந்தார். அப்போது அறைக்கதவு, ஜன்னல் எல்லாம் மூடப்பட்டிருந்தன. தன் முன்னிலையில் சுமார் 8 வயது, 10 வயது மதிக்கக்கூடிய இரு சிறுவர்கள் வந்து தன்னுடன் குறும்பு செய்துகொண்டே யிருந்தார்கள். மறுநாள் அந்த இரு சிறுவர்களைப் பற்றியும், தன்னை உபசரிக்கும் அந்தக் குடும்பத்திடம் விசாரித்தார், அவர்கள் அச்சிறுவர்களின் படத்தைக் காட்டினர். உடனே தான் அந்த இரு சிறுவர்களையும் அடையாளம் கண்டுகொண்டேன் என்கிறார். அவர்கள் கூறியதாவது 'இந்தச் சிறுவர்கள் இருவரும் சகோதரர்கள், போன வாரம் வீட்டுக்குப்பின் உள்ள குளத்தில் மூழ்கி இறந்துவிட்டனர். இவ்வாறு அவர் தன் அனுபவத்தை Life After Death என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

கல்கத்தாவில் நான்கு வயதுப் பையன் தபிலா (Tabla) வாத்தியம் மிக அனுபவப்பட்ட கலைஞர் போல இசைத்திருந்தான். தந்தை அச்சிறுபையனைக் கையில் தூக்கிக் கொண்டு மேடைக்குச் சென்றார். ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்த இப் பையனது பெற்றோருக்கோ, உறவினர்களுக்கோ இசையைப் பற்றிய அறிவு இல்லை. தபிலாவை அவர்கள் பார்த்ததில்லை. அந்த ஊரிலிருக்கும் ஒருவருக்கு தபிலா வாசிக்க ஓரளவு தெரியும். அதைப் பார்த்த சிறுவன் தபிலாவில் ஆர்வம் காட்டியதைத் தொடர்ந்து அவர் அப்பையனுக்கு ஆசிரியரானார். ஆனால் குருவை விஞ்சிய சீடன் ஆகிவிட்டார். அப்பையனின் இந்த இசைஞானம் முற்பிறப்பின் தொடர்ச்சி என்கிறார் அந்த நூலில் சுவாமி அவர்கள்.

அமெரிக்காவிலுள்ள வேர்ஜினியா University of Virginia பல்கலைக் கழகத்தில் Para Psychology பேராசிரியர் இஜன்



ஸ்ரீவன்சன் (Ian Stevenson) அவர்கள் தத்துவங்களையோ மதக் கோட்பாடுகளையோ கருத்திற்கொள்வதில்லை. முழுக்க முழுக்க உண்மை சம்பந்தப்பட்ட விடயங்களை (Fact) மையமாக வைத்தே ஆய்வுகளை நடத்து கிறார். அவரது ஆய்வுகளில் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். 3 வயதுச் சிறுமி ஒருவர் தான் முற்பிறப்பில் ஆணாக இருந்தேன் எனக் கூறிக்கொண்டேயிருந்தார். ஆறு வயதானபோது தனது முற்பிறப்பில் வசித்த இடத்தைக் கூறியதால் ஒரு குழு அச்சிறுமியுடன் சென்றது. அச் சிறுமியால் சரியான வீட்டைக் காட்ட முடியவில்லை. மேலும் சிறுமி வற்புறுத்தியதால் இரண்டாவது தடவை சென்றது அக்குழு, அப்பொழுது அவர்கள் சரியான வீட்டைச் சென்று அடைந்ததுமல்லாமல் அங்குள்ளவர்களையும் அச்சிறுமி அடையாளம் காட்டியது. அங்கு வந்த சிலரை உறவுமுறை சொல்லியும், பெயரைக் கூறியும் உரையாடியது அச்சிறுமி.

இதுபோன்ற பல சம்பவங்கள் உலகம் முழுவவும் நடந்து கொண்டிருக்கிறது. விவரங்களைச் சரி, பிழை பார்ப்பதும் மீண்டும், மீண்டும் அவற்றை சோதித்துப் பார்த்தலும், நல்ல தெளிவான நேர்மையான அணுகுமுறை என்கிறார் பேராசிரியர் அவர்கள். அவர் மேலும் கூறியதாவது இதுபோன்ற அணுகுமுறைகள் அவசியம் என்பதே!!

## அத்தியாயம் 14

# உயிர் எங்கே செல்கிறது?

மரணத்துக்குப் பின் மனிதன் போவது எங்கே? என்னும் கேள்வி மனிதனை எப்போதும் திகைக்கச் செய்துவருகிறது.

ஓம் த்ரயம்பகம் யஜாமஹேஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்

இது மரணத்திலிருந்து விடுவித்து அழிவற்ற தன்மையை அருள்வாயாக என்று கேட்கும் மோட்ச மந்திரங்களில் ஒன்று. எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையையும் மரண பயமானது இருளடையச் செய்கிறது. மரணத்தை அச்சமின்றியும் ஆனந்தத்தோடும் ஏற்கிறார்கள் ஞானிகள்.

மரணத்துக்குப் பின் என்ன நடக்கிறது? ஆன்மாவுக்கு என்ன நேர்கிறது? அது எங்கே செல்கிறது? அதற்கு இன்னும் 'இருப்பு' (being) இருக்கிறதா? இந்தக் கேள்விகள் உலகத்திலுள்ள எல்லோரிடமும் உள்ள பொதுக் கேள்விகள் தான். ஆயிரக்கணக்கான வருடங்களாக ஆயிரக்கணக்கானோர் விடை காண முயற்சி செய்யும் வினா இது. இந்தக் கேள்வி ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் எவ்வாறு எழுந்ததோ, அதேபோல் அதே கேள்வி எல்லா நாட்டு மக்களிடையேயும் இன்றும் எழுகிறது. அதே கேள்வி இன்றும் விவாதிக்கப் படுகிறது. எதிர் காலத்திலும் விவாதிக்கப்படும். விஞ்ஞானம் வாய் திறக்கும்வரை சந்தேகங்கள், கேள்விகள் எழும். புராதன காலத்திலிருந்தே தத்துவஞானிகள், ஞானிகள், மகான்கள், யோகிகள், நவீனகால சிந்தனையாளர்கள், சுவாமிகள், மனோதத்துவ ஆய்வாளர்கள், தீர்க்கதரிசிகள் ஆகிய யாவரும் இந்தப் பெரிய புதிரை விடுவிக்க தங்களால் முடிந்தவரையில்

முயன்றிருக்கிறார்கள். இந்த மர்மத்தை விடுவிக்க விஞ்ஞானம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது. பிறந்தவர்கள் இறக்கத் தொடங்குகிறார்கள், இறப்பவர் உயிர் வாழத் தொடங்கு கிறார்கள். பிறப்பும் இறப்பும் இவ்வுலகில் உட்செல்லும், வெளிச்செல்லும் கதவுகளே.

**ஆன்மாவை (Soul) எப்படி விளக்கலாம்?**



சுவாமி சிவானந்தா அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்: "மரணம் ஆளுமையை (Personality) அழித்துவிடுகிறது, ஆயினும் அது தனித்துவத் தன்மையை (Individuality) அழிக்கமுடியாது. தனித்துவத் தன்மை தனியானது, தனிப்பட்ட 'இருப்பு'ள்ளது. அது சரீரத்துக்கு அப்பாற் பட்டது. அது ஆளுமையுடன் தொடர் பில்லாதது. அது 'நான்' என்னும் எண்ணமாகிய ஒரே எண்ணத்தின் தொடர்ச்சி. மற்ற எல்லா எண்ணங்களும் இந்த நான் என்பதைச் சூழ்ந்திருக்கின்றன. 'நான்' சிறுவனாயிருந்தேன், 'நான்' பெரியவனானேன், 'நான்' ஒரு ஆசிரியர், 'நான்' ஒரு எழுத்தாளன், 'நான்' பேசினேன், 'நான்' தூங்கினேன், 'நான்' தமிழன், 'நான்' இலங்கையன், 'நான்' பல நாடுகளுக்குச் சென்றேன், 'நான்' கனடாவில் வசிக்கிறேன். ஒரே 'நான்' என்பது இந்த தேகத்தில் உறைபவன். குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், வயோதிகப் பருவம் எல்லாப் பருவத்திலும், எல்லாக் காலத்திலும் 'நான்' என்பது ஒன்றேதான். கனவிலும் 'நான்' என்ற உணர்ச்சி இருந்தே தீருகிறது. மரணத்துக்குப் பின்பும் 'நான்' என்ற உணர்ச்சி கொண்டு செல்லப்படுகிறது.

சுயப்பிரக்ஞை, சுயஞானம், சுயஇருப்பு, சுயஅறிவு, தன்னையுணர்ந்து பிறரையுமுணர்தல், ஒவ்வொருவருக்குள்ளும் ஏற்படும் 'நான்' என்ற உணர்வில், ஆன்மா மறைந்திருக்கிறது என விளங்கிக்கொள்ளலாம்" என்கிறார்.

**தொடர் பிறப்பு:**

'பூமியில் திரும்பத் திரும்பப் பிறந்துகொண்டேயிருப்பாய்' என்கிறார் வசிட்ட மகரிஷி. இவர் ஞான திருக்ஷ்டியால் மரணச்

சம்பவத்தை நேர்முகமாக அறிந்து தமது சொந்த அனுபவங்களைக்கொண்டு மரணத்தைப்பற்றி விளக்கியதாக அவரைப் பற்றிய நூல்கள் கூறுகின்றன. தொடர் பிறப்பையே 'எழு பிறப்பு' என்றனர். அதாவது மீண்டும் மீண்டும் பிறப்பே 'எழு' என்றனர்.

மைத்ரே உபநிடதம் பிறப்புக்களைப் பற்றிக் கூறுகிறது. மறுஜென்மக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 'மறுபிறப்பு' இருக்கிறதா என்ற கேள்விக்கு மறுஜென்மக் கோட்பாட்டைப் பார்ப்போம்: எமர்ஸன், பிளேட்டோ, பைதகோரஸ் ஆகியோர்களுக்கு மறுஜென்மக் கோட்பாட்டில் பூரண நம்பிக்கை உண்டு. இந்து மதத்துக்கும், பௌத்த மதத்துக்கும் அடிப்படையே மறுஜென்மக் கோட்பாடுதான். கிரேக்க தத்துவ அறிஞர்கள் அதைத் தங்கள் தத்துவஞானத்தின் அஸ்திவாரக் கல்லாகக் கொண்டனர். மனிதர்கள் இந்தப் பூலோக வாழ்க்கையில் பற்றுக் கொண்டுள்ளனர். வாழ்க்கையில் ஏற்படும் இப்பற்றுதல், முன் அனுபவம் வாழ்க்கைக்கு உண்டு என்பதை நிரூபிக்கிறது. தத்துவஞானி பிளேட்டோ 'நமது அறிவு யாவும் நாம் முற்பிறப்பில் அறிந்துள்ளவற்றின் ஞாபகம்தான்' எனக் கூறுகிறார்.

சிறு குழந்தைகூட கோபம், பயம், சந்தோஷம், துன்பம் ஆகியவற்றை வெளிக்காட்டிக்கொள்கிறது. எங்கேயிருந்து இவற்றை அறிந்தது? பிறந்த பின்பு யாரும் இதைக் கற்றுக் கொடுத்தார்களா? இல்லவே இல்லை. எப்படி அக்குணங்கள் ஏற்பட்டது? என்பது நியாயமான கேள்வி அல்லவா! தொடர் பிறப்பையல்லவா இது கோடிட்டுக் காட்டுகிறது. எனவே முன் ஜன்மத்தில் ஜீவன் இருந்திருக்கிறது என்பதைத் தெளிவாக உய்த்துணரலாம். சீக்கிய மதத்தை ஆரம்பித்த ஞானி குருநானக் சிறுபிள்ளையாக இருந்தபோது 'ஓம்' இன் கருத்தை விளக்குமாறு தனது ஆசிரியரிடம் கேட்டாராம். புத்தர் பல ஜன்மங்களில் அனுபவமடைந்து பிறிதொரு பிறப்பில்தான் கௌதம புத்தரானார் என்று மறுபிறப்புக் கோட்பாட்டாளர்கள் நிறுவுகின்றனர்.

'ஆன்மா நித்தியமானது, அழிவற்றது உடல் ஒரு தடவை இறந்தால் மறுதடவை பிறக்கிறது. மனித ஆன்மா சில

வேளைகளில் மிருக வாழ்க்கையிலும் புகுந்துவிடுகிறது. ஒரு காலத்தில் மனிதனாக இருந்த ஆன்மா மிருகத்திலிருந்து மனிதனிடம் திரும்பி வருகிறது' என்கிறார் பிளேட்டோ அவர்கள். 'ஒருவரது அறிவானது ஒன்றுதிரண்ட பழைய அனுபவங்களே' என்கிறார் சோக்கிரட்டீஸ்.



ஜெர்மனியில் இருந்த கவிஞர் கதே (Kathe kollwitz) பதினேழு மொழிகளில் நிபுணர். அவரது முற்பிறப்பு அறிவு அவருடன் தொடர்ந்திருக்க வேண்டும். எந்தக் குழந்தையும் வெறுமையான மனதுடன் பிறப்பதில்லை என்கின்றனர் ஞானிகள், ரிக்ஷிகள்.

நாம் ஏன் நமது பூர்வீகத்தை நினைவுகூர்வதில்லை? நாம் குழந்தையாக இருக்கும்போது நடந்ததெல்லாம் எமக்கு ஞாபகமிருக்கிறதா? நினைவு இல்லாத காரணத்தால் நாம் குழந்தையாக இருக்கவில்லை என்று கூறமுடியுமா?

ஆரம்பப் பாடசாலையில் படித்தது தொடர்ந்து படித்துக்கொண்டு செல்ல உதவுகிறது. பள்ளியில் படித்தது கலாசாலையில் உதவுகிறது. இவை அனுபவமாக மாறுகிறது. அதேபோல் இந்த ஜன்மத்தில் பழைய அனுபவத்தின் பிரதிபலிப்புகள் இருக்கின்றன.

பிறந்த பிள்ளை தாயிடம் பால் குடிப்பதற்கு யார் கற்றுக்கொடுத்தது? வாத்துக் குஞ்சு தண்ணீரில் உடனடியாகவே நீந்துவதற்கு யார் கற்றுக்கொடுத்தார்கள்? இவை எல்லாம் முற்பிறவியின் ஞாபகமே என்கிறார்கள் ஆய்வாளர்கள். மறுஜன்மமானது புத்தரால், பிளேட்டோவால் பைதகோரஸால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமல்லாமல் அவர்கள் மறுஜன்மக் கோட்பாட்டை போதித்தார்கள்.

எகிப்திய ஞானிகள் மறுபிறப்பு உண்டு என்பதற்குப் பல விளக்கங்கள் கொடுத்தனர். அதன் அடிப்படையில் பிரமிட் அமைத்து அரசர்களின் உடல் வைத்து பாதுகாக்கப்பட்டது.

கதோ (கடோ) உபநிடதம் 'ஆன்மா வேறு சரீரங்களையும், தாவர நிலையையும் அடைகின்றன்' என்கிறது.

பிராணிகள் பிறக்கும்போதே அவை தாய்ப் பிராணியில் பால் உண்ண முயற்சி செய்கின்றன. முன் ஜன்மத்தில் பால்

உண்டது நினைவில் இருக்கிறது. அதே நேரத்தில் அவை பயம் என்னும் இயற்கை உணர்ச்சியையும் காட்டுகின்றன. இது முன் ஜன்மத்தில் அனுபவித்த துன்பத்தை நினைவு வைத்திருக்கின்றன என்று காட்டுகின்றது. குழந்தை வேகமாகத் தவழ்ந்துகொண்டு செல்லும், ஒரு விளிம்பிற்கு (Edge) சென்றதும் அதற்கப்பால் போக முயற்சி செய்யாமல் தன் வேகத்தைக் குறைத்து அப்படியே நிற்பது, 'குழந்தைக்குத் தான் விழுந்துவிடுவேன்' என்ற பயத்தைக் காட்டுகிறது. அது முற்பிறப்பின் தொடர்ச்சிதானே! விழுந்துவிடுவேன் என்பது முற்பிறப்பில் ஏற்பட்ட அனுபவம்தானே! இல்லையேல் குழந்தைக்கு எப்படித் தெரியும்?

"கண்டதும் காதல் என்பது கூட முற்பிறப்பில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்ந்ததன் ஒருவகை உணர்ச்சியே. அந்த மனித ஆன்மாக்கள் எல்லாம் முற்பிறப்பில் காதல் புரிந்து சேர்ந்து வாழ்ந்தன. தாங்கள் இப்பொழுது ஒருவரை ஒருவர் சந்தித்ததுபோலத் திடீரென உணர்ச்சியடைகிறார்கள். இது பழைய இல்லற வாழ்வின் ஆசையே. அந்த நினைவுதான் ஒவ்வொரு ஜீவனுக்கும் 'உயிர் வாழும் ஆசையைக் கொடுக்கிறது. இந்த ஆசைக்கு தொடக்கமென்பது இல்லை. ஆசைகளுக்கு 'நித்தியமாக' இருப்பதில்தான் ஆவல். ஆசைகளுக்கு ஆதி அந்தம் இல்லை. ஒவ்வொரு ஜீவனுக்கும் ஸ்தூல சரீர வாழ்வில் பற்றுதல் உண்டு" என்கிறார் சுவாமி சிவானந்தா அவர்கள்.

ஒரு குழந்தை தன் தாய்க்கு இன்னொரு குழந்தை பிறந்தவுடன் 'பொறாமை' கொள்கிறது. இது எங்கேயிருந்து வந்தது. ஒவ்வொரு குழந்தையும் தன்னிடத்தில் பிறிதொரு வரைப் பார்க்க விரும்பவில்லை. இது ஒரு மனித குணம். முற்பிறப்பின் தொடர்ச்சிதான் அந்தக் குழந்தையின் செயற்பாடு. எந்தக் குழந்தையும் எழுதாத வெள்ளைத்தாள் போன்ற மனதுடன் பிறப்பதில்லை.

புத்தபிரான் முற்பிறப்பில் தன் மனைவி தன்னிடம் காட்டிய அன்பைப் பற்றிக் கூறியதோடு வேறு மக்களின் முன் ஜன்ம விவரங்களையும் பன்முறை எடுத்துரைக்கிறார்.

விவிலிய நூலில் இயேசு கிறிஸ்து 'ஆப்ரஹாமுக்கு முன் நான் இருந்திருக்கிறேன்' என்கிறார். இயேசு இன்னோரிடத்தில்

'அவரே யோவான், எலியாவின் மறுபிறப்பு' என்று பொருள்படக் கூறுகிறார்.

**பேரானந்தம் தரும் மனிதப் பிறப்பு:**

மனிதன் எந்த உடலமைப்புடன் பிறந்தாலும் தனது தோற்றம் எப்படியோ அப்படியே அதனை முழுமையாக ஏற்று பிறருடன் ஒப்பீடு செய்யாமல் வாழ்ந்து தனது வித்தியாசத்தில் மகிழ்ச்சியடைந்தால் அந்த வாழ்வானது ஆனந்தமாகிவிடும்.

மனிதனாயினும், மிருகமாயினும், பறவையாயினும், ஊர்வனவாயினும், மிதப்பனவாயினும் தங்கள் உடலைப் பாதுகாக்க முயல்வது இயற்கை. ஒரு யானைக்குத் தன் உடலில் எவ்வளவு பிரியமோ, அதேயளவு பிரியம் ஒரு எறும்புக்கும் தன் உடலில் உண்டு. ஒவ்வொரு பிராணியும் தங்கள் ஜன்மத்தில் தாங்கள் எடுத்துள்ள சரீரத்தில் அதிகப் பிரியம் காட்டுகிறது. மனிதனுக்கும் மனிதப்பிறப்பு பிடித்திருக்கிறது, யானைக்கு யானைப் பிறப்பிலும், எறும்புக்கு எறும்புப் பிறப்பிலும், புழுவுக்குப் புழுப்பிறப்பிலும், காகத்திற்குக் காகப்பிறப்பிலும் ஒவ்வொன்றும் தங்கள் பிறப்பில் சந்தோஷமும் ஆனந்தமும் அடைகின்றன. மனிதன் மனிதப் பிறப்பில் சந்தோஷமும் ஆனந்தமும் அடையவேண்டும். ஒவ்வொரு 'உயிரும்' உன்னத நிலை அடைவதையும், பேரானந்தமடைவதையும் விரும்புகிறது. இது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது.

**இறப்புக்கும் பிறப்புக்கும் இடையில் ஆன்மா மறுபடி பிறக்க எவ்வளவு காலமாகிறது?**

இதற்கான விடையை சுவாமி சிவானந்தா அவர்கள் எழுதிய 'மரணத்துக்குப் பின் மனிதன் போவது எங்கே' என்ற நூல் தருகிறது.

'உடலிலிருந்து வெளிச்செல்லும் ஆன்மா பத்துத் தினங்களுக்குத் தனது ஆதிமூலமான பழக்கமான இடங்களைச் சுற்றி வட்டமிட்டுக்கொள்கிறது. பதினொராம் நாள் முழு உடலை அடைகிறது.'

'இறந்தவரின் ஆன்மா வீட்டின் கடைசியாக தங்கின இடத்தைச் சுற்றி வட்டமிடுகிறது' என சொராஸ்டிய மதம் கூறுகிறது.




ஆழ்ந்த ஆசையுள்ளவர், அதிக பற்றுதல் உள்ளவர், எதிர்பாராத விபத்தில் மரணமானோர் சீக்கிரம் தங்கள் வாழ்க்கைகளை மறுபடி தொடங்கு கிறார்கள். அப்படி உடனடியாக மறுபிறப்பு உண்டாகும்போது தங்கள் வாழ்க்கைகளை மறுபடி தொடங்கு கிறார்கள். மறுபிறப்பு உடனடியாக உண்டாகும்போது முன் ஜன்மத்து சில சம்பவங்கள் நினைவுக்கு வரலாம். அதாவது பழைய வீடு, உறவினர்கள், நண்பர்கள், பொருட்கள் போன்றன. சில நேரங்களில் விசித்திர விடயங்கள் வெளியாகியுள்ளன. கொலை செய்யப் பட்ட மனிதன் மறுபடி பிறந்து தான் மரணமடைந்த விதத்தையும், தன்னைக் கொன்றவரையும் அடையாளம் காட்டிய சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

**ஒரு சம்பவம்:**

தர்மராஜ் செய்தித்தாள் 23-3-1936 இல் வெளியிட்ட செய்தி மிகச் சுவாரஸ்யமாக உள்ளது. ஒருவர் முற்பிறப்பில் தன்னைச் சுட்டவரை மறுபிறப்பில் அடையாளம் காட்டினார். குவாலியூரில் (இந்தியா) தாகூர் என்பவருக்கும் கிராமக் கர்ணருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு, தாகூர் அந்த கிராமக் கர்ணரை வழிமறித்து மார்பில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டார். இறந்த அவர் 14 மைல் தொலைவில் உள்ள ஊரில் குழந்தையாகப் பிறந்துவிட்டார். குழந்தையின் மார்பில் காயம் மாறிய அடையாளம் இருந்தது. குழந்தை வளர்ந்து பேசத் தொடங்கியதும் தாகூர் தன்னை மார்பில் சுட்டான் என்று கூறி அந்தச் சம்பவத்தையும் கூறியது. பின்பு அவை உண்மை என்று நிரூபிக்கப்பட்டன என்று சுவாமி அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**பிறிதொரு சம்பவம்:**

கோமா (Coma) நிலையில் இருந்த சிறுமி கண் விழித்ததும், முதலில் தன் முற்பிறப்பை நினைவுகூர்ந்தார். இதற்கு சுவாமி

அவர்கள் கூறியதாவது: ஒரு ஆவி தன் குடும்பத்தவருடனும், உறவினர்களுடனும், நண்பர்களுடனும் ஆழ்ந்த அன்பு இருந்தால் அது செய்திப் பரிவர்த்தனை செய்கிறது. அதாவது இறந்தவர்கள் மிகப் பலமான பற்றுதலுடன் இருந்திருந்தால் தங்கள் பிள்ளைகளிடமும் அவர்கள் ஆவிகளாக இருந்து உதவிகள் செய்கின்றனர். அபரிமிதமாகப் பிரியம் வைத்து இருப்பவர்களைச் சூழ்ந்து ஆவிகள் வட்டமிட்டுக்கொண்டும் உதவிசெய்ய முயன்றுகொண்டும் இருக்கின்றன. அபாயங்கள் நேரிடும்போது அவை காப்பாற்றியும் உதவிசெய்கின்றன.

ஆன்மாக்கள் ஸ்தூல உடலாகயிருந்தபோது தாங்கள் பழகியவர்களையும், பழகிய இடங்களையும் சில தினங்கள் சூட்சும உடலாகச் சுற்றித்திரிந்து பின்பு மறுபிறப்பை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கிறது என சுவாமி சிவானந்தா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். நல்ல உள்ளம் கொண்டவர்களதும் அன்பானவர்களதும் ஆவி உதவியானது, தீங்கற்றது என்கிறார். சில வேளைகளில் ஆவிகள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. பிறகு அவை மூடுபனி போல் வெண்மைப் பொருளாகி உருகிமறைகின்றன என மேலும் சுவாமி கூறுகின்றார்.

இப்போது மர்ம விஞ்ஞானம் (Occultion) இதை விளக்க முயல்கிறது.

**ஆவிகள்:**

**ஆவிக்குள் இருக்கும் உருவம் கண்ணுக்குத் தெரிவதில்லை. பின்பு இதுவே ஸ்தூல ரூபமாகத் தோன்றுகிறது.**

ஆவிகள் படம் வரைகின்றன, கணினி பாவிக்கின்றன, எழுதுகோல் உபயோகிப்பது போல் சப்தம் கேட்கின்றன, சில வேளைகளில் ஆள் நடமாடுவது போலவும் சட்டைகளைப் பிடிப்பதைப் போலவும் உணரப்படுகின்றன. திரைச் சீலைகள் அசையும், புத்தகத் தட்டிலிருந்து புத்தகம் கீழே விழும், சமையல் அறையில் பாத்திரங்கள் நகரும் சப்தம் கேட்கும், குளியல் அறை பாவிப்பது போல் இருக்கும். உறக்கத்திலிருக்கும்போது வருடுவது போல் இருக்கும். ஆனால் எவருமே கண்ணுக்குப் புலப்பட மாட்டார்கள் என தங்கள் இல்லங்களில் அனுபவப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

**மரணத்திற்குப் பின் ஆன்மாவுக்கு என்ன நேர்கிறது?**

மூச்சு உள் இழுக்கும்போது வாழ்வு புகுந்துவிடுகிறது. மூச்சு வெளியேறும்போது மரணமும் சேர்ந்துவிடுகிறது. உபநிஷத்துக்களில் கூறப்படும் பஞ்சாக்கினி வித்தை சொல்வதாவது மனிதன் செடிகளில் தானியமாகிவிட்டான், இலை குழையாகிவிட்டான், இவற்றை மனிதன் உண்கிறான். மனிதன் விந்தாகி, முட்டையாகி மீண்டும் பிறக்கிறான்.

சாந்தோ உபநிடதம் (V 10-5) பின்வருமாறு குறிப்பிடுகிறது. 'ஆன்மா மேகமாகி மழையாகப் பொழிகிறது. பின்பு நெல், சோளம், தானியம், பூண்டுகள், செடிகள், கொடிகள், மரங்கள், எள், அவரை போன்றனவற்றை அடைகிறது. யார் அவ்வுணவை உண்டு சந்ததி பெறுகிறார்களோ ஆன்மா அவர்களைப் போலாகிறது.'

'உணவை உண்டு, சந்ததி உற்பத்தி செய்பவர் எவரோ அவரூடாக ஆன்மா மறுபடி உருவமடைகிறது' என்று சாந்தோக்ய உபநிக்ஷத் (V 10-6) கூறுகிறது.

ஆன்மாக்கள் பயிரையும், செடிகளையும் தங்கள் தங்குமிடமாக உபயோகிக்கின்றனவே தவிர அவற்றோடு ஒன்றுபட்டுவிடுவதில்லை. அவை தங்கள் தனித் தன்மையை இழப்பதில்லை என மேலும் விளக்குகிறது சாந்தோ உபநிடதம். நாரத புராணமும் இதே கருத்தைக் கூறுகிறது.

**புனர்ஜென்மக் கோட்பாடு:**

புனர்ஜென்மக் கோட்பாடு குருநானக் தேவரால் (சீக்கிய மதம் தோற்றுவித்தவர்) புனித நூலான கிரந்த் ஸாஹிப்பில் ஆதரிக்கப்பட்டுள்ளது. பல வருடங்களுக்கு முன்பே கிரேக்க நாட்டில் வாழ்ந்த தத்துவ அறிஞர்களான சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, பைதகோரஸ், அரிஸ்ரோட்டில், அவர்களாலும் ஆதரிக்கப்பட்டுள்ளது.



'நாம் பிறப்பதற்கு முன்னேயே எல்லா உண்மைகளைப் பற்றிய அறிவு எமக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆன்மாக்கள் மனிதஉருவதிற்கு வருமுன் சரீரங்களில் இருந்து தனித்து இருக்கும்போதும் அறிவு

படைத்திருந்தன' என சோக்கிரட்டீஸ் கூறுகிறார். மறுஜென்மக் கோட்பாட்டை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானி டாக்டர் ஜே. பிரைன் 'மரணத்துக்குப் பின்பு அறிவு தொடரும்' என்கிறார்.

புனர்ஜென்மக் கோட்பாட்டின்மீதே புராதன எகிப்திய நாகரிகம் அமைக்கப்பட்டது. பைதகோரஸ், பிளேட்டோ, வர்ஜில், ஓவிட் ஆகியோர்கள் கிரேக்கத்திலும், இத்தாலியிலும் புனர்ஜென்மக் கோட்பாட்டைப் பரப்பினர். கிரேக்கத் தத்துவஞானியான சோக்கிரட்டீஸின் மாணவரான பிளேட்டோ அறிவனைத்தும் பழைய நினைவே என்பதால் அவருடைய தத்துவத்தின் முக்கிய கொள்கையின் அடிப்படை புனர்ஜென்மக் கோட்பாட்டில் இருந்து என்றாகிறது. பிளேட்டோவைப் பின்பற்றுபவர்களான ப்பிளாட்டினஸ், ப்ரோக்லஸ் போன்றவர்கள் புனர்ஜென்மக் கொள்கையைப் பூரணமாகப் பின்பற்றினர். இந்துக்களும், பௌத்தர்களும், சமணர்களும், சொராஜ்டியர்களும் இந்தக் கோட்பாட்டையே தங்கள் தத்துவ சாஸ்திரம், மதம், அரசாங்கம், சமூக ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள். 'உனாகி' என்னும் பராசீகர்களுடைய மதம் இதையே முக்கியமாக வலியுறுத்துகிறது. 'ட்ரூயிட்' மதத்தின் முக்கிய கோட்பாடு இதுவே. கான்ஸ்டாண்டிநோபிள் நூல் நிலையதிலிருந்த புனர்ஜென்மக் கோட்பாடு சம்பந்தமான ஏராளமான நூல்கள் ஒரு மதப்பிரிவினரால் அழிக்கப்பட்டது. புனர்ஜென்மம் என்றும் சர்ச்சைக்குரியதே!

ஒரு குழந்தை தாயின் மடியிலிருந்து விழுந்தால் நடுநடுங்கிக் கொள்கிறது இது ஏன்? விழும்போது தாயின் கழுத்தில் இருக்கும் சங்கிலியையோ அல்லது சட்டையையோ பிடிப்பது ஏன்? மரணத்தில் இருக்கும் வெறுப்பால் தான் அந்தக் குழந்தை தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முற்படுகிறது. உயிர்வாழும் ஆசை நித்தியமானது.

ஒவ்வொருவரும் துன்பம் அனுபவித்ததன் காரணமாக அதை விலக்க வேண்டும் என்ற விருப்பம் எழுகிறது. பிறந்தது அப்போதுதான் எனில் ஒவ்வொரு ஜீவனுக்கும் துன்பத்தை விலக்கும் பொருட்டு மரணபயம் குழந்தைப் பருவத்தில் எப்படி ஏற்பட்டது? இதற்குமுன் பல அனுபவம்

இல்லையானால் மரணத்துக்குக் காரணம் என்ன? உளவியல் நிபுணரான சிக்மன் பிரய்டும் இதே கேள்வியை எழுப்புகிறார். அவரது ஆய்வின்படி ஒருவருக்கு முற்பிறப்புகளில் ஏற்பட்ட அனுபவமான மரணபயமே ஒருவரை மரணமாக்குகிறது என்கிறார்.




ஆறாவது நூற்றாண்டில் வாழ்ந்திருந்த கிரேக்க கணிதமேதை பைதகோரஸ் (Pythagoras) மறுபிறப்புக் கோட்பாட்டைப் போதித்ததோடு புலால் உண்பதைத் தவிர்க்கும்படி போதித்ததும்தான் அதிசயம். இவர் இந்தியா சென்று மரணமென்றால் என்ன? ஆன்மா என்றால் என்ன? ஒருவர் இறந்த பின்பு ஆன்மாவுக்கு என்ன நடக்கிறது? மறுபிறப்பு போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றார். பிற்காலங்களில் மரணம், ஆன்மா, மறுபிறப்பு பற்றிய போதனைகளை ஒரு ஞானியின் நிலையிலிருந்து விளக்கினார்.

புராதன காலத்திலிருந்தே தத்துவஞானிகள், ஆன்மிக ஞானிகள், மகான்கள், யோகிகள், சிந்தனையாளர்கள், சுவாமிகள், மனோதத்துவ மேதைகள், தீர்க்கதரிசிகள் ஆகிய யாவரும் இந்தப் பெரிய பிரச்சினைகளை விடுவிக்கத் தங்களால் முடிந்தவரையில் முயன்றிருக்கிறார்கள். இது ஒரு தொடர் ஆராய்ச்சியாக என்றும் இருக்கும்.

அறிவியலும் விஞ்ஞானமும் வளர வளர இந்த ஆராய்ச்சி உலகுக்குப் புதுப்புது நிரூபணங்களை வழங்கத்தான் போகிறது.

## அத்தியாயம் 15

# தன்னுணர்வு (Self-Conscious) என்றால் என்ன? பிரக்ஞை (Consciousness) என்றால் என்ன?

**தன்னுணர்வு (Self Conscious):**



தன்னுணர்வைப் பற்றிய விளக்கத்தைத் தெளிவாகக் கொடுத்தவர் மன உளவியல் ஆராய்ச்சியாளர் சிக்மன் பிரைட் (Sigmund Freud) அவர்கள்தான். மனிதன் தன்னுணர்வு இல்லாமலே வாழ்ந்து இறந்து விடுகிறான். சில விநாடிகள் தன்னுணர்வுடன் இருந்தாலும் வாழ்வின் பெரும் பகுதியை தன்னுணர் வில்லாமலே கழித்து விடுகிறான். மனிதனை நீரின் மேல் மிதக்கும் பனிக்கட்டி (Iceberg) என்கிறார் சிக்மன் பிரைட். ஏனெனில் பனிக்கட்டி 90 சதவீதம் சமுத்திரத்தின் நீரின் அடியிலும் 10 சதவீதம் நீரின் மேலும் இருக்கிறது. அதேபோல மனிதனின் ஒரே ஒரு பகுதி மட்டும் தன்னுணர்வுடனும் ஒன்பது பகுதிகள் தன்னுணர் வில்லாமலும் மறைந்திருக்கின்றன என்கிறார். மறைந்திருக்கும் தன்னுணர்வில்லா மனமே எப்போதும் முடிவெடுக்கிறது, அல்லது மறைந்திருந்து செயல்படுகிறது.

மனிதன் தன்னுணர்வுடன் இருப்பவன் அல்ல, சதா கற்பனையுடன் இருப்பவன். விலங்குகள் அப்படியல்ல அவை

கற்பனை செய்வதில்லை, அதனால் அவை எப்படியிருக் கின்றனவோ அப்படியேயிருக்கின்றன. அவை உண்மை யானவை, போலியில்லை. அதனால் விலங்குகளைக் கணிக்கலாம். ஒவ்வொரு விலங்கும் என்னென்ன செய்யும் எப்படிச் செயல்படும் என்று முன்கூட்டியே கணிக்கலாம். மனிதனைக் கணிக்க முடியாது. மனிதனது செயல்பாடுகள் தன்னுணர் வில்லாமலேயே இருக்கின்றன என்ற கருத்தை முன்வைத்து மனிதரைப்பற்றிய நோக்கத்தை மாற்றியமைத்தது சிக்மன்ட் பிரைட்டின் ஆய்வு. கற்பனை செய்துகொண்டு இருக்காத அனைத்து உயிரினங்களும் உண்மையே! மனிதன் தன்னிடம் இல்லாத விடயங்களைத் தன்னிடம் இருப்பதாக நம்புபவன்.

**புத்தரிடம் சீடர் ஒருவர் கேட்டார்:**

"நீங்கள் உறக்கத்திலும் விழித்திருப்பதுபோல் காணப் படுகிறீர்கள். உங்கள் உடலில் ஒரு அசைவும் இல்லை. உறக்கத்தில் காணப்படும் அதே தோற்றநிலையில்தான் உறக்கத்திலிருந்தும் எழுகிறீர்கள். நீங்கள் தூங்குகிறீர்களா? விழித்திருக்கிறீர்களா?"

**புத்தர்:** என் சரீரம் ஓய்வெடுக்கிறது, நான் உணர்வோடு இருக்கிறேன்.

நீங்கள் நடக்கும்போது உணர்வுடன் நடவுங்கள். மூச்சு உட்செல்லும்போதும் வெளிச்செல்லும்போதும் அதை உணருங்கள். எல்லா நேரமும் தன்னுணர்வுடன் இருங்கள்.

ஒருவரின் பெரும்பாலான செயல்கள் தன்னுணர்வோடு கூடியதல்ல என்பதை முதலில் உணர்வோம். காதல், கோபம், வெறுப்பு இவை தன்னுணர்வற்றவையே ஆகும். புத்தர், 'விழிப்புணர்வு மட்டுமே உங்களை ஒரு மனிதனாக மாற்ற முடியும், இல்லையேல் விலங்குதான்' என்கிறார். புத்தர் 24 மணிநேரமும் தன்னுணர்வோடுதான் இருப்பார்.

பொதுவாக நாங்கள் அனைவருமே எல்லாச் சந்தர்ப்பங் களிலும் தன்னுணர்வுடன் இருப்பதில்லை. தன்னுணர்வு இல்லாத வாழ்க்கையே வாழ்கின்றோம். பெரும்பாலானவை இயந்திரச் செயல்களே அதாவது றொபோ (Robot) செயல் போன்றதே!

சினிமாப் படம் பார்க்கும்போது எங்களையே மறந்து போய் காட்சியுடன் கலந்துவிடுகிறோம். காட்சி முடிந்தபின் நினைவுக்கு வருகிறோம். பாடல்களைக் கேட்கும்போது எங்களை மறந்துவிடுகிறோம். பாடல் முடிந்த பின்தான் நாம் இருப்பதை உணர்கிறோம். காதலர்கள் தங்களையே மறந்து விடுகிறார்கள். பின்னர் தங்களை யாராவது கவனித்தார்களா? என எச்சரிக்கையாகிறார்கள். எந்த நிலையிலும் எந்தச் சூழலிலும் ஒருவர் தன் உணர்வை இழக்காமல் இருப்பதே தன்னுணர்வுடன் இருப்பதாகும். பல சந்தர்ப்பங்களில் நமக்குத் தன்னுணர்வு ஏற்பட்ட பின்புதான் நம்மை புவியீர்ப்பு விசையானது பூமிக்கு இழுத்து வந்தது போல் உணர்கிறோம். தன்னுணர்வை இழக்காதவர் உன்னதமான மனிதராகிறார். தன்னுணர்வு அற்ற நிலையில் இயந்திரம் போல மாறுகின்றோம். சில நிகழ்ச்சிகளில் பார்வையாளராக இருக்கும்போது அதைக் கவனித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை உண்மையில் அறிந்திருக்கமாட்டோம். அங்கு எங்கள் கவனத்தைத் திசை திருப்பும் நிகழ்வுகள் ஏதாவது நடைபெற்றால் அப்போதுதான் நாம் நம்மை மறந்திருக்கிறோம் என்று நமக்கே தெரியவருகிறது.

‘உங்களை நீங்கள் மனதிலிருந்து முற்றிலுமாக அகற்றி விடுங்கள். பின்பு நீங்கள் எதிலும் உங்களை இழக்க மாட்டீர்கள்’ என்கிறது சென் (Zen) மதம். முகமதுநபிகள் அவர்கள் இசைக்கு ஊக்கம் கொடுப்பதில்லை. காரணம் இசையில் ஒருவர் தன்னை இழக்கமுடியும் என்பதுதான். ‘நீங்கள் எதிலும் மறந்துவிடாதீர்கள்! உங்களை இழக்காதீர்கள்! மிக விழிப்பாக இருக்கவேண்டும். சுயநினைவுடன் இருங்கள்’ என்கிறார் புத்தர்.

நாம் தன்னுணர்வு நிலைக்குத் திரும்பமுன் எம்மையறியாமலே பேசுபவரின், பாடுபவரின் உணர்வாகிறோம். நாம் நமது தன்னுணர்வில் இல்லை. நமது தன்னுணர்வு ஏவப்பட்ட அம்பைப் போலப் பேசுபவரின், பாடுபவரின், நடனமாடுபவரின், நடிப்பவரின் ஊடாகச் செல்கிறது. பேசுபவரது பேச்சையும், பாடலையும் நாம் கேட்டு நடிப்பையும் நடனத்தையும் இரசித்து அவைகளோடு நாம் மெய்மறந்து போகாமல் பூரணமாக நாம் நம்மை உணர்ந்து இருக்கும்போது இரண்டு நிலையையும் அடைகிறோம். அதாவது பூரணமான தன்னுணர்வுடனும் இருக்கிறோம்,

நம்மை இழக்காமல் அதே நேரத்தில் நிகழ்ச்சியை முழுமையாக இரசிக்கிறோம்.

சில எதிர்பாராத ஆழமாகத் தொடுகின்ற அனுபவங்களில் ஒருவர் எச்சரிக்கை அடைகிறார். ஆனால் அதுவும் சில நொடிப் பொழுதுகள் மட்டுமே இருக்கின்றன. ஒரு 100 ஆண்டுகள் நீங்கள் வாழ்ந்திருந்தால் விரல்விட்டெண்ணக் கூடிய மிகக் குறைந்த அனுபவங்களே விழிப்புணர்வுடன் இருந்திருக்கும். அந்த மிகக் குறைந்தளவு அனுபவங்கள், உங்களால் விழிப்புணர்வுடனும் தன்னுணர்வுடனும் இருக்கமுடியும் என்கின்ற உண்மையை அளிக்கின்றன. (சில வேளைகளில் 100 வயது வரை விழிப்புணர்வில்லாமலும் வாழ்ந்திருக்கலாம்.)

சாதாரணமாக நாம் Program செய்யப்பட்ட மனிதர்கள். நாம் தானாக (automatic) இயங்கும் இயந்திரமாகவே இயங்குகின்றோம். இதில் சுகம், சௌகரியம், வசதிகளைக் காண்கின்றோம். உடல், மனம் Program செய்யப்பட்டு விட்டது என்பதை அறியமாட்டோம்.

தாம்பத்திய உறவில் ஈடுபடுபவர்கள் தங்கள் உச்சத்தை அடையும் அந்தக் கணப்பொழுதில் தன்னுணர்வை இழந்து தங்களையும் சூழலையும் உலகத்தையும் மறந்துவிடுகிறார்கள். அந்தக் கணம் முடிந்ததும் பூமிக்குத் தூக்கி வீசப்படுகிறார்கள். பின்பு தன்னுணர்வு ஏற்படுகிறது.

ஞானிகள் கூறுகிறார்கள் எந்தக் கணத்திலும், எந்தச் சூழலிலும், எந்த நிலையிலும் தொடர்ந்து தன்னுணர்வுடன் இருப்பவர்களால் மனதைக் கடந்து அதற்கப்பால் சென்று பர வெளியாகிவிட முடியும். அவர்கள் மரணத்துக்கப்பால் செல்பவர்கள். அத்தகையவர்கள் உணர்வுடன் மரணமாவார்கள். தங்கள் மரணத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்து தங்கள் விருப்பத்தின் வழியில் இறப்பவர்கள். இதையே ஞானிகளின் வாழ்வு எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**பிரக்ஞை (Consciousness) என்றால் என்ன?**

ஒருவர் தான் வெறும் உடல் மாத்திரம் அல்ல தான் உடலிலிருந்தும் வேறுபட்டவர் எனத் தன்னை அறிந்து கொள்ளலானது, தன்னை உணர்தலின் (Self-Realization) முதற்படி

என்கின்றனர் யோகிகள். உடலும், பிரக்ஞையும் சேர்ந்தவர்கள் தான் மனிதர்கள். அந்த உடலுக்குள் பிரக்ஞை (Consciousness) உள்ளது. சுயம் (Self), ஆவி (Sprit), ஆத்மா (Soul), உயிர், இருப்பு (Being) இவற்றின் அடையாளம் எல்லாம் பிரக்ஞை தான். பிரக்ஞை உடலிலிருந்து வெளியேறுவதை மரணம் என்கிறோம். பிரக்ஞை வெளியேறிய உடல் - அது இறந்த உடல். பிரக்ஞை உடலை இயக்குகிறது, பிரக்ஞை உடலிலிருந்து வெளியேறினால் கண்ணால் எதையும் பார்ககமுடியாது, காதால் எதையும் கேட்கமுடியாது, வாயால் எதையும் பேச முடியாது, முழுஉடலும் செயலிழந்துவிடும். உடலுக்குப் பிரக்ஞை அவசியம் என்பது இதிலிருந்து புலனாகிறது. (The Consciousness is absolutely necessary for the animation of the body.)

வெப்பமும், புகையும் நெருப்பின் அடையாளங்கள் அதுபோல ஆத்மாவின் அல்லது சுயத்தின் அடையாளம் பிரக்ஞை. சூடும் புகையும் நெருப்பை அடையாளப்படுத்துவது போல் பிரக்ஞை ஆத்மாவை, சுயத்தை அடையாளப் படுத்துகிறது. இயந்திரம் உடைந்தால் அல்லது பழுதுபட்டால் பாகங்களை மாற்றி மாற்றுப்பாகங்களைப் பொருத்தி இயங்கவைக்கலாம். அதுபோல உடலுறுப்புக்கள் பழுதுபட்டால் மாற்று உடல் உறுப்புக்கள் பொருத்தி உடலை இயங்க வைக்கலாம். ஆனால் பிரக்ஞைக்கு மாற்றுப் பிரக்ஞை பொருத்த முடியாது. **மாற்றீடு என்பதே இல்லாதது ஒருவரது பிரக்ஞை மட்டும்தான்.**

தொட்டுணர்தலால் பிரக்ஞையை அறியமுடியாது. வானொலி அலைவரிசையை, சத்தத்தைப் பார்க்க முடியாது, அதுபோலவே பிரக்ஞையும் கண்களால் பார்க்கமுடியாது. நுண்ணிய பக்டீரியா கிருமியை வெறும் கண்களால் பார்க்கமுடியாது, ஆனால் பூதக் கண்ணாடியால் (Microscope) பார்க்க முடியும். பக்டீரியா (Bacteria) அங்கு உண்டு, கண்ணுக்குப் புலப்படாததால் அல்லது உணர முடியாததால் பக்டீரியா அங்கு இல்லை என்று கூற முடியாதல்லவா! அதுபோல ஆன்மாவை, சுயத்தை, பிரக்ஞையை, உயிரை எந்தக் கருவியின் (Instrument) உதவியுடனும் பார்க்க முடியாது. அதற்காக 'பிரக்ஞை', 'சுயம்', 'ஆத்மா' இல்லை என்று கூற முடியுமா!

உடலிலிருந்து வெளியேறிய 'பிரக்ஞை', (உயிர், சுயம், ஆன்மா, இருப்பு) அதுவரை தான் இருந்த உடலைப் பார்க்கிறது. அங்கு நடக்கும் நிகழ்வுகளைப் பார்க்கிறது. தான் உடலாக இருந்து வாழ்ந்த, பழகிய இடங்களைச் சுற்றித் திரிகிறது. ஏற்கனவே இறந்த தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை, நண்பர்களைப் பார்க்கிறது. பின்பு தன் பிரயாணத்தின் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து மறுபிறப்பை எடுக்கிறது என்கின்றனர் யோகிகள். இன்று மருத்துவ விஞ்ஞானம், உளவியல், அறிவியல் பிரக்ஞை பற்றி நிறையக் கூறுகின்றன.

## அத்தியாயம் 16

# தாவரங்களுக்கு 'உயிரும்', 'உணர்வும்' மட்டுமல்ல மனித 'இறப்பு', 'பிறப்பு'டனும் தொடர்புண்டு!

'திருவாசகத்தில் கூறும் புல்லாகிப், பூடாய்ப் புழுவாய் மரமாகி' என்ற பாடல் மூலம் தாவர இனங்களுக்கு உயிருள்ளது புலனாகிறது. தாவரங்களுக்கு 'உயிர்' உள்ளது என்று சமணமும் கூறுகிறது. 'மரம் நாட்டலை' வேதம் வலியுறுத்துகிறது.



அசோகச் சக்கரவர்த்தி ஒரு நாள் மாறுவேடத்தில் நகர்வலம் வரும்போது தெருவோரத்தில் ஒரு வயோதிபர் மரம் நடுவதைப் பார்த்தார். அதற்கருகாமை யிலிருந்த ஒரு மரத்திற்குக் கீழ் நின்று அந்த வயோதிகரிடம் கேட்டார் "நீங்கள் நல்ல வயதானவராக இருக்கிறீர்கள், நீங்கள் நடுகின்ற மரம் வளர்ந்து பயன் தருவதைப் பார்க்க நீங்கள் இருக்க மாட்டீர்களே!" என்றார். தன்னைக் கேட்டது அரசன் என்பது அவருக்குத் தெரியாது. அரசன் மாறுவேடத்தில் அல்லவா! நிற்கிறார். இந்த வயதானவர் திருப்பிக் கேட்டார் "நீ இப்ப மரத்துக்கு கீழ் நிற்கிறாய், அந்த மரத்தை நீ நட்டாயா? இல்லையே!

"யாரோ வைத்த மரத்திற்குக் கீழ்தானே நீ இப்பொழுது நிற்கிறாய்! அதன் பலனை நீ அனுபவிக்கிறாய்தானே! அது போல நான் நடும் இந்த மரம் யாருக்கும் பயன் கொடுக்கட்டும்! இந்த உலகத்திற்கு நீ நல்லது செய்ய வேண்டுமென்று நினைத்தால் மரங்களை நடு" என்றார். இந்தச்

சம்பவம் அசோகச் சக்கரவர்த்திக்குத் தாவர இனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்திற்று.



இவரது மகள் சங்கமித்தை பௌத்தத்தை இலங்கைக்கு பரப்ப வந்தபோது புத்தர் அமர்ந்திருந்து ஞானமடைந்த வெள்ளரச மரத்தின் கிளைகளை இலங்கைக்குக் கொண்டு வந்தார். ஒரு கிளையை யாழ்ப்பாணத்திலுள்ள சுழிபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ள பறாளை விநாயகர் கோயில் தீர்த்தக் குளத்தின் அருகே நாட்டினார் எனவும் மற்றதை அனுராத புரத்தில் நாட்டினார் எனவும் 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு' என்ற நூல் கூறுகிறது.



**தாவரங்களுக்கு 'உயிரும் உணர்வும்':**

மரம், செடி, கொடிகள் உட்பட அனைத்துத் தாவரங்களுக்கும் 'உயிரும்', 'உணர்வும்' உண்டு என இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திரபோஸ் அறிவித்தார். விஞ்ஞான உலகம் அவரை ஏளனம் செய்தது. முதலில் ஏற்க மறுத்தாலும் இவரது நிரூபணங்களை நிராகரிக்க முடியாமல் இறுதியில் விஞ்ஞான உலகம் ஏற்று Fellow of the Royal Society, Knight Bachelor, Companion of the order of the Indian Empire போன்ற பல பட்டங்களால் கௌரவிக்கப்பட்டார்.

**ஒரு நிகழ்வு: தாவரத்தின் உணர்வு**

மரம், செடி, கொடிகளுக்கு 'உணர்வு' உண்டு என தத்துவமேதை ஜே. கிருக்ஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியது மாத்திரமல்லாமல் அடையாறு ஆலமரத்தடியில் எத்தனையோ பல வருடங்களாக மொட்டோ, பூவோ, காயோ எதுவுமற்ற மரம் ஒன்றை அவர் தினமும் அன்புடன் தடவி, அன்புடன் பேசி, பரிவுடன் பராமரித்து வரும்போது அந்த மரத்தில் மொட்டொன்று மலர்ந்ததாகப் புத்தகம் ஒன்றில் வாசித்த ஞாபகம் எனக்குண்டு.

**ஒரு நிகழ்வு:**

**மரத்திற்காக உயிரைப் பணயம் வைத்த பெண்**



கிட்டத்தட்ட *16* வருடங்களுக்கு முன்பு அதாவது *10.12.1997*இல் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் ஒரு மர ஏற்றுமதி நிறுவனம் (Pacific Lumber Company) மரங்களை வெட்டி வீழ்த்திக்கொண்டிருக்கும் வேளையில், *180* அடி உயரமான *1500* வருட Red Wood Tree மரமொன்றினை வெட்ட முயற்சி செய்தபோது, *23* வயதையுடைய பெண்ணான Julia Hill அந்த மரத்தில் ஏறி மரங்களை வெட்டி வீழ்த்த வேண்டாம் என்று குரல் கொடுத்தார். அப்பெண் பலவழிகளில் மரவிற்பனை நிறுவனத்தால் பயமுறுத்தப்பட்டார்.



அப்பெண்ணின் தலைக்கு மேலால் பேரிரைச்சலுடன் வானூர்திகள் பறந்து மிரட்டின. அப்பெண் அச்சங்கொள்ளவில்லை. மரத்திலிருந்து இறங்க மறுத்து இரண்டு வருடங்கள் மரத்திலேயே வாழ்ந்தார். வேடிக்கை பார்க்க மக்கள் கூடிவிட்டனர். கயிற்றின் மூலம் உணவு அனுப்பப்பட்டது. மாதங்கள் நகர்ந்தன, வருடங்களாகின. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி அப்பெண்ணின் துணிகரச் செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. வேடிக்கை பார்க்கும் கூட்டம் அதிகரித்தது. நடமாடும் சிற்றுண்டிக் கடைகளும், குளிர்பானக் கடைகளும் மக்கள் தாகத்தையும், பசியையும் தீர்க்க உதவின. இவ்விளம் நங்கையின் செயல் அமெரிக்காவில் பரபரப்புச் செய்தியாகியது. மரங்களைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதிமொழியானது

பொறுப்பான அதிகாரிகளால் வழங்கப்பட்டதும் இவர் வெற்றி வாகையுடன் 18.12.1999 அன்று மரத்தை விட்டிறங்கி பூமியில் கால் பதித்தார்.



வட இந்தியாவிலும் ஒரு கிராமத்தில் பல பெண்கள் மரங்களைத் தங்கள் இரு கரங்களால் கட்டிப்பிடித்து வெட்ட விடாது பாதுகாத்த சம்பவம் நிகழ்ந்தது. வட இந்தியாவில் சிப்கோ (Chipko Movement) இயக்கம் 1974இல் பெண்களால் ஆரம்பிக்கப் பட்டு மரங்களை அழிக்கவிடாது, சத்தியாக்கிரக முறையில் போராடி பாதுகாக்கின்றனர். இவர்கள் எல்லாம் தாவர இனங்களின் அன்னை திரேசாக்கள் எனலாம்!



இந்தியாவில் பாண்டிச்சேரியில் ஸ்ரீ அரவிந்தருடன் ஆன்மிகப்பணியில் ஈடுபட்ட பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த (மிர்ரா - Mirra) ஸ்ரீ அன்னை அவர்கள் மரம், செடி, கொடிகளை அன்புடன் வளர்த்தார். தாவர மண்டலத்திற்குத் தனிப்பட்ட உணர்வு உள்ளது என்பார். ஒவ்வொரு மலரும் வெளியிடும் இரகசிய தத்துவத்தை உளவியல் மொழியில் ஸ்ரீ அன்னை அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அதற்கேற்ப மலர்களுக்குப் புதுப் பெயர்கள் சூட்டியிருக்கிறார். தாவர இனங்களுடன் அன்பாகவும், பரிவாகவும் நடக்க வழிகாட்டியவர் அன்னை அவர்கள்.

2500 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த சமணமத ஞானி மஹாவீரர் இலை, குழைகள், தாவரங்கள், கனிகள், மரக்கறிகள் நிலத்தில் விளையும் விவசாய உற்பத்திகளுக்கு 'உயிர்' உண்டு என்று கூறி தாவரவகை உணவுகளையும் தவிர்த்தே வந்தார்.

மரம், செடி, கொடிகள் மகரந்தச் சேர்க்கை செய்து மொட்டாகி, பூவாகி, காயாகி, கனியாகின்றன. ஆண் - பெண் 'உறவில்' கருத்தரித்து குழந்தைகள் பிரசவிப்பது போலவே மரம்,செடி, கொடிகளின் 'உறவில்' கனிகள் கிடைக்கின்றன,

அதாவது மரம், செடி, கொடிகளின் 'குழந்தைகள்' என்று கனிகளைக் கூறலாம் அல்லவா!

தென்னம்பிள்ளை, வாழைக்குட்டி என்று கூறும்போது மரங்களை பிள்ளை குட்டிகளாகக் குடும்ப உணர்வுடன் பார்க்கிறோம்.

இன்று விஞ்ஞான உலகம் தாவர மண்டலங்களின் 'உணர்வை'ப் பற்றிப் பேசுகின்றன. 'வாடின பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள். யோகிகள், சித்தர்கள், ரிஷிகள், ஞானிகள் அன்று விஞ்ஞானிகள் போல் பேசியுள்ளார்கள்.

**ஒரு நிகழ்வு:**

**எண்ண அதிர்வு செடியை அழித்தது**

ரஷ்யா (Russia) நாட்டில் உள்ள தாவரவியல் பூங்காவொன்றுக்கு அமெரிக்காவைச் சேர்ந்த தாவரவியல் ஆராய்ச்சியாளர் சென்றிருந்தார். அவர் ஒரு தாவரத்தைப் பார்த்ததும் நீண்ட நேரம் அதைப் பார்த்தபடியே ஏதோ யோசித்தபடி நின்றார். அவர் அமெரிக்காவிற்குத் திரும்பிய சில நாட்களில், படிப்படியாக அந்தத் தாவரத்தின் உயிர் அழிந்துவிட்டது. அந்த ஆராய்ச்சியாளரைத் தொடர்பு கொண்டு, அந்தச் செடிக்கு முன் நின்று என்ன யோசித்தீர்கள் எனக் கேட்டபோது, அவர்,

"தான் அந்தச் செடியை வெட்டி ஆராய்ந்து பார்த்தால் என்ன பெறுபேறுகள் கிடைக்கும் எனத் தனக்குள் ஆய்வு செய்தேன்" என்றார். இவரிலிருந்து சென்ற எண்ண அதிர்வு அந்தச் செடியை அழித்துவிட்டது. அந்த 'அதிர்வு' செடியின் 'உணர்வை'ப் பாதித்துவிட்டது, 'உயிரை'யும் பறித்துவிட்டது.

**சகோதரத்தைக் காப்பாற்றிய மூத்த சகோதர மரம்**

சிறுமி ஒருவர் புன்னைமரக் கொட்டைகளை அடுக்கி, வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, மழை பெய்தது. அந்தச் சிறுமி அவசரமாக வீட்டுக்குள் ஓடிவிட்டார். அப்போது புன்னைக் கொட்டையொன்று வீட்டு முற்றத்தில்

தவறுதலாக விடப்பட்டுவிட்டது. அந்த மழையில் அகப்பட்டுகொண்ட அந்தப் புன்னை மர விதை காலப் போக்கில் துளிர்விட்டு முளைத்து மரமாகிவிட்டது. இச்சிறுமியும் வளர்ந்து பெரும் பெண்ணாகி திருமணமாகி குழந்தைகளுடன் வாழ்ந்துகொண்டிருந்தார். தன் பிள்ளை களுக்கு அந்த புன்னை மரத்தை சுட்டிக்காட்டி, தன் மூத்த பிள்ளை என்றே கூறுவார். அந்த மரத்தைத் தன் பிள்ளைகளுக்கு அவர்களின் மூத்த சகோதரம் என்றே அறிமுகப்படுத்திக் கொள்வார். அந்த மரத்தை தங்களில் ஒருவராகவே கவனித்து வந்ததுமல்லாமல் அந்த மரத்தின் மீது அளவு கடந்த பிரியமும், அன்பும் செலுத்திவந்தார்கள். இச் சிறுபிள்ளைகளில் ஒன்று ஒரு நாள் தன்னந்தனியாக அந்த மரத்தின் கீழ் விளையாடிக் கொண்டிருந்தபோது காட்டுப்புலி ஒன்று தூர வந்து கொண்டிருப்பதை இப்பிள்ளை கண்டு பயந்து வீரிட்டு அழுதுகொண்டு மரத்துக்குக் கிட்ட ஓடியது. அந்த மரம் உடனே தன் கிளைகளைத் தாழ்த்தி இச்சிறுபிள்ளையை தன் இலை, குழைகளால் நாலாபக்கமும் சுற்றி மறைத்து பாதுகாப்புக் கொடுத்துக்கொண்டது. புலி தூர விலகி கண்ணுக்கு எட்டாத தூரம் சென்றபின் அச் சிறுபிள்ளையைப் பாதுகாப்பாக வெளியே விட்டதாம் அந்த மரம் என்கிறது சங்க இலக்கியக் கதை ஒன்று.

**ஒரு நிகழ்வு:**

### மூதாட்டி வளர்த்த மரம் அவர் உயிரைக் காப்பாற்றியது

அமெரிக்காவில் ஹியூஸ்டன் நகரில் 94 வயதான திருமதி அலஸ் றைட் (Alice wright) என்ற மூதாட்டி தனது படுக்கை அறையில் உறங்கிக்கொண்டிருந்தபோது தெருவில்





அதிவேகத்தில் சென்றுகொண்டிருந்த லாறி (Lorry) தனது கட்டுப்பாட்டையிழந்து இந்த மூதாட்டியின் வீட்டை நோக்கி வேகமாகத் திசை திரும்பிச் சென்றபோது மூதாட்டியின் படுக்கை அறைக்கு அருகாமையில் இருந்த பழம்பெரும் மரமொன்றில் மோதி வாகனம் குடை சாய்ந்தது. தவறியிருந்தால் இந்த மூதாட்டி யின் படுக்கை அறைக்குள் வாகனம் பிரவேசித்து மூதாட்டியை மோதி மரண மாக்கியிருக்கும். ஐம்பது (50) வருடங்களுக்கு முன்பு இந்த மூதாட்டி நட்டு வளர்த்து பரமரித்த மரம் அது. மூதாட்டி பிரியமுடன் வளர்த்த மரம் தக்க சமயத்தில் அவரின் உயிரைக் காப்பாற்றியது.

**மர வழிபாடு:**

மரங்களைப் பாதுகாப்பதற்காகவே மரங்களை வழிபடும் முறை ஏற்பட்டிருக்கலாம். 'மொகஞ்சதாரோ காலம் தொட்டக்கம் மர வழிபாட்டுமுறை இருப்பதாக அறியப்படுகிறது. மரம் வளர்த்தல் உல்குக்குச் செய்யும் நற்பணிகளில் ஒன்று. இதனால் உலகமும் அதிக பொலிவைப் பெறும். தாவர மண்டலங்களுடன் அன்பாக, பிரியமாக, நேசமாக நடந்து மரம், செடி, கொடி, தாவரங்களின் உணர்வுகளுக்கு உரிய மதிப்பளிப்போமாக.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் பல இடங்களில் மரவழிபாடு தோன்றிய விதத்தை 1962இல் வெளிவந்த 'ஈழத்து வாழ்வும் வளமும்' என்ற தனது நூலில் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் இருந்த கலாநிதி க. கணபதிப் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கேசியர் ஆட்சியின்போது போத்துக்கேசப் படைகள் வன்னி இராச்சியத்தைக் கைப்பற்ற, இந்தியாவிலிருந்து வந்து வன்னியை ஆண்டுகொண்டிருந்த வன்னி அரசிகளான வன்னிமைப் பெண்களின் படைகளுடன் உக்கிரமான போர் நடத்தியது. ஆறு வன்னி அரசிகளே போர்க்களத்தில் தளபதிகளாக ஆண்கள் போல் மாறுவேடத்தில் நின்று போர்புரிந்தார்கள். அவர்களது பணிப்பெண்ணும் மாறு

வேடத்தில் நின்று போர்புரிந்தார். வன்னி அரசு போர்த்துக்கேசர் படைகளிடம் வீழ்ச்சியடைந்ததும் வன்னி அரசிகளும் பணிப்பெண்ணும் எதிர்படைகளிடம் பிடிபடாமல் தற்கொலை செய்துகொண்டனர்.

வன்னி அரசிகளான வன்னிமைப் பெண்களின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல ஊர்களில் தாழை, சாவம்பை, மருது, வேம்பு, ஆலமரம் ஆகிய மரங்களை நட்டு வழிபட்டனர். வன்னிமைப் பெண்களை நாச்சிமார் என அழைத்ததால் நாச்சிமார் வழிபர்டாகியது. நாச்சி என்பதற்கு தலைவி அல்லது வழிகாட்டுபவர் என்பது பொருள். அத்துடன் வன்னிமை குடும்பத்தைச் சேர்ந்தவர்களை நாச்சிமார் என அழைத்தல் மரபு போலத் தோன்றுகிறது என விளக்குகிறார் பேராசிரியர். காலப்போக்கில் அவ்விடங்களில் கட்டடங்களை நிர்மாணித்து உருவச்சிலைகளை வைத்து நாச்சிமார் கோவில் களாக மாறிவிட்டன.

இவ் வழிபாட்டு முறை 'மொகஞ்சதாரோ' காலம் தொடக்கம் திராவிடர்களிடமிருந்து வந்த மர வழிபாட்டு முறையாகுமெனக் கூறலாம் எனப் பேராசிரியர் அவர்கள் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கொண்டாட்ட தினங்களில் மரங்களை நடுங்கள், அன்பளிப்பாக சிறு மரங்களை, தாவரங்களை வழங்குங்கள். மரங்கள் மனிதர்கள் வாழத் தேவையான பிராண வாயுவை வழங்கி மனிதர்களுக்கு உதவுகின்றன. மரம், செடி, கொடிகள், பயிர் தாவரங்கள் தங்கள் 'உயிரும்', 'உணர்வும்' மூலம் மனிதர்களுடன் இணைகின்றன. குழந்தையைப் போல் அவை வளர்ந்து முதுமை அடைந்து தங்கள் வாழ்வை முடிக்கின்றன. தாவரங்கள் மீதும் அன்பு செலுத்துங்கள்!

**ஹிட்லரின் வதை முகாமில் ஆறுதல் அளித்த மரங்கள்**


Dr. V.Frankl

ஹிட்லரின் (Hitler) சித்திரவதை, கொலை முகாமில் (Concentration Camp) கைதியாக இருந்து தனது மரணத்தை எதிர்நோக்கியிருந்து தப்பிய

மனநோய் மருத்துவ டாக்டர் விக்ரர் பிராங்கில் (Dr. Viktor.E.Frankl) அவர்கள் தனது சித்திரவதை அனுபவங்களையும், மரண அனுபவங்களையும், மரணப் பிடியிலிருந்து தான் தப்பிய விதத்தையும் தனது Man's Search for Meaning என்ற நூலில் விவரமாக எழுதியுள்ளார்.




துன்பங்களிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் மரண அவஸ்தைகளிலிருந்தும் தான் மீண்டு வர தனக்குத் தானே மனப்பயிற்சியும், சிகிச்சையும் கொடுத்துக் கொண்டார். ஏனைய கைதிகளும் துன்பங்களை, துயரங்களை, மன வேதனைகளை, அச்சங்களை இலேசாக கையாண்டு அவற்றிலிருந்து மீண்டுவர மனச் சிகிச்கையை அளித்தார். ஒவ்வொரு கைதியையும் தினம் புதிய புதிய பகிடி, தமாஸ் (jokes) உருவாக்கி பகிர்ந்து கொள்ளும்படி ஆலோசனை கூறுவார். பின்நாளில் தனது பயிற்சியை அவர் Logo therapy என அழைத்தார்.

ஹிட்லரின் பிடியிலிருந்து தப்பிய அவர் ஒஸ்றியா (Austria) வின் தலைநகர் வியன்னாவில் (School of Logo therapy) ஆரம்பித்து பல மனோவியல் டாக்டர்களுக்கு Logo therapy பற்றிக் கற்பித்தார். மனோதத்துவ மேதைகளான சிக்மன்ட்பிரொயிட் (Sigmund Freud), அட்லர் (Adler) வரிசையில் V.E. Frankle உள்ளார்.

சித்திரவதை முகாமில் இருந்த சிலர் துன்பத்தையும், துயரத்தையும், மரணபயத்தையும், தனிமையையும் போக்க அந்த முகாமிற்கு அண்மையில் இருந்த மரங்களைத் தங்கள் குடும்பத்தினர் போல் கருதி உரையாடி மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த முகாமில் சில தினங்களில் இறக்கப்போகும் ஒரு இளம் பெண் ஒருவர் தனக்கு கூறியதை டாக்டர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அப்பெண்ணை அவரது Hut-இல் போய்ப் பார்த்தேன். தனது அருகாமையிலிருந்த மரத்தைச் சுட்டிக்காட்டி "நான் தனிமையில் இல்லாதிருக்கவும், மன ஆறுதலுக்காகவும் அந்த மரத்துடன் தினமும் உரையாடுவேன்" என்று கூறினாராம்.

டாக்டர் விக்ரம் பிராங்க் அந்த மரத்தைப் பார்த்தார். அந்த Chestnut மரத்தில் இரண்டு மலர்கள் அப்பெண்ணைப் பார்த்துக்கொண்டு இருப்பதுபோல் தோன்றியதாம். "அந்தமரம் உங்களுக்கு பதில் அளித்ததா" என்று டாக்டர் கேட்டார். அப்பெண் "ஆம்" என்று பதில் கூறினார். ஆச்சரியப்பட்ட டாக்டர் உங்களுக்கு என்ன கூறியது என்று ஆவலாகக் கேட்டார். "நான் இங்கு இருக்கிறேன்", "நான் இங்கு இருக்கிறேன்", "நான் என்றும் உனக்காக இருப்பேன்" என்று கூறுவதாக அப்பெண் பதில் அளித்தார் என்கிறார். அவரது உள்ளார்ந்த மனதை (Inner Self) தளரவிடாது உறுதியாக இருக்க இந்த எண்ணம் உதவியிருக்கிறது என டாக்டர் குறிப்பிடுகிறார்.

**வளர்க்க வேண்டிய மரங்களை அழிக்காதீர்கள்!**

**அழிக்கவேண்டிய விழிப்புணர்வற்ற செயல்களை வளர்க்காதீர்கள்!!!**

## அத்தியாயம் 17

# பிரமச்சரியம் 'ஓர் உயிர்' தோன்றும் அடிப்படை உரிமையை மீறுகிறதா?

### பரிபூரண மனிதன்

'அறிவு', 'உணர்வு', 'இருப்பு' இவையெல்லாம் ஒருங்கே ஒன்றாக எவருக்குள் செயல்படுகிறதோ அவர் பரிபூரண மனிதன்.

பரிபூரண மனிதரால்தான் பரிபூரணமாக இருக்கமுடியும். பரிபூரண மனிதரின் செயல்கள் அனைத்தும் பரிபூரணமாக இருக்கும். பரிபூரண மனிதரின் பார்வை பரிபூரணமாக இருக்கும். பரிபூரண மனிதரின் வாழ்வு பரிபூரணமாக இருக்கும். பரிபூரண மனிதரால்தான் பரிபூரண உலகை உருவாக்க முடியும்.

ஒவ்வொருவருடைய 'இருப்பும்' (Being) பல நூறு வருடங்களைக் கொண்டதாக இருக்கலாம், ஏன் பல ஆயிரம் வருடங்களாகவும் இருக்கலாம். ஒவ்வொருவரதும் 'இருப்பு' ஆகாயம் போன்று விசாலமானது. அதனால்தானோ மனதை வெறுமையாக்கி காலிபண்ணி ஒன்றும் இல்லாத நிலையாக்கி, எவ்வித எண்ணங்களும் எழாத மனமற்ற நிலையை (No-Mind) அதாவது அந்த வெற்றிட ஆகாயம் போன்ற அந்த மனதை யோகிகள், ஞானிகள் 'பரவெளி' என்றனர்.

மத உணர்வுகள் உலகத்தில் அதன் இயல்பான 'உண்மை' வடிவில் இருந்தால் உலகில் இவ்வளவு துன்பம் இருக்காது. அத்தகைய உலகம் தினமும் நிரந்தர கொண்டாட்டத்துடன் ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கும். இந்த உலகத்தை துறந்தால்

சொர்க்கலோகத்தில் இடம் கிடைக்குமென்பது எவ்வளவு துயரமானது. இவ்வுலகத்தில் இன்பத்தை துறந்தால் மறுஉலகில் அருள் கிடைக்கும் என்பது எவ்வளவு துன்பகரமானது.

உணர்வுகளோ, எண்ணங்களோ, வாதப்பிரதிவாதங்களோ, சிரிப்போ, அழுகையோ எதுவும் இல்லாத முழு அமைதிதான் 'இருப்புணர்வு.' அந்த இருப்புணர்வுதான் 'உண்மை.' அது அறிவால், மூளையால் புரியமுடியாதது. 'இருப்புணர்வு' என்பது அறிவுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டது. அறிவையும், புலன்களையும் கடந்து அப்பாற்சென்ற யோகிகள், ஞானிகள் மரணநிலையை நேரடியாக அனுபவித்து அதற்கப்பால் சென்று 'ஆன்மா'வின் நிலைகளையும் ஞானக்கண்ணால் பார்த்து மீண்டும் தங்கள் உடலுக்குள் பிரவேசித்து தாங்கள் நேரடியாகத் தரிசித்த 'உண்மைகளை சீடர்களுக்கு விளக்கி அந்த 'உண்மைகளை'ச் சீடர்களுக்கு உணர்தியுள்ளார்கள்.

**மஹாமுத்ரா :**



இற்றைக்கு ஆயிரத்து நூறு வருடங்களுக்கு முன்பு திபெத்திலுள்ள லாப் (Lab) மாகாணத்தில் வாழ்ந்த மிகப்பெரும் தந்திரா பெண் ஞானியான (Tantric Sage) மாசிக்லப்றோன் (Machig Labdron) தனது *99* வது வயதில் தனது சீடர்களுக்கு 'மஹாமுத்ரா' (Maha Mudra) வை வெளிப்படுத்திய் நிலையில் ஆகாயத்தை நோக்கி மேலே பறந்து சென்று பிரபஞ்சத்தினுள் பிரபஞ்சமாகச் கலந்து விட்டார். இவர் போன்ற பல ஞானிகள் காஷ்மீரிலும் திபெத்திலும் வாழ்ந்து மேலே பறந்து மறைந்துள்ளார்கள் என 'தந்திரா' ஏடு கூறுகிறது. இவர்கள் வாழ்க்கையின் படிநிலைகளை இயல்பாகக் கடந்தவர்கள்.

நான்கு முத்திராக்களைப் பற்றி யோகிகள் கூறுகிறார்கள் - கர்ம முத்ரா (Karma Mudra) அது 'செயலை'ப் பற்றியது, ஞான முத்ரா (Gynana Mudra) இது 'அறிதலை'ப் பற்றியது, சமய முத்ரா (Samaya Mudra) இது 'கால'த்தைப் பற்றியது எனலாம், மஹா முத்ரா (Maha Mudra) இது இடம் அல்லது 'பரவெளி'

பற்றியது. இது ஒருவருடைய உள்ளடக்கிய மையம். இந்த மையத்தில்தான் ஒன்றுமற்ற (Non Self) பரந்த ஆகாயம் உள்ளது (Emptiness). உள்ளடக்கிய உண்மை நிலையை அறிந்துகொள்ள ஒருவர் தன்னுள் மிக ஆழமாகச் செல்லவேண்டும். இந்த நான்கு முத்திரைகளும் உடைக்கப்பட்ட பின் ஒருவர் பரவெளி அடைந்துவிடுவார் என புராதன புனித ஏடான தந்திரா (Tantra) கூறுகிறது.

இந்தப் பிரபஞ்சம் பற்றி அதிகமாகக் கற்ககற்க குறைவாக அறிந்துகொண்டதான உணர்வு ஏற்படுகிறது. பிரபஞ்சம் பற்றி அறிந்துகொள்ள, அறிந்துகொள்ள இந்தப் பிரபஞ்சத்தின் இரகசியமும் அதிகரித்துக்கொண்டே போகிறது.

பகலில் ஆகாயத்தில் சூரியனைக் காண்கிறோம். அதன் தாக்கம், வெயில், சூடு, வெக்கை, வெப்பத்தன்மை என்றெல்லாம் பெரிதாக இருக்கிறது. ஆகாயமே நெருப்பாகத் தெரிகிறது. இரவு வேளைகளில் ஆகாயத்தில் கண் சிமிட்டும் நட்சத்திரச் சமுத்திரத்தைக் காண்கிறோம். நமக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி ஒரு அனுபவத்தை ஏற்படுத்துகிறது. சூரியன், நட்சத்திரம் இவை இரண்டுமே ஆகாயத்தின் பிரமாண்டமான விசாலத்தோடு ஒப்பிட்டால் மிகச் சிறியவைகள்தான். சுருக்கமாகச் சொன்னால் சூரியனும் ஒரு நட்சத்திரம்போல்தான். ஆனால், நம் புரிதலில் அப்படித் தோன்றுவதில்லை. உண்மையான 'இருப்பே' அந்த ஆகாயத்தின் பிரமாண்டமும், வெற்றிடமும், விசாலமும், பரவெளியும்தான்.

**அனுபவம்தான் கடவுள்**

ஒருவருக்குள் ஏற்படும் அனுபவம்தான் 'கடவுள்.' அந்த அனுபவத்தை உணரும்போது கடவுளை உணருகிறார்கள். அது சுகமாக இருக்கலாம், சுமையாக இருக்கலாம், மகிழ்ச்சியாக இருக்கலாம், அலுப்பாக இருக்கலாம், இன்பமாக இருக்கலாம், துன்பமாக இருக்கலாம், அழுகையாக இருக்கலாம், சிரிப்பாக இருக்கலாம், வேதனையாக இருக்கலாம், வெறுப்பாக இருக்கலாம். இது எப்படியும் இருக்கலாம். ஆனால் அனுபவம் அது அனுபவம்தான்.

கவிஞர் கண்ணதாசன் எழுதிய, எப்போதோ வாசித்த ஒரு கவிதை எனது ஞாபகத்தில் உள்ளது. எனது நினைவில் உள்ள

அர்த்தமுள்ள அந்தக் கவிதையை உங்களுடன் இங்கு பகிர்ந்து கொள்கின்றேன்.

**கடவுளிடம் மனிதன்...**

பிறப்பு எனப்படுவது யாதெனக் கேட்டான்,
பிறந்து பார் என்றார்,
முதுமை எனப்படுவது யாதெனக் கேட்டான்,
முதிர்ந்து பார் என்றார்,
இறப்பு எனப்படுவது யாதெனக் கேட்டான்,
இறந்து பார் என்றார்,
அனுபவம் எனப்படுவது யாதெனக் கேட்டான்,
அனுபவித்துப் பார் எனச் சொன்னார்
அனுபவித்தேதான் உணர்வது அறிவு எனில்
ஆண்டவனே 'நீ' எதற்கு என்றான் கடவுளிடம்,
அந்த 'அனுபவமே' நான்தான் என்றார் கடவுள்.

**பிரமச்சரியம் ஆன்மிகமா?**

ஆழ்ந்த ஆன்மிகப் பயிற்சி எனக் கருதப்படுகிற பிரமச்சரியத்தை ஆழ்சிந்தனையில் பார்த்தால் இன்னொரு ஜீவன் உடல் எடுக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் நீக்கப்படுகிறது. ஆன்மாவுக்கு இன்னொரு ஸ்தூல உடலை உருவாக்கக்கூடிய சந்தர்ப்பம் நிராகரிக்கப்படுகிறது. மீண்டும் மீண்டும் மறு சுற்றில் மனிதகுலம் தோன்றும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது. ஆழ்ந்த ஆன்மிகம் திருமணத்தை தவிர்க்கிறதா? இந்து மதக் கடவுளர்கள் திருமணம் செய்து, பிள்ளைகள் பிறந்து, குடும்பமாக வாழ்ந்ததாக கதைகள் கூறுகின்றன. புத்தர் ஞானமடைந்ததும் தன் மனைவி மகனைச் சென்று பார்த்தார். சமணமத ஞானி மஹாவீரர் ஞானியாக முன் மனைவி, பிள்ளையுடன் வாழ்ந்ததாக சில நூல்கள் கூறுகின்றன, சில நூல்கள் மறுக்கின்றன.

ஆழ்ந்த ஆன்மீகம் பிரமச்சரியத்தை வலியுறுத்துகிறதா? இது மனித இனவிருத்தியின் அடிப்படை உரிமையை மீறுகிற செயல் இல்லையா? ஒரு உடலை உருவாக்குவதற்கு இருக்கிற அடிப்படைத் தன்மைகள் நசுக்கப்படவில்லையா? மீண்டும் பிறப்பதற்குக் காத்திருக்கும் 'ஆன்மாவை' தடுக்கலமா? ஓர் உயிர் தோன்றுவதற்கு ஓர் உயிரான நீங்கள் எப்படித் தடையாக

இருக்கமுடியும்? சகல மதங்களும் 'உயிர்' தோன்றுவது கடவுள் செயல் என்கின்றன. எனவே இது 'கடவுள் கொள்கை' ஆகிறது. அது கடவுள் விருப்பமாகிறது, அது கடவுள் கட்டளை யாகிறது. அதை மீறுதல் கடவுளுக்கு எதிரானதாகாதா? ஆன்மீகம் இயற்கைக்கு எதிரானதல்ல, இயற்கையுடன் இணைந்தது.

மேற்குலக நாடுகளில் 'உடலுறவு - பாவம்' என்ற கருத்து நிலவிக்கொண்டிருந்தபோது இந்தியாவில், சீனாவில் ஞானிகள் அந்த உறவை 'தியானநிலை', 'சமாதிநிலை', மனதைக் கடந்த 'பரவச நிலை' போன்ற நிலைகளுடன் ஒப்பிட்டனர். சாந்தோக்கிய உபநிடதம் (Chandogya Upanishad) "ஆனந்தம், மகிழ்ச்சி, இன்பம் இவை வாழ்க்கையின் அடிப்படை என்றும் பாலியல் உறவில் ஈடுபட்டு அந்த ஆசையைக் கடந்து அப்பாற் செல்ல மோட்சம் அடையலாம்' என்றும் கூறுகிறது. ஆண் - பெண் உறவின் இன்பத்தின் உச்ச நிலையின் மூலமாக பேரானந்த சமாதி நிலையை அடைந்து, அந்த சமாதி நிலையை அறிந்துகொண்டால், அந்த உறவு பேரின்ப நிலையை ஞாபகப்படுத்தும் எனவும் அப்பொழுது இந்த உலகத்திலுள்ள அனைத்துமே கடவுளால் நிரப்பப்பட்டிருப்பதை உணர்த்தும் என்கிறது. தாம்பத்திய உறவில் ஏற்படும் அந்த 'பரவச நிலையை' தியானநிலையுடன் ஒப்படுகிறது தந்திரா (Tantra). முனிவர்கள், யோகிகள், ஞானிகள், மகான்கள் தியானத்தின் மூலம் ஞானநிலையில் தன்னுணர்வுடன் அந்த பேரானந்த பரவச நிலையை அடைகின்றனர். தியானமாக இருந்தாலென்ன, தூக்கமாக இருந்தாலென்ன அவர்கள் தன்னுணர்வை இழப்பதில்லை. தூக்க ஓய்வுகூட அவர்களது உடலுக்குத்தான்.

ஞானிகள், முனிவர்கள், யோகிகள் தியானம் மூலம் தங்களுக்குள் பயணித்து தங்களுக்குள் இருக்கும் பெண் தன்மையுடன் சேர்ந்து அந்த 'பரவச நிலையை' அடைந்தனர். பெண் ரிசிகள் தங்களுக்குள் உட்பக்கமாகப் பயணித்து தங்களுக்குள் இருக்கும் ஆண் தன்மையுடன் சேர்ந்து அந்த 'பரவச நிலையை' அடைந்தனர்.

உள்ளே இருக்கும் 'பெண்'ஐத் தேடுகிறான் 'ஆண்',

உள்ளே இருக்கும் 'ஆண்'ஐத் தேடுகிறாள் 'பெண்'

ஒவ்வொரு ஆணுக்குள்ளும், ஒரு பெண்ணும் - ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒரு ஆணும் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆணும் தனக்குள்ளிருக்கும் பெண்ணைப்போல ஒருவரை வெளியே தேடுகிறார். ஒவ்வொரு பெண்ணும் தனக் குள்ளிருக்கும் ஆணைப் போல ஒருவரை வெளியே தேடுகிறார். வெளியேயிருப்பவரும், உள்ளேயிருப்பவரும் ஒரேமாதிரி அமைந்துவிட்டால் அது ஓர் அற்புதமான அனுபவ உலகமாக மலர்கிறது. கணவனுக்குள்ளிருக்கும் பெண்ணும், மனைவிக்குள்ளிருக்கும் ஆணும் ஒரேமாதிரி பொருந்திவிட்டால் அவர்கள் வாழ்வு சிறகடித்து வானுயரப்பறக்கிறது.

**'உடலே அடிப்படை உண்மை' என்கிறது தந்திரா (Tantra)**

காம (Kama), அர்த்த (Artha), தர்ம (Dharma) மூன்றும் செவ்வனே நிறைவுசெய்த ஒருவர் மோட்சம் அடைவார் என வத்சாயனா முனிவர் மேலும் கூறுகிறார். மனதையும், ஆன்மாவையும் உள்ளடக்கியதே 'காம' என்கிறார்.

காம - அன்பு, காதல், பாலியலுறவு.

அர்த்த - சமூக, அரசியல், பொருளாதார ஈடுபாடுகளும், செயல்பாடுகளும்.

தர்ம - ஆன்மிக செயல்கள்.

இந்த மூன்றும் செவ்வனே ஈடுபட்டு, ஒருவர் தன்னை அவற்றில் சமர்ப்பித்து அவற்றை முழுமையாக அனுபவித்து பூரண வாழ்க்கை வாழ்ந்திருந்தால் அத்தகையவர்கள் தொடர் பிறப்புச் சுற்றிலிருந்து விடுதலையாகி மீண்டும் பிறக்க மாட்டார்கள் என வத்சாயனர் கூறுகிறார். தெளிவாகச் சிந்திக்கும் திறன் கொண்டவர் மாத்திரமல்ல ஆழ்நிலைத் தியானத்தில் வசப்பட்ட ஞானி இவர். கிறிஸ்துவுக்கு முந்திய பழைய காலத்தில் கிழக்கில் ஆண் - பெண் உறவை தெய்வீகமாகப் பார்த்திருக்கிறார்கள்.

ஆண் - பெண் உறவு நிலைகளைப் பற்றிய முதன் முதல் நூல் உலகிலே சீனாவில்தான் கி.மு. 2700 காலப் பகுதியில் வெளிவந்தது. இந்தியாவில் கி.மு. 800 காலப் பகுதியில் சிவதகேது (Shvetaketu) என்ற ஞானி 'காமசாஸ்திர' என்ற நூலை



எழுதினார். கி.பி. 300 காலப்பகுதியில் பட்டாளிபுத்ரா நகரில் (தற்போதைய பட்னா) வாழ்ந்த பிராமண வேதியக் குடும்பத்தைச் சேர்ந்த வாத்சாயன முனிவர் ஆழ் சிந்தனையிலும், ஆழ்நிலைத் தியானத்திலும் கரைகண்ட இம் முனிவர் 'காமசூத்திரத்தை' அருளினார். இவர் கல்வியும், ஞானமும் மிக்கவர். காசியில் வேதமும், உபநிடதமும் கற்றுத் தேறியவர். புலன் இன்பம் ஆசையைத் தீர்ப்பதற்கல்ல, அது ஆன்மிகத்துடன் தொடர்புடையது என்கிறார். சந்திரகுப்தர் ஆட்சிக் காலத்தில் தன்னிறைவுடன் இந்தியா செழிப்படைந்திருந்தபோது இயல், இசை, நாடகம், நாட்டியம், அறிவியல், விஞ்ஞானம் இவற்றுடன் காமசூத்திர விளக்கமும் மக்கள் மத்தியில் நன்கு பரவியிருந்ததாக சில ஏடுகள் கூறுகின்றன.

குப்தருடைய ஆட்சிக் காலத்தில் பட்டாளிபுத்ரா தற்போதைய லண்டன், நியூயோர்க் நகர்கள் போல சுறுசுறுப்பாக இயங்கின. பாட்டாளிபுத்ரா உலகில் பாலியல் விளக்கத்தில் முன்னோடி நகராகவும் விளங்கியது. கி.பி 1400 காலப்பகுதியில் இந்தியாவைச் சேர்ந்த புலவர் கல்யான்மால் (Kalyanmall) 'அனங்கறங்க' (Anangaranga) என்ற நூலை வெளியிட்டார். கி.பி. 1200 காலப்பகுதியில் ஜசோதரா என்பவர் மனுஸ்ம்ருதி, நயன சூத்திரா, மார்க்கண்டேய புராணம், பரத முனிவரது நாட்டிய சாஸ்திரா, நித்திய சாஸ்திர, காம சூத்திரா ஆகிய ஏடுகளிலிருந்து தகவல்களைத் திரட்டி எடுத்து 'ஜயமங்கள' என்ற நூலை வெளியிட்டார். ஐரோப்பாவில் ரோமாபுரியிலும், கிரேககத்திலும் பல ஓவியங்கள், பல சிற்பங்கள் ஆண்-பெண் உறவைத் தத்துவார்த்தமாக விளங்கவைத்தன.

வத்சாயனாமுனிவர் காமசூத்திராவை மதமாகப் பார்க்கிறார். மேற்குலகம் குற்றமாகவும், பாவச் செயலாகவும் பார்த்தபோது கிழக்கு அதை ஆன்மிகமாகப் பார்த்தது. சிவனையும், பார்வதியையும் முன்னிலைப்படுத்தித்தான் இம் முனிவர்

விளக்குகிறார். உறவின் சில நிலைகளைக் கடவுளின் பெயர்களினால் அழைக்கிறார். காமசூத்திராவைத் தழுவி உலகில் பல மொழிகளில் பல நாடுகளில் ஏராளமான நூல்கள் வெளிவந்துவிட்டன. காமசூத்திராவுக்கு இணையான நூல் இதுவரை உலகில் வெளிவரவில்லை. மேற்கத்தைய நாடுகள் உயிரோட்டமான இந்நூலை மையமாக வைத்துத்தான் பாலியல் துறையில் ஆய்வுகள், ஆராய்ச்சிகள் செய்கின்றன. இதுவரை உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது வாத்சாயன முனிவரது இந்நூல்தான். இனம், மொழி, நிறம், மதம், நாடு என்று எல்லா எல்லைகளையும் கடந்து உலகம் முழுக்க ஏற்றுக்கொண்ட ஒரு பொது மனிதர் இவர். இவரை உலகின் பொதுப் பிரஜை என்று அழைக்கலாம். உலகத்தில் எவ்வித தடையுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது இவரது நூல்.

இவரது நூல் உலகில் பல மொழிகளில் மொழி பெயர்ப்புக்கு உள்ளாகி உலக சாதனை படைத்துவிட்டது, அத்துடன் பாலியல் துறை ஆராய்ச்சி நூலாகவும் இன்று வரையுள்ளது. ஆனால் இந்நூலைத் தவிர்த்து ஏனைய நூல்களைப் பட்டியல் போட்டு, பிற மொழிகளில் அதிக நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டதாகக் கூறுவது நாகரிகமாகக் கருதப்படுகிறது. இந்த முனிவருக்கு விழா எடுப்பதில்லை. இவரது நூலைப் பற்றிய பட்டிமன்றம் நடப்பதில்லை. இவர் மறைக்கப்பட்ட மனிதராகவே இருக்கிறார்... ஏன்?

சமுதாயம் பாலியலை அசிங்கமாக்கிவிட்டது. ஆனால் அதே சமுதாயம் 'உறவிலும்' ஈடுபட்டுக்கொள்கிறது. மதம் குற்ற உணர்வை ஊட்டுகிறது. மனைவியை, காதலியை துறந்தால் மெய்யறிவு கிட்டும் என்று மதங்கள் கூறுகின்றன. 'காதலையும்', 'உறவையும்' மதங்கள் இயல்பான 'நிகழ்வு' என்று ஏற்றுக்கொள்வதில்லை. மனிதர்களுக்குள் ஆழமாக ஊறிப் போயிருக்கும் இந்த மனக் கட்டுத்திட்டம் பெரும்பான்மை யான மனிதர்களுக்கு உண்மை போலத் தோன்றுகிறது. 'உயிர்கள்' முதன்முதலில் உருவாவது படுக்கை அறையில்தான். கணவனும் மனைவியும் சண்டைபோடுவதும் அதே படுக்கை அறையில்தான். அன்பானவர்களாக இருந்தால் அந்தப் படுக்கை அறையை சண்டைக்குப் பயன்படுத்தியிருக்கமாட்டார்கள். ஏனென்றால் 'உயிர்கள்' தோன்றும் புனித இடமல்லவா அந்தப் பள்ளியறை.

**ஆண் - பெண் உறவும் ஆன்மிகமே :**

வீடு பல உல்லாச அறைகளையும், நீச்சல் தடாகங்களையும், பூங்காவையும் கொண்ட பளிங்கு அரண்மனையாக இருந்தாலும் மிக்க சக்தி வாய்ந்தது. கணவன் - மனைவி சேரும் அந்த படுக்கை அறைதான். அந்த அறை தியான மண்டபம் போன்றது. தியான மண்டபம் ஒருவர் தனது மனதை ஒருநிலைப்படுத்தி மனதைக் கடந்து அதற்கு அப்பால் சென்று தன்னைக் கரைத்து பரவசநிலை அடைகிறார். அதேபோல கணவன் - மனைவி இருவரும் சேரும் அந்த பள்ளியறையில் இருவரும் ஒருவராகி மனதைக் கடந்து அதற்கு அப்பால் ஒரு சில வினாடிகள் தங்களைக் கரைத்து தியானநிலை போன்றே ஒரு பரவச நிலை அடைகிறார்கள். தியான அறை எப்படி புனிதமாகிறதோ அதே மாதிரி அந்தப் படுக்கையறையும் புனிதமானது. தியான அறைக்குள் ஆழ்ந்த பக்தியுடன் நுழைவது போல, படுக்கை அறைக்குள்ளும் ஆழ்ந்த பத்தியுடன் நுழைய வேண்டும். அதனால்தான் காமசூத்திராவும், தந்திராவும் ஆண் - பெண் உறவை 'தியானம்' என்கின்றன. சினிமாப் படங்களில் அலங்கரிக்கப்பட்ட அந்த அறைக்குள் கணவன் - மனைவி பக்தியுடன் பிரவேசிப்பதுபோல் காட்சியமைத்திருப் பார்கள். அதில் தத்துவார்த்தமான பல உண்மைகள் உண்டு.

கணவன் - மனைவி உண்மையான அன்புடன் இருந்தால் ஒருவரது மகிழ்ச்சியை மற்றவர் தனது மகிழ்ச்சியாக எடுத்துக் கொள்வார். அன்புடன் இருந்தால் கணவன் - மனைவி ஒருவரையொருவர் உடைமையாகக் கருதமாட்டார்கள். தம்பதிகளுக்கிடையில் வரும் பிரச்சினைகள் அனைத்தும் 'தன்னுடமை ஆதிக்கத்திலிருந்து'தான் வருகிறது. 'அன்பு' எப்போதும் தலையீடு இல்லாமல், அதிகாரம், அகங்காரம் எதுவுமில்லாத முழுச் சுதந்திரத்தையே வழங்கும். அன்பு இல்லையேல் ஆதிக்கம், அகங்காரம் நிலவும். இங்கு கணவன் - மனைவி ஒருவரையொருவர் காதலிக்கவில்லை, 'அகங்காரத்தை' காதலிக்கிறார்கள்.

குடும்பத்தில், நட்பில், உறவில் எதைச் செய்தாலும் கடமையாக நினைக்கக்கூடாது. எப்பொழுது கடமையாகக் கருதப்படுகிறதோ அப்போதே குடும்ப ஈர்ப்பு இறந்துவிட்டது. அப்போது வாழ்வு தீர்க்க முடியாத பிரச்சினைகளைக்

கொண்டதாகிவிடுகிறது. அன்பும், கருணையும் இல்லாமல் கடமைக்காக செய்யும்போது நமக்கு நாமே தீங்கு செய்கிறோம், அதைப் பெறுபவருக்கும் தீங்கு செய்கிறோம். அதைப் பெறுபவரிடமிருந்து நன்றியும், பிரதியுபகாரமும் அதனுடன் எதிர்பார்ப்பும் சேரும்போது இது ஓர் அசிங்கமான வியாபாரமாகிறது.

எதையும் கருணையுடனும் அன்புடனும் செய்யும்போது அங்கு மகிழ்ச்சியைத் தவிர வேறு எதுவுமில்லை. கடமை அப்படியில்லை. கடமை செய்பவர்கள் கடமை மூலம் ஆதிக்கம், அதிகாரம் செய்கிறார்கள். இது அரசியல்தனமானது.

ஆண் - பெண் உறவை 'ஞானநிலை' எனக் கிழக்கில் இருக்கும் ரிக்ஷிகள், ஞானிகள் ஆன்மிகமாகப் பார்த்தபோது மேற்குலகம் அந்த உறவை 'பாவச் செயல்' எனப் போதனை செய்து குற்ற உணர்வை விதைத்தது. கிழக்கு தெளிவாக இருந்தளவுக்கு மேற்கு தெளிவாக இருக்கவில்லை. கிழக்கும், மேற்கும் இன்றும் வித்தியாசமாகவே நோக்குகிறது. கிழக்கு 'தெய்விகம்' என்கிறது, மேற்கு 'இன்பமகிழ்ச்சி' என்கிறது.

**ஆன்மிகத்தில் 'அடக்குதல்' இல்லை**
**ஆனால் 'கடத்தல்' நிகழ்கிறது:**

ஆன்மிகத்தில் 'அடக்குதல்' என்பது இல்லாமல் 'கடத்தல்' என்பதே இருக்கமுடியும். 'அடக்குதல்' ஒரு பொய்யான நிலையில் ஒருவரை வைத்திருக்கும். கோபம், பேராசை, பாலுணர்வு இவற்றை அடக்க அடக்க இவை அடிமனதில் போய்த் தேங்கிவிடும். சந்தர்ப்பம் வரும்போது அபாயகரமாக அவை வெளியே வந்து தனது வேலையைச் செய்யும். அப்போது அவை வலிமை மிகுந்ததாக மாறிவிடும். 'ஆசைகளை'க் கடந்து அப்பால் செல்லவேண்டும். ஆசைகளைத் தாண்ட வேண்டும், அடக்கக்கூடாது. தோன்றும் ஆசைகளுடன் இணையாது அவைகளை வேடிக்கையாகப் பார்ப்பதுபோல பார்க்க காலப்போக்கில் அப்படியான ஆசைகள் மனதிலிருந்து கடந்துசென்று அவை வலிமையிழந்து தோன்றாது தானாக மறைந்துவிடும். அடிமனதிலிருந்து கனவாகவும் தலைகாட்டாது இல்லையேல், அடக்கப்பட்டவை, அடைய முடியாதவை, ஏக்கங்கள், பயங்கள் கனவாக தலைகாட்டிவிடும்.

ஒருவர் வாழக்கூடாத வகையில் வாழ்வதுதான் அடக்குதல் என்பதாகும். ஒருவர் வேறொருவராக இருப்பதே அடக்குதலாகும். ஒருவர் தான் செய்ய விரும்பாததை செய்வதுதான் 'அடக்குதல்.' ஒருவர் தன்னைத்தானே அழித்துக் கொள்வதுதான் அடக்குதல். வாழ்க்கை என்பது வெளிப்படுத்தலும், புதுமையை உண்டாக்குவதும், மகிழ்ச்சி நிறைந்ததும்தான். 'வாழ்க்கை' உயிர்த் தன்மையானது. அந்த உயிர்த்தன்மை எங்கெல்லாம் அழைத்துச்செல்ல விரும்புகிறதோ அங்கெல்லாம் தயங்காமல் செல்லலாம். இயல்பாக வாழ்ந்தால் எதையும் அடக்கத் தேவையில்லை, நடித்து வாழ்ந்தால் 'குழப்பம்' அதிகமாகும்.

ஒருவர் தன்னை யாரென்று அறியாதவரை அவருக்குள் 'குழப்பம்' இருக்கத்தான் செய்யும். எந்தவிதமான தோற்றத்தை ஏற்படுத்திக்கொண்டாலும் அது உண்மையில்லை. மற்றும் அவர் அவராகவும் இருக்கமுடியாது. ஏதாவதொன்றுக்கு எதிராக இருந்தால் அதிலிருந்து வெளியே வர தந்திரமான மனம் ஏதாவதொரு வழியைக் கண்டுபிடிக்கத்தான் செய்யும். உடல் இன்பத்தை தாண்டுவது அடக்குவதால் அல்ல, வெறுப்பாலல்ல, அதைப் புரிந்துகொள்வதால்தான் ஏற்படவேண்டும். புத்தர், மஹாவீரர், இயேசு, நபிகள்நாயகம், கபீர், போதிதர்மர், சீரடிபாபா, இராமகிருஷ்ணர், இரமணர், போன்ற பல மகான்கள் ஆழமாக ஊடுருவிச் சென்றதால்தான் அதைக் கடந்தவர்கள். இந்துமதக் கடவுள்களும் மனைவி பிள்ளைகளுடன் குடும்பமாக வாழ்ந்ததாகத்தான் கடவுளர் கதை கூறுகிறது. அக்கதைகளின்படி ஆசைகளை அடக்குதல் அல்ல ஆசைகளைக் கடத்தல்தான் நிகழ்ந்துள்ளது.

மனிதர்கள் பொதுவாக காதல் வயப்படுகிறார்கள். மூளையால் மிகப்பெரும் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிமார்கள் கூட 'காதலை' அறிவுப்பூர்வமாக விளங்கப்படுத்த முடியாது, காதலை உணர மட்டும்தான் முடியும். அறிவால் காதலைப் புரிந்துகொள்ள முடியாது. காதலை விஞ்ஞான பூர்வமாக விளங்கப்படுத்த முடியாது. 'காதல்' என்பது சர்வ சாதாரணமாகவே கூறப்படுகிறது, உரையாடப்படுகிறது, கவிதையாகப் பாடப்படுகிறது. உண்மையில் காதலை அப்படி அதற்குள் அடக்கிவிட முடியாது, வியாக்கியானம் செய்ய

முடியாது. அத்தனை விளக்கங்களும் உண்மைபோல் தோன்றும் கற்பனையே! காதல் எந்த விதிமுறைகளுக்கும் உட்பட்டது அல்ல.

**காதலில் விழுதல் அல்ல, எழுதல்:**

மனதில் பொங்கும் உணர்வுதான் காதல். 'காதலில் விழுதல்' (Fall in Love) என்றுதான் உலகின் அநேக மொழிகளில் கூறப்படுகிறது. 'விழுதல்' என்ற சொற்பிரயோகம் மிகவும் தவறானது. இந்தச் சொற்பிரயோகம், சமூகமானது எவ்வளவு தூரம் காதலுக்கு எதிர்ப்பாக இருக்கிறதென்பதை எடுத்துக் காட்டுகிறது. இது Negative thinking-ஐ காட்டுகிறது. 'எழுதல்' என்ற சொற்பிரயோகமே சரியானது, அதாவது 'காதலில் எழுதல்' (Rise in Love) என்ற சொற்பிரயோகம் காதலைப் பற்றிய Positive thinking வெளிப்படுத்தும்.

**தேன்நிலவு கற்பனை நிறைந்ததே!**

திருமணத்தைத் தொடர்ந்து வரும் தேன்நிலவு ஒரு கற்பனை. தேன்நிலவு முடிந்துவிட்டதென்றால் கற்பனை முடிந்துவிட்டதென்பதுதான் அர்த்தம். எந்தளவிற்கு எதிர்பார்ப்பு இருக்கிறதோ அந்தளவிற்கு ஏமாற்றமுமிருக்கும். பொதுவாகத் திருமணங்களில் கற்பனை அதிகம். திருமணத்தைப் பற்றிய எண்ணம் கற்பனையில் வளர்கிறது. மனக்கனவில் தம்பதிகள் சஞ்சரிக்கிறார்கள். 'உறவு' ஏற்பட்ட பிறகு அதாவது 'உண்மையை' நேரடியாகச் சந்தித்த பின்பு ஆண் இப்பொழுது முதல் தடவையாக அவளை ஒரு பெண்ணாகவும் அந்தப் பெண் அவனை ஒரு ஆணாகவும் பார்க்கத் தொடங்கு கிறார்கள். 'உண்மை' நிலையில் அங்கே கற்பனை இல்லை. உறவிலும் - நட்பிலும் அதாவது குரு - சீடன், பெற்றோர் - பிள்ளைகள், கணவன் - மனைவி, காதலன் - காதலி, முதலாளி - தொழிலாளி, தலைவர் - தொண்டர், ஆசிரியர் - மாணவர், சுவாமி - அடியார் இவை போன்ற எந்த உறவிலும் கற்பனை கலந்த பகுதியிருக்கவே செய்யும். இந்தக் கற்பனை 'மனதால்' ஏற்பட்டது.

திருமணம் பல பிரச்சினைகளை ஏற்படுத்தும். ஆனால் எதையும் தீர்க்காது... ஏன்? திருமணங்கள் கற்பனைகளிலும், எதிர்பார்ப்புக்களிலும் நிறைவேறுகிறது. அங்கே அதிக கற்பனை

மயக்கம்தான். உண்மையையும், நிஜத்தையும் கற்பனை வெல்ல முடியாது. உண்மை என்றும் உண்மையாகவே இருக்கும், அது மாறாது. கற்பனைக்கு என்றும் உணமையில் நாட்டமில்லை. திருமணம் ஏற்படுத்தும் பிரச்சினைகள் அனைத்தும் எதிர்பார்ப்புக்களாலும், கற்பனைகளாலும் ஏற்படுகின்றன. உண்மையும், கற்பனையும் வெவ்வேறான நோக்குடையவை, வெவ்வேறான பெறுபேறுகளைக் கொண்டவை. திருமணங் களில் 'காதல்' முக்கியமடைவதில்லை.

நல்ல நிறத்துக்காகவும், அழகான மூக்கிற்காகவும், நல்ல கூந்தலுக்காகவும் திருமணங்கள் நடைபெறுகின்றன. மூக்கிற்கும் திருமணத்திற்கும் என்ன தொடர்பு? பதவி, அந்தஸ்து, கௌரவமென்று பல காரணங்களுக்காகவும், சமூக அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்காகவும் கௌரவத் திருமணங்கள் அமர்க்களமாக நிறைவடைகின்றன. தேன்நிலவு மோகம் முடிய அத்தனை கௌரவங்களும் மறைந்துவிடும். திருமணத்திற்கு முன்பு முக்கியத்துவமாகத் தெரிந்த அனைத்தும் திருமணத்தின் பின் முக்கியத்துவமிழந்துவிடும். திருமணத்திற்கும் அவைக்கும் என்ன தொடர்பு? எதுவுமில்லை. 'உறவு' அன்புடையதாக வேண்டும். கவர்ச்சியாகவும், அழகாகவும் தெரிந்த முகம் தேன்நிலவின் பின் சாதாரண முகமாகிவிடும். இப்படியான அனைத்துத் திருமணங்களிலும் கணவன் - மனைவிக்கிடையில் இருக்க வேண்டிய 'காதல்' தோற்றுவிடுகிறது. முட்டாள் தனமான காரணங்களை முன்நிறுத்தி திருமணங்கள் செய்வது போலவே அவர்கள் வாழ்க்கையையும் அப்படித்தான் நடத்து கிறார்கள். அங்கே அன்பில்லை, காதலில்லை. இருக்க வேண்டியவைகள் ஒன்றும் அங்கில்லை.

தன்னுணர்வுடனும், பிரக்ஞையுடனும் (consciousness) விழிப்புணர்வுடனும் (awareness) புரிதலுடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் செயல்படாததால்தான் அவ்வாறு நடைபெறுகிறது. முட்டாள்தனமான காரணங்களுக்காக திருமணம் செய்கிறார்கள். அத்தகைய திருமணங்கள் முட்டாள் தனமான விளைவுகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும் பின்பு மனதிற்குள் தோல்வியுடன், ஏமாற்றத்துடன் தங்களைத் தாங்களே ஏமாற்றி நடித்துக்கொள்கிறார்கள். வாழ்க்கை ஒவ்வொருவரிலிருந்தும் அதிகமான அன்பை, காதலை,

கருணையை, காருண்ணியத்தை, ஆனந்தத்தை, தன்னுணர்வை, பிரக்ஞைத் தன்மையை, விழிப்புணர்வை, நகைச்சுவையுணர்வை, புரிந்துணர்தலை எதிர்பார்க்கிறது. புரிதலும், விழிப்புணர்வும், தன்னையுணர்தலும், பிரக்ஞைத் தன்மையும் கூடக் கூட வாழ்க்கை நீர்வீழ்ச்சி போல் பாயத் தொடங்கும்.

'விட்டுக்கொடுத்து வாழவேண்டும்' என்று கணவன் - மனைவிக்கு காலம் காலமாக கூறும் அறிவுரை மிகவும் பிரபல்யமானது. ஒருவர் ஒருவருக்காக விட்டுக் கொடுக்கப்பட்ட விடயம் வேறு எங்கும் செல்லாது, நேராக அடிமனதில் உறங்கிவிடும். மீண்டும் அதே நிலை தோன்றும்போது அது உறக்கத்திலிருந்து விழித்து மிக்க வலிமையுடன் 'ஏவுகணை' யாகப் பாயும். விட்டுக்கொடுத்தல் ஆணவமனதில் வெற்றி, தோல்வியாக அமைந்துவிடும்.

ஒரு நண்பருடன் எப்படிக் கதைத்துப் பேசுவோமோ அதேபோல் மனம் திறந்து கதைத்து பேசி, நன்மை - தீமைகள், விளைவுகளை விளங்கிக்கொண்டு சரியான 'புரிதலுடன்' வாழ்ந்தால் வாழ்வு நதியைப் போல் ஓடும். புரிதலும், புரிந்துணர்வும் மகிழ்ச்சியான வாழ்வின் உறுதியான அத்திவாரம். விட்டுக்கொடுத்தல் தற்காலிகமானது, புரிதல் நிரந்தரமானது, புரிதல் முழுமையானது.

ஒரு ஆணையும் பெண்ணையும் கட்டாயப்படுத்தி ஒன்று சேர்த்து வாழவைப்பது இயற்கைக்கு புறம்பானது. சமூகம், மதம் இத்தகைய திருமணங்களை இறுக்கமாக்கிவிடுகிறது. சமூகம் என்றும் காதலுக்கு எதிரானதாகவும், திருமணத்துக்கு ஆதரவான தாகவும் இருக்கிறது. பேசி ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங் களில் (Arranged Marriages) சம்பிரதாயம், மரபு போன்ற செயல்களுக்குக் கொடுக்கப்படும் அதிக முக்கியத்துவம் அந்த தம்பதிகளுக்கு கொடுக்கப்படுவதில்லை. காதல் திருமணங்கள் அநேகமாக மகிழ்ச்சியாக அமைவதில்லை, ஏனென்றால் அங்கே அதிக கற்பனை மயக்கம்தான்.

காதலர்களான லைலா - மஜ்னுவையும், அம்பிகாபதி - அமராவதியையும், றோமியோ - ஜூலியட்டையும் எடுத்துக் கொண்டால் இவர்கள் காதலில் ஒருவரையொருவர் சந்திக்க சமூகம் விடவில்லை. ஒருவரையொருவர் சந்திக்க முடியாத

இந்தக் காதலர்கள் இன்று காதலர்களாக நிலைபெற்றுள்ளார்கள், ஏன்? சமூகம் திருமணத்திற்கு ஆதரவாகவும், காதலுக்கு எதிராகவும் இருக்கிறது. சமூகம் காதலை விஷமாக்கிப் பார்க்க விரும்புகிறது. லைலா - மஜ்னுவுக்கும், றோமியோ - ஜூலியட்டிற்கும் ஏற்பட்டநிலை எந்தக் காதலர்களுக்கும் ஏற்படக் கூடாது. சமூகம் அவர்கள் காதலுக்கு குறுக்கே நின்றது. அவர்களால் சேரவே முடியவில்லை. அவர்களைச் சேர்ந்து வாழவிடாத அதே சமூகம், அவர்கள் காதலைப் போற்றுகிறது. சமூகம் மிகவும் தந்திரமானது, அவர்கள் மரணத்தில் தங்கள் கைகளைக் கழுவிக்கொண்டது (ஆணவம், அதிகாரம், கௌரவம் என்கின்ற அடிப்படையில்). அன்று நிலைபெறாத அவர்கள் காதல், இன்று நிலைபெற்றதுபோல் போற்றப்படுகிறது.

பாடசலைகளில், கல்லூரிகளில் நெறிசார் கல்வியும் (Character Education) விழுமியம் சார்ந்த (Ethical aspects) உளவியல் சார்ந்த (Psychological aspects), மருத்துவம் சார்ந்த (Medical aspects), பாலியல் கல்வியும் (Sex Educaltion) இணைத்துக் கற்பிக்கப்பட வேண்டும். சரியான தெளிவு இருந்தால் விபரீதம் ஏற்படாது.

**உலக சுதந்திர தினம்:**

ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாத ஆணும் பெண்ணும் எவ்வித சபலமுமில்லாமல் ஒன்றாகத் தங்கும் நிலை உலகில் உருவாக வேண்டும். ஆணைத் தனக்குச் சவாலாக, அச்சுறுத்தலாக, ஆபத்தானவராக பெண் என்று நினைக்க வில்லையோ, பெண் ஆணின்மீது எவ்வித அச்சமுமில்லாமல் தான் சுதந்திரமாக நடமாடுகிறாளோ அன்றைய தினம் 'உலக சுதந்திர தினமாகும்.'

காமத்திற்கு எதிரான கருத்துக்கள், பேச்சுக்கள், கவிதைகள், கதைகள், பிரச்சாரங்கள் அனைத்தும் ஆணும் - பெண்ணும் ஒருவரையொருவர் சந்தேகப்படச் செய்துவிட்டன. இது விபரீதமாக அமைந்துவிட்டது. பெண் கடத்தல், கற்பழிப்பு, கொலைகள், பல குற்றச் செயல்கள், எயிட்ஸ் நோய் என்று இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது என்று காமத்திற்கெதிரான பிரச்சாரங்கள் நிற்கிறதோ அன்று

ஆபாசப்படங்கள், மஞ்சள் பத்திரிகைகள், ஆபாசச் சஞ்சிகைகள், நிர்வாணப்படங்கள், விபச்சாரங்கள் அனைத்தும் உலகிலிருந்து தானாகவே மறைந்துவிடும்.

**மனிதகுலப் பிறப்பூடாக பிரம்மச்சரியர்ஷர்மா:**

இந்து ஆலயங்களிலுள்ள வணக்கத்துக்குரிய சிவலிங்கம், ஆண் - பெண் இணைப்பின் வடிவம்தான். ஒரு ஆண், பெண்ணை முழுமையாக்குகிறார், ஒரு பெண் ஆணை முழுமை யாக்குகிறார். இருவரும் சேர்ந்து உலகத்தை முழுமையாக்கு கின்றனர். சிவலிங்க வடிவம் மனிதகுலத்தின் பிறப்பையும், அதைக் கடந்து அடையவேண்டிய பிரம்மச்சரியர்க்ஷர்மா நிலையையும், பிரபஞ்ச உண்மை நிலையையும் தத்துவார்த்த மாக உணர்த்துகிறது.

பிரமச்சரியம் என்பது, ஒத்திகை பார்ப்பதால் வருவதல்ல, அது ஒரு முயற்சியும் அல்ல, ஒருவர் மீது திணிக்கப்படக் கூடியதுமல்ல. காமம் காணாமல் போய்விட்ட பிறகு இயல்பாக வருவது பிரமச்சரியம். காமத்தை ஒடுக்கினால் ஆன்மிக உலகம் தனக்குள் அடங்கிவிடும் என்று காட்ட ஒவ்வொரு மதவாதியும் விசேஷ உடையில் நடமாடுகிறார்கள். இது உலகம் முழுக்க பரவியுள்ள ஒரு தோற்றம். காமம் உடலின் ஒரு பக்குவநிலை, இது உடலின் இரசாயன மாற்றம். அது இயற்கையானது. அது எவரது கையிலும் இல்லை. காமம் ஒருவரிலிருந்து விலக பிரமச்சாரியம் இயற்கையாக ஆரம்பமாகிறது.

ஒருவர் 25ஆவது வயது வரைக்கும் தனது ஆற்றல்களை சுலபமாக பெருக்கிக்கொள்ளக்கூடிய காலமாகும். இந்த உலகத்தினுள் இருந்துகொண்டு அடி ஆழம் வரை செல்ல வேண்டும். அதன் பின்பு உலகம் காட்டுவதையெல்லாம் ஒருவரால் பார்க்க முடியும். அவருக்கு 'ஏதோ' ஒன்றை தவறவிட்ட வருத்தம் ஏற்படாது. இருபத்தைந்து வயதுக்குப் பின் இரண்டாவது காலகட்டத்தில் குடும்பவாழ்வு அனுபவமாகிறது. இவர் ஐம்பது வயதைப் பூர்த்தி செய்து மூன்றாவது காலகட்டத்தினுள் பிரவேசிக்கும்போது இவரது பிள்ளை 25 வயதை அடைந்து தனது முதலாவது கட்டத்தைப் பூர்த்திசெய்கிறது. அந்தப் பிள்ளை இரண்டாவது கால கட்டத்தினுள் பிரவேசித்து குடும்பவாழ்வு அனுபவமாகிறபோது

தந்தை தனது மூன்றாவது காலகட்டமான வனப்பிரஸ்த ஷர்மாவை நோக்கிப் பிரயாணம் ஆரம்பிக்கிறார். அதாவது தான் அதுவரை அடைந்த அனுபவங்களை அப்பழுக்கற்று தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்கள். வனப்பிரஸ்தஷர்மா என்பது வனம்நாடிச் செல்வதல்ல அதன் பொருள். பெற்றோர் வனத்திற்குச் சென்றால் தங்கள் அனுபவங்களை அதன் மூலம் பெற்ற அறிவை அடுத்த தலைமுறைக்கு மாற்றிக் கொடுக்க முடியாது போய்விடும்.

அனுபவமும் அன்பும் நிறைந்த ஆசானாகி அனுபவம் மூலம் வழிநடத்தி ஒன்றுமற்ற பற்றற்ற நிலையை அடைய அவர் மனம் அவர் கட்டுப்பாட்டுக்குள் வந்து அவர் வாழ்வைப் பூரணப்படுத்தி முடித்துக்கொள்ள தயாரான நிலையை அடைகிறார்கள் என்பதே வனப்பிரஸ்தஷர்மாவின் பொருளாக இருக்கமுடியும் என்பதே என் அபிப்பிராயம்.

முதுமை தனக்கென ஒரு பெரும் தன்மையைப் பெறுகிறது. அந்தப் பக்குவம் அடைந்துவிட்டால் அதற்கான அழகு வந்துவிடுகிறது. இளமையில் குதூகலத்தைத்தான் பார்க்கலாம். ஆனால் முதுமையில் அமைதி நிறைந்த பொலிவைக் காண முடியும். இளமை ப்ரபரப்பு நிறைந்தது. முதுமை நதியைப்போல் அமைதி நிறைந்தது. இளமை ஆற்றல் உடையது, ஆனால் அதில் பொறுமையிருப்பதில்லை. முதுமையில் மனம் அமைதியாகவிருக்கும். உண்மையில் அப்படிப்பபட்ட மனநிலையில் மட்டுமே ஒருவர் பக்குவமடைய முடியும். உடல் முதுமையடைய மனம் இளமையாகவே இருக்கவேண்டும்.

மகாகவி இரவீந்திரநாத் தாகூர் கூறுவதை இங்கு பார்ப்போம். வயதானவர் ஒருவர் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களினூடே வளர்ந்து, கனிந்து அழகாகத் தோன்று கிறார். அப்போது அவருடைய நரைத்த வெண்மையான தலைமுடி இமயமலைச் சிகரத்தில் உறைந்து கிடக்கும் வெண்பனியைப் போல இருக்கும், சலனமில்லாமல் மிகமிக மௌனமாக மலை உச்சியில் வானத்தைத் தொடுவது போல உயர்ந்திருக்கும். அங்கே மேகங்கள் தலைகுனிந்து மரியாதை செய்யும். அப்படிப்பட்ட முதியவர்களை நாம் குரு அல்லது ஆசான் என்று அழைக்கிறோம்.

காமம் ஒருவரை விட்டு விலகியவுடன் வாழ்க்கை இலகுவாகப் பயணிக்கத் தொடங்கிவிடும். காம உந்தல் சக்தி உலகில் மிக வலுவானதாகும். அதனால்தானே உயிரே தோன்றுகிறது. ஒருவரை உயிர்த்துடிப்போடு வைத்திருப்பதும் அதுதான். இனவிருத்திக்கான உடல் ரீதியான உபாயம் இது. காமம் கரையக் கரைய காதல் உள்ளூர வளர்வதை உணரலாம். காமத்திற்கும், காதலுக்கும் தொடர்பில்லை. இரண்டும் வித்தியாசமான வேறுகுணம் கொண்டவை. வேறு நோக்குடையவை. அவை வேறு பாதை கொண்டவை. காமத்தை காதலென்று காட்ட உடல் தந்திரம் செய்கிறது. காமம் குழந்தைப் பிறப்புக்கு ஈட்டிச் செல்கிறது. காமத்திலிருந்து ஒருவர் விடுதலை பெற்றதும் புத்தம் புதிதாய் மாறி புதுவழியில் வளர ஆரம்பிப்பார். காதல் ஆனந்தம் சார்ந்தது. காதல் புதிய உலகத்தை நோக்கிப் போய்க் கொண்டேயிருக்கும். காமத்திற்கு அந்த வலிமையில்லை. காதல் அந்தச் சிகரத்தைத் தொடும்போது 'உண்மை' அனுபவமாகிறது. உண்மையைப் பற்றி என்ன நினைக்கிறோம் என்பது உண்மையல்ல. ஒன்று என்னவாக இருக்கிறதோ அது தான் உண்மை.



ஒருவரிலிருந்து காமம் முற்றாக நீங்க வானுயரப் பறக்கக்கூடிய சிறகுகள் தன்னிலிருப்பதை உணருகிறார். பிரமச் சரியம் என்பது முயன்று அடைவதல்ல. அது ஒரு முயற்சி அற்ற அடைதலாகும். மகாத்மாகாந்தி அவர்கள் திருமணமாகி மனைவி, பிள்ளைகளுடன் வாழ்ந்தார். அவருக்குள் ஆசைகள் வீழ்ச்சியடைந்து அவர் எல்லாவற்றையும் கடக்க பிரம்மசரிய மானது இயல்பாகவும், இயற்கையாகவும் அவரை வந்தடைந்தது. அவர் அவற்றையும் கடந்து புதிய வழியில் வளர்ந்து உலகில் உயர்ந்து உயர்வானார்.

வாழ்க்கை கொடுக்கும் சந்தோஷங்களை, இன்பங்களை, பேரானந்தங்களை ஒருவர் அனுபவிக்க வேண்டும், அப்போது தான் ஒருவருக்குள் அழுக்காக உறைந்து கிடப்பவை முழுவதுமாக வெளியேறிவிடும். அதுதான் பிரமச்சர்யக்ஷர்மா

என்பதன் பொருளாக இருக்கமுடியும். ஒருவர்தன் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கிற நேரம் வரும்போது எதற்காக என்றாலும் இலேசாக வருத்தப்படாதவராக இருக்க வேண்டும். அப்போது அவர் வாழ்க்கையில் பெறக்கூடிய சந்தோஷங்களை இயல்பாகக் கடந்தவராக இருப்பார். அவர்தன் அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ளக்கூடியவராகவும் இளைய தலைமுறையினரை வழிநடத்தக் கூடியவராகவும் இருப்பார். அந்த அனுபவங்கள் என்றும் உண்மையைத் தளமாகக் கொண்டதாகவே இருக்கும்.

## அத்தியாயம் 18

# மீண்டும் குழந்தையாவோம்!

நிகழ்காலம் - இறந்தகாலம் - எதிர்காலம் என வாழ்வைப் பிரித்து ஒருவித மாயையில்தான் மனிதர்கள் வாழ்கிறார்கள். வாழ்க்கையை நல்லது, கெட்டது எனப் பிரிக்கிறோம். இதனால் வாழ்க்கை இரண்டாகப் பிரிகிறது. ஒரு குழந்தை இந்தப் பிரிவினைகள் எதையும் உணர்ந்திருப்பதில்லை, அதனால் எதையும் எதனோடும் சம்பந்தப்படுத்துவதில்லை. என்றும் குழந்தை கள்ளம் கபடமற்றே இருக்கிறது. எதையும் பிரித்துப் பாராத, வித்தியாசமாக நோக்காத அந்த அப்பாவித் தனமே ஒரு குழந்தையின் தூய்மை.

ஒரு குழந்தை நல்லது - கெட்டது, பாவ - புண்ணியம், நன்மை - தீமை, சொர்க்கலோகம் - நரகலோகம், சாபம் - அருள், சுபதினம் - கரிநாள், அழகு - அவலட்சணம், தூய்மை - மாசு, புனிதம் - அழுக்காறு போன்ற எந்தவித பிரிவினை பற்றியும் உணர்ந்திருப்பதில்லை. குழந்தையின் கோபம் கூடத் தூய்மையானது. ஒருவர் குழந்தைபோல் மாறும்போது தூய்மையாகிறார். ஆனால் அவர் குழந்தையல்ல. குழந்தை எதுவித ஆடையில்லாமல் இருக்கும்போது தன் உடலைப்பற்றி உணர்வதில்லை. குழந்தையைப் பார்ப்பவர்களும் அந்த நிர்வாணத்தை உணர்வதில்லை. குழந்தையின் நிர்வாணத்தில் அப்பாவித்தனம், வெகுளித்தனமெல்லாம் உள்ளது.

வித்தியாசப்படுத்தலும், பிரித்துப் பார்த்தலும் மனதிலிருந்து மறைந்து அவற்றைக் கடந்து அப்பாற் செல்லும்போது ஒருவர் குழந்தையைப் போன்று அப்பாவியாகவும், சற்று வெகுளித்தன முள்ளவராகவும் மாறுகிறார். இராமகிருஷ்ண பரமஹம்சர்,

சீரடிபாபா, இரமண மஹரிஷி, மன்சூர் போன்ற மகான்கள் இம்சிக்கப்பட்ட போதும் வேறுபாடு எதுவும் உணராத அப்பாவிக் குழந்தையைப் போன்றே இருந்தார்கள். பிரித்துப் பார்த்து வித்தியாசப்படுத்தும் அறிவு மறையும்போது இந்த உலகத்தை கள்ளம் கபடமற்ற குழந்தைபோல் பார்க்க முடியும். இதையே இயேசுநாதர் மீண்டும் 'குழந்தையாவாய்' என்கிறார். 'வெறுமை நிலை' என்கிறார் புத்தபிரான். 'ஒன்றும் அற்றநிலை' என்கிறது வேதம்.

மறைஞானிகள் மனம் வழியாகப் பார்ப்பதில்லை. நாம் எதையும் மனம் வழியாகத்தான் பார்க்கிறோம், சிந்திக்கிறோம், பேசுகிறோம், படிக்கிறோம், செயல்புரிகிறோம், விரும்புகிறோம், வாழ்கிறோம். எல்லாமே மனவழி மூலம்தான் நடக்கிறது. அதனால்தான் எதற்கும் விரும்பியபடி அர்த்தப்படுத்திக் கொள்கிறோம். அவை அனைத்தும் மனதின் உற்பத்திகள். எதையும் பிரித்துப் பார்க்கிறோம். 'மாயமே' எங்கள் மனம் தான். உலகமே 'மாயம்' என்பது தவறு.

தூய்மை என்றால் என்ன? புனிதம் என்றால் என்ன? இச் சொற்கள் சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. காலம் காலமாக தூய்மையும், புனிதமும் தெய்விக அந்தஸ்தைப் பெற்ற சொற்களாகக் கருதப்படுகின்றன.

யார் தூய்மையானவர்? யார் புனிதமானவர்? நெறிமுறை களைக் கடைப்பிடிப்பவர் தூய்மையானவரா? மத ஈடுபாட் டுடனும், சமுதாயத்தின் ஒழுங்கு முறைகளுக்கும், விதிமுறை களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதால் 'தூய்மை' ஏற்படுகிறதா? சமுதாயம் ஒருவரை நெறியாளர் என்றால், அவர் சமுதாயத்துடன் அனுசரித்துப் போகிறார் என்பதே அதன் அர்த்தமாகிறது. சமுதாயம் சொல்வதெல்லாம் அவர் பின்பற்றுகிறார் என்றால் அவர் செயலற்றவர்தான். அவர் தன் சொந்த உரிமையைக் கூட வலியுறுத்த முடியாதவராகி விடுகிறார். நெறிமுறைகளோடு கூடிய மத உட்கருத்து தூய்மையையும், புனிதத்தையும் வகுக்கிறதா?

மீண்டும் குழப்பம் ஏற்படுகிறது. இயேசுநாதருக்கு மரண தண்டனை வழங்கிய சமூகம் இயேசுபிரான் நெறிமுறைகளை மீறியதாக கருதியது. சோக்கிரடீசுக்கு மரணதண்டனை விதித்த

சமுதாயம் அவர் நெறிமுறைகளை மீறினார் எனக் குற்றம் சாட்டியது. எனவே இங்கு ஒரு கேள்வி எழுகிறது. நெறிமுறைகள் என்றால் என்ன? யார் அவற்றை வகுக்கிறது?

சீன ஞானிகளான கொன்பியூசியசும் (Confucius), லா-சூ வும் (Lao – Tzu) இருவரும் ஒருவரையொருவர் சந்தித்தபோது:



Confucius



Lao Tzu (Laozi)

**கொன்பியூசியஸ் :** எது நல்லது? எது கெட்டது?

**லா–சூ :** வரையறை என்பது பிரித்துப் பார்த்தலாகும், வரையறை செய்வது உண்மையற்றதை உருவாக்கும்.

**கொன்பியூசியஸ் :** மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும் நல்லவர் களாகவும் இருக்க எப்படிக் கற்றுக் கொடுப்பது?.

**லா–சூ :** வழிகாட்டுதல் குழப்பங்களை உருவாக்கும். மக்களை மக்களிடமே விட்டுவிடுங்கள். இயற்கையே போதுமானது, குழந்தைப் பிள்ளைத்தனத்துடன் சேர்ந்த அப்பாவித் தனமும் வெகுளித்தனமுமே போதுமானது. ஒழுக்கத்தை யாரும் உருவாக்க முடியாது. ஒழுங்கு அதன் இயல்பாகவே எப்பொழு தும் இருக்கிறது. ஆதிகாலத்தில் மதங்கள் இல்லை, சட்டம் இல்லை. அப்போது எது எதுவாகவோ அது அதுவாகவே இருந்தது.

மதங்கள் தோன்றிய பின், மதச்சண்டைகளும், சட்டம் தோன்றியபின் சட்ட மீறல்களும், ஒழுக்கம் வரையறுத்தபின்பு ஒழுக்கக் கேடுகளும் தோன்றின என்றார்.

ஒழுக்கம் காலத்திற்குக் காலம், சூழலுக்கு சூழல், இடத்திற்கு இடம், நாட்டுக்குநாடு, மதத்திற்கு மதம், இனத்திற்கு இனம், கலாச்சாரத்திற்கு கலாச்சாரம், பண்பாட்டுக்கு பண்பாடு வேறுபடுகிறது. இங்கே ஒழுக்கத்திலே ஒழுக்கமென்பதில்லையே!!

**நல்லது என்பது ஒருவர் செய்யத் தேவையில்லை. நல்லது என்பது ஒரு செயல் இல்லை. நல்லது என்று ஒன்றைச் செய்யாதிருத்தல் நல்லது. ஒருவர் முழுமையுடன் குழந்தைப் பிள்ளையைப் போன்று அதன் போக்கிலேயே போகிறவராக இருந்தால், இயற்கையுடன் நகர்ந்து செல்பவராக இருந்தால் நல்லது நடக்கிறது. 'நல்லது' என்பது ஆரோக்கியத்தைப் போன்றது. டாக்டரிடம் சென்று ஆரோக்கியம் என்றால் என்ன என்று கேட்டால் அவரால் கூறமுடியாமல் இருக்கலாம். நோய் குணமாகிவிட்டால் ஆரோக்கியமடைகிறோம். ஆனால் ஆரோக்கியம் என்னவென்று வரையறுக்க முடியாது. நோய் மறைந்து விட்டபொழுது எது மிஞ்சுகிறதோ அதில் ஆரோக்கியமிருக்கிறது. ஒருவர் முழுமையோடு இணக்கமாக, இசைவாக, இயற்கையாக இருக்கும்போது எது நடந்தாலும் அவை நல்லதுதான்.**



ஜி.இ.மூர் அவர்கள் ஒரு தலைசிறந்த தர்க்கவாதியாகும். இவர் பிறன்சிப்பியா எதிக்கா (Prin-cipia Ethica) என்ற நூலை எழுதியவர். 'நன்மை' என்றால் என்ன? என்ற கேள்வியுடன் அந்நூலை ஆரம்பிக்கிறார். தான் எழுப்பிய அந்தக் கேள்விக்கு அவராலேயே பதில் கூற முடியவில்லை. நன்மையென்றால் என்னவென்று வரைவிலக்கணம் கொடுக்க முடியாது (Indefinable) என்று சொல்லி விடுகிறார் என ஓசோ அவர்கள் சுட்டிக்காட்டுகிறார். எவ்வளவோ ஆராய்ச்சிகள், ஆய்வுகள் செய்தும் அவரால் முடிவுக்கு வரவே முடியவில்லை. 'நன்மை' இதுதான் என்று

ஏன் அவரால் சரியாகக் கூறமுடியவில்லை? ஏனெனில் அப்படியொன்று இல்லவே இல்லை. உலகத்தில் 'நன்மை - தீமை', 'பாவ - புண்ணியம்', 'சொர்க்கலோகம் -நரகலோகம்', 'அழகு - அவலட்சணம்', 'நல்லது - கெட்டது', 'நெறிமுறைகள்', 'கலாச்சாரம்', 'பண்பு', 'தூய்மை', 'புனிதம்' போன்றவைகள் எல்லாம் தந்திர மனதின் உருவாக்கங்களே.

உதாரணமொன்றை இங்கு பார்ப்போம். ஒருவர் ஒரு மலரை விரும்புகிறார். இன்னொருவர் இந்த மலரை விரும்பவில்லை. ஒருவர் விரும்பியதை ஏன் இன்னொருவர் விரும்பவில்லை? உண்மையில் இது 'அழகு' என்றால் இது அனைவருக்கும் ஒரேமாதிரித்தான் இருக்கவேண்டும். அப்படியிருக்கவில்லையே ஏன்? 'அழகு' என்பது மலரில் இல்லை இது மனதில்தான் இருக்கிறது. அந்த மலர் வெறும் 'மலராக' இயல்பாக, இயற்கையாகவே இருக்கிறது. ஆனால் மனம் வேறு 'மலருடன்' ஒப்பிட்டுப்பார்த்துவிடுகிறது. வேறு ஒன்றுடன் ஒப்பிட்டுப்பார்த்துத் தான் அழகு, அழகில்லை என்று கூறப்படுகிறது. இது போலத்தான் ஒழுக்கங்கள், நெறிகள், நன்மை, தீமை, பாவம், புண்ணியம் எல்லாம். இவைகள் எல்லாம் ஒரு அபிப்பிராயம்தான். இந்த அபிப்பிராயங்கள் எல்லாம் மனதில் தேங்கியுள்ள பழைய எண்ணங்களுக்கும், புதிய அறிதலுக்கும் பிறந்த 'பிள்ளைதான்.'

ஒப்பீடும், அபிப்பிராயமும் ஒவ்வொரு மனிதர்களுக்கிடையில் ஏற்படுகிறது. இதனால் ஒருவருக்கொருவர் ஒத்துப்போக முடிவதில்லை. கணவன் - மனைவி இருவேறு மனிதர்கள்தானே! இருவருக்குமிடையில் வித்தியாசமான அபிப்பிராயங்கள், அதனால்தான் ஒத்துப்போக முடிவதில்லை. சிறு பிராயத்தில் பெற்ற அனுபவங்கள், வீடு சார்ந்த பழக்கங்கள், சூழலில் கிரகித்துக் கொண்டவை, சமூகம் - மதம் கற்றுக்கொடுத்தவை போன்ற பல குப்பைகள் ஒவ்வொருவரும் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதனால்தான் மனிதர்களுக்கிடையில் அவ்வளவு வேற்றுமைகள். கணவன் - மனைவி தங்களுக்கிடையில் வேறுபாடு இருக்கக்கூடாது என்பதுபோல் நினைத்துக்கொண்டு ஆனால் மனதில் வேறுபாட்டுடன் சேர்ந்து வாழ்கிறார்கள். அவர்களது வேற்றுமைகளுக்கும், வேறுபாடுகளுக்கும் அளவுகோலாக இயங்குவது அவர்கள் மனதில் தேக்கி

வைத்திருக்கும் குப்பைகள்தான். சமரசம் தேவையான நேரத்தில் கணவனும் - மனைவியும் உடலால் இணைந்து பின்பு தூர விலகி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். இயல்பாக வெளிப்படும் அன்பால் அவர்கள் இணைவதில்லை. ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு மன உலகமுண்டு. பிரச்சினைகள் அனைத்தும் உலகத்தில் அல்ல, மனதில்தான் உண்டு.

சூஃபி (Sufi) மதம் 'ஒருவரது அபிப்பிராயங்கள், கருத்துக்கள், எல்லாம் நடுநிலையாக இருக்கமுடியாது ஏனெனில் இவைகள் மனம் சார்ந்தவை எனக் கூறுகிறது. புத்தர், மஹாவீரர், நபிகள்நாயகம், இயேசு, மோசஸ், போதிதர்மா மற்றும் ஞானிகள், மகான்கள் இவர்கள் எல்லாம் மனதைக் கடந்தவர்கள். அதனால் உண்மையை நேராகப் பார்க்கிறார்கள். அவர்களுக்குக் குழந்தையைப் போல நிகழ்காலம், கடந்தகாலம், எதிர்காலம் என எதுவும் இல்லாதவர்கள். அதனால் என்றும் 'உண்மையாக' இருந்தார்கள். எதனோடும் எதையும் சம்பந்தப் படுத்துவதில்லை.

ஏமாற்றப்பட்டவர்களை அப்பாவிகள் என்று அழைக்கும் பழக்கம் காலங்காலமாக இருந்துவருகிறது. அவர்கள் அப்பாவிகள் அல்ல. அவர்கள் தந்திரக்காரர்கள். ஒரு தந்திரக் காரனால் இன்னொரு தந்திரக்காரனைத்தான் ஏமாற்றமுடியும். ஏனெனில் அந்த இருவரது பாதையும் நேரிய பாதையல்ல. ஒரு அப்பாவி மாசு அற்றவர். ஏனெனில் அவர் 'பிரித்துப் பாராமல்' வாழ்பவர். இவரது பேச்சில் குழந்தைப் பிள்ளைத்தனமும் செயலில் வெகுளித்தனமும் நடைமுறைகளில் கிறுக்குத்தனமும் தோன்றும். இவரது அப்பாவித்தனம் இவரது வரப்பிரசாதம், இவரது அப்பாவித்தனம் இவரது உயர்வு. இவரது அப்பாவித்தனம் இவரது பாதுகாப்பு.

மனிதன் எதையும் வெளியில் தேடுகிறான். தனக்குத் தானே உதாரணமாக இருப்பதில்லை. இந்த மனிதர்கள் தங்களுக்குள் எதையும் பார்ப்பதில்லை.

**ஒரு கதை:**

மனிதர்கள் கடவுளிடம் சென்று பல புகார்களைக் கூறியபடியே இருந்தார்கள். அது சரியில்லை, இது சரியில்லை, இதைக் கொடு, அதைக் கொடு, தன்னை ஏமாற்றுகிறார்கள், சோதனை வருகிறது, வேலையில்லை, கடன்தொல்லை, புதுவீடு வேண்டும், கார் வேண்டும், உன் ஆசீர்வாதம் வேண்டும், வழக்காளியும் - எதிரியும் தங்கள் பக்கம் வெல்வதற்காக நேர்த்தி, உன்னை நம்பி புது வியாபாரம், சாவியை உன் காலடியில் வைக்கிறேன், உன்னை நம்பி திருமணம் செய்கிறேன், என்னை கவனித்துக்கொள், என்னைச் சுகப்படுத்து என இன்னோரன்ன புகார்கள்..., வேண்டுகோள்கள்..., பின்பு புகார்களையும் வேண்டுகோள்களையும் புதுப்பித்து வேறு புதிய புகார்கள், வித்தியாசமான வேண்டுகோள்கள், ஒவ்வொரு புகாரையும் எடுத்துச் சரிசெய்து கொடுத்தால் அடுத்தவரைப் பாதிக்கிறது பின்பு வேறொரு புதிய பிரச்சினையுடன் வருகிறார்கள்.

இத் தொல்லையிலிருந்து விடுபட என்ன செய்யலாம்? இமயமலை உச்சிக்குப் போகலாமா? அந்த இடமும் சரியில்லை. அங்கு மலை ஏறுபவர்கள் வந்துவிடுவார்களே! அவர்கள் என்னைக் காட்டிக் கொடுத்துவிடுவார்கள். நிலாவில் சந்திரனில் போயிருப்போமா? அங்கே மனிதனை அனுப்பி சில காலம் தங்க வைக்க ரஷ்யாவும், அமெரிக்காவும் போட்டா போட்டி போட்டுக்கொண்டு அனுப்பும் விஞ்ஞானிகள் அங்கு என்னைக் கண்டதும் பின்பு பிரயாண நிறுவனம் ஆரம்பித்து சந்திர மண்டல இன்பச் சுற்றுலா யாத்திரை ஆரம்பித்துவிடுவார்களே!

மனிதர்களிடமிருந்து தப்ப யாரும் பார்க்க முடியாத இடம், யாரும் தேட முடியாத இடம், யாரும் யோசிக்க முடியாத இடம் போகவேண்டும் என்று கடவுள் யோசித்த போது சிரமமில்லாத இலேசான இடம் ஒன்றே ஒன்று இருக்கிறது என்பதை அறிந்துகொண்டார். அங்கு யாரும் வர மாட்டார்கள்.

இந்த மனிதர்கள் எப்போதும் தங்களுக்குள் தேடுவதில்லை, தங்களை அறிவதில்லை, தங்களை உணர்வதில்லை. தங்களைத் தவிர பிறரை ஆராய்வார்கள். தங்கள் மீது நம்பிக்கை

யற்றவர்கள், தங்களுக்குள் பார்ப்பதில்லை. பிற இடங்களில் தேடுவார்கள், பூசை, அபிஷேகங்கள், கோவில், ஆலயம், மசூதி, தேவாலயம், தர்மசாலா, பன்சாலை, சினாகோஜ் என்று தங்களுக்கு விரும்பிய இடங்களில் தங்களைத் தாங்களே புறக்கணித்து தேடுவார்கள். சரியான பாதுகாப்பான தொந்தரவு இல்லாத 'தான்' இருப்பதற்கு ஏற்ற இடம் இந்த 'மனிதனின் உள்ளே' இருப்பது எனக் கடவுள் முடிவெடுத்துவிட்டார். கடவுள் மனிதன் உள்ளே புகுந்துவிட்டார். அவரை யாரும் கண்டுகொள்ளவில்லை. என்ன ஆச்சரியம்! கடவுள் முடிவு சரியானதாகவே அமைந்துவிட்டது!

எல்லா மதம் சார்ந்தவர்களும் தங்களுக்கு தகுந்தாற்போல் தூய்மை, புனிதம், நீதி, கொள்கை, கோட்பாடு என்று பலவற்றையும் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இவை எல்லாவற்றையும் படைத்தது மனம்தான். இந்து, கிறிஸ்து, பௌத்தம், இஸ்லாம், சீக்கிசும், சூஃபி, சென், சின்ரோ, தாவோ, சொராஸ்திரியம், யுடேசியம்... என தனிப்பட்ட மதங்கள் உலகில் எதுவும் இருக்கக்கூடாது. மதம் என்பது வாழ்க்கையாகத்தான் இருக்கமுடியும். ஒவ்வொருவரது வாழ்க்கைதான் மதமாக இருக்க வேண்டும். வாழ்க்கைக்கு ஆரம்பம் - முடிவு எதுவுமில்லை. மனிதர்கள் தொடர் பிறப்புள்ளவர்கள். எனவே ஆதி - அந்தம் எதுவுமில்லாதது வாழ்க்கை. எங்கும் எதிலும் வியாபித்திருப்பது வாழ்க்கை. எல்லாம் அறிந்தது, எல்லாம் தெரிந்தது, எல்லாம் வல்லது ஒவ்வொருவருடைய வாழ்க்கையேயாகும். பிறந்தவர் உயிருடன் இருந்து ஏதோ ஒரு நாள் இறப்பதுதான். பிறப்பு ஒரு நிகழ்ச்சி, இறப்பு ஒரு நிகழ்ச்சி. இந்த இரண்டு நிகழ்ச்சியும் சகலருக்கும் பொதுவானது. பிறப்புக்கும் - இறப்புக்கும் இடையில் 'உயிருடன்' இருப்பது உண்மை. ஆனால் நாம் கணத்துக்கு கணம் அந்த கணம் முழுமையாக வாழ்கிறோமா?

வாழ்க்கை கொடுக்கும் அனைத்தும் மதத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் வரை மதத்திற்கும் - வாழ்க்கைக்கும் இடையில் முரண்பாடு இருக்கும். இந்த முரண்பாட்டை மதம் இணைத்துக்கொண்டு மலரவேண்டும். அதனுடன் சேர்ந்து வாழ்க்கை மலரவேண்டும். வாழ்க்கையின் சந்தோஷங்களை மதம் அழிக்கக்கூடாது. அவற்றை மதம் விரிவுபடுத்த வேண்டும்.



சோக்கிரடீஸ் தெளிவாகச் சொன்னார்: தனக்கு நிச்சயமாகத் தெரிந்தது ஒன்றே ஒன்றுதான் அது தனக்கு ஒன்றும் தெரியாதது என்பதுதான். தெரியாதது என்பதை அறிந்துகொண்டால் அறிய வேண்டும் என்ற ஆர்வம் தோன்றும். இந்நிலையை எந்த மதப்பற்றாளர்களும் அடைவது கடினம். அவர்களிடம் காலத்துக்கு காலம் பொருந்தாத அறிவு மண்டிக்கிடக்கிறது. சோக்கிரட்டீஸ் சொன்ன 'தெரியாத நிலையில்' ஒரு திறந்த மனம் இருக்கிறது. சோக்கிரடீஸ் சொன்ன ஒன்றும் தெரியாதென்ற அந்த நிலை தூய்மையானது, புனிதமானது, ஒழுக்கமானதுமாகும். சகல மதங்களும் அடிப்படையில் 'வெறுமைநிலை', 'ஒன்றும் அற்ற நிலை' பற்றிக் கூறுகின்றன. இந்த நிலை சோக்கிரடீஸ் சொன்ன 'ஒன்றும் தெரியாத நிலை' போன்றதே. மதங்கள் தோன்றிய காலத்திலிருந்து மதவாதிகள் மக்களைத் தெரியாத நிலையிலிருந்து அப்பால் அழைத்துச் செல்லத் தவறிவிட்டனர்.

'ஒழுங்கு' என்ற சொல் அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்லும்போது அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதைச் செய்யுங்கள், அதைச் செய்யாதீர்கள் அப்போதுதான் வாழ்க்கை ஒழுங்காக இருக்கும் என்று சொல்லத் தொடங்கிவிட்டார்கள். இப்படிச் செய், அப்படிச் செய்யாதே என்று ஆயிரக்கணக்கான ஆணைகள் மனிதன் மேல் திணிக்கத் தொடங்கிவிட்டார்கள். இப்படித் திணிக்கப்பட்ட ஆணைகளுடன் வாழும்போது யாராலும் எதையும் படைக்க முடியாது. அப்படி வாழும் மனிதன் சிறைக் கைதியாகத்தான் வாழ்வார். எந்தப் பக்கம் போக முயன்றாலும் அங்கே ஒரு சுவர், அவர் போவதைத் தடுக்க இருக்கும்.

புத்தபெருமான் ஒழுங்கைப்பற்றி லட்சோபலட்சம் பௌத்தர்களுக்குப் போதித்தார். அந்தப் போதனைகளில் அநேகம் புத்தபெருமானுக்குப் பொருத்தமானதாக இருந்தது. ஒழுங்கு ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து வர வேண்டும். வெளியிலிருந்து வரக்கூடாது. உள்ளேயிருந்து வரும் ஒழுங்கிற்கும் வெளியேயிருந்து வரும் ஒழுங்கிற்கும் நிறைய

வேறுபாடுகள் இருக்கின்றன. வெளியிலிருந்து வரும் ஒழுங்கு பொருந்தாது. ஏனெனில் அது அடுத்தவர் தனது உடல் அமைப்பிற்கு தைத்த சட்டை போன்றது. அது பெரிதாக அல்லது சிறிதாக இருக்கலாம். அல்லது அளவு போல் இருந்தாலும் ஒரு சில இடங்களில் இறுக்கிப் பிடிப்பது போல் இருக்கும். எனவே அந்தச் சட்டையை அணிய முடியாது. ஒழுங்கு ஒவ்வொருவருக்குள்ளும் இருந்துவந்தால் அது அவருக்காகவே தைக்கப்பட்ட சட்டைபோல் பொருந்தும்.

நபிகள் நாயகம் கூறியவை பெரும்பாலும் அவர் காலத்துக்கு ஏற்புடையதாக இருந்தது. ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு மனு அவர்கள் இந்துக்களுக்கு எழுதிக் கொடுத்த ஒழுங்கு முறைகள் அக்காலத்துக்கு சரியாகவே இருந்தது. மோசஸ் யூதர்களுக்கு ஒழுங்குமுறைகளைக் கூறினார். ஆனால் அவைகள் மீறப்பட்டுவிட்டன. ஆதிநாதர் சமணர்கள் கடைப்பிடிக்க தன் காலத்துக்கேற்ற ஒழுங்குமுறைகளை முன்வைத்தார். இயேசு நாதர் கூறியவை அவர்- போன்றவர் களுக்கு ஏற்புடையதானது.

இந்த அனைத்து ஒழுங்கு முறைகளும் காலாவதியாகி ஆயிரக்கணக்கான வருடங்களாகிவிட்டன. வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் எழும் ஆயிரமாயிரம் கேள்விகளுக்கு அந்த நொடியில் புதிய விடைகளைத் தேட வேண்டும். ஆதிகாலத்தில் கொடுத்த பதில்களை வைத்துக்கொண்டு வாழ்க்கையின் கேள்விகளைச் சந்திப்பது அபத்தம்.

வாழ்க்கை எப்போதும் உயிர்த்துடிப்புடன் இருப்பது. வாழ்க்கை எப்போதும் நகர்ந்துகொண்டேயிருக்கும். வாழ்க்கை எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும். இந்த விநாடியில் சரியாக இருப்பது அடுத்தவிநாடியில் சரியாகயிருக்காது. ஒவ்வொரு நொடியும் அந்த நொடிக்கு ஏற்ப வாழவேண்டும். மாறாதிருப்பதென்று வாழ்க்கையில் எதுவுமில்லை. மாற்றம் ஒன்றுதான் மாறாது. ஏனைய அனைத்தும் மாறக்கூடியவைதான். மாற்றங்களையும், முரண்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளவும், அவைகளை இரசிக்கும் மனநிலையை வளர்த்துக்கொண்டால் அந்த முழுமைதான் வாழ்க்கையின் அழகு. அந்த அழகில் பிரித்துப் பார்க்கும் மனம் மறைந்துவிடும். அங்கே பிரித்துப் பார்க்கும் மனம் மறைய ஒருவர் கள்ளம் கபடமற்ற

குழந்தைபோல அப்பாவியாக 'முழுமையுடன்' இணக்கமாகவும், இசைவாகவும், இயற்கையின் போக்கில் வாழ்வர்.

ஒவ்வொருவரும் வாழும் காலத்தில் உண்மையானவராக வாழ்ந்து இவ்வுலகத்திற்கு மேலும் அழகு சேர்க்க வேண்டும். நாம் எல்லோரும் பிரித்துப் பார்க்கும் மனதை ஓரம் கட்டிவிட்டு குழந்தைபோல் மாறினால்தான் இது சாத்தியமாகும். குழந்தை போன்ற அப்பாவித்தனமுள்ளவர்கள் கையில் அனைத்து நாடுகளும் இருந்தால் யுத்தங்கள் அற்ற அமைதிப்பூமியாக இந்த உலகம் மாறிவிடும்.

நாடுகளுக்கு இடையிலான எல்லைகள் அன்புக்கோடுகளாக மாறிவிடும். அன்பும், கருணையும், நேசமும் அரியாசனத்தில் அமர்ந்துவிடும். நாட்டுக்குநாடு நேசம் மலர்ந்துவிடும்.

எல்லோரும் மீண்டும் குழந்தையாவோம்!



### அத்தியாயம் 19

## ஒளிவட்டம் (தேஜஸ்)
## (Aura of Light)

ஞானிகளின் தலையைச் சுற்றி ஒளிவட்டம் (Aureole) இருப்பதாக அவர்களது உருவப் படங்களில் வரைந்திருப்பார்கள். இந்த ஒளிவட்டத்திற்கு இப்போது விஞ்ஞான ரீதியான விளக்கம் கூறப்படுகிறது.



சோவியத் யூனியனில் வசித்த தத்துவ மேதையும் விஞ்ஞானியுமான கிர்லியான் (Kirlian) ஒரு காமெராவைக் கண்டு பிடித்தார். அதற்குப் பாவிக்கும் படச்சுருளையும் (Film) கண்டு பிடித்தார். அது நமது கண்களுக்குப் புலப்படாத, கண்களுக்குத் தெரியாதவற்றையும் வெளிக்காட்டக்கூடிய சக்திமிக்கதாக இருந்தது. அவர் அந்த காமெராவால் ஆட்களை, இயற்கைக் காட்சிகளை, விலங்கினங்களை, மரம், செடி, கொடிகளை, மலர்களைத் தனது பொழுதுபோக்காகப் படம் பிடித்தார். என்ன ஆச்சரியம்! மனிதர்கள், விலங்கினங்கள், மரங்கள், மலர்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறிய ஒளிவட்டம் கண்டார்.

ஆனந்தமாக உள்ளவர்களுக்குப் பெரிதான ஒளிவட்டத்தையும், சோகமாக மன உளைச்சல் உள்ளவர்களுக்கு மிகச் சிறிதான ஒளிவட்டத்தையும் அவதானித்தார். ஒளிவட்டத்தின் (halo) அளவில் வித்தியாசம் தெரிந்தது. மரங்கள், மலர்கள், இவைகளுக்கு அருகாமையில் ஒளி காணப்பட்டது.

மரணப்படுக்கையில் இருப்பவர்களுக்கு அந்த ஒளிவட்டம் மறைந்துவிடுகிறது என்பதையும் தனது காமெராவால் பரிசோதனை செய்து கண்டறிந்தார். புத்தர், மஹாவீரர், இயேசு, நபிகள்நாயகம், போதிதர்மா இவர்களைப் போன்ற பல ஞானிகளுக்கு ஒளிவட்டம் அவர்களது சீடர்களுக்கு தெரிந்தது. அவர்களது கண்கள் அந்த சக்திமிக்க காமெராவைப் போன்றிருந்தது. இவர்களது சீடர்கள் பார்ப்பதை ஏனையோரால் பார்க்க முடியாமல் இருக்கலாம்.

புத்தர், மஹாவீரர், போதிதர்மா, இயேசு, நபிகள்நாயகம் இவர்களது கண்களுக்குத் தெரிவது சாதாரணமானவர்களது கண்களுக்குத் தெரியாது. இவர்கள் எல்லாம் தங்கள் முழுமையில் இருப்பவர்கள். தங்கள் இருப்பில் (Being) முழுமையாக, ஆழமாக இருப்பவர்கள்.

தன்னை அறிந்தவர்களும், சுயவிழிப்புணர்வு உள்ளவர்களும், முழுமையாக இருப்பவர்களும், தங்களைக் கடந்தவர்களுக்கும் பெரிய ஒளிவட்டங்களும், சக்திமிக்க கண்களும் உடையவர்களாகக் காணப்பட்டனர் அத்தகைய ஒளிவட்டத்திற்குள் பிரவேசிப்பவர்களும் மாற்றமடைந்தனர். கொடிய விலங்கினங்களும் அவர்களுக்கு முன் அமைதியாகின. அவர்களது ஞான ஒளிக்குள் எல்லாம் கட்டுப்பட்டன.

# பாகம் - 2

## மரண அனுபவம் அடைந்தவரது அனுபவங்கள்

**(Near death experience of the Survivors)**

## அத்தியாயம் 20

# தங்கள் மரணச்செய்தியைத் தாங்களே கேட்டார்கள் (Hearing the News of their own Death)



**நித்திய பிறப்பு (Life after Life):**

Dr. Raymond. A. Moody M.D.;Ph.D. அவர்கள் அமெரிக்காவில் உள்ள East Carolina University-யில் தத்துவப் பேராசிரிய ராகவும் பின்பு University of Virginia Medical School-லும் பணியாற்றியவர்.

Life after Life நித்திய பிறப்பு, மீண்டும் மீண்டும் பிறப்பு என்ற கருத்தைக் கொண்ட இந்த நூலை, ஆசிரியர் Dr. Raymond Moody MD.Ph.D. *1975*-இல் வெளியிட்டார். இந் நூலை வெளியிட்டால், தான் பல கண்டனங்கள், விமர்சனங்கள், எதிர்ப்புக்கள் ஆகியவற்றைச் சந்திக்க வேண்டும் என்பது தெரிந்திருந்தும் வெளியிட்டதாகக் குறிப்பிடுகிறார். இது ஆய்வுசெய்ய விரும்பாத துறை எனவும், அத்துறை சார்ந்த ஆய்வின் முடிவினை நூலாக்கி வெளியிட எவரும் துணிந்து முன்வருவதில்லை எனவும் கூறுகிறார். எவரும் விரும்பாத மரணம் சம்பந்தப்பட்ட விடயங்களை தன்நூல் உள்ளடக்கியுள்ளது என்கிறார். சில மதபீடங்கள் மறுபிறப்பை நிராகரிக்கின்றன. தான் அவதூறுக்கு உள்ளாக வேண்டும் என்பது தெரிந்திருந்தும் வெளியிட்ட நூல் இது என மேலும் குறிப்பிடுகிறார். தன் நூலில் அவர் குறிப்பிட்ட சில மரண அனுபவச் சம்பவங்களை (Near death Experience) நான் இங்குச் சுருக்கமாக எழுதியுள்ளேன். டாக்டர் றேமண்ட் மூடி தனது நோயாளிகளில் தான் அவதானித்ததையும், அந்த

நோயாளிகள் தங்கள் உயிர் பிரிந்து மீண்டும் தங்கள் உடலுக்குள் பிரவேசித்து உயிர்த்த அனுபவத்தைக் கூறியதையும் தொடர்ந்து வரும் சில அத்தியாயங்களில் காணலாம்.

**அனுபவம்: (அ)**

### மரண நிலையில் முற்பிறப்பை அறிந்தார்:

இந்த நோயாளி இறந்துவிட்டார் என டாக்டர்கள் கூறிய போது அதே இறந்த நோயாளி தன் மரணச் செய்தியைக் கேட்டபடி உடலுக்கு வெளியே மிதந்துகொண்டு இருந்தார். தன்னுடைய இந்த மரணப்பிரயாணத்தில் ஏற்கனவே இறந்த தனது உறவினர்களை, நண்பர்களை ஆவிகளாக சந்தித்ததாகவும், அந்த ஆவிகளே தனது உடலுடன் சேர்த்து உயிர்த்தெழ வைத்தன என்றும் கூறி, தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். இந்த மரண நிலையில் தன் முற்பிறப்பையும் அறிந்துள்ளார்.

**அனுபவம்: (ஆ)**

### இறந்த எனக்கு டாக்டர்கள் பேசுவது கேட்டது:

பெண் நோயாளி ஒருவர் "எனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு சுவாசிக்க முடியாத நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மயக்க நிலையில் இருந்தேன், என்னைச் சுவாசிக்கச் செய்யும் முயற்சியில் (Resuscitation) ஈடுபட்டார்கள். நான் பூரணமாக இறந்த நிலைக்கு சென்றுவிட்டேன். டாக்டர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். மீண்டும் ஒரு முறை முயற்சி செய்து பார்ப்போம், ஏதாவது அறிகுறி காணப் படாமல் இருந்தால் முயற்சியைக் கைவிடுவோம் என்று, தங்களுக்குள் உரையாடுவதையும் நான் கேட்டுக்கொண் டிருந்தேன் டாக்டர்களின் முயற்சி வெற்றியளித்து நான் கண்விழித்தேன்" என்கிறார்.

**அனுபவம்: (இ)**

### நான் இறந்துவிட்டேன் என டாக்டருக்குத் தெரிவிப்பு:

"நான் வைத்தியசாலையில் மயக்கநிலையில் அனுமதிக்கப் பட்டேன். என்னை ஈரல் ஸ்கான் செய்யும் பிரிவுக்கு அனுப்பி

வைத்தார்கள். ஒரு மருந்தை என்னுள் உட்செலுத்த முதலில், அந்த மருந்து எனக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துமா என பரீட்சித்துப் பார்த்த பின்னர் தங்களுடைய பரிசோதனையைத் தொடர்ந்தனர். பரிசோதனையின் நடுப்பகுதியில் நான் இறந்து விட்டேன். Radiologist டெலிபோனில் டாக்டருக்குத் தெரிவிக்கும் ‘நோயாளி இறந்துவிட்டார்’ என்ற அந்தச் செய்தி எனக்குக் கேட்டது. டாக்டர்கள் எனது இருதயத்தை இயங்கச் செய்வதை (Resuscitate) நான் பார்க்கிறேன். ‘என்ன நடந்தது’ என்று விசாரிப்பதும் ‘எனக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது’ என்பதும் என்னால் அவதானிக்க முடிந்தது. மேலும் எனக்கு ஊசி போடுவதற்காக மருந்து எடுத்துவரச் சொல்வதும் கேட்டது. ஆனால், எனக்குள் உட்செலுத்திய ஊசியின் வலியையும், என்னை அவர்கள் தொட்டதையும் என்னால் உணரமுடியவில்லை. “அங்கு நடைபெறும் உரையாடல்கள் கேட்டது, அதாவது கேட்க முடிந்தது. ஆனால் என்னால் பதில் கூற முடியவில்லை.”

## அத்தியாயம் 21

# உடலுக்கு வெளியே மிதத்தல்
# (Floating Out of the Body)

**நா**ம் எப்பொழுதும் நம்மை நமது உடலுடன் சேர்த்துத்தான் பார்க்கிறோம். டாக்டர் றேமன் மூடி தான் சந்தித்து உரையாடிய மரண அனுபவம் அடைந்தவர்களைப் பற்றி குறிப்பிடும்பொழுது கூறுகிறார்: "மரண அனுபவம் பெற்றவர்கள் தங்கள் சொந்த உடலை வேறொருவர் பார்ப்பது போல் பார்க்கிறார்கள். அதாவது நாடகத்திலோ, சினிமாவிலோ பார்வையாளராக இருந்து நாம் காட்சிகளை பார்ப்பது போலத் தங்களது சொந்த உடலை தாங்களே பார்வையாளராக பார்க்கும் அனுபவத்தைப் பெறுகிறார்கள். தங்களுக்குத் தாங்களே இரண்டாம் நபராக மாறுகிறார்கள்."

**அனுபவம்: (அ)**

**இறந்த என்னுடலை வேடிக்கை பார்த்தேன்:**

ஒரு பெண் தனது நினைவைக் கூறுகிறார்: "கடுமையான நெஞ்சுவலி காரணமாக வைத்தியசாலையில நான் அனுமதிக்கப் பட்டேன். கட்டிலில் நான் படுத்திருந்தபோது என்னால் சுவாசிக்க முடியவில்லை. உடனே என்னில் பொருத்தியிருந்த அபாய அறிவிப்பை (Button) அழுத்தினேன். சுவாசிப்பதற்கு கஷ்டமாக இருந்த காரணத்தால் ஒரு பக்கத்திற்கு திரும்பிப் படுத்தேன் அதேகணத்தில் எனது இதயத் துடிப்பு நின்றது. நான் பொத்தானை அழுத்திய காரணத்தால் பெண் தாதிகள் (Nurses) எனது படுக்கைக்கு அருகில் விரைந்து வந்தனர்.

நர்ஸ்கள் "Code Pink! Code Pink" என்று கூறும் அவசர அழைப்பு எனக்குக் கேட்கிறது. அவர்கள் துரிதகதியில் இயங்கிக் கொண்டிருக்கும்போது 'நான்' என் உடலை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தேன். படுக்கையின் இரும்புச் சட்டங்கள் ஊடாக வெளியேறிப் படிப்படியாக மேல்நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன். என் படுக்கையைச் சுற்றிப் பல தாதிகள், டாக்டரை அழைக்கிறார்கள். டாக்டர் வார்டில் நோயாளிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார், பின்னர் அவர் எனது அறைக்கு விரைந்து வருகிறார். ஏன் இவர்கள் எனது படுக்கையைச் சூழ்ந்துகொள்கிறார்கள்? எனக்கு எதுவும் விளங்கவில்லை!

நான் கூரையில் பொருத்தப்பட்ட மின்விளக்குகளுக்கு அருகாமைக்குச் சென்றுவிட்டேன். அங்கே அந்த இடத்திற்கப்பால் செல்லாமல் கீழே பார்த்தேன். 'என் உடலுக்குக் சுவாசம் கொடுக்கிறார்கள்.' ஒரு நர்ஸ் திடீரென்று கூறினார் "ஆ! கடவுளே இவர் இறந்துவிட்டார்", ஒரு தாதி "எனது உடலின் வாயில் தனது வாயை வைத்து காற்றை என் இதயத்துக்குள் ஊதுகிறார்" (Mouth-to-Mouth Resuscitation). எனக்கு அவரது பின் பக்கம் நன்கு தெரிகிறது. எனது உடலுக்கு அருகாமையில் ஒரு மெசினை உருட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள். எனது உடலின் மார்புப் பகுதியில் 'shocks' பொருத்தினார்கள். எனது உடல் படுக்கையிலிருந்து மேலே துள்ளியது, எனது உடல் எலும்புகள் உடைந்துவிடும்போல் தெரிந்தது. மிகப் பயங்கரமாக இருந்தது. எனது நெஞ்சில் அடிப்பது போல் தெரிந்தது. எனது கைகளையும், கால்களையும் தேய்த்துவிட்டார்கள். 'ஏன் இப்படி எல்லாம் செய்கிறார்கள்? எனக்கு என்ன நடந்தது? எனக்கு ஒன்றுமில்லையே' என்று யோசித்தேன். இவ்வாறாக தனது உடலுக்கு வெளியில் தான் சென்று உயிர்பெற்ற அனுபவத்தை Dr. Raymond Moody-யிடம் விளக்கினார்.

**அனுபவம்: (ஆ)**

**மரணத்திற்கும் உயிர்த்தலுக்கும் இடையில்:**

இளம் வாலிபர் மரணத்திற்கும் உயிர்த்தலுக்கும் இடையில் நடைபெற்ற தனது அனுபவத்தைக் கூறுகிறார்: "எனக்கு 19

வயது. நான் எனது மோட்டார் வண்டியில் என் நண்பனை அவனது வீட்டுக்குக் கூட்டிச் சென்றேன். நாற்சந்தி ஒன்றைக் கடக்கும்போது, வேகமாக வந்துகொண்டிருந்த இன்னோர் மோட்டார் வண்டி எனது வண்டியுடன் மோதியது. இந்நிகழ்வு கண்மூடித் திறப்பதற்குள் நடைபெற்று முடிந்தது. எனது வண்டிக்குள் அந்த வண்டி புகுந்துவிட்டது. எனது கால் உருக்குலைந்துவிட்டது. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் 'நான்' இருளான ஒடுங்கிய வழியாக மிதந்து சென்றுகொண்டிருந்தேன். வீதியிலிருந்து கிட்டத்தட்ட ஐந்தடி உயரத்தில் மிதந்து சென்றேன். வண்டியைச் சுற்றி மக்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டது. என் நண்பன் வண்டியை விட்டிறங்கி பேய் அறைந்த நிலையில் நின்றான். எனது உடலை உருக்குலைந்த வண்டியிலிருந்து இழுத்து எடுத்தார்கள். எனது கால் செருகப்பட்டிருந்தது, வெளியில் இழுத்தெடுத்தார்கள். எனது உடல் பூராகவும் இரத்தம் தோய்ந்திருந்தது." இவ்வாறாக மீண்டும் உயிர்பெற்றுத் திரும்பியவர் தன் இறந்த அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.

**அனுபவம்: (இ)**

**'என்னை'ப் பார்க்கவில்லை 'என்' உடலைத்தான் பார்க்கிறார்கள்:**

என்ன நடக்கிறது? என்பது குழப்பமாக இருந்தது, இறந்து விட்டேன் என் ஆன்மா (Soul) வெளியிலிருந்து பார்க்கிறது என்ற விடயம் என்னால் யோசிக்க முடியவில்லை. மரணத்துடன் தொடர்புபடுத்தி என்னால் சிந்திக்கவும் முடியவில்லை. ஏன் நான் மிதக்கிறேன்? நான் யார்? ஏன் என் உடல் அங்கே? போன்ற வினாக்கள் எனக்குள் தோன்றவில்லை.

எப்படி என் உடலைவிட்டு வெளியே நிற்கிறேன் என்பதும் விளங்கவில்லை. உடலுக்குள் உடனே திரும்பிப் போகவும் தெரியவில்லை என்று கூறுகிறார் ஒருவர். மேலும் இவர் டாக்டர்கள் என்னைப் பார்க்கவில்லை, என் உடலைத்தான் பார்க்கிறார்கள். என் உடலைச் சுற்றியுள்ளவர்களுக்கு நான் கூறுவது கேட்கவில்லை, என்னையும் அவர்களால் பார்க்க முடியவில்லை. என் உடலைச் சுற்றி நிற்கும் டாக்டர்கள், மருத்துவ உதவியாளர்கள், தாதிகள் எல்லோரும் என்னைப் பார்க்கவில்லை. அவர்கள் எனது உடலைத்தான் நேரடியாகப்

பார்க்கிறார்கள். என்னை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. நானும் அவர்களை தொடுவதற்கு முயற்சிக்கிறேன் ஆனால் முடியவில்லை என்று தன் அனுபவத்தைத் தொடர்ந்தார்.

**அனுபவம்: (ஈ)**

**இறந்த என்னைக் கடந்து சென்றார்கள்:**

டாக்டர் எனது நெஞ்சின் மேல் தனது கைகளால் மேலும் கீழும் அசைத்து அழுத்துகிறார். தாதிமார்கள் வேகமாகத் தொழிற்படுகிறார்கள், என் கைநரம்பின் ஊடாக மருந்து ஏற்றுகிறார்கள். நான் அவர்களுக்கு 'எனக்கு ஒன்றும் செய்ய வேண்டாம் என்னை விட்டுவிடுங்கள்' என்று சொல்கிறேன். அவர்கள் என் பேச்சைக் கேட்கவில்லை. என் நெஞ்சின் மேலுள்ள டாக்டரின் கைகளை நான் தள்ளுகிறேன். ஆனால் அவர்கள் கைகளை எடுக்கவில்லை. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. எனக்கு அருகாமையில் வந்து என்னைப் பார்க்கிறார்கள். நான் தூர நின்று இவர்களைப் பார்க்கிறேன். எல்லோரும் என் கட்டிலைப் பார்த்தபடியே, என்னைக் கவனியாது என்னைக் கடந்து செல்கிறார்கள் என உயிர்த் தெழுந்த பின் தன் அனுபவத்தைக் கூறினார். டாக்டரின் கேள்விக்கு அவரளித்த பதில் இவ்வாறு அமைந்திருந்தது. நான் மேலே மிதந்து சென்றுகொண்டிருந்தபோது நான் ஒரு பாரமான பொருளாக எனக்குத் தெரியவில்லை. "நான் காற்றில் மிதந்தேன், பறக்க வேண்டும் போல் ஒரு உணர்வு ஏற்பட்டது."

**அனுபவம்: (உ)**

**இறந்தபின் கண்பார்வை பெற்றார்**

லியோன் ஹெயின் (Leon Huygen) பிறப்பிலே கண் பார்வை இழந்தவர். 11.07.1994 அன்று அவரது வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அவரது தலையில் துப்பாக்கியால் சுட்டதால் அவர் மரண நிலையில் இருந்தார். இவரது உடல் படுக்கை நிலையில் இருக்கும்போது இவரது உடலுக்குமேல் இவர் மிதந்து கொண்டிருப்பதை அங்கு விசாரணைக்குச் சென்ற போலீஸார் கண்டனர். சிறிது நேரத்தில் அவ்வுடல் மேலே சென்று மறைந்துவிட்டது. இவரது உடலுக்கு தீவிர சிகிச்சை



அளிக்கப்பெற்று உயிர் பெற்றார். கண்பார்வை இழந்த இவர் அந்த அறையில் தான் கண்ணால் கண்ட அனைத்தை யும் விவரமாகக் கூறினார். உயிர் பெற்று மீண்டும் வழமைக்குத் திரும்பியபின் முன்பு எப்படிப் பார்வையில்லாமல் இருந்தாரோ அதே நிலையில்தான் இருந்தார்.

(ஒருவர் தான் இழந்த உறுப்புக்களை, புலன்களை இறந்தபின் திரும்பப் பெற்றுக்கொள்கிறார் என இறந்தவர்களுடைய திபெத்திய நூல் (Tibetian book of the dead) விளக்குகிறது. அத்தியாயம் - *36.)*

இவ் அத்தியாயத்தில் உள்ள நிகழ்வுகளை விளக்கும் வேறு சில படங்கள்:









ஏஏஏ

## அத்தியாயம் 22

# அமைதியையும் சாந்தத்தையும் உணர்தல்
# (Feeling Peace and Quietness)

இந்த அனுபவத்தைப் பெற்றவர்கள் தாங்கள் ஆறுதலையும், அமைதியையும், ரம்மியமான நிலையையும் அனுபவித்ததாக கூறுகிறார்கள்.

**அனுபவம்: (அ)**

"தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் குற்றுயிரில் கிடந்தேன். உடனடியாக தலையில் வலி, வேதனை உணர்ந்தேன். சிறிது நேரத்தால் வலி, வேதனை எதுவும் உணரவில்லை. நான் இறந்துவிட்டதுதான் அதற்குக் காரணம். நான் மெதுவாக மேலே பறக்கத் தொடங்கினேன். இருளாக இருந்தது. அன்று குளிர் காலமாக இருந்தபோதும் நான் பறந்து கொண்டிருக்கும்போது குளிரை உணரவில்லை. சற்று சூடான காலநிலையை உணர்ந்தேன். என்றும் உணராத அமைதியையும், ஆறுதலையும், சாந்தத்தையும், சௌகரியத்தையும் அனுபவித்தேன்...

**அனுபவம்: (ஆ)**

வியட்நாம் யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு அமெரிக்கப் போர் வீரரது அனுபவம். "போரிலேற்பட்ட குண்டுக் காயங்களால் மரணமாகிவிட்டேன். ஆறுதலாகவும், சுகமாகவும் இருந்தது. நான் இதற்கு முன்பு அனுபவிக்காத ஒரு சுகமான சுகம் அனுபவித்தேன்" என்கிறார்.

**அனுபவம்: (இ)**

ஒரு பெண் தனது அனுபவத்தைக் கூறும்போது “தன்னைச் சுற்றி எல்லாவற்றையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது எனக்கு நன்கு விளங்கியது. என்ன நினைக்கிறார்கள் என்பதை என் மனதில் அறிந்துகொண்டேயிருந்தேன்” என்கிறார்.

**அனுபவம்: (ஈ)**

தீக் காயங்களால் மரணநிலை அனுபவித்தவர் கூறுகிறார்: “நான் ஒரு வாரமாக ஆபத்தான நிலையிலிருந்தேன். ஒரு நாள் திடீரென்று ஒரு இருளான குகைக்கு ஊடாக வேகமாக இழுபட்டு மிதந்து செல்வது போன்று உணர்ந்தேன்.”

## அத்தியாயம் 23

# சத்தம் (The Noise)

*சி*று குண்டூசி விழுந்தாலும் கேட்கக்கூடிய வகையில் செவிப்புலன் இயங்குகிறது. வாழும் பொழுது கேட்கும் சக்தியை விட இறந்தபின் அந்த அளவு கூடுதலாக இருந்தது.

**அனுபவம்: (அ)**

*"அடிவயிற்றில் சத்திர சிகிச்சை நிகழ்ந்துகொண்டிருக்கும் போது இறந்துவிட்டேன். காது அடைப்பது போன்ற காற்றின் பேரிரைச்சல், விசில் அடிப்பது போல கூவுவது போன்ற சத்தம்."*

**அனுபவம்: (ஆ)**

உடம்புக்குள் ஏற்பட்ட இரத்தப் பெருக்கால் இறப்பிலிருந்து மீண்ட இளம் பெண் கூறுகிறார்: "நான் மயங்கி விழுந்துவிட்டேன். காற்றில் இலேசாக மிதந்து கொண்டிருந்தேன். மணி ஒலி போன்ற ரீங்காரமான நாதம் இசை போலக் கேட்டுக்கொண்டேயிருந்தது."

**அனுபவம்: (இ)**

*9 வயதாக இருந்தபோது, அதாவது 20 வருடங்களுக்கு முன் நடந்த இந்தச் சம்பவம் ஆழமாக ஞாபகத்தில் பதிந்து விட்டது. "ஒரு நாள் கடும் சுகவீனமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். எனக்கு மயக்க மருந்து கொடுத்து செயலிழக்கச் செய்தார்கள். எனக்கு ஏன் அப்படிச் செய்தார்கள் என்று தெரியாது? ஒரு நீண்ட குழாயினூடு நகர்ந்து செல்வதை உணர்ந்தேன், அதனைத் தொடர்ந்து மணி ஒலி சத்தம் கேட்பதையும் உணர்ந்தேன்."*

ஓஓஓ

## அத்தியாயம் 24

# ஆவியின் தோற்றம்
# (The Physical Characteristics of Spirit)

டாக்டர் றேமண்ட் மூடி (Dr. Raymond Moody M.D.) கூறுகிறார்: தனது சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும் போது மரணமான நிலையில் உடலிலிருந்து வெளியேறிய உயிர் இருப்பு (Being), ஆன்மா (Soul), ஆவி (Spirit) இவை சில வேளைகளில் உருண்டை வடிவமாகவும் (Globular), உருவமற்றும் (Amorphous Cloud), அதே மனித உருவத்திலும் இருக்கலாம் என்கிறார். தனது ஆராய்ச்சியின்படி பனிப்புகார் (Mist), முகில் (Cloud), புகை (Smoke-Like), நீராவி (Vapour), பலநிறம் கலந்த முகில்போல (Cloud of Colours) அதாவது ஒளிபுகும் தன்மை கொண்ட (Transparent), புகையினாலான சிறு கோடு போல (Wispy) இருக்கும் என்கிறார்.

Life after Life புத்தகத்திலிருந்து சிலரது அனுபவங்களை மிகச் சுருக்கமாக இங்குக் குறிப்பிடுகின்றேன்.

**அனுபவம்:**

"நான் ஓடிக்கொண்டிருந்த கார் வீதியை விட்டு விலகி உருண்டு தலைகீழாக விழுந்துவிட்டது. நான் விபத்துக் குள்ளாகினேன். அதே கணம் நான் எனது உடலைவிட்டு தூர விலகி மிதந்துகொண்டு என் காரைப் பார்த்தேன். எனக்கு நீல வானம் தெரிந்தது, எனது தொடர்பு உடலிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டது. எனக்குள்ளிருந்து எனது உயிர் இருப்பு (being) அல்லது மனம் (Mind) அல்லது சுயம் (Self) அல்லது ஆவி (Spirit) அல்லது பிரக்ஞை (Consciousness) (எப்படி

அதைச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை) 'அது' உடலிலிருந்து எனது தலையின் ஊடாக வெளியேறியது. (I lost my physical reality, I lost touch with my physical body), 'நான்' இப்பொழுது என் உடலிலிருந்து பிரிந்து மேலே பறந்துசென்று மீண்டும் என் உடலைப் பார்க்கிறேன். நான் பாரமற்று இலேசாக இருக்கிறேன். நான் ஒரு வட்டமான முகிலைப் போல (It was small and it felt as if it were sort of circular cloud) தெரிகிறேன். 'நான்' தலையின் முற்பகுதியின் ஊடாக வெளியேறி எனது உடலிலிருந்து பிரிந்தேன். (The most striking point of the whole experience was the moment when my "being" was suspended through the front part of my head) கார் விபத்து ஒரு நொடிப் பொழுதில், துரித கதியில் நடந்தது. எனக்கு எனது காருடனோ, எனது உடலுடனோ எவ்வித தொடர்புமில்லை, ஆனால் எனது மனதுடன் இருக்கிறேன். (I really was not too involved with the car or the accident or my own body but only with my "Mind"...) எனது இருப்புக்கு குறிப்பிட்ட வடிவம் இல்லை, பௌதிக அமைப்புமில்லை, இதை எப்படி விளங்க வைப்பது என்பது எனக்குத் தெரியவில்லை (My being had no particular physical characteristics. I could describe it in so many ways, in so many words, but none of them would be exactly right. It was so hard to describe.)

டாக்டருடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள் கூறியதாவது: "நான் எனது உடலுக்கு வெளியே சென்றபோது, எனது கால்கள், கைகள் உட்பட என் உடல் முழுமையாக இருந்தது, ஆனால் பாரமில்லாமல் இருந்தேன். எனது கால், கை அசைக்கக்கூடியதாக இருந்தது. உடலின் ஒரு பகுதி மற்றைய பகுதியை விட உஷ்ணமாக இருந்தது. 'நான்' என் உடலுக்கு வெளியில் சௌகரியமாக இருந்தேன். எந்த விதமான மணங்களையும் நுகரவில்லை. பார்க்கும் திறன், கேட்கும் திறன் என்பன அதிகமாயிருந்தது. எவ்வளவு தூரத்திற்கும் பார்க்கக்கூடியதாகவும், கேட்கக் கூடியதாகவும் இருந்தது.

## அத்தியாயம் 25

# இறந்தவர்களைச் சந்தித்தல்
# (Meeting the deceaseds)

சிலர் தாங்கள் இறந்தபோது வேறு ஆட்களை (Spiritual Beings) சந்தித்ததாகவும், அவர்கள், "நீங்கள் இறக்க வேண்டியதில்லை, உங்கள் உடலுக்குள் திரும்பிச் சென்று விடுங்கள்" என்று தங்களுக்குச் சொன்னதாக, தங்களுடைய அனுபவங்களை டாக்டரிடம் கூறியுள்ளார்கள்.

பெண் ஒருவர் கூறுவதைக் கேளுங்கள்: "எனக்கு பிரசவம் நடைபெறும்போது, குழந்தை வெளியே வரமுடியாது கஷ்டப்பட்டது, அத்துடன் இரத்தப்பெருக்கும் ஏற்பட்டது. டாக்டர்களது முயற்சி எதுவும் பயனளிக்கவில்லை, நான் இறந்துவிட்டேன். என்னைக் காப்பாற்ற முடியாதென எனது குடும்பத்தினருக்கு டாக்டர்கள் கூறியும் விட்டனர். எனக்கு அது கேட்டது, ஆனால் நான் தைரியமாக இருந்தேன். உடலுக்கு மேலே ஏராளமானவர்களைப் பார்த்தேன். என்னைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களை எனக்குத் தெரியும். எனது உறவினர்கள், ஏற்கனவே இறந்துபோனவர்கள், எனது அம்மாவைப் பார்த்தேன், நான் பாடசாலையில் படித்தபோது இறந்த எனது வகுப்பில் படித்த மாணவி, பல உறவினர்கள், பல நண்பர்கள். அவர்களது முகங்கள் மாத்திரம் தெரிந்தது. அவர்களை எனக்கு அருகாமையில் உணரக்கூடியதாகவும் இருந்தது. அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதுபோலத் தெரிந்தது. அவர்கள் எனக்கு அருகாமையில் இருப்பது எனக்கு சந்தோஷமாக இருந்தது."

## அத்தியாயம் 26

# மனத்திரையில் கடந்த காலம்
# (Mental Picture)

**வி**யட்னாம் யுத்தத்தில் பங்கேற்று மரணநிலைக்கு சென்று மீண்ட அமெரிக்க இராணுவப் போர் வீரன் ஒருவனின் அனுபவம்:

"போரில் எனக்குப் பலத்த காயம் ஏற்பட்டு நான் இறந்து விட்டேன். எனது உடலில் துப்பாக்கிகளின் (Machine Gun) குண்டுகள் பாய்ந்திருந்தன. நான் கலங்கவில்லை, எல்லாம் நலமாக இருப்பதாக உணர்ந்தேன். எனது வாழ்வு எனக்கு முன் படமாகத் தெரிந்தது. நான் குழந்தையாக இருந்து வளர்ந்தது என் முன் காட்சியாக தெரிந்தது. நான் என் வரலாற்றைப் பார்த்தேன். எல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நடந்து முடிந்தன. எல்லாம் தொடர் காட்சிகளாக (Slide Show) இருந்தன."

"நான் என் வழமையான உடலுக்குள் திரும்பியதும் எனது சொந்த வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் நினைவுகூரக் கூடியதாக இருந்தது. ஒரு நொடிப் பொழுதுக்குள் கடுகதியில் நடந்த மனக்காட்சிகள் (Mental Pictures) இவை."

### அத்தியாயம் 27

# தன் இறுதிக் கிரிகைகளின் ஆரம்ப நிலையைப் பார்த்தார்

(Witnessed the beginning Stage of his funeral Rites)

**நான் அறிந்த ஓர் சம்பவம்:**

*30 வருடங்களுக்கு முன் இந் நூலாசிரியருக்கு நண்பர் ஒருவர் கூறிய சம்பவம் ஒன்று அப்போது சுவாரஸ்யமாக இருந்தது. என்றோ ஒருநாள் அது உதாரணமாக மாறும் என்று நான் அப்போது நினைத்திருக்கவில்லை. அந்தச் சம்பவத்தை முடிந்தளவில் ஞாபகப்படுத்தி இங்கு எழுதுகிறேன்.*

*யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில் வசித்த அவருக்கு ஒரு மழைக் காலத்தில் பக்கத்து வீட்டில் மாலைப்பொழுதில் திடீரென உதவிக்குரல் கேட்டு அந்த வீட்டை நோக்கி ஓடினார். ஓடும்பொழுது தனது வீட்டு கேற் (Gate) அருகில் கால்தடுக்கி விழுந்து எழும்பி ஓடினார். பக்கத்து வீட்டுக் கிணற்றுக்குள் வீட்டுக்காரன் தண்ணீர் அள்ளும்போது தவறுதலாக விழுந்து விட்டார். ஆனால் அவருக்கு நீந்தத் தெரியாது. அவரின் மனைவியும், மனைவியின் தாயும் கிணற்றிலிருந்து தூக்க முயற்சி செய்தும் முடியவில்லை. தண்ணீர் கிணற்றுப் பிட்டிவரை நின்றது. அவர் மயக்கமான நிலையில் தண்ணீருக்குள் அமிழ்ந்து மேலே வந்தார். அவர்களுடன் தானும் சேர்ந்து தண்ணீரிலிருந்து அவரை வெளியே மீட்டெடுத்துவிட்டார்கள். இறந்த மாதிரித்தான் உடல் இருந்தது. அயலவர்கள் அப்போது அங்கு கூடி விட்டார்கள். பெரும்பான்மையோர் அவர் இறந்துவிட்டார் என்றே கருதினார்கள். அவரை ஒரு கட்டிலில் படுக்கை*

நிலையில் வைத்தார்கள். அவரது மனைவியின் தாயார் குத்துவிளக்கை ஏற்றி அவரது தலைமாட்டில் வைத்தார். மரணச்சடங்கிற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளத் தயாரானார்கள். அவரது உடலில் ஏதோ ஒரு மாற்றத்தை அவதானித்தார்கள். உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சைக்குப் பின்பு கண் விழித்தார். கண்விழித்தவர் அயல்வீட்டுக்காரனை சிறிது நேரம் உற்றுப் பார்த்தார். பின்பு கண்களை மூடினார், பின்பு கண் விழித்தார். அயல்வீட்டுக்காரனை உற்றுப்பார்த்துக் கேட்டார் "ஏன் ஓடிவரும்போது கேற்றடியில் (Gate) விழுந்தீர்கள்?" மனைவியின் தாயாரிடம் "ஏன் குத்துவிளக்கை என் தலைமாட்டில் வைத்தீர்கள்?" என்றார். இவை எல்லாம் ஏதோ ஒரு கனவுபோல் ஞாபகம் இருக்கிறது என்றாராம்.

இவரது உடலிலிருந்து வெளியேறிய இவரது 'சுயம்' (Self) அங்கு நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்த்திருக்கிறது. மீண்டும் தனது உடலினுள் பிரவேசித்து உயிர்த்தெழுந்துள்ளது. தனது இறுதிக் கிரிகைகளின் ஆரம்பநிலையை இறந்த நிலையில் பார்த்த மனிதர் இவர். உடல் இறக்கும், பிரக்ஞை (Consciousness) இறவாது. நிகழ்வுகள், அனுபவங்கள், பெற்ற அறிவு பிரக்ஞையில் பதிவாகி தொடரும் என்கிறார்கள் ஞானிகள்.

இந்தச் சம்பவமானது What has become of Soul After Death, Life after Life, Life after Death, The other Side and Back, Reincarnation போன்ற பல நூல்களும் அதனைத் தொடர்ந்து Intuition, The early years of the Child, The Growth of the Mind, Eastern Philosophy, Western Philosophy, Psychic Children போன்ற நூல்களையும் வாசிக்கும் ஆர்வத்தை இந்நூலாசிரியரான எனக்கு தூண்டிவிட்டன. அதனால் பெற்ற தகவல்களும் விளக்கங் களும் மற்றவர்களைச் சென்றடையட்டும் என்ற நோக்கில் அக்கருத்துக்களை நூலாக வெளியிடுகின்றேன்.

## அத்தியாயம் 28

# இறந்த ‘நான்’ ‘எனக்கு’ மின்மினிச் சுடராகத் தெரிந்தேன்
# (Deceased ‘me’ seeing ‘my self’ as a sparkling light)

**யா**ழ்ப்பாணத்திலுள்ள இணுவிலைச் சேர்ந்த சிவசிதம்பரம் ஆசிரியர் (வயது 55) அவர்கள் 1984-இல் கடும் நோயுற்று யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது நிலை ஆபத்தான கட்டத்துக்குச் சென்றுகொண்டிருந்தது. அவரது உடலியக்கம் ஸ்தம்பித மடைந்து மயக்க நிலையை அடையும்போது ‘பிதற்றுவது’ போலிருந்தது. காதுகொடுத்துக் கவனமாகக் கேட்டபோது பிறமொழிச் சொற்கள் என்பது தெரியவந்தது. படிப்படியாக அவரது உணர்வுநிலை தாழ்வுநிலைக்குச் சென்றது. எதுவும் பேசாத உணராத மரணநிலை இரண்டு நாள்கள் நீடித்தன. மூன்றாம் நாள் திடீரென்று கண்விழித்து எழுந்தார்.

அவரைச் சுற்றிநின்ற மனைவி, பிள்ளைகளை ஆச்சரியமாகப் பார்த்தார். அவரது பார்வை ஏதோ ஒன்றைச் சொல்லப் போகிறார் என்பதை உணர்த்திற்று. “நான் எங்கே இருக்கிறேன்” என்று கூறிக்கொண்டு நாலாபக்கமும் பார்த்தார், தொடர்ந்தார் “நான் சித்தப்பாவைச் சந்தித்தேன்” (சித்தப்பா ஏற்கனவே இறந்துவிட்டார்). “நான் இறந்து போனேன், எனக்கு நானே ஒரு சிறு மின் மினிச் சுடராக தெரிந்தேன் அந்தச் சுடர் படிப்படியாக, ஒளியாக வளர்ந்து வளர்ந்து, என்னுடல் முழுக்க பரவ நான் எழுந்துவிட்டேன்” என்றார்.

அவர் சுயநினைவுக்குத் திரும்பிய பின் அவர் பேசிய பிற மொழிச் சொற்கள் எதுவுமே அவருக்குத் தெரியவில்லை. அவர் தன் முற்பிறப்பில் பேசிய மொழிகளாக இருக்கலாம். அந்த மரண அனுபவம் பின்பு எக்காலத்திலும் அவரது ஞாபகத்திற்கு வரவேயில்லை.

## அத்தியாயம் 29

# வாழ்வைப் பற்றிய பார்வை
# (Views and Effects on Lives)

மரணத்திலிருந்து மீண்டும் திரும்பிய அனுபவங்களை கூறினால் அதை நிராகரிக்கிறார்கள், சித்தப்பிரமை (Hallucination), மனக்குழப்பம், புனைகதை எனப் பல பெயர்கள் சூட்டப் படுகின்றன. பலர் இந்த அனுபவத்தை அடைந்தாலும் அதைக் கூற முன்வருவதில்லை. 'மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்' என்று எண்ணுவதாலும் மற்றவர்கள் அங்கீகாரம் இருக்காது என்பதாலும் உண்மை அனுபவங்கள் உறங்கிவிட்டன. இந்த அனுபவத்தைக் கூறமுடியுமே தவிர மற்றவர்களைத் திருப்திப்படுத்த முடியாது.

இந்த அனுபவத்தை அடைந்தவர்களுக்கு மரணபயம் என்றும் ஏற்படாது. அதைக் கடந்து தாண்டியவர்களாகி விட்டனர். இந்த அனுபவம் அவர்களது வாழ்வை வியாபிக்கச் செய்கிறது, வாழ்வை வித்தியாசமாக நோக்கச் செய்கிறது, வாழ்வை ஆழமாக பார்க்கச் செய்கிறது. காரணம் தத்துவம், ஆன்மிகம் சொல்லும் மரணத்துக்கு அப்பாலுள்ள நிலைகளை உண்மையில் அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள் இவர்கள். மரணம் (Death) என்று ஒன்று இல்லை, அடுத்த கட்டத்துக்கு செல்வது என்பதுதான் சரி என்கிறார்கள். அதாவது ஒரு வகுப்பில் சித்தி எய்தி அடுத்த வகுப்புக்குச் செல்வது போல, பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்வது போல, கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் செல்வது போல என்கிறார்கள். 'மரணம்' (Death) என்பதை விட 'ஆன்மா' (Soul), 'உயிர்' (Life), 'ஆவி'

(Spirit), 'சுயம்' (Self), 'இருப்பு' (Being), 'மனம்' (Mind) இவற்றை எங்கள் உடல் சிறைப்பிடித்து வைத்திருக்கிறது, அந்தச் சிறையிலிருந்து அவை 'தப்புகிறது' (Escape) என்பதே சரி என்கிறார்கள். Death என்பது பிழை Escape என்பதே சரி என்கிறார்கள். தங்களுக்கு வாழ்வு 'முத்தாக'த் தெரிகிறது, வாழ்வின் பெறுமதியை உணர்த்தியிருக்கிறது'' என மரண அனுபவமடைந்தவர்கள் கூறுவதாக டாக்டர் றேமண்ட் மூடி தனது நூலில் கூறுகிறார்

**அனுபவம்: (அ)**

**இருதய நோயால் இறந்து மீண்டும்**
**உயிர் பெற்ற ஒருவர் கூறுகிறார்:**

"இந்த நிலை ஏற்பட்டது என்னை ஆசீர்வதித்தது போல் உள்ளது. இந்த அனுபவம் ஏற்படுவதற்கு முன்பு பழைய நினைவுகள், எதிர்காலக் கற்பனைகள், திட்டங்கள், சஞ்சலங்கள், தோல்விகள், கவலைகள் என்று இப்படியாகத்தான் வாழ்வு நகர்ந்துகொண்டிருந்தது. சந்தோசத்தை தொலைத்திருந்தேன். இந்த அனுபவத்திற்குப் பின்பு நான் முற்றாக மாறிவிட்டேன். வாழ்வைப் பற்றிய மனநிலையை மாற்றிக்கொண்டேன்."

**அனுபவம்: (ஆ)**

**இறந்த நிலைக்குச் சென்று, மரண அனுபவத்தை அடைந்து, தனது உடலுக்கு வெளியில் சென்று மீண்டும் உடலுக்குள் புகுந்து திரும்பிய இப்பெண்மணி கூறுகிறார்:**

"என் உடம்பைவிட மனம்தான் எனக்கு முக்கியம் என்பதைத் தெரிந்துகொண்டேன். உடம்பு எப்படியும் இருக்கலாம். இந்த அனுபவத்திற்கு முன்னர் உடம்பின் அழகைப் பற்றியே யோசித்தேன். மனதைப் பற்றி அக்கறையேயில்லை, மனம் எப்படியும் இருந்துவிட்டு போகட்டுமே என்று நினைத்தேன். தற்போது எனது உடம்பைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. எல்லாமே 'மனம்'தான். மனதைப் பக்குவப்படுத்த வேண்டும், மனதை மாசில்லாமல் பேணவேண்டும். மனம் (Mind) மிக முக்கியமானது. உடல் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன எனக்கு

அதில் ஆர்வமில்லை. என் 'மனமே' எனக்கு வேண்டும். அது 'மரணமாகாதது' என்கிறார். இந்த அனுபவம் அடைந்த ஒரு சிலர் அமானுஷ்ய சக்தியை (Psychic Power) பெற்றுள்ளார்கள் என Life After Life நூலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## அத்தியாயம் 30

# புராதன மொழி பேசினார்
# Spoke Ancient Dialect



**சி**ல்வியா பிறவுண் (Sylvia Browne) அவர்களிடம் ஒருவர் தனது அதிக எடை தொடர்பான சிக்கல்களினால் ஆலோசனை பெறச் சென்றிருந்தார். தனது ஆய்வு கூடத்தில் அவரை அறிதுயிலுக்கு (Hypnosis) உட்படுத்தி அவருக்கு ஆலோசனை வழங்கிக்கொண்டிருந்தார் சில்வியா அவர்கள். அப்போது அறிதுயிலில் இருந்தவர் திடீரென தொடர்பற்ற புரியாத மொழி பேசத் தொடங்கிவிட்டார். எதுவுமே புரியாத சில்வியா அவர் தன்னையறியாமலே பேசிக் கொண்டிருந்த அந்த மொழியை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்துகொண்டார். அவர் அறிதுயிலிலிருந்து எழுந்தபின் சில்வியா அவரை எதுவும் கேட்கவில்லை.

அந்தப் பதிவு செய்த உரையாடலை அமெரிக்காவிலுள்ள ஸ்ரான்போட் (Stanford) பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தார். அந்தப் பல்கலைக்கழகம் கூறிய விவரம் சில்வியாவை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. 'கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் எகிப்தில் பேசப்பட்ட அஸ்ஸிரியன் மொழியில் (Assyrian Dialect) சரளமாக உரையாடுகிறார். எகிப்தில் பிரமிட் (Pyramid) கட்டும் நிர்மாணத் தொழிலாளியாக வேலை செய்து கொண்டிருப்பது போல நிகழ்காலத்தில் பேசுகிறார்' என்பதே அந்த ஆச்சரியத் தகவல்.

சில்வியா அவரை அழைத்துக் கேட்டபோது தனக்கும் எகிப்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்றும், தனது குடும்பத்தில் எகிப்திய கலப்பு எதுவும் இல்லையென்றும் கூறினார். தனக்கு ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாதென்றும், தான் எகிப்துக்கு சென்றதில்லையென்றும், பிரமிட்டைப் பார்த்ததில்லை என்றும், பிரமிட்டைப்பற்றிய எதுவித அறிவும் தனக்கில்லை என்றும் கூறினார். அவர் பேசிய அஸ்ஸிரியன் மொழி இன்று பேச்சுவழக்கில் இல்லை. அந்த மொழி எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்புதான் வழக்கத்திலிருந்தது.

இந்த மொழியில் உரையாடிய அவர் பிரமிட் கட்டும்போது அப்போது தொழிலாளியாக வேலை செய்திருக்கிறார். அவர் கி.மு. காலத்தில் எகிப்தில் வாழ்ந்திருக்கிறார். அந்த அனுபவம் இவரது ஆழ் மனதில் உள்ள Spirit Mind-இல் உறங்கி யிருந்திருக்கிறது என்கிறார் சில்வியா பிறவுண் அவர்கள். ஒருவரது அனுபவம் அவருடன் சகல பிறப்புகளிலும் தொடரும் என்பதற்கு இந்நிகழ்வு நல்ல உதாரணமாகிறது. மறுபிறப்பு உண்டு என்பதற்கு இது தவிர வேறு உதாரணம் தேவையில்லை. உடல் இறக்கும் பிரக்ஞை (Consciousness) இறவாது தொடரும். ஒருவரது ஆன்மா (Soul), சுயம் (Self), பிரக்ஞை (Consciousness) அழியாது என்பதை இந்த நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. ஒருவரது அனுபவம் பிரக்ஞையூடாக எல்லாப் பிறப்பிலும் தொடர்கிறது என யோகிகள் கூறுகிறார்கள்.

## அத்தியாயம் 31

# ஆவிகள் அனுப்பிய செய்திகள்
# (Message from Spirits)



Dr. M.L. Morse



Dr. Pin Van Lummell

மறுபிறப்பு, முற்பிறப்பு ஆராய்ச்சி மாத்திரமல்ல அதைப் பற்றி உரையாடத் தொடங்கினாலே எண்ணற்ற கேள்விகள், ஏளனங்கள் தோன்றும். மதங்கள் இதைப்பற்றி பயமுறுத்தி, பயமூட்டி வைத்திருக்கின்றன. மதபீடங்கள் கண்டனம் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றன.

கண்டனம் தெரிவிப்பவர்களுக்கோ அல்லது நூலாசிரியரான எனக்கோ நேரடி அனுபவமில்லை, மரண அனுபவமும் இல்லை, உயிர்த்தெழுந்த அனுபவமும் இல்லை. யாரோ எழுதிய நூல்கள்தான் ஆதாரம். திரட்டி எழுதிய விடயங்கள் தான் சர்ச்சைக்கு உரியவையாகின்றனவே தவிர வேறு எதுவுமில்லை. இத்துறையில் யாரும் என்ன கருத்தும் கூறலாம். சரி, பிழை உறுதிப்படுத்த எவராலும் முடியாது.

The other side போன்ற நூல்கள் இன்று பிரபல்யமாகின்றன. அமெரிக்கத் தொலைக்காட்சிகளில் 'ஆவி உதவி செய்கிறது' போன்ற நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகின்றன. தொட்டிலில் உறங்கிக்கொண்டிருக்கும் குழந்தை புரைக்கேறி சுவாசிக்க

முடியாது திணறும்போது உறங்கிக்கொண்டிருந்த தாயை 'ஏதோ' ஒன்று தட்டி எழுப்பிவிட தூக்கம் கலைந்து எழும்பிய தாய் பிள்ளையைக் காப்பாற்றிய நிகழ்வுகளையும் இதுபோன்ற பல நிகழ்வுகளையும் இன்று நாம் தொலைக்காட்சியில் பார்க்கிறோம்.

ஹொலிவூட்டில் வெளிவந்த இந்தியா, கேரளாவைச் சேர்ந்த குடும்பப் பின்னணியைக் கொண்ட சியாமளன் (Syamalan) என்ற வாலிபன் எழுதி இயக்கி 1999-இல் வெளிவந்த The Sixth Sense என்ற படத்தில், ஒரு பையன் இறந்தவர்களைப் பார்ப்பதும் அவர்களுடன் தொடர்புகொள்வதைப் பற்றிய கதையும் காட்சிகளும் இடப்பெற்றிருந்தது. அக்காலத்தில் வெளிவந்த படங்களில் அதிக காலம் சினிமா தியேட்டர்களில் ஓடி, அதிக பண வசூலைக் குவித்தது (Number one at the box office) இந்தப் படம். மக்கள் இத்தகைய விடயங்களில் ஆர்வமாக உள்ளார்கள் என்பதை இப்படத்தின் வெற்றி எடுத்துக்காட்டுகிறது, ஆனால் அதே நேரத்தில் இப்படியான விடயங்களைப்பற்றி பேசுவதைத் தவிர்க்கவும் விரும்புகிறார்கள். இப்படம் ஒஸ்கார் (Oscar) விருதுக்குரிய சிறந்த படங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் எல்லோரும் இந்தப் பிரபஞ்சத்துடன் உயிரியல் ரீதியாக தொடர்பு உடையவர்களாகவே பிறந்துள்ளோம். டாக்டர் மெல்வின் மோர்ஸ் (Dr. Melvin.L.Morse) அமெரிக்காவில் உள்ள சியாற்றில் நகரிலுள்ள குழந்தைகள் வைத்தியசாலையில் பணிபுரிந்தவர். பல உயிர் ஆபத்தான நிலையில் இருந்த குழந்தைகளை, சிறுவர்களை காப்பாற்றியபோது அவருக்கு ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டது. உயிர் பிரியும் தருணத்தில் இருந்து மீண்டும் உயிர் பெற்றுத் திரும்பிய சில பிள்ளைகள் தங்களுக்குத் தொடர்பில்லாத சில விடயங்களை கூறியுள் ளார்கள். மரணத்தை அண்மித்த இந்த அனுபவம் இவருக்கு அத்துறையில் (Near Death Experience) ஆராய்சி செய்யும் ஆர்வத்தைத் தூண்டியது.

இந்த ஆய்வை மையமாக வைத்து அமெரிக்க வைத்திய சங்கத்தின் (The American Medical Association) வைத்திய சஞ்சிகையில், மூளையின் வலது பக்க ரெம்பறல் லோப் (Right Temporal Lobe) இன் விசேட தொழிற்பாடுதான் இதற்குக்

காரணம் என்ற செய்தி வெளியாகியது. சிலருக்கு இது விஷேடமாகத் தொழிற்படுகிறது. மனிதர்களுக்கு பலவித ஆற்றல்கள் இருப்பது போல இதுவும் ஒரு ஆற்றலே என கட்டுரை வெளியிட்டார்.

இந்தக் கட்டுரையால் இந்த டாக்டர் பலத்த கண்டனத்துக்கு உள்ளானார். ஏனெனில் இவர் மரணத்தைப் பற்றி அல்லவா! எழுதுகிறார். மரணத்தைப் பற்றி யாரும் பேசக்கூடாது அல்லவா! இவர் எதைத் தவிர்க்க வேண்டுமோ அதைதான் ஆராய்ச்சி செய்கிறார் என நாலா பக்கங்களிலிருந்தும் அவரை நோக்கி குற்றச்சாட்டுகள் பறந்து வந்தன. சில கண்டனங்கள் மரண அனுபவம் சம்பந்தமான கட்டுரைகள் தடை செய்யப்பட வேண்டும் என்றும் கோரின.

ஹொலன்ட் நாட்டில் உள்ள உல்ரெக் பல்கலைக் கழகத்தில் (Ultrech University, Holland) சொற்பொழிவு ஆற்ற Dr. Melvin L. Morse அழைக்கப்பட்டார். (இதை ஏற்பாடு செய்த Dr. P.Van Lummel அவர்களும் மரண அனுபவங்களை (Near - Death) ஆய்வு செய்பவர்). இவரது சொற்பொழிவு முடிவடைந்த வுடனே அந்நாட்டுப் பெண்மணி ஒருவர் இவருடன் தான் பேச வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். அப் பெண்மணி பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அப்பெண்மணி தன்னிடம் ஒரு முக்கிய செய்தி உண்டு என்றார். அதாவது, 'தான் ஓர் அமானுஷ்ய சக்தி (Psychic) கொண்டவர்' என்று அவர் தன்னை Dr. Melvin L. Morse அறிமுகப்படுத்தினார். அப்பெண்மணி மேலும் தொடர்ந்தார் "டாக்டர் அவர்கள் சிகிச்சையளித்து இறந்த நோயாளியான சிறுமி ஒருவரின் செய்தி தன்னிடம் இருக்கிறது" என்று கூறி அவர் ஒரு படத்தைக் காண்பித்தார். அதைத் தானே வரைந்ததாகவும் கூறினார். டாக்டர் தான் சிகிச்சையளித்து இறந்த ஒரு பெண் சிறுமியின் உருவம் அப்படத்திலிருப்பதை அவதானித்தார்.

அந்த அமானுஷ்ய சக்தி கொண்ட அப்பெண் மேலும் தொடர்ந்தார். இந்தச் சிறுமியின் படம் உங்களிடமிருந்தது அதை ஏன் உங்கள் சொற்பொழிவில் காட்டவில்லை. அதனால் நான் இங்கு வரைந்து உங்களிடம் தருகிறேன் என்றார். (அந்த இறந்த சிறுமியின் இரகசியச் செய்தியை தான்

தற்போது பெற்றதாகக் கூறி அதை டாக்டரிடம் கூறினார் - அந்தச் சிறுமியின் உருவத்தைப் படமாக வரைந்து இப்பெண்மணி காட்டியது டாக்டருக்கு ஆச்சரியமாக இருந்தது.)

அச்சிறுமி டாக்டருக்கு அனுப்பிய செய்தி "மரணத்தை அண்மித்த (Near-death research) உங்கள் ஆய்வுக்கு இருவர் உதவி செய்வார்கள்" என்பதுடன் டாக்டரது தனிப்பட்ட விடயங்களைப் பற்றியும் அச்செய்தியில் இருந்தது. டாக்டருக்கு வியப்பாகவும், ஆச்சரியமாகவும், திகைப்பாகவும் இருந்தது. டாக்டர் அமெரிக்கா திரும்பிவிட்டார். டாக்டர் இதற்கு முக்கியத்துவம் கொடுக்காததால் இந்த நிகழ்வை படிப்படியாக மறந்துவிட்டார்.

அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு டாக்டர் மெல்வின் மூஸ் அழைக்கப்பட்டார். அதே நிகழ்ச்சிக்கு அமெரிக்காவில் பிரபல அமானுஷ்ய சக்தி கொண்ட (Psychic) பெண்மணியான சில்வியா பிறவுண் (Sylvia Browne) கலந்துகொள்ளச் சென்றிருந்தார். நிகழ்ச்சிக்கு முன்பு இருவரும் ஒருவருக் கொருவர் அறிமுகமாகி உரையாடிக்கொண்டிருந்தனர். திடீரென சில்வியா டாக்டரிடம் "உங்களுக்கு கூறும்படி எனக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது" என்றார். "டாக்டர் நீங்கள் உதவி செய்த பிள்ளைகள் ஆதரவாக இருக்கிறார்கள்" - இது ஒருசெய்தி - "உங்களுக்குப் பிறிதொரு செய்தியும் கிடைத்திருக்கிறது" என்று சில்வியா தொடர்ந்தார்.

அதாவது ஹொலண்டில் சந்தித்த அப்பெண்மணி கூறிய அதே செய்தியையே கூறினார். டாக்டர் திகைப்பில் அமைதியானார். தான் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென முடிவு எடுத்தார். "கோடிக்கணக்கானவர்கள் கோடிக்கணக்கான விளக்கங்கள் கூறலாம். ஆனால் அந்தக் கோடிக்கணக்கானவர் மத்தியில் நீ ஒருவர் மாத்திரம் சரியானவராக இருக்கலாம்" எனத் தனது ஆலோசகர் தனக்கு முன்பு ஒரு தடவை கூறியதை டாக்டர் மெல்வின்மோர்ஸ் நல்ல ஆலோசனையாக நினைத்துக் கொண்டார்..

யார் இகழ்வாக கூறினாலும், கண்டனம் தெரிவித்தாலும், ஏளனம் செய்தாலும் மருத்துவ விஞ்ஞான துறையில் இந்த புதிய ஆய்வை மேற்கொள்ளத் திடசங்கல்பம் பூண்டார்.

வைத்தியசாலையில் கடமையிலிருக்கும்போது கார் கடலுக்குள் வீழ்ந்து காயப்பட்ட சிறுவன் அங்கு அனுமதிக்கப்பட்டான். டாக்டர் அவனது உயிரைக் காப்பாற்றினார். அந்த விபத்திலிருந்து மீட்கப்பட்ட சிறுவன் கூறிய அனுபவத்தை ஆய்வுக்கு எடுத்தார்.

கார் கடலுக்குள் பாய்ந்ததும் தண்ணீரில் மூழ்கி மூச்சுத் திணறி அச்சிறுவன் இறந்த நிலைக்குச் சென்ற சம்பவம் இது. அச் சிறுவன் கூறியதாவது "நான் ஒரு குழாய்க்கு ஊடாக (Tunnel) வேகமாக இழுத்துச் செல்லப்பட்டேன். அப்போது வெளிச்சம் ஒன்று தூரத்தில் தெரிந்தது பின்பு வானவில் போன்ற வடிவம் தெரிந்தது. அதன்பின் மிருகங்களையும் மனிதர்களையும் பார்த்தது போல ஞாபகம் இருக்கிறது" என்றார்.

மூளைப் பகுதியில் Right Temporal lobe நல்ல விருத்தியுடன் இருப்பவர்கள் அமானுஷ்ய சக்தி கொண்டவர்கள் (Psychic) என்கிறார் சில்வியா. அவர்களால் சாதாரண மனித சக்திக்கு எட்டாத விடயங்கள் எட்டும், இவர்களால் Spiritual Healing செய்ய முடியும். அதற்காக அதிஷ்டம் தரும் லொத்தர் சீட்டிற்குரிய இலக்கங்கள் என்ன என்று முன்கூட்டியே அறிய, இந்த அமானுஷ்ய சக்தியைப் பிரயோகிக்கமுடியாது என்று சில்வியா கூறுகிறார்.

இன்றைய விஞ்ஞான உலகம் இறந்ததற்கப்பால் என்ன என்பதையும் ஆராய்கிறது. "நான் தர்க்கவியல் அணுகு முறையை விட எனது உணர்வு பூர்வமான அணுகுமுறையை அதிகம் நம்புகிறேன்" என்கிறார் இந்த மருத்துவ டாக்டரிடம் சில்வியா அவர்கள். "எல்லாக் குழந்தைகளுக்கும் இயல்பாக அமானுக்ஷ்ய சக்தி உண்டு. வளர வளர காலப்போக்கில் அந்தச் சக்தி தன் வலுவை இழந்துவிடுகிறது. "குழந்தைகளுக்கு முற்பிறப்பு ஞாபகம் உண்டு. அவர்கள் கதைக்கத் தொடங்க அந்த ஞாபகம் மறையத் தொடங்கும்' என்கிறார் சுவாமி ஓசோ.

குழந்தைகள் உலகில் பிறக்கிறார்கள், சிறிது காலம் அனைத்துக் குழந்தைகளும் தங்களுக்குள் ஒரே மாதிரித்தான் உரையாடுகிறார்கள் 'அது ஒரு பொதுமொழி.' இறந்த பின்பு

மனிதர்களது ஆன்மா, ஆவி, சுயம் ஒரே மொழியில் உரையாடுகிறது. சில பிள்ளைகளுக்குச் சில காலத்துக்கு முற்பிறப்பு ஞாபகம் நீடிக்கும் என்கிறார். சிறுபிள்ளைகளுக்கு அமானுஷ்ய சக்தி (Psychic) இருப்பதாக சில்வியா பிறவுண் (Sylvia Browne) The other Side and Back என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எங்களுக்குச் சிலரைப் பார்த்ததும் எங்கோ பார்த்த ஞாபகம் ஏற்படுவதும், சில இடங்கள் பழக்கப்பட்டதாக இருப்பதும், சில பாடங்கள் சுலபமாக விளங்குவதும், சிலருடன் திடீர் நட்பு ஏற்படுவதும், உறவு ஏற்படுவதும் இவையனைத்தும் முற்பிறப்புத் தொடர்பே.

சில்வியா குறிப்பிடுகிறார் ஆவிகளின் பார்வையில் இந்தப் பூமியில் நாங்கள் 'பேய்கள்' (Ghost) அவர்கள் நடமாடும் உலகில் நாங்கள் வாழ்கிறோம்.

## அத்தியாயம் 32

# அன்னை: 'ஆவிகளைத் துரத்தி கப்பலின் ஆட்டத்தை நிறுத்தினார்'



அல்ஜீரியாவைச் சேர்ந்த சித்தர் (Occultist) தியோன் அவர்களிடம் நுண்ணுலகைப் பற்றிய அறிவை மிக இளம் வயதிலேயே அன்னை மிர்ரா (Mirra) அவர்கள் பெற்றார். தியோன் அவர்களுடன் கப்பலில் பிரயாணம் செய்யும்போது நடுச் சமுத்திரத்தில் கப்பல் சூறாவளியில் சிக்குண்டது போல ஆடத் தொடங்கி விட்டது. கப்பல் கேப்டன் 'இந்தக் கப்பலில் எந்தவித இயந்திரக் கோளாறும் இல்லை. கப்பல் நல்ல நிலையில் இருக்கிறது, சமுத்திரத்தில் ஆர்ப்பரிப்பு எதுவும் இல்லை, சூறாவளியோ, புயலோ எதுவும் இல்லை, அச்சம் கொள்ளாமல் இருங்கள்' என்று அறிவித்தார்.

தியோன் உடனடியாக அன்னை மிர்ராவை கப்பல் மேற்தளத்திற்குச் சென்று பார்க்குமாறு கூறினார். சிறிது நேரத்தில் கப்பல் ஆட்டம் நின்றுவிட்டது. அன்னை மிர்ரா தனது இருப்பிடத்திற்கு (Cabin) திரும்பினார். தியோனிடம் கூறினார் 'தீய ஆவிகள் பல ஒன்றுகூடிக் கப்பலை ஆட்டிக் கொண்டு நின்றன, அவற்றை நான் துரத்திவிட்டேன், கப்பல் ஆட்டம் நின்றுவிட்டது' என்றார். அதன் பின்பு கப்பலில் ஆட்டம் எதுவும் இல்லாமல் பிரயாணித்தது.

அன்னைக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரித்தது. ஆறுமுக நட்சத்திரக் குறியீட்டின் (நட்சத்திர முத்திரை) அர்த்தத்தை அறியும் அவா அன்னைக்கு இளம்பிராயத்திலேயே துளிர்விடத்

தொடங்கியது. அதற்காகக் காத்திருந்த அன்னைக்கு சுவாமி அரவிந்தரது விளக்கம் கிடைத்ததும் அகமகிழ்ந்தார். அந்த விளக்கத்தின் சாராம்சம் இதுதான்.

'மேல்நோக்கி மலரும் நிலையிலுள்ள தாமரை மலர்தான் அது. சூரிய ஒளியைக் கண்டதும் தாமரை மலர்வதைப்போல, நமக்கு ஆன்மிக ஒளி ஏற்பட்டால் மொட்டுப் போன்ற நம்முடைய மனம் தாமரைபோல மலரும் என்பதைக் குறிப்பிடுவதே அந்த ஆறுமுக நட்சத்திரக் குறியீடு.'

மிர்ரா (Mirra) அவர்கள் *21.02.1878*-இல் பிரான்ஸ் நாட்டில் பிறந்தவர். *29.03.1914*-இல் இந்தியா வந்து பாண்டிச்சேரியை அடைந்து அங்கே ஸ்ரீ அரவிந்தர் அவர்களைத் தனது ஆன்மிகக் குருவாக ஏற்று 'அன்னை' என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு ஆன்மிக அன்னையாக விளங்கியவர், *17.11.1973*-இல் உலகை நீத்தார்.

நோபல் பரிசு பெற்றதற்காக தாகூர் அவர்களுக்கு ஜப்பானில் பாராட்டு விழா நடைபெற்றது. ஜப்பானில் மிர்ராவும் கணவரும் இரவீந்திரநாத் தாகூர் அவர்களை தற்செயலாக சந்தித்தனர். இந்தியாவிற்கு வந்து தான் நடாத்தும் சாந்தினிகேதத்தை நிர்வகித்து நடாத்தும்படி தாகூர் அவர்கள் அன்னையை அழைத்தார். வேறு பணிகளில் அப்போது ஈடுபட்டுக்கொண்டிருந்ததால், அன்னை அவர்கள் அழைப்பை ஏற்க மறுத்தார். 'இந்தியாவுக்கு நீங்கள் வருவீர்கள்' என்று தாகூர் அன்றே கூறியிருந்தாராம். ஜப்பானிய மலர் அலங்காரக் கலையான 'இகபானா'வை (Ikebana) அன்னை மிர்ரா அவர்கள் அங்கு கற்றார். தாவர மண்டலத்திற்கு தனிப்பட்ட உணர்வு உள்ளதென்பதுடன், ஒவ்வொரு மலரும் வெளியிடும் இரகசிய தத்துவத்தையும், பின்னாளில் உளவியல் மொழியில் அன்னை விளக்கியுள்ளார்.

அன்னை மிர்ரா தனது இளம் வயது அனுபவம் ஒன்றை இவ்வாறு கூறியிருந்தார்:

'தினமும் இரவில் தூக்கத்தில் நான் பாரிஸ் (Paris, France) நகரத்தின் மேலே பறந்து, நகரத்தை முழுமையாகப் பார்ப்பேன் - இந்த அனுபவம் தனது 13 வயதிலிருந்து கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு நீடித்தது' என்கிறார்.

ஃஃஃ

## அத்தியாயம் 33

# ஞானம்பெற்ற ஆவிகள்


Alice Bailey

திபெத்திய மலைகளிலிருந்து இறந்த ஞானி 'கே' தனக்குச் செய்தி அனுப்புவதாக ஆலிஸ் பெய்லி அம்மையார் கூறினார். மிக உயர்ந்த நிலையில் ஆன்மிக வளர்ச்சி பெற்றிருந்த ஆவிகள் மேல்நிலையிலுள்ள ஆட்களை ஊடகங்களாகக் கொண்டு விடயங்களைச் சொல்கின்றனவா?



தத்துவமேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'ஆசானின் காலடியில்' என்ற நூலை எழுதியபோது, அவருக்கு ஆவியாயிருந்த திபெத்திய ஞானிகளோடு தொடர்பு இருந்திருக்கிறது, அதனால்தான் 'அந்த நூலின் ஆசிரியர் தான் இல்லை' என்று அவர் மறுத்தார் என ஓசோ குறிப்பிடுகிறார். இந்தப் பூமியின் வாழ்விற்கு அப்பால் உள்ள தொடர்புகள் இவை, மறைந்த ரிஷிகள், தவயோகிகள், ஞானிகள்தான் இந்த ஞானம்பெற்ற ஆவிகளாக இருந்திருக்கலாமென்பதே இந்நூலாசிரியரின் கருத்து.

மஹாவீரர் அடிக்கடி மனவழிமூலம் ஆகாயத்தைப் பார்த்தபடி உரையாடியதாக சமணக் கதையில் கூறப்படுகிறது. அவர் ஞானம் பெற்ற ஆவிகளுடன் உரையாடியிருக்கலாம். புத்தர் ஞானம் பெற்றதும் மௌனநிலையில் இருந்தார். ஞானநிலையிலுள்ள ஆவிகள் புத்தர் அடைந்த ஞானத்தை உலகிற்குத் தெரிவிப்பதற்காக அவரது மௌனத்தைக் கலைத்திருக்கலாமென நான் நினைக்கிறேன். (புத்தர் கடவுட்

கோட்பாடற்றவர், தானும் கடவுள் இல்லை என்று கூறியவர். ஆனால் மக்கள் அவரைக் கடவுளாக வணங்குகிறார்கள்.)

The other side என்ற நூலின் ஆசிரியரும், அமெரிக்காவில் உள்ள அமானுக்ஷ்ய சக்திபெற்றவர்களில் மிகவும் பிரபலமான Psychic சில்வியா பிறவுண் (Sylvia Browne) அவர்கள், 'நல்ல உள்ளத்துடன் வாழ்ந்தவர்கள் - இறந்தபின் நல்ல ஆவிகளாக, உதவி செய்யும் ஆவிகளாக இருப்பார்கள் எனவும், எதிர்பாராத விதமாகக் கிடைக்கும் உதவிகள், ஆபத்தான நேரங்களில் வரும் உதவிகள் எல்லாம் நல்ல ஆவிகளின் தூண்டுதலாகவும், சிலர் வழமைக்கு மாறாக நம்பமுடியாத அளவுக்கு, எதிர்பாராத அளவுக்கு வித்தியாசமாகச் செயற்படுவது தீய ஆவிகளின் தூண்டுதலாகவும் இருக்கலாம்' என குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி விவேகானந்தரும் ஆவிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சுவாமி இராமகிருஷ்ணரது சீடர்களில் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் "தான் விறின்டாபனில் (Virindaban) சாதனா செய்துகொண்டிருக்கும்போது தன்னுடன் 'ஆவி'யும் சேர்ந்து கொள்ளும், தான் காலையில் தூக்கத்திலிருந்து விழிக்கத் தாமதமானால் தன்னை தட்டி எழுப்பிவிடும் எனவும் இவ்வாறாகத் தனக்கு அந்த ஆவி பல உதவிகள் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

**ஒரு நிகழ்வு:**

### நல்ல ஆவியின் வேலையா?

ரொறன்ரோ கனடாவில் (Toronto, Canada) வசிக்கும் மாமியார் ஒரு நாள் நடுநிசியில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தபோது வோட்டர்லூ, கனடாவில் (Waterloo, Canada) உள்ள அவரது 3 வயது மருமகள் மூச்சுத்திணறுவதை கனவில் கண்டுகொண்டிருக்கும்போது, தன்னைத் தட்டி எழுப்பு வதையும் உணர்ந்தார். அப்போது அந்த மருமகளின் பெயரைச் சொல்லி அழைத்தபடி அலறிக்கொண்டு நித்திரையால் எழுந்தார். கணவர் (இந்நூலாசிரியர்) திடுக்கிட்டு விழித்து என்ன என்று விசாரித்தபோது மருமகள் மூச்சுத் திணறுவதாகக் கனவு கண்டதாக கூறினார்.

மருமகள் வீட்டாருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அங்கிருந்து கிடைத்த பதில் மாமியாரது கனவை உறுதிப்படுத்தியது. அதாவது நித்திரையாக இருக்கும் போது புரண்டு படுத்த அந்தச் சிறுமி, புரக்கடித்து திரும்பிப் படுக்கத் தெரியாமல் மூச்சுத்திணறி (suffocation) இருமியபடி, குப்புறப்படுத்தபடி அசௌகரிய நிலையில் இருந்திருக்கிறார்.

அவளது வித்தியாசமான சத்தத்தினால் பெற்றோர் தூக்கத்திலிருந்து விழித்துப் பார்த்தபோது அவளது நிலையை கண்டுகொண்டனர். சிறிது நேரத்திற்குப் பின்பு சௌகரிய நிலைக்கு திரும்பிய அச்சிறுமி தூங்கிவிட்டார். நல்ல ஆவி ஊடகமாக தொழிற்பட்டு தூக்கத்தில் இருந்த மாமியாரை எழுப்பிவிட்டதா?

## அத்தியாயம் 34

# மரணம் பற்றிய தெளிவுதான் ஒருவரது உண்மையான ஆசான்

'மரணத்துக்கு அப்பால் உள்ள நிலை என்ன என்று அறிந்தவர்களால்தான் மனதுக்கு அப்பாலுள்ள நிலை என்ன என்பது தெரியும். இந்த இரண்டும் ஒரே அனுபவத்தைக் கொண்டது' என்கிறார் போதிதர்மர்.

மரணத்துக்கு அப்பாலுள்ள நிலை அறிந்தவர்களுக்கு வாழ்வைப்பற்றிய தெளிவு இருக்கும். நீங்கள் வாழ்வைப் பற்றிய தெளிவு பெற ஒரு தத்துவ மேதையையோ, ஒரு உளவியல் நிபுணரையோ, ஒரு மனோதத்துவ ஆய்வாளரையோ, ஒரு துறவியையோ அணுகலாம். ஆனால் நீங்கள் ஆலோசனை கேட்கச் செல்பவர் மரணத்துக்குப் பயந்தவராக இருக்கலாம், எனவே அவரால் (மரணத்துக்குப் பயந்தவரால்) உங்கள் குழப்பத்தைத் தீர்க்கமுடியாது. நீங்கள் ஆலோசனை பெறச் செல்பவருக்கு மனதுக்கு அப்பால் உள்ள நிலை அனுபவமாகத் தெரிந்திருக்க வேண்டும் அல்லது மரணத்துக்கு அப்பாலுள்ள நிலை அறிந்துகொண்டவராக இருக்கவேண்டும். ஒருவர் வாழ்வைப் பற்றி நினைக்கும்போது அதனுடன் சேர்ந்தே வரும் மரண பயத்தையும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது, மரணம் பற்றிய தெளிவு வாழ்வை இலகுவாக்கும். அது ஓர் ஆசான் போன்றது.

வாழ்வின் ஆரம்பம் எது என்று கேட்டால், அநேகர் 'திருமணம்' என்கின்றனர். வாழ்வின் முடிவு 'மரணம்' என்கின்றனர். எனவே பாலியலுக்கும் (Sex) மரணத்துக்கும் தொடர்பு இருக்கிறதா? இன்பமும் இறப்புக்குமிடையே நிகழும் இந்த இன்ப மரணச் சம்பவத்தைக் கவனியுங்கள்:

றெட்பாக் (Redback) சிலந்தி இனத்தில் ஆண் சிலந்தி தன் வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் பெண் சிலந்தியுடன் உறவில் ஈடுபடும். அதன் பின்பு அது மரணத்தைத் தழுவிவிடும். அந்த ஆண் சிலந்திக்கு பாலியல் உறவு மரணத்தில் முடிகிறது. ஆண் சிலந்தி பெண் சிலந்தியுடன் சேர்ந்து உறவின் உச்சத்தில் இருக்கும்போது பெண் சிலந்தி ஆண் சிலந்தியை உண்ணத் தொடங்கிவிடும். பெண் சிலந்தி தன்னைக் கடித்துக் குதறி உண்பதை உணராது ஆண் சிலந்தி சிற்றின்பத்தில் தன்னையே மறந்துபோய் இருக்கும். அந்த ஆண் சிலந்தி தனது சுய உணர்வுக்குத் திரும்பும் நேரமும் அதன் மரணமும் ஒரே நேரத்தில் நடைபெறும் நிகழ்வாக இருக்கிறது.

இன்றும் உலகில் பாலியல் வல்லுறவுகள் அநேகமாக மரணத்தில் முடிகின்றன. பாலியல் தொடர்பான சர்ச்சைகள் மரணத்தில் முடிந்திருப்பதைப் புராணங்களில், இலக்கியங்களில், சரித்திரங்களில், அரசியலில் காணலாம். பாலியல் தொடர்பான சர்ச்சையே இராமாயணத்தில், மகாபாரதத்தில் மரணத்தில் முடிந்திருக்கிறது. உலகில் பாலியலும் மரணமும் அநேகமாக சேர்ந்தே செயல்படுகின்றன.

**பாலியல் உறவைப் பற்றிய சிந்தனையுடன் மிகவும் தொடர்புடையதா மரணம் பற்றிய பய எண்ணம்?**

சிக்மன் பிறையிட் (Sigmund Freud) ஒரு மிகப் பெரிய மனோ தத்துவ நிபுணர். பாலியல் தொடர்பாக மிகப் பெரும் ஆராய்ச்சி செய்தவர். இவர் உளவியல் துறையில் Psycho Analysis-ஐ அறிமுகப்படுத்தியவர். சிக்மன் பிறையிட் இன் மாணவர்கள் தாங்கள் என்று கூறுவதற்குப் பலர் ஆசைப்பட்டனர். அவரது நூல்களை வாசித்தோம் என்று பலர் பெருமையாகப் பேசிக்கொள்வார்கள்.

இவருக்கு மரணத்தைப் பற்றிய பயம் மனதின் ஒரு மூலையில் இருந்திருக்கலாம். எந்தக் காரணம் கொண்டும் மயானத்துக்கு போவதைத் தவிர்த்தே வந்தாராம். மனக் குழப்பங்களுக்கும் மரண பீதிக்கும் உளவியல் சிகிச்சை வழங்கியவர் இவர். நீங்கள் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண ஒருவரை அணுகும்போது அதே பிரச்சினையில், பீதியில் அந்த ஆலோசகரும் இருக்கலாம். மனித சுபாவம் என்னவென்றால்

பிரச்சினைகள் எல்லாம் தங்களுக்குத்தான் மற்றவர்களுக்கு அல்ல என்று எண்ணுவதுதான்.

**நோபல் பரிசு பெற்ற வீரம் செறிந்த எழுத்தாளரின் உயிரை எடுத்த மரண பீதி:**

**ஏர்னஸ்ட் ஹெமிங்வே (Ernest Hemingway)**


Ernest Hemingway

இவர் அமெரிக்காவில் 1899-இல் பிறந்து 1961-இல் இறந்தார். முதலாவது உலக மகா யுத்தத்தில் இராணுவத்தில் பணிபுரிந்தார். மருத்துவ வாகன சாரதியாக இத்தாலி நாட்டு எல்லையில் இலவசமாகச் சேவையாற்றினார். போர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியவர் காலப்போக்கில் சூரியனும் உதிக்கிறது (The sun also Rises), ஆயுதங் களுக்குப் பிரியாவிடை (Afarewell to Arms), யாருக்காக மணி அடிக்கிறது (For whom the Bell Tolls) போன்ற நூல்கள் மூலம் உலகப் பிரசித்திபெற்றார். 25 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். ஸ்பானிய நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரிலும், இரண்டாவது உலக மகா யுத்தத்திலும் செய்தி சேகரிப்பவராக பணிபுரிந்தார். 1954-இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

இருட்டும், மரண பீதியும் இவருக்குள் இருந்தது. வெளிச்சம் இல்லாத அறையில் இரவில் தூங்கமாட்டார். மரண பீதி காரணமாக 'மரண' விடயங்களைத் தவிர்த்தே வந்தார். தனிமையில் வாழ்ந்த இவருக்கு மரண அச்சம் சூழ்ந்து கொண்டது. அதன் காரணமாக விரக்தியும், மனச்சோர்வும், மனஅழுத்தமும் ஏற்பட்டு இறுதியில் தற்கொலை செய்து கொண்டார். மரணபீதியே இவரை மரணமாக்கிவிட்டது.

மரணம்தான் மிக முக்கியமான நிகழ்ச்சி. பிறப்பை விட முக்கியமானது. ஏனெனில் பிறப்பு ஏற்கெனவே நடந்து விட்டதே. மரணம் இனிமேல்தான் நடக்க வேண்டிய நிகழ்வு. உணர்வு பூர்வமாக அதை வரவேற்கத் தயாராக வேண்டும். எவரும் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது மரணத்தால் அழிக்க முடியாதது எது என்பதைத்தான்!

மரணமில்லாதது எதுவோ, அதில் வேர்விட்டு நின்றால் வாழும்போது நெகிழ்வானவராகவும், உண்மையானவராகவும், பேரானந்தம் உடையவராகவும் வாழமுடியும்.

**'மரணம் பற்றிய தெளிவுதான் ஒருவரது உண்மையான ஆசான்'** – ***உபநிடதம்.***

'தத்துவ சாஸ்திரத்தின் நிலை என்னவாகவும் இருக்கட்டும். மெய்ஞான நிலை என்னவாகவும் இருக்கட்டும். உலகத்தில் மரணம் என்ற ஒன்று உள்ளவரையில் மனித இதயத்தில் பலவீனம் என்பது இருக்கும் வரையில் மனிதனின் பலவீனம் காரணமாக, அவனது இருதயத்திலிருந்து எழும் கூக்குரல் இருக்கும் வரை கடவுள் மீது நம்பிக்கை இருந்தே தீரும்.'

- சுவாமி விவேகானந்தர்

*(26.09.1893 அன்று அமெரிக்காவில் சிக்காகோ நகரில் இடம்பெற்ற சர்வ சமயப் பேரவையில் புத்த மதத்தைப்பற்றி ஆற்றிய உரையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.)*

## அத்தியாயம் 35

# எமானுவல் சுவீடன் பேர்க்
# (Emanuel Sweden berg)




இவர் சுவீடன் நாட்டில் உள்ள ஸ்ரொக் ஹோம் (Stock Holm) நகரில் *1688*-இல் பிறந்து *1772* வரை வாழ்ந்தார். உடலியல், உளவியல் தொடர்பாகப் பல ஆக்கங்கள் படைத்துள்ளார். இவர் ஒரு இயற்கை விஞ்ஞானி (Natural Scientist). இவர் தனது பிற்காலத்தில், மரணத்துக்கு அப்பால் தான் அடைந்த அனுபவங்களைக் கூறியபோது, அவை ஆன்மிகத்திற்கு முரண்பாடான கருத்துகளாக அமைந்து விட்டன.

மரணத்துக்குப் பின் வாழ்வு எப்படியிருக்கும் என்ற ஆராய்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். தன் சொந்த அனுபவத்தை மையமாக வைத்தே இந்தப் பணியில் இறங்கினார். தான் மரணத்தைச் சந்தித்தது, தான் தன் உடம்புக்கு அப்பால் விலகிச் சென்றது ஆகிய அனுபவங்களைப் பின்வருமாறு கூறுகிறார்.

'என் உடல் இயக்கம் நின்றுவிட்டது, என் புலன்களும் செயல் இழந்துவிட்டன, என் உள்ளார்ந்த வாழ்வு மட்டும் என் எண்ணங்களுடன் இருக்கின்றன. எனது கடந்த காலம் என் முன் படமாக வருகின்றது. நான் சந்தித்தவைகளில் சில தேவதைகளாக இருக்கலாம். நான் இறக்கப்போகிறேனா?

என்று அவை கேட்டன. இந்த உரையாடல் மனித உரையாடல் போன்றதல்ல. எண்ணங்கள் பரிமாறப்பட்டன. இங்கு பிழையான கருத்துகளுக்கோ, விளக்கங்களுக்கோ இடமில்லை. மிகத் தெளிவான முறையில் எண்ணப் பரிவர்த்தனை இடம்பெற்றது.

'ஆவிகள்' அனைத்தும் ஒரே பொதுமொழி பேசுகின்றன. ஒவ்வொரு மனிதரும் இறந்தவுடன் பொதுமொழி பேசுகிறார்கள். ஆவிகளும், நானும் உரையாடியது, இரு மனிதர்களுக்கிடையே உரையாடும்போது ஏற்படும் சத்தம் போலக் கேட்கிறது. ஆனால் அருகாமையில் வேறு யாருக்கும் அது கேட்காது, உரையாடலில் சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமே கேட்கும். ஆவியினுடைய பேச்சு என் எண்ணத்துக்குள் நுழைந்தது. இறந்த மனிதன் தான் இறந்ததாக முதலில் உணரமாட்டான். காரணம் அந்தச் 'சீவன்' உடல் போன்ற ஒன்றுடன்தான் சேர்ந்திருக்கிறது.

எண்ணம், நுண்ணறிவு, ஞாபகம், இவை ஒரு மனிதனில் சீராக இருக்கிறது. (All the faculties of spirits..... are in a more perfect state as well as their sensations, thoughts and Perceptions.) இறந்த மனிதன் ஏற்கனவே இறந்த தனது வாழ்நாளில் தனக்கு நன்கு தெரிந்தவர்களது ஆவிகளைச் சந்திக்கிறார். அந்த ஆவிகள் உட்பட ஏனையவற்றையும் அவரை மரணத்துக்கு அப்பால் செல்ல உதவுகின்றன. அவரது கடந்தகால வாழ்வு அவருக்குத் திரையில் ஓடுவது போல ஓடுகிறது. அதில் பொய் இல்லை, போலி இல்லை, நடிப்பு இல்லை. வேறு ஒரு வாழ்வுக்குள் செல்லும்போது தனது பழைய ஞாபகங்களுடனே செல்கிறது. மரணத்தின் பின் தன்னுடன் அது புதிய அனுபவங்களைச் சேர்த்துக்கொள்வதில்லை.

மரணத்திற்கு அப்பாலுள்ள நிலை பற்றி, பிளேற்ரோவின் கருத்துக்களும், திபெத்திய நூலும், சுவீடன் பேர்க் கட்டுரையும், டாக்டர் றேமண்ட் மூடி-யுடன் பகிர்ந்து கொண்டவர்களது அனுபவங்களும் பெரும்பாலும் ஒரே மாதிரி ஒற்றுமையாக இருக்கின்றன. இவையனைத்தும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், வெவ்வேறு மத நம்பிக்கை கொண்டவர்கள், வித்தியாசமான கலாச்சாரப் பின்னணியைக் கொண்டவர்கள், வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்கள்

ஆவார்கள். இதில் மனதில் ஏற்படும் மாயைகள் (Delusion, Hallucination) என்றோ அல்லது மூட நம்பிக்கைகள் (Superstitions) என்றோ அல்லது மதக் கருத்துகள் ஆழ்மனதில் பதிந்து அவை வெளியே வருகின்றனவோ என முற்றுமுழுதாக சுலபமாகக் கூறமுடியாது. நாம் உயிருடன் வாழும்போது நிரூபிக்க முடியாத எமது 'உயிர்'ப் பிரச்சினை இது. விளக்கத்துக்கும், தர்க்கத்துக்கும், தத்துவத்திற்கும் அப்பால் விஞ்ஞானம் இதை நிரூபிக்கும் வரை வாதப்பிரதிவாதங்கள் உலகில் நிலவும்.

மரண அனுபவத்தை (Near Death Experience) பலர் அடைந்துள்ளனர். ஏன் அந்த அனுபவம் மக்கள் மத்தியில் பரவவில்லை? மரணத்தைப் பற்றிப் பேச அச்சம் உண்டு. இன்று விஞ்ஞானம் இயற்கையையே வெற்றிகொள்கிறது. மரண அனுபவத்தைக் கூறினால் மூடநம்பிக்கை என்று சுலபமாக முத்திரை குத்திவிடலாம். விஞ்ஞான வளர்ச்சிக்கு முன் அதற்குரிய அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம் என்ற ஏக்கம். இதன் காரணமாக இந்த அனுபவத்தை உணர்ந்தவர்கள் வாய்திறந்து பேசத் தயக்கம் காட்டுகிறார்கள். மரணமென்று கருதி பின்பு உயிர்பெற்ற சிலர் உடலுக்கு வெளியில் சென்று பார்த்த அனுபவத்தையும், தகவல்களையும் தேக்கி வைத்துள் ளனர். அவற்றை அவர்கள் தயங்காமல் வெளியிடவேண்டும். விஞ்ஞானமானது மரணத்துக்கு அப்பாலுள்ளதைக் கூறும் வரை மரண அனுபவம் அடைந்தவர்களது கூற்றுக்கள் இவ்வுலகில் ஏளனத்திற்குள்ளாகும்.

மரண அனுபவம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசமாக ஏற்படுமா? இல்லை இவர்கள் ஒரே மாதிரித் தான் அனுபவம் அடைந்திருக்கிறார்கள். இதில் ஆண் பெண் வேறுபாடு கிடையாது.

இந்த அனுபவத்தைக் கூறுபவர்கள் உண்மை கூறுகிறார்கள் என்பது எப்படித் தெரியும்? உண்மையான அனுபவத்தைக் கூறும்போது அந்த நினைவுகளால் அவர்களில் மாற்றம் தெரிகிறது. உணர்ச்சிப் பூர்வமாக அழுகிறார்கள், வாய் தள தளக்கப் பேசுகிறார்கள். டாக்டர் றேமண்ட் மூடி "தனக்கு இத்துறையில் நன்கு அனுபவம் இருப்பதாகவும், தனக்கு உண்மை பொய் கண்டறிவது சுலபம் என்றும் கூறுகிறார். பலர் தங்கள் அனுபவங்களைக் கூறும்போது பாதியில்

நிறுத்துகிறார்கள், காரணம் தங்களை யாரும் நம்பமாட்டார்கள் என அவர்கள் நினைப்பதால் தங்கள் அனுபவங்களைத் தாங்கள் கண்ட உண்மைகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளத் தயங்கு கிறார்கள் என டாக்டர் ரேமண்ட் மூடி தனது நூலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அத்தியாயம் 36

# இறந்தவர்களுடைய திபெத்திய நூல்
# (The Tibetian Book of the Dead)

மிக மிக ஆதி காலத்திலிருந்து முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் கூறிய தங்கள் மரண அனுபவங்களும், மரணத்திற்கப்பால் சென்று பெற்று வந்த அனுபவங்களும் வாய் மொழி மூலம் ஒருவரிலிருந்து இன்னொருவருக்குப் பல நூற்றாண்டுகளாகத் திபெத்திய நாட்டில் பரவி வந்ததுள்ளது. இது சரித்திர காலத்துக்கு முற்பட்ட வழக்கமாக இருந்தது.

எட்டாம் நூற்றாண்டில் முதன் முறையாக இந்த அனுபவங்களைத் திரட்டி எழுதி நூல் வடிவமாக்கி இரகசியமாகப் பாதுகாத்தனர். மரணத்தை ஒரு கலையாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த ஞானிகள் மரணத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து, தாங்கள் நினைத்த நேரத்தில் தங்கள் உடலை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார்கள். இந்நூல் இரண்டு நோக்கங்களை நிறைவு செய்கிறது. முதலாவதாக மரண பயத்தை நீக்குகிறது, இரண்டாவதாக மரணமடைந்த வரது அன்புக்குரியவர்களுக்கு மன ஆறுதலையும் நம்பிக்கையை யும் கொடுக்கிறது.

அந்த நூல் மரணத்துக்கு அப்பால் 'ஆன்மா'வின் நிலையை படிப்படியாக விளங்கப்படுத்தி, இறப்புக்கும் மறுபிறப்புக்கும் இடைப்பட்ட காலத்துக்கு அழைத்துச் செல்கிறது. முதலாவதாக 'மனம்' (Mind) அல்லது ஆன்மா (Soul) உடலை விட்டுப் பிரிந்து 'வெறுமைக்குள்' பிரவேசிக்கிறது. அது பிரக்ஞை நிலையில் (Consciousness) இருக்கிறது. அது பேரிரைச்சல், பெரும் ஓசை, பெரும் விசில் சத்தங்கள், பேரிரைச்சலுடன்

வேகமாக வீசும் காற்று இவற்றைக் கேட்பதுடன், சுற்றாடல் மங்கலான பிரதேசமாகவும், மங்கலான வெளிச்சமாகவும் இருப்பதைக் காண்கிறது. உடலுக்கு அருகாமையில் மக்கள் புலம்புவதைக் கண்டு அங்கே பேச முற்படுகிறபோது, அங்கு கேட்பாருமில்லை, கவனிப்பாருமில்லை. தான் என்ன செய்ய வேண்டும்? தான் எங்கே போக வேண்டும்? அடுத்தது என்ன? போன்ற எண்ணங்கள் ஏற்பட்டு தான் வாழ்ந்த பழக்கப்பட்ட இடங்களைச் சுற்றித் திரிகிறது. தான் இப்பொழுது ஒரு பிரகாசமான சரீரத்தினுள் (Shining Body) இருப்பதைக் காண்கிறது. சுவர், மலை எதையும் சுலபமாக ஊடுருவிச் செல்லக் கூடிய வல்லமை உண்டு. நினைத்தவுடன் எந்த இடத்திலும் தோன்றக்கூடியதாக உள்ளது. ஒலி, ஒளி எல்லாவற்றையும் விட வேகமானது 'ஆன்மா'. இதை 'இருப்பு' அல்லது 'மனம்' அல்லது 'சுயம்' அல்லது 'ஆவி' எனவும் அழைக்கப்படுகிறது. இப்படி எத்தனையோ பெயர்களால் அதை அழைக்கலாம். கட்டுப்படுத்தப்படாத எண்ணமும் தெளிவான சிந்தனையுடனும், நுண்ணறிவுடனும் (Perception) மிகத் தெளிவான மனத்துடனும், கூர்மையான உணர்வுடனும், இயற்கைத் தன்மையுடனும் உடம்பில் இருந்து பிரிந்த அந்த 'ஆன்மா' இருக்கிறது.

கபோதியாகவோ, காது கேளாதவராகவோ, ஊனமுற்றவ ராகவோ, கால் இல்லாதவராகவோ எந்தச் சரீர அமைப்பில் இருந்தவராக காணப்பட்டாலும், தான் வாழ்ந்த காலத்தில் தனக்கு இல்லாதிருந்த அல்லது தான் இழந்த அந்தப் புலன்களை, இல்லாதிருந்த அங்கங்களை, அதன் செயல்களை, முழுமையாக மீளப்பெற்று முழு ஆற்றலுடன் இருக்கிறது. எல்லா ஆன்மாக்களும் ஒரே மொழி பேசுகின்றன.

கண்ணாடிக்கு முன் ஒருவர் தன்னைப் பார்ப்பது போல இறப்பிற்குப் பின் தன் கடந்த கால வாழ்வை ஒருவர் பார்க்கிறார். நிகழ்கால வாழ்வில் ஒருவர் பொய் சொல்லலாம், இறந்த பின் அங்குப் பொய் என்பதே இல்லை. சகலமும் நிஜம் தான் என்கிறது அந்த திபெத்திய நூல்.

**பார்தோ தோடல் (Bardo Thodol):**

இறப்பைப் பற்றியும், இறப்புக்கு அப்பால் உள்ளதையும் 8ம் நூற்றாண்டில் (8th Century A.D) திபெத்தில் வாழ்ந்த ஞானி


Padma Sambhava

பத்ம சாம்பவ (Padma Sambhava) தியானத்தால், ஞானத்தால், அவர் தானே சாட்சியாக நேரடியாக அனுபவித்து அறிந்து கொண்டவற்றை பார்தோ தோடல் (Bardo Thodol) ஏடு விளக்குகிறது. இந்தியாவிலிருந்து பௌத்த ஞானிகள் வெளியேறியபோது இவர் திபெத்துக்குச் சென்றார். அங்கு பௌத்த ஞானத்தைப் போதித்தார். திபெத்துக்குப் பௌத்தத்தை முதன்முதலில் கொண்டுசென்றவர் ஞானி பத்மசாம்பவ அவர்கள்தான் என்று நூல்கள் கூறுகின்றன.

‘உடலை விட்டு விழிப்புணர்வு (Awareness) முழுமையாக விடுதலை பெற்று வெளியேறியதும் உடல் மரணமாகிறது. ஒருவருக்கு எப்படி கனவு நிலையிருக்குமோ அதுபோன்ற நிலையிலிருந்து அந்த ‘விழிப்புணர்வு’ அனுபவங்களை உணர்கிறது. உடலுடன் எவ்விதத் தொடர்புமில்லாத இந்த ‘விழிப்புணர்வு’ மீண்டும் பிறப்பெடுக்கிறது, அல்லது ஞானமடைந்து பிரபஞ்சத்தினுள் பிரவேசிக்கிறது’ என பார்தோ தோடல் விளக்குகிறது. இவ் ஏடு மேலும் ‘ஆன்மா’ உடலிலிருந்து விடுதலையாகும்போது, அதாவது மரணத்துக்குள் ஒருவர் நகரும்போது தானே தனக்கு ஒரு மிகச் சிறு ஒளியாக தெரிவார் எனவும் அத்துடன் மனமும் (Mind) சுயமும் (Self) இந்த இரண்டும் ஒரே மாதிரியானவைதான் (Identical) என்பதை அந்த ‘ஆன்மா’ அறிந்துகொள்கிறது எனவும் கூறுகிறது.

இறுதி மேலான உன்னத அனுபவத்தை அடைய ‘பார்தோ’ (Bardo) வழிகாட்டுகிறது. அதாவது சுயநலம், ஆணவம், தன்முனைப்பு அனைத்தையும் முற்றாக நீக்கி அன்புடனும், கருணையுடனும் ‘ஆன்மா’ உடலைவிட்டு வெளியேற உதவுகிறது. ஆன்மா ‘தான்’ இறுதியான ‘உண்மை’ என தன்னைத் தானே உணர, தன்னைத் தானே அறிய நிரந்தர ஆன்மா ‘ஒளி’யாக மாறுகிறது. அந் நிலையை தர்மஹாய (Dharmakaya) என இவ் ஏடு அழைக்கிறது. ஏனையவை மீண்டும் உடலாகப் பிறப்பெடுக்கின்றன என இவ் ஏடு கூறுகிறது. மரணம் ஒரு Process என்ற கருத்தை இந்நூல் வலியுறுத்துகிறது.

இந்நூல் 1927-இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது. இறப்புக்கு அப்பால் உள்ள 'நிலையை' ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**ஆசிரியர் கருத்து:**

உலகத்தில் இறந்த மனிதர்களிலிருந்து வெளியேறிய அனைத்து 'ஆன்மாக்களும்' தங்களுக்குள் ஒரே பொதுமொழி பேசுகின்றன. அதேபோல் உலகத்தில் பிறந்த அனைத்துக் குழந்தைகளும் தங்கள் பொதுமொழி போல 'Cooing'-ஐ வெளிப்படுத்துகின்றன.

## அத்தியாயம் 37

# இறப்புக்கப்பால் அழைத்துச் செல்லும் திபெத்திய ஞானிகள்

மனிதன் பிறந்தவுடன் இறப்பை நோக்கிச் செல்கிறான், இறந்தவுடன் பிறப்பை நோக்கிச் செல்கிறான். பிறப்பைவிட முக்கியமானது இறப்பு. ஏனெனில் ஏற்கனவே பிறப்பு நிகழ்ந்துவிட்டது. இன்னும் நடைபெறாமல் இருப்பதும் இனிமேல் நிகழ வேண்டியுள்ளதும் இறப்புத்தான். ஒவ்வொரு சிசுவும் பிறப்புக்கு உள்ளாகிறது.

தனது தாயின் கருவில் இருக்கும் குழந்தை முழுப் பாதுகாப்புடன் இருக்கிறது. தாயின் கருவறையே மிகவும் சௌகரியமான பகுதியாகும், கவலை கிடையாது. வாழ்விற் கான போராட்டமில்லை. தங்குவதற்குத் தடுமாற்றம் இருக்காது.

முற்றிலும் நிம்மதியான ஒரு நிலையில் இருக்கலாம். உளவியல் கருத்தின் படிபார்த்தால் அமைதி, சமநிலை, இணக்கம் என்பன உண்மையிலேயே இந்த காலத்தில்தான், ஏனெனில் ஒரு கருப்பையில் உள்ள குழந்தையானது ஒரு சொர்க்கத்தில் இருப்பது போன்றதாகும்.

புராணக் கதையில் கற்பகத்தரு மரம் சொர்க்கத்தில் இருக்கும், கேட்டதைக் கொடுக்கும் மரமாகும். விருப்பம் உடனடியாக நிறைவேற்றப்படும். கேட்பதற்கும், பெறுவதற்கும் இடையில் எவ்வித கால இடைவெளியும் கிடையாது. ஆசைப்பட்டது நிறைவேறிவிடும்.

கருவறை விருப்பத்தை நிறைவேற்றும் இடமாகும். ஒரு குழந்தைக்குத் தேவையான அனைத்தும் கால இடைவெளி யில்லாமல் கருவறையில் நிறைவேற்றப்படுகிறது. அங்கே குழந்தை குறைவில்லாத சொர்க்கத்தில் இருக்கும். குழந்தை கருவறையைவிட்டு வெளியே வரவேண்டுமென்று கேட்டால் எந்தக் குழந்தையும் வருவதற்கு சம்மதியாது. சொர்க்கத் திலிருந்து வெளியே செல்லுதல் போன்றதாகும். ஈடன் (Eden) தோட்டத்திலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட மனிதர் போன்றதாகும். குழந்தை பிறந்தபின் ஒரு தடுமாற்றத்தையே முதலில் சந்திக்கிறது. குழந்தையின் விருப்பங்கள் தடங்கலுடன் தான், கால இடைவெளியுடன் நிறைவேற்றப்படுகிறது. எளிதாக நிறைவேற்ற முடியாது. தற்பொழுது ஆசைக்கும், மற்றும் அது நிறைவேற்றுவதற்கும் இடையில் இடைவெளி இருக்கும். அது மெல்ல மெல்லக் கூடிக்கொண்டே செல்கிறது. இது முழுமையான நிறைவேற்றலாகவும் இருக்காது. இதன் காரணமாகப் பலமற்ற ஆசைகள் தேவையில்லாமல் பிறக்கின்றன. எனவே அது ஒரு நிலையான தடுமாற்றத்தைக் கொடுக்கிறது. எனவே தான் வெளியே வர வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதை ஒரு குழந்தை முடிவெடுக்க இயலுமாயின், எந்தக் குழந்தையும் கருவறையை விட்டு வெளியே வராது. அது முற்றிலும் சௌகரியமானதாகும் ஆனால் அது ஒரு செயலற்ற இருத்தலாகும். எந்தவித வளர்ச்சிக்கும் சாத்தியமில்லை. தன்னுணர்வுடன் கஷ்டங்களை (Risk), ஆபத்துக்களை தேர்ந்தெடுக்கும்போது வளர்ச்சி சாத்தியமாகிறது. அறியாத வழிகளில் நகரும்போது நாம் வளர்கிறோம்.

தாயின் கருவறையிலிருந்து வெளிவந்து பிறப்பது ‘முதல் பிறப்பு.’ சொந்த தன்னுணர்வின்மை என்ற கரு ிலிருந்து வெளிவந்து தன்னுணர்வுடன் (Self conscious) வாழுதல் ‘இரண்டாம் பிறப்பு.’ இறத்தல் ‘மூன்றாம் பிறப்பு.’ இறந்தவுடன் மீண்டும் பிறப்பை நோக்கிச் செல்கிறார்.

இறப்பை ஒரு Process என்கின்றனர் திபெத்திய ஞானிகள். அவர்கள் மரணத்துக்கப்பால் அழைத்துச் செல்கிறார்கள். ஆன்மிகம் இதற்கு வழிசமைக்க வேண்டும். பிறந்தவர்கள் மரணமாகத்தான் போகிறார்கள். அந்த மரணத்துக்கப்பால் இருப்பது என்ன என்பதை நாம் வாழும்போது ஏன்

அறியக்கூடாது? திபெத்திய ஞானிகள் 'பார்தோ தியானம்' (Bardo Meditation) மூலம் சீடர்களை மரணத்துக்கு அப்பால் அழைத்துச் செல்கிறார்கள். மரண அச்சத்தைப் போக்கு கிறார்கள்.

உலகிலே மரணத்தை ஒரு Process என்று கூறியவர்கள் திபெத்திய ஞானிகள்தான். மரணம் வாழ்வின் ஒரு பகுதி என்கிறார்கள். மரணத்திற்கு ஒவ்வொருவரும் தயாராகுங்கள் என்கின்றனர். அதை நடைமுறையிலும் செயல்படுத்தியவர்கள் அந்த ஞானிகள். இன்று அத்தகைய ஞானிகள் திபெத்தில் குறைந்துவருகிறார்கள்.

உலகம் முழுவதும் உள்ள ஞானிகள் வாழ்வைப் பற்றிப் பேசுகிறார்கள். மன இறுக்கத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், பேரானந்தத்தைப் பற்றி எல்லாம் கவர்ச்சியாகப் பேசிக் கொள்கிறார்கள், வாழ்வுக்குப் பயமூட்டிப் பேசுகிறார்கள். மரணத்தையும், மரணத்துக்கு அப்பால் என்ன என்பதையும் அச்சம் காரணமாகத் தவிர்த்துக்கொள்கின்றனர். அவர்கள் மரண பீதியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவில்லை. மரணத்துக்கப்பால் அழைத்துச் செல்பவர்களால்தான் வாழ்வை முழுமையாகப் பார்க்கமுடியும். மரணத்தைப் பற்றிய தெளிவுதான் வாழ்வைப் புரியவைக்கும். வாழ்வின் ஒரு பகுதி தான் மரணம் என்பதை ஆன்மிகம் மக்களுக்குப் புரியவைக்க வேண்டும். மரணத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மனித வாழ்வை முழுமையாக்க வேண்டும். உலகிலே திபெத்திய ஞானிகள் மாத்திரம்தான் மரணத்தை மக்களுக்கு இலகு வாக்கியவர்கள். மரணத்தைப் பற்றிய விழிப்புணர்வைக் கொடுத்தவர்கள். இந்த ஞானிகள் சீடர்களுக்குத் தன்னுணர்வைப் பற்றி விளக்கியவர்கள். தன்னுணர்வுள்ளவர்களால் தங்கள் மனதை நிறுத்த முடியும், மனதைக் கடந்து மனதுக்கு அப்பால் உள்ளதை அறியமுடியும். அதன் வழியில் மரணத்துக்கு அப்பால் உள்ளதை அறிந்தவர்கள், தங்கள் சீடர்களையும் அழைத்துச் சென்று அந்த அனுபவத்தை முற்கூட்டியே கொடுத்தவர்கள். வாழ்வின் ஒரு பகுதி மரணம் என்றும், மரணம்தான் மிக முக்கியமானது என்றும் உணர்த்தியவர்கள். இவர்கள் மரணத்தை ஒரு கலையாக கையாண்டவர்கள்.

## அத்தியாயம் 38

# பிளேட்டோ (Plato): 'உடலிலிருந்து பிரிந்த ஆன்மா தெளிவாகச் சிந்திக்கிறது'



Plato

ஏதென்ஸ் (கிரேக்க நாடு) நகரில் (கி.மு) 428 - 348 காலப் பகுதியில் வாழ்ந்த பிளேட்டோ அவர்கள் எக்காலத்திலும் உலகில் சிறந்த சிந்தனையாளராக கருதப் படுகிறார். நூல் வடிவத்திலுள்ள அவரது 22 உரையாடல்களும் மனித இனத்தின் ஐயம் போக்க இந்த உலகத்திற்கு விட்டுச்சென்ற சிந்தனைகள்.

இந்த உடம்பு 'ஆன்மா' பிரயாணம் செய்யும் தற்காலிக வாகனமே என்கிறார். உடம்பு இறந்த பின்பு 'ஆன்மா'வுக்கு என்ன நடக்கிறது என்பதை "The Republic" என்ற தலைப்பில் உள்ள உரையாடலில் (கட்டுரையில்) விளக்குகிறார். மரணம் உடலிலிருந்து 'ஆன்மாவை' பிரிக்கிறது. அந்த 'ஆன்மா' வேறு பல 'ஆன்மா'க்களைச் சந்திக்கிறது, உரையாடுகிறது.

உடலிலிருந்து பிரிந்த 'ஆன்மா' உடலிலிருந்ததை விட மிகத் தெளிவாகச் சிந்திக்கிறது என்கிறார். உடல் என்ற சிறையிலிருந்து (Prison) ஆன்மா விடுதலை (Release) அடைவதே மரணம் என "Phaedo" என்ற தலைப்பிற்குள் உள்ள உரையாடலில் குறிப்பிடுகிறார். சோக்கிரட்டீஸ் மரண தண்டனையாக விஷம் குடித்து இறப்பதற்கு முன், சோக்கிரட்டீஸின் பேருரையை நேரில் இருந்து கேட்டவர் மாணவன் பைடன் (Phaidon). அவர் தான் கண்ட காட்சியை, தன் அனுபவங்களைக் கூறுவதாக அமைந்த உரையாடல்

பைடோ (Phaedo) என்ற தலைப்புக்குக் கீழ் வருகிறது. சோக்கிரட்டீஸின் பிரதான மாணவனான பிளேட்டோ (Plato) தன் குரு விஷம் குடித்து இறக்கும் தினமான அன்று, விஷம் குடித்து மரணமாவதைப் பார்க்கவோ அவரது வாதத்தைக் கேட்கவோ சிறைச்சாலைக்குச் செல்லவில்லை. The Apology என்ற தலைப்புக்குக் கீழ் சோக்கிரட்டீஸின் இறுதி உரையைக் கட்டுரையாக எழுதியுள்ளார்.

*501* பிரஜைகளை அங்கத்தவர்களாகக் கொண்ட நீதி மன்றத்தில் சோக்கிரட்டீஸ் தனக்கு எதிரான குற்றச்சாட்டு களுக்குப் பதில் உரைத்த அந்த தர்க்கவாதம் அது ஒரு மகா பேருரை. அது ஒரு சிங்கத்தின் கர்ஜனைபோல் இருக்கிறது என்கிறார்.

'The Republic' என்ற தலைப்புக்குள் 'Book X' என்ற பகுதியில் கிரேக்க மதக் கதை ஒன்றைக் குறிப்பிடுகிறார். கிரேக்க யுத்தம் ஒன்றில் பல போர்வீரர்கள் இறந்து விட்டார்கள். அவர்களது உடலை எடுக்கச் சென்றபோது அங்கு 'ஏர்' (Er) என்ற போர் வீரனும் இறந்த உடலாகக் கிடந்தான். இறந்தவர்களது உடலைச் சேகரித்துக்கொண்டு வந்து எரிப்பதற்காக ஆயத்தம் செய்தார்கள். அப்போது 'ஏர்' உடலில் அசைவு தெரிந்தது. அவன் உயிர் பெற்று மீண்டபோது தான் கண்ட காட்சியை வர்ணித்தான். தனது உடலிலிருந்து தான் வெளியேறி அப்பால் சென்றுகொண்டிருந்தேன். எங்களில் பலர் (Spirits) ஒன்றாகச் சேர்ந்து ஓரிடத்திற்குச் சென்றோம். அங்கு உட்பிரவேசிப்பதற்கு ஒரு பெரிய துவாரம் (Openings) இருந்தது. அது உள் பிரவேசிக்கும் ஒரு பாதை (Passage way). உள்பிரவேசிக்கும் பாதையில் தடுத்து நிறுத்தப்பட்டோம். பூவுலக வாழ்வில் என்ன செய்தோம் என்று பரிசோதனை போல் இருந்தது. எனக்குத் திரும்பிச் செல்லும்படி கூறப்பட்டது. எப்படித் திரும்பி வந்து இந்த உடலுக்குள் பிரவேசித்தேன் என்பது தெரியாது. நான் கண் விழித்தபோது சிதைக்கு மேல் படுத்திருப்பதைப் பார்த்தேன், எனத் தன் அனுபவத்தைக் கூறுகிறார் அந்த விடுதலை வீரன்.

பிளேட்டோ கூறுகிறார்: 'சுயம்' (Self) 'ஆன்மா' (Soul) எங்களது சரீரத்துக்குள் கைதியாக அடைபட்டு இருக்கிறது. அதனால் ஆன்மா தானாக அடையக்கூடிய அனுபவங்கள் நமது உடலுக்குள் மட்டுப்படுத்தப்படுகிறது. நமது ஐம்புலன்கள்

மேலோங்கியிருக்கின்றன, அவற்றை உடல் விரும்புகின்றன. பார்த்தல், கேட்டல், ருசித்தல், முகர்தல், உணர்தல் ஆகிய புலன் இன்பங்கள் நம்மை முட்டாளாக்கின்றன. பெரிதான ஒரு பொருளை அதிக தூரத்தில் நின்று பார்த்தால், அது மிகச் சிறிய பொருளாகத் தெரிகிறது. சிலர் சொல்வது நமக்குப் பிழையாகக் கேட்கிறது. இன்னும் இப்படிப் பல செயல்கள் இருகின்றன. இதனால் வெகு சுலபமாக பிழையான அபிப்பிராயங்களை மேற்கொள்ளல், பிழையான முடிவுக்கு வருதல் போன்ற செயல்களும் நடைபெறுகின்றன. ஆன்மா உண்மையை அறிய முடியாமல் உடலுக்குள் கைதியாக உள்ளது. ஆன்மா விடுதலையடையும் வரை உடல் உணர்வுகளின், புலன்களின் தாக்கங்களுக்கு உள்ளாகின்றது. ஆன்மா உடலிலிருந்து விடுதலையடைந்ததும் 'உண்மை'யைப் பார்க்கிறது.

பிளேட்டோ மேலும் கூறுகிறார் 'அதி உயர் உண்மை'யை நேரடியாக விளங்கப்படுத்த எம்மிடம் மொழியில்லை. சொற்களால் அந்த 'இயற்கைக்குள்' இருப்பதை வெளியே கொண்டுவர முடியாது. சொற்களாலும் வசனங்களாலும் கதைகளைப் புனைய முடியும், அங்கொன்றும் இங்கொன்றுமாக இணைத்துக்கொள்ளவும் முடியும். ஆனால் உண்மைத் தன்மை எட்டாத தூரத்தில் உள்ளது என பிளேட்டோ The Republic என்ற நூலில் கூறுகிறார்.

பிளேட்டோ ஆன்மா, மறுபிறப்பு இவற்றைப் பற்றிய கருத்தை 'கிழக்கில்' இருந்து தான் பெற்றுக்கொண்டதாகக் கூறுகிறார். இவர் எந்த நாட்டைக் குறிப்பிட்டார் என்று தெரியவில்லை. இந்தியா, திபெத், சீனாவாகத்தான் இருக்கலாம். இந்தியாவில் நிறைய ஞானிகள் பிளேட்டோ காலத்தில் தங்கள் ஞான நிலையில் அறிந்தவற்றைக் கூறியவர்களாக இருந்தனர். திபெத்தில் 'இறந்தவர்களுடைய திபெத்திய நூல்' இருந்தது. அத்துடன் திபெத்தில் மரணத்தை ஒரு கலையாக ஞானிகள் போதித்தது மட்டுமல்ல மரணத்துக்கு அப்பால் தங்கள் அனுபவங்களைக் கூறிய ஞானிகளும் இருந்தனர். சீனாவிலும் பல ஞானிகள் இந்தக் கருத்துடன் ஒத்திருந்தனர். இந்தியாதான் இதன் முன்னோடி. இந்தியாவின் ஆணிவேர்தான் கிழக்கின் ஆணிவேரானது.

# பாகம் - 3

## ஞானிகளின் வாழ்வில்...

**(In the lives of Saints...)**

## அத்தியாயம் 39

# மணிமேகலை: தன் முற்பிறப்பை இலங்கையில் அறிந்தார்



மணிமேகலை மணிபல்லவத்தில் வந்திறங்கி அம்பிகையின் அருட்பீடத்தைக் கண்டு தொழுது தனது முற்பிறப்புப் பற்றி உணர்ந்தார் என மணிமேகலை என்ற காப்பிய இலக்கியம் எமக்கு கூறுகிறது. **'பொலங்கொடி நிலமிசைச் சேர்ந் தெனப் பொருத்தி உன் திருவருளால் என் பிறப்பு உணர்ந்தேன்.'** *(மேகலை: 10:17:18)*

மணிமேகலையில் குறிப்பிடும் 'மணிபல்லவம்' யாழ்ப் பாணத்தில் இருந்து 8 மைல் தூரத்தில் உள்ள நயினா தீவினையே குறிப்பதாகும். இதுபற்றிக் கலைக்களஞ்சியம் (8:78) குறிப்பிடும் விளக்கம் வருமாறு:

ஒரு சிறு தீவு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது யோசனை தொலைவில் உள்ளது. அங்கே தன்னைத் தரிசிப்பவர்களுக்குப் பழம் பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்த பீடிகையும், கோமுகி என்னும் பொய்கையும் அங்கே காணப்பட்டன. மணிமேகலை தன் பழம் பிறப்பை இப் புத்த பீடிகையால் உணர்ந்தாள். மணிமேகலை அமுதசுரபி என்னும் பாத்திரத்தை தீவதிலகையின் உதவியால் இக் கோமுகிப் பொய்கையிலே பெற்றாள் எனக் கூறப்படுகிறது.

## அத்தியாயம் 40

# பட்டினத்தார்: 'இனி ஒரு பிறப்பு வேண்டாம்'

**பட்டினத்தார் கதையிலுள்ள**
**மறுபிறப்புக் கருத்தைப் பார்ப்போம்:**



பட்டினத்தார் தனது தாயார் சிதைக்கு தீ மூட்டும்போது அவர் பாடியதாகக் கூறப்படும் பாடலில் இலங்கையைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருப்பதால் அதை ஒரு தகவலுக்காக இங்குச் சுட்டிக் காட்டிவிட்டு பின்பு மறுபிறப்புக் கோட்பாட்டைப் பற்றி பட்டினத்தார் கதை என்ன கூறுகிறது என்பதை கவனிப்போம்.

தாயின் சிதைக்குத் தீ மூட்டுகிறார்:

**முன்னை யிட்ட தீ முப்பு ரத்திலே**
**பின்னை யிட்ட தீ தென்னி லங்கையில்**
**அன்னை யிட்ட தீ அடிவ யிற்றிலே**
**யானு மிட்டதீ மூள்க! மூள்கவே!**

இதன் பின்பு அவர் பாடிய பாடல் கவனத்துக்குரியது, ஏனெனில் தனக்கு மீண்டும் ஒரு வயிற்றில் பிறக்கும் துயரத்தை சிவனே தனக்குத் தராதே என்று வேண்டிக்கொள்வதாக இப்பாடல் அமைகிறது. மீண்டும் பிறப்பு வேண்டாம் என்று வேண்டுதல் செய்வது மறுபிறப்பு, புனர் ஜென்மம் இருப்பதை பட்டினத்தார் உறுதியாக நம்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

இதோ அந்தப் பாடல்:

**மாதா வுடல் சலித்தாள் வல்வினையேன் கால் சலித்தேன்**
**வேதாவுங் கைசலித்து விட்டானே – நாதா**
**இருப்பையூர் வாழ்சிவனே, இன்னுமோரன்னை**
**கருப்பையூர் வாராமற் கா!**

பட்டினத்தார் வட இந்தியாவிலுள்ள உஜ்ஜைனி நகருக்கு யாத்திரை சென்றார். அங்கு நடந்த சம்பவங்களை இங்கு பார்ப்போம்:

அங்கு ஒரு மடத்தில் தங்கியிருந்தபோது இவர் பாடிய பாடலொன்று பர்த்ருஹரி மன்னரின் மனைவி இராணியை இகழ்வதாகக் கூறி அரண்மனைக் காவலாளர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தன்னை இகழ்ந்ததற்காக மகாராணியார் அவரைக் கழுவிலேற்றும்படி உத்தரவிட்டார். காவலாளர்கள் பட்டினத்தாரைக் கழுமரத் தடிக்கு இழுத்துச் சென்றனர். 'முன்செய்த' தீவினை காரணமாகத் தனக்கு இந்தத் தண்டனையோ என்று பாடுகிறார். 'முற்பிறப்பு' (முன்செய்த) என்ற கருத்தைப் பட்டினத்தார் கொள்வதால் முற்பிறப்பு, மறுபிறப்பு என்ற கோட்பாடு உருவாகிறது.

பாடல் பின்வருமாறு:

**என்செய லாவதியாதொன்று மில்லை இனித்தெய்வமே**
**உன் செய லேயென் றுணரப் பெற்றேன் இந்த வூனெடுத்த**
**பின்செய்த தீவினையாதொன்று மில்லை பிறப்பதற்கு**
**முன்செய்த தீவினை யோலிங்ங னேவந்து மூண்டதுவே!**

மறுபிறப்புக்கு உதாரணமாகப் பட்டினத்தார் கதையிலிருந்து பிறிதொரு சம்பவம்:

இராணியின் நடத்தை மீது சந்தேகங்கொண்ட மன்னன் பத்திரகிரி (பர்த்ருஹரி) அவள் முகத்திலே கரும்புள்ளி செம்புள்ளி குத்தி குதிரையில் நகர்வலம் வரச் செய்தார். மிகக் கொடூரமான தண்டனை இது. இராணி பாதி வழியில் பொது மக்களின் கல்லடியால் இறந்துவிட்டார். அப்போது அவர் 'நாயானேன்' என்று இறக்கப்போகும் கணத்தில் நினைத் திருக்கலாம்.

அரசன் அரசு துறந்து துறவியாகி, பட்டினத்தாருடன் தென் இந்திய யாத்திரை புறப்பட்டார். வரும் வழியில் ஒரு

கோயிலில் தங்கியிருந்தபோது ஒரு நாயின் முனகல் கேட்டது. ஒரு நாய் குட்டி ஈனும் நேரம் அது. அது ஈன்றது பெண்குட்டி ஒன்றை. (பொதுவாக நாய் ஒரு குட்டி ஈனுவதில்லை) பின்னர் தாய் நாய் இறந்துவிட்டது. அந்தக் குட்டியைப் பட்டினத்தார் தன் கையில் எடுத்து அணைத்துக்கொண்டார். இக்குட்டியின் பிறப்பைப் பற்றிப் பட்டினத்தார் கூறுகையில், 'இந்த நாய்குட்டி வேறு யாருமல்ல இராணியின் மறு பிறப்பே' என்கிறார்.

**கதோ உபநிடதம்:** 'ஆன்மா வேறு சரீரங்களையும் அடைகிறது.'

**பிளேட்டோ:** 'ஆன்மா மிருக உடலும் எடுக்கிறது.'

**ஒரு செய்தி:**



புதையல்களைப் பற்றிய பரபரப்புச் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரும்போது அச்செய்திகள் வாசகர்களைக் கவர்ந்து விடுகின்றன. நிலத்தை அகழ்ந்தபோது ஒரு பானை காணப்பட்டது. அப்பானையில் பாம்பின் படம் கீறப்பட்டிருந்தது. அதற்குள் தங்கப்பாளையம், பொற்காசுகள், வெள்ளி நாணயங்கள் இருந்தன போன்ற விவரங்களை அநேகமாக புதையல் பற்றிய செய்திகள் தாங்கிவரும். அப்புதையலை அண்மிக்க விடாது பாம்பு ஒன்று காவல் காப்பது போல் நின்றது என அச்செய்தி மேலும் விவரிக்கும்.

புதையலுக்கும் பாம்புக்கும் என்ன தொடர்பு? புதையலை வைத்த மனிதர்கள் தங்கள் சேமிப்புக்களை தாங்களும் அனுபவிக்காமல் பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் விரும்பாமல் பானைக்குள் வைத்து, ஆவேசங்கொண்ட பாம்பின் படத்தையும் பானையில் வரைந்துவிட்டு தங்களது படுக்கைக்குக் கீழ் புதைத்து வைத்து அதே எண்ணத்துடன் இறந்துவிடுகிறார்கள்.

ஒருவர் இறக்கும்போது என்ன நினைக்கிறாரோ அவரது 'ஆன்மா' அதுவாக மறுபிறப்பு எடுக்கிறது; என்கிறார் ஓஷோ.

அவர்கள். புதையலைப் பற்றிய அந்த எண்ணத்தில் பாம்பும் கலந்திருப்பதால் அவரது ஆன்மா பாம்புக்குள் புகுந்துவிடுகிறது. அவர் இறந்த பின்பு பாம்பாக மாறி அந்தப் புதையலுடன் வாழ்கிறார் என்று மேலும் விளக்குகிறார் சுவாமி ஓஷோ.

இறுதி நினைவு எப்படியோ அந்த நினைவு மறுபிறப்பில் தொடரப்படும் என்பது ஞானிகளின் கருத்து. பட்டினத்தார் கதையிலும் அது போன்ற உதாரணம் ஒன்று உள்ளது. ஒரு மனிதனின் இறுதி எண்ணம் அவரது வரப்போகும் பிறப்பை நிர்ணயிக்கிறது என்கிறார்கள். 'ஒவ்வொருவரும் கடைசியில் அதாவது உடலைவிட்டு நீங்கும்போது எண்ணிய இறுதி எண்ணத்துடன், மறு பிறவியை அடைகின்றனர்' என்கிறது பகவத்கீதை

**ஒரு கதை:**

ரிஷபதேவரின் புதல்வரான பரதராஜன் ராஜ்யத்தைத் துறந்து துறவு மார்க்கத்தை மேற்கொண்டான். ஒரு நாள் அவர் காட்டில் ஒரு தாயற்ற மான்குட்டியைக் கண்டு அதன் மீது கருணை கொண்டு தன் மரண காலத்தில் அந்த மானைப் பற்றிய எண்ணமே முன் நிற்க அடுத்த ஜன்மம் மானாகவே பிறந்தார் எனவும் அந்த மான் தன் இனத்தோடு சேராமல் தனித்தே இருந்தது என்கிறது கதை.

**திருவாசகம்:**

**புல்லாகிப், பூடாகிப், புழுவாய், மரமாகிப்**
**பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்**
**வல்லசுரராய் முனிவராய் தேவராய்ச்**
**செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்...**

ஆன்மா எடுக்கும் பல்வேறு பிறவிகளைப் பற்றி திருவாசகம் இவ்வாறு கூறுகிறது.

## அத்தியாயம் 41

# திருமூலர்: மூலன் உடலினுள் வாயுவாகப் பிரவேசம்



இவரது இயற்பெயர் சுந்தாநாதர். இவரை சிவயோகியார் என்றும் அழைத்தனர். இவர் அட்டமா சித்திகளான அணிமா, இலகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பவற்றில் வல்லவராக இருந்தார்.

அணிமா : அணுப்போன்று சூக்குமமாதல், உடலைச் சுருக்குதல்.

இலகிமா : பஞ்சைப் போல இலேசாதல், ஆகாயத்தில் பறத்தல், வேகமாகச் செல்லுதல், நீரில் நடத்தல்.

மகிமா : மலைபோன்று பெரிதாகுதல், உடலைப் பெருப்பித்தல்.

கரிமா : கனமாதல், கல்லாக மாறுதல்.

பிராப்தி : எல்லாப் பொருட்களையும் தன்பால் வரவழைத்தல், அதாவது மனதில் நினைத்ததை அடைதல்.

பிராகாமியம் : உருவம் மாறுதல், வாயு மூலமாகப் பிறரது உடலினுள் உயிரைச் செலுத்துவதாகும்.

வசித்துவம் : பொதுஜனங்களை தன்பால் ஈர்த்தல்.

ஈசத்துவம் : தெய்வீக நிலையை அடைதல்.

ஒரு நாள் சிவயோகியார் சென்ற வழியில் இடையன் மூலன் என்பவர் இறந்து கிடந்தார். மூலன் மேய்த்த பசு

மாடுகள் இறந்து கிடந்த மூலனின் உடம்பை முகர்ந்து பார்த்துக் கதறிக்கொண்டு நின்றன. இதனைக் கண்ட சிவயோகியார் பிராகாமியம் சித்தியினாலே வாயுமூலமாக மூலனது உடலினுள் பிரவேசித்தார். இறந்து கிடந்த மூலனின் உடலில் பிரவேசித்து திருமூலராய் எழுந்தார் என்கிறது திருமூலர் வரலாறு.

மேற்கூறிய அட்டமா சித்திகளை விட காயகல்ப பயிற்சியிலும் யோகிகள் வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள். இது உடல் ஆரோக்கியம் சம்பந்தமானது. இந்தப் பயிற்சி மூலம் இளமையாக மாறலாம். எந்நேரம் இறக்க வேண்டுமோ அந்நேரம் இறக்க முடியும். உதாரணமாக மகாபாரதக் கதையில் பீஷ்மர் இந்தப் பயிற்சியினால் நீண்ட காலம் வாழ்ந்து தன் மரணத்தைத் தனது விருப்பத்திற்கேற்ப நிகழ்த்தியவர் எனக் கூறப்பட்டுள்ளது. அட்டமா சித்தி, காயகல்பம் இவைகள் பற்றி இந்துமதக் கதைகளில் கூறப்பட்டு உள்ளன.

*22-02-2008* அன்று தமிழ் நாட்டிலுள்ள ஜெயா தொலைக்காட்சியில் காண்பித்த ஒரு செய்தி கனடாவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த இந்நூலாசிரியரை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது. சித்தர் ஒருவர் திருவண்ணாமலை அருணாசலர் ஆலயத்திற்கு அண்மித்துள்ள பாதையில் அமைதியாக நடந்து வருகிறார். அவர் திடீரென ஆகாயத்தை நோக்கி வேகமாக மேலே பறந்து சென்றுகொண்டிருப்பதை தொலைக்காட்சியில் பார்த்தேன். அவர் ஆகாய வெளியுடன் கலந்துவிட்டார் என்பதே என் அபிப்பிராயம். மின் கம்பத்தில் மின் இணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் இக்காட்சியை பார்த்ததும் தனது அலைபேசியில் படம்பிடித்து அதைத் தொலைக்காட்சிக்கு அனுப்பியதாகச் செய்தியாளர் தெரிவித்தார்.







## அத்தியாயம் 42

## சீதக்காதி: இறந்தும் கொடை கொடுத்தார்

***சீ***தக்காதி அவர்கள் பதினேழாம் நூற்றாண்டில் தென் தமிழ்நாட்டில் வாழ்ந்த புகழ்பெற்ற வள்ளல் ஆவார். இவர் இயற்பெயர் 'ஷைகு அப்துல் காதிறு மரக்காயர்' என்பதாகும். இவர் 'ஷெய்க் அப்துல் காதர்' என்றும் அழைக்கப்பட்டார்.

இவர் பிறந்து வளர்ந்த ஊர் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தது கீழக்கரை என்றும், காயல்பட்டினம் என்றும் இருவேறு கருத்துக்கள் பேசப்படுகின்றன. காயல் என்ற பெயரில் பழைய காயல், பன்னைக்காயல், கீழக்கரை, காயல்பட்டினம் என்ற நான்கு ஊர்கள் உண்டு.

இவர் வாழ்ந்த காலம் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி. கி.பி. *1650 - 1720* என்பர். சீதக்காதி அவர்கள் ஒரு தமிழர் இஸ்லாம் சமயத்தவர். புகழ்பெற்ற வள்ளல். இந்து முஸ்லிம் என்ற வேற்றுமை பாராது அனைவரையும் சமமாகக் கருதி ஆதரித்தவர். சீதக்காதி பெருமகனார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த இஸ்லாமியப் பெரியார் 'சதகத்துல்லா வலி' ஆவார். இஸ்லாமியப் பேரறிஞராகிய இவர் மார்க்கக் கல்வியைப் பரவச் செய்தவர். இவர் சீதக்காதியின் நண்பரும் குருவும் ஆவார்.

இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மகாராஜா இவரின் நெருங்கிய நண்பர். சேதுபதிக்குச் சீதக்காதி அவர்கள் மதியுரை அமைச்சர் போன்று விளங்கினார். சேதுபதி அவர்களின் இயற்பெயர் 'விசய ரகுநாதத் தேவர்' என்பதாகும். இவர் *1792*-ஆம் ஆண்டில் மதுரையின் கீழ் உள்ள தொடர்பை

துண்டித்துக்கொண்டு தனியாட்சி நடத்தத் தொடங்கினார். அப்பொழுது பாதுகாப்பிற்காக இராமநாதபுரக் கோட்டையை யும் அரண்மனையையும் புதிதாக விரிவாக்கிப் பெரும் பாதுகாப்புடன் கட்டப்பட்டன. அதற்குப் பொன்னும், பொருளும் கொடுத்து உதவியவர் சீதக்காதி என்பர். அவர் சேதுபதி மகாராஜாவின் நிதி அமைச்சராகப் பணியாற்றியபோது ராமேஸ்வரம் உத்திரகோர மங்கை கோவில்கள் கட்டப்பட்டன என்பது இவரது நேயத்திற்கு ஒரு சான்று.

சேதுபதி, சீதக்காதியை உரிமை பாராட்டி அவருக்கு 'விசயரகுநாதப் பெரிய தம்பி' எனத் தன் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். அக்காலத்தே டில்லியை ஆண்ட முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் சீதக்காதியின்பால் பெருமதிப்புக் கொண்டவர். சீதக்காதியை வங்காளத்தின் கலீபாவாக நியமித்தார். சீதக்காதியும் அப்பதவியை ஏற்றுக்கொண்டார். சிறிது காலத்திற்குப் பின் தாய்நாடு திரும்பினார்.

தன் செல்வத்தினை அனைவருக்கும் வழங்கி எளியோருக்கு எவ்விதத் தடையும் இல்லாமல் உணவு வழங்கி உதவியவர் வள்ளல் சீதக்காதி. இவரின் மகள்வழிச் சந்ததியார் இன்னும் தமிழகத்தில் கீழக்கரையில் வாழ்ந்துவருவதாகக் கூறப்படுகிறது. அவரின் மத வேறுபாடற்ற மனிதநேயம் இன்றைய உலகில் அனைவரும் கைக்கொள்ளவேண்டிய ஒன்று. மனித நேயத்துடன் பிறருக்கு உதவிய வாழ்வு அவர் வாழ்வு.

**வள்ளல் தன்மை:**

நபிகள் நாயக மான்மியத்தைச் 'சீறாப்புராணம்' மூலமாக உலகிற்குப் பரப்பப் பொருள் வளம்மிக்க சீதக்காதி பெரிதும் உதவினார்.

ஆனால் சீறாப்புராணத்தில் அவர் பற்றிக் குறிப்பிடப் படவில்லை என்பது குறித்துத் தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு விவாதங்கள் எழுந்ததுண்டு. 'இறந்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி' என்று இன்றும் தமிழ் உலகில் வழங்கிவரும் முதுமொழி ஒன்றே அவரின் வள்ளல் தன்மையை உலகுக்குப் பறைசாற்றும். இவரின் சிறப்பே, வறுமையில் வாடுவோர், ஏழைகள், கல்விமான்கள், புலவர்கள், பாமரர் போன்ற அனைவருக்கும் சாதி, மதம், இனம் பாராது

வந்தோர்க்கு எல்லாம் இல்லையென்று இல்லாமல் வாரி வாரி வழங்கியமையே. அவர் காலத்தில் மிகப்பெரும் பஞ்சமொன்று வந்தது. அந்நேரத்தில் சகலருக்கும் உதவியவர் இவர்.

காயல் நகருக்கு ஒரு சமயம் சீதக்காதி அவர்கள் சென்ற போது அங்கு வசிக்கும் வறியவர் ஒருவர் தமது மகளின் திருமணத்திற்காக வள்ளல் பெருமானாரிடம் உதவி கேட்டார் உடன் தர விழைந்த வள்ளலிடம் தற்போது வேண்டாம் என மறுத்து தன் மகளின் திருமணம் முடிவு செய்த பின் தந்தால் போதும் எனக் கேட்க, அவ்வாறே தருவதாக வள்ளல் மறுமொழி பகன்று ஊர் திரும்பினார். சில காலம் கழித்து வள்ளல் நோய் வயப்பட்டு இயற்கை எய்தினார். ஊர் மக்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தி அவரது திருவுடலைப் பள்ளிவாடியில் அடக்கம் செய்து திரும்பும் வேளையில் தமது மகளின் திருமணத்திற்காக வள்ளல் பெருமகனாரிடம் உதவி கேட்ட வறியவர் உதவி பெற சீதக்காதியை நாடி கீழைநகர் வந்து சேர்ந்தார்.

வள்ளல் வீடு கண்டு சேதி அறிந்த வறியவர் மனம் மிக வருந்தி குறைந்தபட்சம் வள்ளல் அடக்கம் செய்த இடம் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்துவோம் எனப் பள்ளிவாடி விரைந்தார். அடக்கம் செய்த இடம் கண்டு கண்ணீரோடு துவா செய்யும்போதிலே அடக்கம் செய்த மண்ணிலிருந்து புதைக்கப்பட்ட வள்ளல் பெருமானாரின் வலதுகரம் வெளிவந்தது. அதில் முத்து பதிக்கப்பட்ட மோதிரம் ஒன்று இருக்கக் கண்ட பெரியோர்கள், தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இறந்தும் கொடை கொடுத்த சீதக்காதி புகழ் வாழ்க எனக் கூறி அந்த மோதிரத்தை எடுத்து வறியவருக்குக் கொடுத்தனர் எனச் சீதக்காதி பெருமானார் வரலாறு கூறுகிறது. அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் மோதிரம் காணப்பட் டிருக்கலாம், இறந்தவரது கை வெளியில் வந்தது, அதில் மோதிரம் இருந்தது என்பது வள்ளல் தன்மையை கூறுவதற்காக இருக்கலாம். இறந்தும் கொடை கொடுத்த சீதக்காதி பெருமானார் அனைத்து மக்களின் மனதில் தொடர்ந்தும் வாழ்ந்துகொண்டேயிருப்பார். அதனால் இப்பெருமானார் இறந்தும் இறவாமையை அடைந்துள்ளார்.

## அத்தியாயம் 43

# மார்பா (Marba): 'மரணத்திலும் அங்கே மரணம் இருப்பதில்லை'

**மா**ர்பா திபெத்திய நாட்டில் 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு 'தந்திரா ஞானி' (Tantric Sage). இவரது மார்க்கம் தந்திரா பௌத்தமாகும் (Tantric Buddhism). திபெத்திற்கு பௌத்தத்தை இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றவர்களில் ஒருவரான இவர் அங்கு 'மகாமுத்திராவை' அறிமுகப்படுத்தினார்.

திலோபா அவர்களுக்கு நரேபா சீடரானார். நரேபாவிற்கு மார்பா சீடரானார். மார்பாவிற்கு மிலரேபா சீடரானார். மிலரேபாவிற்கு சீடர்கள் இல்லாததனால் 'மகாமுத்திரா' ஞானம் அவருடன் நின்றுவிட்டது.



Thilopa

திபெத்திய தந்திரா ஞானிகள் தங்கள் சீடர்களை மரணத்திற்கு அப்பால் அழைத்துச் சென்று மரண அனுபவத்தை முற்கூட்டியே அனுபவிக்கச் செய்திருக்கிறார்கள். அந்த ஞானிகள் மரணத்தை ஒரு கலையாகக் கையாண்டனர். மார்பாவும் அத்தகையவரே. இறப்பை அனுபவித்து அப்பால் செல்லும் தியானத்தை 'பார்தோ' (Bardo - Meditation) தியானம் என்று அழைத்தனர். மார்பா அவர்கள் பார்தோ தியான ஆசானாக விளங்கினார். இந்தத் தியானமானது தன்னுணர்வுடன் மரண நிலையை அனுபவித்து, அதனையும் கடந்து அப்பாலுள்ள நிலையையும் அனுபவரீதியாக உணர்தலாகும்.

**ஒரு நிகழ்வு:**

மார்பாவிடம் ஒரு சாதகர் வந்து தனக்கு 'அது' பற்றி விளக்குங்கள், அந்த விளக்கம் வார்த்தைகளைப் பயன்படுத்தாத வகையில் 'அது' என்பதைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கு மார்பா 'வார்த்தை யில்லாமல் நீங்கள் கேளுங்கள், நான் வார்த்தையில்லாமல் பதில் சொல்கிறேன்' என்றார். அதற்கு சாதகர் வார்த்தையில்லாமல் எப்படிக் கேட்பது என்றார். உடனே மார்பா அது என் பிரச்சினையில்லை, யோசித்து வார்த்தையில்லாத கேள்வியைக் கண்டறிந்து 'வாருங்கள்' என்றார்.

அந்த சாதகர் சிந்திக்கத் தொடங்கி ஆண்டுகள் நகர்ந்து கொண்டிருந்தன. தன் கேள்வியையே தனக்கு கேள்வியாக்கி விட்டாரே? தன் சிந்தனையைத் சிதற விடாமல் ஒருமுகப் படுத்தினார், ஆழ்ந்து போய்க்கொண்டேயிருந்தார். சிந்தனை குறைந்தது, எண்ணங்கள் வீழ்ச்சியுற்றன. அந்தச் சாதகர் 'வெறுமையானார்.' ஒரு நாள் மார்பா திடீரென்று அவர் வீட்டு வாசலில் வந்து நின்றார். சாதகர் வீட்டுக்கு வெளியில் வந்தார் மார்பா சிரிக்கத் தொடங்கினார். சாதகரும் சிரிக்கத் தொடங்கினார். சொற்கள் இல்லாத 'அது' பற்றிய கேள்விக்கு சொற்கள் இல்லாத 'அது' பற்றிய விளக்கமும் கிடைத்து விட்டது. எண்ணங்கள் வீழ்ச்சியுற்ற அந்த வெறுமைக்குள் இருவரும் பிரவேசித்தனர். அவர் மார்பா பின்னால் சீடனாகச் சிரித்தபடி சென்றார். எதிர்கொண்டவர்கள் கேட்டார்கள், இவர் ஏன் சிரிக்கிறார்? மார்பா கூறினார் 'சொற்களே இல்லாமல் கேள்வி கேட்டார். சொற்களில்லாமல் பதிலளித்தேன், சொற்களில்லாமல் ஏற்றுக்கொண்டார்.'

ஞானி மார்பா மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். தன் உடல் இறக்கப்போவதாக தன் சீடர்களுக்குக் கூறினார். சீடர்கள் கூடிவிட்டனர். அவரது உடல் இறந்துகொண்டிருக்கையில் சீடர்கள் அழுதனர். அதைக் கண்டதும் தன் மரணத்தை மார்பா உடனே நிறுத்தினார். மார்பா எழுந்து உரக்கக் கூறினார் 'அழுகையை நிறுத்துங்கள்!' கொண்டாட்டத்துக்குரிய இந்தத் தருணத்தில் ஏன் அழுது புலம்புகிறீர்கள்?




மார்பா கட, கட என்று சிரிக்கத் தொடங்கினார். இது மகிழ்ச்சிக்குரிய நேரம் என்று கூறிக்கொண்டு நடனமாடினார். 'மரணத்திலும் அங்கே மரணம் இருப்பதில்லை' எனக் கூறி கைதட்டி, கூத்தாடி, குதூ கலித்து, மகிழ்ந்து தன் மரணத்தைத் தானே சிரித்து கும்மாளம் போட்டு வரவேற் றார். பின்பு அவர் உடல் மரணத்தைத் தழுவிக் கொண் டது.

தன்னுணர்வுடனே (self-Conscious) மரணத்தை வரவேற்று, தழுவி உபசரித்தவர் ஞானி மார்பா. அவர் இறக்கவில்லை, தங்களுக்குள் வாழ்வதாகவே திபெத்திய மக்கள் நம்புகிறார்கள். நம்பிக்கையின் அடையாளமாக மார்பாவைத் திபெத்திய மக்கள் பார்க்கிறார்கள். 'நம்பிக்கையுள்ள மார்பா' என்றே அழைக்கப்படுகின்றார்.

**முக்கிய குறிப்பு:** மார்பா (Marba) என்ற பெயர் காலப்போக்கில் பாபா என்று திரிபடைந்துவிட்டது என்பது இந்த நூல் ஆசிரியரின் அபிப்பிராயம்.

## அத்தியாயம் 44

# பொகூயூ (Bokuju): தலைகீழாக நின்று உயிர் நீத்து உயிர்த்தெழுந்தார்

ஜப்பானைச் சேர்ந்த சென் (Zen) ஞானியான பொகூயூ (Bokoju) தன் சீடர்கள் அனைவரையும் வருமாறு அழைத்தார். அவர்களைப் பார்த்து 'என் உடலுக்கு இன்று மரணம் கொடுக்க உள்ளேன். உடலை விட்டு நான் பிரியப் போகிறேன். என் உடலுக்கு ஒரு தனித்துவமான மரணத்தைக் கொடுக்க வேண்டும். தனித்துவமான முறை ஒன்றைக் கூறுங்கள்' என்றார்.

ஒரு சீடன் "நீங்கள் தாமரைப் பூ வடிவம் போன்று உட்கார்ந்திருந்து மரணமாகலாம்" என்றார். இன்னொரு சீடன் குறுக்கிட்டார் "பல ஞானிகள் அந்த முறையில்தான் தங்கள் உடலை விட்டுப் பிரிந்துள்ளார்கள்'' என்றார். தொடர்ந்து வேறொரு சீடன் "நீங்கள் நிலத்தில் நின்று உடலை விட்டுப் பிரியுங்கள்" என்றார். பிறிதொரு சீடன் "ஏற்கனவே ஒருஞானி அப்படித்தான் பிரிந்தார்'' என்றார், அடுத்தவர் "நான் ஒரு வித்தியாசமான முறையைச் சொல்கிறேன் என்றார். எல்லோரும் ஆவலாக அவர் சொல்லப்போகும் முறைக்காகக் காத்திருந்தனர். "தலைகீழாக நின்று இறப்பீர்களா? இது தனித்துவமானதாக இருக்கும்'' என்றார். அதற்கு ஞானி இணங்கினார். சீடர்கள் முன்னிலையில் தலைகீழாக நின்று தன் உடலுக்குத் தன்னுணர்வுடன் இறப்பைக் கொடுத்தார்.

இந்தத் தனித்துவமான மரணத்துக்கு எப்படி தனித்துவமான இறுதி மரியாதை கொடுப்பது என்று தெரியாமல் சீடர்கள் விழித்தனர். சீடர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். ஞானி பொகூயூ அவர்களின் அக்கா ஒரு ஞானி.

அவரிடம் ஆலோசனை கேட்போம் என்று அவர்கள் புறப்பட்டு அருகாமையில் இருந்த அவரது ஆசிரமத்துக்குச் சென்று அவரிடம் கேட்டனர். “நாங்கள் எங்கள் குருவுக்கு மிக உயர்ந்த தனித்துவமான இறுதி மரியாதையைக் கொடுக்க வேண்டும், நாங்கள் உங்கள் ஆலோசனையைப் பெற வந்துள்ளோம்” என்றனர். இதைக் கேட்டதும் தன் தம்பியினது உடல் இருந்த இடத்திற்கு அக்கா விரைந்தார். அவரது உடலுக்கு முன் நின்று உரத்த குரலில் கூறினார் “நீ உன் வாழ்நாள் முழுக்க முட்டாள் தனமாக நடந்துகொண்டாய், உன் இறுதி நாளிலும் கூட இதுவரை நீ செய்யாத முட்டாள் தனங்களையும் விட ஒரு மிகப் பெரிய முட்டாள்தனமான இறப்பை உன் உடலுக்குக் கொடுத்துள்ளாய். நீ ஞானம் அடைந்திருந்தாலும் உன் முட்டாள் வேலைகள் உன்னை விட்டுப் போகவில்லை. இந்த முட்டாள்தனத்தை கைவிட்டு வெளியே வா! பிறர் எதிர்பார்ப்பது போல் இறவாதே!! பிறரின் எதிர்பார்ப்புக்கேற்ப செயல்படாதே! நீ படுத்திருந்து சாதாரண நிலையில் உன் உடலை விட்டுப் பிரி, பொகூயூ நீ உயிர்த்தெழு” என்று உரக்கக் கூறினார். சுவாசம் நின்றிருந்த அவரது உடல், இருதயம் நின்றிருந்த அவரது உடல் மீண்டும் இயங்கத் தொடங்கியது. தலைகீழாக நின்று மரணமான அந்த ஞானி எழுந்து நிலத்தில் நின்றார். பின்னர் ‘உலகின் பொது மரணமான படுத்திருந்து இறப்பது’ என்ற அந்த நிலையை அவர் ஏற்று, அதனையே தன்னுடலுக்கு அனுமதித்து இவ்வுடலை விட்டுப் பிரிகிறேன் என்றார். அப்படியே உடலை விட்டுப் பிரிந்தார். பழையபடி அவரது சுவாசம் நின்றது, இதயத் துடிப்பு நின்றது, சீடர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

இந்த ஞானி முதலில் ஏற்பட்ட மரண நிலையில் இருந்து தன் சீடர்களுக்கு மரணத்தைப் பற்றிய ஒரு தெளிவைத் தத்துவார்த்தமாகச் செயல்முறையில் விளக்கியிருக்கிறார். அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் நின்ற திகைப்பை யும் கவனித்திருக்கிறார். தன் மரணம் மூலம் சீடர்களுக்கு அழகான அனுபவத்தைக் கொடுத்து மரணத்தை ஒரு சாதாரண அழகான நிகழ்ச்சியாக மாற்றி உலகத்துக்கு வழங்கிச் சென்றுள்ளார். இவர் மரணத்திலிருந்து மரணமற்ற நிலையை (From death to deathlessness) அடைந்தவர்.

**இவரின் வாழ்வில் ஒரு நிகழ்வு:**

பொகூயூ (Bokoju) விடம் ஒருவர் அணுகி உங்கள் பயிற்சி என்ன என்று கேட்டார்

பொகூயூ : பயிற்சி என்று எதுவும் இல்லை. பசிக்கும்போது உண்பேன். உறங்கத் தோன்றும்போது உறங்கு வேன்.

அணுகியவர் : நானும் இவற்றையெல்லாம் செய்கிறேன். நான் மட்டும் அல்ல உலகிலுள்ள அனைவரும் இதைத்தான் செய்கிறார்கள். இதில் என்ன பயிற்சி இருக்கிறது?

பொகூயூ : நீங்கள் செய்யும் செயல் என்ன என்பதையே உணராமல் செயல்படுகிறீர்கள், மேலும் திட்டங்கள் போடுகிறீர்கள். அத்துடன் உங்களை அறியாமலேயே சாப்பிட்டு முடிக்கிறீர்கள், அதாவது நீங்கள் சாப்பிடுவது உங்களுக்கே தெரியாமல் இருக்கிறது. உறங்கும்போது பல எண்ணங்கள் குறுக்கிடுகிறது. உருண்டு புரண்டு தூங்குகிறீர்கள், விழிக்கிறீர்கள், மீண்டும் உறங்கு கிறீர்கள். நான் உண்ணும்போது உண்பது மட்டும் தான் செய்கிறேன், உறங்கும் போதும் உறங்கும் செயல் மட்டுமே செய்கிறேன். ஆனால் எல்லாச் செயல்களையும் முழுமையாகச் செய்கிறேன்.

அணுகியவர் : (பொகூயூ தங்கியிருக்கும் இடத்தில் தங்கியிருந்து அவரை அவதானித்த பின்பு மிகுந்த குழப்பத்திற் குள்ளானார்) "எனக்கு எதுவும் விளங்கவில்லை."

பொகூயூ : நான் நடக்கும்போது நடத்தல் என்ற செயல் மட்டுமே நடக்கும். உண்ணும்போது உண்ணல் மட்டும்தான் அங்கு நிகழும். ஆனால் அங்கு பொகூயூ என்பவர் இருக்கமாட்டார். நீங்கள் கவனித்திருந்தால் 'செயல்கள்' முழுமையாக நடைபெறுவதை அவதானிக்கலாம், இதுதான் எனது பயிற்சிகள், மிகச் சுலபமானது.

(இவர் வார்த்தைகள் அற்ற விழிப்புணர்வை சீடர்களுக்குக் காட்டியவர்.)

**ஒரு நிகழ்வு:**

பொகூயூவிடம் ஒருவர் சீடனாகும் நோக்குடன் சென்றார். ஞானி அவரைக் கண்டதும் துரத்திவிட்டார். பொகூயூ இறந்த பின்பு அவரைத் தனது குரு என்று சீடனாகும் நோக்குடன் சென்றவர் கூறினார். இதைக் கேட்டவர்களுக்கு ஆச்சரியம். தன்னைச் சீடனாக ஏற்க மறுத்தவரை, அவமதித்தவரை இவர் தன் குரு, ஞானி, வழிகாட்டி என்று கூறி மரியாதை செலுத்தி வணங்குகிறாரே என்று பரிகசித்தனர்.

இந்தத் துறவி “பொகூயூ அவர்களுடைய மறுப்பு, அவர் என்னை விரட்டியடித்து நிராகரித்தது, என்னை அவமானப் படுத்தியது, இவையனைத்திற்கும் காரணம் எனக்கு நானே ஒளியாக இருக்கவேண்டும் என்பதே. அதாவது தன்னைப் பின்பற்ற வேண்டியது இல்லை என்பதுதான் அவர் எனக்கு உணர்த்திய செய்தி” எனக் கூறினார்.

அவர் என்னை ஏற்றுக்கொண்டிருந்தால் அவருக்கு நிழலாகப் போயிருப்பேன், அவர் நடந்ததைப் போலவே நடந்திருப்பேன், அவர் சொன்னதையே நான் சொல்லியிருப் பேன், அவரது பிரதியாக மாறியிருப்பேன் (Copy). நான் தவறிப் போய்விடக்கூடாது என்பதற்காக அவர் கடுமையாக நடந்து கொண்டார். அவரது கடுமை அவரது கருணையாகும், அவரது நடவடிக்கையால் எனக்கு ஞானம் கிடைத்தது என்றார்.

ஒருவர் குறுக்கிட்டார் : உங்கள் நடவடிக்கைகள், பேச்சுக்கள், சொல்வதெல்லாம் முழுக்க வேறுபாடாக இருக்கிறதே என்றார்.

இந்த ஞானி சொன்னார் “பொகூயூ அவர்களே தன் குருவைப் பின்பற்றவில்லை, இதுதான் எங்களுக்குள் இருக்கும் ஒரே ஒற்றுமை. அவரிடமிருந்து அதை நான் கற்றுக் கொண்டேன். அதனால் அவர் எனக்கு குரு ஆனார்” என்றார்.

ஒரு ஞானியைப் பின்பற்றுவது என்பது அந்த ஞானியைப் போல மாறுவதல்ல. அந்த ஞானி கைக்கொண்ட அந்த

வழிகள்ளைக் கைக்கொண்டு ஞானப் பாதையில் செல்லுதல் ஆகும். இதைத்தான் புத்தர் "நெறிகளைத்தான் காண்பிக்க முடியும்" என்றார். ஞானி ஒருவரை அவர் அவராகவே இருக்க உதவுகிறார். ஒவ்வொருவரும் தனக்குத் தானே ஒளியாக இருக்க வேண்டும் என்பதே ஞானிகளின் நோக்கம். ஆனால் ஞானியை நாடிச் செல்லும் மக்கள் தங்களை தங்களது அம்மா, அப்பா கையில் பிடித்து வழி நடத்திச் செல்வது போல ஞானி தங்களை வழி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்களது பொறுப்பு என்ன என்பதைப் பற்றி அக்கறையில்லை. ஏதாவது எங்காவது தவறிப் போனால் மற்றவர்தான் பொறுப்பு என்று கூறி, பொறுப்பற்று வாழ்வில் சௌகரியம் காண விரும்புகிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே பொறுப்பேற்றுக்கொள்ளாதவரை ஒவ்வொருவருக்குள்ளும் உள்மாற்றம் நிகழமுடியாது.

ஒரு குருவின் உண்மையான பணி ஒவ்வொருவரையும் அவர் அவர்களே தங்களுக்கு தாங்களே 'குரு'வாக இருக்கக் கற்றுக் கொடுப்பதுதான். தன்னைச் சார்ந்திருப்பதை ஆசானோ, வழிகாட்டியோ, குருவோ, ஞானியோ விரும்பமாட்டார்கள். இதைத்தான் சொராஸ்திரியர் "என்னைப் பின்பற்றுபவர்கள் எனக்கு வேண்டாம். என்னுடன் சேர்ந்து பிரயாணம் செய்ய விரும்புபவர்கள் வாருங்கள்" என்கிறார்

புத்தர் 'உங்களுக்கு நீங்களே ஒளிவிளக்காக' இருங்கள் என்கிறார்.

## அத்தியாயம் 45

# உஸ்பென்ஸ்கி (Ouspensky): மரணத்தை வாஞ்சையுடன் அழைத்தார்



ருஷ்ய (Russia) நாட்டின் மொஸ்கோ நகரில் வாழ்ந்த கணித மேதையும் தத்துவ ஞானியுமான உஸ்பென்ஸ்கி *(1878 -1947)* நடந்தபடி படிப்படியாக இறந்து கொண்டிருந்தார், அவர் படுத்துவிட வில்லை. அவர் மரணத்தின் பிடியில் சிக்கி விட்டதை உணர்ந்தாலும் நடந்து கொண்டே, உணர்வுடன் இறக்கப் போகிறேன் என்றார். செயல்பட்டுக் கொண்டே இறக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டார். மருத்துவர்கள் படுக்கை நிலையில் இருக்கும்படி வற்புறுத்தியும் மறுத்துவிட்டார். அவர் மரணத்திடம் தன்னை ஒப்படைக்கத் தயாராக இல்லை. மூன்று இரவு மூன்று பகல் தொடர்ந்து நடந்தார்.

*12* பேர் கொண்ட குழு இவரைக் கண்காணித்தது. கண்காணித்தவர்கள் ஆள்மாறி ஆள் ஒழுங்கு முறையில் தூங்கி, ஓய்வெடுத்து கண்காணித்தனர். இவர் ஓய்வின்றி, தூக்கத்தையும் எதிர்த்துத் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தார். மரணத்துடன் உடன்படவில்லை. மரணத்திற்கு எதிரான பாதை தன் பாதை என்றார். தன் விருப்பாற்றலின் வழிகளுக்கு உறுதியாகவே இருந்து மரணமானார். உணர்வுடன் இறந்த இவர் தன் மரணத்தையே தன் விருப்பாற்றலுக்குப் பயன்படுத்தி மரணமடைந்தார்.

எந்தக் கணத்திலும் எப்பொழுதிலும் தொடர்ந்து தன்னுணர்வுடன் இருப்பவர்கள் மனதைக் கடந்து மரணத்துக்கப்பால் சென்று பரவெளியாகிவிடுவார்கள் என்று ஞானிகள் கூறுகிறார்கள். தங்கள் மரணத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்து தங்கள் விருப்பத்தின் வழியில் இறப்பார்கள் என்பதையே ஞானிகளின் வாழ்வு எடுத்துக் காட்டுகிறது.

## அத்தியாயம் 46

# ஹொடாய் (Hotai) - சிரிப்பால் மக்கள் மனதை ஒருமைப்படுத்தியவர்! இறந்தவர்களையும் பார்த்துச் சிரித்தார்!!



இவர் ஒரு சென் பௌத்த ஞானி. விதிமுறைகள் இல்லாதிருப்பதே இவரது விதிமுறையாகும். சென் மத ஞானிகள் பெரும்பாலும் சொற்கள் எதுவும் பயன்படுத்தாது முயற்சியற்ற முயற்சியால் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள். சென்மதத் துறவிகள் தங்களுக்குள் விடை எளிதில் காணமுடியாத வினாக்களைத் தொடர்ந்து விவாதித்து மூளையைச் சுறுசுறுப்பாக இயக்கிக் கொண்டேயிருக்கிறார்கள். அதே நேரத்தில் உடலையும் உற்சாகமாகவும் வைத்திருப்பார்கள். இரண்டு அங்கிகளை தங்கள் உடைமைகளாகக் கொண்டவர்கள். யாசித்து உண்பவர்கள், விழிப்பு உணர்வு மிக்கவர்கள். ஒரே இடத்தில் நிலைகொள்ளாது ஊர்ஊராகச் சஞ்சரிப்பவர்கள்.

சென்மத ஞானிகள் சொற்கள் அல்லாத சிரித்தல் கண்ணிமை கொட்டாது பார்த்தல் (Staring), உடல் அதிர்தல் (vibration), கொட்டாவி விடுதல் (yawning), செருமல், ஓவியம் வரைதல், நிலைமையைக் குழப்பிவிடுதல் போன்ற செயல்கள் மூலம் மக்களுக்குத் திடீர் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள் யப்பானில் வாழ்ந்த சென்ஞானி றின்சாய் (Rinzai) நிலைமையைக் குழப்பி திடீர் விழிப்புணர்வை ஏற்படுத்து வதுண்டு.

கொடாய் (Hotai) அவர்கள் மக்கள் முன் சிரித்து திடீர் விழிப்புணர்வை ஏற்படுத்திய மகான். இவரது சிரிப்பை நேருக்குநேர் பெற்றவர்கள் தங்களுக்குள் உள்மாற்றத்தை உணர்ந்தனர். சிரிப்பு மூலம் தன் சக்தியை மற்றவர்களுக்கு மாற்றியவர். சிரிப்பால் மக்கள் மனதை ஒருமைப்படுத்தி அவர்களைச் சக்திமிக்கவர்களாக்கினார். இவரின் சிரிப்பு அத்தகைய உள் மாற்றத்தை ஏற்படுத்தியது. இவர்தான் ஒரு மகான் என்பதை அறியாத மகான்.

இந்தோனேசியாவில் வாழ்ந்த இலத்திக்கான் (Lathihan) ஞானி பபக் சுடித் தன் உடல் அதிர்வால் (Vibration) சக்தியை மற்றவர்களுக்கு மாற்றுவதுண்டு. பிறப்பால் அவர் ஒரு முகம்மதியர். அவரது மார்க்கம் சுபுத் (Subud).

ஹொடாய் ஜப்பானில் வாழ்ந்த மிகப்பெரும் சென் (Zen) பௌத்த ஞானி. இவர் சீனா, கொரியா போன்ற அயல் நாடுகளுக்கும் பயணித்தவர். இவர் மக்களால் சிரிக்கும் புத்தர் (Laughing Buddah) எனவும் மகிழ்ச்சிப் புத்தர் (Happy Buddah) எனவும் அன்பாக அழைக்கப்பட்டார். புத்தர் என்றால் ஞானம் அடைந்தவர் என்பதே அதன் பொருள். சித்தார்த்தர் ஞானம் அடைந்தபின்பே கௌதம புத்தர் என அழைக்கப்பட்டார். சித்தார்த்தருக்கு முன்பும் பின்பும் பல புத்தர்கள் இருந்திருக் கிறார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் ஹொடாய். இவர் சொற்கள் எதுவும் பயன்படுத்தாமல் தொந்தி வயிறு குலுங்க குலுங்கச் சிரித்து பிளவுபட்ட மக்கள் மனங்களைச் சிரிப்பால் ‘ஒருமைப்படுத்திய’ மிகப்பெரும் ஆன்மிக ஞானி.

ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, நகரம் நகரமாகத் தெருத்தெருவாக, மூலை முடுக்கு எல்லாம் திரிந்து தொந்தி உடல் குலுங்க குலுங்க அடிவயிற்றிலிருந்து சிரிப்பை வெளிப்படுத்தினார். இவரைக் கண்டதும் மக்கள் சிரித்தனர். இவர் சிரிக்கும் அழகைப் பார்த்து மக்களும் மெய்மறந்து சிரித்தார்கள். இவர் இருக்கும் அந்தச் சூழலே மாறிவிடும், மக்கள் எல்லோரும் தொற்று வியாதிபோல சிரிப்பார்கள், நாடே சிரித்தது. சொற்கள் எதுவுமில்லாமல், போதனை எதுவுமில்லாமல் தன் அங்க அசைவால் (Body language) சிரிப்பூட்டிய சிரிப்புப் புனிதர் (saint) இவர். மக்கள் இவருடன் சேர்ந்து சிரித்தனர், நடனமாடினர், குதூகலித்தனர். மக்கள் தங்களில் மாற்றத்தை உணர்ந்தனர்.

இறந்தவர்களைப் பார்த்துச் சிரித்தார். இவரது சிரிப்பிலும் ஆட்டத்திலும் 'இறந்தவர் இறக்கவில்லை, அவர் ஜெயித்து விட்டார், அது இறப்பல்ல அது ஒரு புதிய வாழ்க்கை. மரணத்தால் யாரையும் அழிக்கமுடியாது, மரணத்தையே அழித்துவிடலாம், மரணத்தைப் பார்த்துச் சிரியுங்கள்' என்ற அந்தச் செய்தி இவரது அந்தச் சிரிப்பில் மறைந்திருந்தது. ஒவ்வொருவரும் கவலை மறந்து சிரித்தனர். சிரித்து வாழுங்கள் என்பதே அவரது பொதுவான செய்தி.

எப்போதெல்லாம் 'உண்மை' பிறக்கிறதோ அப்போ தெல்லாம் 'ஆமாம்' போடும் புத்திமான்கள், கொள்கைவாதிகள், தர்க்கவியலாளர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அந்த 'உண்மை' மீது தாவி ஏறி அதை நசுக்கிவிடுகின்றனர். அத்தகையவர்களின் முன்னிலையில், சிரிக்கும்போது அவர்கள் பார்வையில் முட்டாள்தனமாகவும், மடத்தனமாகவும் இருக்கக்கூடும் என்று கணக்குப் பார்க்கத் தெரியாதவர் இந்தச் சிரிப்புப் புத்தர். எதிர்பார்ப்புக்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், கருத்தியல்கள், கோட்பாடுகள், தத்துவம், வழிமுறைகள் என இவைகளைச் சுமந்துகொண்டு பார்ப்பவர்களுக்கு ஹொடாய் ஒரு புரியாத புதிர்.



வாழ்வென்றால் என்ன? மரணம் என்றால் என்ன? அப்பால் நிகழ்வது என்ன? என்ற கேள்வியைத் தனக்குத் தானே கேட்டார் - பதில் கிடைக்கவில்லை. சிந்தித்தார் - பதில் கிடைக்கவில்லை அந்தக் கேள்வியுடனே வாழ்ந்தார். ஒரு நாள் தனது கேள்வியுடன் ஒரு மரத்துக்குக்கீழ் சிந்தித்துக் கொண்டிருந்தார். இவர் கண்ணெதிரே ஒரு பழுத்த இலை மரத்திலிருந்து கழன்று காற்றில் அடிபட்டு அங்கும் இங்கும் அசைந்து நிலத்தை அடைந்தது. கண்ணிமைக்காமல் அதைப் பார்த்தபடி இருந்தவர், பதில் கிடைத்துவிட்டது என்று துள்ளிக்குதித்து நடனமாடியபடி தொந்தி வயிறு குலுங்க குலுங்கச் சிரித்தார். அப்பொழுது சிரிக்கத் தொடங்கியவர் இறக்கும்வரை சிரித்தார். மக்களும் இவருடன் சேர்ந்து சிரித்தனர். சிரிப்பால் மக்களை ஒருமைப்படுத்தினார்.

ஹொடாய் போன்ற மனிதர் இந்த உலகில் அரிதாகவே பிறக்கிறார்கள். அதிகளவுமக்கள் அவரைப்போல் சிரிப்புடன் இருக்கவேண்டும். கோயில்கள் அதிகளவில் சிரிப்பினால் நிரப்பப்படவேண்டும். சிரிப்பை இழந்துவிட்டால் எல்லாவற்றை யும் இழந்துவிடுவோம். இவர் மக்கள் முன் பேசுவதில்லை, ஆன்மிகச் சொற்பொழிவு செய்வதில்லை, போதனைகள் போதிப்பதில்லை, அவரது ஒரே மொழி 'சிரிப்பு' இவரது சிரிப்பை முகத்துக்கு முகம் நேராகப் பெற்றவர்கள் ஞான நிலைக்குச் சென்றனர். உள்மாற்றம் உணர்ந்தனர். தன் சிரிப்பு மூலம் 'சக்தியை' மற்றவர்களுக்கு மாற்றினார். ஹொடாய் தனித்துவமானவர். இவரது சிரிப்பில் மக்கள் கரைந்தனர். இவரது சிரிப்பு மக்களுக்குள் தங்கி அவர்களது 'இருப்பை'த் (Being) தூண்டிவிட்டது. இவர் ஞானமடைந்தவுடன் சிரிக்க ஆரம்பித்தார். யாராவது ஏன் சிரிக்கிறீர்கள் என்று கேட்டால் மேலும் அதிகமாகச் சிரிக்க ஆரம்பித்துவிடுவார். சிரிக்கக் காரணமே கிடையாது. அவருடன் சேர்ந்து சிரித்தவர்கள் அந்தச் சிரிப்பினால் வளம்பெற்றனர், தூய்மைப்படுத்தப்பட்டனர். தங்களுக்குள் வித்தியாசமாக உணர்ந்தனர். அவர்களுக்குள் உள்மாற்றம் நிகழ்ந்தது.

ஹொடாய் அவர்கள் ஞானமடைந்தபின் நாற்பத்தைந்து வருடம் செய்தது ஒன்றே ஒன்றுதான். அதாவது 'சிரிப்பு.' சிரிப்புத்தான் அவரது செய்தி, சிரிப்புத்தான் அவரது உண்மை, சிரிப்புத்தான் அவரது ஆன்மிகம், சிரிப்புத்தான் அவரது மறைநூல்.

இவரது உருவச்சிலை ஜப்பானில் மட்டுமல்ல இன்று உலகம் பூராகவும் வீடுகளில் உள்ளது. ஜப்பானியர்கள், சீனர்கள், ஹொரியர், வியட்னாமியர், தாய்லாந்து மககள் மத்தியில் மாத்திரமல்ல, இலங்கையர், இந்தியர் மத்தியிலும் இவரது உருவச்சிலை நிலைத்துவிட்டது.

சிரிப்பை இழந்துவிட்டால் எல்லாவற்றையும் இழந்து விடுவோம். நீங்கள் பொதுவாகச் சிரிப்போடு சம்பந்தப்படாத காரணங்களுக்காகச் சிரிக்கிறீர்கள். சிரிப்புக்கூட தொழில் ரீதியாகிவிட்டது, சிரிப்புகூட பொருளாதாரம், அரசியலைச் சேர்ந்ததாக மாறிவிட்டது. அதாவது சிரிப்பு அதன் தூய்மையை இழந்துவிட்டது. நீங்கள் ஒரு குழந்தையைப் போல

தூய்மையாக, எளிமையாக, வெகுளியாகச் சிரிக்க முடியவில்லை என்றால், உங்களது வாழும் முறையில் பிழையிருக்கிறது என்றே கூறவேண்டும். ஒரு குழந்தையின் முதல் சமுதாயச்செயல் புன்னகைதான். சிரிக்கும் மனிதனால்தான் அழவும் முடியும். உங்களுக்கு சிரிப்பூட்ட யாரோ தேவைப்படுகிறார்கள், அதன் பின்பே உங்களால் சிரிக்க முடிகிறது. ஹொடாய் முழுமையாக சிரிப்பார். அவரது வாய், வண்டி, தொந்தி, அந்த பருமனான உடல் பூராகவும் சிரிக்கும். 'குழந்தைகள்' என்பதைத் தவிர வேறு எதையும் அவர் தன் வாழ்நாளில் கூறியதில்லை.

ஒருவர் உண்மையாக, இயல்பாக, வெகுளியாக சிரிக்கும்போது 'மனம்' மறைந்துவிடுகிறது. சென்மதம் கூறுவதே 'உன் மனமற்ற நிலைக்குள் நீ பிரவேசி' என்பதே. அதை அடைவதற்கு அழகான நுழைவாயில் 'சிரிப்பு.' நடனமும், சிரிப்பும் மிகச் சிறந்த வழிகள். வாய்விட்டுச் சிரிக்கும்போதும் ஒருகணம் சிந்திப்பது நின்று மனமற்றவராக (No-mind) மாறிவிடுகிறோம். சிந்தனையற்ற நிலைக்கு சிரிப்பு நம்மை அழைத்துச் செல்கிறது. சிந்தனையற்ற நிலையை அடையத்தான் தியானம் செய்கிறார்கள். தியானத்தால் அடையக்கூடிய நிலையை சிரிப்பும், நடனமும் எமக்கு தருகிறது. ஏனோ தானோ என்றில்லாமல் நடனம் நடைபெற அனுமதித்தால் அதாவது இயல்பாக அந்த நடனம் நிகழ்ந்தால் மனமற்ற நிலையை அடையலாம். நடனமாடும் நடராஜ தோற்றம் நமக்கு அந்த உண்மையை விளக்குகிறது.



ஹொடாய் தான் ஒரு சென்குரு என்றழைக்கப்பட வேண்டுமென்பதற்காகவோ அல்லது சீடர்கள் தன்னைச் சுற்றியிருக்க வேண்டுமென்பதற்காகவோ இவர் எதுவும் செய்வதில்லை. இவர் ஒரு பையை (sack) தனது முதுகில் இனிப்புகளுடனும், மிட்டாய்களுடனும், பொம்மைகளுடனும் சுமந்துகொண்டு திரிவார். அவற்றைச் சிறுபிள்ளைகளுக்குக் கொடுப்பார். இந்த உலகம் வெறும் பொம்மைதான் என்பதை விளங்கிக் கொள்வதற்காகப் பொம்மை கொடுத்தார்.

ஹொடாயின் சிரிப்பினால் பார்ப்பவர்களின் எண்ணங்கள் அந்தக் கணத்தில் காணாமல் போய்விடுகின்றன. அந்தக் கணத்தில் மக்கள் மனங்கள் 'ஒருமை' நிலை அடைந்தன. அவர் முன்னிலையில் மக்கள் தாங்கள் இருக்கிறோம் என்பதையே உணரமுடியாமல் தங்களைத் தாங்களே தொலைத்தனர். உலகில் உள்ள வித்தியாசங்கள் தனித்தனியே தெரியும்வரை இருமைநிலை நீடிக்கும். 'ஒருமை' (Oneness) நிலையைக் கடந்து அப்பால் சென்றவர்களுக்கு வித்தியாசங்கள் வேறுபாடுகள் எதுவும் தெரியாது. ஹொடாய் அவர்கள் அத்தகையவரே. அவர் வாழும் காலத்தில் விளங்கிக் கொள்ளப்பட முடியாதவராகவே இருந்தார்.

சமுதாயம் உங்களை சோகத்தில் பார்க்க விரும்புகிறது, மகிழ்ச்சியாகப் பார்க்க விரும்புவதில்லை. சமுதாயத்திற்கேற்ப முகமூடிகளை மாற்றி, மாற்றி அணிந்து வாழ்வதைச் சமுதாயம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. உங்கள் சொந்த முகத்திற்கு சமுதாயத்தில் அங்கீகாரம் இல்லாததால் நீங்கள் உங்கள் சொந்த முகத்தை மறந்தேவிட்டீர்கள், உங்கள் சொந்த முகத்தை ஞாபகப்படுத்தி பார்க்க முயற்சி செய்யும்போது உங்கள் போலிமுகமே உங்களுக்கு நிஜமுகமாகத் தெரிகிறது. நீங்கள் வாழும் சமுதாயத்தில் நீங்கள் அழுதுகொண்டு சோகமாக சுலபமாகப் போகலாம். ஆனால் சிரித்துக்கொண்டு, ஆடிப்பாடிக் கொண்டு போக முடியாது. உங்கள் மகிழ்ச்சியைக் கண்டு அஞ்சுவார்கள், கேலி பண்ணி அடக்கிவிடுவார்கள். எந்த நேரமும், நீங்கள் விரும்பிய பொழுதெல்லாம் அழலாம், சோகமாக இருக்கலாம். சமுதாயம் எதிர்பார்ப்பது சோகத்தையே, மகிழ்ச்சியை அல்ல. சோகத்துக்கு அங்கீகாரம் கிடைக்கும், நீங்கள் சிரித்தால் சோகம் வரப்போகிறதென்றும் அந்தச் சிரிப்பு இனிமேல் வரப்போகும் சோகத்துக்கு முன் அடையாளம் என்றும் கூறி, சிரிப்பை விரட்டியடித்து சோகத் திற்கு முடிசூட்டிவிடுவார்கள். சமுதாயத்திற்கு விருப்பமான சோகம் சமூகத்திற்கு ஏற்புடைய சோகம் சிரிப்பால் தகர்க்கப்படவேண்டும். சமூகம் என்றும் சோகத்தின் பக்கம் நிற்கிறது, மகிழ்ச்சிக்கும், சிரிப்புக்கும் சிவப்புக்கொடி காட்டு கிறது.

**நீங்கள் யாரும் மாதிரி ஆக வேண்டாம், நீங்கள் நீங்களாகவே இருங்கள். தனி மனிதனாகவே இருங்கள்.**

**சுயமாக இருங்கள். சுயமாக வாழ்வதில் பிச்சைக்காரனாக இருந்தாலும், அந்நிலை சக்கரவர்த்தியைவிட மேலானது. சிரித்து, மகிழ்ச்சியாக, நிம்மதியாக இருப்பீர்கள். இறுக்கமாக இருக்கும் சக்கரவர்த்தி தனக்குள் ஒரு ஏக்கத்தை உணர்கிறார். சிரித்துக்கொண்டிருக்கும் ஏழை தனக்குள் ஒரு நிறைவை உணர்கிறார். பயத்தையும், பீதியையும் முன்வைத்து வாழ்பவர்கள் தங்களைச் சுற்றிப் பயத்தை வளர்த்துக்கொள்கிறார்கள். விழிப்புணர்வில் வாழமுடியாமல் மந்தமாகவே வாழ்வார்கள். ஒருவர் வாய்விட்டுச் சிரிக்கும்போது அந்தக் கணத்தில் மெய்யான நிலையை அடைகிறார்கள்.**

சமுதாயம் சிரிப்பவர்களையும், ஆனந்தமானவர்களையும் பார்க்க விரும்புவதில்லை. பெற்றோர்கள், தங்கள் பெற்றோர்களால் சிரிப்புக்கு எதிரானவர்களாக வளர்க்கப் பட்டதால் தங்களை அறியாமல் வளரும் தங்கள் குழந்தை களையும் ஆனந்தத்திற்கும், மகிழ்ச்சிக்கும், சிரிப்புக்கும் எதிராக வளர்க்கிறார்கள். இது பரம்பரை பரம்பரையாக கைமாற்றப் படுகிறது. சிரிப்பதைத் தண்டனைக்குரிய குற்றமாக்கி விட்டார்கள். ஏளனத்தின் அடையாளமாகச் சிரிக்க விரும்பு கிறார்கள். மகிழ்ச்சியின் அடையாளமாக ஏற்படும் சிரிப்பை சிரமப்பட்டு தங்கள் மூச்சுத் திணறும் அளவுக்கு அடக்கு கிறார்கள்.

பிறக்கும்போதே குழந்தை சிரிப்புடன் பிறக்கிறது. தவழும்போது சிரிக்கிறது. சிரிப்பை வரமாகப்பெற்று குழந்தை இப்பூவுலகில் பிரவேசிக்கிறது. நீங்கள் வீட்டில் சிரிப்பொலியுடன் இருந்தால் உங்கள் கதவைத் தட்டி சிரிப்பைக் குறையுங்கள் என்பார்கள். ஆனால் நீங்கள் அழுதுகுழறி, சோகப்புயலாக இருங்கள் யாரும் உங்கள் கதவைத் தட்டமாட்டார்கள். சிரிப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை, சோகம் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. சோகத்தையும், துன்பத்தையும், விதியையும், கெட்ட தினங்கள், கரிநாட்கள், அச்சம், பீதி, மரணபயம் என்பனவற்றை மையமாக வைத்து, வளர்ச்சியில்லாது வாழ்பவர்களுக்கு மகிழ்ச்சி, ஆனந்தம், சிரிப்பு, கும்மாளம் தொல்லையாகத்தான் இருக்கும்.

பிறர் மகிழ்ச்சியை, ஆனந்தத்தை, சிரிப்பைச் சகித்து கொள்ளமாட்டார்கள். சோகத்தை ஏற்கும் சமுதாயம், சிரிப்பை ஏற்காது. சமுதாயம் என்பது என்ன? மனிதர்கள் கூட்டம்தான்

சமுதாயம். பிறப்பவர்கள் எல்லோரும் அதில் ஆயுட்கால அங்கத்தவர்கள்தான். காதலர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். வெறும் தினத்தை கொண்டாடாது காதலர்களைக் கொண்டாடுங்கள். குழந்தைகள் தினம், அன்னையர் தினம், தந்தையர் தினம் எல்லாம் வெறும் தினங்களைக் கொண்டாடும் கொண்டாட்டங்களாக உள்ளன. வெறும் தினங்களைக் கொண்டாடுவதைத் தவிர்த்து குழந்தையை, அன்னையை, தந்தையை கொண்டாடுங்கள். அவர்களைக் கொண்டாடும் வரை தினங்கள் எல்லாம் வெறும் தினங்கள்தான். அனைத்தும் சிரிப்பொலிக் கொண்டாட்டங்களாகட்டும்.



சிரிப்பு ஒரு வழிபாடு சிரிக்க முடிந்தால் பிரச்சினைகள் உங்களைத் தூக்கி விழுங்கி விடாது. இறுக்கத்தை (Tension / Stress) தளர்த்திவிடும். இறுக்கமாக இருப்பவர்கள் சிரிக்க முடியாது. இறுக்கம் நோய்க்குப் பாதை அமைக்கிறது. இறுக்கத்தில் சமயத்தன்மை இல்லை. ஒருவர் முழுமையாகச் சிரிக்க முடிந்தால் ஒருவர் வாழ்வை முழுமையாக அனுபவிக்க முடிந்தவராவார். அத்தகைய வாழவில் சமயத்தன்மை உண்டு.

வாழ்வே ஆன்மிகம். எந்தப் புனித நூலையும் விட, எந்த வழிபாட்டையும் விட மிக உயர்ந்தது வாழ்வு. வாழ்க்கையைத் தியாகம் செய்யாதீர்கள்! வாழ்வதற்காகத் தியாகம் செய்யுங்கள்! சிரிப்புத்தான் வாழ்வின் சாரம், அதுதான் மதத்தின் சாரம் ‘கடினம்’, ‘கண்டிப்பு’, ‘இறுக்கம்’, ‘ரென்சன்’ (Tension), ‘ஸ்றெஸ்’ (Stress) இவை ஒருபோதும் வாழ்வாகாது. வாழ்வே மதமாக வேண்டும். சிரிப்பே வழிபாடாகட்டும். சிரிப்புக்குத் தடையாக மதம் இருக்கக்கூடாது. ஆன்மிகம் சிரிப்பைப் போதிக்க வேண்டும். சிரிப்பு! சிரிப்பு!! சிரிப்பு!!! வாய்விட்டுச் சிரியுங்கள்! உடல் தளரச் சிரியுங்கள்! குலுங்கிக் குலுங்கிச் சிரியுங்கள்! எங்கும் சிரிப்பு! கனவில் சிரிப்பு! வேலையில் சிரிப்பு! வீட்டில் சிரிப்பு! கொண்டாட்டத்தில சிரிப்பு! ஆலயத்தில் சிரிப்பு! நாலாதிசையிலும் சிரிப்பு! திரும்பும் இடமெல்லாம் சிரிப்பு! பார்க்கும் இடமெல்லாம் சிரிப்பு! சிரிப்பே வாழ்க்கையாகட்டும்! வாழ்க்கையே சிரிப்பாகட்டும்! வழிபாடு சிரிப்பாகட்டும்! திருமணத்தில் சிரிப்பு! வாழ்வில் சிரிப்பு! மரணத்தில் சிரிப்பு! பிறப்பில் சிரிப்பு!!!

வாழ்வுக்கு தொடர் இசைவாக்கம் உண்டு. எக்காலத்திலும், எந்தச் சூழலிலும் எங்கும் நிற்காது. “நேரமில்லை, நேரமில்லை என்று வாழ்ந்தால் வாழ்வில் ஏதோ ஒரு இடத்தில் பிழை இருக்கிறது. சிரிப்பே இல்லாமல் வாழ்ந்தால் வாழும் முறையில் பிழையிருக்கிறது” என்றார் மஹா அலெக்சாண்டர்.

ஒவ்வொரு முறையும் சிரிக்கும்போதும், மகிழும்போதும் நீங்கள் நிகழ்காலத்தில் இருக்கிறீர்கள். அதே நேரத்தில் துன்பம் வரலாம் என்ற எதிர்பார்ப்பும் அடிமனதில் இருப்பதால் வருங்காலத்திலும் இருக்கிறீர்கள். அதனால் ஒரே நேரத்தில் நீங்கள் ‘இரண்டு’ பட்டுவிட்டீர்கள் அதேபோல் இறப்பைப் பற்றிய பயமும் அடிக்கடி குறுக்கிடுவதால் ‘இரண்டு’ பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதனால் சிரிப்பை நீங்கள் தொலைத்துவிட்டீர்கள். ஒவ்வொருவருக்குள்ளும் வாழும் ஹொடாயை வெளியில் கொண்டுவந்து சிரித்து ‘ஒருமைப் படுங்கள்.’

சிரிப்பில் எல்லைகள் மறைகின்றன. சிரிப்பில் துண்டுபட்ட சமதாய முகங்கள் மறைகின்றன. மனிதனிடமிருந்து சிரிப்பை எடுப்பது, அவனது வாழ்க்கையை எடுப்பதாகும். சிரிப்பு குழந்தைத் தனமானதா? இல்லை! சிரிப்பு ஒருவரை குழந்தையாக மாற்றக்கூடியது. புன்னகை ஒரு தனிப் பழக்கம். ஆனால் வாய்விட்டு சிரிப்பிற்கு தனிப் பழக்கம் தெரியாது.

மனிதன் சிரிப்பிலிருந்து தடுக்கப்பட்டதுதான் இந்த உலகத்தில் மனிதனுக்கு எதிராகச் செய்யப்பட்ட பாவங்களிலேயே மிகப் பெரிய பாவமாகும். சிரிப்பு குழந்தைகளுக்கும், அநாகரிகமானவர்களுக்கும் பைத்தியக் காரர்களுக்கும் உரியதாகக் கருதப்படுகிறது. கோயில்கள், ஆலயங்கள், சேர்ச்சுக்கள், மசூதிகள் எல்லாம் சிரிப்புக் கூடங்களாக வேண்டும். மதங்கள் மனிதனை இறுக்கமாக்கி விட்டது. அச்சுறுத்தும் சிலைகள், ஓவியங்கள், கடவுள் கைகளில் ஆயுதங்கள் மேலும் பீதியையூட்டி இறுக்கமாக்கிறது. வணக்க ஸ்தலங்களில் சிரிப்பைக் குற்றமாக்கி இறுக்கத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பயம் நரகத்தைப் பெரிது படுத்திப் பார்க்கிறது. பேராசை, சொர்க்கத்தைப் பெரிதுபடுத்திப் பார்க்கிறது. சிரிப்பு ஓரம் கட்டப்பட்டுவிட்டது.

மகிழ்ந்திருந்தால், வாய்விட்டுச் சிரித்து கலகலப்பாக இருந்தால் ஏதாவது துன்பம் நேரிடலாம் என உங்கள் மனதிற்குக் கற்பிக்கப்பட்டுவிட்டது. அதனால் கலகலப்பாக நீடித்து இருக்க முடிவதில்லை. குழந்தை வளர வளர சிரிக்காமல் இறுக்கமாக இருக்கப் பழக்கப்படுகிறது. 'சிரித்தல்' நல்ல பழக்கமில்லை, மரியாதையில்லை, கௌரவமில்லை என்று பெற்றோரால் சமுதாயத்தில் போதிக்கப்படுகிறது. பேசாமல் இருந்தால் நல்ல பிள்ளை என்று கற்பிக்கப்படுகிறது. சிரிக்கக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறது. யார் அங்கே சிரிக்கிறது என்ற வினா தொடுக்கப்படுகிறது. சிரிப்புச் சத்தம் கேட்டால் தண்டனைக்குரிய குற்றமாகிவிட்டது. சமுதாயத்தினால் வாழ்வின் சுவை பறிக்கப்பட்டுவிட்டது. இழந்த சிரிப்பு மீண்டும் மனிதருக்குள் மலரவேண்டும். திரும்பும் இடமெல்லாம் சிரிப்பொலி கேட்க வேண்டும். பாடசாலைகளில் சிரிப்பு பாடமாக்கப்பட வேண்டும், வேலைசெய்யும் இடங்களில், காரியாலயங்களில், தொழிற்சாலைகளில் நகைச்சுவை ஒரு பகுதியாகவேண்டும். "Stressed" என்ற சொல்லை வலது பக்கத்திலிருந்து இடப்பக்கமாக வாசித்தால் கிடைப்பது "Desserts" என்ற சொல்லாகும். சிரிப்புத்தான் அந்தப் பஞ்சாமிர்தம் (Desserts). சிரிக்க மறந்ததால் dessert ஐ தவறவிட்டு Stressed ஐ பிடித்துக் கொண்டோம். அது நமது வாழ்வில் மறைந்திருக்கிறது. சிரிக்க முடியாவிட்டால் வாழ்வின் இரகசியங்களைத் தொலைத்துவிடுவோம். நகைச்சுவையை உணர்ந்தால் மனிதன் நோயை உணரவே மாட்டான் இறுக்கமான முகத்துடன் ஒரு சின்ன விடயத்தைக் கூடச் செய்யமுடியாது. சிரிப்பு புனிதமானது, சிரிப்பை பிரார்த்தனையாக்குவோம்.



சிரிப்பில் மதவேற்றுமை மறைகிறது
சிரிப்பில் இனவேற்றுமை மறைகிறது
சிரிப்பில் மொழி வேற்றுமை மறைகிறது
சிரிப்பில் பிரதேச வேற்றுமை மறைகிறது.
சிரிப்பில் நிற வேற்றுமை மறைகிறது
சிரிப்பில் பகைமை மறைகிறது
சிரிப்பில் ஏற்றத்தாழ்வு மறைகிறது
சிரிப்பில் பிரிவினைகள் மறைகிறது
சிரிப்பில் அனைத்து வித்தியாசங்களும் மறைகிறது
வாய் விட்டுச்சிரித்தால் நோய் கூட விட்டுப்போகும்

சென் மதத்தின் முழுச் செயல்முறையுமே எப்படி மனமற்ற நிலையைப் பெறுவது என்பதுதான். அதை அடைவதற்கு சென் ஞானிகள் சிரிப்பையும், சூஃபி (Sufi) ஞானிகள் நடனத்தையும், சைதன்யர்கள் ஆடலையும் பாடலையும் கையாண்டனர். சூஃபிகள் கால் நுனிவிரல்களில் (Ballet Dance போல) சுழன்று சுழன்று நடனமாடி மனமற்ற நிலையை அதாவது மனதுக்கு அப்பால் உள்ள அந்த வெறுமையை அடைவார்கள். ஆம்! சிரிப்பிலும், நடனத்திலும் எல்லா எல்லைகளும், எல்லா வேறுபாடுகளும் மறைந்துவிடுகின்றன. சிரிப்பு ஆக்கிரமித்து விட்டால் நம்மையே மறந்து விடுகிறோம். சிந்தனை உடனே நின்றுவிடுகிறது. மனம் மறைந்துவிடுகிறது. நடனமும் அத்தகையதே. நடனம் ஊடாக மனமற்ற நிலைக்குள் பிரவேசிக்க பிரபஞ்சம் அவர்களுக்குள் ஐக்கியமாகிவிடும் என்பதைத்தான் நடனமாடும் நடராஜர் சிலையும் உணர்த்துகிறது.

குழந்தை புன்னகையைத் தன்னுடன் கொண்டு வருகிறது. அந்தப் புன்னகை மூலம் குழந்தை சமுதாயத்துடன் ஒரு பாகமாகிறது. மிகவும் இயற்கையானதாக அந்தப் புன்னகை தோன்றுகிறது. எல்லாச் சூழ்நிலைகளிலும் சிரிக்க முடிந்தால் எதையும் எதிர்கொள்ளும் சக்தியைப் பெற்றுவிடலாம் அடிவயிற்றிலிருந்து கிளம்பும் தன் முழுமையான சிரிப்பில் ஞானி ஹொடாய் தானும் கரைந்துவிடுவார். அத்தகைய சிரிப்பு அவரது சிரிப்பு. அவரிடம் இருந்த ஒரே ஒரு செல்வம் 'சிரிப்பு', அவரிடம் இருந்த ஒரே ஒரு புதையல் 'சிரிப்பு', அவரிடமிருந்த ஒரே ஒரு பொக்கிஷம் 'சிரிப்பு.' அவரது அந்த ஞானச் சிரிப்பை அனுபவித்தவர்கள் தங்களுக்குள் உள மாற்றம் அடைந்தனர். சிரிப்பால் ஆன்மிகம் பரப்பிய அற்புத ஞானி ஹொடாய் அவர்கள் ஆகும்.

ஆசையின் மூலம் மனித குலம் இயங்கும்போது, இவர் போன்றோர்கள் ஆசையின்மைக்குள் இறங்குகிறார்கள். சமுதாயம் தேடும் வரலாற்றுக்குள் இவர் போன்றோர்கள் வரமாட்டார்கள். ஏனெனில் காலத்தைக் கடந்து இவர்கள் நித்தியத்தில் வாழ்வதால் இந்நிலை ஏற்படுகிறது.



அவர் வாழும் காலத்திலும் அவரை மக்கள் விளங்கிக் கொள்ளவில்லை. இக்காலத்தில் வாழ்பவர்களும் அவரை விளங்கிக்கொள்ளவில்லை. எக்காலத்திலும் ஞானி ஹொடாய் புரிந்துகொள்ளப் படாதவராகவே இருக்கப்போகிறார். இவர் மௌனித்து இருந்த ஞானி. சொற்பொழிவுகளும் போதனைகளும் ஒருவரை அடையாளப்படுத்தும். மௌனித்து இருந்தவரை அடையாளப்படுத்த முடியாது. அதனால் இவரை ஒவ்வொருவரும் தங்கள் ஆசைகளுக்கு ஏற்ப இவருக்குப் பெயர் சூட்டி தங்கள் ஆசைகள் நிறைவேற்றப்பட்டதாக மகிழ்ச்சி அடைகின்றனர். சிலைகள் ஒவ்வொருவருக்குள்ளும் கட்டுப்படலாம். ஆனால் ஞானிகளுக்கு முன் ஒவ்வொருவரும் கட்டுப்படுவார்கள். அவரின் சிரிப்பைக் கற்பனை ஆக்கி அவரைச் சிம்மாசனத்தில் அமர்த்தி மகுடம் சூட்டி அவரைக் கற்பகத் தருவாக அழகு பார்க்க விழைகிறது பேராசை கொண்ட மனம். ஆனால் ஹொடாய் யாசித்து வாழ்ந்தவர், சென் பௌத்த துறவிகள் பணம் கையாளாமல் வாழ்ந்தவர்கள். ஹொடாய் இனிப்புப் பண்டங்களையும், பொம்மைகளையும் ஒரு பையில் போட்டு தோளில் சுமந்து திரிந்தவர். அவற்றை சிறு பிள்ளைகளுக்கு வழங்கியவர். இவர் சொற்கள் எதுவும் பேசாது மௌனித்திருந்த துறவி. 'குழந்தைகள்' என்ற சொல்லைத் தவிர வேறு எதுவும் பேசாதவர். 'சிரிப்பு' ஒன்றே அவரையும் மக்களையும் இணைத்த ஊடகமாகும்.

மனிதர்கள் இயல்பாகச் சிரிக்காததால் சிரிப்பூட்டும் கதைகள், துணுக்குள், ஜோக்குகள், தேவையாக உள்ளன. அதற்கும் அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டுத்தான் சிரிக்கிறீர்கள். சிரிப்பதற்கு எல்லை பார்க்கிறார்கள். சிரிப்பு உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தும். உடம்பை இலகுவாக்கும், நோயைப் குணப்படுத்தும். வைத்தியசாலைகளில் நகைச்சுவை யூட்டுபவர்களையும் பயன்படுத்த வேண்டும். கல்விப் போதனைகள் நகைச்சுவை ஊடாகக் கற்பிக்கப்படவேண்டும். இன்று உலகத்திற்கு அதிகம் தேவைப்படுவோர்கள் காமெடி யன்களே, அந்தளவுக்கு மக்கள் இறுக்கமாகிவிட்டார்கள். நகைச்சுவை மனிதனுக்கு இயற்கை அளித்திருக்கும் மருந்து.

மிக ஆழமாகச் செல்லக்கூடியது சிரிப்புத்தான். Side Effects பக்க விளைவுகள், allergic அல்லாத மருந்து சிரிப்புத்தான். யாரும் தயங்காமல் பருகக்கூடிய மருந்து சிரிப்புத்தான். இது ஒரு சர்வரோக நிவாரணி.

சென் (Zen) பௌத்த மதத்தின் முழுச் செயல்முறையுமே எப்படி மனமற்ற நிலையை பெறுவது என்பதுதான். சிரிப்பு அதை அடைவதற்கான மிக அழகிய பாதைகளில் ஒன்று. ஞானி ஹொடாய் இந்தப் பாதையிலே பிரயாணம் செய்தவர். அந்தப் பாதையை மக்களுக்குக் காட்டியவர்.

வாழ்வைச் சோகமாக மாற்றக்கூடாது, இறுக்கமாக்கக் கூடாது. தளர்த்துங்கள்! சிரியுங்கள்! நீங்கள் சிரிக்கும்போதும் சிரிக்கின்றீர்கள் இல்லை, சிரிப்பை உங்கள்மீது திணிக்கின்றீர்கள். அது சமாளிக்கப்பட்டதாக இருக்கிறது. சிரிப்பு வயிற்றிலிருந்து வரவில்லை, இயல்பாக வரவில்லை.

சிரிக்காமல் வாழ்வதற்குப் பல காரணங்களைக் கொண்டிருக்கிறீர்கள். சிரிப்பது அநாகரிகமல்ல, சிரிப்பது குழந்தைத்தனம், கௌரவக்குறைவு, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றாகி வாழ்வின் சுவையை இழக்கத் தயாராகிவிட்டீர்கள். நன்றாக சிரிக்கிற மனிதனால் நன்றாக அழவும் முடியும். எதற்கும் முறைகள் பார்க்கிற மனிதனால் சிரிக்கவும் முடியாது, அழவும் முடியாது, வாழவும் முடியாது. இயல்பான வாழ்வின் சுவை தெரியாது. சிரிக்கத் தெரியாத வாழ்வு பூரண வாழ்வில்லை. சிரிக்காத வாழ்வு சமுதாய மதிப்பைப் பெறுகிறது நகைச்சுவை உணர்வு எல்லோரிடமும் இயற்கையாக இருக்கிறது. அந்தச் சமுதாயம் சிரிப்புக்கு எதிராகக் கட்டுப்பாட்டைப் போதித்திருக்கிறதே. பெரியோர் முன்னிலையில் சிரிக்கக்கூடாது, ஆலயங்கள், கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள் உள்ளே சிரிக்கக் கூடாது என எதிர்ப்பார்க்கப்படுகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு சிரிக்காமல் இறுக்கமாக இருக்கிறீர்களோ அதற்கேற்ற கௌரவம் வழங்க சமுதாயம் தயாராக இருக்கிறது. கம்பியூட்டருக்குச் சிரிக்கத் தெரியாது, நகைச்சுவை உணர்வில்லை, பகுத்தறிவில்லை, விழிப்புணர்வில்லை, தன்னுணர்வில்லை. அதற்கு கொண்டாட்டம் என்றால் என்ன என்று தெரியாது. மனிதன் கம்பியூட்டராக மாறிவிட்டான்.

வாழ்வைக் கொண்டாடுவதைத் தவிர வேறு எந்த விதமான உயர்வான கோட்பாடும் இருக்கமுடியாது. சிரிப்பில்லாத மனிதன் வெறும் பாலைவனத்தைப் போலாகிறான். நகைச்சுவை ஆன்மிகமாக மாறவேண்டும். மனிதன் பாரத்தை இலேசாக்கி விடுவது நகைச்சுவை. நீங்கள் சிரிக்க நேரமில்லையென்றால் யமன் தனக்கு இனிமேல் நேரமில்லை என்று உங்களிடம் வந்து விடுவார் என்று நகைச்சுவையாகச் சிரிப்பைப் பற்றிக் கூறப் படுவதுண்டு. உங்கள் வீட்டுக் கொண்டாட்டங்களில் சற்று நகைச் சுவையைச் சேர்த்து வித்தியாசமாக்குங்கள். உங்கள் கற்பனையையும் சேர்த்துவிடுங்கள், புதுமையாக்குங்கள்.

சிரிப்பு மனிதனுக்கு இயற்கை அளித்த மருந்து. மனிதனால் மட்டுமே சிரிக்க முடியும். சிரிப்பில்லாத மனிதர் மலர்கள் இல்லாத மரத்தைப் போன்றவர்கள். சிரிப்பில்லாத மனிதர் மரியாதைக்குரியவர்களாகின்றனர். உயர் பதவியில் இருப்பவர்கள், உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள், பிரதம மந்திரி, ஜனாதிபதி, உயர்நீதிபதி, அரசியல் தலைவர்கள், மந்திரிகள், மதபீடத் தலைவர்கள், துறவிகள், சுவாமிகள், தியாகிகள், போலிஸ், இராணுவம், கலெக்டர், அரச அதிபர், துணைவேந்தர், ஆசிரியர்கள் இன்னோரன்ன பதவிகளில் இருப்பவர்கள் எல்லாம் தாங்கள் 'இறுக்கமாக', 'கடினமாக' இருக்க வேண்டும் என்று ஒரு போலித் தோற்றத்தைச் செயற்கையாக ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். வித்தியாசமாக இருப்பதென்றால் சிரிக்காமல் இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். அவர்கள் சிரித்தால் சமூகம் அவர்களைத் தகுதியற்றவர்களாகப் பார்க்கும் என்ற அச்சம் உண்டு. சிரிப்பில்லாத சமுதாயத்தில் சிரிப்பில்லா திருந்தால்தான் ஒத்துப்போக முடியும். தங்களை வித்தியாசமாக வைத்திருப்பதாக இருந்தால் சிரிக்காமல் ஒரேமாதிரியான பார்வையுடன் தொடர்ந்து இருக்கவேண்டும் அல்லவா.

கொண்டாட்டங்கள், தினங்கள், சடங்குகள் இடம்பெறும் போது சிரிக்கக்கூடாது எனக் காலம் காலமாகத் தடை போடப்பட்டுவருகிறது. இயந்திரத் தனமாக இருத்தல் வரவேற்பைப் பெறுகிறது. மன இறுக்கத்திலிருந்தும், கடினத் திலிருந்தும் தளர்த்தக்கூடியது 'சிரிப்பு.' உங்கள் சிரிப்பு முழுமையானதாக இருக்க அனுமதியுங்கள். சிரிப்புக்கு எதிராக இருக்காதீர்கள். குழந்தைபோல் இருங்கள். குழந்தைத்தனமாக இருக்காதீர்கள், அது பக்குவமற்ற நிலை. செல்வத்துக்கு,

கல்விக்கு, வீரத்துக்கு எல்லாம் கடவுள் உண்டு. ஆனால் நகைச்சுவைக்கு கடவுள் வேண்டும். நகைச்சுவைக்கு கோயில் வேண்டும், நகைச்சுவையான வழிபாடு வேண்டும், நகைச்சுவை மயமாக வேண்டும். நகைச்சுவை வழங்க அமைப்புத் தேவை. மனிதர்களுக்குத் தேவை தளர்ச்சி, கடினம் அல்ல.

கடவுள், மதம், கோயில் எல்லாம் மனிதனைக் கடினமாக்குகிறது, இறுக்கமாக்குகிறது. மனிதருக்குத் தேவை 'தளர்ச்சி', 'மென்மை' இதையடைய ஒரே ஒரு முறைதான் உண்டு அதுதான் 'சிரிப்பு.' அரச சட்டங்களும் மதத்துடன் சேர்ந்து மனிதனை இறுக்கமாக்குகின்றன. கல்வி முறையும் மாணவர்களை இறுக்கமாக்குகிறது. சிரிப்புக்கலை கல்விமுறை யில் சேர்க்கப்பட வேண்டும். ஆஸ்பத்திரிகளில், வேலை இடங்களில், கல்விக்கூடங்களில் சிரிப்புக் கலையைப் பரப்புங்கள். அதுதான் சிறந்தது. 'சிரிப்புக்கு' ஆலயம் தேவை. காசு, பணம் கிடைக்க வழிபாட்டுக்குக் கடவுளை அறிந்தாகி விட்டது. இரத்தம் சிந்தும் வன்முறைக்குக் கடவுளைக் கண்டு பிடித்துவிட்டான் மனிதன். ஆனால் மனிதனை இலகுவாக்கும் சிரிப்புக்குக் கடவுளை இன்னும் கண்டு அறியவில்லை. 'நகைச்சுவைக் கடவுள்', 'சிரிப்புக் கடவுள்' மீது மதவாதிக்கு நாட்டமில்லை. மதவாதிகள் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தக் கண்டுபிடித்த தந்திரமே குற்ற உணர்வு. நிறைவேற்ற முடியாத விஷயங்களை மக்கள் மீது திணித்து அதைக் குற்றமாக்கி மக்கள் மீது சுமத்திவிடுகிறார்கள். மக்களிடம் குற்ற உணர்வை ஏற்படுத்துகிறார்கள். அதன்பின் வாழ்நாள் முழுக்க குற்ற உணர்வுடன் அடிமையாகின்றார்கள். அவர்கள் பொறியில் சிக்கியவுடன் மதம் மக்கள் மீது வியாபாரமாகிறது.

நகைச்சுவைக்கு, சிரிப்புக்கு, கடவுள், கோயில் தேவை. கோயில் அமைப்பு இல்லாத கோவில்தான் சிரிப்புக் கோவில். இது எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தினமும் உருவாகிக் கொண்டேயிருக்க வேண்டும். வானம், பூமி, மரம், செடி, கொடி எல்லாவற்றிலும் 'சிரிப்பு' பொழியட்டும். நகைச்சுவை யூடாக உலகம் சிரிக்கட்டும். சகல ஜீவராசிகளும் சிரிக்கட்டும், வானமே சிரிக்கட்டும். இந்தப் பிரபஞ்சம் அண்ட சராசரங்களும் சிரிப்புக் கோவில்களாக வேண்டும். சிரிப்பின் வடிவமே தெய்வமாக வேண்டும். அதுவே வழிபாடு. மனிதனை உயர்விக்கும் வழி அது ஒன்றுதான். துன்பம் நீங்கும், பிணி

நீங்கும், சிரிப்பு பகைவனை நண்பனாக்கும், வேற்றுமை நீக்கும், ஒற்றுமை மேலோங்கச் செய்யும். சிரிப்பு, நேசம் இவற்றை கொள்கையாகப் பிரகடனம் செய்யும் ஆட்சி தேவை.

'அன்பு' அரசியலாகட்டும், 'அன்பு' மதமாகட்டும். சிரிப்பும் அன்பும் உட்புறத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன, சிரிப்பு கொண்டாட்டமாகட்டும். சோகத்திலிருந்து விடுதலை கொடுப்பது சிரிப்பு. உள்ளார்ந்த வாழ்வு ஒன்று - வெளிக்காட்டும் வாழ்வு இன்னொன்று. எதிர்பார்த்த வாழ்வு ஒன்று - கிடைத்த வாழ்வு இன்னொன்று. அடைய விரும்புகிறது ஒன்று - கிடைத்துக்கொண்டிருப்பது இன்னொன்று. மனிதன் பலவாக பிளவுபட்டுவிட்டான். சிரிப்பும், நேசமும் மனிதனை 'ஒருமை'ப்படுத்தும். பிளவுபட்ட மனிதனை 'ஒருமை'யாக்கும். 'ஒருமைப்படுங்கள்' இதுதான் இன்றைய தேவை. மனிதன் பிளவுபட்டுவிட்டான். வேலைப்பழு, குடும்பப் பொறுப்பு, சமூகம், மதம், அரசியல் எல்லாம் மனிதனை கூறுபோட்டு இரண்டாக்கிவிட்டது, பிரித்துவிட்டது, பிளவுபடுத்திவிட்டது, இந்த இரண்டுபட்ட நிலையை பிரிந்த நிலையை, ஒன்றாக்கக்கூடியது சிரிப்பும், நேசமும்தான். எனவே மனிதன் முதலில் 'ஒருமையாக' வேண்டும். ஒருமைப்படவேண்டும். மனிதர்கள் பார்வைக்குத் தனித்தனியாகக் காணப்பட்டாலும் பிளவுபட்ட மனநிலையில் பல முகங்களுடன் தங்களுக்குள் இருக்கிறார்கள். வெளிப்பார்வைக்கு மட்டும் ஒருமுகம் கொண்ட மனிதர்களாக காணப்படுகிறார்கள்.

ஒவ்வொரு தனி மனிதனும் ஒருமைப்பட வேண்டும் (Oneness) 'ஒருமைப்படுங்கள்', நீங்கள் 'ஒருவராகுங்கள்' (Oneness) ஒருமையாயிருங்கள், ஒருமைப்படுங்கள். ஒருமைப் பட்டால் சுலபமாக ஒற்றுமைப்படலாம். ஒற்றுமைக்கு முதற்படி ஒருமைப்படல்தான். மனிதர்கள் மனங்கள் பலவாறாக பிளவுபட்டு (Split Personality, Multiple Personality) வாழ்கிறார்கள். மனிதன் முதலில் தன்னுடன் இணக்கம் காணவேண்டும். தன்னுடன் தானே ஒத்துப்போக வேண்டும். தன்னை நேசிக்க வேண்டும்.

ஒருமைப்பட்டால் உங்கள் சொர்க்கத்தை நீங்கள் படைப்பீர்கள். மகிழ்ச்சியின் சொந்தக்காரர் ஆகிவிடுவீர்கள்.

இது சுவாசம் போன்றது. சுவாசிப்பது எப்படி நமக்குள் நம்மை அறியாமலேயே நடக்கிறதோ அதுபோல் மகிழ்ச்சி சுவாசமாகி விடும். ஒருமைப்படல்தான் வாழ்வின் அடிப்படைவிதி. 'ஒருமை' வாழ்வின் பலம். ஒருமையான வர்கள், ஒருமைப்பட்டவர்கள், செயற்கரிய சாதனை படைப்பர். மஹாசக்தி அவர்களிடம் பிறக்கும். வலிமை, திடம், செயல்திறன், ஆற்றல், நேசம்; கருணை, தன்னை நேசித்தல் மற்றவர்களை நேசித்தல், தன்னை ஏற்றல், பிறரை ஏற்றல் எல்லாம் வெளிப்படும். 'ஒருமைப்பட்டவர்' தன்னைத்தான் அறிவர். தன்னை அறிதல் வாழ்வின் முதல் படி.

நீங்கள்தான் உங்கள் பார்வையாளன். நீங்கள்தான் உங்கள் இயக்குநர். பிற மனிதர்களை உங்கள் காரியம் சாதித்துக் கொள்ள இருப்பவர்களாக மாற்றக்கூடாது. உங்களைச் சார்ந்திருப்பவர்களாக உருவாக்காதீர்கள். அவர்கள் அவர்களுக் காகவே வாழ்கிறார்கள், அவர்கள் உங்களுக்காக அல்ல. வாழ்வு ஒவ்வொருவரும் வளர்வதற்கான ஆசீர்வாதத்தை தன்னகத்தே கொண்டது. ஒருவர் தன்னை அறிந்துகொள்ளும் முயற்சியே வாழ்வு. ஆண் - பெண் ஒன்றுசேர்ந்த தாம்பத்திய உறவில் ஒருகணம் உலகமே நின்றுவிடுகிறது. யாருமே இல்லாத, வெறும் உலகமாக, சாதாரண உலகமாகத் தோன்றும் நிலை அது. அந்த அன்புநிலை இல்லாமலேயே முழு உலகமே சாதாரணமாகத் தோன்றும் நிலை இருக்கவேண்டும். அத்தகைய நிலையை தரக்கூடியது வாய்விட்டுச் சிரிக்கும் முழுமையான சிரிப்பு. நமது சுவாசம்போல் சாதாரணமாகவே நமக்குள் அந்த நிலை ஆண் - பெண் உறவில்லாமல் தோன்றிவிடக்கூடியது. மதங்கள் வழிபாட்டு முறைகள் மனிதர்களை இறுக்கமாக்கக் கூடாது. மனிதர்களைக் குற்றவாளியாக்கக் கூடாது. மதம், பயம், பீதியைத் தோற்றுவிக்கக்கூடாது. மதங்கள் வழிபாட்டு முறைகள் அனைத்தும் மனிதர்களை இலகுவாக்க வேண்டும்.

வீட்டில் சிரிப்பு தினசரி வாழ்வாக வேண்டும். மனித வாழ்வில் சிரிப்பு கொண்டாட்டமாக வேண்டும். கொண்டாட்டம் சிரிப்பாக மாறவேண்டும். மனிதர்களை இலகுவாக்கக்கூடியது இதுதான். சிரிப்பில் உலகத்தை மறக்கிறோம். சிரிப்புக்கு எதிரானவராகாதீர்கள். சிரிப்பு நாகரிகமானது. மிருகங்களுக்குச் சிரிக்கத் தெரியாது. மனிதனை

யும் விலங்கையும் சிரிப்பு வித்தியாசப்படுத்துகிறது. மிருகம் தளர்வுநிலையில் இறுக்கமில்லாமல் இருக்கிறது. அதனால் விலங்கினத்திற்கு நகைச்சுவை உணர்வான சிரிப்பின் அவசியம் ஏற்படவில்லை. மனிதர்களைப் பார்த்து மிருகங்கள் சிரிக்கும் காலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. 'இன்பமே எந்நாளுந் துன்பமில்லை' என்று திருநாவுக்கரசு நாயனார் கூறுகிறார். வாழ்க்கை என்றும் மகிழ்ச்சியினதும், பேரானந்தத்தினதும் அடையாளம் என்கிறார். வாழ்வின் நோக்கமும் இதுதான். இன்று மனோதத்துவ ஆலோசகர்கள் இதையேதான் மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் ஆறாம் நூற்றாண்டில் இதனை வலியுறுத்தியுள்ளார். எந்தக் காலமாக இருந்தாலும் மக்கள் தினமும் அனுபவிக்க வேண்டியது ஆனந்தம்! ஆனந்தம்!! பேரானந்தமே!!!



ஹொடாய் அவர்களை எல்லோர் மனங்களிலும் அனு மதித்து நாம் எல்லோரும் சிரிப்போம். நாம் எல்லோரும் மகிழ்வோம். நாம் எல்லோரும் ஆனந்தமடைவோம். இந்த முழு உலகத்திலும் வேறு எந்த மனிதனும் எக்காரணமுமின்றி இந்தளவு அதிகமான மக்களைச் சிரிக்க வைத்ததில்லை. இருப்பினும் அந்தச் சிரிப்பினுள் ஒவ்வொருவரும் கரைந்தனர். அந்தச் சிரிப்பினால் ஒவ்வொரு வரும் தூய்மைப்படுத்தப்பட்டனர். ஒரு சிறு கணப்பொழுது வெறுமைக்குள் (Emptiness) பிரவேசித்தனர். முன்னெப்போதும் உணர்ந்திராத அளவுக்கு நன்றாகத் தங்களை உணர்ந்தனர். அறிந்திராத ஆழத்திலிருந்து ஏதோ ஒன்று அவர்களுக்குள் ஊடுருவியது. இந்த உலகம் அதிக ஹொடாய்களைப் (Hotai) பெறவேண்டும்.

❦❦❦

## அத்தியாயம் 47

# தியோஜினிஸ் (Diogenes): 'மனிதனைத் தேடுகிறேன்'



தியோஜினிஸ் (கி.மு. 412 - 323) கிரேக்க நாட்டுத் தத்துவ மேதையும் ஞானியுமாவார். இவரது தத்துவங்களை, கோட்பாடுகளைக் கிண்டல் செய்யும் தத்துவம் (Cynic Philosophy) என்று சில கிரேக்க தத்துவவாதிகள் அழைத்தனர். இவர் மாவீரன் அலெக்சாண்டர், தத்துவ மேதைகள் பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். அவர் களுடன் வாதிட்டவர். அவர்கள் கருத்து களுடன் முரண்பட்டவர். பிளேட்டோ ஒரு முறை இவரைப் பற்றிக் கூறுகையில், "சோக்கிரட்டீஸ் இருந்திருந்தால் தியோஜினிஸ் (Diogenes) அவரை விசரனாக்கியிருப்பார்" என்றாராம். மாவீரன் அலெக்சாண்டரைப் பொதுமக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியவர், அதன் மூலம் அலெக்சாண்டரின் ஆணவத்தை அவருக்கு உணர்த்தியவர். பின்னாளில் அலெக்சாண்டர் அதனை உணர்ந்தார். தியோஜினிஸ் தனது வாழ்நாளில் பெரும்பகுதி நிர்வாணமாக வாழ்ந்தவர். மனிதன் நிர்வாணமாகத்தான் பிறந்தான், மனிதன் தன்னை ஆடைகளால் மறைத்துக்கொள்வதால் மனம் பலவீனமாகிவிட்டான் என்பாராம்.

இவர் வாலிபனாக தந்தையுடன் வங்கியில் வேலை செய்யும்போது காசு தயாரிக்கும் இடத்தில் (mint) தந்தையுடன் சேர்ந்து பொறுப்பாக இருந்தார். ஒருமுறை இவர் தந்தைக்கு

தெரியாமல் அந்தக் காசுகளை உருமாற்றி, பெறுமதியில்லாமல் செய்துவிட்டார். இது தொடர்பான விசாரணையில் பதிலளிக்கும்போது பணம் மக்களினிடையே பிரிவினையைக் கொண்டு வரும் என்றார். அதிகாரிகள் தண்டனையாக இவரை கிரேக்க நாட்டுக்குள்ளே வேறொரு தூர இடத்திற்கு கடல் மார்க்கமாக வள்ளத்தில் கடத்திவிட்டார்கள். அங்கு ஆட்களைக் கடத்தும் மோசடி வியாபாரக் கும்பல் அவரைப் பிடித்து அடிமையாக விற்றனர். இவரை வாங்கியவர் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமல் விடுதலை செய்து விட்டனர். இவர் அந்த அடிமை வியாபாரக் கும்பலுக்கு நகைச்சுவையுடன் அறிவையும் புகட்டியவர் ஆவார்.

தெருவோரத்தில் ஓர் ஏழைச் சிறுவன் வெறுங் கைகளால் தண்ணீர்க் குழாயில் தண்ணீர் குடிப்பதைப் பார்த்ததும் தன் சாப்பாட்டுக் கோப்பையையும், தண்ணீர்க் குவளையையும் எறிந்துடைத்தார். நகரம் நகரமாக திரிந்து ஆண்டியாக வாழ்ந்தார். இவர் கையில் சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கும் விளக்குடன் பகலிலும் இரவிலும் அலைந்து திரிந்தார். பகலில் ஏன் விளக்கு என்று கேட்டால் 'மனிதனைக் காணவில்லை, மனிதனைத் தேடுகிறேன்' என்பாராம். பகலிலும் தொடர்ந்து அந்த விளக்கு எரிந்துகொண்டிருக்கும். ஆட்களின் முகத்திற்கு நேரே அந்த விளக்கை தூக்கிப் பிடித்து உற்றுப் பார்ப்பார். ஏன் என்று கேட்டால் 'மனிதனைத் தேடுகிறேன் - காணவில்லை' என்பார். உண்மையில் இவரது ஊடுருவும் கண்களை உற்று நோக்கியவர்கள் தங்களுக்குள் உள் மாற்றத்தை உணர்ந்தனர். மனிதனை விடச் சிறந்தது நாய் என்று கூறி நாய்களுடன் வாழ்ந்தார். மனிதனைக் காணவில்லை என்றால் மறுபிறப்பிலும் தேடுவாயா என்று கேட்டால் தன் விளக்கை உற்று நோக்குவாராம்.



குளிர் காலத்தில் தெருவோரக் குழாய் களுக்குள் எலியைப்போல் இருப்பார். எலியைப் பார்த்து இந்த வாழ்க்கை முறையை அறிந்து கொண்டார். அலெக்சாண்டர் தனது ஆட்சியில் இவருக்குக் கௌரவம் கொடுத்து உதவ முன்வந்தபோது ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்தார். ஒரு முறை இவர் காலைச் சூரிய ஒளியில் உட்கார்ந்திருந்து எலும்புக் குவியலைப்

பார்த்துக்கொண்டிருந்தபோது, அவ்வழியாக வந்த அலெக்சாண்டர் இவரிடம் "ஏன் எலும்புக் குவியலைப் பார்த்தபடி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். தியோஜினிஸ் "இதில் எது அடிமையின் எலும்பு? எது உன் தந்தையின் எலும்பு என்று வித்தியாசம் தெரியவில்லை. அதுதான் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்" என்றாராம்.

"உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன்" என்றார் மாவீரன் அலெக்சாண்டர். அதற்குத் தியோஜினிஸ் "என் சூரிய ஒளியிலிருந்து விலகு" என்றாராம். தியோஜினிஸ் துணிச்சல் மிக்கவர், ஞானமுள்ளவர், மனித நேயம் மிக்கவர்.

விருப்புாற்றலில் உடலிற்கு மரணத்தை கொடுக்கும் கலை தெரிந்த இவர், மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து 90 வயதில் தான் விரும்பியபோது, தான் விரும்பிய முறையில் தனது உடலை இறக்கச் செய்தார். இவர் இறக்கும்போது தனது உடலை நகருக்கு வெளியில் மிருகங்கள் வாழும் இடத்தில் வீசும்படி கேட்டுக்கொண்டார். "மிருகங்களுக்கு பயப்பட வில்லையா?" என்று அங்குக் கூடி நின்றோர் கிண்டலாகக் கேட்டனர். "நீங்கள் தடி தந்தால் விரட்டிக்கொண்டிருப்பேன்" என்றார். "மனிதனைக் கண்டுபிடித்து விட்டாயா?" என்று கேட்டனர். அதற்கு அவர் "எனது விளக்கைப் பாதுகாத்து விட்டேன்" என்று நகைச்சுவையாகவும், தத்துவார்த்தமாகவும் சொல்லிக்கொண்டே 'மரணத்தை வரவேற்கிறேன்' என்று தன்னுணர்வுடன் நகைச்சுவையாகக் கூறிக்கொண்டு இறந்தாராம்.

தியோஜினிஸ் குறித்த ஒரு கருத்தை 'நான் ஏன் பிறந்தேன்' படத்தில் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிறு பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்த காட்சியில் அவர் பாடுவதாக அமைந்த பாடல் இது: (இப்பாடலை கவிஞர் வாலி அவர்கள் இயற்றி, சங்கர் கணேஷ் அவர்கள் இசையமைத்து டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பாடியுள்ளார்)

இதோ அந்தப்பாடலில் சில வரிகள்...

"தம்பிக்கு ஒரு பாட்டு அன்புத் தங்கைக்கு ஒருபாட்டு
வாழ்வில் நம்பிக்கை வளர்வதற்கு உதவும்
நான் சொல்லும்
கதைப்பாட்டு...
ஒரு மேதை பகல் வேளை கையில் விளக்குடன்
சென்றாராம்
மனிதன் எங்கே? மனிதன் எங்கே? காணவில்லை
தேடுகிறேன்
நான் என்றாராம்
பிறப்பால் வளர்ப்பால் இருப்பவர் எல்லாம் மனிதர்கள்
அல்ல என்றாராம்
இனத்தால் அல்ல மனத்தால் மட்டும் வாழ்பவர் மனிதர்
என்றாராம்...

......

## அத்தியாயம் 48

# போதிதர்மா (Bodhidharma): 'உயிர்த்தெழல்' (Resurrection)


Pranjatara

**கா**ஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மன்னர்களில் ஒருவரான கந்தவர்மனின் மூன்றாவது மகன் இவர். இவரது இயற்பெயர் போதிதார (Bodhi -Tara) எனவும் இவரது தியான குருவும் ஆன்மிக வழிகாட்டியுமான பெண்ஞானி பிரஜ்னதார (Pranjatara) இவரது பெயரை போதிதர்மா (Bodhidharma) என மாற்றினார் எனவும் ஏடுகள் கூறுகின்றன. 'சுயவிழிப்புணர்வு' (Self-Nature of awareness) என்பதே இந்தப் பெயரின் அர்த்தமாகும். சமஸ்கிருதத்தில் Pu tai Ta Mo என அழைக்கப்படுகிறார். சீனாவிலும், ஜப்பானிலும் தாமோ (Damo) என அழைக்கப் படுகிறார். இவர் 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று நம்பப் படுகிறது. இவர் இளவரசராக இருந்தபோது இளவரசருக்குரிய குதிரை ஏற்றம், யானை ஏற்றம், போர்க்கலை, மருத்துவம், ஆட்சி நிர்வாகம், ஆன்மிகம் போன்றவற்றில் பயிற்சி பெற்றார். இவர் இளவரசராக இருந்த காலத்தில் புத்த போதனைகளால் கவரப்பட்டு இளவரசர் அந்தஸ்தைத் துறந்து துறவியாகும்போது இவரது தந்தை தடுத்தார். இவர் அப்போது "நான் மரணத்துக்கு அப்பால் உள்ளதை அறியப் போகிறேன் என்னைத் தடுக்காதீர்கள்" என்றார். "நீ அரண்மனையில்


Bodhidharma

வாழவேண்டியவன், துறவியாகப்போகிறேன் என்கிறாய், நீ மரணத்தை நோக்குகிறாய்" என்றார் தந்தை. அரண்மனையில் இருந்தால் 'மரணத்தை'த் தடுக்க முடியுமா என்று தந்தையிடம் வினவினார். மரணத்துக்கு அப்பால் உள்ள 'உண்மையை' அறியப்போகிறேன் என்னைத் தயவுசெய்து தடுக்காதீர்கள் என்றார் போதிதர்மா.

தந்தை சிறிது நேரம் யோசித்தார் "நீ இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் வாரிசு. நீ இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தை விட அதி உயர்ந்த ஒன்றைத் தெரிவு செய்துவிட்டாய். உன் கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை! என்னால் பதில் காணவும் முடியாது! மரணத்தைப்பற்றி கேள்வி கேட்பாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நீயோ துறவியைப்போல் பேசுகிறாய் 'மரணத்தை'த் தடுக்க முடியாதென்றால் உன்னைத் தடுக்க வேண்டாம் என்கிறாய். உன் தேடலை நான் தடுக்கவில்லை. மரணத்துக்கு அப்பால் உள்ள உண்மை எனக்குத் தெரியாது. அந்த உண்மையை அறிய உன்னை ஆசிர்வதித்து வாழ்த்தி விடை தருகிறேன்" என்றார் தந்தை.

இவரது மனதில் தோன்றிய கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் புத்த போதனைகள் தீர்வைக் காட்டின. மரணம் என்றால் என்ன? மரணத்தைக் கடப்பது எப்படி? மரணத்துக்கு அப்பால் உள்ளது என்ன? நான் எங்கிருந்து வந்தேன்? நான் யார்? என் இருப்பு (Being) என்ன? என் சுயத்தை (self), ஆன்மாவை (Soul) எப்படி அறிவது? போன்ற இவரது ஐயங்களுக்கு புத்த பீடத்தின் 27ஆவது பிரதான குருவான (27 th Patriarch of Buddhism) பெண்ஞானி பிரஜனதாரா பன்றுடூலூ (Prajnatara Banruo Duoluo) அவர்கள் பதில் அளித்து தெளிவுபடுத்தினார். 'தியான மூலம் மனதைக் கடந்து மனம் மறைய அந்த வெறுமைக்குள்ளால் அப்பால் செல்ல விடைகிடைத்துவிடும்' என்று துருவித்துருவி கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்கும் அந்த மாணவனான போதி தர்மாவிற்கு மேலும் விளக்கினார்.

போதிதர்மா அவர்கள் பெண் அடிமை நிலவிய காலத்தில் ஒரு பெண்ணை தன் தியான குருவாகவும் ஆன்மிக வழிகாட்டியாகவும் ஏற்று அவரது நேரடி சீடராகி அவர் முன்னிலையில் ஞானமடைந்தார். ஒரு பெண்ணைத் தனக்கு

ஆசானாக்கி பெண்கள் பற்றிய ஒரு விழிப்பை ஏற்படுத்தி உலகில் பெண்ணுக்கு அதிஉயர் கௌரவம் கொடுத்து பெண்களைப் பெருமைப்படுத்தியவர். இவர் ஞானமடைந்து புத்தபீடத்தின் 28ஆவது பிரதான குருவானார் (28th Patriarch of Buddhism).

புத்தரின் முன்னிலையில் முதலாவதாக ஞானமடைந்தவர் மஹா காசியப்பா அவர்கள். அவர் சென் - பௌத்தத்தின் முதலாவது குருவும் ஆவார். ஆனால் அவர் சீடர்களை உருவாக்கவில்லை. சென்மதம் அவர் மூலம் பரவவில்லை ஆனால் போதிதர்மா மூலம் சென்மதம் சீனா, ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்னாம் போன்ற நாடுகளில் பரவியது. அதனால் அவர் சென் (Zen/ Chan) மதத்தின் முதலாவது குருவாக (1st Patriarch of Chan-Buddhism) கருதப்படுகிறார். 'தியான்' (Dhyan) என்பது சீனாவில் 'சான்' (Chan) ஆக மாறி ஜப்பானில் 'சென்' (Zen) ஆக மாறிவிட்டது. 'தியான்' என்பது தியானத்தைக் குறிக்கும் சமஸ்கிருதச் சொல். Dhyan - Chan - Zen என மாறி மொழிப்புரட்சியைச் செய்துள்ளது.

'தியான்' என்பது சிந்தனை நின்று மனதுக்கு அப்பால் சென்று மனம் அற்று (Absence of self) 'வெறுமையை' அடைதல் என்பதாகும். சீனாவில் 'தியான்' பிழையாக உச்சரிக்கப்பட்டு 'Chan' ஆகி அது ஜப்பானில் 'Zen' ஆக உச்சரிக்கப்பட்டது. இந்த மொழி மாற்றம் 'தியான்' என்பதின் அடிப்படைக் கருத்தை இழக்கச்செய்துவிட்டது.

இவரது ஆசான் பெண்ஞானி பிரஜனதார இவரை சீனா சென்று அங்கு மஹாயன (Mahayana) பௌத்தத்தின் சர்வஸ்ரிவாதபிரிவை (Sarvastivada Sect) அறிமுகப்படுத்தும்படி பணித்தார். இவர் சீனா செல்லும் வரை அங்கு ஞானம் பெற்ற எந்த ஞானியினதும் கால்படவில்லை. சீனாவில் கால் பதித்து ஞானம் அடைந்த முதலாவது ஞானி இவர்தான். ஞானி கொன்பியூசியசின் (confucius) கோட்பாடுகளில் சலிப்படைந்திருந்த மக்களுக்கு இவர் 'வைட்டமின்' ஆக விளங்கினார். அங்குச் சோர்வுற்ற நிலையிலிருந்த பௌத்தத்திற்குப் புத்துயிர் கொடுத்தார்.

இந்தியாவில் பௌத்தம் தன் பொலிவை இழந்திருந்தது. மதப்பூசல்களும், மோதல்களும் ஏற்பட்டிருந்தன. இவர்



Hiuen Tsang

இந்தியாவை விட்டு வெளியேறியதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என இந்திய முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் *1934*-இல் வெளிவந்த தனது Glimpse of World History என்ற நூலில் குறிப்பிடுகிறார். சீனா செல்லும்போது நடுத்தர வயதைத் தாண்டியிருந்தார் என்கிறார். இந்தியா - சீனா நல்லுறவு பௌத்த மதம் ஊடாக நிலவியதாகவும் நேரு அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அந்த நூலில் ஹியூன்-ஸாங் (Hiuen-Tsang) என்ற பௌத்த ஆய்வாளர் சீனாவிலிருந்து இந்தியா, இலங்கை சுற்றுப் பிரயாணம் செய்து இந்தியா ஊடாக சீனா திரும்பும்போது ஏராளமான மத ஏடுகளை (Scriptures) எடுத்துச் சென்றுள்ளார் என்கிறார். ஹியூன்-ஸாங் தனது அனுபவங்களை நூலாக்கினார். ஹியூன்-ஸாங் தனது அந்த நூலில் ஞானி போதிதர்மா பற்றி குறிப்பிடும்போது. "இடுப்பைச் சுற்றி செம்பிலான பட்டி (Copper Belt) அணிந்திருப்பார். இவரைப் பற்றி சுவாரஸ்யமான கதைகள் உண்டு. இவர் புத்திக் கூர்மையும், மதியூகமும், அறிவும், ஞானமும் உள்ளவர்" என்கிறார் என நேரு அவர்கள் தனது நூலில் சுட்டிக்காட்டுகிறார்.



ZuanZang

சீனாவைச் சேர்ந்த சுவான்சாங் (Xuan Zang) கி.பி. *596 - 664* காலப்பகுதியில் வாழ்ந்தவர் இவர் இந்தியாவில் பத்து வருடம் தங்கியிருந்து புத்த மதத்தை ஆய்வுசெய்தார். இந்தியா முழுக்கப் பிரயாணம் செய்தார். தென்னிந்தியாவில் தமிழ்மொழி பேசும் இடத்திற்குச் சென்றபோது ஒரு மிகப் பெரும் புத்தஞானியைப் பற்றி அறியக்கூடியதாக இருந்தது என இவர் தனது பிரயாணக் குறிப்பில் (Travel Diary) எழுதி வைத்திருந்ததாகக் கிழக்கத்திய மதங்கள் (Eastern-Religions) என்ற நூல் கூறுகிறது. இவர் குறிப்பிடும் அந்த புத்த ஞானி போதிதர்மாவாகத்தான் இருக்க வேண்டும் என இந்நூலாசிரியர் நம்புகிறார்.

போதிதர்மா இயற்கைச் சீற்றங்களையும், கொடூர விலங்கினங்களையும் சந்தித்தும், வழிப்பறிக் கொள்ளைக் காரர்களுடன் மோதியும் சீனா சென்றடைந்தார். சீனா சென்றடைந்த பின்பு மஹாயன பௌத்தத்தில் (Mahayana Buddhism) லங்காவத்தர சூத்திரம் (Lankavatara Sutra) பொருத்தமானது என்பதை உணர்ந்துகொண்டார். லங்காவத்ர சூத்திரமானது பேச்சை விட செயலில் அதிக அக்கறை கொள்கிறது.

தன்னை உணரல், தன்னை அறிதல் (Self-Realization) மூலம் தான் இந்தச் சூத்திரம் அதிஉயர் உண்மையை அடையலாம் என்கிறது. போதிதர்மா அவர்கள் சுறுசுறுப்பையும், உடல் உழைப்பையும் (Physical excellence) 'தியானம்' என அழைக்கிறார்.

தான் சீனாவைக் கவனித்தபோது லங்காவத்ர சூத்திரம் அந்நாட்டுக்குப் பொருத்தமானது எனவும் இதனை சீனா கடைப்பிடித்தால் உலகைத் தாண்டிவிடுவார்கள் எனவும் போதிதர்மா தனது சீடர்களில் ஒருவரான ஹியூக்கிற்கு (Huike) கூறியதாக ஹியூக்கைப் பற்றிக் கூறும் ஏடுகளில் காணப் படுகிறது.

ஞானி போதிதர்மா 9 வருடங்களின் பின் சீனாவை விட்டு இமயமலை நோக்கி வெளியேறுவதற்கு முதல் நாள் பிரதம சீடரை நியமித்தார். தனது போதனைகளில் சீடர்கள் விளங்கிக் கொண்டதை அறிவதற்காக சுவரைப் பார்த்துக்கொண்டு கேள்விகள் கேட்டார். இவர் யாரையும் பாராது சுவரைப் பார்த்துத்தான் போதனைசெய்வது வழக்கம். சீடர்கள் இவரது முதுகுக்குப் பின்னால் இவரைப் பார்த்தபடி இருப்பார்கள். பதில்களை மையமாக வைத்து நியமனம் செய்தார். நியமனம் நடைபெற்ற அன்று இவரது இரவுச் சாப்பாட்டு உணவு நஞ்சுத்தன்மை கொண்டதாக (Food Poison) மாறிவிட்டது. அதை உட்கொண்டதால் இவரது உடல் மரணநிலைக்குச் சென்றது. (புத்தருக்கு வழங்கப்பட்ட காளான் உணவு அவரது உடலுக்கு இதே அனுபவத்தைக் கொடுத்தது). போதி தர்மரது மரணநிலை உடல் சார்ந்தது, தன்னுணர்வு சார்ந்தது அல்ல. இவரை இறந்ததாக கருதி புதைத்துவிட்டார்கள்.

இவர் அட்டமா சித்தி, காயகல்பம், யோகா, மரணத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், உயிர்த்தெழல் போன்ற கலைகளிலும் வல்லவர். அவர் புதைகுழியிலிருந்து தவளை போல் மண்ணைத் துளைத்துக்கொண்டு வெளியே உயிர்பெற்று (Resurrection) வந்தார். இவர் இந்தியாவிலிருந்து சீனா செல்லும்போது புலி, சிறுத்தை, பாம்பு, நாரை இவற்றின் தாக்குதலுக்குள்ளானபோது அந்த விலங்குகளைப் போல் தன்னை மாற்றி பாவனை செய்து அவற்றுடன் போராடி தன்னைக் காப்பாற்றிக்கொண்டவர். இந்த விலங்கினங்களின் அசைவுகளையும் தனது தற்காப்புக் கலையில் புகுத்தியுள்ளார். நிலத்துக்கடியில் மண்சரிவுகளில் அகப்பட்டு புதைந்தபோது மண்ணைத் துளைத்துக்கொண்டு தவளை போல வெளியே வந்து தன்னைக் காப்பாற்றிக்கொண்டவர். மண்டூபம் தவளையைப் பார்த்து பெற்றுக்கொண்ட இந்த அனுபவம் இவருக்குப் புதைகுழியிலிருந்து வெளிவரவும் உதவியது. போதிதர்மாவின் உயிர்த்தெழுதல் நிகழ்வு முக்கியத்துவமடை யாமல் மரணித்துவிட்டது.

அரசர் 'வெ' (Wei) யின் பிரதிநிதி ஒருவர் சீன எல்லையில் போதிதர்மா அவர்கள் ஒரு தடியில் தன் பாதணி ஒன்றை தூக்கிச் செல்வதைப் பார்த்தார். எங்கே போகிறீர்கள் என்று கேட்டபோது, இமயமலையில் இறக்கச் செல்வதாக கூறியுள்ளார். அரசருக்கு இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. அரச அதிகாரிகளும் சீடர்களும் இவரது புதைகுழியைத் தோண்டிப் பார்த்தபோது ஒரு பாதணி மாத்திரம் அங்குக் காணப்பட்டதாம். அவரது உடல் அங்குக் காணப்படவில்லை. போதிதர்மர் இறந்தது ஜப்பானில் உள்ள ஒக்கினவா தீவு (Okinawa) என்றும் வரலாறு உண்டு. அங்கு இவருக்கு ஆலயம் அமைத்து வணங்குகிறார்கள். அங்கு இவரை தர்மா, தர்மதேசி என்றும் அழைக்கிறார்கள். இத்தீவு கராத்தே தற்காப்புக் கலைக்கு பிரபல்யமாக இன்றும் விளங்குகிறது. போதி தர்மரது வச்சிரமுஸ்திக் கலையே கராத்தே தற்காப்புக் கலையாக மாறியது.

ஆரோக்கிய ஆன்மிகம், துணிச்சலைத் தரும் தத்துவம், மனதை இலகுவாக்கும் செயல்முறை, உளவியல், மருத்துவ விஞ்ஞானம், வீரியம் தரும் தற்காப்புக்கலை, புத்துயிர் கொடுக்கும் ஞானம் என உலகுக்குப் பல உண்மைகளை

அளித்த உன்னத ஞானி. இவர் பல பீடங்களைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகம் போன்றவர்.

இமயமலையில் போய் இறக்கப்போவதாக உறுதியாக கூறியிருந்ததால், தன் மரணத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து அவர் இமயமலைச் சாரலில் தன் உடலை நீக்கி தனது 'சுயத்தை' (Self) இமயமலையில் காற்றோடு காற்றாக கலந்து பிரபஞ்சத்தில் ஒளியாகிவிட்டார். இவரது வாழ்க்கையை புரிந்துகொள்ள முடியாதது போல இவரது மரணமும் புரிந்து கொள்ள முடியாததாக அமைந்துவிட்டது.

மதத் தீவிரவாதத்தால் இந்திய ஞான ஒளியான போதிதர்மா அவர்களது வரலாறு இந்தியாவிற்குள் மரணித்து விட்டது. இந்திய அன்னை அவரது வரலாற்றுக்குப் பிறப்புக் கொடுக்க வேண்டும். அவரது வரலாறு உயிர்பெற்றுவிட்டால் போதிதர்மா அவர்கள் உலக அதிசயமாகிவிடுவார்.

புத்தர் நேபாளத்திலுள்ள லும்பினி நகரில் (Lumbini) பிறந்து பின் போதிகாயாவில் (இந்தியா) ஞானமடைந்தார். போதிதர்மர் பிறந்தது காஞ்சி, ஞானமடைந்தது காஞ்சி, சென் மதத்தை உலகுக்குக் கொடுத்தது காஞ்சி மாநகரமாகும். காஞ்சி புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு காஞ்சிபுரம் என்ற பெயர் போதிதர்மபுரமாக மறுபிறப்பு எடுக்க வேண்டும்.

'மரணத்துக்கு அப்பால் வாழ்வை உணர மனதுக்கு அப்பால் செல்லவேண்டும்.'

'மனதுக்கு அப்பால் செல்பவர்களிடம் மரணம் தோற்றுவிடும்.'

'உங்கள் இருப்பை (Being), உங்கள் சுயத்தை (Self-Nature) அந்த உண்மைகளை நீங்கள் அறியாவிட்டால் மரணம் இறுதியானது என ஏற்றுக்கொண்டுவிடுவீர்கள்.'

- போதிதர்மா

**ஒரே பார்வையில் போதிதர்மா :**

- தான் இளவரசராக இருந்தபோது கற்ற வர்மக் கலையையும், கலரிப்பட்டையையும், யோகாக் கலையையும், புலி, சிறுத்தை, குரங்கு, பாம்பு, நாரை ஆகிய பிராணிகளின் குண இயல்புகளையும் மையமாக வைத்து சோலிங் தற்காப்பு கலையை (Shoaling quan Martial art) உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

  இது பிற்காலத்தில் Kung-Fu கலையாக மாறியுள்ளது. இவர் தற்காப்புக்கலையின் தந்தையாவார்.

- மனிதருக்கு 6 புலன்கள் உண்டு என்றும் அந்த 6ஆவது புலன் காதுக்குள் இருக்கிறது எனவும் அதுதான் உடலை சமநிலையில் வைத்திருக்கும் புலன் (Sense of Balance) எனவும் கூறினார். இன்று மருத்துவ விஞ்ஞானம் 6ஆவது புலன் மனிதருக்கு உண்டு எனவும் அந்த 6ஆவது புலன் காதுக்குள் இருக்கிறது எனவும் நிரூபணம் செய்துள்ளது.

- அக்கியூபஞ்சர் (Accupuncture) வைத்திய சிகிச்சை முறையை கண்டுபிடித்ததாக ஊகங்கள் உண்டு.

- உடல் உறுப்புகள் வேறொருவருக்கு மாற்றுவது (Organ Transplant) பற்றி உலகில் முதன் முதல் சொன்னவர் போதிதர்மா அவர்களே.

- எலும்புமச்சை இன்னொருவருக்கு மாற்றுவது பற்றி மருத்துவநூல் எழுதியதாக ஏடுகள் தெரிவிக்கின்றன.

- சீன Tai மலைச்சாரலில் மூலிகை தேயிலையை (Herbal tea) பயிரிட்டு அறிமுகப்படுத்தினார். (Tai-Tea, Tai – Chai) ஆக மாறியுள்ளது

- மூலிகை வைத்தியத்தின் (Herbal Medical treatment) தரத்தை உயர்த்தியவர்

- சுவரை உற்றுநோக்கும் (Wall Gazing) தியானத்தை அறிமுகப்படுத்தினார்.

- நோக்கு வர்மக்கலையில் (Mesmerism) கைதேர்ந்தவர்.

**நூல் ஆசிரியரின் விசேட செய்தி:**

போதிதர்மர் என்ற ஒரு முழு விவரமான நூல் இந்நூலாசிரியர் வெளியிடுகிறார்.

போதிதர்மர் அவர்களைப் பற்றிய விழிப்புணர்வு இந்தியா முழுக்க ஏற்படவேண்டும். இவர் பெயரால் பரிசுகள், விருதுகள் வழங்கப்படவேண்டும். பாடப் புத்தகங்களில் ஞானி போதிதர்மர் அவர்களது வரலாறு சேர்க்கப்படவேண்டும். அவரைப் பற்றி பாடசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டும். இவர் அனைத்து உலகத்திற்கும் பொதுவானவர்.

தமிழ்நாடு அரசு இந்தச் சுடரை ஏற்றி இந்தியா முழுவதும் தீபமாக்க வேண்டும். இந்திய அரசு இந்தத் தீபத்தை உலகத்திற்கு ஒளியாக்க வேண்டும் என்பதை இந்நூலாசிரியர் ஒரு மின்மினியாக இருந்து கேட்டுக்கொள்கிறேன்.

போதிதர்மரைப் பற்றிய வரலாற்றை தமிழ்நாடு, இந்தியா, சீனா கூட்டாக ஆய்வு மேற்கொண்டு அவரது வரலாற்றை வெளியுலகிற்கு கொண்டுவர வேண்டும். போதிதர்மர் போல் சகல ஆற்றல்கொண்ட ஞானி, இவருக்கு முன்பும் பின்பும் இன்றுவரை தோன்றவில்லை. அறிவியலில் மேற்கு சோக்கிரடீசை அடையாளம் காட்டினாலும் கிழக்கில் அறிவியலில் போதிதர்மர் அவரையும் விஞ்சியவராக இருந்தும் அடையாளம் காணப்படாதவர் ஆக இன்றுவரை ஞானி போதிதர்மர் இருக்கிறார்.

## அத்தியாயம் 49

# சோக்கிரட்டீஸ் (Socrates) இறுதி உரை: 'மீண்டும் பிறப்பேன்'




இவர் கிறிஸ்துவுக்கு முன் 469 - 399 B.C. களில் கிரேக்க நாட்டில் வாழ்ந்தவர். சிறிய தோற்றம் உடையவர். தன்னம்பிக்கையும், உற்சாகமும், சுறுசுறுப்பும் மிக்கவர். சரி என்பதை சரி என்று கூறும் துணிச்சல் மிக்கவர். உலகத்திலே அதிசிறந்த தத்துவ ஞானியும் தர்க்கவியலாளருமாவார். கூலிக் கட்டடத் தொழிலாளியாக தொழில்புரிந்தவர், ஏழ்மையில் வாழ்ந்தவர். இவரது மனைவியின் பெயர் ஷேன்திப் (Xanthippe) இவர்களுக்கு ஒரு மகன் இருந்தார். சோக்கிரட்டீஸ் தன் குடும்பத்தைச் சரியாக கவனியாது, தினமும் விவாதத்திலும், சர்ச்சையிலும் ஈடுபடுகிறார் என இவரது மனைவி குறை கூறிக்கொண்டே இருப்பார். இருவரும் வெவ்வேறு சிந்தனையாளர்கள். அதனால் ஒத்துப்போக முடியவில்லை. சோக்கிரட்டீஸ் தர்க்கவியலாளர், எனவே தர்க்கவியலை முன்வைப்பார். மனைவி மிகச்சிறிய வட்டத்தினுள் வாழ்பவர், அதற்கேற்ப குறுகிய சிந்தனையுடையவர்.

**இளைஞர்களின் 'சூப்பஸ்டார்':**

இவரின் நேர்மை இளைஞர்களைக் கவர்ந்தது. தனக்கு இந்த உலகில் ஒரு கடமையுண்டு, அதாவது சரியானது என்று உணர்வதைச் செய்யவேண்டும், பிழையானது என்று உணர்வதைச் செய்யக்கூடாது என்று சோக்கிரட்டீஸ் கூறிக்

கொள்வாராம். ஏற்கமுடியாத கருத்தென்றால் சோக்கிரட்டீஸ் அந்தக் கணத்திலேயே விவாதத்தில் இறங்கிவிடுவார். அதிகாரியிடமோ, அரசனிடமோ விளக்கம் கேட்கத் தயங்க மாட்டார். இளைஞர்கள் இவரைச் சூழ்ந்துகொள்வார்கள். இளைஞர்களுக்கு இவர் ஒரு 'சூப்பர்ஸ்டார்.' இளைஞர்கள் இவரைத் தொடர்ந்தனர். இவரது கருத்துகள் அவர்களைத் தெளிவாக்கியது. அவர்கள் அதிகாரிகளைக் கேள்வி கேட்கத் தொடங்கினர், விவாதித்தனர். சுனாமி வேகத்தில் சோக்கிரட்டீஸின் கருத்துகள், விளக்கங்கள் மக்களைச் சென்றடைந்தன. இவர் எதையும் எழுதி வைக்கவில்லை, நூல் ஆக்கவில்லை. இவரது மாணவன் பிளேட்டோ (Plato) எதென்ஸ் (Athens) நகருக்கு வெளியே ஒலிவ் மரங்கள் நிறைந்த இடமான அக்கடமி என்ற இடத்தில் பாடசாலை அமைத்து சோக்கிரட்டீஸ் கூறியவை, அவரது விவாதங்கள் அனைத்தை யும் மாணவர்களுக்கு விளங்கப்படுத்தினார். அவற்றை உரையாடல் முறையில் எழுதினார். அவை அறிவியலுக்கும், தர்க்கவியலுக்கும் இலக்கணம் வகுக்கும் நூல்கள் போலாயின.

(தன்குரு சோக்கிரட்டீஸ் விஷம் குடித்து தனது மரண தண்டனையைத் தானே நிறைவு செய்யும்போது, அன்று அந்த மன்றில் பிளேட்டோ அவர்கள் பிரசன்னமாயிருக்க விரும்ப வில்லை)

**பொது வாக்கெடுப்பு மூலம் பதவிகள் நியமனம்:**

சோக்கிரட்டீஸ் காலத்தில் எதென்ஸ் நகர் ஒரு சிறிய நகரமாக இருந்தது. அங்கு எல்லோருக்கும் ஒருவரையொருவர் தெரியும். அப்போது பத்திரிகைகள், அச்சுப்பிரதிகள், வானொலி போன்ற தொடர்புச் சாதனங்கள் எதுவுமில்லை. தங்களுக்குத் தெரிந்தவற்றை அங்குள்ள சந்தை மைதானத்திற்குச் சென்று ஒலிவாங்கியோ, ஒலிபெருக்கியோ எதுவுமில்லாமல் உரக்கச் சொல்வார்கள். திறந்தவெளியரங்கு பாராளுமன்ற முன்றலில் கருத்துக்கள் பரிமாற்றம், விவாதங்கள் இடம்பெறும், எவரும் பங்குபற்றலாம், அனைவரும் அங்கத்தினர்கள். அங்கு நடைபெறும் நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு நடுத்தர வயதிலிருந்து எவரும் யூரிகளாகப் போகலாம். வாக்குமுறை மூலம் தீர்ப்பு வழங்கப்படும். நிர்வாகிகள், அமைச்சர்கள், இராணுவத் தளபதிகள், முக்கிய பதவிகளில் அங்கம்

வகிப்பவர்கள் ஆகியோர் பொது வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

**எதென்ஸில் தெருவோர விவாதங்கள்:**

தெருவோரங்களில் முக்கியமாக மனிதர்களின் இருப்பு (Being), சுயம் (Self), மனம் (Mind), விழிப்புணர்வு (awareness), தன்னுணர்வு, ஆன்மா, உயிர், பிரக்ஞை (Consciousness), மரணம் என்றால் என்ன?, மரணத்துக்குப் பின் என்ன நடக்கிறது? மறுபிறப்பு, பிரபஞ்சத்தைப் பற்றிய கருத்துகள் அனைத்தும் சினேக பூர்வமாக விவாதிக்கப்படும். அயல் நாடுகளிலிருந்தும் அங்குச் சென்று விவாதம் புரிவார்கள்.

தெருவோரங்களில் விவாதங்கள், அறிவியல் தர்க்கங்கள், நடனம், இசை, ஓவியம், சிற்பக்கலை எல்லாமே நடைபெறும். முக்கியமாக விவாதங்களும், தர்க்கங்களும் மக்களைக் கவர்ந்தன, பயனுள்ளவையாக அமைந்தன. எந்தவித குறுக்கீடுகளும், இடைஞ்சல்களும், தலையீடுகளும் இருக்காது, ஒன்றோடொன்று கலபடாது. விவாதங்கள், கருத்தியல் தர்க்கங்கள், கருத்துப் பரிமாறல்கள், வழக்கு விசாரணைகள் ஆகியனவும் தமது பாதையில் எந்தவித இடையூறுகளுமின்றி இயல்பாகவே நடந்தேறும். சுதந்திரமாக, கௌரவமாக நடைபெறும். சமகாலத்தில் இதேபோன்று இத்தாலியிலும் தெருவோர விவாதங்களும், கருத்தியல் தர்க்கங்களும் இடம்பெற்றன.

**இந்தியாவில் நவதீப நகரில் தெருவோர விவாதங்கள்:**

எதென்ஸ் நகரில் (கிரேக்க நாடு) தெருவோரங்களில் பொது இடங்களில், சந்தை மைதானத்தில், வீட்டுத் திண்ணைகளில் அறிவியல் தர்க்கங்கள், விவாதங்கள் நடைபெறுவதுபோல் இந்தியாவில் வங்கப் பகுதியில் இருந்த நவதீப நகரில் அறிவியல் விவாதங்கள், தர்க்கங்கள் தெரு வோரங்களில், பொது இடங்களில், சந்தை மைதானங்களில் வீட்டுத் திண்ணைகளில், மரங்களுக்குக் கீழேயும், குளக்கரை களிலும், ஆற்றங்கரைகளிலும் சிறுசிறு கூட்டங்ளாக நடைபெற்றுக்கொண்டேயிருக்குமாம்.

இங்கு அறிவியல் விவாதங்களில் முக்கியமாக உண்மை, நான் யார்?, விழிப்புணர்வு, மனம், மனமற்ற நிலை, உயிர்,

ஆன்மா, கர்மா, சுயம், பரவெளி, தன்னைத்தானே அறிதல், மரணம், மரணத்துக்கு அப்பால், மறுபிறப்பு, பிரபஞ்சம் போன்ற விடயங்களும் ஆராயப்படும்.

நவதீப நகர் கல்வி, கேள்வி, தர்க்கங்களின் மையமாக அன்று விளங்கியது. இந்தியாவில் எந்தப் பிரதேசத்திலும், கிராமத்திலும், மூலை முடுக்குகளிலும், சந்துபொந்திலும் உள்ள மக்கள் யாராவது தன் சுய தரிசனத்தில், சிந்தனையில், அனுபவத்தில் ஏதாவது புதிய கருத்துகளோ, சிந்தனைகளோ அறிந்தாலோ, தோன்றினாலோ அல்லது கண்டுபிடித்தாலோ உடனடியாக நவதீபம் சென்று தமது கண்டுபிடிப்புக்களை விளக்கி விவாதிப்பர். எதென்ஸ் நகரம் போல நவதீபம் அறிவியல் நகரமாகவே இருந்தது. கேள்விகளுக்குப் பதில்கள், காரசாரமான விவாதங்கள், சூடான தர்க்கங்கள் எதென்ஸிலும், நவதீபத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. எதென்ஸ் நகர விவாதங்களை அறிந்தளவுக்கு நவதீப விவாதங்கள், தர்க்கங்கள் வெளியுலகுக்கு தெரியாமல் மறைந்துவிட்டன, காரணம் அவை நூல்வடிவம் பெறாமையே. தர்க்க நியாயக் கல்வியின் அச்சாணி யாக அந்நகரம் விளங்கியது, அதாவது எதென்ஸ் நகரையும் கடந்து சிந்தனையின் எல்லையைத் தொட்டது நவதீபநகரம்.

**சிந்தனைக்கு வித்திட்ட இந்திய ஞானிகள்:**


Kapilar


Patanjali


Chaitanya


Shankar

கபிலர், பதஞ்சலி, சைதன்ஜர், சங்கர் போன்றோர்கள் உலகில் தோன்றிய மிகப் பெரும் சிந்தனையாளர்கள். நவதீப நகரில் தான் சைதன்ஜர் பிறந்தார். அப்போது வங்கம் "நவ்யநியாயா' என்ற புதிய இயக்கவியல் சிந்தனையை அடைந்திருந்தது. ('நவ்யநியாயா' வைப்பற்றி இந்நூலாசிரியரால் எதுவும் அறிந்துகொள்ள முடியவில்லை.) சைதன்ஜர் மிகச் சிறந்த தர்க்கவியலாளராகத் திகழ்ந்தார். தர்க்கவியலுக்கு முன்னோடி சைதன்ஜரே ஆவார். அப்படிப்பட்ட சிந்தனை

யாளர், தர்க்கவியலாளர், அறிவியல் மேதை, ஞானி தனது மேதமைக்கு விடைகொடுத்துவிட்டு தெருக்களில் ஆடிப் பாடிக்கொண்டு, கிராமம் கிராமமாக, ஊர்ஊராக, நகரம் நகரமாக செல்லத் தொடங்கினார். 'எதுவுமே சிந்திக்க முடியாதது' என்று அறிவித்தார். 'இனிமேல் நான் விவாதங்கள் செய்யமாட்டேன், தர்க்கத்தின் மூலம் சத்தியத்தைத் தேடமாட்டேன் எல்லா வற்றையும் துறந்துவிட்டேன்' என்றார். இவர் தெருக்களில் ஆடினார், பாடினார், சிரித்தார், கைகொட்டினார். மக்களுக்கு இவர் செயல் வினோதமாகத் தோன்றியது. புத்தர், மஹாவீரர் ஆகியோர் தியானத்தின் மூலம் அடைந்த நிர்வாண நிலையை சைதன்ஜர் ஆடல், பாடல் மூலம் அடைந்தார்.

**உன்னையே நீ அறிவாய்:**




கிரேக்கத்தில் சோக்கிரட்டீஸின் கருத்துகள், தர்க்கவியல்கள், விவாதங்கள் அனைத்தும் தனித்துவமானவை. 'உன்னையே நீ அறிவாய்' (Know Thyself) என்பது இவரது முக்கிய கருத்துக்களில் ஒன்று. சோக்கிரட்டீஸின் விவாதங்களிலிருந்தே புதிய கருத்துகள், வரைவிலக்கணங்கள் மேற்குலகில் உருவாகின. புத்தருடனோ, சீனஞானிகளான லாவோசூவுடனோ (Lao-tzu), கொன்பியூசியஸுடனோ (Confucious) விவாதம்புரிய நேர்ந்திருந்தால் சோக்கிரடீஸே வென்றிருப்பார்.

சோக்கிரடீஸிற்கு முன்பு கிரேக்க நாட்டில் வாழ்ந்த தத்துவமேதை தேல்ஸ் (Thales) 'உன்னை நீ அறி', 'உன்னையே நீ அறிவாய்' (Know thyself) என்ற கருத்தை மேற்கே விதைத்தார். சோக்கிரடீஸிற்கும் அதே கருத்து மனதில் தோன்றி அவரும் அக்கருத்தை வலியுறுத்தினார். ஒருவர் தன்னைத் தானே அறிய வேண்டும் என்றார்கள்.

**திருமூலரின் கருத்து கிரேக்க மேதைகளுக்கு முந்தையதே:**

இந்தியாவில் வாழ்ந்த திருமூலர் பல ஆண்டுகளுக்கு முன்பே 'உன்னை நீ அறி' என்றார். இவர் கிரேக்க மேதைகளின் காலத்துக்கு முன்பே இந்தியாவில் வாழ்ந்த சித்தராவார். இவர் பாடல் வருமாறு:

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்சிக்கத் தானிருந்தானே.**

- திருமந்திரம்

ஒருவர் தன்னைத் தானே அறியும் அறிவை அறிந்து கொண்டால் அவர், தான் இறைவன் என அறிந்துவிடுவார் என்கிறார் திருமூலர். கிரேக்க தத்துவ மேதைகளோ, திருமூலரோ ஒருவர் தன்னை அறியும் விசாரஞானம் பெறும் மார்க்கமில்லாத மார்க்கம் அல்லது வழிமுறையில்லாத வழிமுறை, அல்லது நுட்பமில்லாத நுட்பம் எதுவுமே விவரித்து உரைத்ததாகப் புலப்படவில்லை. திருமூலருக்குப் பின் தோன்றிய புத்தர், மஹாவீரர் அதற்கான பாதையில்லாப் பாதையைக் காட்டி யிருக்கிறார்கள். ஒருவர் 'தன்னைத் தானே அறியவேண்டும்', 'உன்னையே நீ அறிவாய்' (Know thyself) போன்ற 'ஞானத்தை' திருமூலர் அவர்களுக்கு முன்னர் உலகில் வேறு யாராவது சொன்னார்களா என்பதை இந்நூலாசிரியரால் அறிய முடியவில்லை.

**அறிவியல் சார்ந்த நூல்:**

மேற்கு தர்க்கவியலின் தந்தை என சோக்கிரடீஸை வர்ணிப்பர். உண்மையை உணர்தல், தன்னைத்தான் அறிதல், சுய விழிப்புணர்வு, நான் யார்? போன்றவைகள் சோக்கிரடீஸின் கருத்துகளில் முக்கியமானவை. சோக்கிரடீஸின் மாணவர்களில் ஒருவரான சினாபோன் (Xenophon) தனது மெமரோபிலியா (Memorabilia) என்ற நூலில் சோக்கிரடீஸின் உரையாடல்கள், விவாதங்கள், நினைவுகள், ஞாபகங்க்ள் ஆகியவற்றைத் தொகுத்து விவரமாக எழுதியுள்ளார். இது ஒரு அறிவியல் சார்ந்த நூலாகும்.

**மக்கள் நடுவர் மன்றில் முறைப்பாடும் தீர்ப்பும்:**

மெலிரஸ் (Meletos), அனிரஸ் (Anytos), லீஜன் (Lyeon) இவர்கள் சோக்கிரடீஸ் இளைஞர்களை கலகக்காரர்களாக மாற்றுகிறார், மதநிந்தனை (Impiety) செய்கிறார் என்று குற்றம் சாட்டி, மக்கள் நடுவர் மன்றத்தில் முறைப்பாடு செய்தனர். சோக்கிரடீஸுக்கு அப்போது *70* வயது. முறைப்பாடு

செய்தவர்கள் இவருக்கு மரண தண்டனை வழங்குமாறு கோரினர். மக்கள் மன்றில் 501 பிரஜைகள் அங்கத்தினர்களாக இருந்தனர்.

பெரிய மன்றின் உப பிரிவு மன்றம்தான் இது. பெரிய மன்றம் 6000 பிரஜைகளை அங்கத்தினர்களாகக் கொண்டது. பெரும்பான்மை வாக்கெடுப்பு மூலம் தீர்ப்பு வழங்கப்படும். 501 பேர் கொண்ட மக்கள் மன்றத்தில், 281 வாக்குகள் இவரை குற்றவாளியென்றும, 220 வாக்குகள் குற்றமற்றவர் என்றும் பதிவுசெய்து, குற்றவாளி என்று தீர்ப்பும் வழங்கின. சோக்கிரடீஸிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கு அன்றைய அந்த நீதிமன்றச் சட்டப் பிரகாரத்தில் தண்டனை எதுவும் இல்லை. சோக்கிரடீஸை அந்த மன்றம் கேட்டது, ‘உனக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்று கூறமுடியுமா?’

**தீர்ப்பு தீர்ப்பாக இருக்க வேண்டும்:**


Socrates` defends himself at his trial

சோக்கிரடீஸ் தீர்ப்பு தீர்ப்பாகவே இருக்க வேண்டும், மன்றாடிக் கேட்டு விடுதலை பெற்றால் வழங்கப்பட்ட தீர்ப்பு எப்படிச் சரியானதாக இருக்க முடியும்? அப்படியானால் ஏன் நீதிபதி அமர்ந்திருக்க வேண்டும்? நீதி தயவில் இருப்பதா? பக்கச் சார்பாக இருக்க மாட்டேன் என்று நீங்கள் செய்த சத்தியப் பிரமாணம் என்ன ஆவது? சட்டப் பிரகாரம் நடப்பேன் என்பதின் அர்த்தம் என்ன? எனக்குரிய தண்டனையை நான் சொன்னால் பின்பு ஏன் நீதிமன்றம்? எனக்குரிய தண்டனையை நான் சொன்னால் உங்களுக்கு அவமானம். நீங்கள் உங்கள் சத்தியப் பிரமாணத்தை மீற நான் காரணமாகலாமா? நீங்கள் சத்தியப் பிரமாணத்தை மீறினால் கடவுள் நிந்தனை செய்தவர்கள் ஆகிவிடுவீர்கள். கடவுளை நம்ப வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக்கொண்டதாகிவிடும். நான் உங்களை நம்புகிறேன் உங்களுக்கும், எனக்கும், எது நல்லதோ அதன்படி நடக்கட்டும். இங்கு அளிக்கப்பட்ட வாக்குகள் அதிக வித்தியாசத்தில் இல்லாமல் இருப்பது எனக்கு ஆச்சரியமாக

உள்ளது. எனக்கு என்ன நடக்கும் என்று எதிர்பார்த்தேனோ அது தான் நடக்கிறது. எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு தண்டனை இல்லை என்பது தெரிந்து, என்னையே எனக்கு தண்டனை வழங்கும்படி நீங்கள் கேட்டு, பின்பு நான் குற்றமற்றவன் என்று தீர்ப்பு வழங்காமல் தீர்ப்பு வழங்கிய உங்களுடன் சேர்ந்து எனக்கு எதிராக என்ன நடக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். பொறுமையாகக் கேளுங்கள்.

நீதிமன்றம் திடீரென்று கலைந்து மீண்டும் கூடியது.

திடீரென்று கலைந்து மீண்டும் மன்றம் கூடியது. அந்த மன்றம் மக்களால் நிரம்பி வழிந்தது. எல்லோரும் பீதியுடன் அமைதியாக இருந்தனர். சோக்கிரடீஸ் தன் பதில் வாதத்தைத் தொடர ஆயத்தமாகிறார். நீதிமன்றம் தீர்ப்பைக் கூறப் போவதாக அறிவிக்கிறது. என்ன நடக்கப்போகிறது என்பதை உணர்ந்திருந்த சோக்கிரடீஸ் சர்வ சாதாரணமாக, நிலை குலையாமல், தடுமாற்றமில்லாமல், தனக்குத்தான் தீர்ப்புக்கூறப் போகிறார்கள் என்பதைக்கூடக் கவனத்தில் கொள்ளாதவராகவே இருக்கிறார். சற்று சலசலப்பு நிலவிய அந்த நீதிமன்றம் மீண்டும் அமைதியானது.

**மரணதண்டனை திடீர் அறிவிப்பு:**

நீதிபதி: சோக்கிரடீஸ் உனக்கு மரணதண்டனை விதிக்கிறோம்.

(அங்கு கூடியிருந்தோர் இத் தீர்ப்பு தவறானது எனத் தங்களுக்குள் இரகசியமாகப் பேசிக்கொள்கின்றனர். அங்கு கூடியிருந்தோர் கண்களில் கண்ணீர் வழிகின்றது, சோகம் நிலவுகின்றது. சோக்கிரடீஸ் அதிர்ச்சி அடையவில்லை, ஆச்சரியப்படவில்லை, கலங்கவில்லை. வழமைபோல் தெளிவாகவே இருக்கிறார். தினமும் எப்படிச் சாதாரணமாக காணப்படுவாரோ அப்படியே இருக்கிறார். அவரில் வித்தியாசமான மாற்றம் எதுவும் இருக்கவில்லை.)

**சோக்கிரடீஸ் செய்த குற்றமென்ன?**

இவரது கருத்தால் இளைஞர்கள் கவரப்படுகிறார்கள், இளைஞர்கள் அதிகாரிகளைக் கேள்வி கேட்கிறார்கள். இவர் பின்னால் இளைஞர்கள் அணி திரளுகிறார்கள்,

கலகக்காரர்களாக மாறுகிறார்கள் என்பதே குற்றச்சாட்டு. இளைஞர்களுக்கு விழிப்புணர்வைக் கொடுப்பதை அதிகாரிகள் விரும்பவில்லை ஏனெனில் அவர்கள் வாதிடுகிறார்கள், வினோதமானவர்களாக மாறுகிறார்கள். உலகத்திலேயே உயர்ந்த சக்தி "நீ தான், உன்னைவிட உயர்ந்தது எதுவும் இல்லை, நீ முதலில் அறியவேண்டியது உன்னைத்தான், உன்னையே நீ அறிவாய்" என்று கூறுவதை மத நிந்தனை என்கிறார்கள். அரசைவிட, அதிகாரிகளை விட, பெரும் செல்வந்தர்களைவிட, இந்த ஏழைக் கட்டடக் கூலித் தொழிலாளியின் சக்தி உயர்ந்த தாக இருந்தது. அரசும் அரச அதிகாரிகளும் அச்சமடைந்தனர். இவரின் புத்திக்கூர்மை மிக வலுவானதாக இருந்தது. கிரேக்க நாட்டிலும், வெளிநாடுகளிலும் இவரது புகழ் பரவியது. சொல்வளம், அறிவியல், தத்துவம், விவாதம், தர்க்கவியல் எல்லாம் பெரும் நீர்வீழ்ச்சி போல் இவரிடம் இருந்து பாய்ந்து கொண்டேயிருந்தன. அஞ்சாமை, தலை வணங்காமை, துணிச்சல், புத்திசாதுரியம் போன்றன இயல்பாகவும், இயற்கையாகவும் தென்பட்டன. இவரது பேச்சு சிங்க கர்ஜனை போலானது.

**வழக்கை விசாரித்த நீதிபதி பின்வருமாறு கூறினார்:**

"நீங்கள் தண்டனையிலிருந்து தப்பிக்க நிபந்தனை தருகிறேன். எதென்ஸ் நகரைவிட்டு வெளியேறுங்கள், எக்காரணங் கொண்டும் எதென்ஸ் நகரிற்குத் திரும்பி வரக்கூடாது. இந்த நிபந்தனையை நீங்கள் ஏற்றால் உடனடியாக விடுதலை செய்யப்படுவீர்கள் அல்லது எதென்ஸ் நகரில்தான் வாழவேண்டும் என்று நினைத்தால் வாய்மூடி மௌனியாக இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்க முடியாதென்றால் நாளை சூரிய அஸ்தமன நேரத்தில் நீங்கள் விஷம் குடித்து இறக்கவேண்டும். வாழ்வா? அல்லது சாவா? என்பதை முடிவெடுத்துக்கொள்ளும். பொறுப்பு உம்முடையது."

*சோக்கிரடீஸ்: (உடனடியாகப் பதிலளித்தார்)*

**இறுதிமூச்சு உள்ளவரை உண்மைகளை உரைப்பேன்:**

"விஷம் தயாரானவுடன் அந்த நொடியில் அதனைக் குடித்து இறந்துவிட சித்தமாகவுள்ளேன். நான் அறிந்த உண்மைகளைச் சொல்லாமல் இருக்கமுடியாது. நான் உயிருடன் இருக்கும்வரை, என் இறுதி மூச்சு இருக்கும் வரை நான் அறிந்த

'உண்மைகளை' சொல்லிக்கொண்டேயிருப்பேன். என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எதென்ஸ் நகரை விட்டுச் செல்ல மாட்டேன். எனது எண்ணப்படி வாழ்ந்தேன். அதேபோல் என் மரணத்தையும் எதிர்கொள்ளப் போகின்றேன். நீதிபதி அவர்களே! நீங்கள் குற்ற உணர்வுகளைச் சுமக்காதீர்கள். எனது மரணத்துக்கு யாரும் பொறுப்பல்ல. நானே முழுப்பொறுப்பு. இப்படித்தான் நடக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். பொய்களிலும், ஏமாற்றுக்களிலும், மோசடிகளிலும் வாழ்ந்து வரும் ஒரு சமூகத்தில் உண்மைகளை உரைப்பது மரணத்தை இரு கைநீட்டி வரவேற்பதற்குச் சமம் என்பதை நான் அறிவேன். நான் வாழும்போது தனி மனிதனாக இருந்தேன், இறக்கும்போதும் அப்படியே இறப்பேன். எனக்காக யாரும் முடிவெடுக்க வேண்டியதில்லை. என் முடிவுகளை நானே எடுப்பேன்."

**மீண்டும் பிறப்பேன்:**

"மரணத்தின் பின் மரணித்தவர் எதுவுமே தெரியாத ஒருவராகலாம் அல்லது ஆன்மா (Soul) மீண்டும் பிறக்கலாம். மரணம் அழகானது. மறுபிறப்பு உண்மையானால் நான் மீண்டும் பிறப்பேன், . அப்போது மரண தண்டனை வழங்கிய நீதியின் நிலை என்ன? நான் பல தடவை மரணிக்க விரும்புகிறேன். பிழையான தீர்ப்புக்கள் மூலம் மரண தண்டனை பெற்றவர்களைச் சந்திப்பேன், அப்போது அங்கு விவாதிப்போம். எங்கள் அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வோம். இந்த நீதிமன்றில் உள்ள நீங்களும் மரணத்தைப்பற்றி தெளிவடைய வேண்டும். மரணத்தைப் பற்றிய நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

என் மகன் வளர்ந்தபின், அவன் தான் 'உண்மை' என்று உணரும் உண்மைகளை கூறினால், அவனுக்கு மரண தண்டனை வழங்குங்கள். நீங்கள் நீதியாக நடந்து கொண்டதாகவே இருக்கட்டும்! நான் இறப்பதற்கானதும் நீங்கள் வாழ்வதற்கானதும் நேரம் இதுவே. இதில் யார் சரியானவர்கள் என்பது யாருக்கும் தெரியாமல் இருக்கலாம், ஆனால் 'உண்மைக்கு' மட்டும் தெரியும்."

(சோக்கிரடீஸின் மாணவர்கள் இவரைச் சிறையிலிருந்து மீட்க எடுத்த முயற்சிகளை நிராகரித்து சிறையிலிருந்து தப்பிச் செல்ல மறுத்துவிட்டார். தீர்ப்புக்கும் மரண தண்டனை நிறைவேற்றலுக்கும் இடையில் சிறையில் இருந்தபோதும் தன்னைச் சந்திப்பவர்களுடன் கருத்தியல், அறிவியல் பரிமாற்றம் இறக்கப்போகும் கடைசி நிமிடம் வரை செய்து கொண்டுதான் இருந்தார். சிறைக் காவலாளி சிறைக் கதவைத் திறந்து அவரை தப்பிப் போகும்படி கூறியும் இவர் மறுத்து விட்டார்.)

(உண்மைகளைக் கூறிக்கொண்டிருந்த தத்துவ மேதையைச் சமுதாயம் தண்டித்து மரணதண்டனை விதித்து விஷமும் கொடுத்தது. 'உண்மைகளை' விசாரிப்பதற்குச் சமுதாயம் உண்மையானதாக இருக்கவேண்டும்!)

**மரணத்தை எதிர்கொள்ளல்:**

மரணமாகும் அன்று எந்தக் கவலையும் இல்லாமல் தனது கை, கால்களை மசாஜ் செய்துகொண்டிருந்தார், இலேசான உடற்பயிற்சியும் செய்தார். இறக்கும் அந்தத் தருணத்திலும் தனது வழமையான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டுதான் இருந்தார். (சூரிய அஸ்தமனம்தான் இங்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் நேரமாகும். சூரிய அஸ்தமன நேரம் ஆகிவிட்டது, விஷம் காலதாமதமாகிறது.)

**விஷம் தாமதமாவதற்கு கண்டனம்:**

**சோக்கிரடீஸ்:**

உற்சாகத்துடன் கேட்டார்: 'ஏன் தாமதம்?' தாமதத்தை கண்டித்தார். சூரியன் மறையத் தொடங்கிவிட்டது, விஷத்தை விரைவில் கொண்டு வாருங்கள் என விரைவுபடுத்திக் கொண்டிருந்தார். (அந்த அதிகாரிக்கு ஆச்சரியம். மரணத்தைக் கூட உற்சாகத்துடன் வரவேற்கிறாரே, எந்த மனிதராவது தனது மரணத்துக்கு அவசரப்படுவாரா?

ஆனால் சோக்கிரடீஸ் அவசரப்பட்டார். தாமத மாகுவதைத்தான் எந்தக் கைதியும் விரும்புவார். அந்தச் சில நிமிடங்களிலாவது மரணதண்டனை ரத்துச் செய்யப்படலாம்

அல்லவா! விஷம் கொடுக்கும் அந்த அதிகாரி சோக்கிரடீஸ் மீது மரியாதை கொண்டவர். நீதிமன்றத்தில் சோக்கிரடீஸின் பேச்சில் இருந்த உண்மைகளை உணர்ந்தவர். இவ்வளவு சிறந்த சிந்தனையாளர் உலகில் வேறு யாருமே இருக்க முடியாது. இவர் ஒரு பொக்கிஷம், பாதுகாக்கப்பட வேண்டியவர். இந்த அறிவாளி இறப்பதை அவரது மனது ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த மாமேதைக்குத் தனது கையால் விஷம் தயாரிப்பது அவருக்கு வேதனையாக இருந்தது. வேண்டுமென்றே தாமதமாக்கிக்கொண்டிருந்தார். இந்த மேதை இப்பூமிக்கு வேண்டியவர், சிறிது கூடிய நேரமென்றாலும் வாழட்டுமே என்பது தான் அவரது நோக்கம். ஆனால் ஞானம் நிறைந்த இந்த அற்புத மனிதர் விஷத்தை உடனே கொண்டு வா என்று கோரிக்கை விடுத்தார்.)

**கிறிற்ரன்** (Criton): சோக்கிரடீஸின் மாணவரான இவர் சிறையிலிருந்து தன் குருவைத் தப்ப வைப்பதற்கு முயற்சி செய்தவர். இவரைக் கண்டித்துவிட்டார் சோக்கிரடீஸ். மரண தண்டனை நிறைவேற்றப்படும் தினம் அங்கு அழுதபடி பிரசன்னமாகியிருந்தார்.

**சோக்கிரடீஸ்:** கிறிற்றனை அழைத்தார். "நேரம் தாமதமாகிறது, விஷம் குடிக்க வேண்டிய நேரம் தவறப் போகிறது, போய் அவர்களுக்கு நேரத்தை ஞாபகப்படுத்தி விடு" என்றார்.

**கிறிற்ரன்:** சூரியன் இன்னும் மறையவில்லை, மலைமீது சூரியன் நிற்கிறது, இன்னும் சூரியன் அஸ்தமனம் ஆகவில்லை என்றார்.

**சோக்கிரடீஸ்:** "நாலா பக்கமும் பார்த்தார், சூரியன் மறைந்துவிட்டது" என்றார்.

**கிறிற்ரன்:** சூரிய அஸ்தமனத்துக்குப் பின்னர்தான் விஷம் தயாரிப்பார்கள். மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன் மாலைச் சாப்பாடு, அத்துடன் உற்றார், உறவினர், நண்பர்கள், விருப்பத்துக்குரியோர் எல்லோரிடமும் பழகி, கதைத்துப் பேசி மகிழ்ந்து, இரவு நேரம் தாமதமாகித்தான் விஷம் கொடுப்பார்கள், நீங்கள் அவசரப்படாதீர்கள்.

**சோக்கிரடீஸ்:** மற்றவர்கள் அப்படிச் செய்வதற்கு நல்ல காரணங்கள் இருக்கிறது. எனக்கு அது பொருந்தாது. ஏன் நான் அதைச் செய்யமாட்டேன் என்பதற்கு என்னிடம் தக்க காரணங்கள் உண்டு. கால தாமதமாகி விஷம் குடிப்பதற்கும், காலதாமதமாக முன் விஷம் குடிப்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? காலதாமதமாகி விஷம் குடிப்பதால் நான் எதையும் அடையப்போவதில்லை! கிறிற்ரன், தயவுசெய்து நான் சொல்வதைச் செய். விஷத்தை தாமதமாக்க வேண்டாம் என்று போய்ச் சொல்!

**கிறிற்ரன்:** விஷம் தயாரித்துக்கொண்டிருப்பவர்களைச் சற்றுத் திரும்பிப் பார்த்துவிட்டு அழுதுகொண்டு விலகிப் போனார்.

**விஷம் கொடுக்கும் அதிகாரி:** விஷக் கிண்ணத்துடன் அருகாமையில் வந்தார்.

**சோக்கிரடீஸ்:** இங்கே வருகிறார் என் அருமை நல்ல நண்பன். நீங்கள் கடமையில் தாமதமாகக் கூடாது. உங்கள் நீதிமன்றப் பிரகாரம் நான் என்ன செய்யவேண்டும் என்பதைக் கூறுங்கள். உங்கள் கடமையின் பிரகாரம் நான் அதை நிறை வேற்றுவேன், கூறுங்கள் என்றார்.

**அதிகாரி:** சில விஷத்துளிகளை கிண்ணத்தினுள் ஊற்றுவேன், பிரார்த்தனையுடன் அதை இறைவனுக்குக் காணிக்கையாக நிலத்தில் ஊற்றுங்கள். பின்பு உங்கள் கிண்ணத்தை விஷத்தால் நிரப்புவேன், குடித்த பின்பு நடவுங்கள், உங்கள் கால்கள் தளர்ந்தவுடன் படுத்துக் கொள்ளுங்கள். விஷம் சரியாக வேலை செய்யும். (அவர் சொன்னபடியே சில விஷத் துளிகளைக் கிண்ணத்தினுள் ஊற்றினார், சோக்கிரடீஸ் அதிகாரியின் கட்டளைப்படி செய்து கொண்டார்.)

(பின்பு கிண்ணத்தை விஷத்தால் நிரப்பி சோக்கிரடிஸிற்கு முன் நீட்டினார், கைகளில் எவ்வித பதற்றமுமில்லை, மனதில் சஞ்சலமுமில்லை, நிற்கும் நிலையில் தயக்கமுமில்லை, மலர்ந்த முகத்துடன் வெற்றிக் கோப்பையைப் பெறுவது போல் விஷக் கிண்ணத்தை ஆர்வத்துடன் இரண்டு கைகளாலும் பெற்றுக் கொண்டார் சோக்கிரடீஸ்.)



**சோக்கிரட்டீஸ்:** இறைவனுக்கு நன்றியாக பிரார்த்தனை செய்ய இந்த மன்றம் என்னை அனுமதித்திருக்கிறது என்று கூறிக்கொண்டு பழரசம் அருந்துவது போல் விஷத்தை ஆனந்தமாகப் பருகினார். (அங்கு பிரசன்னமாயிருந்த அனைவரும் கதறி அழுதனர். சோக்கிரடீஸின் நண்பர்களான அப்பலோடொறஸ் (Apllodoros), கேப்ஸ் (Cebes), சிமியஸ் (Simmias), பைய்டன் (Phaidon), கிறிற்ரன் (Criton) கதறியழுதனர். அன்று இவரின் முக்கிய மாணவன் பிளேட்டோ அங்கு பிரசன்னமாகி இருக்க விரும்பவில்லை, அவரது தப்பவைக்கும் முயற்சிகளையும் சோக்கிரட்டீஸ் நிராகரித்துவிட்டார். அந்த மன்றில் அழாத ஒரேஒருவர் சோக்கிரடீஸ் மட்டும்தான், மிகக் கம்பீரமாக நின்றார். அழுதவர்களைப் பார்த்து 'நிறுத்துங்கள்!' எனச் சிங்கம் போல் கர்ஜித்தார். 'அமைதியாக இறக்க என்னை அனுமதியுங்கள்' எனக் கதறி அழுதுகொண்டிருந்தவர்களைப் பார்த்து உரக்கக் கூறினார். அங்குத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த மனைவியைப் பார்த்து அழவேண்டாம் என்றார்.

(இது கம்பீரம், இது வாய்மை, இப்படித்தான் மனிதர்கள் வாழவேண்டும். இப்படிப்பட்ட மனிதர்கள் இந்த உலகத்தில் இருந்தால் இந்த உலகம் எவ்வளவு நிறைவாக இருக்கும். உலகம் இருக்கிறது ஆனால் தனிமனிதர்கள் தொலைந்துவிட்டார்கள்.

எப்பொழுது ஒருவர் தன் வாழ்வுக்கும், செயலுக்கும், இருப்புக்கும் பொறுப்புக்களை எடுத்துக்கொள்கிறாரோ, அந்தக் கணத்தில்தான் அவர் தனி முழு மனிதராகிறார்.)

சோக்கிரடீஸ் வாதமுறை சார்ந்தவர், தர்க்க ரீதியானவர், விஷம் தன்னைக் கொல்லும் என்பதை நன்கு அறிந்தவர். நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர் போலக் கூறத் தொடங்குகிறார்.

**சுய மரண நேரடி வர்ணனை:**

**[உலகில் நேரடி வர்ணனையின் முன்னோடி - சோக்கிரடீஸ்]**

விஷம் வேலை செய்யத் தொடங்கிவிட்டது என்று ஆரம்பிக்கிறார்.

"எனது கால்கள் மரத்துவிட்டன, மேலேறிக்கொண்டு செல்கிறது. (அவருடைய அறிவுத்திறன் நன்றாகவே இப்போது இருக்கிறது.) எனது உடம்பில் பாதியளவு மரத்துவிட்டது. (சீடர்கள் அழுகிறார்கள்.) அழுகையை நிறுத்துங்கள்! விஷம் ஏறுமுகமாகச் செல்கிறது. சீக்கிரமே என் இதயம் பாதிப்படைந்துவிடும்." அவர் தொடர்கிறார். "இதயம் நின்றாலும் என் மனம் செயல்பட்டுக்கொண்டேயிருக்கும். பிரதானமானது இதயமா?, மனமா? என்பது இப்போது தீர்மானிக்கப்பட்டுவிடும்." மேலும் தொடர்கிறார், "என்னுடைய இதயம் பலவீனமாகி தாழ் நிலைக்குச் சென்றுகொண்டிருக் கிறது. நான் உணர்வதை விவரிக்க முடியாமல் என் நாக்கு விறைக்கத் தொடங்குகிறது. என் அனுபவத்தை விவரிக்க முடியாமல் போகலாம்.

யாரோ ஒருவர் குறுக்கிட்டார்: "சோக்கிரடீஸ், நீ மரணத்தைக் கண்டு பயப்படவில்லையா?"

சோக்கிரடீஸ் பதில்:

"இரண்டு காரணங்களால் பயப்படவில்லை, சோக்கிரடீஸ் முழுமையாக இறக்கப்போகிறான், பிறகு பயப்படுவதற்கு அவர் இருக்கமாட்டார், அல்லது சோக்கிரடீஸ் இறக்கப் போவதில்லை. 'ஆன்மா' வாழ்ந்திருக்கும் எனில் எதற்காகப் பயப்படவேண்டும்?" என்றார். இவரது கண்களும் ஏதோ சொல்லிக்கொண்டேயிருந்தன.

அங்குப் பிரசன்னமாயிருந்த ஒருவர்:

"ஐயா, நீங்கள் உற்சாகமாக இருக்கிறீர்கள் இன்னும் சில நிமிடங்களில் இறக்கப்போகிறீர்கள்" என்று கண்ணீர் மல்க கேட்டார்.

**தெரிந்தது வாழ்வு, தெரியாதது மரணம்:**

சோக்கிரடீஸ் சிரித்தார். தெரிந்தது பிறப்பு, தெரியாதது இறப்பும் இறப்புக்கு அப்பாலும். அதை அறியத்தான் விரைவில் விஷத்தைக் கொண்டு வாருங்கள் என்றேன். வாழ்வைப் பற்றித்

தெரியும். வாழ்வு அழகானது, என்ன செய்யவேண்டும் என நினைத்தேனோ அவை அனைத்தையும் செய்துவிட்டேன். என்ன சொல்லவேண்டும் என்று நினைத்தேனோ அவை எல்லாம் சொல்லிவிட்டேன். எனக்கு வாழ்வு தெரியும், இப்போது மரணத்தை அறிய ஆவலாக உள்ளேன், தெரியாதது மரணம்தான். இறந்தபின் இரண்டு சாத்தியக்கூறுகள் உண்டு.

கீழைநாட்டு (இந்தியா?) ஞானிகள் கூறுவதுபோல் என் ஆன்மா வேறு வடிவத்தில் வாழலாம். உடலிலிருந்து விடுபட்டு உயிர் தன்போக்கில் பயணிப்பது எவ்வளவு சுகமானது. அல்லது மேற்கத்திய ஞானிகள் கூறுவது போல் நான் இறந்தவுடன் எல்லாம் முடிந்து போகலாம், இதுகூட ஒரு பேரானந்தத்தின் நிலைதான். 'இருப்பது' என்றால் என்ன என்று எனக்குத் தெரியும். 'இல்லாமல் இருப்பதை' அறியப்போகிறேன். இன்னும் சில விநாடிகளில் இல்லாமல் இருப்பதை உணரப் போகிறேன். நானே இல்லை என்றால் பிரச்சினைதான் என்ன? நான் ஏன் கவலைப்பட வேண்டும்? கவலைப்படத்தான் நான் இருக்கப்போவதில்லையே? (சோக்கிரடீஸின் மனைவி கதறி அழுதார், மனைவியை அங்கு இருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார், மனைவி கதறி அழுதுகொண்டு வெளியேறினார்.)

தன்னைத் தானே விரும்பும் ஒரு மனிதனால்தான் இப்படிப் பேசமுடியும். தனது மரணத்துக்கான பொறுப்பைக் கூட சோக்கிரடீஸ் விரும்பி ஏற்றுக்கொண்டார். நீதிமன்றம் அவர் மீது எந்தக் குற்றத்தையும் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ளாமல் ஏனோதானோ என்று பட்டும்படாமல் சொல்லிக் கொண்டது. இளைஞர்களின் மனதை தன் கருத்துகள் மூலம் தூண்டுகிறார், மதக் கருத்துகளுக்கு விரோதமான கருத்துகளைக் கூறுகிறார், இவைதான் இவரது குற்றச்சாட்டு.

மக்களுக்கு அவர்மேல் ஒரு தவறான அபிப்பிராயம் இருந்தது. சாதாரண அறிவுள்ள மக்களால் அவரை அறிந்து கொள்ள முடியவில்லை, புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு மனிதனின் அறிவு, தெளிவு, ஞானம் ஆகியன எவ்வளவு உயரத்துக்குச் செல்ல முடியுமோ அவ்வளவு உயரத்தில் இவர் இருந்தார். புரிய முடியாத முட்டாள்கள் கொடுத்ததுதான் மரண தண்டனை. சோக்கிரடீஸின் பதில்வாதத்திற்கு ஒருவர்

கூட பதிலளிக்கவில்லை. நீதிமன்றில் அழகாகத் தகர்த்தெறிந்தார். கிரேக்க நாட்டில் பெயரளவுக்காவது ஜனநாயகம் இருந்த படியால்தான் சோக்கிரடீஸால் எதிர்த்துப் பேச முடிந்தது. சோக்கிரடீஸின் கருத்துக்களைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாக அன்று உலகில் எவருமே இருக்கவில்லை!. அதனால் அவர் ஆபத்தானவர் எனவும், அவருக்கு விஷம் கொடுத்துக் கொல்லவேண்டும் என்றும் எதென்ஸில் தீர்மானிக்கப்பட்டது.

சோக்கிரடீஸ் இல்லை என்கிறபோது எதற்காகப் பயப்பட வேண்டும்? சோக்கிரடீஸின் சரீரத்துக்கு மாத்திரமே இறப்பு. அதாவது "உடலுக்குத்தான் மரணம், நான் மீண்டும் பிறப்பேன், நான் இருப்பேன், நான் இறக்கமாட்டேன், எதற்காகப் பயப்படவேண்டும்" என்கிறார். இவர் தர்க்க சிந்தனை யுடையவர். மதநம்பிக்கை இல்லாதவர். தீவிர செயல்வேகம் கொண்டது அவரது சிந்தனை. இறக்கும்போது கூட விளக்கம் கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்.

*(புத்தர் 'மரணம் சரீரத்திற்கு, ஆன்மா வாழும்' என்கிறார்.)*

*(மஹாவீரர் 'எவரும் இறப்பதில்லை, உடல் இறக்கிறது' என்கிறார்.)*

இவர்கள் யாவரும் மரணத்ததைப் பற்றிய அச்சம் அர்த்தமற்றது என்கின்றனர். தரமான மேற்கத்திய சிந்தனையை உருவாக்கியவர் சோக்கிரடீஸ். அவர் சமய நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை உடையவரல்லர். அவர் முற்றிலும் ஆய்வறிவு சார்ந்தவர். அவர் மரணத்தையும் கூட சோதிக்கிறவராகத்தான் இருந்தார். அவர் எதையும் ஆய்வு செய்பவராயிற்றே!

**உண்மை மௌனமானது, உண்மையின் குரல் மரணித்தது:**

சோக்கிரடீஸ் தொடர்கிறார் "எனது இதயம் பலவீனமாகி, தாழ்வு நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது. சீக்கிரமே நான் உணர்வதை விவரிக்கமுடியாமல் போய்விடும், எனது நாக்கு உணர்வற்று மரத்துக்கொண்டு போகிறது, எனது பேச்சு தடைப்படுகிறது, இதயத்துக்கு அருகே விறைப்புத் தன்மை வந்ததும் நான் இறந்துவிடுவேன். வயிற்றில் குளிர் விறைப்பு ஏற்பட்டுவிட்டது. (தன் உடல் மேலே போட்டிருந்த சால்வை



போன்ற போர்வையைத் தூக்கி எறிந்தார்.) அங்கே பிரசன்னமாயிருந்த தனது மாணவரான கிறிற்ரனை (Criton) அழைத்தார், அவரிடம் கூறினார் "அஸ்லிபோஸிற்கு (Asclepios) சேவல்கோழி கொடுக்கவேண்டும்" (அஸ்லி போஸ் என்பது விக்கினங் களை நீக்கும் கடவுளாக கிரேக்க நாட்டில் கருதப்படுகிறது. மரணமான ஏழைகள் சார்பில் சேவல்கோழியை காணிக்கையாக அக்கோயிலுக்கு கொடுப்பது வழக்கமாகும். அந்த ஊர் வழமையையும் கூட அவர் இறுதி நேரத்திலும் மீறவில்லை) அதை மறந்துபோகாமல் கொடுத்து விடு" என்றார். (இதுதான் அவர் கடைசியாகப் பேசிய வசனம்) "வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" என்றார் கிறிற்ரன். சோக்கிரடீஸ் பேச முயற்சி செய்கிறார், ஆனால் முடியவில்லை. கண்களின் அசைவால் சொல்ல முயற்சி செய்கிறார், முடியவில்லை. படுத்துக்கொண்டார், உயிர் பிரிந்துவிட்டது.

மாணவன் கிறிற்ரன் தனது 'குரு'வின் கண்களையும் வாயையும் மூடிவிட்டார்.

- ஆம்! துருவித் துருவிப் பார்த்த 'கண்கள்' மூடப்பட்டன. தர்க்கவியலை மேற்குலகுக்கு அறிமுகப்படுத்திய 'வாய்' மூடப்பட்டது
- ஆம்! உண்மையை உரைத்த 'வாய்' மூடப்பட்டுவிட்டது. உண்மையின் குரல் மரணித்துவிட்டது.
- ஆம்! உண்மையின் மொழி 'மௌனம்' என்பது புரிந்து விட்டது.

சோக்கிரடீஸ் எதையும் இழக்கவில்லை!

ஆனால் இந்த 'உலகம்' அவரை இழந்துவிட்டது.

## அத்தியாயம் 50

# மீராபாய் : சோக்கிரடீசை ஜெயித்த விஷம் ஏன் மீராபாயிடம் தோற்றது?



Meerabai

இந்தியாவில் ராஜஸ்தானைச் சேர்ந்த மீராபாய் அவர்களின் வரலாறு எமக்கு அளிக்கும் செய்தி உளவியல் காரணியே (psychological fact). மீராபாய் தன் உணர்வு மனம் இல்லாமலே செயல்பட்டார். விஷத்தை அருந்தும்போது எந்தவித சந்தேகமும் இல்லாமல், இது விஷம், தான் குடித்தால் இறந்துவிடுவேன் என்கின்ற எண்ணமும் இல்லாமல் வெறுமையான மனதுடன் செயல்பட்டார். அறிதுயில் (hypnotic state) நிலையில் தன்னை ஒப்படைத்தார். அதாவது கிருஷ்ணர் 'தனக்களித்த வெகுமதியாகக் கருதி ஏற்றுக் கொண்டார்.' நல்ல செயலாக உணர்ந்தார், பாடினார், நடனமாடினார். மரணத்தைப் பற்றிய எண்ணம் சிறிதளவும் இவருக்கு இருக்கவில்லை. எனவே விஷம் செயலற்றுப்போனது. விஷம் தொழிற்படுவதற்கு மனம் தேவை.

இதேபோல நோய் சுகமாக வேண்டும் என்ற மனம் நோயாளிக்குத் தேவை. நோயாளி ஒருவருக்கு மருந்து செயல்படவேண்டுமாயின், சிகிச்சை குணப்படுத்தும் என்ற மனம் தேவை. அந்த நம்பிக்கை இல்லையேல் எந்த வித மருந்தும் பயனளிக்காது, எந்த மருத்துவரது சிகிச்சையும் குணமளிக்காது. 'நம்பிக்கை'தான் மருந்து. அந்த மனம் இல்லையென்றால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது.


Sigmund Freud

உளவியல் நிபுணர் சிக்மன் பிஃரொயிட் (Sigmund Freud) மரணத்தைப்பற்றி குறிப்பிடும்போது கூறுகிறார்: "மனதில் எங்கோ ஒரு மூலையில் மரணபயம் பதிந்துவிட்டது. அந்த மரண எண்ணம் மனதில் இல்லாமலிருந்தால் மரணமாகிற வாய்ப்பும் இருக்காது. தாயின் எண்ணத்தின் ஊடாக வயிற்றிலிருக்கும் சிசுவுக்கும் இவை கடத்தப்படுகிறது" என்கிறார்.

சோக்கிரட்டீஸ் வாதமுறை சார்ந்தவர், தர்க்கவாதி. இறப்பதற்காகவே விஷம் குடித்தவர். மரண அனுபவத்தை அனுபவிக்க ஆவலாக இருந்தவர். மரணத்துக்கு அப்பால் என்ன என்று அறிய ஆவலாக விஷம் குடித்தவர். தாமதமாகாமல் விஷத்தை அருந்தி, தாமதமாகாமல் உயிரையும் விட சித்தமாக இருந்தவர்,

சோக்கிரட்டீஸ் மரணத்திற்குத் தயாராகவே இருந்ததால். 'விஷம்' இவரது மரண விருப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஜெயித்துவிட்டது. அதே நேரத்தில் மீராவிடம் மரண பயத்திற்கே இடமில்லை, மரண எண்ணமேயில்லை. அதனால் விஷம் தோற்றுவிட்டது.

அறிதுயில் நிலையை ஏற்படுத்தக்கூடியது வசியக்கலை (Hypnosis). அறிதுயிலில் அதாவது உறக்கநிலையில் இருக்கும்போது, ஒருவரது மனம் அவருடைய வசமாக இருப்பதில்லை, பதிலாக அவர் அறிதுயிலுக்குட்படுத்தியவரது உத்தரவுகளுக்குக் கட்டுப்படுகிறார். வசியக்கலை விற்பன்னர் (Hypnotist) அல்லது அறிதுயில் போன்ற நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒருவர் எது சொன்னாலும் அறிதுயில் மனம் நம்பும். அந்த மனதுக்கு விரோதத்தை ஊட்டினால் விரோதம் அடிமனதில் போய்ப் பதிந்துவிடும். பின்பு அதன் வழியில் செயல்படுத்துவது சுலபமாகிவிடும். அந்த மன நிலையில் உள்ளவரது மனதைச் சுலபமாக கட்டுப்படுத்திவிடலாம்.

போலி மடாலயங்களில், போலிச் சுவாமிமார்கள் லட்டில், பிரசாதத்தில், பழரசத்தில், உணவில் போதை வஸ்துக்களை தந்திரமாகக் கலந்து கொடுத்து பக்தர்களை போலி பரவசநிலைக்கு அழைத்துச் செல்கிறார்கள் என நினைக்கிறேன்.

இது ஆன்மிகமில்லை, இது போதைவஸ்தின் குண இயல்பே ஒழிய பக்திமார்க்கம் இல்லை. இது தண்டனைக்குரிய குற்றம். இந்தப் போலி நிலை மனிதனை தாழ்வு நிலைக்கு இட்டுச் செல்லும்.

மனவழி மூலம் எவரும் உயர்நிலைக்குச் செல்லலாம், சாதனையாளராகலாம், மேதையாகலாம். இவை அனைத்திற்கும் மனம்தான் காரணமாகும். மகான்கள், யோகிகள், சித்தர்கள், ஞானிகள் தங்கள் மனதைக் கடந்து பரவச நிலையை அடைந்தார்கள். அந்தப் பரவச நிலை மேல் நிலையானது, அந்த நிலை என்றும் மேல் நிலைக்கு இட்டுச் செல்லும்.

உயர் நிலை, தாழ்நிலை, வாழ்வு, மரணம், துக்கம், கவலை, சந்தோசம், மகிழ்ச்சி, ஏமாற்று, மோசடி, கொள்ளை, பயம், பீதி, மனஉளைச்சல், மனச்சிதைவு, மனக்கசிவு, துணிச்சல், வீரம், துறவறம், ஆன்மிகம் எல்லாமே மனம் சார்ந்தவை. வாழ்வை மனம்தான் தீர்மானிக்கிறது, அமைக்கிறது.

## அத்தியாயம் 51

# அன்னை சாரதாதேவி : பகவானின் பிரிவு மௌன மனதில் மாற்றம் இல்லை



**ப**கவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவர்களின் உடலிலிருந்து உயிர் பிரிந்த பின்பும் (16.08.1886) அன்னை சாரதாதேவி அவர்கள் கணவருக்கான பணிவிடைகள் செய்துகொண்டேயிருந்தார்.

கணவர் இறந்தபின் அக்காலத்தில் விதவைகள் கடைப்பிடித்து வந்த மரபுகளை அன்னை அவர்கள் கடைப்பிடிக்க மறுத்தார். தன் கணவர் இறந்ததாக மற்றவர்களுக்குத் தெரியலாம். ஆனால், அவர் தன்னுடன் பேசிக்கொண்டு இருக்கிறார். அவர் இறக்கவில்லை என்றார். அவரது 'உண்மை நிலை' தன்னுடன் இருப்பதாகக் கூறினார். பகவான் இராமகிருஷ்ணரது உடலை எடுத்துச்செல்கிறார்கள் என்று கூறியபோது அவரது 'தோற்றத்தை எடுத்துச் செல்லவில்லை' என்றார்.

அன்னை அவர்கள் தன் கணவருக்கு எப்படி உதவியாக இருந்தாரோ அதேபோலத் தனது மரணத்தைச் சந்திக்கும்வரை அப்பணிகளைத் தொடர்ந்து செய்தேவந்தார். இவற்றைப் பார்த்த பலர் இவருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதாகக் கூறினார்கள். இவரது வழிபாட்டையும், போதனைகளையும் கவனித்த பின்பு அவ்வாறு நினைத்தவர்கள் தங்கள் முடிவை மாற்றிக்கொண்டனர். பகவான் இராமகிருஷ்ணரது

தோற்றத்தைக் கணத்துக்குக்கணம் உணர்ந்துகொண்டே யிருந்தார்.

மௌனமாக ஒருங்கே இருக்கும் மனதில் மரணம்கூட எந்தவிதமான வேறுபாட்டையோ, விலகுதலையோ உண்டாக்க முடியாது.

## அத்தியாயம் 52

# கபீர்தாஸ் (Kabirdas) : மரணித்து மலரானார்



இவர் இந்தியாவில் பெனாரிஸ் நகரில் *(1398-1518)* 120 ஆண்டுகள் வாழ்ந்தவர். கபீர்தாஸ் அவர்கள் முகமதியராகப் பிறந்தார், இந்து வாக வளர்க்கப்பட்டார். இவர் ஏழை நெசவுத் தொழிலாளியாகவே காலம் முழுவதும் வாழ்ந்த ஒரு சூ:.பி ஞானி. தனது தள்ளாத வயதிலும் செய்யும் தொழிலே தெய்வம் என்று வாழ்ந்தவர். இவர் ஒரு கவிஞரும் கூட. எந்தவொரு மசூதிக்கோ, இந்துக் கோவிலுக்கோ, ஆலயத்துக்கோ, தேவாலயத் துக்கோ அல்லது எந்தவொரு வணக்கஸ்தலத்திற்கோ, ஒரு நாளாயினும் சென்றதில்லை. இவர் தான் ஒரு ஞானி என்பதையே அறியாமல் வாழ்ந்த ஞானியாவார். மக்கள் இவரைச் சுவாமி என்றனர், ஞானி என்றனர். இவரது பார்வைபட்ட மக்கள் தங்களுக்குள் உள்மாற்றமடைந்தனர். இவர் முன்னிலையில் மக்கள் அமர்ந்திருந்தபோது தங்களையறியாமல் ஒரு ஈர்ப்படைந்தனர். அந்த மக்களை அமைதியும் ஆனந்தமும் கவ்விக்கொண்டது. இந்துக்கள் இவரை இந்துவென்றும், முகமதியர்கள் இவரை இஸ்லாமியர் என்றும், சூஃபி தத்துவத்தைப் பின்பற்றும் மக்கள் இவரைச் சூஃபி ஞானி என்றும் அழைத்தனர். ஆனால் இவர் தனக்கென்று மதரீதியாக எந்தவிதமான அடையாளமுமில்லாமல் தான் ஒரு சுவாமி என்பதே தெரியாமல் வாழ்ந்த மகான்.

இவர் தான் இறந்தபின் குழப்பம் ஏற்படலாம் என்பதால் அதைத் தவிர்ப்பதற்காக மரணத்திற்கு முன் ஒரு செய்தியை விட்டுச் சென்றார். தனது உடல் இறந்தவுடன் முழு உடலையும் காகிதத்தால் மூடிவிடும்படி வேண்டியிருந்தார். அவரது வேண்டுகோளைச் சீடர்கள் நிறைவேற்றினர். முகமதியர்களும், இந்துக்களும் தங்கள் மத முறைப்படி இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். கபீர் அவர்களின் உடலை யார் பொறுப்பெடுப்பதென்று இந்துக்களும், இஸ்லாமியர்களும் கூடித் தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்து அவரது உடலை மூடியிருந்த காகிதத்தாள்களை நீக்கியபோது கபீர் அவர்களின் உடலை அங்குக் காணவில்லை. அவரது உடல் இருந்த இடத்தில் மலர்கள் இருந்தன. அவரது உடலுக்காக விவாதித்தவர்கள் இப்போது ஒருங்கிணைந்து எந்தவித மத வித்தியாசமுமில்லாமல் அந்த மலர்களைத் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டனர்.

இது ஒரு கதையாகத்தான் இருக்கமுடியும். இவர் வாழ்ந்தபோதும் இறந்தபோதும் இவரை இந்துவா, இஸ்லாமியரா எனப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் எந்தவித வேறுபாடுமில்லாதவராகத் தனக்குள்ளே மலர்ந்துகொண்டிருந்தார். இவர் தனக்குள்ளே தன்னுணர்வாக மலர்ந்தார்.

ஒருவருக்குள் தன்னுணர்வு நிலை மலர்ந்தபின் உடல் இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றே. மகான் கபீர்தாசர் அவர்களின் உடலை மூடிவைத்திருந்த காகிதத்தாளை நீக்கியதும் அங்கே மலர்கள் மட்டுமே இருந்தன. தன்னைத்தானே அறிந்து கொண்ட ஒரு மனிதன் எந்த மதமும் இல்லாதவர், எந்தக் கோட்பாடும் இல்லாதவர். அவர் ஒரு முழுமையான மனிதனாக மலர்கிறார் என்பதை இக்கதை தத்துவார்த்தமாக விளக்குகிறது..

இவர் தன் காலத்து நாகரிகமறியாதவர், கல்வி கற்றுக் கொள்ளாதவர், திருமறைகளில் நாட்டம் இல்லாதவர் செய்யும் தொழிலே இவரது வழிபாடு. இவர் வேறெதையும் அறியாத அந்த வெறுமையில் (Emptiness) ஒன்றுமில்லாமையில் (Nothingness) இவ்வுலகில் சாதாரணமாகவே மலர்ந்தார்.

# பாகம் - 4

## பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பால்...

(Beyond birth and death...)

## அத்தியாயம் 53

# மதங்கள்: மனிதர்களை 'மரணத்திற்கப்பால் அழைத்துச் செல்ல வேண்டும்'



Buddha

**பு**த்தரிடம் ஒரு பெண் அழுது கொண்டே தனது கைகளில் இறந்து போன அவளுடைய மகனின் உடலுடன் சென்றாள். அவளின் மனதில் புத்தர் ஏதாவது அற்புதம் செய்து மகனை உயிர்பெற்றெழச் செய்வார் என்ற எதிர் பார்ப்புத்தான் இருந்தது. புத்தர் இருந்த அந்தக் கிராமம் கடுகு உற்பத்திசெய்யும் கிராமம். எப்பொழுதும் தேவையானளவு கடுகைப் பெற்றுக்கொள்ளலாம். புத்தர் அவளிடம் "ஊருக்குள் சென்று கடுகு எடுத்துவா, அத்துடன் இறப்பு நடை பெறாத வீடாக இருக்கவேண்டும்" என்றார். அந்தப் பெண்ணுக்கு மிகவும் சந்தோஷம், காரணம் அக்கிராமத்தில் அது பெரிய விடயமல்ல. அப்பெண்மணி ஊர் முழுக்கச் சென்றார். தனது கோரிக்கையுடன் வீடுவீடாகக் கதவைத் தட்டினார். அனைத்து வீடுகளிலிருந்தும் "கடுகு தேவையானளவு கிடைக்கும், ஆனால் எங்கள் வீட்டில் இறப்பு நடந்திருக் கிறதே!" இவ்வாறான பதில்தான் கிடைத்தது. மகனுக்கு மீண்டும் உயிர் கிடைத்துவிடும் என நம்பியவள் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த நிபந்தனையை மட்டும் கவனத்தில் கொள்ளவில்லை, அப்போது அது சாத்தியமற்றது என்று அவளுக்குத் தோன்றவில்லை.

மாற்றமடைந்த பெண்ணாக, புத்தரிடம் திரும்பி வந்தாள், அழுதுகொண்டு முதலில் வந்தவள் இப்பொழுது சிரித்துக் கொண்டு திரும்பி வந்தாள். புத்தர் கேட்டார் "ஏன் சிரிக்கிறாய்?" அவள் "என் மகன் இறந்தது பெரிய விடயமல்ல, இவன் என்றோ ஒரு நாள் இறக்கத்தான் போகிறான். இந்த மரணம் ஒரு வகையில் நல்லதுதான். அவனுக்கு முன்பு நான் இறந்து போயிருந்தால் என் மகன் மிகவும் சிரமப்பட் டிருப்பான். அவனுக்குப் பதிலாக நானே சிரமப்படுவது பரவாயில்லை, நல்லதே நடந்திருக்கிறது" என்றாள்.

**மரணம் நோக்கிய விழிப்பு**

அப்பெண்மணி தனக்கு சந்நியாசம் கொடுக்கும்படி புத்தரிடம் கேட்டுக்கொண்டாள். "எனக்கு என் மகனைப் பற்றிய வருத்தம் இப்போது இல்லை" என்றாள். புத்தர் சொன்னார்: "இதற்காகத்தான் உன்னை நான் அனுப்பினேன், அதாவது உனக்கு ஞானம் சித்திக்க வேண்டும் என்பதற்காக."

இறந்தவர்களை மீட்டதாக மதங்களில் கதைகள் உண்டு. அப்படி மீட்கப்பட்டவர்கள் இன்று எங்கே? அவர்கள் மீண்டும் இறந்துதானே போனார்கள். உயிரோடு மீட்டெடுக்கப்பட்ட வர்கள் எல்லோரும் பின்பு சில காலங்களில் இறந்துதானே விட்டார்கள். மதங்கள் மக்களை மரணத்தை நோக்கி விழிப்பாக்க வேண்டும், மரணத்திலிருந்து காப்பாற்றுவது மதத்தின் வேலையல்ல. மரணத்தைதத் தாண்டி மனிதனை அழைத்துச் செல்லவேண்டும்.

மதங்கள் கூறும் 'மரணத்திலிருந்து மீண்டார்' என்பது மரணத்திலிருந்து மீண்டு வருவதல்ல, ஆன்மிகனாக மாற்ற மடைந்து மறுபிறப்பு போல் அமைவதையே குறிப்பிடுகின்றன. தத்துவார்த்தமான மரணத்திலிருந்து மீட்டெடுத்ததாகவே அந்தக் கதைகள் அமைந்திருக்கலாம். அல்லது மரணத்துக்கு அப்பாலுள்ள ஆழ்ந்த இரகசியங்களைப் போதித்திருக்கலாம். இவற்றைத்தான் உயிர் மீட்டதாகக் கூறியிருக்கிறார்கள் என்பதே என் கருத்து.

## அத்தியாயம் 54

# இரவீந்திரநாத் தாகூரின் இறுதிநாள்: ‘எனது பாடலை இன்னும் பாடவில்லை’




மாபெரும் கவிஞரான இரவீந்திர நாத் தாகூர் மரணப்படுக்கையில் இருந்தார். அவருக்கு மரியாதை செலுத்துமுகமாக அவரைச் சந்தித்த அவரது நண்பர் “நீங்கள் பாட விரும்பியதையெல்லாம் பாடி விட்டீர்கள், செய்ய விரும்பியதையும் செய்து முடித்துவிட்டீர்கள், இப்போது மனநிறைவுடனும், கடவுளின் அருளுக்குப் பாத்திரமாகவும், மிகுந்த நன்றியறிதலுடன் இந்த உலகைவிட்டுப் பிரிந்து செல்கிறீர்கள்” என்றார்.

தாகூர் கண்களைத் திறந்தார். “நான் இப்போதுதான் கடவுளிடம் பிரார்த்தனை செய்தேன், எனது எல்லா இசைக் கருவிகளையும் ஒன்றுசேர்த்து இப்போதுதான் பாடத் தயாராக இருந்தேன். இந்த நேரத்தில் என்னை அழைத்துக்கொள்ள முடிவு செய்துவிட்டீர்களே! எனது பாடலை நான் இன்னும் பாடவில்லை. இதுவரை நான் பாடியதெல்லாம், எனது பாடலுக்கான முன்தயாரிப்புத்தான், நான் பாட வேண்டியதை இன்னும் பாடவில்லை” என்றார் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள்.

இவர் பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பாலுள்ள நிலையைக் கருத்திற்கொண்டு சொன்னாரா?

❀❀❀

## அத்தியாயம் 55

# இரமண மகரிஷி: ‘உண்மையுடன் (சுயம்) கலந்துவிட்டேன்’



Ramana Magha Rishi

இரமண மகரிஷி அவர்கள் தனது 17 வது வயதில் திடீரென ஒரு நாள் மரண நிலைக்குச் சென்றார், அந்த நிலை பிரக்ஞைக்கன்றி (Consciousness) அவரது உடலை மட்டும் சார்ந்திருந்தது. “சுயம் (Self) உண்மையானது, நித்தியமானது என்பதை தான் அறிந்ததாகவும், அந்த உண்மையுடன் கலந்துவிட்டேன்” என்றும் அவர் கூறியுள்ளார். தன்னிலிருந்து “மரண அச்சம் எடுக்கப்பட்டுவிட்டதாகவும் எஞ்சியிருப்பது ‘நான் யார்?’ என்பதே யாகும்” எனவும் குறிப்பிட்டுள்ளார். சகல ஆசைகளும் அவருள் வீழ்ச்சி அடைந்தன, வீட்டைத் துறந்தார், திருவண்ணாமலையில் அருணாசலமலை அடிவாரம் அவருக்காகக் காத்திருந்தது.

இரமண மஹரிஷி அவர்களின் மொழி மௌனம். மௌனமாக இருக்க முடிந்தால் ‘உண்மையை’த் தெரிந்து கொள்ளலாம் என்று வாழ்ந்து காட்டியவர் அவர். மௌனத்தின் மூலம் மனதைக் கடந்து பிரபஞ்ச ‘இருப்பு’ நிலையை அறிந்துகொண்டவர். மௌனம் என்றால் பேசாதிருத்தல் மட்டுமல்ல, எண்ணங்கள் எதுவும் எழாத வகையில் மனம் முழுமையாக ‘வெறுமை’ நிலையை அடைதலாகும். இந்தப் பிரபஞ்சத்தில் புதைந்து கிடக்கும்

ஆனந்தத்தை அந்த 'மௌனத்தின்' மூலம் அனுபவித்தவர் மஹரிஷி அவர்கள்.

அந்த மௌனத்ததை மொழிபெயர்க்க முடியாது. அந்த மௌனத்தை ஒருவருக்காக இன்னொருவர் செய்ய முடியாது. அந்த மௌனத்தை அனுபவிக்கத்தான் முடியும், விளங்கப்படுத்த முடியாது.

பிற்காலத்தில் மகரிஷி அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது கூறினார் "நான் உடல் அல்ல, உடல் நோய்க்குரியது, உடல் தன் வேலையைச் செய்யட்டும், உடல் தன்னைத்தானே முடிவுக்கு கொண்டு வரட்டும்" என்றார்.

14.04.1950 அன்று இரவு 8.47-இல் மகரிஷி அவர்கள் உடலை நீத்தார். இரமணமகரிஷி அவர்களது உடல் இறந்த அதே நேரத்தில் (இரவு 8.47-க்கு) அருணாசலமலையில் நட்சத்திரம் ஒன்று தோன்றி மலையைத் தாண்டிச் சென்றது. மகரிஷி அவர்கள் ஒளியாகி பிரபஞ்சத்துடன் கலந்துவிட்டார்.

"ஞானம் அடைந்தவர்களுக்கு மீண்டும் பிறப்பில்லை. அவர்கள் மீண்டும் ஒரு உடலாக மாட்டார்கள், மீண்டும் ஒரு மனதினைப் பெறமாட்டார்கள். உருவம் இல்லாது (Non Self ஆக) எங்கும் வியாபித்திருப்பார்கள். ஞானம் அடைபவர்கள் உலகில் அதிகரிக்க அதிகரிக்க உலகம் மேலும் அழகு பெறும்."

**முற்பிறப்பு ஞாபகங்கள் தொடரும் என்பதற்கு பின்வரும் சம்பவம் உதாரணமாகிறது:**

சம்பாலா (Shambhala) ஸ்தாபனம் 1988-இல் வெளியிட்ட இரமண மகரிஷியின் ஆன்மிகப் போதனை (The Spiritual Teaching of Ramana Maharishi) என்ற நூலில் இருந்த ஒரு சம்பவத்தை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு மேற்கத்திய நாட்டவர் இரமணரை செவ்வி எடுத்துக் கொண்டிருந்தார். அவர் தான் பார்த்த சம்பவத்தை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

மகரிஷி அவர்கள் திருவண்ணாமலையில் அவரது மண்டபத்தைவிட்டு வெளியேறி அருணாசலமலையை நோக்கிச் சென்றுவிட்டார். அப்போது அந்த மண்டபத்திலிருந்த எட்டு

வயதுச் சிறுவன் திடீரென வேதங்களைப் பற்றியும், ஞானிகளின் போதனைகளைப் பற்றியும், யோகாவைப் பற்றியும் சொற்பொழிவு செய்தான். புனித ஏடுகளிலிருந்து பல உதாரணங்களைச் சுட்டிக்காட்டி இலக்கியத் தமிழில் உரை நிகழ்த்தினான்.

இரமண மகரிஷி அவர்கள் அந்த மண்டபத்தினுள் பிரவேசித்தபோது பையன் அமைதியாகிவிட்டான். அங்கு பூரண அமைதி நிலவியது. அந்தப் பையனை மகரிஷி சிறிதுநேரம் உற்று நோக்கியவாறு அமர்ந்திருந்தார். இரமண மகரிஷியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது.

செவ்வி எடுத்துக்கொண்டிருந்த அந்த மேற்கத்தியர் அப்பையனின் ஞானப் பேச்சைப் பற்றி மகரிஷியிடம் விளக்கம் கேட்டார். அதற்கு மகரிஷி அவர்கள் “அப் பையனுக்கு அவை அனைத்தும் முற்பிறப்பில் அறிந்துகொண்டதின் தொடர்ச்சி, அப்பையன் விரைவில் ஞானமடைந்துவிடுவார்” என்றார்.

## அத்தியாயம் 56

# மெஹர்பாபா: மரணநிலை ஞானியைப் பிரசவித்தது

இன்னொரு வாழ்க்கை இருக்கிறது. மிகச்சிறந்த உள்ளார்ந்த வாழ்க்கை. ஆசையற்ற வாழ்க்கை, ஆசையற்ற விடுதலை. ஆசைகளையும், செயல்களையும் விடுவதன்மூலம் சக்தி சேகரிக்கப்படுதல் எனலாம்.

மும்பாய் (இந்தியா) நகரில் மெஹர்பாபா (Meherbaba *(1894-1969)* என்பவர், ஒரு வருடம் வரை உணர்விழந்து மயக்கம் போன்ற நிலையில் செயலற்று இருந்தார். உடல் செயற்படுவதற்கான விருப்பம்கூட அற்று இருந்தார். அவருக்குச் சாப்பாடு ஊட்டப்பட்டது. ஒரு வருடம் கருவறை காலம் போல அமைந்தது. உடல் செயற்படத் தொடங்கியதும், அதன்பின் ஒரு மாறுபட்ட மனிதன் போல புதிய ஆற்றல்களுடன் புதிய பிறப்புப்போல் பிறந்தார். "என்ன நடந்தது? பாபாஜான் (Babajan) என்கிற மிக வயதான மூதாட்டியின் முத்தத்தினால் இது நிகழ்ந்தது."

பாபாஜான் ஒரு சூஃபி (Sufi) மறைஞானி. ஆனால் தான் மறைஞானி என்பது அவருக்கே தெரியாது (ஒரு சுவாமி தான் சுவாமி என்பதை அறியார்.) ஆந்த மூதாட்டி மிகப்பல ஆண்டுகளாக ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். மெஹர்பாபா அந்த மூதாட்டியை நன்கு அறிந்தவர். மூதாட்டி ஆண்டுக்கணக்காக அந்த மரத்தடியில் இருப்பவராயிற்றே. ஒருநாள் பாபாஜான் இவரை அழைத்ததும் அவர் அருகே சென்றார். மெஹர்பாபாவை அவர் முத்தமிட்டார். அந்த இடத்திலேயே மெகர்பாபா மயக்கமாகி விழுந்தார். அவர் தொடர்ந்து ஒரு வருடம் மயக்கநிலையிலிருந்தார். அதாவது அந்த முத்தம் ஓராண்டு அவரில் தங்கியிருந்தது எனலாம்.

முத்தம் கொடுத்தவுடன் மூதாட்டி அப்படியே இறந்து போனார். அவர் மௌனித்திருந்த மறைஞானி, யாரையும் தொட்டதில்லை, யாருடனும் பேசியதும் இல்லை. ஒரேயொரு முத்தத்தின் மூலம் தம்முடைய சக்தியையும் முழு ஆற்றலையும் வேறொருவருக்கு மாற்றும் அந்தக் கணத்துக்காகவே காத்திருந்தார் போலும். அவரது இந்தத் தீண்டல் முழுமை யாயிருந்தது.

என்ன நடந்ததென்றே மெஹர்பாபாவிற்கு தெரிந்திருக்க வில்லை. ஆனால் அவர் அதைப் பெறத் தயாராக இருந் திருக்கிறார் போலும். இல்லையேல் அந்த 'மாற்றம்' நடந்திருக்க முடியாது. பல வைத்தியர்கள் பரிசோதித்து, மருந்துகள், சிகிச்சைகள் அளிக்கப்பட்டன, எதுவுமே பயனளிக்கவில்லை. ஓராண்டுக்குப் பின் விழிப்புணர்வுடன் முற்றிலும் வேறான ஒரு புது மனிதராகக் காணப்பட்டார். இங்கே, இது எப்படி நடந்தது? எதிர்பாராமல் திடீரென நிகழ்ந்தபோது உணர்ச்சியற்ற மயக்கநிலையாகிவிட்டது. படிப்படியான ஆன்மிகப் பயிற்சிகள் மூலம் இது நிகழ்ந்திருப்பின் இப்படிக் கடுமையான மயக்கநிலை ஏற்பட்டிருக்காது. பாபாஜான் எவரையும் தயார்ப்படுத்தவில்லை. ஆனால் மெகர்பாபா தனது சக்தியைப் பெறத் தயாராக இருப்பதாக அவர் கணித்துவிட்டார். அதனால் தமது 'ஆற்றலை' இடமாற்றிவிட்டார். பொதுவாக துறவிகள் ஒருவரை அதற்கேற்ப சீடராகத் தயார்படுத்திய பின்பே மாற்றுகிறார்கள்.

மூதாட்டி பாபாஜான் தனியாக இருந்தார், யாரையும் அவர் தம்முடைய சீடராய் ஏற்றுக்கொள்ளவில்லை, இவர் தயார்ப்படுத்துவதற்கு ஏற்றாற்போல பின்பற்றிச் செயற்படும் குழுவும் அவரிடம் இருக்கவில்லை. ஆசான் வகையைச் சேர்ந்தவரல்லர். இவர் போதனைகள் செய்பவரல்லர். ஆனால் யாரோ ஒருவரிடம் கொடுக்கக்கூடிய 'ஒன்றை' வைத்திருந்தார். யாரிடம் கொடுப்பது என்பதையும், கொடுக்கவேண்டிய தருணத்தையும் உணர்ந்திருந்தார். மெஹர்பாபா மயக்க நிலையில் (Coma) இருந்து மரண அனுபவமடைந்து மீண்டும் பிறப்பதுபோல் பிறந்தெழுந்தார். அந்த மரண அனுபவம் அவரை ஞானியாக மாற்றிவிட்டது.

## அத்தியாயம் 57

# மீண்டும் தோன்றுவார்களா?
# கிருஷ்ணர், மஹாவீரர், புத்தர், இயேசு


Krishna


Mahaveerar


Budha


Jesus

'அதர்மம் தலைதூக்கும்போது மீண்டும் வருவேன்' என்றார் கிருஷ்ணர்.

'மரணத்தின் பின் சந்திரனில் இருப்பேன்' என்றார் மஹாவீரர்.

'இரண்டாயிரத்து ஐந்நூறு (2500) வருடங்களுக்குப் பின் மைத்ரேஜன் என்ற பெயரில் மீண்டும் பிறப்பேன்' என்றார் புத்தர்.

'விரைவில் மீண்டும் வருவேன்' என்றார் இயேசு.

இந்தக் கூற்றுக்களைச் சொற்பொழிவாளர்களும், உபநியாசர்களும், பிரசங்கிகளும், மதப் பிரச்சாரக்காரர்களும் உலகம் பூராகவும் தொடர்ந்து கூறிக்கொண்டேயிருப்பதால் பல நாடுகளில் பல 'சுவாமிகள்', 'ஆன்மிகவாதிகள்' போன்றோர் தாங்கள்தான் மீண்டும் அவர்களாகப் பிறந்துள்ளதாக அல்லது

தோன்றியுள்ளதாக அல்லது அவதரித்துள்ளதாக உரிமைகோரி விடுகிறார்கள்.

பல தொண்டர்களை, பல பின்பற்றுபவர்களைக் கொண்ட 'சுவாமிகள்' இறந்துவிட்டால், சமாதி எய்திவிட்டால் அந்த சுவாமிகளது இறப்பைத் தொண்டர்கள், சீடர்கள் அதிக பக்தியின், விசுவாசத்தின் காரணமாக ஏற்றுக்கொள்வதில்லை. இதே நிலை அரசியல் தலைவர்களுக்கும், விடுதலை இயக்கத் தலைவர்களுக்கும், சமூகத் தலைவர்களுக்கும், மதத் தலைவர் களுக்கும், மக்கள் தலைவர்களுக்கும் பொருந்துகிறது. அந்தத் தலைவர்களது இறப்பைத் தொண்டர்கள், ஆதரவாளர்கள், விசுவாசிகள், அன்பர்கள், தனிநபர் வழிபாடு காரணமாக, அல்லது தீவிர விசுவாசம் காரணமாக ஏற்றுக்கொள்வதில்லை. அதனால் அவர்கள் தங்களுக்கு ஆறுதலைத் தேட, தங்கள் திறமைகளுக்கேற்ப உயிருடன் இருப்பதுபோல ஒரு மாயையை உருவாக்கி புனைகதைகளைப் பரப்பிவிடுகிறார்கள்.

அந்தக் கதைகளில் அந்த 'மரணத்தை' புதைத்து விடுகிறார்கள். இத்தகைய கதைகள் காலப்போக்கில் நிலைத்து கர்ணபரம்பரைக் கதைகள் போலாகிவிடுகின்றன. மக்கள் என்றும் எதையும் உள்வாங்கத் தயாராகவே இருக்கிறார்கள். சில கதைகள் நூல்வடிவம் பெற்று நிலைத்துவிடுகின்றன. 'உண்மை' மறைந்து 'கதைகள்' முக்கியமடைந்துவிடுகின்றன. அக்கதைகளிலிருந்து வழிபாடும், பிரார்த்தனையும் பிறந்து விடுகின்றன.

கிருஷ்ணர், மஹாவீரர், புத்தர், நபிகள்நாயகம், இயேசு இவர்கள் எல்லோரும் 'மரணம்' வாழ்வின் ஒரு பகுதி என்பதைத் தங்கள் உடலுக்கு இறப்பைக் கொடுத்து அதன் மூலம் மக்களுக்கு உணர்த்தியவர்கள். மரணத்தை ஆனந்தமாக ஏற்று மரணம் ஆனந்தமானதென்பதை மக்களுக்கு வெளிப்படுத்தியவர்கள்.

உலகிலுள்ள அனைத்து மரணங்களும் 'உடலுக்குத்தான்', ஆன்மா, உயிர், சுயம், பிரக்ஞை நிலையானவை, அழிய முடியாதவை. சிலர் மீண்டும் உடலாகப் பிறக்கிறார்கள், தங்களைத் தாங்களே வென்ற யோகிகள், சித்தர்கள், ரிஷிகள், ஞானிகள், மகான்கள், சுவாமிகள் மீண்டும் பிறப்பதில்லை என உபதேசங்கள், போதனைகள் கூறுகின்றன.

புத்தருக்கும் மஹாவீரருக்கும் உட்கொண்ட உணவு நச்சுத்தன்மை கொண்டதாக இருந்துவிட்டது (Food Poison). இயேசுநாதர் சிலுவையில் ஏற்றப்பட்டார், கிருஷ்ணர் மரத்திற்குக் கீழ் யோகநிலையில் இருக்கும்போது யாரா (Jara) என்ற வேடன் கிருஷ்ணரின் இடது கால் பாதத்தை மான் என நினைத்து அம்பை எய்ததால் கிருஷ்ணர் உடலைத் துறந்தார் என்று சில நூல்கள் கூறுகின்றன. அதாவது இவர்கள் தங்கள் மானிட உடலுக்குரிய மரணத்தை அப்படித்தான் சந்திக்க விரும்பியிருக்கிறார்கள் போலும். ஆனால் இவர்கள் அனைவரும் உண்மையில் இறப்பைக் கடந்தவர்கள்.

அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கெதிரான கிளர்ச்சிகளுக்குள்ளும் பொது சனங்களின் எதிர்ப்புகளுக்குள்ளும் வாழ்ந்தார்கள், இன்றும் அத்தகைய மதப்பூசல்கள் நிலவுகின்றன. மக்களின் மனநிலையைப் பொறுத்தவரை பல இலட்சம் வருடத்திற்கு முன்பாக இருந்தாலென்ன, பின்பாக இருந்தா லென்ன அதில் எவ்வித மாற்றமுமில்லை.

மக்கள் சிலைகளை நம்புவார்கள், ஆனால் உண்மை பேசுகின்ற ஞானிகளை நம்பமாட்டார்கள். உருவச் சிலைகளை விரும்பியபடி செயற்படுத்த முடியும். உதாரணமாக அலங்காரம் செய்யலாம், தூக்கிக்கொண்டு திரியலாம், அதனுடன் பேசலாம். அதாவது உருவச்சிலைகளை மக்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும், ஆனால் உண்மை பேசும் ஞானிகளை மக்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது. ஞானிகள் மக்களுக்காகப் பொய் பேச மாட்டார்கள், 'உண்மையை' மட்டும் எக்காலத்திலும் எந்தச் சூழலிலும் பேசுவார்கள். 'பொய்யை' உண்மையென்று நம்பும் மக்கள், 'உண்மையை' பொய்யென்று நம்பி மகான்களைக் கொலை செய்துவிடுகிறார்கள்

ஞானிகள், மகான்கள் மக்களை மனதிற்கப்பாலுள்ள 'இல்லாமை' நிலைக்கு (Nothingness), 'வெறுமை நிலைக்கு' (Emptiness), 'மனமற்ற நிலைக்கு' (No-Mind) அழைத்துச் சென்று விடுவார்கள். 'ஆணவத்தையும்', அதனுடன் சேர்ந்த 'பேராசையையும்' அழித்துவிடுவார்களே! 'உண்மையைச் சந்திக்க' அதிக துணிச்சல் தேவை! விழிப்புணர்வு, ஞானம் உள்ளவர் களுடன் மக்கள் ஒத்துப்போவதில்லை. இதே மக்கள் அதே

ஞானிகளை இறந்தபின் வணங்குவார்கள். புத்தர் வாழ்ந்த காலத்தில் 5 தடவை புத்தரைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று உலகத்தில் புத்தருடைய சிலைகளே அதிகம் காணப்படுகின்றன. சிலை வைத்து வணங்கும் மக்கள்தான் கொலை முயற்சியும் செய்தார்கள்.

இவர்கள் தாங்கள் மீண்டும் வருவோம் என்று கூறியது, உலக மக்களை சமநிலையில் இருக்கச் செய்வதற்கான ஆறுதல் வார்த்தைகளாகத்தான் இருக்க வேண்டுமென நான் எடுத்துக் கொள்கிறேன்.

- இவர்கள் இந்த உலகத்தின் வானமாக பிரபஞ்சத்திற் பரந்து, வியாபித்துத்தான் இருக்கிறார்கள்.
- உலகிலுள்ள சகல ஜீவன்களின் மூச்சுக் காற்றாகக் கலந்துள்ளார்கள்.
- அவர்கள் உலகத்திற்கு ‘ஒளி’யாயிருக்கிறார்கள்.

## அத்தியாயம் 58

# கடவுள் : நல்லோரைக் காத்து தீயோரை அழிக்கிறாரா?

கொலைச் செயலால் தீயவரை அழிக்க முடியாது. கொலைச் செயலால் எதையும் கொன்றுவிட முடியாது. தீயவனை ஒழித்துக்கட்டுவது என்பது, அவனை நல்லவனாக, மகானாக மாற்றிவிடுவதுதான் அதன் பொருளாக இருக்க முடியும். கொலைச் செயலால் எதையும் சாதிக்க முடியாது. அது உடலைத்தான் அழிக்கும்.

இந்து மதமானது மறுபிறப்பு, கர்மவினைக் கொள்கை யுடையது. ஆகவே எப்படி கிருஷ்ணரோ அல்லது முருகனோ கொலை செய்வதன் மூலம் தர்மத்தை நிலை நாட்டியதாகக் கூறமுடியும்? தீயவர்கள், தீயவர்களாகத்தானே மீண்டும் பிறக்கப் போகிறார்கள். அதைத்தானே கர்மவினை என்கிறார்கள். முற்பிறப்புத் தீவினை தொடரும் என்றால் அதாவது மறுபிறப்பிலும் அது தொடருமென்றால் கடவுள் ஏன் அழிக்க வேண்டும்?. எனவே கொலைச் செயலால் எதையும் சாதிக்க முடியாது, கொன்றுவிட முடியாது. அந்தத் தீய உடல் அழிந்தாலும் மீண்டும் பிறந்து கர்மவினை காரணமாகத் தீய உடலை உடையதாகத்தான் வாழப்போகிறது.

ஒரு தீயவனை ஒழித்துக்கட்டுவது என்பது அவனை நல்லவனாக, மகானாக மாற்றிவிடுவதுதான். நல்லவனாக மாற உதவினால்தான், அந்தத் தீய குணத்துக்கு முடிவுகட்ட முடியும். நல்லவர்களையும், மகான்களையும் காக்கத்தான் கடவுள் மனித அவதாரம் எடுத்து தீயவர்களை அழிக்கிறாரா? இல்லை.

தீயோர்களுக்குத்தான் பாதுகாப்புத்தேவை! நல்லோர்களுக்கு தேவையில்லை!

ஒரு மகான் மகானாக இல்லாமல் போகும்போதும், ஒரு நல்லவர் நல்லவராக இல்லாமல் போகும்போதும், அவர்களின் செயல்கள் புனிதத்தன்மை அகன்று 'போலி'த் தன்மை ஆகி விடுகின்றது. இந்நிலையில் இவர்களுக்கு ஒரு பாதுகாப்பு தேவைப்படுகிறது. ஆனால் நல்லவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை. நல்லவர் அல்லாதவர்களுக்குத்தான் உண்மை யில் பாதுகாப்புத் தேவை. நல்லவர்கள் பாதுகாப்பின்மையிலும் கவலையின்றி சுகவாழ்வு வாழ்பவர்கள். அவர்கள் ஆபத்திலும் நிம்மதியாக அமைதியாக இருப்பார்கள். அவர்களைப் பாதுகாக்கக் கடவுளோ, எவரும் தேவையில்லை. நல்லவர்கள், அவர்களுடைய நற்குணங்கள் அற்றுப்போகும்போது தடுக்கப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள். தீயவர்கள், நல்லவர்கள் போல் வேடம் தரித்து உலாவும்போது, தீயவரை நல்லவராக்க வேண்டிய தேவை எழுகிறது.

**நல்லவரைக் காத்தல்:**

தீயவரைத் தண்டிக்க கடவுள் தேவையில்லை. அதற்கு நீதிமன்றங்கள் உண்டு. நீதிபதிகள் அதைச் செய்யலாம். சட்டங்கள் அதைப் பார்த்துக்கொள்ளட்டும். பாதுகாப்பு வேண்டுபவர்கள் நல்லவர்களாக, மகான்களாக இருக்க முடியாது. நல்லவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வார்கள். பாதுகாப்பில்லாமலே பத்திரமாக அதாவது பாதுகாப்பாக அவர்களால் இருக்கமுடியும். தீயவரின் தீமையை அழிப்பது நன்மையான செயல்களால்தான் முடியும்.

கோவில்களிலும், மடாலயங்களிலும் தங்கியிருக்கும் துறவிகள், 'கடவுளை' வணங்குபவர்கள் யாவரும் தங்கள் மீது கடவுள் தனி அக்கறை காட்டுவார் என்றும், துன்பம் நேர்கையில் கடவுள் காப்பார் என்றும் நம்புகிறார்கள். தங்களுக்குத் துன்பம் செய்பவர்கள் தீயவர்கள் என்றும், கயவர்கள் என்றும் நினைப்பதில் அவர்களுக்கு ஒரு திருப்தி. உண்மையில் ஒரு துறவி தன்னைச் சித்திரவதை செய்பவர் களையும் பகைவர்களாக நினைக்கமாட்டார். அப்படிப் பிரித்துப் பார்த்துப் பகைவர்களாக நினைக்கும் குணம்

கொண்டவர் துறவியாக இருக்கமுடியாது. அப்படி நினைப்பவர்கள் எவரும் உண்மையாகக் கடவுள் வழிபாடுடையவர்கள் அல்லர்.

'கடவுள் காக்க வருவார்' என்பது போலிகளைக் குறிவைத்துக் கூறும் நகைச்சுவையாகத்தான் அமைந்திருக்கலாம். உண்மை யானவர்களாக வாழுங்கள் என்று மறைமுகமாகக் கூறப்பட் டுள்ளது. 'தீயவரைக் கடவுள் அழிப்பார்' இந்த வாக்கியம் ஒரு மந்திரம்போல் ஓதப்பட்டுவருகிறது. இந்த வாசகம் நாட்டில் மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெற்றுவிட்டது.

**கடவுள் அழிப்பவர்அல்ல! விழிப்புணர்வை வளர்ப்பவர்!**

விழிப்புணர்வு பெற்ற, தன்னை உணர்ந்த, உண்மையை அறிந்த, மனதைக் கடந்த ஞானி ஒருவர் உலகுக்கு போதுமானவர். உலகம் காப்பாற்றப்பட வேண்டியதில்லை. கடவுள் உயிர்களைக் கொல்வதில்லை. துஷ்டர்களையும், அசுரர்களையும், அரக்கர்களையும் கடவுள் கொலை செய்கிறார் என்று கூறுபவர்கள் கடவுளைக் கொலை செய்ய முயற்சி செய்கிறார்கள். உண்மையை உணர்ந்தவர்களை, உண்மையை அனுபவித்தவர்களை, உண்மையை அறிந்தவர்களை உலகமானது பொய்யானவர் எனக் காட்ட முயல்கிறது. பொய்யானவரை உலகம் உண்மையானவர் எனக் காட்ட முயல்கிறது. உண்மையை அறிந்தவர், உண்மையை உரைப்பவர் மறைக்கப்படுகிறார், மறுக்கப்படுகிறார், மழுங்கடிக்கப்படுகிறார்.

உண்மை என்றும் உண்மைதான். பொய்யில் வாழ்பவர்கள் யாராக இருந்தாலும் அதாவது குருக்களாக, சுவாமியாராக, இமாம்மாக, றாபியாவாக (Rabiah), பிஷப்பாக, பீடாதிபதியாக, பிரதமர், ஜனாதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதியாக, கணவன், மனைவி, பிள்ளைகள், தாய், தகப்பன் யாராக இருந்தாலும் எந்தப் பதவியில், அந்தஸ்தில் இருந்தாலும் மனத்தளவில் பயந்து தான் தினமும் வாழ்க்கை நடத்துவார்கள். கனவிலும் பயப்படுவார்கள். பொய்மை அதிகமானவர்கள் 'உள்' நடுக்கத்திலிருந்து தப்பமுடியாது. இவர்கள் பயத்திலே என்றும் வாழ்பவர்கள். பொய் உலகத்தையே அதிரவைக்கக்கூடியது.

'உண்மை' உள்நடுக்கத்தை ஏற்படுத்தாது, பயத்தைக் கொடுக்காது. உண்மை சக்தி மிக்கது. உண்மை யாருக்கும்

தீங்கு செய்யாது. உண்மை அமைதியைக் கொடுக்கும். உண்மையை உணர்ந்த, அறிந்த, அனுபவித்த ஒருவர் உண்மையான உலகத்துக்கு போதுமானவர்.

**யூத மதக் கதை:**

யூத மக்களின் மதமான ஜுடய்ஸ்ம் (Judaism) கூறும் கதை ஒன்றை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். பழைய ஏற்பாட்டில் - கூறப்பட்டுள்ள கதையின்படி (Old testament) ஒரு நாள் கடவுளுக்குக் கோபம் ஏற்பட்டது. கொமெரா (Gomorrah), சோடொம் (Sodom) என்ற இரண்டு நகரங்களின் மீதே அந்தக் கோபம் ஏற்பட்டது. அந்த நகரங்களில் வன்செயல்கள், கொலைகள், ஒழுக்கக் கேடுகள் நிரம்பி வழிந்தன. கடவுள் அந்த நகரங்களை அழிக்கத் தயாரானார்.

ஹசிட்ஸ் (Hassids) என அழைக்கப்படும் ஞானிகள் யூதமக்களில் இருந்தார்கள். இவர்களை யூதமக்களின் மதமான ஜுடைய்ஸ்யத்தின் பழைய ஏற்பாட்டில் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்துவிட்டார்கள். இந்த ஞானிகள் பழைய ஏற்பாட்டை தவறானதென்று கூறுகிறார்கள். கடவுள் கோபமானவர், கொலைசெய்பவர் என்பதை இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. மேற்கூறிய கதை தவறானதென்று கூறி இவர்கள் இதற்கு வேறொரு விளக்கத்தைக் கூறுகிறார்கள்.

**இந்தப் புதிய கதையின்படி:**

கடவுள்: கொமரா, சோடொம் என்ற இரு நகரங்களை எச்சரிக்கத் தயாரான வேளை,

ஹசிட்ஸ் (Hassids) ஞானி: கடவுளை அணுகி நீங்கள் அதை எச்சரிப்பதற்கு முன் எனது மூன்று சந்தேகங்களை நீக்குங்கள். அந்த நகரங்களில் உள்ளவர்களில் 200 பேர் உண்மையானவர்களாகவும் ஒழுக்கமானவர்களாகவும், கருணையுள்ளம் கொண்டவர்களாகவும், ஜீவகாருண்ணியம் மிக்கவர்களாகவும், பரோபகாரியானவர்களாகவும், தங்களைத் தாங்களே அறிந்தவர்களாகவும் வாழ்கிறார்கள். அந்த நகரங்களை எச்சரிக்கும்போது அவர்களும் பாதிக்கப்பட்டுவிடுவார்களே!

கடவுள்: எனக்கு அவர்களைப் பற்றிக் கூறியது உங்கள் நல்லெண்ணத்தை எனக்குக் காட்டுகிறது. தங்களை உணர்ந்து

கொண்ட மக்கள் (self Realized) என்றும் காப்பாற்றப்பட வேண்டியவர்கள். எனவே அந்த நகரங்கள் அழியாது பாதுகாக்கப்பட வேண்டும்.

ஞானி: 200 அல்ல 20 பேர் நல்லவர்களாக இருந்தாலும் அந்த நகரத்தைப் பாதுகாப்பீர்களா?

கடவுள்: தங்களை உணர்ந்த (Self Realized), தங்களை அறிந்த, தங்கள் சுயத்தைத் தெரிந்துகொண்டவர்கள் இருந்தால் அந்த இடங்கள் மிக முக்கியமானவை. எண்ணிக்கை முக்கியமல்ல. அந்த மனிதர்களின் ஞான நிலை முக்கியம். அவர்கள் நடமாடும் இடங்கள் முக்கியம். புனித நகரங்கள், புனித பிரதேசங்கள் போன்றன பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த நகரங்கள், அங்குள்ள மக்கள் எல்லோரும் முக்கியமானவர்கள்.

ஞானி: தன்னை அறிந்துகொண்ட (Self Realized) ஒரே ஒருவர்தான் இருக்கிறார். அவர் ஆறு மாதம் கொமரா நகரிலும் மிகுதி ஆறு மாதம் சோடோம் நகரிலும் மாறிமாறித் தங்கியிருப்பார். அப்படியானால் அந்த நகரங்களை என்ன செய்வீர்கள்? எண்ணிக்கையில் பார்த்தால் ஒரே ஒருவர்தான், அவரும் நிலையாக ஒரே இடத்தில் இருக்காதவர். அந்த இரண்டு நகர்களுக்குள்ளும் யாசித்துத் திரிபவர்தான் அவர்.

கடவுள்: அந்த மனிதரைக் கூட்டிவாருங்கள்.

ஹஷிட் ஞானி: நான்தான் அந்த மனிதர்.

கடவுள்: உங்களால் அந்த மக்கள் மாற்றமடையட்டும், அந்த நகரங்கள் வளம் பெறட்டும்.

**தீயவர்களை அழித்தல்**

அரக்கர்கள், அசுரர்கள், சூரர்கள் ஆகியோர் கடவுளால் கொல்லப்பட்டார்கள் எனச் சமயக் கதைகளில் அறிகிறோம். கொலையென்று கூறப்படுவது உண்மையில் கொலையன்று. எவரும் கொல்லவும் கூடாது, கொல்லப்படவும் கூடாது. (இதனை, அதாவது ‘கொலை’யை சமய - விஞ்ஞான முறையில் பார்ப்போம்.)

கேடுகள், தீமைகள், கொடுமைகள் நிறைந்த தீய குணங்களை அடியோடு அழித்து 'உள்ளத்தை', மாற்றி புதிய மனிதர்களாக்கப்பட வேண்டும். அதன் பின் அரக்க குணம் கொண்டவர்களாக அவர்கள் இருக்க மாட்டார்கள். தற்போது இவர்கள் புதியவர்கள், பழையவரல்லர். அந்தப் பழையவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். அழிக்கப்பட்டு விட்டார்கள். அதாவது அந்த அசுர குணங்கள், அரக்க மனங்கள், தீய அம்சங்கள் நீங்கிவிட்டன. புனர்வாழ்வு (Rehabilitation) பெற்று புதியவர்களாக மாறிவிட்டார்கள்.

**ஒரு நிகழ்வு:**

ரட்னாகர் (Ratnakar) என்ற கொள்ளைக்காரன் எப்படி அழிந்தான் என்பதைப் பார்ப்போம்:

ஒரு நாள் வேட்டையாடும்போது மரத்திலிருந்த சோடிப் புறாக்களுக்கு அம்பு எய்தார். ஒரு புறா நிலத்தில் விழுந்து குற்றுயிராய்த் துடிதுடித்தது. உயிர் தப்பிய மற்றப் புறா எய்தவனைப் பார்த்துக் கண்ணீர் விட்டது. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தனது ஜோடிப் புறாவைக் கண்ணீர் மல்க சுற்றி வலம் வந்து அதன் அருகாமையில் அமர்ந்திருந்து அம்பு எய்த ரட்னாகரையும் தன் சோடியையும் மாறிமாறி சோகமாய்ப் பார்த்தபடி இருந்தது.

இச்சம்பவம் கொலைகாரன் ரட்னாகரை நெகிழவைத்தது மாத்திரமல்ல தன்னைத்தானே மீளாய்வு செய்யவும் தூண்டி விட்டது. அக்கணத்திலிருந்து அவர் தனது அம்பு வில்லை மாத்திரம் தூக்கி எறியவில்லை, அதனுடன் சேர்த்து கொள்ளை, கொலைவெறியையும் தூக்கி எறிந்துவிட்டார்.

துறவியாகித் தவம் இருந்தார்.

முனிவராகி வணக்கத்துக்கு உரியவரானார்.

இராமாயணம் படைத்து வால்மீகி முனிவரென அழைக்கப் பட்டார்.

ரட்னாகர் என்ற பயங்கரவாதி அழிந்துவிட்டான்.

ரட்னாகர் என்ற கொலைகாரன் அழிந்துவிட்டான்

ரட்னாகர் என்ற கொள்ளைக்காரன் அழிந்துவிட்டான்.

றட்னாகருக்குள் இருந்த அரக்கன், அசுரன், சூரன் அழிந்து விட்டான்.

'வால்மீகி முனிவர் றட்னாகரை அழித்துவிட்டாரல்லவா!'

**புதிய மனிதன்:**

ஒருவரது கண்கள் பார்வையை இழந்தால் புதிய கண்கள் பொருத்தப்படுகின்றன. சிறுநீரகம் பழுதுபட்டால் வேறு சிறுநீரகம் மாற்றப்படுகிறது, நுரையீரல் பழுதுபட்டால் இன்னொரு நுரையீரல் பொருத்தப்படுகிறது. இதய மாற்றுச் சத்திர சிகிச்சை மூலம், இயங்க மறுக்கும் இதயத்திற்குப் பதிலாக வேறு இதயம் பொருத்தப்படுகிறது. உடல் உறுப்புக்கள் யாவுமே மாற்றம் செய்யப்படுகின்றன. இதனால் புதிய மனிதர்களாக வாழ்கிறார்கள். முழு உடலையும் மாற்றுங்காலம் வெகுசீக்கிரம் அண்மித்துவிட்டது. பழைய உடலை நீக்கி புதிய உடலுடன் உலாவுவார்கள். எனவே பழையவர் அழிக்கப்பட்டுவிட்டாரல்லவா!

எதிர்காலத்தில் குற்றமே இயல்பாகக் கொண்ட, மாற்ற முடியாத குணங்களைக் கொண்ட குற்றவாளிகளின் முழு உடலையும் மாற்றிவிட்டால் மரணதண்டனை தேவை யில்லை. ஆம்! முழு உடலையும் மாற்றத்தான் போகிறது விஞ்ஞானம். இந்த வேகமாக வளர்ந்துவரும் மருத்துவ விஞ்ஞானம். ஒரு முதியவருக்குக் குழந்தையின் உடலைக் கொடுத்து அவரை புதியவராக்கத்தான் போகிறது.

ஒரு மனிதனிடத்திலேயே, இன்னொரு மனிதனை புதிய மனிதனாக்கும் இந்த அபார சக்தி இருக்கும்போது, நாம் ஏன் கடவுளை 'கொலைகாரராகப்' பார்க்க வேண்டும். புராணக் கதைகளின்படி நிச்சயமாக யாருமே கடவுளால் கொலை செய்யப்பட்டிருக்க முடியாது. கருத்தைப் பிழையாக விளங்கி அதை வழக்கப்படுத்தி மக்கள் பயத்துடன் சூரன்போர், தீபாவளி போன்ற கொண்டாட்டங்களைக் கொண்டாடி வருகிறார்கள். 'கொலையை' மாபெரும் கொண்டாட்டமாகக் கொண்டாடினால் கொலைகளையும், வன்முறைகளையும் நியாயப்படுத்துவதாக அமைந்துவிடும். தீயவர்கள் புதிய வாழ்வு வாழ, புதிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கவேண்டும்.

மரணம் நிகழ்வது போல தோன்றினாலும், அவர்கள் புதிய உள்ளம் கொண்டவர்களாக, புதிய உடலைக் கொண்டவர் களாக கருதப்பட்டுவிடுகிறார்கள். அவர்கள் மாற்றப்பட்டு விட்டார்கள். புதிய சிந்தனையும், புதிய செயல்பாடும் பெற்று புதியவர்களாகிவிட்டார்கள். அவர்களுக்குள் இருந்த தீயவை நீக்கப்பட்டுவிட்டன. அவர்களது நல்லவை, நல்ல செயல்கள் முக்கியத்துவமடையாமல் அவர்கள் தீயவர்களாக இருந்த பகுதி முக்கியத்துவம் பெற்று நிலைத்துவிட்டன. இதற்கு Negative Culture தான் காரணமாகும். எதற்குள்ளும் தீமைகளைப் பார்ப்பதும், கூடாத பகுதிகளையே பேசுவது நல்ல செயல்களைவிட தீய செயல்களை முக்கியப்படுத்துவது போன்றவையே.

- தீயநோக்கத்தை அழித்தல் துர்க்குணத்தை அழித்தல்.
- அரக்க கொலை வெறியை அழித்தல், அசுரத் தன்மையை அழித்தல்.

இவை யாவும் 'உயிரை' அழித்தல் என்று பொருளல்ல. 'கொலை' செய்தல் என்பது அல்ல. தீய, துர்க்குணம், அசுர, அரக்க குணங்களை, நோக்கங்களை, தன்மைகளை மாற்றி (Therapy) 'சங்காரம்' செய்ததாக, அதாவது புதிய மானிடர்களாக 'மறுபிறப்பு' எடுத்ததாகத்தான் கொள்ளவேண்டும். 'உயிரை' அழித்ததாகக் கொண்டால் சாதாரண மனிதனைவிட கடவுளின் செயல் கீழ்நிலையாகிவிடும். கடவுள் 'கொலை' செய்தவர் என்றால் அவர் தண்டனைக்குரியவர், தண்டிக்கப்பட வேண்டியவர்! மனித வாழ்வுக்குக் கடவுள் முன் உதாரணமாக இருக்க வேண்டியவரல்லவா?

**கடவுள்:**

அன்பானவர், கருணையானவர்,
ஆனந்தமானவர், காருண்ணியமுள்ளவர்,
கொலைவெறியில்லாதவர், கோபங்கொள்ளாதவர்,
நேயமானவர், சாபமிடாதவர்,
மனிதர்களுக்கு முன்னுதாரணமானவர்.

ᘓᘓᘓ

## அத்தியாயம் 59

# அலெக்சாண்டரின் இந்திய அனுபவம் : மரணத்தை நோக்கிய விழிப்பு

மஹா அலெக்ஸாண்டர் இந்தியா மீது படையெடுத்துச் (கி.மு. 327 - 325) செல்லும்போது தியோஜினிஸ் என்ற கிரேக்க ஞானியைச் சந்திக்க விரும்பினார். தியோஜினிஸ் (Diogenes) கிரேக்க நாட்டின் நதிக் கரையில் ஆடையின்றி விடியற்காலை வெயிலில் குளிர்ந்த மணலில் படுத்திருந்தார். விடியற் காலைப் பொழுது, இளம் சூரியன், குளிர்ந்த மணல். இந்தியாவை நோக்கிய பயணத்தில் தான் சந்திக்கச் சென்றவருடைய தோற்றத்தைப் பார்த்த அலெக்ஸாண்டர் திகைத்தார். ஆடை எதுவுமின்றி அழகானவராக இருந்தார். இவரோ எல்லா அலங்காரங்களையும் பூட்டிக்கொண்டும் எல்லா ஆபரணங் களையும் அணிந்தவராக இருந்தார். அவருக்கு முன்னால் பிச்சைக்காரனைப் போல் நின்றார் அலெக்ஸ்சாண்டர்.



Diogenes and Alexander

"உங்களோடு ஒப்பிடும் போது நான் ஏழையாக உள்ளேன். உங்களிடமோ ஒன்றுமேயில்லை. எது உங்களைச் செல்வந்தனாக்கி வைத்திருக்கிறது?" என்றார் அலெக்ஸாண்டர். "எனக்கு எந்த ஆசையும் இல்லை, என்னிடம் எதுவுமில்லை. எதுவும் என்னுடையது என்று இல்லாமல் இருப்பதே என் பலம். நான் என்னை

வென்றுவிட்டதால் உலகை வென்றுவிட்டேன். என்னுடைய வெற்றி என்னோடு வரப்போகிறது. உன்னுடைய வெற்றி நீ இறக்கும்போது உன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படப் போகிறது" என்றார்.

அலெக்ஸாண்டர் சற்றுத் திகைப்படைந்தார், அவர் இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்கவில்லை.

தியோஜினிஸ் : நீ எங்கே, எதற்காகப் போகிறாய்?

அலெக்ஸாண்டர் : இந்தியாவை வெல்லப்போகிறேன்.

தியோஜினிஸ் : இந்தியாவை வென்ற பின் என்ன செய்வாய்?

அலெக்ஸாண்டர் : உலகத்தை வெல்வேன்.

தியோஜினிஸ் : உலகம் முழுவதையும் வென்ற பின் என்ன செய்வாய்?

அலெக்ஸாண்டர் : அதற்குப்பின் நிம்மதியாக ஓய்வெடுப்பேன்.

தியோஜினிஸ் : சிரித்தார், தன் நாயைக் கூப்பிட்டார். நாயைப் பார்த்துக் கூறினார்: "இவர் சொல்வதைக் கேட்டாயா! உலகத்தை வென்றபின் இந்த மனிதர் ஓய்வெடுக்கப் போகிறாராம்! இங்கே நீ ஒரு சிறு இடத்தைக்கூட வெல்லாமல் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாய்!" என்று நாயிடம் கூறிவிட்டு, அலெக்சாண்டரிடம் தொடர்ந்தார் "ஓய்வுதான் உன்னுடைய கடைசி இலட்சியம் என்றால் இந்த அழகான ஆற்றங்கரையில் என்னுடனும், என் நாயுடனும் இங்கே இப்போதே நீ சேர்ந்துகொள்ளலாமே! இங்கே நம் எல்லோருக்கும் தேவையான இடம் இருக்கிறது. நான் இங்கே ஓய்வெடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். இறுதியில் ஓய்வெடுப்பதற்காக ஏன் உலகம் முழுவதும் துன்பம் துயரங்களை உருவாக்க வேண்டும்?

இப்போதே இங்கேயே நீ எங்களுடன் சேர்ந்து ஓய்வெடுக்கலாமே!" என்றார்.

அலெக்ஸாண்டர் : (சற்று வெட்கப்பட்டார்.) "நீங்கள் சொல்வது அறிவுப்பூர்வமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் இப்போது ஓய்வெடுக்க முடியாது. உலகத்தை முதலில் வென்று விட்டு வருகிறேன்."

தியோஜினிஸ் : "உலகத்தை வெல்வதற்கும், ஓய்வெடுப்பதற்கும் சம்பந்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. உலகத்தை வெல்லாமல் இங்கேயே நான் நிம்மதியாக ஓய்வெடுக்கவில்லையா?" என்று கேட்டார்.

அலெக்ஸாண்டர் : "நீங்கள் சொல்வது நியாயம்தான், ஆனால் நான் இந்தியாவைக் கைப்பற்றுவதற்காகப் புறப்பட்டுவிட்டேன். இடையில் நிறுத்த விருப்பமில்லை" என்றார்.

தியோஜினிஸ் : "நீ பாதிவழியைத் தாண்டமாட்டாய்" என்றார்.

(இந்தியாவை முழுமையாகக் கைப்பற்ற முடியாமல் தோல்வியடைந்த அலெக்ஸாண்டர் கிரீசை அடையவேயில்லை, பாதி வழியிலேயே இறந்துபோனார்.) வெறுங்கையுடனேயே இறந்துபோனார், இவ்வாறே சேர்க்கும் செல்வங்களை அனுபவிக்காமலேயே எல்லா அலெக்ஸாண்டர்களும் இறந்தே போகிறார்கள்.

இந்தியாவிற்குச் செல்லும்போது அலெக்ஸாண்டரின் ஆசிரியர் அரிஸ்ரோட்டில் அவரிடம் சொல்லியிருந்தார் "நீ திரும்பும்போது உன்னுடன் ஒரு இந்தியத் துறவியை அழைத்து வா, ஒரு இந்தியத் துறவியை நான் பார்க்க வேண்டும். இறப்புக்குப் பின் என்ன? ஆன்மா என்றால் என்ன? தியானம் என்றால் என்ன? சந்நியாசம் என்றால் என்ன? என்று தெரிந்து கொள்ளவேண்டும்" என்றார்

இந்தியாவிலிருந்து திரும்பும்போது அலெக்ஸாண்டர் இந்தியாவிலிருந்தவர்களிடம் விசாரித்து, அவர்கள் கூறியவரைச் சென்று சந்தித்தார். அவரது பெயர் தந்தமெஷ் (இந்தியப் பெயரைக் கிரேக்கர்கள் பிழையாகவும் உச்சரித்திருக்கலாம்.)

தந்தமெஷின் அருகாமையில் சென்றதும், தியோஜினிஸ் தான் அலெக்ஸாண்டருடைய நினைவுக்கு வந்தார். அதே அழகு, அதே பார்வை, அதே தோற்றம் "நான் அலெக்ஸாண்டர், உங்களை அழைத்துப் போக வந்திருக்கிறேன், என்னோடு வந்துவிடுங்கள். அரச விருந்தினராக இருக்கலாம். எல்லாச் சௌகரியங்களும் செய்து தருகிறேன். என்னோடு ஏதென்ஸுக்கு வாருங்கள்" என்றார். "வருவது போவது எல்லாமும் கழித்துவிட்டவன் நான். வந்தது யாருமில்லை சென்றது யாருமில்லை. வந்தவர் யாரோ அவர் யாருமில்லை, சென்றவர் யாரோ அவர் யாருமாக இல்லாதவர்" என்றார், அலெக்சாண்டருக்குப் புரியவில்லை. (துறவி சொன்ன கருத்து: இனி உலகுக்கு வருவதும் இல்லை, உலகத்திலிருந்து போவது மில்லை. வருவதையும் போவதையும் கடந்துவிட்டவன் நான், - கருவறைக்குள் வருவதையும், மரணத்துக்குள் போய்விடுவதை யும் கடந்துவிட்டேன்.)

அலெக்ஸாண்டர் : இது என் ஆணை வாருங்கள்.

தந்தமெஷ் : கடகடவென்று சிரித்தார். "யாரும் எனக்கு ஆணையிட முடியாது. மரணம் கூட எனக்கு ஆணையிட முடியாது" என்றார். துறவியின் பேச்சு தியோஜினிஸை இவருக்கு ஞாபகமூட்டியது.

அலெக்ஸாண்டர் : "வாளைப் பார்த்தான், என்னோடு வந்து விடுங்கள்" மிரட்டிப் பார்த்தான்.

தந்தமெஷ் : "நீ என்ன செய்வேன் என்று சொல்கிறாயோ அதை நான் என்றோ செய்துவிட்டேன். தலை உருண்டு விழும்போது உன்னோடு சேர்ந்து நானும் வேடிக்கை பார்ப்பேன்" என்றார்.

அலெக்ஸாண்டர் : "எப்படிப் பார்க்க முடியும்? நீங்கள் இறந்து விடுவீர்களே!" என்றார்.

தந்தமெஷ் : "நான் இனிமேல் இறக்க முடியாது. என்னுடைய மரணத்தை நீ வேடிக்கை பார்ப்பது போல் நானும் வேடிக்கை பார்ப்பேன், நீயும் பார்ப்பாய். இந்த உடலின் பயனும் நிறைவேறிவிடும். நான் ஏற்கனவே போய்ச் சேர்ந்துவிட்டவன். அந்த உடல் இனியும் இருக்க வேண்டிய தில்லை. தலையை வெட்டிச் சாய்த்துவிடு."

அலெக்சாண்டர் தன் வாளை உறையில் போட்டார். அவரை உற்று நோக்கினார். மரியாதையுடன் பின் நகர்ந்தார்.

அலெக்ஸாண்டர் இறக்கும்போது தியோஜினிஸ், தந்தமெஷ் இருவரையும் நினைவுகூர்ந்தார். "மரணத்தைத் தாண்டிய ஒன்று அவர்களிடம் இருந்தது. மரணத்துக்கு அப்பால் இருப்பதை அவர்களிடம் கண்டேன். அவர்களிடம் இருந்தது என்னிடம் இருக்கவில்லை, என்னிடமோ ஒன்று மில்லை" என்று அழுதான். தனது சேவகர்களை அழைத்தான். தான் இறந்த பின்பு தன்னுடைய உடலைக் கல்லறைக்குத் தூக்கிக் கொண்டுபோகும்போது தன் கைகளை வெளியே தொங்கப்போட்டு விடுங்கள் என்று ஆணையிட்டார். மந்திரிகள், சேவகர்கள் ஏன்? எதற்காக? என்று பௌவியமாகக் கேட்டனர்.

அலெக்ஸாண்டர் : "வெறுங்கையோடு வந்தேன், வெறுங்கை யோடு போகிறேன் என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். என் வாழ்க்கை முழுக்க வீணாகிப் போய்விட்டது. எல்லோரும் பார்க்கும்படியாக என் கைகள் வெளியே தொங்கட்டும். மாவீரன் அலெக்ஸாண்டர் எதையும் எடுத்துச் செல்ல வில்லை. வெறுங்கையோடுதான் போகி றான்" என்பதை உலகம் அறியட்டும் என்றார்.

இறந்தபின் அவ்வாறே இவரது உடல் கல்லறைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதையே புத்தர் கூறுகிறார்: "நீ உன்னையே வெல். இதை உன்னிடமிருந்து பிறர் எடுத்துக்கொள்ள முடியாது. எது உன்னிடமிருந்து பிறர் எடுத்துக் கொள்ள முடியாததோ அதுதான் உன்னுடையது. உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளக் கூடியது எதுவும் உன்னுடையதாகாது."

"சிதையில் உடல் எரியும்போது நீ எரிய மாட்டாய். உன்னை நீ அறிந்துகொண்டால், உனக்குள் இருக்கும் பிரக்ஞையை அறிந்துகொண்டால், உன் பிரக்ஞையை வெற்றி கொண்டிருந்தால் நீ எரிந்திருக்க மாட்டாய், உடல் எரிந்து விடும், உடல் சாம்பலாகிப் போய்விடும், ஆனால் நீ எரிந்திருக்க மாட்டாய். உன்னைத் தொடக்கூட முடியாது. நீ நித்தியமாகிப் போவாய். இந்த நித்தியம், உன்னை நீ வென்றபின்தான் சாத்தியம் என்கிறார் ஓசோ. பிறரை ஆண்டு உன் காலத்தை வீணாக்காதே! அதிகாரத்தை வென்று வீணாக்காதே! கௌரவத்தைத் தேடி வீணாக்காதே! உலகை வெல்வதற்காக வீணடித்துவிடாதே! உன்னையே வென்றுவிடு!!"

அலெக்சாண்டருக்கு வாழ்க்கையைப்பற்றி உணர்த்தியவரும் மரணம் பற்றிய விழிப்பை ஏற்படுத்தியவரும் இந்திய ஞானி தந்தமெஷ். இவரைச் சந்தித்த பின்பே மாவீரன் அலெக்சாண்டருக்குள் உள்மாற்றம் நிகழ்ந்து, தன்னைத்தானே மீளாய்வு செய்து, தான் இறந்த பின்பு தன் இரு கைகளையும் வெளியில் தொங்கவிட்டபடி கல்லறைக்குக் கொண்டுசெல்லும் படி கேட்டிருந்தார். 'மாவீரன் அலெக்ஸ்சாண்டர் போர் புரிந்தான், நாடுகளைக் கைப்பற்றினான். ஆனால் இறந்த பின்பு எதையும் தன்னுடன் கொண்டு செல்லவில்லை. வெறுங் கையுடனே போகிறான்' என்பதை உலகம் அறியட்டும் என்றார்.

பல நாடுகளை வென்ற அலெக்ஸாண்டருக்குத் தன்னைத் தானே வெல்ல முடியவில்லை. தன்னிடம் 'தான்' தோல்வி கண்டாலும் 'தான்' வெற்றி என்று நினைத்த அனைத்தையும்

தன் மரணத்துக்குச் சமர்ப்பித்து இறுதியில் தன்னை உணர்ந்து வென்றுவிட்டார்!

மரணத்தை நோக்கிய விழிப்புணர்வை கொடுத்தவர் ஆடையில்லாது நிர்வாணமாகத் திரிந்த கிரேக்க ஞானி தியோஜினிஸூம், உடலில் ஆடை எதுவுமில்லாத நிர்வாணமாக இருந்த இந்தியஞானி தந்தமெஷூம். இந்த இந்தியஞானி ஆய்வு செய்யப்பட வேண்டியவர். ஞானி தந்தமெஷின் வரலாறும், ஞானமும் வெளிக்கொணரப்பட வேண்டிய ஒன்றே!

**குறிப்பு:**

அலெக்சாண்டரின் இந்தியப் படையெடுப்புக்குப் பின்பு கிரேக்க மன்னன் (Menander) மெனன்டர் (பாளியில் மெலிண்டா Melinda) புத்த மதத்தைத் தழுவிக்கொண்டார்.

## அத்தியாயம் 60

# மறுபிறப்புக் கோட்பாடு: நேர இழப்புக்கு காரணமா?

**நே**ரத்தின் முக்கியத்துவம் பிறப்பின் கோட்பாட்டோடு தொடர்புடையது போல் தெரிகிறது. பல பிறப்புக்கள் கோட்பாட்டைக் கொண்ட இந்துசமயம், புத்தசமயம் பரவிய நாடான இந்தியா, இலங்கை, நேபாளம், திபெத், மியன்மார், தாய்லாந்து, வியட்நாம் போன்ற பல நாடுகள் நேரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இங்கே நேரம் தன் பெறுமதியை இழக்கிறது. பல பிறப்புக் கோட்பாட்டால் வாழ்வு தன் மகிமையை இழக்கிறது. சுலபமாக முற்பிறப்பில், கர்மாவில் பழி போடலாம். அதனால் வாழும் காலத்தில், நேரம் அதன் முக்கியத்துவத்தை இழக்கிறது. நல்லது நடந்தால் 'அதிஸ்டம்' என்றும், எதிர்பார்த்தது கைகூடாது விட்டால் 'விதி' என்றும் மனித முயற்சி மதிப்பிழக்கிறது.

யூதமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம் ஒரே ஒரு பிறப்பு என்ற கோட்பாட்டைக் கொண்டவை. கிறிஸ்தவ மதத்தை பின்பற்றும் மேற்குநாடுகள் சரியான நேரத்துக்கு துரிதமாக இயங்குகின்றன. நேரத்தைத் தவறவிடாமல் பயன்படுத்துகின்றன. ஒவ்வொரு வினாடியும் நகர நகர அவர்கள் வாழும் காலம் குறைகிறது, மறுபிறப்புக்கு இங்கு இட மில்லையே! எனவே இந்தப் பிறப்பில் ஏதாவது சாதிப்பதாயின் துரிதம், வேகம், நேரத்தை விரயம் செய்யாமை, ஒவ்வொரு வினாடியையும் பயனுள்ள வகையில் பயன்படுத்தல் போன்ற விடயங்களைக் கவனத்திற் கொள்ளவேண்டியுள்ளது. குறித்த நேரத்திற்குள் அனைத்தையும் கவனத்திற்கொண்டு உயர்வடைய வேண்டும். அதற்காகப் பேச்சைக் குறைத்து செயலாற்ற

வேண்டியுள்ளது. வாழ்வும், செயலும், நேரமும் எல்லாம் ஒன்றாக வேகமாக ஓடவேண்டியுள்ளது. Positive ஆக பார்ப்பதும், அடுத்த கட்டத்துக்கு வேகமாக நகர்வதும் இயல்பாகவுள்ளது. ஒரே ஒரு பிறப்புக் கோட்பாட்டால்தான் மேற்குலகம் அசுர வளர்ச்சி காண்கிறதா?

கிழக்கு மறுபிறப்புக் கோட்பாட்டையும் மேற்கு ஒரே ஒரு பிறப்புக் கோட்பாட்டையும் கொண்டிருப்பதால் வளர்ச்சியில் வேறுபாடு தெரிகிறது. கிழக்கில் மேலதிக நேரமுண்டு, இப்பிறப்பில் தவறினால் மறுபிறப்பில் பார்க்கலாம் என்ற நினைவு அவர்களை அறியாமலே பொதுவாக அவர்களின் மனதில் பதிந்துவிடுகின்றது. எது நடந்தாலும் 'கர்மா', விதியின் பயன் என்று கூறி ஒதுங்கிக்கொள்ளலாம். இப்பிறப்பில் கர்மாவுக்கு பரிகாரம் தேடி மறுபிறப்பிற்காக இப்பிறப்பில் வாழ்கிறார்கள். மேற்குலகம், ஒரே ஒரு பிறப்பைக் கருத்திற் கொண்டு, நேரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டியுள்ளதால் முழு ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது. சாதனையாளராக மாறவேண்டும், புதுமைகளைக் கண்டறிய வேண்டும், பார்த்த உலகத்தை அப்படியே விடாது, புதிய உலகம் படைக்கவேண்டும் என்ற தூண்டலினால் எதற்கும் ஒரு கால எல்லை வரையறுக்கப்படுகிறது.

'நேரம்' பட்ஜெட்டாகி (Time Budget) விடுகிறது. நிதிப் பட்ஜெட்டைவிட (Financial Budget) இது முக்கியமாகி விடுகிறது. காரணம் கிடைத்த இந்தப் பிறப்பில் அனைத்தையும் சாதித்து சாதனையாளராக மாறவேண்டும், புதுமைகளைக் கண்டறியவேண்டும், பார்த்த உலகத்தை அப்படியே விடாது, புதிய உலகம் படைக்க வேண்டும் என்ற தூண்டலும் சேர்ந்தே விடுகிறது.

பல பிறப்புக் கோட்பாடுகளை முன் நிறுத்தும் நாடுகளில், மறுபிறப்பிற்காக பல செயற்பாடுகள் நடைபெறுகின்றன, காரணம் மறுபிறப்பில் தாங்கள் நலமாக வாழவேண்டும் என்பதற்காக வழிபாட்டின் மூலம் பரிகாரம் செய்யப்படுகிறது. இங்கு வாழும் காலத்தைப் பற்றிய சிந்தனைகள் மேலோங்குவ தில்லை, அதாவது தாங்கள் வாழும் உலகத்தைவிட மறு உலகத்ததைப் பற்றிய எண்ணமே அதிகமாகக் காணப்படுகிறது. தாங்கள் இந்த உலகத்தில் தற்பொழுது வாழ்ந்து

கொண்டிருப்பது சொர்க்க உலகத்திற்கு செல்வதற்காகவே என்ற கருத்து மேலோங்கியுள்ளது.

இந்த உலகத்தில் எப்படி வாழவேண்டும் என்ற எண்ணத்தைவிட, மறு உலகத்தில் எப்படி இருக்கவேண்டும் என்றே சிந்திப்பதால், இந்த உலகத்தை முழுமையாகப் பார்க்க முடியாமல், குற்றமானதாக, தவறானதாகத் தெரிவதால், தங்களை பாவிகள் என்று நினைப்பதால், முரண்பாடான எண்ணங்கள் (Negative Ideas) அதிகரிக்கின்றன. எதுவும் சரியானதாகத் (Positive) தெரிவதில்லை. தவிர்க்கக் கூடியவற்றிற்கும், முக்கியமற்றதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஒரு பிறப்புக் கோட்பாடும், பல பிறப்புக் கோட்பாடும் மனிதர்களின் சிந்தனைகளை, வாழும் முறைகளை மாற்றியமைக்கிறது.

மனிதர்களுக்கு ஒரே ஒரு பிறப்புத்தான் என்று ஒரே ஒரு பிறப்புக் கோட்பாடு நேர முக்கியத்துவத்துடன் சம்பந்தப் படுகிறது. பிறப்பை முழுமையாக முழு ஆற்றலுடன் பயன்படுத்தத் தூண்டுகிறது. வாழ்க்கையின் வேகத்தை துரிதப்படுத்துகிறது. இங்கு 'நேரம்' (Time) 'வேகம்' (Speed) உள்ளடங்குகிறது. இக்கோட்பாடு உள்ள நாடுகளில் நேரம் தவறாமல் கருமமாற்றுகிறார்கள். இதனால் நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்த நாடுகளின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கிறது. சுருக்கமாகப் பேசி, நேர தாமதமாகாது கருமமாற்றி, நேரத்தை வீண்விரயம் செய்யாது பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொருவரும் 'நேரவங்கியாக' (Time-Bank) உள்ளார்கள்.

நேர அடிப்படையில்தான் வேலைக்கு ஊதியம் வழங்கப்படுகிறது, மற்றும் நன்றி கூறும்போதும் 'உங்கள் நேரத்துக்கு நன்றி' (Thanks for your time) என்று ஒரு பிறப்பு கோட்பாடுடைய நாட்டு மக்கள் கூறுகிறார்கள். பல பிறப்புக் கோட்பாடுடையவர்கள் நேரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காது, சுறுசுறுப்பாக இயங்காது. கால தாமதம் பற்றி அக்கறை இல்லாது, பல கொண்டாட்டங்களில், நிகழ்ச்சிகளில், பொதுக் கூட்டங்களில் நேரம் புறக்கணிக்கப்படுகிறது. சுருக்கமாகக் கூறின் பொதுவாகக் கிழக்கிற்கும் மேற்கிற்கும் (ஒரு பிறப்பு, மறு பிறப்பு) இடையே நேரத்தை பயன்படுத்தும் முறையில் வேறுபாடு உண்டு.

**நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் கவிதை ஒன்று:**

ஒரு வருடத்தின் பெறுமதியை
வருடாந்தப் பரீட்சையில் தோல்வியடைந்த மாணவனைக்
கேட்டுப் பாருங்கள்.

ஒரு மாதத்தின் பெறுமதியை
குறைமாதத்தில் குழந்தைபெற்ற தாயைக்
கேட்டுப் பாருங்கள்.

ஒரு வாரத்தின் பெறுமதியை
வாராந்த நாளிதழின் ஆசிரியரைக் கேட்டுப் பாருங்கள்

ஒரு நாளின் பெறுமதியை
தினக்கூலிக்கு வேலைசெய்யும் தொழிலாளியைக்
கேட்டுப் பாருங்கள்

ஒரு மணித்தியாலத்தின் பெறுமதியை
சந்திக்கக் காத்திருக்கும் காதலர்களைக்
கேட்டுப் பாருங்கள்.

ஒரு நிமிடத்தின் பெறுமதியை
கடைசி பஸ் வண்டியைத் தவறவிட்ட பிரயாணியைக்
கேட்டுப் பாருங்கள்.

ஒரு வினாடியின் பெறுமதியை
விபத்தில் உயிர் தப்பிய மனிதரைக் கேட்டுப் பாருங்கள்.

ஒரு மில்லி விநாடியின் பெறுமதியை
ஒலிம்பிக் பதக்கத்தை தவறவிட்ட ஓட்டவீரனைக்
கேட்டுப் பாருங்கள்.

ஒலிம்பிக் போட்டியில் அதிக பதக்கங்களைக் குவிக்கும் நாடுகள் ஒரே ஒரு பிறப்புக் கோட்பாடுடைய நாடுகளாகத் தான் இருக்கின்றன. விளையாட்டுக்களில் அதிகம் சிறந்து விளங்கும் நாடுகளும் அத்தகைய நாடுகளாகத்தான் இருக்கின்றன. 'அதிக நேரம்' எடுக்கும் விளையாட்டுக்களில் பொதுவாக மறுபிறப்புக் கோட்பாடு உள்ள நாடுகள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்துகின்றன.

ஒலிம்பிக் ஓட்ட வீரர்கள் தாங்கள் பங்கு பற்றும் போட்டியில் ஓட்ட நேரத்தை எவ்வளவுக்கு குறைக்க முடியுமோ, அவ்வளவுக்கு குறைக்கும்போது சாதனையாளராக மாறுகிறார்கள். நேரத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டு என்று பாருங்கள். அடுத்த ஒலிம்பிக் போட்டி 4 வருட இடைவெளிக்குப் பின்தான் நடைபெறும், எனவே ஓட்ட வீரன், தான் பங்குபற்றும் இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட அவனுக்கு மனம் இடங்கொடுக்க மாட்டாது. இதுதான் அவர்களது ஒரே ஒரு வாழ்வு, ஒலிம்பிக் அவர்களுக்கு ஒரே ஒரு பிறப்புப்போல அதனால் 'நேரம்' இங்கு முக்கியத்துவ மடைகிறது. அதாவது ஒவ்வொரு வருடமும் ஒலிம்பிக் நடைபெறுமாயின் பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்ற நிலைக்கு மனம் ஏற்புடையதாகி, நேரத்தின் மதிப்பை இழக்கச் செய்துவிடும். மனம் முழுமையான திறனுடன் செயலாற்றும் போது நேரம் என்பதே தென்படாது வெளிப்படும் ஆற்றலுக்கும் முடிவே இருக்காது.

உலகில் கவிஞர்களது, ஓவியர்களது படைப்புக்கள் நிறையக் கருத்துகளை சுருங்கக்கூறி விளங்க வைக்கின்றன. அவை அனைத்தும் நேரத்தின் முக்கியத்துவத்தை காட்டுகின்றன. அவர்கள் நேரத்தின் பெறுமதியை மேலும் பெறுமதியாக்கு கிறார்கள்.

சமண மத முன்னோடி மகாவீரர் "ஒருவர் சமாதி நிலையில் பிரவேசிக்கிறபோது முற்றிலுமாய் மாறுகிற அடிப்படை விடயம் நேரமே - நேரத்திற்கு ஒரு நிறுத்தம் ஏற்படும்" என்கிறார். சென்மார்க்க மத துறவியான பொகூஜு (Bokuju) 25 வயதில் ஞானம் பெற்றவர். "நான் நேரத்தைப்பற்றி அறியவில்லை, நேரத்துக்கு என்னவாயிற்று? அது நின்று விட்டதா" என்றார் பொகூஜு. இவர் சுறுசுறுப்பாக இயங்கிய ஒருவர்.

பயன்பாட்டில்தான் நேரத்தை உணரமுடியும். விடுமுறை நாட்களில் பொழுது விரைவில் நகர்ந்துவிட்ட மாதிரி தெரிகிறது. கடினமான நாட்களில், சங்கடமான நேரங்களில் நேரம் நகராத மாதிரி தெரியும். குழந்தையானது நேரத்தை குறைந்தளவில் உணர்வதால், நேரம் ஒரு பிரச்சினையாகத் தெரியாது. குழந்தையானது நிறைவாய், முழுமையாய் இருக்கிறது. ஆனால்

வளர்ந்துவிட்ட ஒருவர் வெறுமையை, தனிமையை உணர்வதால் நேரம் நீண்டதாய்த் தோன்றும். நேரம் ஒரு பிரச்சினையாய் தெரியும், அதே வேளை குழந்தைகளுக்கு அப்படியில்லை.

மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையால் கிழக்கத்திய நாடுகளில் காலம் முடிவற்றதாகவும், எவ்வித அவசரம் இல்லாததாகவும் இருக்கிறது. இந்த நம்பிக்கை இருப்பதால் நேரம் அர்த்தம் அற்றதாகிவிட்டது. இறப்பென்பதே இல்லை என்றால் 'நேர இழப்பும்' அர்த்தமற்றதாகிறது. எனவே காலம் 'நேரம்' முடிவற்றதாகிவிடுகிறது. நேரத்தைப்பற்றிய எண்ணமே இருக்காது.

மேற்கத்திய நாடுகளில் ஒருபிறப்புக் கோட்பாடு அதிகம். ஒரே ஒரு பிறப்பு - ஒரே ஒரு வாழ்வு - மீண்டும் பிறப்பில்லை - மறு பிறப்பில்லை என்றால் 'நேரம்' முக்கியத்துவமடைகிறது. ஒவ்வொரு வினாடியையும் பிரயோசனமில்லாமல் இழக்க விருப்பம் ஏற்படாது, நேரமானது 'உயிராகக்' கருதப்படும். 'நேர' உணர்வு கொண்டவராகிவிடுவோம். மறுபிறப்பில்லை என்றால் 'இறப்பு' அர்த்தமுள்ளதாகிவிடும். வாழும்போது அனைத்தின் மீதும் கவனம் ஏற்படும். எதையும் இழக்க மனம் இடம் தராது. 'நேரம்' நகர்வதை உணர்வோம், 'நேர' இழப்பானது - கிடைத்த ஒரு பிறப்பையும் வீணடிக்கிறதாக நினைக்கத் தோன்றும்.

நேர இழப்பானது பிறப்பை வீணாக்குகிறது. வாழும் காலத்தை வரையறுத்துவிட்டால் நேரமானது பயனுள்ள, பெறுமதியானதாகிவிடும். அப்போது வாழ்வு வளமாகி, செழிப்பாகிவிடும். குறைந்த அளவு நேரம் கொண்ட இப்பிறப்பில் நேரத்தைத் தவறவிடாமல் வாழவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் பதிய வைத்தால் சாதனையாளராகி விடுவோம். வாழ்வு பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைந்துவிடும்.

## அத்தியாயம் 61

# புத்தரின் இறுதி நிகழ்வு: தியான நிலையும் இறுதி நிலையும் ஒன்றே

**பு**த்தர் (கி.மு. *566 - 486*) குக்ஷி நகரில் (Kushinagar) தனது இறுதி போதனையையும், தியானத்தையும் முடித்துக்கொண்டு 'என் உடல் பிரிந்து போவதற்குரிய நேரம் இதுதான்' என கௌதம புத்தர் தன் சீடர்களுக்குக் கூறினார். எதைக் குறிப்பிடுகிறார் என்பது சீடர்களுக்குக் கொஞ்சம் குழப்ப மானதாக இருந்தது. புத்தர் 'நான் என் உடலைவிட்டுப் பிரிந்துசெல்லப் போகின்றேன். மலைகள், ஆறுகள், மரங்கள், மனிதர்கள், விலங்கினங்கள் இவற்றுடன் வாழ்ந்துவிட்டேன்' என்றார். அங்கு உயர்ந்து நின்ற இரண்டு அரசமரங்களை (Saal Tree) சுட்டிக்காட்டி, 'அந்த மரங்களுக்கிடையில் என்னுடலை விட்டுச் செல்லப்போகிறேன், அந்த இடம் உகந்த இடமாகத் தெரிகிறது' என்றார்.

மரணத்தை ஒரு தீர்மானம் (Decision) எடுப்பதுபோல் புத்தர் எடுத்தார். புத்தர் போன்றவர்களை மரணம் நோக்கி வருவதில்லை, இவர்கள் தங்கள் உடலை மரணத்துக்கு அர்ப்பணிக்கத் தயாராகிறார்கள். கௌதம புத்தருக்கு மரணமானது அவரது தெரிவாக அமைகிறது. அந்த Saal மரங்களுக்கிடையில் அவர் போய் அமர்ந்துகொண்டார். "நீங்கள் ஞானம் அடைந்த ஒருவரைச் சந்திப்பீர்கள். என்னை இனிமேல் பார்க்கமாட்டீர்கள். உடலை விட்டுப் பிரியமுதல் ஏதாவது கேள்விகள் இருந்தால் கேளுங்கள்" என்றார். சீடர்கள் அழுதனர். "நீங்கள் 42 வருடங்களாகப் பதிலளித்துவிட்டீர்கள். எங்கள் ஐயங்களைத் தீர்த்துவிட்டீர்கள். நீங்கள் காட்டிய பாதையை நாங்கள் தொடருவோம்" என்றனர்.

புத்தர் கண்களை மூடினார், தியானிப்பது போல் இருந்தது: புத்தர் மரண படிநிலைகளைச் சீடர்களுக்கு விளக்குகிறார்.

- "முதலாவது படியை எடுக்கிறேன் - நான் இப்போது உடலாக இல்லை."
- "இரண்டாவது படியை எடுக்கிறேன் - நான் மனமாக இல்லை."
- "மூன்றாவது படியை எடுக்கிறேன் - நான் இதயமாக இல்லை."
- "நான்காவது படியை எடுக்கிறேன் - நான் எனது பிரக்ஞைக்குள் (Consciousness) பிரவேசிக்கிறேன்." - என்று கூறும்போது நிசப்தமானார்.

தியானமானது எப்படிப் படிப்படியாக உடலைக் கடந்து, மனதைக் கடந்து, உணர்வைக் கடந்து வெறுமைக்குள் பிரவேசிக்கிறதோ, அதே படிமுறைகளில்தான் உயிரும் உடலைவிட்டுப் பிரிவதைச் சீடர்கள் அவதானித்தனர். தியானமும், மரணமும் மனிதனை ஒரே நிலைக்குக் கொண்டு செல்கின்றன. இதனால்தான் ஞானிகள் மரணநிலையை அனுபவித்து மீண்டும் உயிர்பெற்றுள்ளார்கள்.

இறுதிநிலை அச்சமுள்ள நிலையாகவே கருதப்பட்டு வருகிறது. மரணம் முடிவல்ல, இது ஒரு புதிய வாழ்வின் ஆரம்பம்.



Buddha's death

## அத்தியாயம் 62

# மனவழி மூலம் மனவெளி உரையாடல் (Telepathy)

'மனிதன் வெறும் உடல் மட்டுமல்ல, வடிவமற்ற பகுதியுமானவன்' என்று சித்தர்கள், யோகிகள், ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆழ்நிலைத் தியான நிலையில் தங்கள் உடலைவிட்டுப் பிரிந்து விலகி நின்று தங்கள் உடலைப் பார்க்கும் அனுபவத்தைப் பெற்றவர்கள் அவர்கள். ஆன்மிக ஞானம் எழுத்தில் இருக்கவில்லை. அது வாய்வழி மூலம்தான் பரவியது. அதை எழுத்து வடிவில் கொண்டுவரும்போது பல இடைச்செருகல்கள் புகுந்து உண்மையான ஞானம் தூர விலகிவிட்டது எனலாம்.

மனோசக்தியால் மற்றவர்களைச் செயல்படுத்தவும், டெலிபதியால் (Telepathy) எங்கோ நடப்பதை மனக்கண்ணால் பார்க்கவும் முடியுமென்கின்றனர். எந்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் இல்லாமலும், கருவிகள் இல்லாமலும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள ஒருவரோடு தொடர்புகொள்ளலாம் என்கின்றனர் சித்தர்கள். வானொலி நிலையம் எங்கோ ஓரிடத்திலிருந்து நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப நாம் இன்னோரிடத்திலிருந்து கேட்கிறோமல்லவா! அவை அலைவரிசையாக வந்து சேர்வதைப் போல் மன எண்ணங்களும் அலைவரிசையாகக் குறிப்பிட்டவரைச் சென்றடைகின்றது. எங்கேயோ நடப்பதை டெலிபதியில் (Telepathy) மனத்திரையில் பார்த்தவர்கள் ரிஷிகள். மேலான நிலையில் உள்ள ஆவிகள் இதற்கான ஊடகமாக இருந்தனவா?

உடலுடன் வேறு ஏதோ ஒன்று தொடர்புடையதாக இருக்கிறதென்று அறிவியலானது கண்டுபிடிக்கும்போது,

மறுபிறப்பு உண்மையாகிவிடும். விஞ்ஞானம் உண்மையைக் காண்பது மட்டுமல்லாமல் விளக்கியும் சொல்லிவிடும். சித்தர்களது, யோகிகளது, முனிவர்களது கூற்றை விஞ்ஞானம் உறுதிப்படுத்தும்போது விளக்கமும், நம்பகத் தன்மையும் எளிதாகக் கிடைத்துவிடும்.

*5000* ஆண்டுகளாகப் பல வகையான விவாதங்கள் எழுந்துவிட்டன. எதுவும் நிரூபணமாகவில்லை. ஆவி, மறுபிறப்பு இவற்றை நம்புகிறவர்கள் அது இருப்பதாக நம்புவதுபோல, அதை நம்பாதவர்களும் சம எண்ணிக்கையில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆதாரபூர்வமாக நிரூபித்தாலும் நம்பாதவர்களது மனமானது மூடப்பட்டதாகவே இருக்கும். ஏற்கனவே நம்பிக்கொண்டவர்களைத்தான் நம்பவைக்க முடியும். நம்பிக்கையற்றவர்களை நம்பவைக்கவே முடியாது. தர்க்கம் இதைக் கண்டுபிடிக்கும் சக்தியற்றது.

ஆன்மா, ஆவி, மறுபிறப்பு உண்டென்று இந்துக்களை நம்பவைக்கலாம், ஏனென்றால் இது இந்து மதத்தின் நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். எவ்வளவுதான் முயற்சித் தாலும் ஒரு முகமதியரை, கிறிஸ்தவரை நம்பவைக்க முடியாது. இவர்களை மறுபிறப்பில்லை என்று சுலபமாக நம்பவைக்க முடியும். ஏற்கனவே நம்பிக்கை கொண்டவரை நம்பவைக்கத் தான் தர்க்கம் பயன்படும். அறிவியல் நம்பிக்கை மீது நிற்பதன்று. இது ஆய்வு செய்யவே விரும்பும். எந்த விசாரணைக்கும், யதார்த்த சோதனைக்கும், ஆய்வுக்கும் தயாராக இருப்பதுதான் அறிவியல். தத்துவமும், தர்க்கமும் ஒன்றுக்கொன்று எதிராகவோ, ஆதரவாகவோ இருக்கும்.

நான் வாசித்து அறிந்ததை இங்கு என்னால் முடிந்தவரை விவரமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். இவை சரியானவையா, தவறானவையா என்பதை என்னால் நிரூபிக்க முடியாது. வாசகர்களாகிய உங்களுக்கு இவற்றை ஒரு தகவலாகத் தருகின்றேன். நிரூபிக்கவோ, நியாயப்படுத்தவோ, வாதிடவோ, அல்லது உங்களைக் குழப்பவோ நான் முற்படவில்லை.

உயிரைக் கண்டுபிடிக்க கண்ணாடிப் பேழைச் சோதனைகளை ஆய்வாளர்கள் செய்துபார்த்தும், விடைகாண முடியவில்லை. உயிருக்கு எடை உண்டா? பிரான்ஸ் நாட்டில்

றைன் என்ற ஆய்வாளர் தனது ஆராய்ச்சிக்காக இறக்கப்போகும் மனிதனைக் கண்ணாடிப் பேழையினுள் வைத்துப் பரிசோதனை செய்தார்.

அம்மனிதன் இறந்தபோது கண்ணாடிப் பேழையை உடைத்துக்கொண்டு உயிர் வெளியே சென்றதற்கு ஆதாரமாக வெடிப்போ, துளையோ, பிளவோ எதுவும் காணப்படவில்லை. கதிரொளிபோலவே உயிரும் கண்ணாடிச் சுவரை ஊடுருவிச் சென்றிருக்க வேண்டும். 'X-Ray' கதிர்கள் எலும்பையும், இரும்பையும் ஊடுருவிச் செல்வதுபோல் உயிரும் ஊடுருவிச் சென்றிருக்கலாம். தர்க்க ரீதியாகப் பார்த்தால் அப்படித்தான் இருக்கவேண்டும்.

நாம் எடை என்று எதனைக் குறிப்பிட்டாலும் அது புவியீர்ப்புச் சக்தியுடன் தொடர்புடையது. நிலாவில் இறங்கிய விண்வெளியாளர்களின் எடை மிகமிகக் குறைவாக அங்கிருந்தது. பூமியின் ஈர்ப்பு எல்லையைத் தாண்டியவுடன் மனிதர்கள் சுத்தமாக எடையற்றவராகிவிடுகிறார்கள். விண்வெளிப் பயணிகள் தங்களை விண்கலத்துடன் பிணைத்துக் கட்டிக்கொண்டுதான் வெளியே வருகிறார்கள். எடை குறைந்த மனிதர்களாகிவிடுவதால் பலூனைப் போல் மிதந்து செல் கிறார்கள்.

'உயிரை' ஈர்க்கும் சக்தி பூமிக்கு இல்லாமல் இருக்கக்கூடும். 'உயிர்' மேல் பூமியின் ஆதிக்கம் செல்லுபடியாகவில்லை. உயிருக்கு எடையில்லை. அதனால்தான் பாரிஸ் நகரிலும் மற்ற இடங்களிலும் நடைபெற்ற கண்ணாடிப் பேழைச் சோதனைகள் தோற்றுவிட்டன. இந்தப் பூமியின் சகல விதிகளுக்கும் வெளியே இருப்பது 'உயிர்.' சித்தர்கள், யோகிகள், ரிஷிகள் கூறிய இரகசியத்தை விஞ்ஞானம் என்றோ ஒரு நாள் நிரூபிக்கப் போகிறது. ஆராய்ச்சியின் உச்சக்கட்டமாக என்றோ ஒரு நாள் இந்த வளரும் விஞ்ஞானத்திடம் 'உயிர்' அகப்படத்தான் போகிறது.

**விண்வெளியில் தொடர்பு சாதனங்கள் செயலிழந்தால் டெலிபதி (Telepathy) மாற்று வழியாகுமா?**

இப்போது விண்வெளிப் பிரயாணம் நாகரிகமாகிவிட்டது. அடுத்தது செவ்வாய்க் கிரகப் பிரவேசம். விண்வெளியில்







இயந்திரக் கோளாறு ஏற்பட்டு விண்வெளிப் பயணிக்கு என்ன நடந்ததென்று தெரியாமற்போன சம்பவங்கள் உண்டு. அமெரிக்காவில் கேப் கனவறலில் (Cape Canavarel) அமைந்துள்ள நாசா (N.A.S.A) விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து *16ம்* திகதி தை மாதம் *2003ம்* ஆண்டு விண்வெளிக்கு ஏவப்பட்ட கொலம்பியா விண்வெளிக் கலத்தில் (Columbia Space Shuttle) இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் கல்பனா சௌலா (வயது *41*- விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண்மணி) உட்பட மொத்தமாக *7* விண்வெளி விஞ்ஞானிகள் இருந்தனர். *1ஆம்* திகதி மாசி மாதம் *2003* காலை *9* மணிக்குத் தரையிறங்க வேண்டிய அன்று விண்வெளிக்கலம் டெக்சாஸ் (Texas) நகருக்குமேல் விண்வெளியில் எரிந்து சாம்பலானது. விண்ணை ஆய்வு செய்த அந்த *7* விண்வெளி விஞ்ஞானிகளும் (Space Astronauts) விண்ணில் சங்கமமானார்கள்.



Kalpana chowla

இந்தக் கோரச் சம்பவத்திற்கு முதல் நாள் இந்தியாவில் டாக்டர் கல்பனா சௌலா குடும்பத்தினரது வீட்டுக்கு முன்பாக அரைகுறை ஆடையணிந்து பைத்தியகாரன் போல் காணப்பட்ட ஒருவர். 'சாம்பலாவார் கள், வரமாட்டார்கள்' என்று உரத்த குரலில் சப்தமாகச் சொன்னதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன. *(இந்தச் செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை என்பதை நூலாசிரியர் ஆகிய நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.)*

விண்வெளிக் கலத்திற்கும் விண்வெளி மையத்திற்கும் இடையில் தொடர்புகள் திடீரென்று நின்றன. தகவல் பரிவர்த்தனைகள் ஸ்தம்பிதமடைந்தன. ஒருவரோடு ஒருவர்

தொடர்புகள் எதுவுமற்று தகவல்கள் பரிமாற முடியவில்லை. விண்வெளிக் கலத்தில் ஏற்பட்ட கோளாறினால் இந்தப் பாரிய விபத்து ஏற்பட்டது. இவர்கள் தாங்கள் பெற்ற விண்வெளி அறிவுடனும் அனுபவத்துடனும் விண்வெளியில் காணாமல் போய்விட்டார்கள்.

பூமியுடன் தொடர்பு மேற்கொள்ள முடியாமல் இந்த விபத்து நேர்ந்தது. தொலைத் தொடர்பு சாதனங்கள் பழுதடைந்துவிட்டால் மனோசக்தி மூலம் 'Telepathy' தொடர்பு கொண்டு பாரிய விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க வழி உண்டு. விண்வெளியில் விபத்து நடந்தால் பெரிய இழப்பு. விண்வெளிப் பிரயாணங்களில் அக்கறை காட்டும் விஞ்ஞான உலகம் 'Telepathy' ஞானத்திலும் ஆர்வம் காட்ட வேண்டும். விண்வெளி ஆய்வுக் கூடங்களில் 'Telepathy' ஞானம் உள்ளவர்கள் இருக்கவேண்டும். விண்வெளிக்கோ, செவ்வாய்க் கிரகத்திற்கோ செல்லும் விஞ்ஞானிகள் Telepathy வல்லுநர் களாகவும் இருக்கவேண்டும். பூமியிருந்து அவர்களுடன் தொடர்புகொள்ளும் விஞ்ஞானிகளும் Telepathy வல்லுநர்களாக இருக்க வேண்டும். அவசரத் தொடர்புகளுக்கு இதுவும் ஒரு மாற்று வழியல்லவா!

மாபெரும் ஞானிகள் உள்ளதேசம் இந்தியா. இத்துறைக்கு இந்தியா முன்னோடியாக இருந்து உலகுக்கு வழிகாட்ட வேண்டும். மெஞ்ஞானத்துடன் இணைந்து வளரும் விஞ்ஞானம் உன்னத உலகத்தைப் படைக்கும்!

## கீதை உபதேசம் மனவழி உரையாடலா (Telepathy)?

கண்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையில் நடந்த உரையாடல் மனவழி மூலம் மனவெளியில் நடந்திருக்க வேண்டும். சொற்கள் கொண்டு ஒலிவடிவில் நிகழ்ந்திருக்காது என நினைக்கிறேன். குருச்க்ஷேத்திரப் போரில் வேறு யாரும் அதைக் கேட்டதாகத் தெரியவில்லை. கேட்டிருந்தால் அர்ச்சுனனின் தேரைச் சுற்றி ஒரு கூட்டம் சேர்ந்திருக்குமே. கௌரவர்களுக்கும் கேட்டிருக்குமே! உரையாடல் நடந்ததற்கான அறிகுறியே யாருக்கும் தென்படவில்லை. இது மனவெளியில் நடந்த உள் உரையாடலாகத்தான் இருக்க வேண்டும். இந்த உரையாடல் மிகச் சுருக்கமாக இருந்திருக்க வேண்டும்.

பின்பு இது ஒரு கவிஞனால் நீண்ட வடிவம் பெற்றிருக்க வேண்டும். கீதையைப் படிப்பதற்கு 3, 4 மணித்தியாலங்கள் குறைந்தது தேவை. போர்க்களத்தின் நடுவில் நின்றுகொண்டு ஒரு சமயச் சொற்பொழிவு செய்வது அசாத்தியமானது. போரின்போது கண்ணன் மனவழிமூலம் (Telepathy) அர்ச்சுனனிடம் உரையாடியிருக்கலாம். அது மனவெளியில் நடந்த உள் உரையாடலாக இருக்கவேண்டும்.

போர்க்களத்திலிருந்து வெகுதூரத்தில் தன் மாளிகையில் அமர்ந்திருக்கும் திருதராட்டிரனுக்கு சஞ்சயன் போரில் நடந்து கொண்டிருப்பதை நேரடியாக அஞ்சல் செய்கிறார், வர்ணிக்கிறார் எப்படி முடிந்தது? அதுதான் டெலிபதி (Telepathy) என்னும் தொலைவில் உணரும் ஆற்றல். சஞ்சயன் அதை மனவெளியில் உணர்ந்ததும் திருதராட்டினனுக்குச் சொற்களால் விளக்கினார். சஞ்சயனுக்குத் தொலைவில் உணரும் ஆற்றல் மட்டுமல்ல, அதைப் பார்க்கும் ஆற்றலும் இருந்திருக்க வேண்டும். மனவெளிதான் அப்போது Satellite ஆகத் தொழிற்பட்டிருக்கிறது.

பாரதம், கீதை இவற்றின் உண்மை, பொய்யை நான் ஆராயவில்லை. வாக்கு வாதத்திற்கும், தர்க்கத்திற்கும் நான் செல்லவில்லை. நம்பகத்தன்மை, வேற்றுமைகள், நியாயம், அநியாயம் ஏற்றுக்கொள்ளல், நிராகரிப்பு போன்றவற்றை நான் ஆராயவில்லை. சரி, பிழை பாராது அவற்றைக் கதைகளாக நோக்கி எனக்குத் தோன்றிய கருத்துகளை Telepathy யைப் பற்றி எழுதும்போது உதாரணத்திற்காகவும் விளக்கத்திற்காகவும் இங்கு குறிப்பிட்டிருக்கிறேன்.

**தொலைதூரப் பார்வை:** அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் வசித்த 'டெட்' (Ted) என்பவரது கண்களின் கருமணிகள் தொலைதூரத்தில் உள்ளதை ஊடுருவி எடுத்துவிடுமாம்.

**தொலை தூரத்துக்கு செய்தி அனுப்புதல்:** ரஷ்யாவில் பியாதோவ் என்பவர் இருந்தார் அவரால் 1000 மைல் களுக்கப்பால் உள்ளவர்களுக்குக்கூட மனோசக்தி மூலம் (Telepathy) செய்தி அனுப்ப முடிந்தது. தன் மனதில் ஆழமாக நினைப்பதன் மூலம் அந்தச் செய்தி குறிப்பிட்ட நபரை சென்றடைந்துவிடுமாம்.

## சித்தர் போகரை சீனா வரும்படி மனவழிமூலம் (Telepathy) வேண்டுகோள்





சித்தர் போகர், சித்தர் காளங்கி நாதரின் சீடர் ஆவார். இந்தியா விலிருந்து சென்ற காளங்கிநாதர் சீனாவில் மூலிகை மருத்துவத்தையும் சித்த விஞ்ஞானத்தையும் பரப்பியவர். தமிழ்நாட்டில் பழநியில் இருந்த தனது சீடன் போகரை சீனாவிற்கு உடனே வரும்படி மனவழிமுலம் செய்தி அனுப்பினார். அதை மனவழி மூலம் பெற்றுக்கொண்ட போகர் விமானம் நிர்மாணித்தும், அட்டமாசித்திக் கலையை பிரயோகித்தும் பறந்து சீனா சென்றடைந்தார். அங்கு தன் குருவைச் சந்தித்தார். போகருக்கு நீடித்த காலம் வாழும் காயகல்ப கலையையும், அதற்கான மூலிகைத் தயாரிப்பையும் விளக்கிவிட்டு தன் பணியைத் தொடரும்படி கேட்டுக்கொண்டுவிட்டு காளங்கிநாதர் சமாதிநிலைக்குச் சென்றுவிட்டார் என அபிதான சிந்தாமணி, தமிழ்மொழி அகராதி என்ற நூல்களில் சித்தர்களைப்பற்றிய பகுதியில் காணப்படுகிறது.

### பாரதத்தில் சீனதேச சித்தர்கள்:


போகர் சமாதி - பழனி

காளங்கிநாதர் காசியில் பிறந்து சீனாவில் சித்த விஞ்ஞானத்தைப் பரப்பி பின் காஞ்சிபுரத்தில் சமாதியானார் எனவும், இதை மறுத்து அவர் சீனாவில் பிறந்து இந்தியாவில் திருமூலரின் சீடனாக இருந்து பின்பு சீனா சென்று சமாதி யானார் எனவும் தகவல்கள் கூறுகின்றன. இவரது சீடரான போகர் சீன தேசத்தவர் எனவும், போகரின் சீடரான புலிப்பாண்டியும் சீனதேசத்தவரே எனவும் இவர்கள் இருவரும் பழனியில் சமாதியானார்கள் எனவும் ஏடுகள்

கூறுகின்றன. பிறிதொரு சீன தேசத்துச் சித்தரான அழுக்கண்ணர் திருக்குறுங்குடியில் சமாதியானார் என ஏடுகள் கூறுகின்றன.

**கதிர்காமத்தில் போகர்:**



போகர் பழனியில் சமாதி எய்துவதற்கு முன் அவர் இலங்கையிலுள்ள கதிர்காமத் திற்குச் சென்று 1008 தாமரை இதழ் வடிவம்கொண்ட யந்திர ஸ்தலம் (Yantra Shrine) அமைத்தார் எனக் கூறப்படுகின்றது. அங்கு சித்தர் கிரிஜா பாபாஜி நாகராஜ் இவரிடம் கிரியா யோகம் கற்று போகரின் சீடர் ஆனார். கிரியா பாபாஜி கதிர்காமத்தில் சமாதி எய்தினார். அவரது நினைவாலயமான கிரிஜா பாபாஜி ஸ்தலம் (Kriya Babaji Shrine) அங்கு அமைந்துள்ளது. சித்தர் யாழ்ப்பாணத்து சுவாமியும் கதிர்காமத்திலேயே சமாதியடைந்தார்.



கிரிஜா பாபாஜி நாகராஜ்

பௌத்த துறவியான போகரின் இயற்பெயர் போ-யாங். இப்பெயரே போ-யர் என மருவி பின்பு போகர் (Bhogar) என நிலைத்துவிட்டதாக அவரைப் பற்றிய தகவல்கள் கூறுகின் றன. இவர் தஞ்சைப் பெருங்கோயிலின் கோபுரத்தின் உச்சிக்கு கலசம் கொண்டு சென்று வைக்க பொறியியல் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கியவர் என்றும் கூறப்படுகிறது. இவர் அட்டமாசித்திக் கலையின் மூலம் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து பல காலகட்டங்களில் வாழ்ந்துள்ளார்.



கிரிய பாபாயி தூபி

**லா-சூ தான் போகரா?**


Bhogar traversing the sky

சீனப் பெருஞானியான லா-சூ (Lao-Tzu) இவரே என்று பேராசிரியர் இராமையா யோகி அவர்கள் 'போகர் 7000 நூல்' மதிப்புரையில் கூறியுள்ளார் என அறிய வருகிறது. அகத்திய முனிவர் போகரைச் சீன தேசத்தவரே எனக் குறிப்பிடுகிறார். இவைகள் பல்லாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் என்றபடியால் ஏடுகளில் தெளிவாக வரையறுத்துக் கூறப்படவில்லை. இதனாலேயே தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. பெரும் சித்தர்கள், மகரிஷிகள் தாங்கள் அறிந்த உண்மைகளை மற்றும் மருத்துவ விஞ்ஞானத்தை சீன - பாரத தேசங்களுக்கு இடையில் பரப்பி நல்லுறவு நிலவ ஆன்மிகப் பாலமாகவும் இருந்துள்ளார்கள்.



லாசி, லா-சூ, லாவோற்சு (Laozi/Lao Tzu) என்பதெல்லாம் இந்த ஞானியைக் குறிக்கும் பெயர்கள். இவரைப் பற்றிக் கூறும் ஏடுகளிலொன்று இவரது காலத்தை கி.மு. 551-479 எனக் கணிக்கிறது. இவரது வரலாற்றைக் கூறும் ஏடுகளில் தகவல்கள் வித்தியாசப் படுகின்றன. இவர் ஆரம்ப காலங்களில் ஆவணக் காப்பாளராக (archivist) சீனாவில் பணியாற்றினார். சீனப் பேரரசர் நியமித்த நீதிபதி வேலைப்பதவியால் அரசருடன் கருத்து முரண்பட்டு அரசரது கொள்கைகளை ஏற்க மறுத்தார். தத்துவ மேதை கொன்பியூசின் கருத்துக்களுடனும் ஒத்துப்போகவில்லை. சீனப் பேரரசருடன் முரண்பட்டு சீன தேசத்தை விட்டு எருமை மாட்டில் சவாரி செய்து தப்பும்போது சீன கான்கூ (Hanku) மலைப்பிரதேச எல்லைக் காவலர்களால் கைது செய்யப்பட்டார். இவர் தான் அறிந்த உண்மைகளை எழுதிக்கொடுத்தால் தப்பிப்போக அனுமதிக்கப்படுவார் என அரச உத்தரவு இவருக்கு எதிராக உடனடியாகப் பிரயோகிக்கப்பட்டது.

இரண்டு வாரத்தினுள் திருக்குறள் வடிவமைப்பில் 81 அத்தியாயம் கொண்ட 'தாவோஜிங்' (Dao-Jing) கோட்பாட்டை எழுதிக்கொடுத்தார். இது இயற்கையுடன் சேர்ந்து செல்லல் பற்றிய லாசூவின் தாவோ மதக்கோட்பாடு ஆகும். கி.மு. 7ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த கபிலரது சிந்தனைகள் சாங்கிய மதமாகியது. இவரது கோட்பாடு அடங்கிய நூல் சாங்கிய நூல் அல்லது எண்ணூல் என அழைக்கப்பட்டது. சாங்கிய நூலும் திருக்குறள் வடிவத்திலே எழுதப்பட்டுள்ளதாக அறியவருகிறது. இந்த நூல் கணிதப் பரிமாணங்கள் பற்றியும் இயற்கை பற்றியும் கூறுவதுடன் இயற்கை தான் வழிகாட்டி என்று கூறுகிறது. தாவோயிங் சாங்கிய நூல் திருக்குறள் இவை ஒரே மாதிரிக் கருத்துகளை உள்ளடக்குகின்றன. இவர்கள் இயற்கையைத் தழுவியே வாழ்ந்து இயற்கையை மையப்படுத்திய சிந்தனை இவர்களிடம் ஓங்கியிருந்ததால் இயற்கையையும் உண்மையையும் மையமாக வைத்தே எழுந்த மானமாக எழுந்த நூல்கள் என்பதே எனது கருத்து.

தான் அறிந்தவற்றை எழுதிக் கொடுத்த பின்பு லா-சூ விடுதலையாகி இந்தியாவிற்குள் பிரவேசித்து சமாதி நிலையிலிருந்தும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தும் பல கால கட்டங்களில் வாழ்ந்து பிற்காலத்தில் சித்தர் போகர் என அழைக்கப்பட்டவரும் லா-சூவே என அறியவருகிறது.

**சுவாமி விவேகானந்தர் மனவழி மூலம் (Telepathy) அனுப்பிய செய்தி**

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் இல்லத்துக்கு அருகாமையில் 'காலு' (இராமகிருஷ்ணரின் சீடரில் ஒருவர்) சிறு குடிசை போட்டு வாழ்ந்துவந்தார். அவர் ஒரு வெளிப்படையானவர், அப்பாவி, தூய்மையானவர். காலு விக்கிரக வழிபாட்டில் ஈடுபாடுடையவர். காலு இருக்க இடமில்லாதபடி அவரது குடிசை முழுக்க விக்கிரகங்கள். சுவாமி விவேகானந்தர் 'கடவுள் வடிவமற்றவர்' என்ற ஆணித்தரமான கருத்துடையவர். விவேகானந்தர் உருவ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளாதவர். அந்த விக்கிரகங்களை கங்கையில் போடும்படி கூறிவந்தார். அந்த விக்கிரகங்கள் தனது வணக்கத்துக்காகக் காத்திருக்கின்றன என்று கூறி 'காலு' அவற்றைப் பாதுகாத்துவந்தார்.

விவேகானந்தரது மனோசக்தி செயற்பட்டது. 'காலு'வுக்கு ஓர் உத்தரவு மனவழி மூலம் (Telepathy) அனுப்பினார். எந்தத் தடையும் இல்லாமல், தன் குடிசையில் இருந்த 'காலு' அந்த உத்தரவை மனவழி மூலம் பெற்றார். தன்னிடமிருந்த கடவுள் சிலைகளை மூட்டை மூட்டையாகக் கட்டி முதுகில் சுமந்தபடி கங்கையை நோக்கிப் புறப்பட்டார். சுவாமி விவேகானந்தர் நினைத்தவுடனே அது நிகழ ஆரம்பித்துவிட்டது.

கங்கையை நோக்கிச் செல்லும் 'காலு'வை ஸ்ரீ இராமகிருஷ்ணர் கண்டார். "கங்கையில் இந்த மூட்டையைப் போடப் போய்க்கொண்டிருக்கிறேன்" என்றார் காலு. "மீண்டும் கொண்டுபோய் உன் வீட்டில் வை", "உன் மூலமாக யார் பேசுவது என்பது எனக்குத் தெரியும், நான் கவனிக்கிறேன்" என்றார் பகவான். தன் சீடர் விவேகானந்தருடன் அதைப் பற்றிப் பேசியும் கொண்டார்.

டெலிபதிசக்தி (Telepathy) பொதுவாக எல்லா மனிதர்களிடமும் அவர்களை அறியாமலே சிறிதளவாகச் செயற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ரிஷிகளது சக்தி வலிமை மிக்கது, அவர்கள் அதை மேலான நிலைக்கு மாத்திரம் செயற்படுத்திக் கொண்டார்கள். 'டெலிபதி' விஞ்ஞானத்துடன் இணைய வேண்டும். விஞ்ஞானம் 'டெலிபதி'யை அரவணைக்க வேண்டும்.

## அத்தியாயம் 63

# உலகம் எப்படி இயற்கையோ, அது போல மறுபிறப்பும் இயற்கையே!!

**சா**க்கிய முனியின் (புத்தர்) காலத்தில் இந்தியா மீது அயல் நாடுகளின் படையெடுப்பு, போர் அதிகம் நடந்தது. 'நாளை' உயிருடன் இருப்போமா என்பது கூட சந்தேகமாக இருந்தது. புத்தர் பிறந்து வாழ்ந்த அரண்மனையும் லும்பினியில் (Lumbini) காலப்போக்கில் அழிவுக்குள்ளானது. சாக்கியமுனியால் தன் நாட்டையும், மக்களையும் காப்பாற்ற முடியாமல் இருந்தது.

அக்காலத்தில் வாழ்வதாக இருந்தால் போரில் வெல்ல வேண்டும். வெல்வதாக இருந்தால் எதிரிகளைக் கொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அழியவேண்டும். மக்களுக்கு மரணபயம் அதிகமானது. 'வாழ்வு' நிச்சயமற்றதாகக் கருதப்பட்டது. மரணத்துக்கு அப்பால் உள்ளநிலை பற்றி அறியும் ஆர்வம் ஏற்பட்டது.

மறு உலகத்தைப் பற்றிய ஆசையும், அந்த உலகத்தில் வாழ்வதைப் பற்றிய ஆசையும், எண்ணமும் துறவிகளுக்கும் எழுந்தது. தாங்கள் வாழும் இவ்வுலகத்தை நிராகரித்தனர். இறந்தபின் தாங்கள் செல்லப்போகும் மேலோகத்தில் ஆனந்தமாக வாழலாம் என்ற எண்ணத்தை மேலோங்கச் செய்தனர். இறந்தபின் சந்தோஷமாக வாழ ஒரு உலகம் கண்டுபிடித்தாயிற்று. அந்த மறு உலகில் வாழலாம் என்ற எண்ணம் - தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் இவ்வுலகில் ஏற்படும் போர்க்காலச் சூழலிலும் அவர்களை நிம்மதியாக வாழச்செய்தது.

சாக்கியமுனி தனது போதனைகளில் மறுபிறப்பைப் பற்றி கூறினார். அப்போது நிலவிய பயமான சூழ்நிலையும், நிச்சயமற்ற வாழ்வும், மறுவாழ்க்கை பற்றிய போதனையின் அவசியத்தை ஏற்படுத்தியது. அந்தப் போதனை மனதிற்கு மருந்தாக அமைந்தது.

கிறிஸ்தவம் (Christianity), இஸ்லாம் (Islamism), ஜுடெய்ஸ்ம் (Judaism) போன்றன மறுபிறப்பைப் பற்றி தெளிவாகக் கூறாதபோது இந்து (Hinduism), பௌத்தம் (Buddhism), சமணம் (Jainism), சொறாஸ்ரியம் (Zorastrianism), கொன்பியூசியனிஸ்ம் (Confucianism), தாவோஸ்ம் (Taoism), சின்ரோ ((Shinto), சென் (Zen-Chan) போன்ற மதங்கள் தெளிவாகக் கூறின.

புத்தர் முற்பிறப்பு, மறுபிறப்பைப் பற்றித் தெளிவாகக் கூறினார். "உலகம் எப்படி இயற்கையோ அதுபோல மறுபிறப்பும் இயற்கையே" என்றார். 'ஆன்மா' (Soul) இன்னொரு மனித உடலாக (Transmigration) மீண்டும் பிறக்கும் என்றார். மனிதர்கள் விலங்கினமாகப் பிறப்பார்கள் என்ற கருத்தும் அதிகம் வலுவடைந்தது. அதையும்விட பல கதைகள் மனிதர்கள் விலங்கினமாக மாறினதாகக் (Transformation) குறிப்பாக பல்லி, புறா, பாம்பு போன்று மாறினதாக கூறும் கதைகள் அதிகரித்தன. அக் கதைகளுக்கு ஒரு காரணம் இருந்தது. மிருகங்கள், பறப்பன, ஊர்வன, மிதப்பன போன்ற பிராணிகளை, விலங்கினங்களைப் பாதுகாக்கவும், விலங்கின கொலைகளைத் தடுப்பதற்காகவும் விலங்கினங்கள் மீது காருண்ணியம் வளரவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இவ்வாறான கதைகள் உதவின. அதே நேரத்தில் மனிதப் பிறப்பின் மகத்துவமும் அதனூடாக உணர்த்தப்படுகிறது.

இந்து மதத்தினர் தெய்வங்களுக்கு விலங்கினங்களை வாகனமாக வைத்துள்ளனர். விலங்கினங்களைக் காப்பாற்று வதற்காகவும், ஜீவகாருண்ணியம் ஏற்படுத்துவதற்காகவும், மிருகங்கள், பறப்பன, ஊர்வன, மிதப்பன இவற்றை புராணக்கதைகள் ஊடாக தெய்வங்களுடன் இணைத்து மரியாதைக்குரியனவாகவும், வணக்கத்துக்குரியனவாகவும் மாற்றப்பட்டுள்ளன. மேற்குலக நாடுகள் விலங்கினங்களை பாதுகாக்கவும், காப்பாற்றவும் பல ஜீவகாருண்ணிய அமைப்புக்களை (Humane Society) நடாத்துகின்றன.

இந்துமதத்தில் ஆலய வழிபாட்டில் இவை இணைக்கப் பட்டுள்ளன. ஆலயங்களில் தெய்வங்களின் வாகனங்களாக, வணக்கத்துக்குரியவையாக விலங்கினங்கள் இருக்கின்றன. இந்த ஜீவகாருண்ணிய விழிப்புணர்வை பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே ஏற்படுத்திவிட்டார்கள்.

வீட்டுப் பிராணிகளான நாய், பூனை சிலவேளைகளில் மனிதர்களின் மறுபிறப்பாக இருக்கலாம், காரணம் மனித புலன்கள் (Human Senses) இவைக்கு இருக்கின்றனவாம். Dolphin மீன்கள் சமுத்திரத்தில் மனிதர்களைக் காப்பாற்றிய சம்பவங்கள் உண்டு. நாய் கண் தெரியாதவர்களுக்கு உற்ற துணையாக வழிகாட்டியாக உள்ளன. போலிஸ் நாய் குற்றவாளிகளைக் கைதுசெய்ய உதவுகின்றது. 11.09.2001 நியூயார்க்கில் இடம்பெற்ற வர்த்தக மையம் தாக்குதலில் எரிந்து கொண்டிருக்கும்போது கண்தெரியாதவரை அவரது வழிகாட்டியான நாய் படிக்கட்டுக்களால் அவரை வேகமாக கூட்டிவந்து காப்பாற்றிய சம்பவம் முக்கிய செய்தியாகியது.

மனிதர்கள் எப்போதும் மனிதர்களாகத்தான் பிறப்பார்கள், மிகவும் அருமையாகத்தான் நாய், பூனைகளாகப் பிறக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு என பௌத்த நூல்கள் கூறுகின்றன. பட்டினத்தார் கதையில் மன்னர் பத்திரகிரியாரின் மனைவி நாயாகப் பிறந்ததாக கூறுகிறது. முற்பிறப்பு, மறுபிறப்பு என்ற கோட்பாடு மனித வாழ்வைப் பற்றிய நோக்குக்கு ஒரு நேரிய (Positive Direction) கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது.



ஜெர்மனியில் இருந்த தத்துவ மேதை ஷோபென்கோயர் (Schopenhauer) முற்பிறப்பு, மறுபிறப்பு இவை இயற்கையுடன் தொடர் புடையது என்கிறார். பகல் - இரவு, உறங்கல் - விழித்தல், வாழ்வு - மரணம் போன்றன எப்படி சுழற்சியாகவும், இயற்கையாகவும் அமைந்துள்ளனவோ, அதேபோல பிறப்பு - இறப்பு - பிறப்பு - இறப்பு - பிறப்பும் சுழற்சியானது, அது இயற்கையின் அமைப்பே என்கிறார்.

ൡൡൡ

## அத்தியாயம் 64

# தெரியாததிலிருந்து தெரிந்ததிற்குள் நகர்தல் தெரிந்ததிலிருந்து தெரியாததிற்குள் நகர்தல்

**எ**ங்கிருந்து வந்தோம் என்பதும் தெரியாது (Unknown) இறந்த பின்பு எங்கே போகிறோம் என்பதும் தெரியாது (Unknown). ஆயிரக்கணக்கான வருடங்களாக வருகிறோம், போகிறோம். நமது 'இருப்பு' (Being) இறவாமல் இருக்கிறது. இதை கௌதமபுத்தர் போன்ற ஞானிகள் 'No Mind' 'மனமற்ற நிலை' 'வெறுமை' என்று கூறுகிறார்கள். இந்த No-Mind இறவாது ஆனால் மனதை வைத்திருக்கும் உடல் இறக்கும் என்கிறார்கள். பிரக்ஞை (Consciousness) உடலுக்கும், மனதுக்கும் அப்பாற் பட்டது என்கிறார்கள். போதிதர்மர் "ஒருவர் ஞானமடையும் வரை (Enlightenment), தெரிந்ததிலிருந்து தெரிந்ததற்கும் (from known to known), தெரியாததிலிருந்து தெரியாததிற்கும் (from unknown to unknown), தெரிந்ததிலிருந்து தெரியாததிற்கும் (from known to unknown) தெரியாததிலிருந்து தெரிந்ததிற்குமான (from unknown to known) நகர்வுகள் நடந்துகொண்டேயிருக்கும்" என்கிறார்.

மனிதன் போருக்கோ, ஏவு கணைகளுக்கோ, சுனாமிக்கோ அச்சம் கொள்ளாவிடினும் தெரியாத ஒன்றுக்கு (unknown) அதிக அச்சம் கொள்கிறான். மனிதனின் மிகப் பெரிய அச்சமே அதுதான். அதனால் தெரிந்ததிலிருந்து தெரிந்ததற்குள்ளே (from known to known) நகர்ந்துகொள்ள விரும்புகிறான். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு (from known to unknown) நகர்வதற்குப் பயப்படுகிறான். தெரிந்ததிலிருந்து தெரியாததை (from known to unknown) அடைந்தவுடன் அல்லது அறிந்தவுடன் தன்னைப் பார்த்துத் தானே ஆச்சரியத்தில் பிரமித்துப்

போகிறான்! தெரியாதது தெரிந்ததாகும்போது (from unknown to known) புதிய உத்வேகம் கொள்கிறான். சிறகடித்து வானுயரப் பறக்கிறான்.

தெரிந்ததிலிருந்து தெரிந்ததற்குள் (from known to known) தெரிந்ததிலிருந்து தெரியாததற்குள் (from known to unknown) தெரியாததிலிருந்து தெரிந்ததற்குள் (from unknown to known) தெரியாததிலிருந்து தெரியாததற்குள் (from unknown to unknown) ஆகிய நான்குமே பொதுவாக வாழ்வை நகர்த்தும் நான்கு சக்கரங்களாக உள்ளன.

மரணம் வாழ்வைப் பூரணமாக்குகிறது. மரணம் இல்லையேல் வாழ்வில் முயற்சி இருக்காது. மரணம் வாழ்வை அழகாக்குகிறது. திபெத்தில் ஒருவர் லாமா ஆவதற்கு அவருடைய முற்பிறவிகளையும் ஆராய்ந்து பார்ப்பார்கள். நீங்கள் பிறந்தது உங்களுக்குத் தெரியுமா? தெரியாது. மற்றவர்கள் குறித்து வைத்துச் சொன்னால் மட்டுமே தெரியும். இந்த ஆண்டின் இந்த மாதத்தில், இந்த திகதியில், இந்த இடத்தில் பிறந்தேன் என்பது தெரியும். மற்றவர்களிடமிருந்து பெற்ற தகவல் இது. இந்த தகவல் இல்லையென்றால் பிறப்பைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. உங்கள் பிறப்பை உறுதிப்படுத்த வேறு எந்த ஆதாரமும் இல்லை என்பதால் நீங்கள் பிறக்கவில்லையா? ஒரு காலத்தில் இறந்து போவேன் என்கிறீர்கள் அது உங்களுக்கு எப்படித் தெரியும்? மரணம் என்றால் என்ன என்பது தெரியுமா? முன்னனுபவம் உண்டா? இல்லை. மற்றவர்கள் மரணமாவதைப் பார்த்து நீங்களும் ஒரு நாள் இறந்துவிடுவீர்கள் என்று நினைக்கிறீர்கள்.

ஒருவன் மரணத்தைப் பற்றிக் கேள்விப்படாமல், பார்க்காமல், உலகத்திலிருந்து பிரிந்து எந்தத் தொடர்புமின்றி வளர்ந்துவிட்டால் தனக்கு மரணம் என்றோ ஒரு நாள் வரும் என்று சொல்வாரா? இல்லை. எப்போது பிறந்தோம் என்று சரியாகச் சொல்லக்கூடிய உள் ஆதாரம் எதுவுமில்லை. உடலின் உள்ளார்ந்த அமைப்பிலிருந்து பிறந்த விவரங்களை உறுதிப் படுத்த ஆதாரமில்லை.

ஆரோக்கியமான வேளையில் எப்போது இறப்போம் என்று சரியாகச் சொல்லக்கூடிய உள்ளாதாரமும் உடலிலில்லை. நீங்கள்

பிறப்பையும் அறியமாட்டீர்கள். இறப்பையும் அறிய மாட்டீர்கள். உங்களுக்குள் ஜனன, மரண ஆதாரங்கள் இல்லை. இருக்கும் ஒரே ஆதாரம் 'நீங்கள் இருக்கிறீர்கள்' என்பதுதான்.

'நீங்கள் இல்லை ஆனால் நீங்கள் மறுபிறப்பு எடுக்கிறீர்கள்' என்கிறார் புத்தர். 'நீங்கள் இல்லையென்றால் எப்படி மறுபிறப்பு எடுக்கமுடியும்?' இந்தக் கேள்விக்குப் புத்தரிடம் பதிலுண்டு. நீங்கள் பார்க்க வேண்டுமா? தியானம் செய்யுங்கள். உங்கள் இருத்தலில் மிக ஆழமாகச் செல்லுங்கள், அப்படிச் சென்றால் நீங்கள் உண்மைத் தன்மையுடன் பொருந்துவீர்கள் என்கிறார்.

புத்தர் முழுத் தத்துவப் பாணியையும் மாற்றிவிட்டார். புத்தரை புரிந்து கொள்ளக் கொள்ள, மனித இனம் தங்களைப் புரிந்துகொள்ளும். இந்த உலகம் கண்ட மிகப்பெரிய விஞ்ஞானி புத்தர் தற்கால இயற்பியலுடன் ஒத்துப்போகிறார்.

இன்று விஞ்ஞானம் மாபெரும் அளவில் வளர்ந்துள்ளது. கலிலியோ, நியூட்டன், ஆர்கிமிடிஸ், எடிசன், ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் இந்தப் பூமிக்கு திரும்பி வந்தால் இப்போதிருக்கும் விஞ்ஞானத்தை பார்த்துப் பிரமித்துப் போவார்கள். விஞ்ஞானம் அந்தளவுக்கு மாறிக்கொண்டே போகிறது. விஞ்ஞானிகள் தத்துவார்த்த ஞானிகளைப் போலவும் சித்தர்களைப் போலவும் பேசுகிறார்கள்.

கதா உபநிடதம் 'உடல் அழியும், சுயம் (Self) அழியாது' என்கிறது. சுவாமி லோகேஸ்வரானந்தா கூறுகிறார் "தன்னுணர்வு (Self-Consciousness) உடலிலிருந்து வெளியேறியதும் மூளை செயலிழந்துவிடுகிறது, மூளை ஒரு அடிமை, அது எசமான் அல்ல, எசமானின் உத்தரவுகளைச் செயற்படுத்தும். 'ஆன்மா' (Soul) தான் உண்மையான மனிதர், உடல் அதன் வெளிக் கவசம்."

சுவாமி லோகேஸ்வரானந்தா கூறுகிறார்:

இயற்கையான உருமாற்றம் (Manifestation) இருக்கிறது, இது பரிணாமம் அடையும். படைத்தவர் என்று ஒருவர் இருந்தால் படைத்தவரைப் படைப்பதற்கு ஒருவர் தேவை, எனவே பரிணாமம் (Evolution) தான் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

படைத்தல் என்பது இல்லை (Creation) பரிணாம வளர்ச்சி மூலம் உருமாற்றம் (Manifestation) தான் இருக்கிறது. (There is no Creation, instead, there is Manifestation) பூமியில் சகலதும் அப்படியே இருந்தன. புதிதாக எதுவும் தோன்றவில்லை. உருமாற்றம் அடையாமல் இருந்ததுதான் உருமாற்றமடைகிறது.

"எல்லாம் அவ்வாறே அப்படி அப்படியே இருந்தன (Suchness)" என்கிறார் புத்தர்.

கடவுளை உருவமற்றவர் என்று சொல்கிறார்கள். உருவமற்றது என்று சொல்லும்போது அதுவும் ஒரு வடிவம்தான். உருவமற்றவர், வடிவமற்றவர் என்று சொல்லும்போது ஏதோவொரு வடிவம் தெரிகிறது. ஏனெனில் உருவமற்றதை வடிவமற்றதை கற்பனை செய்ய முடியாது. ஒரு உருவத்தின் ஊடாக, ஒரு வடிவத்தின் ஊடாகத்தான் உருவமற்றதையும், வடிவமற்றதையும் கற்பனை செய்ய முயலுகிறோம். ஒரு உருவமற்றதை, ஒரு வடிவமற்றதை எப்படிக் கற்பனை செய்ய முடியும்?

உருவமற்றது எனும்போது அதே ஒரு உருவமாகிவிடுகிறதே!
குணமற்றது எனும்போது அதே ஒரு குணமாகிவிடுகிறதே!
நிறமற்றது எனும்போது அதே ஒரு நிறமாகிவிடுகிறதே!

உருவமற்ற, வடிவமற்ற என்பது தர்க்கவியலுக்கு உட்பட்டதாகிறது. இது ஒரு கருத்தைக் கொடுக்க முடியாத வெற்றுக் கருத்தாகிவிடுகிறது.

இப்பூவுலகில் ஜீவன்கள் இருக்கும் வரைக்கும் தெரியாததிலிருந்து தெரிந்ததற்குள் நகர்தலும், தெரிந்ததிலிருந்து தெரியாததிற்குள் நகர்தலும் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

வாழ்நாளெல்லாம் உங்களுக்கு மிக நெருக்கமாக இருந்து வந்த ஓர் உயிர் மரணத்தின்பின் உங்கள் கதவருகே வந்து நின்றால் நீங்கள் பயந்து அலறியடித்துக்கொண்டு ஓடிவிடுகிறீர்கள், உதவிக்கு அலறுவீர்கள். காரணம் நாம் தூல உடலுடன் (சாதாரண மனித உடல்) தான் பழக்கப்பட்டவர்கள், சூக்கும சரீரம் (ஆவியின் உடல்) நமக்கு அந்நியமானது. தெரிந்தது தெரியாததற்குள்ளும் தெரியாதது தெரிந்ததிற்குள்ளும் நகர்கிறது.

**மரணம் நிகழ்ந்தவுடன் 'மனம்', 'உயிர்' இவற்றின் நிலை:**



Osho

ஒஷோவின் சொற்பொழிவிலிருந்து விளங்கிக் கொண்டதை இங்கு குறிப்பிடுகிறேன். "ஒரு மனிதர் இறக்கும்போது அவருடைய உடல் மட்டுமே இறக்கிறது. மனம் உடனே இறப்பதில்லை. உதாரணமாக கனவி லிருந்து விழித்துக் கொண்டவுடன் கனவின் ஒரு பகுதி மட்டுமே நினைவில் நிற்கிறது. அதுவும் கனவின் கடைசிப் பகுதி சற்று நேரம் மட்டுமே நினைவில் நிற்கும். கனவு படிப்படியாக நினைவிலிருந்து மறைந்து விடுகிறது. கனவு உறக்கத்தில் வருகிறது. ஆழ்ந்த பிரக்ஞையற்ற நிலையில் கனவு பிறக்கிறது என்றாலும் விழிப்பில் அதன் இறுதிப்பகுதி மட்டுமே நினைவில் நிற்கிறது, காரணம் விழிப்பிற்குமுன் நீங்கள் அரைத்தூக்கத்தில் இருப்பதுதான். அரைத்தூக்கம், அரைவிழிப்பு போன்ற நிலையில் காணும் கனவுதான் விழித்த பின் நினைவில் நிற்கிறது. நேரம் செல்லச் செல்ல நினைவிலிருந்து நழுவி விடுகிறது.

இதேபோலத்தான் உயிர் பிரிந்த பின்பும் இறந்தவரது உள்ளத்துக்கு கிட்ட உள்ளவரது நினைவுகள் உயிரில் சிறிது காலம் இருக்கிறது. ஒருவர் திடீரென எதிர்பாராமல் விபத்து போன்றவற்றால் மரணமடையும்போது தாம் மரண மடைந்ததை அவரால் அறியமுடிவதில்லை. சற்றுநேரம் அவர் திகைத்துப் போய்விடுகிறார். ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்ற தடுமாற்றத்தில் அவர் தவிக்கிறார். உடலுக்குள் எதுவுமே சாகாத நிலையில், உயிர் உடலை விட்டுப் பிரிந்து சென்று விடுகிறது. பெரும்பாலான உயிர்கள் சட்டென உடலைவிட்டுப் பிரிய நேரும்போது சுத்தமாகக் குழப்பமடைந்து தடுமாறிப்போய் விடுகின்றன. உயிர் மெல்ல மெல்லத்தான் கடந்தகால நினைவுகளிலிருந்தும் தொடர்புகளிலிருந்தும் விடுபடுகிறது. இது நாம் கனவுகளை மெல்ல மெல்ல மறந்து போவது போன்றது.

இறந்த ஒருவர் 'ஆவியாக' கடந்தகால நினைவில் இருக்கிறார். புதிய மறுபிறவி எடுத்த பின்பும் பிறக்கும் குழந்தைகளுக்கு பழைய 'உயிரின்' நினைவுகள் சிறிது காலம் வரை இருக்கும் பின்னர் சிறிது சிறிதாக அவை மறைய ஆரம்பிக்கும். குழந்தை பேசத் தொடங்க அவை முற்றிலும் மறைந்துவிடும். முற்பிறவியில் அசாதாரணமான நினைவாற்றல் கொண்டவராக இருந்திருந்தால் குழந்தை பேசத் தொடங்கிய பின்பும் முற்பிறப்பு நினைவுகள் தொடர முடியும்" என்கிறார் ஓசோ.

"வாழ்க்கை ஆசைகளால் தூண்டப்படுகிறது, ஆசை இல்லாவிடில் பிறப்பே இருக்காது" - புத்தர்.

சில வேளைகளில் மனிதர்களது உள் உறுப்புக்கள் நல்ல நிலையில் இருக்கும் ஆனால் இறந்திருப்பார் 'Life' போயிற்று என்கிறார்கள். Life என்றால் (சுய) தன்னுணர்வுதானா? (Self-Consciousness) சுய உணர்வு என்றால் என்ன? சிலவேளைகளில் சில மனிதர்கள் சுயஉணர்வு இல்லாமல் வருடக்கணக்காக படுக்கையில் இருப்பார்கள் ஆனால், உயிருடன் இருப்பார்கள்.

இன்றைய மருத்துவ உலகம் இதைத்தான் கூறுகிறது, நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது தேறுவேன் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் மருந்தும் செயல் இழக்கிறது. டாக்டர்கள் நம்பினாலும் நோயாளி நம்பாவிட்டால் பலன் இல்லை. மரணப் படுக்கையில் இருப்பவருக்கு 'தான்' தப்புவேன் என்ற நம்பிக்கையில் இருப்பவருக்கு மருந்து செயல்பட்டு குணமாக்கி விடுகிறது.

வாழ்க்கைக்கு ஆசைகள் தேவைப்படுவதுபோல் மரணத் திற்கும் ஆசைகள் தேவைப்படுகிறது. உடம்பும் தன்னுணர்வும் ஆசைகளின் மூலம் தொடர்புபடுத்தப்படுகின்றன. சிக்மன்ட பிரய்ட் (Sigmund Freud) "மரண விருப்பம் ஒழித்திருக்கிறது, இல்லையேல் உடம்பால் நீடித்திருக்க முடியும். இறப்பதற்கான ஆசைதான் இறப்பிற்கு உதவுகிறது" என்கிறார். "வாழ்வதற்கான ஆசை மீண்டும் பிறப்பெடுக்க காரணமாகிறது" என்கின்றனர் ஞானிகள்.

காலையில் பூ மலர்கிறது மாலைப்பொழுதில் போய் விடுகிறது, அந்த 'மலர்தல்' எங்கிருந்தோ வந்தது (Unknown)

'போதல்' மீண்டும் எங்கிருந்து வந்ததோ அங்கே சென்றுவிடுகிறது (Unknown). போதிதர்மா அவர்கள் உடலுக்கும், மனதுக்கும் அப்பால் உள்ள அந்த தெரியாததை 'மனம் அற்ற (Non-mind) நிலை' என்று குறிப்பிடுகிறார். இந்த 'மனம் அற்றநிலை முடிவற்ற (Eternal) நிலை என்கிறார். "உயிர் தெரியாததிலிருந்து (Unknown) மலர்ந்து பின்பு பிரிந்து செல்லும்போது மீண்டும் அந்த தெரியாததிற்குள் (Unknown) பிரவேசிக்கிறது. இது முடிவற்றது" என்கிறார். தெரியாத திலிருந்து (Unknown) தெரிந்ததிற்குள் (Known) நகர்தலும், தெரிந்ததிலிருந்து (Known) தெரியாததிற்குள் (Unknown) நகர்தலும் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

"ஞானமடைந்தவர்கள் இந்த நகர்விலிருந்து விலகி விடுவார்கள். மீண்டும் மலரமாட்டார்கள்" என மனதிற்கு அப்பாற்சென்று மரண அனுபவமடைந்த ஞானிகள் கூறுகிறார்கள்.

## அத்தியாயம் 65

# உடல் உறுப்புகள் தானம்: 'ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்க்கும்'

அபிதான சிந்தாமணி என்ற நூல் தானங்களை மூன்று வகையாக வகுத்துக் கூறுகிறது. அவையாவன: தலைப்படு தானம், இடைப்படு தானம், கடைப்படு தானம் ஆகியவையாகும். அறத்தால் ஈட்டிய பொருளைக் குற்றமற்ற நற்றவத்தோரைக் கொள்ள எனப்பணிந்து குறை அறிந்து தம் உள்ளம் உவந்து ஈதல் தலைப்படு தானம் எனவும், ஆதுலர், குருடர், மாதர் முதல் பிறர் சிறுமையைப் பற்றி மனம் இரங்கி ஈவது இடைப்படு தானம் எனவும், புகழ், ஆர்வம், கைம்மாறு, அச்சம், கடைப்பாடு இவற்றைப்பற்றி ஈவது கடைப்படு தானம் எனவும் அந்நூல் விளக்குகிறது.

அந்நூல் பல வகையான தானங்களையும் அவற்றின் செய்கை முறைகளையும் விவரிக்கிறது. இத்தகைய தானங்கள் செய்தவர்கள் இறந்தபின் அவர்களுக்கு என்ன பலன்கள் கிடைக்கும் என்பதையும், தெய்வங்களால் எப்படி ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதைப் பற்றியும் எந்தெந்த உலகத்தை அடைவார்கள் என்பதையும் கூறுகிறது.

தானங்களின் வகைகள்:

பல வகையான தானங்களின் பெயர்களை மாத்திரம் ஒரு தகவலுக்காக இங்குக் குறிப்பிடுகிறேன். அவையாவன:

இரண்யகர்ப்ப தானம்
இரண்யாச்வ தானம்
இரண்யாச்வாத தானம்

உபயகோமுகி தானம்
கனககல்பலதிகா தானம்
கனககாமதேனு தானம்
கல்பவிருஷ தானம்
கார்ப்பாஸ தானம்
கிருதபர்வத தானம்
கிருஷ்ணாஜின தானம்
குடதேனு தானம்
குடபர்வத தானம்
கோசகஸ்திர தானம்
சர்க்காரபர்வத தானம்
சப்தசாகர தானம்
சுவர்ணபர்வத தானம்
சையன தானம்
தராதானம்
தான்யபர்வத தானம்
திக்பாலக தானம்
திலபர்வத தானம்
துலாபுருஷ தானம்
பஞ்சலாங்கல தானம்
பிரமாண்ட தானம்
மகாபூதகட தானம்
ரத்னதேனு தானம்
ரத்னபர்வத தானம்
ரௌப்பிய பர்வத தானம்
லவணபர்வத தானம்
விச்வசக்ர தானம்
ஹேமஹஸ்திரத தானம்
பருத்தி தானம்
தானிய தானம்
பூதானம்
மாரடிதானம்
குடை தானம்
தீப தானம்
வஸ்திரதானம்
பூமி, சுரபிகள், சுவர்ணதானம்
திர தானம்

கோதானம்
நாணய தானம்
இரும்பு தானம்
இலவண தானம்
இவையனைத்தும் தானமாகத் தானம்,

இத்தானங்கள் அனைத்தும் ஒருவர் மேலோகத்தில் சௌகரியமாக வாழ்வதற்காகவே வழங்கப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் ஒருவர் பிறந்து வாழும் இந்த உலகத்தில் எப்படி வாழவேண்டுமென்பது மிக முக்கியம். இவ்வுலகத்தில் வாழ்வதற்காகவே நாம் பிறந்தவர்கள், மறுலோகத்தில் வாழ்வதற்காக இவ்வுலகத்தில் பிறக்கவில்லை. இந்த உலகத்தில் 'இல்லாமை' என்பது இல்லாமை நிலவ வேண்டும். மனித துன்பங்களை நீக்க நாம் ஒவ்வொருவரும் எங்களால் முடிந்த பங்களிப்பை செய்வோம். எங்கள் பிறப்பைப் பெறுமதியாக்கி நாம் வாழும் உலகிற்கு அழகு சேர்ப்போமாக.

**ஒரு நிகழ்வு:**

ஞானி போதிதர்மா சீனா சென்றபோது முதலில் தென்சீனாவை அடைந்தார். அப்போது அரசர் 'வூ' (Wu) பத்தாயிரம் புத்த துறவிகளுடன் எல்லையில் வந்து போதிதர்மா அவர்களை வரவேற்றார். சீனாவிற்குள் கால் பதிக்கும் முதலாவது ஞானமடைந்த ஞானி இவர்.




அரசர் 'வூ'வைப் பற்றி பாரத முதல் பிரதமர் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் தனது பிரபல்யமான நூலான The discovery of India வில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அரசர் 'வூ' (Wu-Ti) 'ஹான்' அரச வம்சத்தின் (Hyan-Dynasty) 6ஆவது வழித்தோன்றல். இவர் 50 வருடம் சக்கர வர்த்தியாக அரசாண்டார். அவர் காலத்தில் சீனா பொருளாதார வளர்ச்சி கண்டது எனவும் பௌத்தம் மேலோங்கி வளர்ந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். பௌத்தம் ஊடாக இந்தியா - சீன நல்லுறவு நிலவியது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார் நேரு அவர்கள்.

இந்தியாவிலிருந்து வருகை தரும் ஞானமடைந்த மகானை தனது இராச்சியத்தின் எல்லையில் அரச அதிகாரிகளுடனும் துறவிகளுடனும் வரவேற்க காத்து நின்ற மாபெரும் சக்கரவர்த்தி அவர். வருகை தந்த போதிதர்மரைப் பார்த்ததும் திகைப் படைந்தார். இப்படியான கோலத்தில் இவரை அரசர் எதிர்பார்க்கவில்லை. காலில் அணியும் பாதணிகளில் ஒன்றை தலையில் வைத்திருந்தார். மறுபாதணியை ஒரு காலில் போட்டிருந்தார். இடுப்பில் ஒரு சிறு துணி அணிந்திருந்தார். செம்பாலான பட்டி (Copper belt) இடுப்பைச் சுற்றி அணிந்திருந்தார், கையில் ஒரு தடி. ஒரு விசித்திரமான கிறுக்குத் தோற்றம்.

இவர் என்ன விசித்திரமான மனிதராய் இருக்கிறார் என்ற திகைப்புடன் அரசர் பார்த்தார். போதிதர்மர் சிரித்தார். இந்த ஆள் பயித்தியமோ என்று நினைக்கிறீர், உம்மை நான் கணித்துவிட்டேன் என்றார்.



King Wu-Ti

பேரரசர் ‘வூ’ : நான் அரசன், பிக்குகளுடன் உங்களை வரவேற்க வந்துள்ளேன்.

போதிதர்மர் : எனக்குத் தெரியாது!!

அரசர் : புத்த மதத்தின் வளர்ச்சிக்கு பெரும் செலவு செய்கிறேன். பல ஆயிரம் மடாலயங்கள், விகாரைகள் நிர்மாணித்துள்ளேன். புத்த போதனைகளைச் சீனமொழியில் மொழி பெயர்த்து, போதனை செய்விக்கிறேன். தினமும் பத்தாயிரம் துறவிகளுக்கு உணவளிக் கிறேன். ‘தர்ம காரியங்கள் செய்கிறேன். பௌத்தம் வளர்வதற்கும் துறவிகளுக்கும் இல்லையென்று சொல்லாமல் பெரும் ‘தானங்கள்’ செய்கிறேன். எனக்கு என்ன கிடைக்கும்?

போதிதர்மர் : எதுவும் இல்லை, நரகலோகம் என்று ஒன்று இருக்குமானால் உமது செய்கைகள் உம்மை அங்கே கொண்டுபோய் விழுத்தும். உமது

தானங்களுக்குள்ளும், தர்மகாரியங்களுக்குள்ளும் பெரும் பேராசையும் சுயநலமும் மறைந் திருக்கிறது. அவற்றுடன் சேர்ந்து உமக்கு அழிவும் வரும்.

அரசர் : என்ன சொல்கிறீர்கள்? நான் செய்வதெல்லாம் புண்ணியசெயல்கள், புனிதமாகவே வாழ்கிறேன்!

போதிதர்மர் : உமது புண்ணியம், புனிதம் உம்மை நரகக் குழியில் விழுத்தும். தர்மம், புண்ணியம், புனிதம் என்று எதுவுமில்லை.



Bodhi Dharmar

அரசர் : நீங்கள் யார்?

போதிதர்மர் : தெரியாது.

அரசர் : நான் யார்?

போதிதர்மர் : தெரியாது.

அரசர் : முன்னோர்கள் சொன்ன பிரகாரம் நடக்கிறேன். பெரும் துறவிகள் கூறுவது போலெல்லாம் தானங்கள் செய்கிறேன். உங்கள் பதில்கள் வித்தியாசமாக உள்ளது. எனக்குப் புண்ணியம் கிடையாதா? மேலோகம் கிடையாதா? (அரசர் செய்வ தெல்லாம் புண்ணியம் எனத் துறவிகள் கூறியிருந்தனர்.)

போதிதர்மர் : ஒன்றுமில்லை!

அரசர் : உங்களுடன் தொடர்ந்து பேசுவதில் அர்த்த மில்லை. நான் உங்களை ஏற்றுக்கொள்ள வில்லை. எனது நாட்டுக்கு விருந்தினராக வந்துள்ளீர்கள். நீங்கள் எனது அரண்மனையில் அரச விருந்தினராகத் தங்கலாம்.

போதிதர்மர் : உங்கள் இராச்சியத்திற்குள் வரமாட்டேன், இந்த எல்லைக்கப்பால் வரமாட்டேன். உமது

எல்லையை நீர் தீர்மானித்துக் கொள்ளும். உமக்கு மரணம் நெருங்கும்போது என் நினைவு வரும். மரண பயமும், தனிமையும் உமது போலி நம்பிக்கைகளை, எதிர்பார்ப்புகளை, புண்ணியங்களை, மேலோக கற்பனைகளை எல்லாம் தகர்த்தெறியும. உம்மை நீர் அரசராகப் பார்க்கிறீர். புண்ணியங்கள், நன்மைகள் செய்பவராக எண்ணிக்கொள்கிறீர். மேலோக கற்பனைகளை வளர்த்துக்கொள்கிறீர். 'நீ நீயாக இல்லை' அரச பதவியை எடுத்தால் 'நீ யார்?' உமது பத்தாயிரம் துறவிகளை எடுத்துவிட்டால் 'நீ யார்?' நீ கூறிய அத்தனையையும் எடுத்து விட்டால் 'நீ யார்?' 'நீ யார்?' என்பதை 'நீ' அறியாதவரையில் உனக்குள் குழப்பம் இருக்கும். நீங்கள் விரும்பியபோதெல்லாம் என்னை எப்பவும் சந்திக்கலாம்.

அரசர் : (தன்னை ஒரு சாமானியராகப் போதிதர்மர் கருதியதையிட்டு கோபத்துடன் அரண்மனை திரும்பினார்.)

போதிதர்மர் : தென் சீனாவுக்குள் செல்லாது யாங்கிஸ் (Yangtze River) ஆற்றைக் கடந்து வட சீனா சென்றார்.

**சில வருடங்களின் பின்:**

தென் சீனாவில் அரசர் 'வூ' (Wu-Ti) அரசாண்ட சாம்ராஜ்யத்தை கோஜிங் (Hou Jing) படைகள் கைப்பற்றினர். அரண்மனை அமைந்திருந்த நான்ஜிங் (Nan Jing) நகரம் வீழ்ச்சியடைந்தது. அரசர் சிறை வைக்கப்பட்டார், சகலதையும் இழந்தார். அவருடன் இருந்தவர்கள் தூர விலகினர். அரசர் தான் 'யார்?' எனச் சிந்திக்கத் தொடங்கினார்.

சிறையிலிருந்து 'நரகலோகம்', 'நரகலோகம்' என்று புலம்பினார். நோய்வாய்ப்பட்டு, எல்லோராலும் கைவிடப் பட்டு, மரணம் நெருங்கும்போது போதிதர்மரின் ஞாபகம் வந்தது. தனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துக்

கூறினார் “போதிதர்மர் எங்கிருந்தாலும் கூட்டிவாருங்கள். எனக்கு உதவக்கூடியவர் அவர் ஒருவரே.”

இவரது உறவினர் போதிதர்மரைத் தேடிச்சென்றபோது, அவர்களுக்கு அதிர்ச்சிச் செய்தி காத்திருந்தது. போதிதர்மர் ‘இல்லை’ என்பதை அறிந்தனர். அவர் அரசர் ‘வூ’க்கு ஒரு செய்தியைச் சீடர்களிடம் விட்டுச் சென்றுள்ளார் என்பது தெரியவந்தது. அச்செய்தி பின்வருமாறு இருந்தது. ‘இறக்கும்போது என்னை நினைவுகொள்வீர், உங்கள் மறுவுலகக் கற்பனை இப்போது உடைந்து நொறுங்கத் தொடங்கிவிட்டது. மரணபயம் உங்கள் நம்பிக்கைகளை தகர்த்திவிட்டது. மரணத்தை ஆனந்தமாக ஏற்றுக்கொள்ளுங்கள் - காரணம் மரணம் தர்க்கமற்றது.’

அரசர் ‘வூ’க்கு இச்செய்தி தெரிவிக்கப்பட்து. “நான் பேரரசராக, தலைவணங்காதவராக இருந்தபோது போதிதர்மர் கூறியவை அன்று எனக்குப் புரியவில்லை. மறுஉலக எண்ணத்திலே இருந்துவிட்டேன். போதிதர்மரை பயித்தியக் காரராக நினைத்துவிட்டேன். அவர் என்னைக் காப்பாற்ற முயற்சி செய்தார். எனக்கு நடக்கப்போவதை அவர் அன்றே கணித்துவிட்டார். இந்த நேரத்தில் உதவக்கூடியவர் அவர் என்று நினைத்தேன். அந்த மகானைப் போய்ப் பார்க்கத் தவறிவிட்டேன். புரிந்துகொள்ளமுடியாத ஒரு மாபெரும் மகான் அவர்” என்றார்.

**ஏன் முற்காலத்தில் உடல் உறுப்புத் தானம் முக்கியமானதாகக் கூறப்படவில்லை?**

முற்காலத்தில் உடல் உறுப்புகள் மாற்றும் அளவிற்கு மருத்துவம் வளர்ச்சி அடையாமல் இருந்ததால் உடல் உறுப்புக்கள் தானத்தைப்பற்றி புராதன ஏடுகள் அதிகம் கூறாமல் இருந்திருக்கலாம் அல்லது முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்ததால், உடல் ஆரோக்கியமாக இருந்ததால் உடல் உறுப்பு மாற்றுதல் அவசியம் இல்லாததாக வும் இருந்திருக்கலாம். அதனால் அதைப்பற்றிய எண்ணம் அதிகம் எழாமல் இருந்திருக்கலாம். ஆனால் அப்படியும் கருதமுடியாதென்பதற்கு பின்வரும் நிகழ்வுகள் உதாரண மாகின்றன.

மகாபாரதம் உண்மையா அல்லது கற்பனையா என்பது தெரியாது. அதைப்பற்றிய சாதக பாதகங்களை அலசி ஆராயாமல் இந்தச் சம்பவத்தைப் பார்ப்போம். காந்தாரியின் வயிற்றில் இருந்து எடுத்த சினையை வேதவியாசர் 101 குடுவையில் வைத்து கருக்கட்டலைச் செய்து காந்தாரிக்கு 101 பிள்ளைகள் பிறந்தன என மகாபாரதம் கூறுகிறது. இது தற்போதைய மருத்துவ விஞ்ஞானத்துடன் ஒத்துப்போகிறது. இக்காலத்தில் சோதனைக்குழாய்க் குழந்தைகள் (Test tube babies) IVF எனக் கூறப்படும் (In Vitro Fertilization) முறையில் பிறக்கும் குழந்தைகள் போன்றதாகும். இது போன்ற இன்னொரு நிகழ்வு இராமாயணத்திலும் நடந்துள்ளது. இராமாயணம் உண்மையா? கற்பனையா? என்ற வாதத்துக்குள் இறங்க விரும்பவில்லை. இராமாயணமும் பாரதமும் வெறும் கதையாக இருந்துவிட்டுப் போகட்டுமே. இந்த நிகழ்வைப் பார்ப்போம்.

வால்மீகி முனிவர் தொட்டிலில் தெற்பையை வைத்து அதைக் குழந்தையாக மாற்றினார் என்கிறது இராமாயணம். இது இக்கால மருத்துவ விஞ்ஞானத்தின் குளோனிங் 'Cloning' போன்ற முறையுடன் ஒத்துப்போகிறது. முற்காலத்தில் அத்தகைய விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் போன்றன இருந்து இடையில் அழிந்து தற்போது மீண்டும் புதிய வடிவத்தில் உருவாகிறது போலும்.

அப்படியாயின் ஏன் உடல் உறுப்புத்தானம் 'தானமாக' வலியுறுத்தப்படவில்லை? மதங்கள் தடையாக இருந்தனவா? அல்லது உடலுறுப்புத் தானம் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்ததா? அல்லது உடலுறுப்பு மாற்றம் தவிர்க்கக் கூடியளவுக்கு இயற்கை வைத்தியம் வளர்ந்திருந்ததா?

இராமாயணம், மகாபாரதப் போர்களில் பாவித்த 'பாணங்கள்' இக்காலத்து ஏவுகணைகளுடன் (Missile) ஒத்துப் போகிறது. அக்காலத்தில் ஆகாயத்தில் தேர்கள் பறந்துள்ளதாக கதைகளில் காணப்படுகிறது. புராதன காலத்தில் பறக்கும் தொழில்நுட்பம் (Aviation Technology) இருந்து, இடைக்காலத்தில் அழிந்து இக்காலத்தில் மீண்டும் புதுமையுடன் பிறந்துள்ளதா?. அப்படியாயின் உடல் உறுப்புத்தானமும் அக்காலத்தில் இடம் பெற்றிருந்திருக்குமா?

முற்காலத்தில் இறந்தவர்களை உயிர்ப்பித்த கதைகள் இலக்கியங்களில், மதக்கதைகளில் காணப்படுகிறது. ஆதிகாலத்தில் படையெடுப்புகளால் ஏராளமான பொதுமக்கள் இறந்ததால் பெரும் இழப்புகளுடன் உயிர் தப்பியவர்களுக்கு வாழ்வில் பற்று ஏற்படுவதற்காகவும் இறந்தவர்களைப் பற்றிய கவலையைக் குறைப்பதற்காகவும் மறுபிறப்பைப் பற்றிய கருத்து அவசியமானதாகி இருக்கலாம். இந்து மதம், பௌத்தம், மறுபிறப்பைப்பற்றி அதிகம் கூறியுள்ளன. ஆனால் உடல் உறுப்புத் தானம் பற்றி மட்டும் எங்கும் கூறப்பட்டதாகத் தெரியவில்லையே!

ஏன் உடல் உறுப்புத் தானத்தை நேரடியாக வலியுறுத்த வில்லை என்பது சிந்தனைக்குரியதே!

**இறந்த பின்பும் வாழ்பவரின் கண்ணீரைத் துடைக்க முடியும்:**

இலக்கியத்தில் கூறப்படும் இஸ்லாமியரான வள்ளல் பெருமான் சீதக்காதியின் வாழ்க்கை அதாவது கொடை வள்ளல் தன்மையையும், தானத்தையும், கோடிட்டுக் காட்டும் அதி உன்னத மனிதநேய வரலாறாகும்.

'இறந்தும் கொடை கொடுத்த சீதக்காதி' என்றே அன்பாக மக்களால் அழைக்கப்படுகிறார். ஏழை ஒருவர் இவரது சமாதியில் உதவிவேண்டி அழுதபோது சமாதியிலிருந்து வெளியே வந்த கைவிரலில் தங்க மோதிரம் காணப்பட்டது. அதை அவர் பெற்றுக்கொண்டார் என்கிறது அவர் பற்றிய வரலாறு. இறந்தவர் எப்படிக் கொடை கொடுக்க முடியும் என்ற பகுத்தறிவு வாதம் வேண்டாம்.

தற்காலத்தில் எத்தனையோ தனவந்தர்கள் தாங்கள் இறந்தபின் தங்கள் செல்வங்களைப் பல தொண்டு நிறுவனங் களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் பொது வேலைகளுக்கும் கொடுக்கும்படி தங்கள் 'உயிலில்' குறிப்பிடுகிறார்கள். அதன் பிரகாரம் அவர்கள் விருப்பம் நிறைவேற்றப்படுகிறது. அவர்கள் எல்லாம் இறந்தும் கொடை கொடுத்தவர்கள்தானே! சீதக்காதி அவர்கள் கொடை கொடுக்கவும் தானம் செய்யவும் தன்னையே அர்ப்பணித்த பெருமகனாவார். ஒருவர் தான் இறந்தபின்பும், துன்பத்தினாலும் துயரத்தினாலும்

வறுமையினாலும் வாடும் பிறரது கண்ணீரைத் துடைக்க முடியும் என்பதை சீதக்காதியின் வாழ்க்கை வரலாறு நமக்கு கற்பிக்கிறது.

**கண் தானத்துக்கு முன்னோடி கண்ணப்ப நாயனார்:**

கண்ணப்ப நாயனாரது கதை 'கண் தானத்தை' வலியுறுத்துவதாக நான் பார்க்கிறேன். அக்கதை உண்மையா?, பொய்யா? நடக்கக்கூடியதா? நடக்கமுடியாததா? பகுத்தறிவானதா? பகுத்தறிவற்றதா? என்ற சர்ச்சை எமக்கு வேண்டாம். அக்கதையில் மறைந்துள்ள கருத்தை மாத்திரம் நோக்குவோம்.



Kannappar

திருக்காளத்தி மலையிலுள்ள சிவ லிங்கத்தை வணங்கிவந்த திண்ணனார், அச் சிவலிங்கத்தின் கண்ணில் காயம் ஏற்பட்டிருப்பதைப் பார்த்து அக்குறையைத் தீர்க்கும் மருந்தாகத் தனது கண்ணை எடுத்து அந்தச் சிவலிங்கத்தின் கண்ணில் அப்பினார் (பொருத்தினார்). இது கண் மாற்றுச் சத்திர சிகிச்சைபோல் அல்லவா இருக்கிறது. அவர் அன்றுமுதல் கண்ணப்ப நாயனார் ஆனார் என அவரது கதை கூறுகிறது. 'ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்க்கும்' எனத் தமிழ் வழக்கில் ஒரு பழமொழியும் உண்டு. கண்ணப்பநாயனார் செய்தது உடல் உறுப்புத் தானமல்லவா! கண்தானத்தை ஆரம்பித்து வைத்த முன்னோடியல்லவா அவர். சீதக்காதி பெருமகனாரின் கதையும் கண்ணப்ப நாயனாரின் கதையும் எமக்கு வாழ்க்கைப் பாடங்களாகின்றன.

**இரத்த தானத்தை ஆரம்பித்தவர் கர்ணன்:**

குருஷேத்திரத்தில் நடந்த பாரதப் போரில் கர்ணன் உடலில் அம்புகள் தைத்து குற்றுயிராகக் கிடந்தபோது கிருஷ்ணர் வயோதிக அந்தணர் தோற்றத்தில் அவர் முன் தோன்றி தனக்குத் தர்மம் செய்யும்படி வேண்ட, தனது உடலைத் தைத்துக்கொண்டிருந்த அம்புகளில் ஒன்றைத் தனது கைகளினால் இழுத்துக் கழற்றியபோது, இரத்தம் பீறிட்டுப்

பாய்ந்தது. அந்த இரத்தத்தைத் தனது இரு கரங்களில் ஏந்திஎடுத்து தனது புண்ணியங்கள் அனைத்தும் அந்த இரத்தத்தின் மூலம் கிருஷ்ணரின் கைகளில் தானமாக வார்த்து விட்டான் கர்ணன் என்கிறது மகாபாரதக் கதை. சரியா பிழையா என்பதை ஆராயாது உண்மை வரலாறா அல்லது புனையப்பட்ட கற்பனையா என்ற விவாதத்தைத் தவிர்த்து பகுத்தறிவுப் பரிசோதனையில் ஈடுபடாமல் இக்கதையை நேரடியாகப் பார்த்தால் உலகில் முதன்முதல் இரத்ததானத்தை ஆரம்பித்தவர் கர்ணனே!

**உடலுறுப்புத் தானத்தைச் சிந்தித்தவர் போதிதர்மர்:**

சென்மத ஞானி போதிதர்மர் சீனாவில் தனது சீடர்களிடம் தான் இறந்தபின் தன் உடலுறுப்புக்களில் எதை எதை யார் யார் பெறுவார்கள் என்று கூறுகிறார். பிரதம சீடரான ஹை-ஹோவிற்கு (Hui-ko) தனது எலும்பு மச்சையும் (Bone Marrow), பிக்குனியான தாரணிக்கு (Dharani) தன் தசையும் (Flesh), டா-பியூவிற்கு (Daofu) தன் தோலும் (Skin), டா-யூவிற்கு (Daoyu) தன் எலும்பும் (Bone) கிடைக்கும் என்று கூறினார். தனது ஒவ்வொரு சீடர்களுக்குள்ளும் தான் எலும்பும் தசையும் மச்சையும், தோலுமாக கலந்திருப்பேன் என்பதே அதன் பொருளாகிறது.

உடல் உறுப்புக்கள் பிறருக்கு வழங்கல் பற்றி உலகில் முதன்முதல் கூறியவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போதிதர்மர் என்பதே இந்நூலாசிரியரின் அபிப்பிராயம். அவர் எலும்புமச்சை இன்னொருவருக்கு மாற்றல் பற்றிய மருத்துவ நூல் எழுதியதாக ஏடுகளில் காணப்படுகிறது.

**தன் உடலைத் தானமாக்கியவர் தியோஜினிஸ்:**

மாவீரர் அலெக்சாண்டர் காலத்தில் கிரேக்கநாட்டில் வாழ்ந்த தத்துவமேதை தியோஜினிஸ். அவர் இறக்கும்போது அழிந்துபோகும் தனது உடலை எரித்தோ, புதைத்தோ அழிக்காமல் வனத்துக்குள் வீசி மிருகங்களுக்கு உணவாகப் பயன்பட விடும்படி கேட்டுக்கொண்டார். தனது இறந்த உடல் வெறுமனே அழிந்துபோகாமல் அதைத் தானமாக்கியவர் இவர்.

**ஒரு மனித உடல் உறுப்புக்கள் தானம் ஒரே நேரத்தில் 1 - 8 உயிர்களைக் காக்கவல்லது:**

இருதயத் துடிப்பு முற்றாக நின்று, மூளை முற்றாகச் செயலிழந்து (Brain Death) ஒருவர் இறந்துவிட்டார் என வைத்திய ரீதியாக உறுதிப்படுத்திய உடலிலிருந்து கண் (Corneas), இருதயம் (Heart, Valves), சுவாசப்பை (Lungs), திசு (Tissue), எலும்புமச்சை (Bone Marrow), எலும்பு (Bone), ஈரல் (Liver), தோல் (Skin), சதயம், கணையம் (Pancreas), சிறுநீரகம் (Kidneys), குடல் (Intestines) ஆகியவற்றைத் தானமாக வழங்கலாம். தன் உடல் உறுப்புத்தானம் செய்ய விரும்புபவர் (Donor) தனது சம்மதத்தை உரிய இடத்தில் முதலிலே பதிவுசெய்து கொண்டால் சரி.

உறுப்புக்கள் செயலிழந்து படிப்படியாக இறக்கும் மனித உயிர்களைக் காப்பாற்ற 'உறுப்புத்தானம்' உதவுகிறது. மருத்துவ தகவற்படி ஒரே நேரத்தில் ஒன்று முதல் எட்டு உயிர்களைக் காப்பாற்றவும் *(1 - 8)*, ஒன்று முதல் எழுபத்தைந்து *(1 - 75)* ஆட்களுக்குப் பாதிப்பு நிகழாமல் பாதுகாக்கவும் முடியும். கொடையாளியினுடைய (Organ and Tissue Donor) இந்த மனித நேயச்செயல் பிறரின் உயிர் காக்க உதவுகின்றது. இத்தகையவர்கள் வணக்கத்துக்கு உரியவர்கள். மனித உடல் வீணாக அழியமுன் உடல் உறுப்புக்களைத் தானம் செய்து அந்த தானத்தைப் பெற்று உயிர்வாழும் மனிதர்கள் ஊடாக இறந்து உறுப்புகள் தானம் செய்தவர்கள் இறந்தும் இறவாநிலை எய்துகிறார்கள். உறுப்புகள் தானத்தினால் மரணத்தைத் தடுத்து நிறுத்தவதன் மூலம் மனிதனுக்கு மரணமென்பதே இல்லை!

ஒரு மனிதன் இன்னொரு மனிதரது உயிரைக் காப்பாற்றுவது போன்ற தன்னலமற்ற செயல் உலகில் வேறு ஒன்றும் இருக்க முடியாது. உடல் உறுப்புக்கள் தானம் செய்தவர்களுக்குத் தாங்கள் சரியான செயலொன்றைச் செய்துள்ளோம் என்ற மனநிறைவு அவர்களது வாழ்வை முழுமைப்படுத்துகிறது. (A Positive Moral Outlook). இது ஆன்மீக உணர்வையும், மனிதமேன்மை உணர்வையும் கொடுக்கிறது (A feeling of being in the presence of Spirituality, human decency and goodness). உடலுறுப்புத் தானமானது 'காசு', 'பணம்',

'பொருள்', 'உபகாரம்', 'சலுகைகள்', 'வியாபாரம்' எதுவுமற்ற தூய நல்லெண்ணச் (A Goodwill Act) செயலாகும்.

**மருத்துவ விஞ்ஞானத்தில் உறுப்பு மாற்றுச் சத்திர சிகிச்சை:**

மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியில் முதன்முதலாக 1954-ஆம் ஆண்டு வெற்றிகரமாகச் சிறுநீரகம் மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1960 காலப் பகுதியில் ஈரல், சதயம் (கணையம்), மாற்றப்பட்டது.



Dr. Christiaan Barnard

1967-ஆம் ஆண்டு தென்ஆபிரிக்காவில் உள்ள கேப்டவுனில் (Cape Town) டாக்டர் கிறிஸ்ரியான் பேர்னாட் (Dr. Christiaan Barnard) வெற்றிகரமாக இருதய மாற்று சத்திர சிகிச்சை செய்தார். வாகன விபத்தில் இறந்த ஒரு பெண்ணினது இருதயம் ஒரு ஆண் நோயாளிக்குப் பொருத்தப்பட்டது. ஆண் - பெண் வேற்றுமை நீக்கிய இச் சத்திர சிகிச்சை மூலம் 'பெண்' ஆணுக்கு உயிரானார்! இந்த வெற்றிகரமான இருதய மாற்று சத்திர சிகிச்சை உலகத்தில் உள்ள மூலை, முடுக்குகள் எல்லாம் பரபரப்புச் செய்தியாகியது. உலகத்தில் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியானது. வானொலியில் முக்கிய செய்தியாகியது. இருதய மாற்றுச் சத்திரசிகிச்சை (Heart Transplant) உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. காதலுக்கும், அன்புக்கும், மனதுக்கும், நல்ல மனிதர்களுக்கும், நல்ல குணத்துக்கும், நல்வாழ்த்துகளுக்கும், மனிதனில் கடவுள் குடியிருக்கும் வீட்டின் அடையாளமாகவும் இருந்த 'இருதயம்' மாற்றப்படக் கூடியதாக மருத்துவ விஞ்ஞானம் உறுதி செய்துவிட்டது.

இன்று உறுப்புக்கள் தானமாக வழங்கப்படுவதால், பல உயிர்கள் மீண்டும் உயிர்வாழக் கூடியதாக உள்ளது. இறந்தவர்கள் பிறரை இறப்பிலிருந்து காப்பாற்றி உயிர்வாழச் செய்துள்ளார்கள். தன் 'உயிர்' இழப்பிலும் பிறருக்கு 'உயிர்' கொடுக்கும் மகிமை உறுப்புத் தானத்துக்கு உண்டு! தினமும் மாற்றுறுப்பு இல்லாமல் இறுதிவரை வாழப் போராடி ஏராளமானோர் இறக்கிறார்கள். அதே நேரத்தில் ஏராள

மானோரது உடல்கள் நல்ல நிலையிலுள்ள உறுப்புக் களுடன் இறந்து அழிந்து போகின்றன. உயிர்வாழும்போது கொடுக்கும் ஒரு சாதாரண 'சம்மதம்' (Consent) பல உயிர்களைக் காக்கும். 'சம்மதம் இருக்கப் பயமேன்' என்பதே உறுப்புத்தானம் செய்தவர்களின் தாரக மந்திரமாகட்டும். அவர்கள் இவ் உலகை மேலும் அழகாக்குகிறார்கள். அவர்கள் தங்கள் இறப்பு மூலம் 'காத்தலை' செய்கிறார்கள்.

**இயல்பாக உடல் உறுப்புக்கள் தானம் செய்யும் ஐரோப்பிய பிரஜைகள்:**

பெல்ஜியம் (Belgium), போலண்ட் (Poland), போத்துக்கல் (Portugal), பிரான்ஸ் (France), பின்லண்ட் (Finland), ஆஸ்டிரியா (Austria) போன்ற நாடுகளில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் உடல் உறுப்புத்தானம் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்தவர் களாக (Presumed Consent) அந்த நாடுகளில் கருதப்படுகிறார்கள். அந்த நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரும் இயல்பாக உறுப்புத்தானம் செய்தவர்களாவார்கள் (Everyone is automatically an organ donor). ஒருவர் தன் இறப்புக்கு அந்த 'உரிமம்' இயல்பாகக் கொடுத்துவிடுகிறார். இறந்தவுடன் அந்த உரிமம் பிறரை வாழவைக்கிறது. அயர்லாந்தில் உடல் உறுப்புக்கள் தானத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துகிறார்கள்.

**சிறிலங்கா கண் தானத்தில் உலகில் முன்னணி:**

சிறிலங்காவில் 1961-இல் அரசு சார்பற்ற, இலாபநோக்கற்ற தனி அமைப்பாக கண்தானச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது (Sri lanka Eye Donation Society). இன்றுவரை ஏறக்குறைய 57 நாடுகளுக்கு 60,000 கண்களை (Corneas) தானமாக வழங்கி 'கண்ஒளி' வழங்கியுள்ளது. ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 3000 கண்களைத் தானமாக வழங்குகிறது (3000 Corneas per year). உலகில் கண்களைத் தானம் செய்யும் முன்னணி நாடாக ஸ்ரீலங்கா விளங்குகிறது.

**இறப்பைப் போல் உறுப்புத் தானமும் இயற்கையாக வேண்டும்:**

இறப்பு எப்படி இயற்கையோ அதேபோல் உடலுறுப்புக்கள் தானமும் இறப்புடன் சேர்ந்த இயற்கையாக

மாற வேண்டும். (The organ donation needs to be thought of as a Natural part of the process of dying). அவ்வாறு உலகம் முழுவதும் செயலாற்றும் தினம் உதயமாகும்போது அன்றுமுதல் மத, இன, மொழி, நிற, சமூக, ஆண் - பெண், பிரதேச வேற்றுமைகள் அற்ற சகோதரத்துவமும், சமத்துவமும், மனிதநேயமும் அதனுடன் சேர்ந்து உலகில் இயற்கையாக மலர்ந்துவிடும்.

**ஆன்மிக நூல்களில் உறுப்புகள் தானம்:**

'உங்கள் உடலைத் தானமாக வழங்குதலே எல்லாத் தானங்களிலும் இலகுவானதும் உன்னதமானதும்' என மனுஸ்ம்ருதி கூறுகிறது. 'இப்பொழுது இல்லையெனில், எப்பொழுது' என யூதமத (Judaism) புனித நூலான ரால்மட்டில் (Talmud) சொல்லப்படுகிறது. "......ஒரு உயிரைக் காப்பாற்றினால் அனைத்து உயிர்களையும் காப்பாற்றியது போலாகும்' என குரான் (Q 5:32) கூறுகிறது.

கந்தர்சஷ்டி கவசத்தில் உடலுறுப்புக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டு அவற்றைக் காக்கும்படி இறைவனிடம் கேட்பதாக அந்தக் கவசம் அமைகிறது.

உடலுறுப்புக்கள் அனைத்தும் செவ்வனே காக்கப்பட வேண்டுமென்பது, அந்தக் கவசத்தை இசைக்கும்போது காதுவழியாக மனதைச் சென்றடைகிறது. திரும்ப திரும்ப, திரும்ப அந்தக் கவசம் இசைவழியாக அடிமனதைச் சென்றடைந்துவிடுகிறது. 'உடல் உறுப்புக்கள்' காக்கப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. இறந்த மனிதர்கள் தீயுடன் சங்கமமாகும்போது, காக்கப்பட்ட உறுப்புக்கள் எரிந்து சாம்பலாகிவிடுகின்றன, அல்லது புதைக்கப் பட்ட மனிதர்களுடன் அவை அழிந்துவிடுகின்றன.

இறந்தவுடன் அவற்றைத் தானமாக வழங்க ஏற்கெனவே ஏற்பாடுசெய்து வைத்திருந்தால், கந்தர்சஷ்டி கவசம் வழங்கும் அறிவுரைபோல், அவை அழியாது தொடர்ந்தும் காக்கப்படும். கந்தர்சஷ்டி கவசம் உறுப்புக்கள் தானத்தை வழிபாடு மூலம் உணர்த்துகிறது போலும்!!

**உறுப்புக்கள் தானத்தைப் பற்றிய விழிப்புணர்வு!**

நாட்டுத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், மக்கள் தலைவர்கள், பிரபலமானவர்கள், மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்கள் தங்கள் மரணத்திற்குப் பின் உடல் உறுப்புக்கள் தானம் செய்து முன் உதாரணமாக நடந்து கொண்டால் அச்செயல் இயல்பாகவே பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வைக் கொடுக்கும். மதங்கள், சினிமாக்கள், நாடகங்கள், கதைகள், கவிதைகள், கல்விப் பாடத்திட்டங்கள், சமூக அமைப்புக்கள், பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள், பத்திரிகைகள், தொலைக்காட்சி போன்றவை உடல் உறுப்புக்கள் தானம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டியது அவற்றின் சமுதாயப் பணி மாத்திரமல்ல அது ஒரு தார்மீகப் பொறுப்புமாகும்.

## அத்தியாயம் 66

# 'மரணத்தின் பின் உயிர்'

# (Life after Death)

*- சுவாமி விவேகானந்தர்*




*(26.01.1896 அன்று அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி: நன்றி - Life after Death - Published by Advaita Ashrama, Calcutta, India)*

**மி**க்க ஆர்வமான கேள்வி ஒன்றுக்கு இங்கு பதிலளிக்கிறேன். ஏன் நமக்கு முற்பிறப்பு ஞாபகத்தில் இல்லை?

இப்பொழுது நடக்கும் நமது வாழ்க்கையில் எல்லாம் நமக்கு ஞாபகமா? உங்களில் எத்தனை பேருக்கு உங்கள் கைக்குழந்தைப் பருவம் ஞாபகம்? நீங்கள் மிகச் சிறுபிள்ளையாக இருந்தபோது நீங்கள் செய்தவை உங்களுக்கு ஞாபகமா? உங்களுக்கு ஞாபகம் இல்லை என்பதற்காக நீங்கள் குழந்தையாக இருக்கவில்லை என்று கூறமுடியுமா? நாங்கள் இருக்கிறோம் என்பது எங்கள் ஞாபகத்தில் தங்கியிருக்க வேண்டுமென்பதில்லையே! ஏன் நாங்கள் முற்பிறப்புக்களை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்? இறந்த பின்பு மூளை அழிந்துவிடுகிறது, மீண்டும் பிறப்புடன் புதிய மூளை உருவாகிவிடுகிறது. மனம் பழைய அனுபவங்களுடன் புதிய உடலுக்குள் பிரவேசித்துவிடுகிறது.

முற்பிறவியின் அனுபவங்கள் மனிதருக்குள் இயற்கை சுபாவமாக (Instinct) பதிந்துள்ளன. வாத்துக் குஞ்சு

தண்ணீருக்குள் எவ்வித முயற்சியும் இன்றி இயல்பாக எப்படி நீந்துகிறது? கடந்த கால அனுபவமே. மரண பயம் எங்கிருந்து வந்தது? முற்பிறப்புகளின் அனுபவந்தானே! விஞ்ஞானம் நம்மிடம் இருக்கிறது. இங்கே எதிர்கொள்ளும் கஷ்டத்தைப் பாருங்கள். இன்றைய விஞ்ஞானிகள் புராதன காலத்து ஞானிகள் போல் பேசுகிறார்கள். இன்றைய விஞ்ஞானிகளும் புராதன ரிஷிகளும் பல விடயங்களில் ஒத்துப்போகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் விலங்கினமும் நிறைய அனுபவங் களுடனேயே பிறக்கின்றன, மனதின் செயற்பாடுகளுக்கு பழைய அனுபவங்களே காரணமாகின்றன. இந்த அனுபவங்கள் ஆன்மாவுக்கு உரியதா? ஏன் உடலுக்கு மாத்திரம் உரியது என்று கூறக்கூடாது? ஏன் பரம்பரை பரம்பரையாக ஏற்பட்டது என்று கூறக்கூடாது? இறுதிக் கேள்வியாக: என் மூதாதைகள் பெற்ற அனுபவங்களுடன் நான் பிறந்திருக்கிறேன் என்று ஏன் சொல்லக்கூடாது? உடலுக்கு, உடல் மாற்றப்பட்டு பரம்பரையாக இந்த மாற்றம் நடக்கிறதா? இக்கேள்வி சுலபமானது. பரம்பரை பரம்பரையாக வந்தடைந்துள்ளது என்றால், எதுவரை? இவற்றிற் சில கடந்த கால நமது செயல்களால், அனுபவங்களால் அதற்கேற்ற பெற்றோர்கள் மூலம் அந்த ஆன்மா உடலாக மாறுகிறது.

உங்களைப் பார்க்கும்போது என் மனதில் அலைகள் எழுகின்றன, பின்பு அடங்குகின்றன. ஆனால் அந்த அலை அழிந்துவிடவில்லை. மீண்டும் ஞாபகமாக எழத்தான் போகிறது. இந்த ஞாபகங்கள் மனதில் பதிவாகி உள்ளன. நான் இப்போது இறந்தால் இந்த ஞாபகங்களுடன்தான் இறப்பேன். ஒரு பந்தை இந்த மண்டபத்தினுள் நான் தடியால் அடித்தால் அந்தப் பந்து நான்கு சுவர்களில்போய் அடிபட்டு கதவு வழியாக வெளியே செல்லும்போது அந்தப் பந்து எதைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு வெளியேறுகிறது? அந்த அடிகளின் தாக்கங்களைத் தான் அந்தப் பந்து சுமந்து சென்றுள்ளது. ஒரு உடல் இறந்தவுடன் ஆன்மா எதைத் தாங்கிச் செல்கிறது? தான் செய்தவற்றை, தன் எண்ணங்களை, தன் அனுபவங்களைத் தாங்கிச் சென்று பின்பு மேலும் அனுபவம் பெற புதிய உடலை நாடுகிறது என கூறிய சுவாமி விவேகானந்தர் மேலும் தொடர்ந்து தன் உரையை நிகழ்த்தினார்...

# பாகம் - 5

## முடிவான முடிவு

## (An Ultimate Thought)

## அத்தியாயம் 67

# விடை காணப்பட வேண்டிய வினா எது?

## (To which question does an answer need to be found?)

**கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பதா அந்த வினா?**

'கடவுள்' இருக்கிறாரா? இல்லையா? என்ற விவாதம் ஆயிரக்கணக்கான வருடங்களாக நடைபெறுகின்றன. இதுவரை, கடவுள் இருக்கிறார் என்பதை எந்தவொரு ஆஸ்திகராலும் எந்தவொரு நாஸ்திகரையும் நம்பவைக்க முடியவில்லை. அதுபோலக் கடவுள் இல்லை என்பதை எந்தவொரு நாஸ்திக ராலும், எந்தவொரு ஆஸ்திகரையும் நம்ப வைக்க முடிய வில்லை. கடவுள் இருக்கிறார் என்றால் இருந்து விட்டுப் போகட்டுமே, கடவுள் இல்லை என்றால் இல்லாமல் இருந்துவிட்டுப்போகட்டுமே. 'இருப்பது' எதுவோ அது எதைப் பற்றியும் கவலைப்படாது,

கடவுள் இருக்கிறார் என்ற அனுமானம் நன்மை செய்ததை விட, பிரச்சினைகளையும், வன்முறைகளையும், போர்களையும் அதிகரிக்கச் செய்துவிட்டது.

மனிதனது ஆற்றலின் எல்லை விரிந்து செல்கிறது. மனிதன் தனது ஆற்றலின் எல்லையைத் தொட முடியவில்லை. தனது 'சக்தி' 'ஆற்றல்' 'திறமை' எங்கே முடிகிறது என்பதை மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அறிய முடியவில்லை. மனிதனது சக்தி, ஆற்றல், திறமை வளர்ந்துகொண்டே செல்கிறது. மனிதனுக்கு மீறிய சக்தியும் மனிதன்தான்.

கடவுளைப் பற்றிய விவாதம் என்றும் தொடரப்போகும் விவாதம்தான், ஆனால் இது ஒரு விவாதமாகத்தான் இருக்கும்.

உலகில் மனிதர்கள் வாழும் காலம் முழுவதும் இது முடிவுகாண முடியாத ஒரு விவாதம்தான். கடவுள் இருக்கிறார் என்று நிரூபிக்கப்பட்டால், அடுத்தது என்ன? ஒன்றுமே இல்லை. கடவுள் இல்லை என்று நிரூபிக்கப்பட்டால், அடுத்தது என்ன? அதுவும் ஒன்றுமே இல்லை. இந்த இரண்டு நிரூபணங்களும் அந்த ஒன்றும் இல்லாத 'வெறுமையை'த்தான் (Nothingness / Emptiness / Void / `space) நிரூபிக்கின்றன.

அந்த வெறுமைதான் - 'பரவெளி' (Non-Self). தங்கள் மனதைக் கடந்து தாங்களே (Self) இல்லாத 'Nonself' இந்தப் பரவெளியைப் பற்றித்தான் புத்தர்,மஹாவீரர், சொறாஸ்ரியர், கபிலர், பதஞ்சலி முனிவர், சைதன்யர், லா-சூ, இயேசுபிரான், நபிகள் நாயகம், லா-சூ, றாபியா, போதிதர்மர், திலோபா, மன்சூர், மார்பா, கபீர்தாசர், குருநானக், சங்கர், இராமகிருஷ்ணர், இரமண மஹரிஷி, சீரடிபாபா போன்ற மாபெரும் மகான்கள் கூறுகின்றனர். அவர்கள் அதனை அடைந்தனர்.

**விடை காண வேண்டிய வினா இதுவா? இல்லை!**

அப்படியானால் எது அந்த வினா? வாழ்வு என்றால் போராட்டம், வாழ்வென்றால் பிரச்சினை என்கிறார்களே! அதைப்பற்றியதா அந்த வினா? அப்படியானால் வாழ்க்கைப் பிரச்சினை ஏன் தீர்க்கப்படவில்லை? அப்படி தீர்க்கப்பட முடியாத பிரச்சினையா வாழ்வு?

வாழ்வென்றால் போராட்டம் என்று அறிஞர்கள், கவிஞர் கள், எழுத்தாளர்கள், சொற்பொழிவாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலதரப்பட்டவரும் கூறுவதுபோல் வாழ்க்கை போராட்டமா? இந்த வாழ்க்கைப் போராட்டத்தை யார் தீர்ப்பது? தத்துவவாதிகள், அறிஞர்கள், ஆன்மிகவாதிகள், ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், மன உளவியலாளர்கள் பல நூற்றாண்டுகளாகச் சிந்தித்தும் எந்த முடிவுக்கும் வர முடியவில்லையா? சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள் வாழ்வைப் பற்றிப் பிழையாகக் கணக்கு போட்டுவிட்டார்களா? வாழ்வு என்றால் போராட்டம், வாழ்வென்றால் பிரச்சினை என்பது உலகம் முழுவதும் ஒரு தொற்றுநோய் போலப் பரவியுள்ளது.

இதைக் கூறப் பல மொழிகளில் பல பொன்மொழிகளும் உண்டு.

நாம் எல்லோரும் வாழ்வு பிரச்சினை இல்லை என்பதை முதலில் புரிந்துகொள்வோம். வாழ்வென்பது நாம்தான், வேறு எதுவும் இல்லை. அப்படியானால் நாம் எப்படி நமக்குப் பிரச்சினையாக இருக்கமுடியும்? நாம்தான் பிரச்சினை என்றால், அதை வேறு யார் வந்து தீர்ப்பது? எப்படித் தீர்ப்பது? நம் வாழ்வு நமக்குள்ளே இருக்கிறது. அது ஒருபோதும் நமக்கு வெளியே இல்லை. நாம் நமது வாழ்வோடு இணைந்தவர்கள், வாழ்வில்லாமல் நாம் இல்லை. நாம் இல்லாமல் நமது வாழ்வு இல்லை. எங்களிலிருந்து பிரிக்க முடியாதது எதுவோ அது வாழ்வு. கடலும் அலையும் போல, அதாவது கடலின் அலை சமுத்திரத்தின் பிரச்சினையை எப்படித் தீர்க்கும்? அது சமுத்திரத்திற்கு பிரச்சினையில்லை. அது சமுத்திரத்தின் அங்கமாகும். சமுத்திரம் என்பதே பல அலைகளைக் கொண்டதுதான்.

'பிரச்சினை', 'போராட்டம்' என்பது மனதால் உண்டாக்கப் படுகிறது. வாழ்வென்றால் 'பிரச்சினை', 'போராட்டம்' என்றவுடன் எங்களுக்குள் சண்டையும் ஆரம்பமாகிவிடுகிறது. நாம் இப்படிச் சண்டைபிடித்தா பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்? நாங்கள் ஒத்துப்போனால் 'பிரச்சினை' என்ற விடயம் ஏன் உருவாக வேண்டும்? புரியாத புதிரில் சண்டை போடுவதற்கு ஒன்றும் இல்லை. நிலா வானத்தில் தோன்றுகிறது, அது இயற்கையின் செயல், அது புரியாத புதிர். அதை இரசித்துக்கொள்கிறோம். ஆற்றில் பேரிரைச்சலுடன் சீறிப் பாயும் அலைகளை இரசிக்கப் பழகிக்கொண்டோம். வானில் ஏற்படும் இடியையும், மின்னலையும், பேர் இரைச்சலுடன் பொழியும் மழையையும் இரசிக்கிறோம். இயற்கையென ஏற்றுக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு நகர்கிறோம். இடியுடனும், மின்னலுடனும் நாம் சண்டை பிடிக்கவில்லை. பேரிரைச்சலுடன் வரும் மழையை இரசித்து சிறுவர்கள் காகித ஓடம் விட்டு மகிழ்கிறார்கள். ஒத்துப்போகவும் ரசிக்கவும் செய்கிறோம்.

நம்முடன் நாம் ஒத்துப்போவோம். நம்மை நாம் இரசிக்கப் பழகிக்கொள்வோம், நம்மையே இரசித்து நமது வாழ்வுடன்

ஆடிப் பாடி மகிழ்வோம். வாழ்வு தத்துவங்களுக்காக இருப்பதில்லை, வாழ்வதற்கும், அன்பு செலுத்துவதற்கும் இந்த உலகில் எவ்வளவோ இருக்கின்றன. எண்ண அலைகள் கடல் அலைபோல் கிளம்பி, அமைதியற்ற நிலையில் நம்மை வைத்திருக்கலாம், வாழ்வில் ஆடுதல், பாடுதலைச் சேர்த்துக் கொண்டு வாழ்வை இரசிப்போம். வாழ்வை முழுமையாக வாழ்ந்து பார்த்து உணர்ந்துகொள்வோம். அனாவசியமற்ற, பொருத்தமற்ற சிந்தனை, வாழ்வைப் பற்றித் தவறான கண்ணோட்டத்தைத் தரும். சிந்தனை எப்பொழுதும் சிந்தனை தான்.

சிந்திக்கும் முறையை மாற்றும்போது, நம்பிக்கைகள் மாறுகின்றன. நம்பிக்கைகளை மாற்றும்போது, எதிர்பார்ப்புகள் மாறுகிறது. எதிர்பார்ப்புகளை மாற்றும்போது, மனப்போக்குகள் மாறுகிறது. மனப்போக்குகளை மாற்றும்போது, பழக்கங்கள் மாறுகிறது, பழக்கங்களை மாற்றும்போது, செயல்கள் மாறுகிறது. செயல்களை மாற்றும்போது, வாழ்க்கை மாறுகிறது.

விஞ்ஞானம் வாழ்வை எப்பொழுதும் ஒரு சவாலாக எதிர்கொள்கிறது. தத்துவவாதிகள் வாழ்வை பிரச்சினையாக்கி விட்டார்கள். அறிஞர்கள் வாழ்வை விரோதியைப் பார்ப்பதுபோல் பார்க்கிறார்கள், சிந்தனையாளர்கள் வாழ்வை வெற்றிகொள் என்கிறார்கள். வாழ்வு என்ன பகைவனா? வாழ்வை எதிராகப் பார்த்தால், அந்த விரோத மனப்பான்மை யுடன் எப்படி வாழ்வை அன்புடன் முழுமையாக வாழ முடியும்? வெறுத்தல், பகையுணர்வு, பயம், இந்த உணர்வோடு வாழ்ந்தால் முழுமையான வாழ்வை இழந்துவிடுவோம்.

தத்துவங்களையும், கோட்பாடுகளையும், கேள்விகளையும், பயங்களையும் உருவாக்கிக்கொண்டு வாழ்வை வாழமுடியாது. வாழ்வு நம்மை நேசிக்கிறது, வளர்க்கிறது. வாழ்வு நம்மை மேன்மைப்படுத்த முயற்சி செய்கிறது. நம்மை உயர்த்துவதன் மூலம் வாழ்வு தன்னை உயர்த்திக்கொள்கிறது.

நாம் நோபல் பரிசுகளும் பெறலாம். ஆனால் வாழ்வு எந்தப் 'பரிசை'யும் நமக்கு வழங்காது, ஏன்? நாம் வாழ்வை விரோதியாகப் பார்ப்பதால், வாழ்வு நம்மை விரோதியாகப் பார்க்கிறதே! வாழ்வைப் போராட்டம் என்றால் வாழ்வு

நம்மைப் போராட்டமாகப் பார்க்கிறது. வாழ்வைப் பிரச்சினை என்றால் வாழ்வு நம்மைப் பிரச்சினையாகப் பார்க்கிறது.

நாம் வாழ்வை விரோதியாகப் பார்ப்பது போல வாழ்வும் எம்மை விரோதியாகப் பார்க்கிறதே! ஆனால் வாழ்வு நமக்கு 'மகுடம்' சூட்டி ஓர் அரசனாகத்தான் பார்க்க விரும்புகிறது. வாழ்வு ஒரு தாயைப் போன்றது. அதிலிருந்துதான் நாம் வந்தோம். நம் வாழ்வுக்கு நாம்தான் அன்னை. வாழ்வென்பதும் 'உயிர்'த் தன்மை என்பதும் ஒன்றுதான். அதிலிருந்துதான் நாம் பிறந்திருக்கிறோம். எப்படி அதிலிருந்து வந்தோமோ, அப்படியே அதில் கரையப் போகிறோம். அந்த அழகில் நாம் ஒவ்வொருவரும் ஓர் அங்கம்.

**ஆரம்பத்தில் கேட்ட அந்தக் கேள்விக்கு விடையாக அமையும் வினாவைக் கண்டுவிட்டோமா? இல்லை.**

**இவையும் அந்தக் கேள்வி இல்லை என்றால் அந்த வினா எது? எது சிறந்த மதம்? அதுவும் அல்ல, நரகம் இருக்கிறதா? சொர்க்கம் இருக்கிறதா? இதுவுமல்ல அந்தக் கேள்வி. புண்ணியம் பாவம் பற்றியதா? அவை பற்றியதும் அல்ல... ஏன்?**

நரகத்தைப் பற்றிய போதனைகளால் பயம், அதனால் 'கடவுளை' பக்தியாகத் தேடுகிறார்கள், சொர்க்கத்தைப் பற்றிய பேராசை, அதனால் பக்தியாக வணங்குகிறார்கள். பேராசைக் குள் பயம் பதுங்கியிருக்கிறது. பயத்துக்குள் பேராசை ஒளித்திருக்கிறது. பயம், பக்தி, இவைகளுக்கு அப்பால் மக்களை ஆன்மிகம் அழைத்துச் செல்லவேண்டும். நாம் கணத்துக்கு கணம் முழுமையாக வாழவேண்டும். சொர்க்கலோகத்திற்காக நாம் இவ்வுலகத்தில் வாழவில்லை. இவ்வுலகில் மனித நேயத்துடனும் ஜீவகாருண்ணியத்துடனும் வாழ்ந்து, நாம் பிறந்து வாழ்ந்த இந்த உலகத்தை இப்படியே விட்டுச் செல்லாது மேலும் அழகாக்க வேண்டியதும், அமைதியாக வைத்திருக்க வேண்டியதும் நமது ஒவ்வொருவரினதும் பொறுப்பு. காற்றும் தண்ணீரும் மாசுபடாது பேணவேண்டிய தும், மரங்களை அழியாது பாதுகாக்க வேண்டியதும் நட வேண்டியதும் தூய காற்றுக்கும், மழைக்கும் வழி சமைக்க வேண்டியதும், சுற்றுப்புறச் சூழலை சுகாதாரமாக வைத்திருக்க வேண்டியதும் நம் ஒவ்வொருவரதும் பணியாகும்.

**இவையும் அந்தக் கேள்விக்குரிய வினா இல்லையென்றால் அந்த விடை காணப்படவேண்டிய வினா எது?**

**ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? எங்கே செல்லப் போகிறோம்? இந்தக் கேள்விகளைத் தவிர்த்தே வருகிறோம்.**

இந்தக் கேள்விகள் நமது அமைதியை, ஆனந்தத்தை குழப்பிவிடும் என நினைக்கிறோம். இவையெல்லாம் அவசியமற்ற கேள்விகள் என நமது மனம் தந்திரமாக தவிர்த்தே வருகிறது. நாம் வாழும்போதே அவசியம் பதில் அறியவேண்டிய கேள்விகள் இவை.

நமது 'இருப்பு' (Being) என்ன? நமது சுயம் (Self) அல்லது சுய இயல்பு (Self-Nature) என்ன? நமது வாழ்வின் ஓட்டத்தின் போதே நாம் விழிப்பாக இருந்து நாமே நம்மை கையும்மெய்யுமாகப் பிடித்து நம்மை அறிந்துகொள்ள வேண்டும்.

எப்பொழுதும் பிறரை அறிய நமக்குள் இருக்கும் அந்தத் தூண்டுதலை நம்மை நோக்கித் திருப்ப வேண்டும். சமுதாயம் எதை விரும்புகிறதோ, உலகம் எதை எதிர்பார்க்கிறதோ அதற்கேற்ற மாதிரி சிந்திக்க, அதே முறையில் செயல்பட, அதன் வழிகளில் வாழ்வதில் சௌகரியம் காணக்கூடாது. 'உண்மை' ஒருபோதும் சௌகரியத்தில் ஆறுதல் அடையாது. சுவையான பேச்சில் ஆர்வம் காட்டாது. 'உண்மை' எப்போதும் 'உண்மை'தான்.

யாருடைய துணையுமில்லாமல் 'உண்மை' என்னவென்று அறிய முற்பட்டால், எது நல்லது, எது கெட்டது என்று மற்றவர்கள் சொல்வதை உதறித் தள்ளிவிட்டு தாங்களே 'அதை' கண்டுபிடிக்க முயற்சி செய்தால், இந்த வழியில்தான் செல்ல வேண்டும் என்று மற்றவர்கள் வழிகாட்டுவதை நிராகரித்து விட்டால், போகும் பாதைக்கான வரைபடம் இதுதான், இதன்படிதான் பயணம் இருக்கவேண்டும் என மதவாதிகள், மதபூசகர்கள், சோதிடர்கள் கூறுவதை ஏற்க மறுத்துவிட்டால், இப்படியெல்லாம் நடக்க முடிந்தால், கோடிக்கணக்கான மக்கள் அந்த 'உண்மையை' முயற்சியற்ற முயற்சியால் அடைந்து விடுவார்கள்.

ஒவ்வொருவரும் உண்மையானவராக வாழ்ந்து இறக்க வேண்டும். நரகலோகத்தை புண்ணியலோகத்தை தூக்கி எறிந்து விடுவோம். அவை எங்களது பயமும், பேராசையுமாகும். கடவுள் எண்ணத்தை நீக்கிவிடுவோம். இது ஒரு நம்பிக்கையே. நமது பட்டம், பதவி, அந்தஸ்து, கௌரவம் அவற்றை முன்னிலைப்படுத்தி வாழாது தூக்கி ஒரு பக்கத்தில் போட்டு விடுவோம். அவை போலியான அணிகலன்கள். நமது அறிவை மூட்டை கட்டிவிடுவோம். ஏனெனில் நாம் பெற்ற அறிவு அனைத்தும், கடன் வாங்கப்பட்டவையும், சேகரிக்கப் பட்டவையுமாகும். அவை நமது சொந்த அனுபவமல்ல. நாமே சாட்சியாக அவை நமக்குள் உதயமானதல்ல. இவை அனைத்தும் நமது பாரம், கனதி, சுமைகளாகும். இவை அனைத்தையும் இறக்கி நம்மை இலேசாக்கிக் கொள்வோம். நாம் வெறுமையானவராகிவிட்டோம். இப்பொழுது நம்மிடம் எதுவும் இல்லை.

அந்த 'வெறுமையை' உண்மையாக உணருவோம். நாம் மௌனமாகிறோம். மொழிகளில் சிறந்தது மௌன மொழி. நாம் மௌனித்திருக்கும்போது வாழ்வு தன் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்தும். நாம் 'மலர்தலுக்கு'த் தயாராகிறோம்.

மரத்தில் காய், கனிகள் அதிகமாகும்போது மரக்கிளை வளைந்து கவிழ்கிறது. மரம் காய்கனிகளை இழந்தவுடன் பாரம் நீங்கிவிடுதலைப்பெற்று வெறுமையாகி 'மலர்தலுக்கு' தயாராகிறது. இதை நாம் மரம், செடி, கொடி, தானியங்களில் பார்க்கிறோம். இதேபோல் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய தன்முனைப்பை (Egoism) வீழ்த்தி வெறுமையானவராகி, விடுதலை பெற்று உண்மை மனிதனாக 'மலர்தலுக்கு'த் தயாராகுவோமாக!

பிரித்துப் பார்க்கத் தெரியாத, நல்லது - கெட்டது தெரியாத, பாவ - புண்ணியம் தெரியாத, நரகலோகம் - சொர்க்கலோகம் அறியாத, அந்த அப்பாவித்தனம், வெகுளித்தனம், குழந்தைத்தனம் இவைதான் உண்மைத் தன்மை. ஒவ்வொருவரும் உண்மையானவராக வாழ்ந்து, இறந்து மரணத்தைப் பெறுமதியாக்க வேண்டும். வாழ்வின் இறுதி அனுபவம் மரணம்தான். ஒவ்வொருவரும் பிறந்தவுடன் மரணத்தை நோக்கிய பிரயாணம் ஆரம்பமாகிறது.

மரணமானவுடன் பிறப்பை நோக்கிய 'மலர்தல்' ஆரம்பமாகிறது. வாழ்வின் 'இறுதி' அனுபவமான மரணம் அடுத்த வாழ்விற்கான 'ஆரம்ப' அனுபவமாகிறது. இரண்டு அனுபவங்களுக்கும் நுழைவாயில் கதவு ஒரே மாதிரியானவைதான்.

மரண பயம் பிடித்திருப்பதன் காரணத்தால், வாய் திறந்து இதைப்பற்றி யாரும் பேசுவதில்லை. இந்த 'மரணம்' என்ற சொல் நாகரிகமற்றது, அழகற்றது, கௌரவக் குறைவானதாகிறது. மகாபாரதக் கதையில் யுதிஸ்டிரரை (தர்மரை) யக்ஷன் என்ற தேவதை கேட்டது "இந்த உலகத்தில் ஆச்சரியப்படக்கூடிய விடயம் எது?" அதற்கு யுதிஸ்டிரன் கூறுகிறார்: "தினமும் நாம் விலங்கினங்களும், மனிதர்களும் இறப்பதைப் பார்க்கிறோம், ஆனால் 'நாமும்' இறப்போம் என்று நினைப்பதில்லை. நமது மரணத்ததைப் பற்றி நினைக்கக் கூடாது என்று நினைக்கிறோம். இதுதான் ஆச்சரியமானது" என்றார்.

மரணம்தான் மிக முக்கிய நிகழ்ச்சி. பிறப்பை விட முக்கியமானது. ஏனெனில் பிறப்பு ஏற்கெனவே நடந்துவிட்டது. மரணம் இனிமேல்தான் நடைபெற வேண்டியுள்ளது. அதை உணர்வுப்பூர்வமாக வரவேற்கத் தயாராக வேண்டும். மரணத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஆன்மிகம் மனிதர்களுக்குக் கொடுக்கவேண்டும். 'மரணத்துக்கு அப்பால் வாழ்வு உண்டு என்று தெரிந்தவர்களிடம் மரணம் தோற்றுவிடும்' என்கிறார் போதிதர்மர்.

- ஆன்மிகம் 'உள்'மாற்றத்தை உணரச் செய்ய வேண்டும்!
- ஆன்மிகம் பரவசத்தைக் கொடுக்க வேண்டும்!
- ஆன்மிகம் பயத்தையும் பீதியையும் ஊட்டக்கூடாது!
- ஆன்மிகம் மன இறுக்கத்தைத் தளர்த்தி இலகுவாக்கி விட வேண்டும்!
- ஆன்மிகம் மரணம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி பயத்தை நீக்கவேண்டும்!
- ஆன்மிகம் மரணத்துக்கு அப்பால் உள்ளதை தெளிவுபடுத்த வேண்டும்!

அப்படியென்றால் விடைதேட வேண்டிய அந்த வினா எது?

**நான் யார் என்பதுதான்!**

இரமணமகரிஷி, எப்போதும் தன் உபதேசங்களில் கேட்கும் கேள்விதான் இது. இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் தங்களுக்குள் கேட்டுத் தங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்பார். இதைத் தேடி "உள்ளே' போனால் "நான்' என்பதேயில்லாமல் போய்விடும். அந்தத் தேடலில், உண்மையில் ஒருவர் கரைந்துவிடுவதற்காகாவே மகரிஷி அவர்கள் அந்தத் தேடலை வலியுறுத்தினார்கள் என்பது என் எண்ணம்.

உங்கள் நினைவுகள், பெயர், பெற்றோர், குடும்ப விவரம், ஊர், பட்டம், பதவி, அந்தஸ்து, கௌரவம், இனம், மதம், மொழி, நாடு அனைத்தும் முற்றிலுமாக உங்கள் ஞாபகத் திலிருந்து வெளியேற்றிவிட்டால் நீங்கள் யார்?

எதுவுமே அறிந்திராத நிலையில் நீங்கள் யார் என்பதே உங்களுக்குத் தெரியாது! கடந்த கால நினைவுகளைப் பூரணமாக அகற்றியபின் உங்களுக்கென்று தனித்துவமோ, பெயரோ இருக்காது. 'நான்' என்னும் உணர்வே இல்லாமல் போய்விடும்.

'நான்' என்னும் உணர்வும் கடந்தகாலச் சேகரிப்பேயாகும். எண்ணங்களோ, நினைவுகளோ, கடந்தகால அனுபவங்களோ, அனுபவங்களின் சுமைகளோ எதுவுமே இல்லாத நிலையில் நீங்கள் யார் என்ற உணர்வே இல்லாதபோது!

**நீங்கள் யார்?**

எண்ணங்கள் மாற்றடையலாம், நீங்கள் மாற்றத்திற்குட் படலாம் ஒவ்வொரு நொடியும் நீங்கள் மாற்றத்திற்குட்பட்டுக் கொண்டுதான் இருக்கிறீர்கள். உலகில் மாறாதது எதுவென்றால் மாற்றம் ஒன்றுதான். ஒவ்வொரு தாக்கமும் உங்களை மாற்றும் வகையிலேயே அமைந்துவிடும். ஏனெனில் நீங்கள் அத் தாக்கத்திற்கு ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறீர்கள். ஆனால் ஒன்று மட்டும் தொட இயலாத நிலையில்

அசைவற்றுத் திகழும். அதுவே உங்களது இயல்பு. இயல்பு (self-Nature) என்பது கற்பிக்கப்படுவதோ, அனுபவத்தால் சேருவதோ, படித்துப் பெறுவதோ, பழக்கத்தால் அல்லது வயதின் காரணமாக வந்து அடைவதோ அல்ல. பிறரால் அளிக்கப் படுவதோ அல்லது நிர்மாணிக்கப்படுவதோ அல்ல. இது உங்களுக்குள் அடி ஆழத்தில் எப்போதும் இருக்கும். உங்களிட மிருந்து அதைப் பிரிக்க முடியாது. அது உங்களையே மட்டும் குறிப்பதேயாகும். அதுதான் 'இயல்பு' என்பதாகும். நீங்களும் உங்கள் இயல்பும் பிரிக்கப்பட இயலாதவை. ஒரு உதாரணத்திற்காக உங்களை அடையாளப்படுத்தும் உங்கள் இயல்பை நீக்கிவிட்டால்!

**நீங்கள் யார்?**

**ஒரு நிகழ்வு:**

பிரசன்ஜிதன் என்று ஒரு மன்னன் இருந்தார். தன்னை ஊர் மக்கள் வணங்க வேண்டும் என்ற கர்வத்துடன் இருந்தார். புத்தர் அவரது இராஜ்ஜியத்தினுள் பத்தாயிரம் சீடர்களுடன் பிரவேசித்தார். இந்த மன்னனின் மனைவி புத்தரை ஏற்கனவே பார்த்திருக்கிறார். புத்தரைப் போய் பார்க்கும்படி தன் கணவனுக்குக் கூறினார். மன்னன் தான் புத்தரை விட உயர்ந்தவர் என்றும், தன்னைப்பற்றி பல புலவர்கள் புகழ்ந்து பாடுகிறார்கள் எனவும், தன்னைத் தினமும் தன் இராஜ்ஜியத்தினுள் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வணங்கு கிறார்கள் எனவும் கூறி மறுத்தார். எனினும் மனைவியின் வற்புறுத்தலினால் போய்ப் பார்க்க இணங்கினார். தனது பதவி, அந்தஸ்து, கௌரவத்தை காட்ட விரும்பி மிக விலையுயர்ந்த, பெறுமதியான வைரத்தை புத்தருக்கு அன்பளிப்பாக வழங்குவதற்காக எடுத்துச் சென்றார். இதைப் பார்த்ததும் அரசி 'மலர்' எடுத்துச் செல்லுங்கள் என்றார். மலரும் எடுத்துக் கொண்டார். புத்தர் பத்தாயிரம் துறவிகளுடன் வந்ததால் அரசன் அந்தத் துறவிகள் எண்ணிக்கையை விட கூடுதலான மக்களுடன் சென்று தன் மக்கள் செல்வாக்கைக் காட்ட யோசித்து, லட்சக்கணக்கான மக்களுடன் சென்றார்.

புத்தருக்கு முன்னால் தனது ஒரு கையில் வைரத்துடனும் மறுகையில் மலருடனும் நின்றார். புத்தர் 'கீழே போடு'

என்றார். அரசன் வைரத்தைக் கீழே போட்டார். மறுபடியும் புத்தர் கீழே போடு என்றார். அரசன் மலரைக் கீழே போட்டார். புத்தர் தொடர்ந்தும் கீழே போடு என்றார். அரசன் கீழே போட்ட வைரத்தையும், மலரையும் மாறி மாறிப் பார்த்தார். மீண்டும் புத்தர் கீழே போடு என்றார். எதுவும் அறியாது நாலாபக்கமும் திரும்பிப் பார்த்தார் அரசன் பிரசன்ஜித்தன். அங்கே இருந்த சரிபுத்தா இதைப் பார்த்ததும் கடகடவெனச் சிரித்தார். ஏன் சிரிக்கிறீர்கள் என்றான் அரசன், அதற்கு சரிபுத்தா "வைரத்தைக் கீழே போடு என்று சொல்லவில்லை, மலரைக் கீழேபோடு என்றும் சொல்லவில்லை, நீங்கள் கீழே போட்ட வைரம், மலர் உங்களுடையவை. அவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். கீழே போடு என்றது வேறு எதையும் அல்ல உங்களைத்தான்" என்றார். நீங்கள் உங்கள் அகங்காரம், ஆணவம், கர்வம், பேராசை, பாவ - புண்ணியம், நல்லது - கெட்டது, நரகலோக - மேலோக எண்ணங்கள், கற்பனைகள், எதிர்பார்ப்புக்கள் அத்தனையையும் போடுங்கள். நீங்கள் கீழே போட்ட அத்தனையையும் திருப்பி எடுக்காதீர்கள்" என்றார். மன்னர் அமைதியானார், புத்தரை நோக்கினார். மன்னரின் மனதிற்குள் 'உள்'மாற்றம் நிகழ்ந்தது. மன்னர் தனது இராஜ்ஜியத்திற்கு திரும்பிப் போகவே இல்லை. புத்தரின் சீடராகிவிட்டார்.

இது நம்பிக்கை பற்றியதல்ல, வாதப்பிரதிவாதங்கள் பற்றியதல்ல, மதமாற்றம், மனமாற்றம் பற்றியதுமல்ல, இது ஒரு மனிதன் இன்னொரு மனிதரிடம் காட்டும் 'அன்பு' பற்றியதாகும்!

இந்த அரசன் தன் முனைப்பை (Egotism) இழந்து, தன்னுள் தேங்கியிருந்த பல அடுக்குகளைத் தகர்த்தி தன் சுமைகளை அப்புறப்படுத்தி தன்னை இறுக்கப் பற்றிக்கொண்டிருந்த தளைகளை தூக்கி எறிந்து தன்னை இலேசாக்கி, தான் எதுவுமற்றவனாகி, தன்னை அறிய தனக்குள் பயணிக்கத் தொடங்கிவிட்டார். தனக்குள் விடை காணத் தன் 'உள்' யாத்திரையைத் தொடங்கிவிட்டார். 'நான் யார்?' எனத் தன்னைத் தானே கேட்டுக்கொண்டு தனக்குள் தன்னை கரைத்துக்கொண்டார்.

புனித ஸ்தலங்களாகிய காசி, காயா, மெக்கா, ஜெருசலம் போன்றவற்றிற்கு சென்றால் அங்கே 'விட்டுவிடுங்கள்' என்கின்றனர். அதாவது அடுக்கடுக்காகச் சேர்ந்துள்ள தன் முனைப்பை (Egotism) இறக்கி வைத்துவிடுங்கள் என்பதுதான். தன் முனைப்பை அங்கே விட்டுவிடுங்கள் என்பதுதான். தன்முனைப்பை சங்காரம்செய்து மனிதராகிவிடுங்கள் என்பதுதான்.

ஆன்மிகம் எளிய உடையிலும், உணவை நிராகரித்த விரதத்திலும் இல்லை. எளிய உடையும், விரதமும் ஆன்மிகம் என்றால், உடுக்க உடையில்லாமல் எளிய உடையுடன் வாழும் ஏழைகளும், உணவு இல்லாது தினமும் வாழும் அந்த மக்களும் அல்லவா உண்மையான ஆன்மிகவாதிகள்! அவர்கள் தங்கள் ஆடம்பர உடைகளை நீக்கி சில தினங்களுக்கு போலியாக உடை அணியவில்லை, தங்கள் சுவையான உணவை சில தினங்களுக்கு நீக்கி நடிக்கவில்லை, இயல்பாகவும், இயற்கை யாகவும் எளிய உடையுடனும், உணவில்லாமல் வாழ்வது அவர்களது உண்மை வாழ்வாகியுள்ளது. அப்படியானால் நடிப்பற்ற போலியற்ற உண்மையாகவே அப்படி வாழும் அந்த மக்கள் அல்லவா சிறந்த ஆன்மிகவாதிகள்! உண்மையிலேயே தெய்விகமானவர்கள் அவர்கள் அல்லவா!

உடையிலும், உணவிலும் ஆன்மிகத்தைத் தேடாது ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளேயே ஆன்மிகத்தைத் தேட வேண்டும்!

பிரார்த்தனைகளில் ஒவ்வொருவரும் தங்கள் அகங்காரத்தை, ஆணவத்தை, தன்முனைப்பை, போலிகளை, நடிப்பைத் தங்கள் அடையாளங்களைக் கரைத்து உண்மையுள்ள மனிதர்களாக மலரவேண்டும்! அந்த மலர்தலில் அழகுண்டு.

**மீண்டும் வினா எழுகிறது - நீங்கள் யார்?**

குழந்தையாக இருந்தபோது எந்த மொழியும் கற்பிக்கப் படாவிட்டால் எந்தவொரு மொழியும் அறிந்துகொண்டிருக்க மாட்டீர்கள். மொழியறிவு உங்கள் இயல்பன்று. குழந்தையாக இருந்தபோது எதுவும் கற்பிக்கப்படவில்லையெனில் எதுவுமே தெரியாமல் போய்விடும். இந்து தத்துவம் கற்பிக்கப்பட்டால்

இந்துவாக வளருவீர்கள், பொதுவுடைமைக் கொள்கை கற்பிக்கப் பட்டால் பொதுவுடைமைவாதியாக வளர்ந்திருப்பீர்கள்.

குழந்தையாக இருக்கும்போது எது உங்களுக்குக் கற்பிக்கப்படுகிறதோ அதுவாக வளர்கிறீர்கள். கற்பிக்கப்படுவது எதுவாயினும் அதுவாகிறீர்கள். நீங்கள் பிறக்கும்போது இந்துவுமல்ல, கிறிஸ்தவருமல்ல, பௌத்தருமல்ல, சமணருமல்ல, யுடிசியருமல்ல, சொராஸ்ரியருமல்ல, இஸ்லாமியருமல்ல, சீக்கியருமல்ல. மத அடையாளங்கள் உங்கள் மீது திணிக்கப் பட்டுள்ளது. பழக்கங்களும் பிறரிடமிருந்து உங்களுக்கு வருகிறது. அத்துடன் உங்களுக்கு கற்பிக்கப்படுகிறது, அத்துடன் சிலவற்றிலிருந்து அறிந்தும் பழக்கப்படுத்திக் கொள்கிறீர்கள்.

குழந்தையாகப் பிறக்கும்போது 'அறியும்' இயல்புடன் பிறந்தீர்கள், உங்களுக்குள் அறிதலுக்கான திறன் இருந்த படியால்தான் உங்களுக்கு கற்கக் கூடியதாக இருந்தது. கிரகித்தும் கொண்டீர்கள். அறியும் திறன் உங்களைச் சார்ந்ததே. கற்பிக்கப்படும் மொழிகள், மதங்கள், கருத்தியல்கள் எல்லாம் கற்கிறீர்கள், அதிகளவில் கற்பதற்கேற்ற மனதைப் பெற்று அதிக அனுபவங்களைப் பெற்று உலக மதிப்பைப் பெறுகிறீர்கள். உங்களுக்கு எதுவும் கற்பிக்கப்படவில்லை யெனில், எதையும் அறிந்துகொள்ள வில்லையெனில்!

**நீங்கள் யார்?**

கல்வி தந்த முகம், பதவி தந்த முகம், இனம் தந்த முகம், மொழி தந்த முகம், மக்கள் தந்த முகம், சபை தந்த முகம், அரங்கு தந்த முகம், அந்தஸ்து தந்த முகம், சமூகம் தந்த முகம், சூழல் தந்த முகம், மதம் தந்த முகம், அனுபவம் தந்த முகம், உற்றார், உறவினர், நண்பர்கள், சூழ உள்ளவர்கள் தந்த முகம், நாடு தந்த முகம் என உங்களுக்குத்தான் எத்தனை முகங்கள்? உங்கள் உண்மையான முகத்தை நீங்கள் மறந்து விட்டீர்களே! போலி முகங்களை உண்மை முகம் என்று நம்பத் தொடங்கி எத்தனை, எத்தனை, எத்தனை வருடங்கள் அதனால் அடையும் வசதிகள், சௌகரியங்கள், ஆறுதல்கள், கௌரவங்கள் சொல்லிலடங்கா! அத்தனை பொய் முகங்களை யும், போலி முகங்களையும் நீக்கிவிட்டால்!

**நீங்கள் யார்?**

சுயத்துடன் சிசுவாகப் பிறந்தீர்கள், அதைத் தெரிந்து கொண்டிருப்பதில்லை. குழந்தையின் முதல் சுயவிழிப்புணர்வு (Self - awareness) அகந்தையோடு வருகிறது. தனது தாயை முதலில் தெரிந்துகொள்கிறது. தன்னைச் சுற்றியுள்ள பொருட்களைக் கவனிக்கிறது. பின்னர் தான் வேறானவர் என்பதை உணரத் தொடங்குகிறது. இந்தப் பிரித்துப் பார்க்கிற உணர்வு அகந்தை உணர்வைத் தருகிறது. அகந்தை சுயத்துக்கு மேலுறையாகிறது, அகந்தை வளர்ந்துகொண்டே போகிறது.

சமூகத்திற்கு நீங்கள் ஒரு தன் முனைப்பாக (Ego) தேவைப்படுகிறீர்களே தவிர தனித்தன்மை உடையவராக அல்ல. தனித்தன்மை (சுயம்- Self Nature) சமூகத்திற்கு பொருத்தமற்றதாகிறது. எனவே உங்கள் ‘புற’ எல்லைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. சமூகம் உங்கள் தனித்தன்மை யில், சுயத்தில் ஆர்வப்படுவதில்லை. சமூகம் உங்கள் அகந்தையில் அக்கறை கொள்கிறது. உங்கள் ‘சுயத்தால்’ சமூகத்திற்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. உங்கள் தன்முனைப்பை (Egoism / Egotism) வலுப்படுத்திக்கொள்ள உதவுகிறது.

நீங்கள் அகந்தை என்ற வட்டத்துக்குள்ளே சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் வளர, வளர சமுதாயத்தில் கலந்து பழகுபவர்களாக, படித்தவர்களாக, பதவியில் உள்ளவர்களாக, உயர்ந்தவர்களாக, பண்பாளராக, நாகரிகமுள்ளவராக மாறிவிடுகிறீர்கள். உங்கள் தன்முனைப்பு நேர்த்தியடைகிறது. உங்கள் அகந்தையிலிருந்துகொண்டு செயல்படத் தொடங்கு கிறீர்கள். உங்கள் ‘சுயத்தில்’ இருந்தல்ல, ஒரு கூட்டத்துடன் இருக்கும்போதுதான் உங்களை அகந்தையுடன் அடையாளப் படுத்திக் கொள்கின்றீர்கள்.

நீங்கள் தனித்து தனிமையில் இருக்கும்போது உங்கள் அகந்தை உங்களிலிருந்து விலகிப்போகத் தொடங்கிவிடுகிறது. அந்த மௌனம் பல இரகசியங்களை உங்களுக்கு வெளியிடுகிறது.

புத்தர், மஹாவீரர், முகமது, சொரஸ்தியர், இயேசு போன்ற மகான்கள் தனிமைக்குள் நுழைந்தனர். புத்தரும் மஹாவீரரும் பட்டத்துக்குரிய இளவரசர்கள். பேரரசர்களது பிள்ளைகள். சகல மரியாதை, கௌரவங்களுடன் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு அரண்மனையிலே கல்வி கற்பிக்கப்பட்டது, இளவரசருக்குரிய பயிற்சிகள் அனைத்தும் பெற்றிருந்தனர். இருவரும் அரண்மனையில் தங்கள் மனைவியுடன் உல்லாச வாழ்வு வாழ்ந்தவர்கள், இருவருக்கும் ஒவ்வொரு புத்திரர்கள் (மகன்) இருந்தார்கள். அரண்மனையிலிருந்து வெளியேறி தங்களது ஆசாபாசங்களை துண்டித்துக்கொண்டனர். உலகத் தொடர்புகளிலிருந்து விலகி தனிமைக்குள் நுழைந்தனர். தங்களை அறிந்துகொள்வதற்காகத் தன்முனைப்பை முடிவுக்கு கொண்டு வர இவர்களுக்கு 12 வருடங்கள் எடுத்தன. 12 வருடங்கள் தனிமையில் இருந்தார்கள். காரணம் இவர்கள் சாதாரண மனிதர்கள் இல்லை. கல்வி, பண்பாடு, நாகரிகம், அந்தஸ்து, கௌரவம், பதவி, செல்வம், சௌகரியம், வசதிகள் என எந்த மனிதர்களையும் விட மேலதிகமாகவே அனுபவித்துக் கொண்டும், சுகம் கண்டுகொண்டும், உல்லாசமாக வாழ்ந்த வர்கள். இவர்கள் பல சலுகைகளைச் சார்ந்திருந்து பழக்கப்பட்டவர்கள். அரச குமாரர்கள் என்றபடியால், அதனை வெறுமையாக்க அதிக காலம் எடுத்தது.

எவ்வளவுக்கு நாகரிகம் வளர்ச்சி காண்கிறதோ அவ்வளவுக்கு அது கடினமாகிறது. அதற்குள் எவ்வளவு தூரம் ஒருவர் நுழைகிறாரோ அவ்வளவுக்குத் தன்முனைப்பை (Egotism) அவர் அறியாமல் ஏற்றுக்கொள்வார். இயேசுநாதர், முகமது நபிகள் நாயகம் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தன்முனைப்பை (Egotism) வளர்த்துக்கொள்ளாதவர்கள். இயேசு நாதர் 40 நாள்களும், முகமது நபிகள் நாயகம் 30 நாள்களும் தனிமையிலிருந்து தங்களை வெறுமையாக்கினார்கள். தன்முனைப்பை நீக்க அவர்களுக்கு அத்தனை நாள்களும் போதுமானதாக இருந்தது.

நீங்கள் காலையில் ஒன்றைத் தீர்மானிக்கிறீர்கள், மாலையில் அதை நீக்கிவிடுகிறீர்கள். தீர்மானிக்கின்ற அதே நேரத்தில் உங்களில் ஒரு பகுதி அதை ரத்துச் செய்கிறது. நேசிக்கின்றேன் என்று சொல்லும்போது ஆழத்துக்குச்சென்று

பார்த்தால் எங்கோ ஒரு மூலையில் வெறுப்பும் பதுங்கி யிருக்கும். இதைச் செய்யப்போகிறேன் என்று தீர்மானிக்கும்போது அதற்கு முரண்பாடான ஒன்றும் அங்கே இருக்கின்றது. உங்களுக்குள் அகந்தை கும்பலாக, கூட்டமாக இருக்கிறது. உங்களுக்குள் உள்ளார்த்தமாக இருக்கும் அந்தக் கூட்டத்திலே ஒற்றுமையில்லை.

உங்களுக்குள் இருக்கும் ஒரு பகுதி சில வேளைகளில் உங்களுக்குத் தலைவராகிவிடுகிறது. அடுத்த கணத்தில் அந்தப் பகுதி கீழே போய்விடுகிறது, மற்றொரு பகுதி மேலே வந்து உங்களுக்குத் தலைவராகிவிடுகிறது. இப்படியே ஒரு தொடர்கதையாக நீங்கள் மாறி, மாறிக்கொண்டேயிருப்பீர்கள், இதுதான் அகந்தை நிலை. அகந்தை ஒருபோதும் முழுமையாக எதிலும் இருப்பதில்லை.

உங்களுக்குள் இருக்கும் மகிழ்ச்சியை உங்களால் உணர முடிவதில்லை. மகிழ்ச்சியை எதிர்காலமாகப் பார்க்கிறீர்கள். நீங்கள் எதைச் செய்தாலும் அதன் பின்னணியில் பயம், பீதி, அச்சம் உங்களுடன் இருக்கும். நீங்கள் எங்குச் சென்றாலும் அச்சத்தை உங்களுடனே கூட்டிச் செல்வீர்கள். உங்கள் பிரார்த்தனையில், வழிபாட்டில் அச்சமிருக்கும், பூசை அபிஷேகத்தில் அச்சமிருக்கும், கடவுளைப் பற்றிச் சிந்தித்தால் அதில் அச்சமிருக்கும், நீங்கள் எதைச் செய்தாலும் அதன் அடிப்படை நோக்கம் அச்சத்திற்குரியதாகவே இருக்கும். உங்கள் நம்பிக்கைகள், கோட்பாடுகள், பிரார்த்தனைகள், வழிபாடுகள் அனைத்தும் அச்சத்தை மறைப்பதற்காகவேதான்.

நீங்கள் உண்மையாக இருந்தால் மகிழ்ச்சி, அமைதி இவைகள் உங்களுடைய இயல்பாகவிருக்கும். எந்தச் சூழ்நிலையையும் சார்ந்ததாக இருக்காது. எந்தச் சூழ்நிலையும் உங்களைப் பாதிக்காது. எதுவும் உங்கள் மையத்துக்குள் நுழைய முடியாது. மகிழ்ச்சி அது ஒரு மனநிலை. நீங்கள் உளமகிழ்ச்சியாக இருக்கும்போது அச்சம் மறைகிறது. அச்சத்தில் நீங்கள் உருவாக்கிக்கொண்ட மொத்த உலகமும் மகிழ்ச்சியில் மறைகிறது. பின் நீங்கள் அச்ச உலகத்தில் பிரவேசிக்கின்றீர்கள். அந்த உலகில் அச்சமில்லை என்கின்றபோது மட்டும் சுதந்திரம் சாத்தியமாகும்.

ஒவ்வொருவரதும் உடல் பெற்றோர்களுடையதாய், மரபுரிமையுடையதாய், நீண்ட தொடராக இருக்கிறதே! எனவே உடல் பெற்றோருக்கும், மூதாதையர்களுக்கும் உரியதாகிறது. ஒவ்வொருவரதும் தன்முனைப்பு, அகந்தை பிறருக்குரியது, சமூகத்திற்குரியது, வெளியுலகத்திற்குரியது அப்படியானால்!

**நாங்கள் யார்?**

நாங்களும் நீங்களும் எல்லோருமாகச் சேர்ந்து நாம் ஒவ்வொருவரும் 'யார்' என்பதை அறிய நமக்குள் உட்புறமாகச் செல்வோம். ஒவ்வொரு பருவத்தைக் கடந்து படிப்படியாக உள்ளே ஆழமாகச் செல்லச் செல்ல ஓரளவு எங்கள் சிறுபிராயம் வரை செல்லலாம். அதற்கப்பால் பல விடயங்கள் மறந்து போய்விட்டன, காணாமல் போய்விட்டன. நம்மைப் பற்றி எதையுமே கண்டுபிடிக்க முடியாத அந்தக் கட்டத்துக்கு வரும்போது நமது 'உண்மை'யை நோக்கி பயணிக்கிறோம். அதாவது நமது 'சுயத்தை' (self) நோக்கி அதாவது நமது 'இருப்பை' (Being) நோக்கி பயணிக்கிறோம். இப்பொழுது எதுவுமே ஞாபகமற்ற நிலையில் நாம் இருக்கிறோம். அதற்கப்பால் நம்மைக் கண்டுபிடிக்க முடியவில்லை!

**வினாவிற்கு விடையாக நிற்கும் அந்த 'வினா'...**
**'மீண்டும் நாங்கள் யார்?'**

அதற்கப்பால் அறியும் நிலையைத்தான் சித்தர்கள், யோகிகள், முனிவர்கள், மகான்கள், ஞானிகள் போன்றோர்கள் ஞானநிலை என்கிறார்கள். அவர்கள் தியானம் மூலம் 'உள்ளே' ஆழமாகச் செல்லச் செல்ல எண்ணங்கள் வீழ்ச்சியடைந்து சிந்தனை நிற்க அந்த மனமற்ற வெறுமைக்குள்ளால் அப்பால் சென்று அறிந்தவர்கள். அந்த ஞான நிலையை 'முயற்சியற்ற முயற்சியால் மட்டுமே அடைய முடியும்' என்கிறது புராதன புனித ஏடான தந்திரா (Tantra).

உங்களை அறிய 'மீண்டும் குழந்தையாகுங்கள்' என்கிறார் இயேசுபிரான்.

உங்களை அறிய 'உங்கள் வெறுமை நிலையை அறியுங்கள்' என்கிறார் புத்தபிரான்.

'உள்ளொளி பெருக்குக' என்கிறார் மாணிக்கவாசக நாயனார்.

தங்களை அறியவே சித்தர்கள், யோகிகள், முனிவர்கள், ஞானிகள், நாயன்மார்கள், மகான்கள் மனதைக் கடந்து தங்கள் 'வெறுமை' (Non-self) நிலைக்குச் சென்றனர்.

வாழ்க்கை வெங்காயம் போன்றது என்கிறார்கள் தத்துவவாதிகள். ஏனெனில் உரியுங்கள் அடுக்கு, உரியுங்கள் மீண்டும் அடுக்கு, மீண்டும் உரியுங்கள் மேலும் அடுக்கு, தொடர்ந்து உரித்துக்கொண்டே போகப்போக ஒவ்வொரு அடுக்காக நீக்கிக்கொண்டேபோக ஒரு நிலை வரும், கையில் எதுவுமே இல்லாத நிலை அது, அதுதான் வெற்றிடம். எல்லா அடுக்குகளும் போய்விட்டது, உங்களில் படிந்துள்ள எல்லா அடுக்குகளையும் நீக்கி அந்த 'வெறுமை நிலை'க்குள் பிரவேசியுங்கள் என்கிறார்கள். இந்நிலையை புத்தர் 'நிர்வாண' நிலை என்கிறார். அந்தப் பரிபூரணத்துவத்துக்குள் பிரவேசித்த வர்கள் தங்களையே தாங்கள் வென்றவர்கள் ஆவார்கள்.

தங்களையே வென்றெடுத்தவர்களுக்கு நமது தலைகளை நாம் தாழ்த்தும்போது தூங்கிக்கொண்டிருக்கும் நமது நெஞ்சங்களை அசைத்துவிடுகிறது. நமக்குள் ஏதோ ஒன்று ஊடுருவிவிடுகிறது. இது கோவில்களில், ஆலயங்களில், தேவாலயங்களில், சர்ச்சுகளில், சினாகோஜ்களில், குருத்துவாரா வில், பள்ளிவாசல்களில், பன்சாலைகளில் சாத்தியமில்லை. இதை அடைவதற்கு எந்த மாற்று வழியும் இல்லை.

சுவாமிமார்கள் தங்கள் பக்தர்களை, தொண்டர்களை, அடியார்களை, தங்களை பின்பற்றுபவர்களாகப் பாராமல், அவர்களைத் தங்கள் ஆன்மிகப் பயணத்தில் பயணிக்கும் பயணிகளாக மாற்றவேண்டும். பின்பற்றுபவர்களும், தொண்டர்களும், அடியார்களும், பக்தர்களும் தாங்கள் புறப்பட்ட இடத்திலேயே, காலம் பூராகவும், சுவாமிமார்கள் இல்லாத காலத்தில், அனாதையாக நின்றுவிடுகிறார்கள். அவர்களும் பயணித்து ஞானமடைய வேண்டும்.

சுவாமி என்பவர் வேறு யாருமல்ல, தான் சுவாமி என்பதை அறியாதவர்தான் சுவாமி. அண்மைக் காலத்தில் வாழ்ந்த

பகவான் இராமகிருஷ்ணர், இரமணமஹரிஷி, சூஃபிஞானி (Sufi Saint) சீரடிபாபா போன்ற பல மகான்கள் தாங்கள் சுவாமி என்பதை அறியாமல் ஆன்மிகமாகவே வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்வு ஆன்மிகமாக இருந்ததே தவிர அவர்கள் ஆன்மிகத் துக்காக வாழவில்லை. அவர்கள் தங்கள் வாழ்வு ஆன்மிகம் என்று எண்ணாதவர்கள். மக்கள் அவர்கள் முன்னிலையில் அமர்ந்திருக்கும்போது தங்களுக்குள் 'உள்' மாற்றத்தை உணர்ந்த னர். அந்த மக்களுக்குள் ஏதோ ஒன்று ஊடுருவிவிடுகிறது, மக்கள் அவர்களைத் தங்களை அறியாமலேயே 'சுவாமி' என்று அழைத்தனர்.

அந்த மக்கள் 'உண்மையை' அறிந்தனர்!

அந்த மக்கள் 'உண்மையை' உணர்ந்தனர்!

அந்த மக்கள் "உண்மையை' அனுபவித்தனர்!

இந்த 'உண்மையை' அடைய எந்த குறுக்கு வழியும் இல்லை.

திபெத்தில் இருந்த தந்திரா ஞானிகள் (Tantric Sages) 'பார்தோ' தியான மூலம் ('Bardo' Meditation) சீடர்களை மரணத்துக்கு அப்பால் அழைத்துச் சென்று அவர்கள் தங்களைத் தாங்களே யார் என்பதை அறியச்செய்தனர்.

பிரித்துப் பார்த்தல், வித்தியாசப்படுத்தல், பாகுபடுத்துதல் போன்ற குணஇயல்புகள் எங்களுக்குள் மறையும்போது இந்த உலகத்தை நாம் வெகுளியாகவும், அப்பாவியாகவும் குழந்தை போலும் பார்க்க முடியும். இந்த வெகுளித்தனம், அப்பாவித் தனம், குழந்தைப் பிள்ளைத்தனம் போன்றன தூய்மையானது என்கிறது 'தந்திரா' (Tantra) ஞானநூல்.

இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், சமணர்கள், சென், தாவோ, சின்ரோ, சூஃபி, சொராஸ்திரியர், யுடேசியம் (யூதர்) போன்ற பல மதங்கள் நல்லது - கெட்டது, பாவ - புண்ணியம், நரகலோகம் - சொர்க்கலோகம் பற்றிய கருத்துகளில் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன, வழியமைப்பு கள் வித்தியாசப்படுகின்றன. ஒரு மதம் கூறும் நல்லது - கெட்டதை மற்ற மதம் ஏற்றுக்கொள்வதில்லை. ஒவ்வொரு

மதமும் வித்தியாசமான அளவுகோல்கள் வைத்திருக்கின்றன. மதத்திற்கு மதம் 'தூய்மை' வித்தியாசப் படுகிறது. அடுத்த மதத்தை மதிப்பது போல காட்டிக்கொண்டு மதிக்காமலேயே இருந்துவிடுகிறார்கள். நல்லது - கெட்டது நாட்டுக்கு நாடு, மக்களுக்கு மக்கள் வேறுபடுகிறது.

பிரித்துப்பார்க்கத் தெரியாத குழந்தை போன்ற உள்ளத்துடன், இயல்பாகவும், இயற்கையாகவும் வாழ்ந்து இறந்துவிடுவோம். அந்த வாழ்வும் மரணமும் அழகானது!

'எதனாலும் அழிக்க முடியாதது' எது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியதுதான் மனிதனின் தேடலாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் அந்த 'உண்மையில்' வேர்விட்டு நிற்க உலகில் 'மனிதம்' மலர்ந்துவிடும்!

மரணம் என்பது இல்லையேல் வாழ்வு பிழையான நம்பிக்கைகளை வளர்த்துவிடும். மரணம் அழகான முகவரியை வாழ்வுக்கு எழுதிக் கொடுத்துவிட்டு மரணித்துவிடுகிறது.

'இறப்பு' அது எல்லோரும் ஏற்கும் ஒரு தனி நாட்டை வழங்குகிறது.

'பிறப்பு' அது எல்லோருக்கும் ஒரு புதிய உலகத்தைப் படைக்கிறது.

மனிதநேயத்துடன் வணக்கம்.

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'**



## ஆய்வு நூல்கள்
## BIBILIOGRAPHY

*சிக்காக்கோ சொற்பொழிவுகள் (1893)*
*(சுவாமி விவேகானந்தர்)*
*ஸ்ரீ இராமகிருக்ஷ்ணமட வெளியீடு - 1993*
*மயிலாப்பூர், தமிழ்நாடு*

*மரணத்தின் பின் மனிதன் போவது எங்கே?*
*அருளியவர் ஸ்ரீ சுவாமி சிவானந்தா*
*தெய்வீக வாழ்க்கைச் சங்க வெளியீடு - 1995*
*சிவானந்தா ஆஸ்ரமம்*
*இராசிபுரம், சேலம், தமிழ்நாடு*

LIFE AFTER LIFE - 1988
Author: Dr. Raymond A. Moody, M.D.
BanTom Books Publication
New York, U.S.A. ,

REINCARNATION - 1988
Author: Lynn Elwell Sparrow
(Edgar Cayce Guide)
St' Martin's Paperbacks
New York, U.S.A.

The Story of My Life - 1988
Author: Helen Keller
Signet Classic Publications
New York, U.S.A.

The Other Side and Back - 2000
Author: Sylvia Browne
Signet Publications
New York, U.S.A.

Psychic Children - 2007
Author: Sylvia Browne
Dutton (Published By Penquin)
New York, U.S.A.

Zarathustra : A God That Can Dance - 1987
Talks Given By Osho
(Chuang TZU Auditorium)
Poona, INDIA

*மற்றும் ஓசோவின் வேறு பல சொற்பொழிவுகளும்*

Great Dialogues of Plato - 1984
(Translated by W.H.D.Rouse and edited
By Eric.H.Warmington and Philip G.Rouse)
Mentor Publications, U.S.A.

The essence of Buddha - 2002
(The path to enlightenment)
By Ryuho Okawa
Time Warner Books Publications, London

Eastern Philosophy - 2004
(The Greatest Thinkers and Sages from
Ancient to Modern Times)
By Kevin Burns
Arcturus Publishing Limited, London

Eastern Religions - 2005
(Origins, Beliefs, Practices,
Holy Texts, Sacred Places)
General Editor: Michael D. Coogan
Duncan Baird Publishers, London

An overview of the Mayan world - 1993
Author: Gualberto, Zapata, Alonzo
Yucatan, Mexico
(English translation) - 2002

Pictorial Images: Source from Books and Internet.



இந்நூலாசிரியர் **எஸ்.குருபாதம்**

**இந் நூலைப் பற்றி ...**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறையின் பாட விதானத்தில் உள்ள சமய மெய் யியலின் ஆய்வுக்குரிய கருப்பொருளைக் கொண்ட மைந்துள்ளது இந் நூல்.

கலாநிதி **நா.ஞானகுமாரன்.**
மெய்யியல் பேராசிரியர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், சிறீலங்கா.

மரணத்துக்கு அப்பாலும் பிரக்ஞையும், வாழ்வும் தொடர்கிறது என்ற கருத்தை நோக்கி இந்நூல் நகர்கிறது.

டாக்டர் **எம்.கே.முருகானந்தன்** M.B.B.S(Cey); DFM (Col); FCGP (Col),
கொழும்பு, சிறீ லங்கா.

உண்மையின் ஒரு தரிசனத்தை இந் நூலாசிரியர் வேறுவிதமான அனுபவங்கள், ஆய்வுகள், கருத்துகள் மூலமாகத் தந்துள்ளார்கள்.

டாக்டர் **இ.லம்போதரன்,** M.D.,
சைவசித்தாந்த பீடம், டொரண்டோ, கனடா.